

இத்துணைச் சிறு பொழுதிலே இத்துணை உயர்ந்த நூல்களை இவர் இவ்வாறு பயின்று தெளிந்தமை அரிதரிது.

- மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை

உரைநடை கைவந்த வல்லாளர்.

- பேராசிரியர் பரிதிமாற் கலைஞர்

திருவாளர் மறைமலையாரின் சொற்பொழிவின்பத்தில் மூழ்கி விட்டேன். அவர் இனிய பேச்சொலிகள் என் இரண்டு செவிகளிலும் இன்ப முழக்கஞ் செய்கின்றன.

- டாக்டர் உ.வே. சாமிநாதய்யர்

தொல்காப்பியர் காலத்துக்கு முன் இருந்த பண்டைத் தமிழ் நாகரிக நிலையினுக்குப் புத்துயிரளித்து, அதனை இன்றும் என்றும் நின்று நிலவச் செய்தற்குரிய பெருமுயற்சியினை அடிகள் தமது தலையாய கடமையாகக் கொண்டார்.

- பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை

தமிழ்மண்
2, சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை – 600 017
தொலைபேசி : 044 24339030

2

மறைமலையம்

# மறைமலையம் 2

## மறைமலையடிகள் பேச்சும் - எழுத்தும்

தனித்தமிழியக்க நூற்றாண்டு வெளியீடு
(1916 – 2016)

### மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை – 2



தமிழ்மண்

# மறைமலையம் - 2

(தனித்தமிழியக்க நூற்றாண்டு வெளியீடு)

## மருத்துவம் -2

- மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை - இரண்டாம்பாகம்

ஆசிரியர்

மும்மொழிச்செம்மல் **மறைமலையடிகள்**

பதிப்பாளர்

**கோ. இளவழகன்**

**தமிழ்மண்**

முதல்பதிப்பு : 2015
பக்கம் : 32+336 = 368
விலை : 460/-

# மறைமலையம் - 2

ஆசிரியர்
முழுமொழிச் செம்மல் **மறைமலையடிகள்**

பதிப்பாளர்
**கோ. இளவழகன்**

**வெளியீடு**
**தமிழ்மண் பதிப்பகம்**
எண். 2, சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொ.பே.: 24339030, செல்: 9444410654
மின்னஞ்சல்: elavazhagantm@gmail.com

◆தாள் : 16.0 கி. மேப்லித்தோ, ◆ அளவு : 1/8 தெம்மி ◆
◆ எழுத்து : 11.5 புள்ளி, ◆ பக்கம் : 368 ◆கட்டமைப்பு : இயல்பு
◆ படிகள் : 1000 ◆ நூலாக்கம் : வி. சித்திரா ◆
◆ அட்டை வடிவமைப்பு : கவிபாஸ்கர் ◆
◆ அச்சு : வெங்கடேசுவரா ஆப்செட், ஆயிரம் விளக்கு,
சென்னை - 600 006, மற்றும் பிராசசு இந்தியா,
திருவல்லிக்கேணி - 600 005.

“யான் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஏராளமான நூல்களில் ஆராய்ந்து கண்ட முடிவுகளை நூல்களாக எழுதியிருக்கின்றேன்.

பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்தது போல, உண்மை காணும் உணர்ச்சியினால் நடுநிலை நின்று ஆராய்ந்திருக்கின்றேன்.

ஒருவர் தம் வாழ்நாள் முழுவதும் கற்றாலும் அறியமுடியாத உண்மைகளை எல்லாம் எளிதாக எழுதி வைத்திருக்கின்றேன்.

எல்லாரும் தமிழ் இலக்கியங்கள் யாவற்றையும் கற்கும் தொல்லையை மேற்கொள்ள வேண்டியதில்லை, அது முடியவும் முடியாது, தேவையுமில்லை.

எல்லா நூல்களிலும் உள்ள சிறந்த உண்மைகளை எல்லாம் பிழி சாறாக யான் வடித்துத் தந்துள்ளேன்.

என் நூல்களைப் படித்தாற்போதும், அதனால், தமிழ் முழுதுங் கற்ற பயனை அடையலாம்.”

**– மறைமலையடிகள்**

மும்மொழிச் செம்மல்

# மறைமலையடிகள்



**தோற்றம்:**
**15-7- 1876**

**மறைவு:**
**15-9- 1950**

மறைமலை யடிகளே
நிறைதமிழ் வளர்த்தவர்!
மனங்கொள நினைந்திடுக! – அவரது
மாண்பினைப் புகழ்ந்திடுக!

**– பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

பெரும்புலவர்

# அ. நக்கீரனார்



**தோற்றம்:** 22-7- 1927

**மறைவு:** 25-2-2010

தொண்டு செய்வாய் தமிழுக்கு!
செயல் செய்வாய் தமிழுக்கு!
ஊழியஞ் செய் தமிழுக்கு!
பணி செய்வாய் தமிழுக்கு!

என்று எனக்கு வழிகாட்டிச்சென்ற
பெரும்புலவர் **நக்கீரனார்** நினைவாக...

**- கோ. இளவழகன்**

## சான்றிதழ்

*"நாகை - திரு.* ***வேதாசலம்*** *பிள்ளையவர்கள் ஒருபோது திருவனந்தபுரத்தில் ஒருவாரந் தங்கியிருந்த ஞான்று, அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்ததற்குச் சாலவும் மகிழ்கின்றேம். வருங்காலத் தமிழ் மக்களுக்கு மட்டற்ற தமிழ்ப்புலமை மிகுந்து வருமென்பதற்குச் சான்றாக இவர் இளமையிலேயே நுண்மாண் நுழைபுலம் உடையராயிருப்பது களிப்பூட்டுகிறது. மற்றும் தாய்மொழிப் பற்றுக் குறைந்த இக்காலத்தில், இவர் தமது நுண்ணறிவைத் தமிழ் நூல்களில் முற்றும் செலுத்தி நன்காராய்ந்துள்ளதும் பாராட்டற்குரியது. பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவகசிந்தாமணி முதலிய பழந்தமிழ் நூல்களில் ஆராய்ச்சியுடன் கூடிய இவர்தம் அறிவுடைமையே என்னை இவர்பால் மதிப்புறுமாறு செய்தது. தமிழாசிரியர்களின் தொகை சுருங்கிவரும் இக்காலத்தில் இவருக்குச் சிறந்த ஊக்கமளித்தால் இவர் ஒரு சிறந்த தமிழாசிரியராவாரென்று நாம் உறுதியாக நம்புகின்றேம். முன்னரே இரண்டாந்தரக் கல்லூரிகளில் தமிழ்கற்பிக்கப் போதுமான அளவு இலக்கண இலக்கியத்திற் சிறந்த தேர்ச்சி பெற்றவராயிருக்கின்றாரெனக் கருதுகின்றோம். குறைந்த அளவில் எஃப், ஏ., (F.A.) வகுப்புக்குரிய ஆங்கில அறிவு பெற்றாரானால் மேல்நாட்டு முறைப்படி தமிழ் நூல்களை வரலாற்றுச் சான்றுடன் ஆராயவும் எழுதவும் வல்லுநராவாரென்பது எம்முடைய சிறந்த எண்ணம்".*

வண்ணாரப்பேட்டை
திருநெல்வேலி
2-12-1895

**மனோன்மணீயம் பெ. சுந்தரம்பிள்ளை**
தமிழ்த்தாய் வாழ்த்தின் ஆசிரியர்

(இந்த நற்சான்று திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் சுந்தரம் பிள்ளையவர்கள் பேராசிரியராக இருந்தபோது கொடுக்கப் பெற்றது.)

## தமிழர்களுக்கு ஊக்கத்தையும், ஆக்கத்தையும் தந்தவர்

*தமிழ் ஈடும் எடுப்புமற்று வளரவேண்டும், தமிழர் வலிவெலாம் பெற்றுப் புகழோடு திகழவேண்டும், தமிழ்நாடு வளமெலாம் பெற்றுச் செழித்தோங்கி உயர வேண்டும் என்பதற்கான ஊக்கத்தையும், ஆக்கத்தையும் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்குத் தந்தவர் அடிகளார் ஆவர்.*

*அடிகளாரின் இலக்கியப் படைப்புகள் அனைத்தும் தமிழகத்தின் அழியாப் பெருஞ்செல்வங்கள் ஆகும். தமிழகம் அடிகளாருக்கு நன்றி காட்ட மறந்துவிட வில்லை என்பதன் அறிகுறியாகத்தான் அவர் பெயரில் நினைவு அடையாளங்கள் பலப்பல வகைகளில் அமைக்கப்பெற்றிருக்கின்றன.*

**- நாவலர் நெடுஞ்செழியன்**

*மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர்*

# மறைமலைய மாண்பு

## நுழைவுரை

தனித்தமிழ் என்ற அளவில் முன் நிற்கும் முழுதுரு எழில்வடிவர்
தவத்திரு. மறைமலையடிகளாரே ஆவர்!

*முந்தை அடிகள் ஆகிய இளங்கோவடிகள், 'முத்தமிழ் அடிகள்' என முழக்கமிட நின்றார்!*

*இருபதாம் நூற்றாண்டு மறைமலையடிகளோ,* ***தனித்தமிழ்த் தந்தை*** *என்னும் தகவார்ந்த பெருமை பெற்றார்.*

*"தமிழ் தனித்து இயங்காது" என்றும், வடமொழி வழியது என்றும், "வடமொழித் துணையின்றி இயங்காது" என்றும், "உலக மொழிகளுக் கெல்லாம் தாய்மொழி வடமொழியே" என்றும் தமிழ்க் கல்வி வல்ல பெற்றியரும் முற்றும் மயங்கி யுரைக்க,*

*"வடமொழி உலக மொழிகளுக்குத் தாய்மொழி என்றால், அதற்கும் மற்றை மொழிகளுக்கும் தந்தை மொழி தமிழே" என்று கூறிய வடலூரர் அடிகளார் புகழ்பரப்பாளராய்ப் பொதுநிலைக் கழகம் கண்ட தவ அடிகளார்,* ***தனித்தமிழ்த் தந்தை*** *என்னும் பெருமை பெற்ற* ***மறைமலையடிகளார்*** *ஆவர்.*

*சிவனியம் சார்ந்த பெருமக்களும், பேரறிவர்களும் கூட, ஒப்பாராய், 'தனித்தமிழ்' (தனித்து அமிழ்) என்று பழிக்கவும் இழிக்கவும், துணிந்து நின்று, அவர் வெள்க; வெள்ளிடை மலையாகத் 'தனித்தமிழ்' என்பதை நிலை நாட்டிய நிறைமலை, மறைமலையடிகளாரே!*

*சிவனிய மடத்தினரும், வடமொழி வல்லாரும், 'தொல் காப்பியக் கடல்' எனப் புகழப்பட்டாருமாம் சாமிநாத தேசிகர், நாணமின்றி,*

“ஐந்தெ**ழுத்தா**ல் ஒருபாடை என்று **அறையவே நாணுவர்**
அறிவுடையோரே; **யாமும் அதுவே**”

*என்றும்,*

ஒன்றே ஆயினும் **தனித்தமிழ் உண்டோ?**”

*என்றும் - எழுதிப் பரப்பினாராக,*

*“ஒரு சொல் தானும் வேற்றுச் சொல் விரவா நூல் யாம் செய்வேம்” என்று ஐம்பான் நான்கு நூல்கள் **கலைமலி பேழையாய் எழுதிக் காட்சிப் படுத்திய** மாட்சியர் மறைமலையடிகளார்!*

**தொல்காப்பியக் காவல்**

*தமிழ் மொழிக்கு வாய்த்த தொல்காப்பிய வளநூல்,*

“வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே” (884)

*என்றும்,*

*மொழி பெயர்ப்புச் செய்தலிலும் முறைமை பேண வேண்டும் என்பதை,*

“மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்” (1597)

*என்றும்,*

*பேச்சு வழக்கில் ஒரு கால் வேற்றுச்சொல் வந்து விடினும்,*

“மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை” (1590)

*என்றும் - வரம்பாணை செய்தும், அச் செவ்வியல் வழித்தடம் சிதைந்தும் சீரழிந்தும், சேறும் சகதியும் நாறும் சிறுமையும் குறுமையும் வழிவழியே எய்த மூவாயிரம் ஆண்டுகளாய், அயலோர் சூழ்ச்சியாலும் திறவோர் மயக்காலும் ஏற்பட்ட அழிபாடுகளை எல்லாம் **தாமே ஓர் இயக்கமாய் இருந்து**, விழிப்பும் எழுச்சியும் ஊட்டியவர் மறைமலை அடிகளே என்பதால்,*

*“ஆரியத்தினின்று தமிழை மீட்டெடுப்ப தற்காக அரும் பாடுபட்டு இலக்கிய இலக்கண மரபோடு யான் கற்ற மொழிகள் முப்பது” என்னும் பாவாணர்,*

"மூவா யிரமாண்டு மோதும் வடமொழியால்
சாவாம் தகைநின்ற தண்டமிழை - மேவாக்
குமரித் தனிநிலைக்குக் கொண்டுவந்த **அப்பர்**
**அமரர் மறைமலை யார்**"

*எனப் பாடிப் பரவினார். 'தனித் தமிழ்த் தந்தையார்' என்ற பாராட்டும் இப் பாட்டின் தலைப்பில் வழங்கினார்.*

"நுண்ணிய நூல்பலவும் கற்பதே நோன்பாக
எண்ணிய வாழ்நாள் எலாமளித்துப் - பண்ணிய
**செந்தமிழ்நூல் ஒவ்வொன்றும் செப்பும் கடலறிவை**
**பைந்தமிழ் காக்கும் படை**"

*என அடிகள் கல்வி மேம்பாட்டையும் கலைத் திறப் படைப்புகளின் மேம்பாட்டையும் பாவேந்தர் பாரதிதாசனார் பாராட்டுகிறார்.*

**பல்துறை ஆற்றல்**

*அடிகளின் பல்துறை ஆற்றலை 1. பேராசிரியர், 2. பெரும் புலவர், 3. பாவலர், 4. ஆராய்ச்சியாளர், 5. மும்மொழிப் புலவர், 6. மொழிபெயர்ப்பாளர், 7. சொற்பொழி வாளர், 8. எழுத்தாளர், 9. பல்கலைச் செல்வர், 10. தனித்தமிழ்த் தந்தையார் என்று பாவாணர் பகுத்துக் காட்டுகிறார்.*

*மேலும் அவர் தம் நுண்மாண் நுழைபுலத்தை*

*"பனிமலை முகட்டின் உயர்வும், நீல ஆற்றின் நீளமும் அமைதி வாரியின் ஆழமும் அமைந்தவர் மறைமலையடிகள்" என்கிறார். (பனிமலை - இமயம்; நீல ஆறு - நைல்; அமைதிவாரி - பசிபிக்கு மாகடல்).*

**அடிகளார் நூல்கள்**

*அடிகள் பன்மாண் மாத்தமிழ் நூல்களை, நூலக இயக்கத் தந்தை அரங்க நாதரும், இந்நாள் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியரும் அந்நாள் நூலகருமாகிய திருமிகு இரா. முத்துக் குமாரசாமி அவர்களும் 14 வகைமைப்படுத்தி வைத்தமை பெரும் பாராட்டுக்கு உரியதாம் அவை,*

*1. மருத்துவம் 2. மறைபொருள் 3. இலக்கியம் 4. இதழ்கள் 5. சங்க இலக்கியம் 6. பாடல் 7. நாடகம் 8. புதினம் 9. கடிதம் 10. கட்டுரை 11. சமயம் 12. தத்துவம் 13. வரலாறு 14. சமூக இயல் என்பன.*

*முதற் குறள் வாத நிராகரணம் என்னும் மறுப்பு நூலே, அடிகளின் முதல் நூலாக வெளிப்படுகின்றது (1898) அந்நூன் மறுப்பு நயமே நாகை அடிகளை - பல்லவபுர அடிகளாக - தனித்தமிழ் அடிகளாக ஆக்க அரும் பெரும் தூண்டல் ஆயிற்றாம்.*

*அடிகளார் வரலாறு: கீழ்கடல் சார் நாகப்பட்டினத்தைச் சார்ந்த சிற்றூர் காடம்பாடி, ஆங்கு வாழ்ந்த அருந்தவப் பெருந்தகையர் சொக்கநாதர் - சின்னம்மையார்! இவ்விணையர் கொடையாய்த் தமிழன்னை செய்த தவப் பேற்றால் பிறந்தவர் வேதாசலம். பிறந்த பெரு மங்கல நாள் கி.பி. 15.07.1876.*

*சொக்கநாதர், சித்தமலம் அறுவித்த சித்தமருத்துவர்; அறிவ மருத்துவம் என்பதும் அது. அத்தொழில் அவர்க்கு வளத்தை வழங்கியது. அதனால் வேதாசலம் குறைவற வாழ்ந்தார்.*

*நாகப்பட்டினத்து* **வெசிலியன் மிசன் பள்ளியில்** *ஐந்து வகுப்புவரை பயின்றார்; சிறந்த மாணவராக விளங்கினார். ஆறாம் வகுப்பில் சேரும் நிலையில், அருமைத் தந்தையார் இயற்கை எய்தினார். ஆயினும் அன்னையார் உறுதியால் கல்வியைத் தொடர்ந்தார். அப்பள்ளியில் ஆங்கிலக் கல்விக்கு இருந்த முதன்மை தமிழுக்கு இல்லை. கிறித்தவ சமயம் பற்றி அன்றிச்* **சிவனியம் பற்றி** *அறிய வாய்ப்பில்லை என்னும் இரண்டு குறைகளையும் இளமையிலேயே உணர்ந்தார்.*

*வீட்டிலேயே தமிழ் நூல்களைப் பயின்று முதற் குறையையும், நாகையில் இருந்த* **இந்துமதாபிமான** *சங்கம் வழி இரண்டாம் குறையையும் நீக்கினார். பள்ளியிலும் குறையறக் கற்றார். வருவாய்க் குறையால் வாடும் அன்னைக்குச் சுமையாய் இல்லாமல் தனியே பயில்வதே இனியவழி என எண்ணி, நாகையில்* **புத்தக வணிகராக விளங்கிய நாராயண சாமியார்** *புலமையாலும் சிறந்து விளங்கியவர். ஆதலால் அவரிடம் தனியே இலக்கிய - இலக்கண - சமய நூல்களைக் கற்றார். நாராயணரின் முன்னை மாணவர் பேரா.* **மனோன்மணீயம் பெ. சுந்தரனார்**

என்பதையும் அறிந்தார். ஒன்பதாம் வகுப்பொடு பள்ளிக் கல்வியை நிறுத்தித் தனிக்கல்வியே கற்றார். தொல்காப்பியம், தொகை நூல்கள், திருக்குறள், திருச்சிற்றம்பலக் கோவை, இறையனார் அகப் பொருள் எனக்கற்றார்.

அடிகளார் இயற்றிய **திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை** முகப்பில், "எமது **பதினைந்தாம் ஆண்டில்** முறைப்படி துவங்கிய தமிழ்ப் பயிற்சியானது எமது **இருபத்தோராம் ஆண்டிற்குள்** தொல்காப்பியம், திருக்குறள், சிற்றம்பலக் கோவையார் என்னும் மூன்று நூல்களையும் முழுதும் நெட்டுருச் செய்து முடித்தேம் என்றும் வேறுசில நூல்களையும் முழுவதாக ஓதியதையும் கூறி,

இங்ஙனமாக, **விழுமிய தமிழ்ப்பழ நூல்களில் எமது கருத்து ஈர்ப்புண்டு நின்று பயின்ற பயிற்சியினாலேயே செய்யுளும் உரையும் தனிச் செந்தமிழ் நடையில் எழுதும் திறம் எமது இளமைப் பருவத்திலேயே எமக்கு வாய்ப்ப தாயிற்று"** என்கிறார். அவ்வாண்டு **கி.பி. 1897**. நாகை இந்து மதாபிமான சங்கத்திற்குச் சைவ சித்தாந்த சண்ட மருதம் என்னும் விருது பெற்ற **சோமசுந்தர நாயகர்** வந்து சொற்பொழிவாற்றினார். அவர் பொழிவில் வந்த கருத்தொன்றனை மறுத்து ஒருவர் எழுத, அதற்கு மறுப்பாக முருகவேள் என்னும் புனைபெயரில் மறுப்புரை எழுதினார். **அதனைக்கற்ற நாயகர்**, மீளப் பொழிவுக்கு வருங்கால் முருக வேளைச் சந்திக்க விரும்பினார். அச்சந்திப்பின் பயனே உன்னை விரைவிலே சென்னைக்கு வருவிப்போம். நீ அந்தப் பக்கங்களில் இருப்பதே நல்லது என்று கூறினார். இதுவே அடிகளார்க்குச் சென்னை வாழ்வு அமைய முதல் தூண்டல் ஆயிற்று. அடிகளுக்குப் பதினேழாம் வயதில் (1893) திருமணம் நிகழ்ந்தது. துணைவி தம் மாமன் மகள் சவுந்தர வல்லி என்பார்.

**திருவனந்தபுரம்**

நாராயணசாமி அவர்களின் முன்னை மாணவராம் பேரா. சுந்தரனார் திருவனந்த புரத்தில் இருந்தார். அவரியற்றிய மனோன்மணீய நாடக நூல் கற்று அதன் அருமை கண்டு, பேராசிரியரைக் காணவிரும்பினார். அதனால் தம் ஆசிரியரோடு

திருவனந்தபுரம் சென்று பேராசிரியரோடு உரையாடினார். வேதாசலனார் இளம் பருவத்தையும் மூதறிவையும் அறிந்த சுந்தரனார் வியப்புற்றுத் தகுதிச் சான்று ஒன்று வழங்கினார். சிறிது காலம் திருவனந்த புரத்தில் ஆசிரியப் பணியும் செய்தார். அவ்விடத்தின் பருவநிலை ஒவ்வாமையால் நாகைக்கே திரும்பினார்.

**சென்னை:** சோமசுந்தரனார் முன்னே கூறியபடி வேதாசலரைச் சென்னைக்கு அழைத்து அறிஞர் நல்லுசாமி என்பார் நடாத்திய **சித்தாந்த தீபிகை** என்னும் இதழாசிரியர் ஆக்கினார். பின்னே சென்னை **கிறித்தவக் கல்லூரி**க்கு ஒரு தமிழ்ப் பேராசிரியர் வேண்டியிருத்தல் அறிந்த சோமசுந்தரனார் வேதாசலனாா ர அக்கல்லூரிப் பேராசிரியராக்க முயன்றார். அதுகால் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தவர் வி.கோ சூரியநாராயண சாத்திரியார் என்னும் பரிதிமால் கலைஞர். கல்லூரி முதல்வர் **வில்லியம் மில்லர்** என்பார்.

9.3.1898 இல் வேதாசலனார் பணியேற்றார். அங்குப் பதின்மூன்று ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

அக்கல்லூரிக் காலத்தே இளங்கலை மாணவர்க்குப் பாடமாக இருந்த **முல்லைப்பாட்டு** (1903) **பட்டினப்பாலை** (1906) என்பவற்றுக்கு ஆராய்ச்சி உரை எழுதினார்.

“அவ்வுரை நூலை வாங்கிக் கற்ற மாணாக்கரும் ஏனைத் தமிழறிஞரும் புதுமுறையாக எழுதப்பட்ட அவ்வுரைப் பாங்கினைப் பின்பற்றிப் பழைய தமிழ் நூல்களை ஆராய்வதில் கிளர்ச்சி பெறலானார். இப்புதுமுறை உரை, தமிழ் நூலாராயும் வகைகளை இனிது விளக்கி அறிஞர் பலர்க்கும் அக மகிழ்ச்சி யினை விளைத்தமை கண்டு இனி, இத்தகைய **உரைகளையே எழுதுதல் வேண்டும் என எமதுள்ளம் பெரிதும் விழைந்தது**” என்கிறார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தார்ஆங்கிலமும் வட மொழியும் கட்டாயமாகப் படித்தல் வேண்டும் என்றும், தாய்மொழிப் பாடத்தை விருப்பப் பாடமாகக் கற்பிக்கலாம் என்றும் ஒரு தீர்மானம் ஆட்சிக்குழுவில் கொண்டு வந்தனர். ஒரு பாடம் விருப்பப்பாடம் எனப்பட்ட பின்னர் அதனைக் கற்க

வருவார் எவர்? தமிழ் கற்கும் மாணவர் எண்ணிக்கை குறையவே ஆசிரியப் பணியிடமும் குறைய வேண்டுவதாகி, அடிகளார் 31.1.1911 ஆம் நாளுடன் கல்லூரிப் பணியை முடிக்க வேண்டிய தாயிற்று.

**மாணவர்:** இக்காலத்தில் அடிகளின் மாணவராக இருந்தாருள், **தணிகைமணி செங்கல்வராயர், இரசிகமணி டி.கே.சி, நாவலர் ச.சோ. பாரதி, பேரறிஞர் ச. வையாபுரியார்** முதலோர் சிலர்.

தணிகைமணியின், தேவார திருவாசகச் சொல்லடைவு ஒரு பிறப்பளவில் செய்யக் கூடியதா?

நாவலர் ச. சோ. பாரதியாரின் ஆய்வுத் துணிவு எத்தனை கசடுகளை நீக்கியது? வையாபுரியார், கால ஆய்விலும், வடமொழிப் பிடிவாதத்திலும் தம்மைச் சால்பு ஆய்வில் இருந்து விலக்கினாலும், சங்க இலக்கியப் பதிப்பு, நிகண்டுப்பதிப்பு, பல்கலைக் கழக அகரமுதலிப் பதிப்பு இவற்றைச் செய்த அருமை என்ன? புறத்திரட்டு, களவியல், காரிகை ஆயவற்றின் பதிப்புச் சிறப்பு என்ன?

இவர்கள் பணியும் அடிகளாரைத் தழுவுதல் உண்மை தானே!

**சமரச சன்மார்க்கம்**

கல்லூரிப் பணியில் இருந்து வீடுபெற்ற அடிகளார், **பல்லவபுரத்தை** வாழ்விடமாகக் கொண்டார். சமரச சன்மார்க்க நிலையம் தோற்றுவித்தார்.

எல்லாச் சாதியார்க்கும் எல்லாச் சமயத்தார்க்கும் அங்கீகாரமான சீவகாருணிய ஒழுக்கத்தையும், சமரச சன்மார்க் கத்தையும் பிற்காலத்தில் மிக வலியுறுத்திப் போதித்த ஆசிரியர் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளே ஆவார். அச்சுவாமி கள் வலியுறுத்திய அவ்விரண்டு கொள்கைகளையும் எங்கும் வலியுறுத்தி விளக்கி அன்பர்களை ஒருங்கு கூட்ட வேண்டி அச்சுவாமிகள் இட்ட பெயராலேயே, ‘சமரச சன்மார்க்க நிலையம்’ என்னும் இது தாபிக்கலாயிற்று. இந்நிலையத்திற்கு முன் ஆசிரியர் **திருவள்ளுவ நாயனார்**; பின் ஆசிரியர்

*இராமலிங்க சுவாமிகள் ஆவர் என்று பெயரீடு செய்து கொள்கைகளையும் வகுக்கிறார்.*

### குடும்பம்

*1898இல் அடிகளார் சென்னைக்கு வரும்போது அவர்தம் அன்னையார் சின்னம்மையார், துணைவியார் சவுந்திரம் அம்மையார், செல்வி சிந்தாமணி, அடிகளார் என்னும் நால்வரைக் கொண்ட குடும்பாக இருந்தது.*

*1911இல் பல்லவ புரத்தில் குடிபுகும் போது நீலாம்பிகை, திருஞான சம்பந்தம், மாணிக்கவாசகம், திருநாவுக்கரசு, சுந்தர மூர்த்தி என்னும் மக்களும் கொண்ட ஒன்பதின்மர் குடும்பமாக இருந்தது. பல்லவுரம் புகுந்த பின் திரிபுர சுந்தரி பிறக்கப் பதின்மன் குடும்பம் ஆயிற்று. இந்நிலையிலேயே 27.08.1911இல் சைவத் துறவியர்க்குரிய* ***துறவாடை (காவி) கொண்டு சுவாமி வேதாசலம் ஆனார்****. சுவாமி வேதாசலம் என்பதன் தனித்தமிழாக்கமே மறைமலையடிகள் என்பது வெளிப்படை. முன்னேயே அவரை* ***அடிகள்*** *என்றது அவர்தம் மாண்பு கருதியேயாம்.*

### மீள்பார்வை

*நாம் மீள்பார்வை ஒன்றுபார்க்க வேண்டும்.*

*அடிகள் 21ஆம் அகவையிலேயே தனித்தமிழ் ஆய்வுத்திறம் கைவரப் பெற்றார்.*

*1903, 1907 ஆகிய ஆண்டுகளில் முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை ஆகிய நூல்களுக்கு ஆய்வுரை வழங்குங்கால் இதிலுள்ள சொற்கள் இத்தனை; இவற்றுள் செந்தமிழ்ச்சொல் இத்தனை; வேற்றுச் சொல் இத்தனை - என அறுதியிடுகிறார்.*

*ஆதலால், தனித்தமிழ் என்னும் தோற்றம்* ***1916 ஆம் ஆண்டில் நீலாம்பிகையார் தூண்டலால் ஏற்பட்டமை என்பது, அகத்தே அமைந்து கிடந்த வித்து, முளை விட்டு வெளிப்பட்ட நிலையாம்.*** *அவ் வெளிப்பட்ட நிலையும் உடனே பற்றிப் படரவில்லை! மேலும் சில ஆண்டுகளின் பின்னரேயே சமசர சன்மார்க்க நிலையம்,* ***பொதுநிலைக் கழகமாகவும்,*** *ஞானசாகரம்* ***அறிவுக் கடலாகவும்,*** *சுவாமி வேதாசலம்* ***மறைமலையடிகள்*** *ஆகவும் படிப்படியே கிளர்கின்றனவாம்!*

*ஓர் அரிய அமைப்பு உருவாகும் நிலையும், ஓர் அரிய கண்டு பிடிப்பு உலகவர் அறிய வெளிப்படலும், அவை இயக்கமாகவும் பயனாகவும் ஆகின்ற நிலையும் பற்றிய விளக்கம், அடிகளார் தனித்தமிழ் இயக்க வரலாற்றில் அடங்கியுள்ளதாம்!*

***எதிரிடைத் தூண்டல்:*** *மேலும் ஒன்று: ஒரு நேரிடைத் தூண்டலினும் எதிரிடைத் தூண்டல் வலிமை மிக்கது என்பதும், உள்ளத்து உறுதியை வெள்ளப் பெருக்காய் வெளிப்படுத்த வல்லது என்பதும் தெளிவாம்.*

**"ஒன்றே ஆயினும் தனித்தமிழ் உண்டா?"** *என்று கற்றறிந்த தமிழர் ஒருவரே வினாவி நகைத்தல், பெற்ற தாய் மொழிப் பிறவிக்கு உற்ற தகைமை ஆகாது என்பதும், அதனை உணர்ந்த அப்பிறவி* **பாம்பன் குருபாத அடிகள் போல்** *சேந்தன் செந்தமிழ் என்ன ஒரு நூலியற்றித் தமிழ் தனித்து இயங்கவல்ல தனி உயர் மொழி என்று நிலைநாட்டியிருப்பின் வழிபடத்தக்க பிறவியாய் அமைந்திருக்கும்! அப்பேறு அதற்கு வாய்க்காமை,*

"துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்" (குறள் 263)

*என்னும் வள்ளுவர் வாய் மொழிப்படி,*

*தனித்தமிழ்த் தந்தைப் பேறு மறைமலையடிகட்கு வர இருப்பதற்கே நேரிட்ட நேர்ச்சியாம் என்க.*

## இயக்கம்

*அடிகள் இயக்கம் ஆலமரமெனக் கால்பல கொண்டு அகல அகல விரியத் தனித்தமிழ் இயக்கமாய், உலகத்தமிழ்க் கழகமாய், பாவலரேறு தமிழ்க் களமாய், சேரர் கொற்றமாய், தமிழ்க்காப்புக் கழகமாய், தமிழ்ப் பாதுகாப்புக் கழகமாய், தனித்தமிழ் இலக்கியக் கழகமாய், தமிழ் வளர்ச்சிக் கழகமாய், மறைமலையடிகள் மன்றமாய், தமிழ்க்காவல் குழுவாய், இயற்றமிழ்ப் பயிற்றகமாய், பாவாணர் தமிழ் இயக்கமாய் ஆங்காங்கு முகிழ்த்து முனைப்பொடு கடனாற்ற ஏவியதாம்.*

**நூலகம்**

*அடிகள் நூற்றொகை, அருமணிக் குவையன்ன நாலாயிரம் நூல்களைக் கொண்டது. எதிரது உணர்ந்து, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கு முற்கொடையாக வழங்கியதால், நாலாயிரம் **நாற்பதாயிரமாய் மேலும் மேலும் விரிந்து மறைமலையடிகள் நூலகப்** பெயரால், பெருமைமிகு வள்ளலார் முதற்கண் பொழிவு செய்த பெரியவர் சோமு அவர்கள் இல்லமே வாய்க்க உலக வளமாக்கியதாம்! அதன் வழியாகவே அடிகள் தாமே வெளியிட்ட நூல்களும், வெளியிடாமல் கழக வழி வெளிவந்த நூல்களும், அடிகள் காலத்திற்குப் பின் வெளிவந்த நூல்களும் ஆகிய முழுமைத் தொகுதிகளும் **கி.பி. 1898 முதல் 1969 வரை முதற்பதிப்பாக வெளிவந்தவை.** அவற்றுள் படிகள் கிட்டுதற்கு அரியவையும் உண்டு. அடிகள் **நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்ட பேற்றால்,** இன்று வாய்த்த நூல்கள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக வழங்கும் பெருவாய்ப்பைத் **தமிழ்மண் பதிப்பகம்** பெற்றதாம்.*

**வெள்ளச் சேதம்**

*அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு பதிப்பகத்துள் புகுந்து அச்சு அடிக்கப்பட்டதும், அடிக்கப்பட இருந்ததும், கணினிப்படுத்தி வைத்த குறுவட்டுகளும், மூலநூல்களும் என வாரி அள்ளிக் கொண்டு போனமை, **களத்துக்கு வந்த கதிர் மணிகள், களஞ்சியத்திற்கு வாராமல் போய, பேரழிவு ஒப்பதாம். ஆதலால்,** நூல்களை மீளத் தேடவும், கணினிப்படுத்தவும், குறுவட்டு ஆக்கி அச்சிடவும் என மும்மடங்குப் பணியும் பேரிழப்பும் பெருத்த அவலமும் உண்டாக்கிற்றாம். அந்நிலையில்,*

> “ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
> தாழா துஞற்று பவர்”

*என்னும் வாய்மொழியை **வாய்மை மொழியாக்கிய துணிவுச் செல்வர் இளவழகனாரும் அவர் குடும்பத்தவரும் ஆவர்!***

*முன்னறிவிப்புத் திட்டப்படி நூலுக்கு ஆர்வமாய்ப் பணம் செலுத்தியோர்க்கும் நூல் காலத்தில் கிட்டா உளைச்சல்*

இல்லாமல் போகாதே! அவர்களும் அமைந்து தாங்கல், இயற்கை இயங்கியல் வழியதாம்.

**வெளியீடுகள்**

***தமிழ்மண் பதிப்பகம் தமிழ்மொழி இன மண்வளம் - வளர்ச்சி மீட்டெடுப்பு - என்பவற்றை முன்வைத்துத் தமிழ்ப் போராளி இளவழகனாரால் தொடங்கப்பட்டதால்,*** பேரிழப்புக்காம் எனத் தெளிவாகத் தெரிந்தும், இசைக் கலைக்கு வாய்த்த ஒப்பற்ற களஞ்சியமாய் வாய்த்த - கருணாமிர்த சாகரத்தை வெளியிட்டதாம்! முன்னை வந்த முதற்பகுதி பேரிழப்பாக்கியும் அதன் பின்னைப் பகுதிகளையும் அரிதின் முயன்று வெளியிட்டது! மொழிஞாயிறு பாவாணர்; ஈழத்து அறிஞர் ந.சி. கந்தையா; வரலாற்றறிஞர் சாமிநாத சர்மா, உரைவேந்தர் ஔவை சு.து; நாவலர் ந.மு.வே; பண்டித வித்துவான் தி.வே. கோபாலர்; சாமி சிதம்பரனார்; மயிலை சீனி. வேங்கட சாமியார்; பேரறிஞர் க. வெள்ளை வாரணனார்; பாவலர் குழந்தையார்; பாவலர் முடியரசனார்; பாவேந்தர், தொல் பொருள் கல்வெட்டு ஆய்ஞர் சதாசிவனார், சாத்தன்குளம் இராகவன் நூல்களையும் எளியேன் நூல்களையும் முழுமை முழுமையாக வெளியிட்டது.

தொல்காப்பியம்- பாட்டு - தொகை - காப்பியம் - கீழ்க்கணக்கு - தமிழ்நாட்டு வரலாறு - ஆங்கிலம் வல்ல அறிஞர் இராம நாதனார் நூல்களையும், யாழ்ப்பாண அகராதி முதலாம் அகராதித் தொகுதிகளையும் வெளியிட்டது. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதிதொட்டு, இருபத்தோராம் நூற்றாண்டின் முற்பகுதி வரை வெளிவந்த - தமிழுக்கு ஆக்கமாம் நாட்டுடைமை ஆக்கப்பட்ட நூல்களை எல்லாம் - ஓரிடத்துப் பெற்று, ஒரு தனித்தமிழ் நூலகம் அமைக்கும் அளவுக்கு அச்சிட்டு வழங்கிய பெருமை இளவழகனார்க்கு உண்டு. அவரே அன்றி அவர் துணையையும் மக்களையும் உறவையும் அன்பையும் நண்பையும் ஒருங்கே இணைத்து, அறிஞர் பெருமக்கள் பலர் அரவணைப்பையும் வாய்ப்பக் கொண்டு வாழும் இயல்பு அவர்க்கு வாய்த்தலால் மட்டுமே, இவ்வாறு செயற்கரிய செய்ய வாய்த்ததாம் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவரும் அவர்.

**மறைமலைய மாண்பு**

*மறைமலையம், தனித்தமிழ் இயக்கம்! தமிழ்த் தனிப் பெருவளம்! முத்தமிழ்ச் சுரப்பு! சீர்திருத்தச் செழுமை! வாழ்வியல் வளம்! கலைச் சொல்லாக்கக் களஞ்சியம்! பண்டைத் தமிழர் வரலாற்றுப் புதையல்! ஆய்வியல் வழிகாட்டி! பொழிவுப் பொலிவு! எழுத்தின் எழில்! மொழிக் காவல் முனையம்! முட்டறுக்கும் முழுதுறு கொடை! மீட்டெடுக்கும் மேதகைமை! அள்ள அள்ளக் குறையா அணிமணிக் குவியல்! எனல் மெய்மை விளக்கமாம்!*

"புத்தகம் ஏற்றுப் பொலிவதே புத்தகம்"
வாழிய நலனே! வாழிய நிலனே!

*திருவள்ளுவர் நிலையம்,*
*7, இராமன் தெரு,*
*திருநகர், மதுரை - 6*
*625006.*

இன்ப அன்புடன்
**இரா. இளங்குமரன்**

## மலைக்க வைக்கும் மறைமலையம்!

### பதிப்புரை

மொழியே இனமக்கள் முன்னேற நல்ல
வழியாம் அதனை வளர்க்க -பழியாய்த்
தமிழயரத் தாழ்ந்தான் தமிழன் அவனே
தமிழுயரத் தானுயர்வான் தான்

*மொழிப்பேரறிஞர் பாவாணர் அவர்கள் 'மொழியின் வழியாகவே மொழிபேசும் மக்கள் முன்னேற முடியும்' எனக் கூறுகிறார். உலகம் முழுதும் இவ்வுண்மை உணரப்பட்டுள்ளதை வரலாறு காட்டுகிறது.*

*பாவாணரை அறிவுலகம் சரியாக அடையாளம் காண்பதற்குக் காரணமானது மறைமலையடிகளார் தந்த பாராட்டு!*

*மறைமலையடிகள் (15.7.1876 - 15.9.1950) தேவநேயப் பாவாணர் (7.2.1902 - 16.1.1981) இருவரும் தனித்தமிழியக்கத்தைத் தாங்கி நிற்கும் தூண்களாகப் போற்றப்படுபவர்கள்.*

*மறைமலையடிகளார் 1916இல் தோற்றுவித்த தனித்தமிழ் இயக்கம், நூற்றாண்டை எட்டியுள்ள மகிழ்வான நேரம் இது!*

*தனித்தமிழியக்க நூற்றாண்டை நினைவு கூரும் வகையில், தனித்தமிழியக்கத் தந்தை மறைமலையடிகளாரின் எழுத்து, சொற்பொழிவு, நாட்குறிப்பு, கடிதங்கள் அனைத்தையும்* ***'மறைமலையம்'*** *எனும் பெருந்தொகுப்பாகத் தமிழ்மண் பதிப்பகம் வழி வெளிக்கொணரத் திட்டமிட்டோம்.*

*உலகம் முழுதும் பரவி வாழும் உணர்வு குன்றாத தமிழர்கள் தந்த ஊக்குவிப்பு, இந்தப் பெருந்திட்டத்தை நிறைவேற்றித் தீரவேண்டும் எனும் உறுதியை எனக்குத் தந்தது.*

*தனித்தமிழ் இயக்க அறிஞர்களும் ஆர்வலர்களும் அடிகளாரின் அரிய படைப்புகள் பலவற்றையும் தேடித்தேடி வழங்கி வழிகாட்டினர்; வலிமையூட்டினர்.*

*மறைமலையடிகளார் 1898ஆம் ஆண்டிலிருந்து எழுதி வந்துள்ளார். அறிவுக்கடல் (ஞானசாகரம்) இதழை 1902ஆம் ஆண்டிலிருந்து வெளியிட்டு வந்துள்ளார். அவரின் படைப்புகள் பெருவெள்ளமாய் வெளிவந்திருக்கின்றன.*

*அச்சேறாதவை, பெயர் கூடக் கேட்டறியாதவை, பெயர் தெரிந்தும் பார்வைக்குக் கிட்டாதவை - எனப் பலவகையாய்க் கிடைத்தன அடிகளாரின் அரும்படைப்புகள்! அவற்றை* ***'மறைமலையம்'*** *எனும் தலைப்பில் 34 தொகுப்புகளாக ஒருசேரப் பார்க்கும்போது, தமிழுலகம் வியப்படைவது உறுதி.*

மொழிநலம் இனநலம் பேணுதல் அன்றோ
முழுநலம் பெறுவழி! நாம்பெறல் என்றோ?

*இப்படிக் கவலையோடு கேட்பார்* **பாவலரேறு பெருஞ் சித்திரனார்** *(10.3.1933 - 11.6.1995). அவரின் 'தென்மொழி' இதழ் 1.8.1959 இலிருந்து வெளிவரத் தொடங்கிய பின்புதான், தனித்தமிழ்த் திசை நோக்கி நூற்றுக்கணக்கானோர் நடைபோடத் தொடங்கினர். அதில் நானும் ஒருவன்.*

*பெருஞ்சித்திரனாரின் எழுத்து காட்டிய அடையாளத்தால், பாவாணர் நூல்கள் எனும் அறிவுப்புதையல் பலர் கைகளிலும் குடியேறியது.*

*பாவாணர் நூல்கள் வலியுறுத்திப் பேசியதால், மறைமலை யடிகளாரைத் தேடிப்பயிலும் ஆர்வம் தமிழுலகில் புத்துயிர் பெற்றது.*

*ஆரியத்தை எதிர்ப்பதிலும் சமற்கிருதத்தை விலக்கு வதிலுமே தமிழின மேம்பாடும் தமிழ்க் காப்பும் அடங்கியிருக்கிறது. அவ்வுணர்ச்சியைத் தமிழர் நெஞ்சங்களில் அரும்ப வைத்தது* ***திராவிடர் இயக்கம்;*** *மலர்ந்து விரியவைத்தது* ***தனித்தமிழ் இயக்கம்!*** *குமுக, அரசியல், பண்பாட்டு மலர்ச்சிக்கு இந்த ஈரியக்கங்களின் பேருழைப்புப் பயன்பட்டது.*

*தமிழகத்தில் தனித்தமிழ் உணர்வு கி.மு.7ஆம் நூற்றாண்டுக்குப் பின் தளரத் தொடங்கியது; 10ஆம் நூற்றாண்டுக்குப் பின் சரியத்*

*தொடங்கியது. வடமொழி வெள்ளத்தில் தமிழ் இழுத்துச் செல்லப்பட்டு விடாமல் காப்பாற்றியோர் கம்பரும் பவணந்தியும்! பின்வந்தோருக்கு அந்தக் காப்புணர்ச்சி இல்லாமல், அயன் மொழிப் பற்றுக்கு அடிமையானதால் தமிழும் தமிழினமும் பெற்ற இழப்புகள் ஏராளம்!*

*அயன்மொழிச் சேற்றிலிருந்து தமிழை மீட்கும் முயற்சி ஆங்கிலேயர் வருகையையொட்டிப் புத்துயிர் பெற்றது. வள்ளலார், பாம்பன் சாமிகள், வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், சுப்பிரமணியசிவா, பரிதிமாற் கலைஞர் முதலிய பலரும் தொடக்க விதைகளாயினர்.*

*கோவை அவிநாசியில் பிறந்து விருதுநகரில் வாழ்ந்த விருதை சிவஞானயோகி 19.11.1908 ஆம் நாள் 'திருவிடர் கழகம்' தொடங்கித் தனித்தமிழ் உணர்ச்சிக்கு வேகங்கூட்டினார். அவ்வமைப்பில் உறுப்பினராயிருந்தவர் சுவாமி வேதாசலம் (மலைமலையடிகள்).*

*மறைமலையடிகள் எனத் தம் பெயரைக் கொண்டு,* ***1916இல்*** *அவர் தொடங்கியதே* **தனித்தமிழ் இயக்கம்**.

'துறைமிகு ஆங்கிலம் மறைவட மொழியொடு
தூய்தமிழ்ப் பேரறிஞர் - தனித்தமிழ்
தோற்றிய ஓரறிஞர்'

*பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடியதற்கேற்ப, மறைமலை யடிகளார் தமிழ், ஆங்கிலம், சமற்கிருதம் முதலிய பன்மொழியிலும் புலமை மிக்கவர்.*

*பன்மொழிப் பேரறிஞரான மறைமலையடிகளார் தமிழுக்கும் தமிழருக்கும் ஆதரவாக நின்றதால் எதிர்ப்புக்கும் இழப்புக்கும் ஆளாக்கப்பட்டார். ஆனாலும் உறுதி குன்றாமல் தமிழுக்கு ஆதரவாய் உழைக்கும் உள்ளத்தோடிருந்தார். அதனால், தமிழர் உள்ளங்களில் இன்றளவும் மாறாப் பெருமையோடு அவர் வீற்றிருக்கின்றார்.*

"வாழ்த்தாத நாளில்லை வையகம்
மறைமலை யடிகள் மறையாத் திருப்பெயர்
வாழ்த்தாத நாளில்லை வையகம்"

பாவேந்தர் பாரதிதாசன் அவர் மாண்பினைப் பாடி மகிழ்ந்ததும், தம் 'குடும்ப விளக்கு' நூலினை மறைமலை யடிகளுக்குக் காணிக்கையாக்கி வழங்கியதும், அவரின் உறுதி தளராத உள்ளமும் உழைப்பும் கண்டு போற்றிய நன்றிக் கடன் என்பதில் அய்யமில்லை.

சென்னையில் கடந்த இருபது ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் **தமிழ்மண் பதிப்பகப்** பணிகளைத் தமிழுலகம் அறியும்.

வாழும் தலைமுறைக்கும் வருங்காலத் தலைமுறைக்கும் வழிகாட்டவல்ல தமிழறிஞர்கள் பலரின் நூல்களை முழுமுழுத் தொகுப்புகளாக வழங்கியிருப்பது தமிழ்மண் பதிப்பகத்தின் முடிப்பினை (சாதனை)யாகப் போற்றப்படுகிறது.

தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட அறிஞர்களைக் கண்டறிந்து, அவர்களின் நூல்களை முழுமையான தொகுப்புகளாகத் தமிழ்மண் பதிப்பகம் வெளியிட்டு வருகிறது. அவை காலம் முழுதும் பயன்படவல்ல கருவி நூல்கள் என்பதை அறிஞர் உலகம் அறியும்!

தமது நலத்தை ஒதுக்கி வைத்து, தமிழ் நலத்தைக் காக்க வாழ்ந்த அறிஞர்களின் அனைத்து நூல்களையும் ஒரு சேரத் தொகுத்து முழுத் தொகுப்பாக வழங்குவது பெரும்பணி! அதனைத் தமிழ்மண் பதிப்பகம் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. தொகுப்பு நூல்களின் பட்டியலைப் பின்னிணைப்பில் காண்க.

தமிழுக்காக உழைக்கும் உணர்வை இளமையில் எம்மிடம் ஏற்படுத்தியோருள் பெரும்புலவர் நக்கீரனாரும் அவர்தம் இளவல் புலவர் சித்திரவேலனாரும் குறிப்பிடத்தக்கோர்! எம் நன்றிக்குரியோர்!

தனித்தமிழ் ஆர்வம், திராவிடர் இயக்க ஈடுபாடு எனும் இரு சிறகுகளால் எம்மை எழவைத்தவர் பெரும்புலவர் நக்கீரனார்! அவரை எண்ணிக் கண்பனிக்க நன்றி கூறுகிறது எம் நெஞ்சம்.

காலப்பழமையாலும் பராமரிப்புக் குறைவாலும் அழிய நேர்ந்த தமிழிலக்கியங்கள் அளவற்றவை! அவற்றில் ஒருபகுதியை யாவது மீட்டு நம் கைகளுக்கு வழங்கியோர் ஆறுமுகநாவலர், சி.வை. தாமோதரனார், உ.வே.சாமிநாதர் முதலிய சான்றோர் பெருமக்கள்!

தமிழிலக்கியப் பெருஞ்செல்வத்தை மீண்டும் மீண்டும் அச்சாக்கி, அனைவர் கைகளையும் எட்டச் செய்த பெருமை - சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், உ.வே.சா. நூலகம், மணிவாசகர் பதிப்பகம் முதலிய பதிப்பாளர்களுக்கு உரியது.

அச்சுத்துறை அறிமுகமான பின்பே, அறிவுத்துறை அனைவருக்கும் பொதுச்சொத்தாகும் வாய்ப்பு வந்தது. எட்டாக் கனியாக ஓலைச் சுவடிகளில் முடங்கிக் கிடந்த இலக்கியச் செல்வங்கள், எல்லோருக்கும் எளிதாய்க் கிடைக்கும் பணியைச் செய்த பதிப்பாசிரியர்களும், பதிப்பாளர்களும் நம் நன்றிக் குரியோர்!

இரவு பகல் பாராது முதுமையைக் கருதாது உழைக்கும் மனவுரத்தை முன்னோடிப் பதிப்பாசிரியர்களின் பணியே எமக்கு வழங்கியது.

அரசும், பல்கலைக் கழகங்களும், அறநிறுவனங்களும், சமய பீடங்களும் ,பெரும் இயக்கங்களும், பெரும் செல்வர்களும் செய்ய வேண்டிய பெருந் தமிழ்ப்பணி இது! எளியவர்களால் இயங்கும் தமிழ்மண் பதிப்பகம் பெருந்தமிழ்ப் பணிகளை இன்னல்களுக்கு இடையில் அருமுயற்சியோடு செய்து வருவது, உள்ளவுரம் ஒன்றினால்தான்!

"வல்லமை சேர்க்கும் வலிமையுண் டாக்கும்!
வண்டமிழ் நைந்திடில் எதுநம்மைக் காக்கும்?"

காக்கும் தமிழைக் காக்கும் உணர்வைப் பாவேந்தர் பாடல் வரிகள் தந்தன.

அச்சுக்கு எட்டாமலும் கைக்குக் கிட்டாமலும் இருந்த பேரறிஞர் பலரின் நூல்களை நாட்டுடைமையாக்கி திராவிடர் இயக்க அரசுகள் வழங்கின. அதனால், அறிவு பரவலாகும் வாய்ப்புகள் உருவாயின.

'சரிவும் இழப்பும் நமக்கு வந்தாலும் தமிழுக்கு வரக்கூடாது' என எண்ணி உழைக்கும் இயக்கங்களும் அமைப்புகளும் தமிழ் நாட்டில் வற்றாமல் வளர்ந்தபடி இருக்கின்றன.

திருவிடர் கழகம் (1908)
தனித்தமிழ் இயக்கம் (1916)
தென்னிந்திய நலஉரிமைக் கழகம் (1916)

*சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் (1934)*
*தமிழ்ப்பாதுகாப்புக் கழகம் (1937)*
*தமிழறிஞர் கழகம் (1943)*
*தமிழ்ப் பேராயம் (1959)*
*தமிழ்க்காப்புக் கழகம் (1961)*
*தனித்தமிழ்க் கழகம் (1964)*
*உலகத்தமிழ்க் கழகம் (1968)*
*தமிழியக்கம் (1972)*
*தமிழ்ச் சான்றோர் பேரவை (1998)*

*தமிழ் மலர்ச்சிக்கும் தனித்தமிழ் வளர்ச்சிக்கும் அடித்தளம் அமைத்த இத்தகு அமைப்புகளுக்கு மூல விசையாகத் திகழும் பெருமையைப் பெறுவோர்* ***மறைமலையடிகளாரும் பாவாணருமே!***

*தமிழ் வளத்திற்கும் தமிழர் நலத்திற்கும் சிவனிய மேம்பாட்டிற்கும் மறைமலையடிகளார் ஆற்றிய பணிகள் அளப்பரியவை. அவை தொடர்பாக அவர் ஆய்ந்தளித்த அறிவு முத்துகள் எண்ணற்றவை!*

*அடிகளாரின் அனைத்துப் படைப்புகளும் பொருள்வழிப் பிரிக்கப்பட்டு, காலவரிசையில் 34 தொகுப்புகளாகத் தொகுக்கப் பட்டு* ***'மறைமலையம்'*** *என உங்கள் கைகளில் இப்போது தவழ்கின்றது.*

*பல தலைமுறைகளுக்குப் பயன்படும் அறிவுக் கருவூலம் இது!*

*தமிழர் இல்லந்தோறும் இருக்கவேண்டிய அருந்தமிழ்ச் செல்வம் இது!*

*அறிவுலகத்தால்* ***'மறைமலையம்'*** *வரவேற்கப்படும் என்னும் நம்பிக்கை எமக்குண்டு. நூற் சுரங்கத்தில் நுழைய அழைக்கிறோம்.*

"தனக்கென வாழ்வது சாவுக்கொப்பாகும்
தமிழ்க்கென வாழ்வதே வாழ்வதாகும்"

*எனும் பாவேந்தர் வரிகளை நினைவுக் கூறுகிறோம்.*

**- கோ. இளவழகன்**

இதுவரை வெளியிட்டுள்ள

## தமிழ்மண் பதிப்பகத்தின்
## நூல் தொகுப்புகள்

1. **பாவாணர் தமிழ்க் களஞ்சியம்** - 52 நூல்கள்
2. **தொல்காப்பியம்** - உரைகளுடன் 15 தொகுப்புகள்
3. **பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்** - 30 நூல்கள்
4. **கோபாலையரின் தமிழ் இலக்கணப் பேரகராதி** -18 தொகுப்புகள்
5. **சாமிநாத சர்மா** - 31 தொகுப்புகள்
6. **ந.சி.க. நூல் திரட்டு** - 24 தொகுப்புகள்
7. **சாத்தன்குளம் இராகவன் நூற்களஞ்சியம்** - 16 நூல்கள்
8. **சதாசிவப் பண்டாரத்தார்** - 10 நூல்கள்
9. **நா.மு.வே.நாட்டார் தமிழ் உரைகள்** - 24 தொகுப்புகள்
10. **செவ்விலக்கியக் கருவூலம்** - 15 தொகுப்புகள்
11. **தேவநேயம்** - 14 தொகுப்புகள்
12. **திரு.வி.க. தமிழ்க்கொடை** - 26 தொகுப்புகள்
13. **உரைவேந்தர் தமிழ்த்தொகை** - 28 தொகுப்புகள்
14. **கருணாமிருத சாகரம்** - 7 தொகுப்புகள்
15. **பாவேந்தம் - கெட்டிஅட்டை** - 25 தொகுப்புகள்
16. **புலவர் குழந்தை படைப்புகள்** - 16 தொகுப்புகள்
17. **கவியரசர் முடியரசன் படைப்புகள்** - 13 தொகுப்புகள்
18. **நாவலர் சோம சுந்தர பாரதியார் நற்றமிழ் ஆய்வுகள்** - 5 தொகுப்புகள்

19. **முனைவர் இராசமாணிக்கனார் நூல்கள்** - 39 நூல்கள்
20. **தமிழக வரலாற்று வரிசை** - 12 தொகுப்புகள்
21. **உவமைவழி அறநெறி விளக்கம்** - 3 தொகுப்புகள்
22. **முதுமொழிக் களஞ்சியம்** - 5 தொகுப்புகள்
23. **சாமி சிதம்பரனார் நூற்களஞ்சியம்** - 22 தொகுப்புகள்
24. **மயிலை சீனி. வேங்கடசாமி ஆய்வுக் களஞ்சியம்** - 20 தொகுப்புகள்
25. **அறிஞர் க. வெள்ளை வாரணனார் நூல் வரிசை** - 21 தொகுப்புகள்
26. **ஐம்பெருங் காப்பியங்கள்** - 5 தொகுப்புகள்
27. **பதினெண் கீழ்க்கணக்கு** - 3 தொகுப்புகள்
28. **நீதி நூல்கள்** - 2 தொகுப்புகள்
29. **பி. இராமநாதன்** - 10 நூல்கள்
30. **யாழ்ப்பாண அகராதிகள்** - 2 தொகுப்புகள்
31. **வெள்ளி விழாத் தமிழ்ப் பேரகராதிகள்** - 3 தொகுப்புகள்
32. **ந.சி. கந்தையா அகராதிகள்** - 2 தொகுப்புகள்
33. **முதுமுனைவர் இளங்குமரனார் தமிழ்வளம்** - 40 தொகுப்புகள்
34. **இளங்குமரனார் அகராதிகள்** - 2 தொகுப்புகள்

## விரைவில் வெளிவர இருக்கும்
## அறிஞர்களின் நூல்கள்

1. மனோன்மணீயம் பெ. சுந்தரம் பிள்ளை
2. வ.சுப. மாணிக்கம்
3. பெரியாரியம் (தந்தை பெரியார்)
4. தமிழர் மருத்துவக் களஞ்சியம்
5. தமிழ் - தமிழ் அகராதி



## பதிப்பாளர் விவரம்

# கோ. இளவழகன்

| | |
|---|---|
| பிறந்த நாள் | : 3.7.1948 |
| பிறந்த ஊர் | : உறந்தைராயன்குடிக்காடு அஞ்சல்<br>உரத்தநாடு வட்டம் - 614 625<br>தஞ்சாவூர் மாவட்டம். |
| கல்வி | : கல்லூரி புகுமுக வகுப்பு |
| இப்போதைய தொழில் | : புழக்கத்தில் இல்லாத பழந்தமிழ் நூல்களைத் தேடியெடுத்து வெளியிடல் |

**ஆற்றியுள்ள பொதுப்பணிகள்**

*1965இல் பள்ளி மாணவனாக இருந்தபோதே மொழிப் போராட்டத்தில் முனைப்பாகப் பங்கேற்றுத் தளைப்படுத்தப் பெற்று 48 நாள்கள் சிறையில் இருந்தவர்.*

*பிறந்த ஊராகிய உறந்தைராயன்குடிக்காட்டில் 'ஊர்நலன் வளர்ச்சிக் கழகம்' எனும் சமூக அமைப்பில் இருந்து ஊர் நலப்பணி ஆற்றியவர்.*

*உரத்தநாட்டில் 'தமிழர் உரிமைக் கழகம்' என்னும் அமைப்பையும், பாவாணர் படிப்பகத்தையும் நண்பர்களுடன் இணைந்து நிறுவித் தமிழ்மொழி, தமிழின, தமிழக மேம்பாட்டிற்கு உழைத்தவர். இளம் தலைமுறைக்குத் தமிழ்த் தொண்டாற்றியவர்.*

*பேரறிஞர் அண்ணாவின் மதுவிலக்குக் கொள்கையை நெஞ்சில் ஏந்தி உரத்தநாடு மதுவிலக்குக் குழுவின் முக்கிய அமைப்பாளர்களில் ஒருவராக இருந்து செயலாற்றியவர். 1975-இல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் **'உரத்தநாடு திட்டம்'** என்று பாராட்டப் பெற்ற மதுவிலக்குத் திட்டம் வெற்றி பெற உழைத்தவர்.*

*தமிழ்மண் பதிப்பகத்தை நிறுவி புழக்கத்தில் இல்லாத பழந்தமிழ் நூல்களையும், புதிய படைப்பு இலக்கியங்களையும், 19*

ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும் வாழ்ந்த தமிழ்ச்சான்றோர்கள் எழுதி வைத்துச் சென்ற தமிழின் அறிவுச் செல்வங்களைத் தேடி எடுத்து முழுமையாகச் சேர்த்து பொருள்வழிப் பிரித்து, கால நிரலில் ஒரே வீச்சில் தொடர் தொடராக வெளியிட்டுத் **தமிழ்நூல் பதிப்பில் தனி முத்திரை பதித்து வருபவர்.**

**பொதுநிலை**

தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகள், தந்தை பெரியார், பாவேந்தர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, மொழிநூல் மூதறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆகியோரை வழிகாட்டிகளாகக் கொண்டு அவர்தம் கொள்கை களை நிறைவேற்ற அயராது உழைத்து வருபவர்.

மறைமலையம் தொகுப்பில் இடம்பெறாத நூல்கள்

***முதற்குறள் வாத நிராகரணம் (1898), துகளறு போதம் (1898), சித்தாந்த ஞானபோதம் சதமணிக் கோவை குறிப்புரை (1898), வேத சிவாகமப் பிரமாண்யம் (1900),*** *இந்த நான்கு நூல்களும் தமிழகத்தின் பல இடங்களில் தேடியும் எங்கள் கைக்குக் கிடைக்க வில்லை. ஆதலான், மறைமலையம் தொகுப்பில் மேற்கண்ட நூல்கள் இடம் பெறவில்லை.*

## நூலுரை

அடிகள் வள்ளலார் வழிஞர்; பற்றுமையும் மிக்கார்; அதன் வெளிப்பாடாகப் பொது நிலைக்கழகம் அமைத்தவர். நெடிது வாழும் வாழ்வாம் சாவாக் கலையில் வள்ளலார் காட்டிய வழிகளின் அறிவ (சித்த) மருத்துவம் என்பதும் ஒன்று. வள்ளலார் கொண்ட அத்தேர்ச்சிமையைப் பற்றிக் கொண்ட அடிகளார்,

'மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை'

எனக் காலவரம்பிட்டு நூலியற்றினார்.

அடிகளார் ஆங்கில மருத்துவர் நூல்களிலும் ஆய்ந்து ஆழங்கால் பட்டவர். அதனைப் **பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்** என்பது முதலாயவற்றால் அறியலாம்.

கபிலர் அகவல், "மக்கட்கு வயது நூறாண்டு அல்லது இல்லை" என்றது. அதற்கு மேலும் வாழ்ந்தாரையும் வாழ்வாரையும் வரலாற்று வழியாகவும் கண்கண்ட வழியாகவும் நாம் அறிந்து வருகிறோம். நீடிய வாழ்வுக்குப் பேருதவியாக இருப்பது 'ஊண்', 'செரித்தல்' அற்றுப்போதல், மாறுபாடும் வேறபாடும் இல்லா ஊண் கொளல் என்பதை வள்ளுவம் தெளிய உரைத்தது. மேலை அறிஞர் நூல், அறிவு மருத்துவ நூல், தம்பட்டறிவு ஆய்வை விளங்க ஞானசாகர (அறிவுக் கடல் இதழ்களில் எழுதிய கட்டுரைத் தொகுப்பே இந்நூலாம்!

முகவுரையிலேயே, உயர்ந்து விளங்கும் நூல்களைப் பயின்ற அளவில் அமையாமல், தாமே செய்து பார்த்தும், தம்மைச் சார்ந்திருந்தாரிடத்துச் செய்து பார்த்தும் எவை சிறந்தனவோ, செலவில்லாதனவோ எளிதில் செய்து பயன் கொள்ளத் தக்கனவோ அவற்றையே நூலாக எழுதியதாகக் குறிக்கிறார். ஆண் பெண் சேர்க்கை, மக்கட்பேறு, கருவிலக்கு முதலாயவற்றை மறைவின்றிப் புரிந்து பயன் கொள்ளுமாறு வரைகிறார்.

*இதன் ஏழாம் பகுதி நோயில்லா நீண்ட வாழ்க்கை என்பது அளவாலும் பொருளாலும் விரிவு மிக்கதாம்.*

*அறிவியல் நூல், மருத்துவநூல் முதலாயவற்றைத் தூய தமிழில் எழுத முடியும் என்பதை நிலை நாட்டியவர் அடிகளார்.*

*வேற்று மொழிச் சொற்களுக்குத் தக்க கலைச் சொற்களைப் படைக்கும் ஆற்றல் வாய்ந்திருந்தமையால் இத்தகைய நூல் இயற்ற இயல்பாக அடிகளுக்கு வாய்த்ததாம்.*

*நூறாண்டு உயிர்வாழ்க்கை எழுதியவரே நூறாண்டு வாழவில்லையே என எண்ணுவார், வினவுவார் மேலும் தெளிய எண்ண வேண்டும்.*

*நீடிய வாழ்வு நெறி காட்டினார் அனைவரும் புகழால் நீடிய வாழ்வு பெற்றனரே அல்லாமல், பூத உடம்பால் நீடிய வாழ்வு பெற்றார் அல்லார் அதனாலேயே சங்கச் சான்றோர் ஆற்றுமணலிலும், விண்மீனிலும், தாமரை இதழினும் நீடிய வாழ்வு கொள்க என்று வாழ்த்தினார் இடையே,*

*"நினக்கென வரைந்த எல்லை" நலமாக வாழ்க எனவும் வாழ்த்தினர். அதுவே வாழ்வியல் மெய்ம்மையாம்! அம் மறைப்பு ஆற்றல் எவரும் அறியார்! அதனை விலக்கலும் அரிது. மருத்துவம் - உணவு - முன்னறிவு - பரம்பரை - முதலாம் எல்லாம் கடந்தது மறைப்பாற்றல்! அஃது இயற்கை நெறியதாம் ஊழ்வழிப்பட்டது!உணவு இல்லாமையால் சாவார் பதின்மர் எனின்*

*உணவு ஒவ்வாமையால் சாவார் தொண்ணூறு பேர்*

*என்பது மருத்துவ ஆய்வு! எவ்வளவு விழிப்புடையாரும், எவ்வளவு விளங்கிய அறிவரும் அதன் ஆட்சிக்கு உட்பட்டவரே என எண்ணின் ஐயம் அகலும்!*

*இனி நேர்ச்சி என்பதோ கண்மூடிக் கண் திறக்கு மளவுக்குள் நேர்ந்து விடுவது. இதனையும் எத்தகைய ஆய்வரும் அறிவரும் கடவார் என்பதையும் எண்ணுக.*

**- இரா. இளங்குமரன்**

# நூலாக்கத்திற்குத் துணை நின்றோர்

**நூல் கொடுத்து உதவியோர்**

**ரோசா முத்தையா நூலகம்** - சென்னை.
**புலவர் கா. இளமுருகன்** – புன்செய் புளியம்பட்டி
(மறைமலையடிகள் மன்றம்)
**மறை. தாயுமானவன்** - சென்னை
(மறைமலையடிகளின் பேரன்)

**பிழை திருத்த உதவியோர்:**

திரு. அ. மதிவாணன் (ஆங்கிலம்)
திரு. புலவர். த. ஆறுமுகம்
திரு. இராசுகுமார்
முனைவர். க. சுப்பிரமணியன்
திருமதி. உசா
திரு. க. கருப்பையா
புலவர். மு. இராசவேலு
திரு. நாக. சொக்கலிங்கம்
திருமதி. அ. கோகிலா
செல்வி. அபிராமி

## நூல் உருவாக்கம்

**கணினி செய்தோர்:**

திருமதி **வி. சித்திரா**
திருமதி **செல்வி**
திரு. **ஆசம்**
**பிராசசு இந்தியா**
(Process India),
திருமதி **மலர்**
திருமதி **ஹேமலதா**
திருமதி **கலைவாணி**
திருமதி'புகழ்ச்செல்வி' **கயல்விழி**

**நூல் வடிவமைப்பு:** திருமதி **வி. சித்திரா**

**மேலட்டை வடிவமைப்பு: கவி பாஸ்கர்**

**நூலாக்கத்திற்கு உதவியோர்**
இரா. பரமேசுவரன், க. இளந்திராவிடன், வே. தனசேகரன், கு. மருது, இல. தருமராசன்

**தாள் வழங்கியோர்:** சிவா தாள் மண்டி, சென்னை -1

**எதிர்மம்** (Negative)**:** பிராசசு இந்தியா (Process India) சென்னை-5.

**அச்சடிப்பு மற்றும் நூல் கட்டமைப்பு:**
வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்சு மற்றும் பிராசசு இந்தியா

**'மறைமலையம்'** எல்லா நிலையிலும் செப்பமுற வெளி வருவதற்குப் பல்லாற்றானும் உதவியாக இருந்த இவர்களுக்கும் மற்றும் அறிஞர் பெருமக்களுக்கும் எம் நிறைந்த நன்றியும் பாராட்டும்.

# மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை -2

1961இல் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் பதிப்பித்த
நூலினை மூலமாகக் கொண்டு இந்நூல் பதிப்பிக்கப்படுகின்றது.

**இந்நூலைப் பற்றிய குறிப்புரை...**

*'நீண்ட நாள் உயிர் வாழ்க்கை' என்றொரு ஆங்கில நூல் உள்ளது. அதுதான் அடிகளார் 'மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை' நூலை எழுத உந்தியுள்ளது. அதனை எழுதிய காப்டன் காடர்ட்டைமண்ட் 'ஒன்றேகால் நூற்றாண்டு (122 ஆண்டுகள்) வாழ்ந்தவர். இதனை எழுதிய அடிகளார் முக்கால் நூற்றாண்டை அறுகித்தான் வாழ்ந்தார். இது குறையாகாது. அடிகளார்க்கு அமைந்த பணிகள், பயணங்கள், சூழல்கள், குடும்ப இடையுறுகள், இயற்கை நிகழ்வுகள் அவர் கருதி எழுதியுள்ளபடி வாழ்வைக் கொண்டு செலுத்த இயலாமல் போயிருக் கலாம். இது நூலின் நிறைவை எவ்வகையிலும் தீண்டாது*

*இந்நூலில் அதிக அளவில் மேலை அறிஞர்களின் ஆய்வுக் கருத்துக்களை எடுத்துக் காட்டியுள்ளார். தமிழ் வடமொழிக் கருத்துக்கள் செறிந்துள்ளன. மேலையறிஞர் களின் உடலியல், மருந்தியல், உயிரியல், பாலியல் கருத்துக்கள் மிகப் பொருத்தமானவை. ஏற்கக்கூடியவை. இந்நூலில் உரிய இடத்தில் இடம் பெற்றுள்ளன. இவ் வடைப்பையெல்லாம் வைத்து நோக்கும்போது அடிகளார் ஒரு நூலை ஆக்கத் தொடங்குமுன் கருத்துக் களைக் குறிப்பெடுத்து வரிசைப்படுத்திக் கொண்டு எழுதியுள்ளார் என்று உணர முடிகிறது. சில வரிகளை எழுதப் பல நூல்களைப் பார்த்துள்ளார் என்று கொள்ளு மாறு பல வரிசகள் பேசுகின்றன.*

**- கோவை. இளஞ்சேரனார்**

தமிழ் மாமலை (பக். 63-64))

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆண் பெண் சேர்க்கை | 5 |
| 2. | இன்பமுங் கருவும் | 42 |
| 3. | மக்கட்பேறு | 69 |
| 4. | தாயின் மனநிலையுங் கருவின் அமைப்பும் | 88 |
| 5. | மகப்பேறும் மகவளர்ப்பும் | 110 |
| 6. | கருவிலக்கு | 148 |
| 7. | நோய் இல்லா நீண்ட வாழ்க்கை | 176 |
| 8. | மனநிலையும் நீண்ட வாழ்க்கையும் | 272 |

# 1. ஆண் பெண் சேர்க்கை

உடம்பை வளர்த்தற்கு இன்றியமையாத உணவை ஒவ்வோர் உயிரும் பலபடியாக வருந்தித் தேடுமாறு அவைகளின் வயிற்றிற் பசித்தீயை இறைவன் அமைத்து வைத்தது போலவே, உணவால் தளிர்த்து வளர்ந்த ஒவ்வோர் உயிருந் தனக்கு இனமான வேறுவேறுயிர்களைத் தன் வயிற்றினின்று பிறப்பிக்கும்படி அவ்வெல்லா உயிர்க்கும் புணர்ச்சி வேட்கையினை உரமாகத் தந்திருக்கின்றான். ஆகையாற், **பசியின்றி உடம்பு நிலைபெறாமை போலப் புணர்ச்சி வேட்கையின்றி உயிர்களும் நிலைபெறா; படைப்பும் நிலைபெறாது**. எல்லா வுயிர்களையும் பிறவியெடுக்கச் செய்து, அப்பிறவியின் உதவியால் அவை அறியாமையுந் துன்பமும் நீங்கி அறிவும் இன்பமும் பெறுமாறு ஏவுதலே இறைவன் திருவருள் நோக்கமாயிருக்கின்றது. தனது அருள்நோக்கம் ஈடேறும் பொருட்டே, ஆண்டன்மை வாய்ந்த உயிர்கட்கு ஆணுடம்பையும், பெண்டன்மை வாய்ந்த உயிர்கட்குப் பெண்ணுடம்பையும் படைத்துக் கொடுத்து, அவை முதலிற் றமதுடம்பைப் பாதுகாத்து வளர்த்துக்கொள்ளும் பொருட் டாகப் பசியையும் அது தணிந்தபின் அவை ஒன்றோடொன்று மருவித் தம்மை யொத்த உயிர்களைத் தம்மினின்று தோற்றுவிக்கும் பொருட்டாகப் புணர்ச்சி வேட்கையையுந் தந்து, அம் முகத்தால் அவை அறிவும் இன்பமும் மேன்மேல் அடையுமாறு செய்துவரும் ஐயனருட்செயலின் திறம் பெரிதும் வியக்கற் பாலதாயிருக்கின்றது! வறிதே உறங்கிக் கிடக்கும் ஒரு விலங்கு பசியெடுத்தவுடனே தனக்கு வேண்டும் இரையை நாடித் திரிதலுந், தனக்கு இரையாகும் மற்றொரு சிற்றுயிரைக் கண்டவளாவானே அதனைப் பிடித்தற்கு அது பலவகையான சூழ்ச்சிகள் செய்தலும், அங்ஙனம் முயலும் அதற்கு அகப் படாமல் அச்சிற்றுயிர் தன்னைப் பாதுகாக்கும்

பொருட்டுச் செய்யும் மாற்றான சூழ்ச்சிகளும், இவ்வாறு இரண்டும் முயல்கையில் அறிவும் ஆற்றலும் மிக்கதற்கு மற்றையது இரையாய் ஒழிதலும், இம் முயற்சியால் இவ்வுயிர்கட்கு நாளேற நாளேற அறிவு பெருகுதலுங் காண்கின்றாம் அல்லமோ! இனிப், பசி தணிந்தபின்னே அவை தத்தமக்கிசைந்த ஆண் பெண்களோடு மருவி இன்புறுதலும், இங்ஙனம் இன்புறுஞ் சேர்க்கையிலிருந்து அவை இளங்குழவிகளை யீன்று அவற்றிற்கும் இரைதேடித்தந்து அவற்றை மற்ற உயிர்கள் பிடித்துக் கொன்று தின்று விடாமற் கண்ணுங்கருத்துமாய் அவை களைப் பாதுகாத்து வருதலும் பிறழா இயற்கையாய் நடை பெறக் காண்கின்றாம் அல்லமோ! இப் பிறழா இயற்கை நிகழ்ச்சிகள் புழு முதல் மக்கள் ஈறான எல்லாவுயிர்களிலும் அமைந்து அவற்றிற்கு அறிவை விளக்கி இன்பத்தை ஊட்டி வரும் முறைமையை உற்றுநோக்குங்கால், நீண்டகாலம் உயிர்வாழ விரும்புகின்றவர்களெல்லாம் இதற்கு இணங்கவே நடக்கவேண்டுமென்பது புலனாகின்றதன்றோ? ஆதலால், மக்களாய்ப் பிறந்தவர்கள் தாம் தம் தந்தையாராலும் ஆசிரியராலும் கற்பிக்கப்பட்ட காலந்துவங்கி எடுத்த முயற்சியைத், தாம் தனியராய் இருக்கவரும் நாளில் மிகவுஞ் செவ்வையாய் நடத்தித் தமக்குந் தம்மைச் சார்ந்தார்க்கும் வேண்டுமளவு பொருளைத் தொகுத்துக்கொள்ளல் வேண்டும். ஒருவன் பொருள் தொகுக்கும் முயற்சியின் திறமெல்லாம் அவனது அறிவின் திறத்தைப் பொறுத்திருத்த லானும், அவன்றன் அறிவின் திறமெல்லாம் அவன் கற்குங் கல்வியின் றிறனைப் பொறுத்திருத்தலானும் அவன் கல்விப் பொருளைச் சாந்துணையும் இடையறாது தொகுத்துவரல் வேண்டும்.

இனி, இவ்வாறெல்லாங் கல்வியுஞ் செல்வமும் பெற்ற பின்னர் ஒருவன் தனக்கிசைந்த ஒருத்தியையும், ஒருத்தி தனக்கிசைந்த ஒருவனையும் அன்பாலும் அறிவாலும் ஆய்ந்தாய்ந்து பார்த்து மணந்துகொள்ளல் இன்றியமை யாததாகும். ஆண்பெண்மக்கள் ஒருவரையொருவர் மணந்து கொள்ளுஞ் சேர்க்கையானது, மற்றையோர் தமக்குள் ஒவ்வோர் ஏதுவால் ஒவ்வொரு காலத்திற் றோன்றிப் பிறகு நிலைபெறாது ஒழிந்துபோம் மற்றைச் சேர்க்கைகள் போலாது, அவர் சாகும் வரையில் நிலைபெற வேண்டிய சிறப்பினதாய் இருத்தலால், அதற்கு உடன்படுவோர் பல

காலும் பலவழியாலும் ஒருவரை யொருவர் ஆராய்ந்து பார்த்துத் தமக்கு இசைவானது நன்றாய் உணர்ந்தபின் அதிற்றலையிடல் வேண்டும். இல்லாக்கால் அவர் சாகும் மட்டும் முடிவில்லாத்துன்பத்தை உழக்க வேண்டியது வரும்.

பாருங்கள்! மக்களினுந் தாழ்ந்த பறவைகள் விலங்குகள் முதலான பகுத்தறிவில்லாச் சிற்றுயிர்களுள்ளும் ஓர் ஆண் தனக்கிசைந்த ஒரு பெண்ணோடும், ஒரு பெண் தனக்கிசைந்த ஓர் ஆணோடும் மருவியே உயிர்வாழுமல்லாது, தமக்கு இசையாதவற்றோடு அவை ஒருகாலும் பொருந்தி இரா. இவற்றின் இயற்கை இங்ஙனமானால், இவற்றினும் மிக உயர்ந்த பகுத்தறிவுடைய மக்கள் தமக்கு இசைந்த சேர்க்கையைப் பெறுவதில் எவ்வளவு கருத்துடையவர் களாயிருக்க வேண்டும்! ஆனால், இக்காலத்தில் மக்களுள் அங்ஙனம் நடைபெறக் காண்கின்றோம் இல்லையே! ஓர் ஆண்மகன் தனக்கு இசையாத ஒரு பெண்மகளையும், ஒரு பெண் மகள் தனக்கு இசையாத ஓர் ஆண்மகனையுங் கூடிக் காலங் கழிக்கும்படி வலிந்து புகுத்தப்படுகிறார்கள். மணமகனும் மணமகளும் ஒருவரை யொருவர் காணாமலும், அவரவர் இயல்பையுஞ் செயலையுந் தெரியாமலும் இருக்க, அவர்களின் பெற்றோரும் உறவினரும் அவ்விருவர்தம் உடன்பாடுங் கேளாமலே அவரைப் பிணைத்து விடுகின்றனர். இவ்வாறு பிணைக்கப்பட்ட ஆண்பெண் இருவரும் பின் கலந்து பழகப்புகுங்கால் ஒருவரை யொருவர் பிடியாமையாற் கவலையும் மனவருத்தமுந் துன்பமும் உடையராகி ஒருவரோடொருவர் சண்டையுஞ் சச்சரவும் இட்டுத் தம்வாழ்நாள் முடியும்மட்டுஞ் சொல்லவும் எண்ணவுங்கூடாத அல்லற் கடலிற்பட்டுக் கரைகாணாத் துயரத்தை அடைந்து மடிகின்றனர். இங்ஙனந் துன்பவாழ்க்கை செலுத்தும் இவர்கள் வயிற்றிற் பிறக்கின்ற பிள்ளைகளுந் துன்பத்திற்கே இடமானவைகளைச் செய்து தாமுந் துன்புறுகின்றார்கள். வலுக்கட்டாயமாய்ப் பிணைக்கப்பட்ட மகாரும் மகளிரும் ஒரு சிறிதும் ஒருங்குவாழ மனம் இசையாமல் வேறு வேறு பிரிந்து தாம் விரும்பியவாறு ஒழுகுவார்களாயின், அப்போது அவரைப் பிணைத்துவிட்ட பெற்றோர் உறவினர் முதலியோ ரெல்லாம் அவர்மேற் பழிகூறித் துன்புறுத்தக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்! ஆ! கள்ளங் கவடறியாச் சிறுவர் சிறுமியரை வலுக்கட்டாயமாய்ப் பிணைத்து

அவர்களை முன்னுந் துன்பத்திற்கு உள்ளாக்கி, அவர் அக் கொடியோர் செய்த பொல்லாத கட்டுப்பாட்டுக்கு இணங்கி நடக்க மாட்டாமற் பிரிந்து தத்தம்வழியே ஒழுகினாற் பின்னும் அவரைத் துன்புறுத்தக் கங்கணங் கட்டி நிற்குங் கொடியோர் நிறைந்த இந் நிலவிலகினுங் கொடியதொரு நிரயம் பிறிதுண்டோ! இளம்பருவச் சிறாருஞ் சிறுமியரும் பிழைத் தொழுகும்படியான ஏற்பாடுகளைச் செய்து வைத்துப், பின்னர் அவர் தவறி நடந்தாரென அவர்மேற் பழிசுமத்தி அவரைப் பலவகையாலுந் துன்புறுத்துவோர் உயிரைக் கொள்ளை கொள்ளுங் கூற்றுவன் இனத்தார் ஆவரேயன்றி அவர் அவ்விளைஞர்க்குப் பெற்றாரும் உடன் பிறந்தாரும் உற்றாரும் உறவினரும் ஆவரா! பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்துவைத்துப் பின் அவற்றினின்றும் வழுவினாரைக் குற்றங்கூறி வருத்துதல் முறையேயாகும். மற்றுப் பொருத்த மில்லாக் கட்டுப்பாடுகளைத் தம் புல்லறிவாலுஞ் செருக்காலும் அறியாமையாலுஞ் செய்து வைத்துப் பின் அவற்றிற்கு இணங்கமாட்டாமல் வேறு நடந்தாரை வருத்துதல் அறக் கொடிது! கொடிது! இன்னதொரு வாழ்க்கையினின்றும் வழுவினார்க்குப் பாவமும் நிரயமும் வரும் என்று உரைப்பவர், அவ் வாழ்க்கையைப் பிழைபட முதலில் அமைத்துவிட்டார்க்கு வரும் பாவத்தையும் நிரயத்தையும் எடுத்துக் கூறாதது என்னை! பதினான்கு ஆண்டுள்ள ஓர் அழகிய இளஞ்சிறுமியை அவட்குத் தந்தையோ பாட்டனோ என்று சொல்லத்தக்க ஒருவனுக்கு மணம் புகுத்துவோர் பாவத்தையும் நிரயத்தையும் அடைவரோ, அக்கொடியவர் கட்டுப்பாட்டுக்கு இசைந்து நடக்க மாட்டாத அச் சிறுமி பாவத்தையும் நியத்தையும் அடைவளோ என்று நடுநின்று ஆழ்ந்து பார்ப்பிற், பிழைபட்ட ஏற்பாட்டைச் செய்த அக் கொடியரே பாவத்திற்கும் நிரயத்திற்கும் ஆளாவரல்லால், அச் சிறுமி அவற்றிற்கு ஆளாகமாட்டாள் என்பது திண்ணம். ஒரு சிறுமியை அவட்குச் சிறிதும் ஒவ்வாத ஒரு முதியோனுக்குப் பிணைத்து வைக்க அவர் முன்வருதல்போல, ஒரு சிறுவனை அவற்குச் சிறிதும் ஒவ்வாத ஒரு முதியோளுக்கு மணமகனாக்கி வைக்க அவர் முன் வராததென்னை! மணஞ் செய்விக்கப்படுவோர் தம் வாழ்நாள் முடியும்மட்டும் ஒருங்கிருந்து வாழவேண்டியிருப்பதனை நன்கு உணர்ந்து அதற்கு ஏற்ப அவர் தம்நலத்தைக் கருதிப் பொருத்த

முள்ளவர்களைப் பொருந்தச் செய்யாமற் பெற்றாரும் உற்றாரும் ஆவார் தமது நலத்தையும் தம்முடைய போலிச் சாதிக் கட்டுப்பாடுகளையுந் தமக்குள்ள அடங்காப் பொருட் பற்றையுமே முதன்மையாகக் கருதிப், பொருத்த மில்லா இருவரை மணமகனும் மணமகளுமாகப் பொருத்து வதினுங் கொடியதொரு மறச்செய்கை இம் மண்ணுலகில் வேறில்லை. இங்ஙனம் பெற்றார் உற்றார் செய்யுங் கொடிய ஏற்பாடு உலகத்திற் பலவகையான பாவங்களையும் வழி வழியாகப் பெருகச் செய்தலால், இவர்கள் அறக்கடவுளாற் சிறிதும் மன்னிக்கப் படுதலின்றி இம்மை மறுமை இரண்டினும் ஒறுக்கப்படுவரென்பது திண்ணம். இவர்தம் பொருந்தாக் கொடிய கட்டுப்பாடுகளுக்கு இணங்கி நடக்க மாட்டாமல் ஒரோவழி வழுவியொழுகும் இளைஞர்கள் எல்லா இரக்கமும் உடைய இறைவனால் மன்னிக்கப்படுவ ரென்பதுந் திண்ணமேயாம் அது நிற்க.

இனி, ஆண் பெண் சேர்க்கையால் நடைபெறும் மனை வாழ்க்கையானது கவலைக்குந் துன்பத்திற்கும் இடமாத லின்றிக் கணவனும் மனைவியும் அவர்தம் மக்களும் மனம் மகிழ்ந்து வாழ்வதற்கே இடந்தருவதாயிருத்தல் வேண்டும். கணவன் எவ்வளவு நல்லவனாயிருந்தாலும், எவ்வளவு கற்றவனா யிருந்தாலும், எவ்வளவு அறிவும் அழகும் உடைய வனாயிருந் தாலும் அவனுக்கு மனைவியாய் வந்தவள் நல்லியல்புங் கல்வியும் அறிவும் அழகும் இல்லாதவளாய் இருப்பளாயின் அவன் மன அமைதியுடனும் மனமகிழ்ச்சி யுடனும் உயிர்வாழ்தல் சிறிதும் இயலாது. இங்ஙனமே மனைவி எல்லா நலங்களும் பொருந்தியவளாயிருந்தாலும் அவளுக்குக் கணவனாய் வந்தவன் அத்தகைய நலங்கள் இல்லாதவனாய் இருப்பனாயின் அவள் அமைதியும் மகிழ்ச்சியும் உடையவளாய் உயிர்வாழ்தல் செல்லாது. ஒரு வண்டியிற் பூட்டிய இரண்டு எருதுகளும் ஒத்து ஒருமுகமாய் நடவாமல் ஒன்று ஒரு பக்கமாயும் மற்றொன்று மற்றொரு பக்கமாயும் அதனை இழுக்கமாயின் அவ்வண்டி நகராமல் முட்டுப் படுவதோடு அவ்வெருதுகளும் வழிதப்பி வீழ்ந்து துன்புறும். இதுபோலவே, இல்வாழ்க்கை என்னும் வண்டியும் ஒத்தமனமும் ஒத்த இயல்புமுடைய காதலனுங் காதலியும்

இசைந்து ஒருமுகமாய் நடத்தினாலன்றிச் சிறிதும் நடவாது; ஏனெனிற் புறத்திலுள்ளா ரோடு ஒருவர்க்கு மனவருத்தம் நேர்ந்தால் அவரொடு பேசாமலும் அவரைக் காணாமலும் பிரிந்து தனியே அகத்தின்கண் அமைதியோடும் ஆறுதல் பெற்றிருக்கலாம். ஆனால், அகத்தினுள்ளேயே தன்னோடு உடனிருக்கும் மனைவி மக்கள் முதலானாரோடு ஒருவன் மனவருத்தமுற்றால் அவர்களைவிட்டுத் தனித் திருந்து அங்கே உயிர் வாழ்தல் முடியாது. இதுபற்றியே திருவள்ளுவ நாயனாரும்

"உடம்பா டிலாதவர் வாழ்க்கை, குடங்கருள்
பாம்போ டுடனுறைந் தற்று" (குறள். 890)

என்று அருளிச் செய்தார். ஆகையால், ஒருவன் தன் மனையகத்தே, அமைதியும் மகிழ்ச்சியும் பெற்றிருக்க வேண்டு மானால், அவன் தனக்கேற்ற ஒருத்தியை மனையா ளாகக் கைக் கொள்ளவேண்டுவது இன்றியமையாத கடமையாகும்.

அஃது ஒவ்வாது. ஓர் ஆண்மகன் தான் வேண்டிய படியெல்லாம் ஒரு பெண்மகளை அடக்கியாள வல்லவ னாகலின் தன்னைச் சேர்ந்தவர்களால் தனக்கு மனை யாளாகப் பூட்டப்பட்டவள் எவ்வளவு இழிந்த இயற்கை உடையவளாயிருப்பினும் அவளைத் தனக்கேற்றபடி யெல்லாந் திருத்தியாளலாம். ஆதலாற், பொருத்தமான வளைத்தான் தேடி மணக்கவேண்டு மென்பது பொருந்தா தெனின்; அங்ஙனமன்று, திருந்தத் தக்கவர்களைத்தாந் திருத்தலாமேயொழிய, எல்லாரையுந் தான் விரும்பியபடி யெல்லாம் ஒருவன் திருத்தி விடலா மென்று உரைப்பது உயிர்களின் பல்வேறு வகையான இயற்கையும் பொருள் களின் பல்வேறு வகையான இயற்கையும் பகுத்துணர மாட்டாதார் கூறுங் கூற்றாம். பிறவிகடோறும் பல வகையாகப் பழகிவரும் பழக்கத்தாற் சிலர் எளிதிலே திருந்தத்தக்கவர்களாய் இருக்கின்றார்கள். வேறு சிலர் திருத்து வோரின் பெருமுயற்சி யாலும் பேருழைப்பாலுந் திருந்தும் இயற்கையுடையவர்களாய் இருக்கின்றார்கள். பின்னுஞ் சிலர் எவ்வளவுதான் பிறர் திருத்தினாலுந் திருந்த மாட்டாதவர்களா யிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட வேறுபாடுகள் உயிர்களிற் காணப்படுதல் போலவே, உயிரில்லாப் பொருள்களிலும் அவை காணப் படுகின்றன. வடிவங்கள் வனைவோனுக்கு மெழுகினால்

ஒரு பாவை செய்தல் மிக எளிது; மற்றுக் கருங்கல்லிலாவது சலவைக் கல்லிலாவது அதனை அமைப்பதென்றால் அஃதவனுக்குப் பெருவருத்தத்தினையும் பேருழைப்பினையுந் தரும்; இனி, அதனை நன்றாய் உலர்ந்த ஆற்றுமணலிற் சமைப்பதென்றால் அவன் எத்துணைதான் வல்லவனாயினும் எவ்வளவுதான் முயன்றானாயினும் அஃது அவற்கு முடியாத தொன்றாம். இங்ஙனமாக மெழுகுக்குங் கல்லுக்கும் உலர்ந்த ஆற்றின் மணலுக்கும் மென்மை வன்மைகளிற் பெரிதும் வேறுபாடு இருத்தல் போலவே உயிர்களின் மனவியற்கையிலும் வேற்றுமை மிகுதியாய் உண்டென்பது உற்றாராய்வார்க்கு இனிது விளங்கும். இன்னும் இளைய மூங்கிற்கோலை எளிதில் வளைக்கும் ஒருவன் முற்றின முதிரைமரத்தை வளைக்க மாட்டுவனோ? இங்ஙனமே, ஒருத்தியை எளிதிற்றிருத்தி விடும் ஒருவன், அதுபோல் எல்லாரையுந் திருத்திவிடக் கூடுமென்று நினைத்தலினும் பிழையான எண்ணம் பிறிதில்லை. ஆதலால், ஒருவரோடொருவர் ஒருமித்துத் திருந்தி இனிது வாழத்தக்க வர்களாய்க் கணவனும் மனைவியும் அமைதலே வேண்டற் பாலதாம் என்க.

மேலும், அன்பினால் இல்வாழ்க்கை நடைபெறல் வேண்டுமே யல்லது, அச்சத்தினால் நடைபெறுதல் சிறிதும் ஆகாது. மனைவி கணவனுக்கு அஞ்சி நடத்தலுங், கணவன் மனைவிக்கு அஞ்சி நடத்தலும் ஒழியாத துன்பத்திற்கே இடமாம். அவர்களுள் ஒருவரைப் பார்த்து ஒருவர் திகில் கொள்ளுதலால் அவர்கள் உடம்பின் இரத்தமும் நஞ்சாகிப் பலவகை நோய்களுக்கு இரையாகின்றது. அவரிருவரும் ஓரிடத்தில் இருக்கையில் அவருள்ளத்தில் அமைதியில்லாமை யால், ஒருவரையொருவர் வெறுத்து ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்திருக்கவே விரும்புதலால் அச்சத்தினால் அடங்கி வாழ்தலினுந் தனித்திருத்தலே விரும்பற்பாலதாம். அன்பினால் இசைந்துவாழ்வார் வாழ்க்கையின்பத்தினையே தருதலால் அவர் ஒருவரையொருவர் சிறிது நேரங் காணப் பெறாராயினும் மனம்பொறார். அவர் எந்நேரமும் ஒன்றுகூடியிருக்கவே விரும்புவர். அவருள் ஒருவர் தாம் எதனைத் செய்தாலும் அதனை மற்றவர் கண்டு மனம் உவக்கும்படி செய்வரே யன்றி அவர் அருவருக்கும்படி பிழைபடச் செய்யார். அல்லது ஒரோவொருகால் அறியாமையாற் சிலபிழைகள் நேர்ந்தாலும்

அவற்றை மற்றவர் மனத்துட் கொண்டு பாராட்டமாட்டார். ஒருவர்க்கு வந்த இன்ப துன்பங்களை மற்றவர் தமக்கு வந்தனவாகவே கருதுவர். இத்தன்மைத் தாகிய இன்ப வாழ்க்கையே ஒத்த அன்பும் ஒத்த இயல்பும் வாய்ந்த காதலனுங் காதலியும் நடத்தும் உண்மை இல்வாழ்க்கையாகும். இவ்வாறன்றித் தீய அச்சத்தினாற் கட்டுப்பட்டு நடத்துவது இல்வாழ்க்கை யாகாது; அதனை நடத்துவோருங் கணவனும் மனைவியும் ஆகார்.

இனிக், கணவனும் மனைவியுமாய்ப் பொருந்துவோர் ஆண்பாலாரும் பெண்பாலாருமாய் இருத்தலால், அவ்விரு பாலாரின் இயற்கைகளை ஆராய்ந்தறிதலும் இன்றியமை யாததாகும். ஆண்பாலாரெல்லாம் எதனையும் ஏற்று நடத்தத் தக்க ஆற்றலும் அதற்கு இசைந்த அறிவும் உடையவராவர். பெண்பாலாரெல்லாம் நடந்தது நடக்கப் போவதெல்லாம் இயல்பாகவே யுணரும் மெய்யுணர்ச்சியும் அன்பும் மெல்லிய தன்மையும் உடையராவர். இங்ஙனம் இவ்விருவர்க்கும் உள்ள இருவேறு இயற்கைகளுங் கல்வியறிவாலும் நல்ல பழக்கத்தாலும் மேன்மேல் வளர்ந்து விளங்கிச் சுடர்விடும். மற்றுக் கல்வியும் நல்ல பழக்கமும் இல்லாதவர்க்கு அவ்வியற்கை விளக்கம் மாசுபடிந்து வரவர மழுங்கிப் போகும். தீய கல்வியுந் தீய பழக்கமும் உடையவர்க்கோ இவ்வியற்கைகள் விளக்கமுற்று எரிவதுபோற் சிறிது காணப்படினும், நெய் அற்ற தகழியின் சுடர் சிறிது நிமிர்ந்தெரிந்து பிறகு தனக்குப் பற்றுக்கோடா யுள்ள திரியினையும் எரித்துத் தானும் அவிந்துபோதல்போலப், பின்னர் அவை மழுங்கித் தம்மையுடையாரையும் மாய்த்து விடும். ஆகையால், இவ்விருவேறியற்கைகளும் பிறவியிலே இனிதமையப் பெற்ற இருபாலாருந் தாம் வருந்திப் பெற்ற உயர்ந்த கல்வியறிவானும் நற்பழக்கத்தானும் அவை தம்மை மேன்மேல் விளங்கச் செய்து கொண்டு தத்தமக்கேற்றவரைப் பொருந்தி நடந்தால், அவர் நடத்தும் அவ்வாழ்க்கை மக்கள் வாழ்க்கை ஆகாமற் கடவுளர் செலுத்தும் வானுலக இன்ப வாழ்க்கையே யாகும்.

ஓர் ஆண்மகன் கல்வியறிவு ஆற்றல்களில் எவ்வளவு தான் சிறந்வனாயிருப்பினும், அவன் தனக்கேற்ற ஒரு பெண்மகளை மனைவியாகப் பெற்றால் அல்லாமல் அவனது வாழ்க்கை

வளமுடைத்தாகாது; நல்ல மனையாளைப் பெறாதவனது உயிர்வாழ்க்கை நீர்ப்பசையற்ற பாலை நிலத்திற்கே ஒப்பாகும். ஏனென்றாற், **சென்றது வருவ தெல்லாம் இயற்கையாக உணரும் நுண்ணுணர்ச்சி பெண்பாலார்க்கு வாய்த்தாற்போல ஆண்பாலார்க்கு வாய்த்திலது. இன்னதுசெய்தால் நன்றாம், இன்னது செய்தாற் றீதாம் என்று உடனே யுணரும் உணர்ச்சி பெண்பாலார்க்கு இயற்கையாக வாய்த்திருக்கின்றது**. அவர் ஒரு நொடிப் பொழுதில் உணரும் அதனை ஆண்பாலார் தமது மெய்யறிவால் ஆராய்ந்துகண்டு தெளிதற்கு எத்தனையோ நாட்கள் செல்லும். முன்பின் ஆராய்ந்து பார்த்தற்கு நேரம் இன்றி உடனே முடிவுகட்டிச் செய்ய வேண்டிய நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து மக்கள் வாழ்க்கையிற் கிளைக்கின்றன. சடுதியிற் றோன்றும் அந் நிகழ்ச்சிகளிற் சில செவ்வையாக உடனே செய்யப்படுமாயிற் பெரியதொரு பொருள்வருவாயினையும், அங்ஙனஞ் செய்யப்படாவாயிற் றிரும்பக் கரையேற முடியாத அவ்வளவு பெரும் பொருட் கேட்டினையும் வருவிப்பன வாயிருக்கும்; வேறுசில காலந்தாழாது திருத்தமாகச் செய்யப்படின் உயிரைப் பாதுகாப்பனவாயும், அல்லாக்கால் உயிரை அழிப்பனவாயும் இருக்கும்! மற்றுஞ் சில உடனே ஊக்கமாகச் செய்யப்படின் நிலைபெற்ற இன்பத்தைத் தருவனவாயும், இல்லையேல் என்றுந் தொலையாத துன்பத் தைத் தருவனவாயும் இருக்கும். இவ்வாறு பலதிறப்பட்ட இயல்பினவாகச் சுருக்கெனத் தோன்றும் நிகழ்ச்சிகளின் நன்மை தீமைகளையும், அவற்றை முடிக்கும் ஆற்றினையும் மேன்மை மிக்க ஒரு பெண்மகள் உடனே யுணர்ந்து உரைக்குமாறு போலச் சிறந்த ஓர் ஆண்மகனும் அறிந்து சொல்லமாட்டுவான் அல்லன். எத்தகைய நிகழ்ச்சியின் இயல்பினையும் உடனே உணர்ந்துரைக்கும் இயற்கை யுணர்வாற்றல் பெண் மக்களுக்கும், அதனைக்கொண்டு நடத்தும் இயற்கை அறிவாற்றல் ஆண்மக்களுக்கும் பிறவி யிலேயே அமைந்திருக்கின்றன. ஒன்றன் உதவியால் மற்றொன்று நடைபெறுமாறு பிறவியே இங்ஙனம் இருவேறு வகையாய் அமைந்திருத்தலாற், பெண்பாலார் உதவியின்றி ஆண்பாலாரும், ஆண்பாலார் உதவியின்றிப் பெண்பாலாரும் ஓர் அரும் பெருமுயற்சியைச் செய்து முடித்தல் இயலாது. குதிரையின் இயக்கத்திற்கு அதனை நடாத்தும் பாகனும்,

அரசன் ஆளுகைக்கு உடனிருந்து உதவும் அமைச்சனும், மாணாக்கனது கல்விப் பயிற்சிக்கு அதனைப் பயிற்றும் ஆசிரியனுங், கடல் நடுவோடிப் பல துறைமுகங்களைக் காணுங் கப்பலுக்கு அதனைச் செலுத்தும் மீகாமனும் இன்றியமையாது வேண்டப்படுதல் போல உலக வாழ்க்கையிற் பல முயற்சிகளிற் புகும் ஆண்மக்களுக்கு அவரவர் இயல்போடொத்த பெண் மக்களின் சேர்க்கை இன்றியமை யாது வேண்டற் பாலதாகும். உலகத்திற்குப் பல பெரு நன்மைகளைப் புரிந்து தாமும் நலம்பெற்ற ஆண்மக்கள் வரலாறுகளையெல்லாம் ஊன்றி ஆராய்ந்தால், அவர்களிற் பெரும்பாலார் தமக்கினிய காதலிமாரின் சிறந்த உணர்ச்சி உதவியினாலேயே அங்ஙனஞ் சிறப்பெய்த லானாரென்பது நன்கு புலனாகின்றது. **கூன் பாண்டியன்** என்னும் மன்னவன் தன் மனைவியரான **மங்கையர்க்கரசியாரின்** மெய்யுணர்வு மொழிகளைக் கேட்டபின் அன்றோ பெறுதற்கரிய நலங்களைப் பெற்றான்! **திருநாவுக்கரசு நாயனார்** தம் அருமைத் தமக்கையாரான திலகவதி யாரின் கருத்துக் கிணங்கி நடந்த பின்னன்றோ தம்மை வருத்திய பெரும்பிணி தீர்ந்து இறைவனருளையும் பெறலானார்! இன்னும் அயல்நாட்டில் மன்னர் மன்னனாய் விளங்கிய **நெப்போலியன்** தன் முதன் மனைவியார் உணர்ந்து சொல்லிய மெய்ம்மொழிகளைக் கேட்டு நடந்தவரையில் ஐரோப்பிய நாட்டிற் போர்வலியிற் சிறந்த அரசர் பலரைப் புறங்கண்டு, அவர்தம் வளவிய நாடு நகரங்களையெல்லாங் கைப்பற்றிக் கொண்டு நிகரற்ற வேந்தனாய் விளங்கினான்.

இனிக், கணவனும் மனைவியும் ஒத்த இயல்பினராக அல்லாமல் ஒவ்வாதபடி பொருத்தப்பட்டால், அவருள் உயர்ந்தோராய் இருப்பவர் தாழ்ந்தோரான மற்றையோரின் சேர்க்கையாற் பெருந்துயர் உழப்பர். கண்ணகி மிக உயர்ந்த தன்மையினளாய் இருக்க, அவள் கணவனான **கோவலனோ** அவளினுந் தாழ்ந்த இயல்புடையவனாய் இருந்தமையின், அவள் உற்றுணர்ந்து சொல்லிய சொற்களைக் கேளாமற் சென்று பாண்டிய அரசனால் வெட்டுண்டு இறந்தான். மேலே குறிப்பிட்ட **நெப்போலிய மன்னன்** உணர்விற் சிறந்த முதன் மனையாளை விலக்கி விட்டு இரண்டாம்முறை மணந்து கொண்ட மனையாள் அவளினுந் தாழ்ந்த இயற்கை

யுடையளாய் இருந்தமையின் அவள் சொற்களைக் கேட்டு நடப்பவே, தன்னிலும் வலிகுறைந்தோரால் தோல்வியுற்றுத், தன் நாடுநகரங்களை யெல்லாம் இழந்து, மாற்றான் சிறையில் அகப்பட்டு உயிர் இழந்தான். ஆகவே, ஒரு பெண்மகள் தன்னிலுந் தாழ்ந்த ஓர் ஆண் மகனைச் சேர்ந்திருத்தலும் ஓர் ஆண் மகன் தன்னிலும் தாழ்ந்த ஒரு பெண்மகளைக் கூடியிருத்தலும் ஆகாவாம். ஆண்மகன் இழிந்தவனா யிருந்தால், அவனது இழிந்த இயற்கை அவனைச் சேர்ந்த பெண்மகளுக்கு அவனையறியாமலே ஏறிவிடும். அவனது இழிந்த இயல்பு தனக்கு ஏறாதபடி அவள் எவ்வளவு விழிப்பாய் இருந்தாலும், அஃது ஏறாமல் தன்னைக் காத்துக் கொள்ளல் அவளால் முடியாது. ஏனென்றால், மக்களின் மனமானது அவர் உணர்ந்தும் உணராமலுந் தம்முள் மற்றையோரின் இயல்பு களை ஏற்குந் தன்மை வாய்ந்ததாயிருக்கின்றது. ஒருவரோடு அடுத்தடுத்துப் பழகும் மற்றொருவர் அவர் பேசுவது போலவும் பார்ப்பது போலவுந் தலையசைப்பது போலவுங் கைகாட்டுவது போலவும் முகஞ்சுளிப்பது போலவும் இசை பாடுவது போலவும் எல்லாந் தாமுந் தம்மையறியாமலே செய்யப் பழகிவிடுகின்றார். இவ்வாறு தம்மையறியாமலேலே ஒருவர்க்கு மற்றொருவரின் பழக்கங்கள் ஏறுவதை உற்றுணர்ந்து பார்த்தால், **ஒருவர்க்குப் பிறர் ஒருவரின் இழிந்த செயல்கள் எளிதில் ஏறுவதுபோல உயர்ந்தவை ஏறுவதில்லை**. இழிந்தோருடன் பழகுவோர் அவர்தம் இழிந்த செயல்களை எளிதிற்கற்றுக் கொள்ளுதல்போல, உயர்ந்தோருடன் பழகுவோர் அவர்தம் உயர்ந்த செயல்களைக் கற்றுக் கொள்வதில்லை. சிறுவர் சிறுமியரைக் கீழ்மக்களுடன் பழக விட்டால் அவரிடத்துக் காணப்படும் அருவருப்பான செயல்களை யெல்லாஞ் சில நாட்களில் எளிதிலே தாமுஞ் செய்யப் பழகி விடுகின்றார்கள். அங்ஙனமே உயர்ந்தோருடன் அவர்களை எத்தனை காலந் தான் பழகவிட்டாலும், அவர்கள் அவர்தம் உயர்ந்த முறை களைக் கற்று நடப்பது அரிதிலும் அரிதாயிருக்கின்றது. இவ்வாறு மக்களியற்கையானது இழிந்தவற்றை நாடுவதில் எளிதாகச் செல்லுதலால், எத்துணை உயர்ந்தோர்க்குங் கீழ்மக்களின் சேர்க்கை சிறிதும் ஆகாது. ஏரிநீர் அப்புறம் போகாமல் தடைசெய்து நிற்கும் மண் அணையினுள்ளும் அவ்வேரிநீர் சுவறி நுழைந்து விடுதல்போலக், கயவரின் இழிந்த

*செயல்கள் தம்முட்புகாமல் தடைசெய்து நிற்குஞ் சான்றோர் மனமும் ஒரோ ஒருகால் தன்னையறியாமலே அவை நுழைதற்கு இடங் கொடுத்துவிடும். இதனைத்* ***திருவள்ளுவ நாயனாரும்****,*

"மனநலன் நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநலன் ஏமாப் புடைத்து" (குறள் 458)

*என்று அறிவுறுத்தருளினார். ஆதலால், ஓர் உயர்ந்த ஆண்மகன் இழிந்த ஒரு பெண்மகளை மனைவியாகப் பெற்று அவளோடு கூடிவாழ்தலும், ஓர் உயர்ந்த பெண் மகள் இழிந்த ஓர் ஆண் மகனைக் கணவனாகப்பெற்று அவனோடு கூடியிருத்தலுஞ் சிறிதும் ஆகாவென்க.*

*நன்றுசொன்னீர், உயர்ந்தோன் ஒருவன் இழிந்த ஒருத்தியை மருவிவாழ்தல் ஆகாதாயினும், உயர்ந்தோள் ஒருத்தியும் இழிந்த ஒருவனை மணந்து வாழ்தல் ஆகாதென உரைத்தல் பொருந்தாது; என்னை? தன் தாய்தந்தையாரானும் உற்றார் உறவினரானுந் தனக்குக் கணவனாக அமைக்கப் பட்டவன் எத்துணை இழிந்தவனாயிருப்பினும் அவனைத் தெய்வமாக நினைந்து அவனை வழிபட்டு ஒழுகுதலே ஒரு பெண்மகளுக்குக் கற்பொழுக்கமாகலின் என்றாற், கற்பொழுக்கத்தின் இயல்பு அறியாது கூறினாய். கற்பு என்பது பிறரால் வலிந்து புகுத்தப்பட்டு ஒருத்திக்கு வருவதன்று; அது பேரன்பின் முதிர்ச்சியால் வருவதொன்றாம்.* ***ஒத்த நலங்களும் ஒத்த இயல்புகளும் வாய்ந்த ஓர் ஆண்மகனும் ஒரு பெண்மகளும் ஒருவரையொருவர் உயிர்போல நினைந்து வாழும் உயர்ந்த அன்பொழுக்கமே கற்பொழுக்கமென*** *ஆன்றோரால் நாட்டப்பட்டது. இது,*

"தானே யவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்"

*என்னும்* ***இறையனாரகப்பொருட் சூத்திரத்தானும், மாணிக்கவாசகப் பெருமான்****,*

'காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந்
தாங்கிருவர்
ஆகத்துள் ஓர்உயிர் கண்டனம் யாமின்
றியாவையுமாம்

ஏகத் தொருவன் இரும்பொழில் அம்பல
வன்மலையில்
தோகைக்குந் தோன்றற்கும் ஒன்றாய்வரும் இன்ப
துன்பங்களே'

என்று அருளிச்செய்த **திருக்கோவையார்ச்** செய்யுளானும் நன்கு விளங்கும். இங்ஙனம் இருவர் உயிரும் ஓர் உயிராய், ஒருவர்க்கு வரும் இன்பதுன்பங்களெல்லாம் மற்றவர்க்கும் உடனே நிகழுந் தரத்தினவாய்க் கலக்குமாறு செய்யவல்லது. முதன்முதல் அவர் தம்முள் எழுந்த பேரன்பின் பெருக்கால் ஒருவரையொருவர் இன்றியமை யாராய் நினைந்து ஒருவர்மேல் ஒருவர் வைத்த வேட்கை மிகுமேயாம். இத்தகைய வேட்கை மிகுதியால் உள்ளம் நிறைந்த ஒரு மாது தன் காதலனையன்றிப் பிறன் ஒருவனை எவ்வகை மேம்பாடும் பற்றி எக்காலத்துந் தன்னுள்ளத்தில் நினைத்தற்குத் தினைத்தனையும் இடம் பெறாள். அவள்பாற் காணப்படும் இக்காதலன் பொழுக்கமே உண்மைக்கற் பொழுக்கமென்று உயர்த்துக் கூறப்படும். உயர்ந்த நலங்கள் வாய்ந்த ஒரு பெண்மகள் எந்நிலையிலிருந்தாலும் எவ்வகை யான கட்டுப்பாடுகளுள் வைக்கப்பட்டாலும், அவள் தனக்கு இசைந்த ஒருவனை எதிர்ப்படுங்காலத்து இயற்கை யாகவே அவன்மேல் தன்னுள்ளம் ஓடிப் பதிவுறப்பெறுவள் இவ்வியல்பு பெண்பாலார் ஆண் பாலார் இருதிறத்தார்க்கும் பொதுவேனும் பெண்பாலார்க்கே சிறப்பாக ஆன்றோராற் சொல்லப்பட்டிருக்கின்றது. ஒத்த இயல்புடைய ஆணையும் பெண்ணையும் ஒருங்கு கூட்டுவதே இறைவனது திருவுளக் கருத்தாதலால், மக்கள் தம்முடைய அறியாமையாலும் செருக்காலும் தன்னயங் கருதுதலாலும் செய்து வைக்கும் ஒவ்வாத கட்டுப்பாடுகளின் எல்லைக்குள் அடங்காமல் அவ்விறைவன் செயல் அதனை மேற்கடந்தே நிற்கும் முயற்சியும் உள்ளப்பாடும் இன்றித் தெய்வத்தின் திருவருளால் ஒத்த இயல்புடையார் இருவர் ஒருங்குகூடிய வழி, அக்கூட்டம் தெய்வத்தான் நிகழ்ந்ததென்பதை அறியாமல், தம்முடைய பொருந்தாக் கட்டுப்பாடுகளை மீறியதே என்னும் ஒன்றையே நினைந்து மயக்க அறிவுடைய மக்கள் அவரைப் புறம்பழித்து வருந்துவர். என்றாலும், தெய்வத்தின் ஆணையால் நடப்பதை மக்கள் தம் புல்லிய அறிவால் எங்ஙனந் தடைசெய்ய

மாட்டுவர்? ஒருவனையும் ஒருத்தியையுங் கருவிற் புகுத்து கின்ற காலத்திலேயே, **'இவனுக்குத் தக்காள் இவள்'** என்றும், **'இவளுக்கு தக்கான் இவன்'** என்றும் தெய்வம் அமைத்து விட்டிருப்பதனால், அவ்விருவரும் வளர்ந்து பெரியராய் ஒருவர்மேல் ஒருவர் உள்ளம் ஓடப்பெறுதலை யறிந்து அவ்விருவரையுங் கணவனும் மனைவியுமாய் வாழ்க்கைப் படுத்துதலே தெய்வ அருளொழுக்கத்தோடு இசைந்து நடப்பதாம். அஃது ஒன்றுமே மகளிர்க்கு கற்பொழுக்கத்தை நிலைபெறச் செய்து இம்மை மறுமை இன்பங்களை அவரோடு தொடர்புடையா ரெல்லார்க்கும் அளிப்பதாகும். இவ்வாறன்றித் தெய்வத்தின் திருவுளக்கட்டளைக்கு மாறாய்க் காதலன்பின் முளை புலனாகாத குழ்ந்தைப் பருவத்தும் பிள்ளைப் பருவத்தும் உள்ள சிறுவர் சிறுமி யரையும், காதலன்பு தோன்றப்பெறும் இளம் பருவத்தின ரேனும் ஒருவரை யொருவர் எதிர்ப்பட்டுத் தம்முள்ளம் ஒருங்கு கூடப்பெறாத ஆண்மக்கள் பெண் மக்களையும் அவர்க்கு முதியராயுள்ளார் சாதிகுலம் பணம் உறவு நிலை கண்ணோட்டம் எனத் தம் புல்லறிவால் வகுத்துக் கொண்ட புல்லிய ஏதுக்கள் பற்றித் தமக்குத் தோன்றியவாறே பிணைத்து விடுவதனாற் பல பெருந்தீங்குகளெல்லாம் உலகத்திலே நாளுக்கு நாட் பெருகுகின்றன. உலகத்திலே மகளிர்க்குக் கற்பொழுக்கம் நிலைபெறுவது அரியதாயிருக் கின்றது. ஆண் மக்களும் பலவகை அல்லல்களால் அலைக்கப் பெற்று ஆண்டு முதிரா முன்னரே மாண்டுபோகின்றனர். தெய்வத்தின் கட்டளைக்கு மாறாகச் செய்யப்படுங் கட்டுப் பாடுகள் ஒருகாலத்தும் நன்மை பயவா. கணவன் தனக்கு எவ்வளவுதான் இசையாதவனா யிருப்பினும், அவனுக்கு மனைவியாகப் பிணைத்து வைக்கப் பட்டவள் அவனைத் தெய்வமேபோற் கருதி ஒழுக வேண்டும் என்று ஆண்மக்களா யினார் தம்முடைய நன்மையே கருதி எத்தனையோ நூற்றாண்டுகளாய் எத்தனையோ நூல்களில் எழுதி வைத்தும் எவ்வளவோ கட்டுப்பாடுகளைச் செய்து வைத்தும் அவர்கள் எண்ணப்படி யெல்லாம் ஏதேனும் நடந்து வருகின்றதா? அறிவுடைய சிலர், ஆண்மக்கள் பெண்மக்களின் மனஇயல்பை யுற்றுணர்ந்து தெய்வத்தின் கட்டளைக்கு ஒத்தவகையாய் மணங்கூட்டிய சிற்சிலரே நெறிவழுவாத மெய்யன்புடையராய் ஒழுகித் தமக்கும் பிறர்க்கும் பயன்பட்டு

*வாழ்தலைக் காண்கின்றோமே யல்லாமல், மற்றைப் பெரும்பாலார் பொருந்தாக் கட்டுப்பாடு களினிடையே பொருந்தித் துன்புற்று வாணாட்கழிக்கவே காண்கின்றேம்.*

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை" (குறள் 57)

*என்று திருவள்ளுவனார் அருளிச் செய்தது பொய்படா தன்றோ? தெய்வத்தின் அருள்வழியே காதலன்பு எவர் மேற் சென்றதோ அவரையே தங் கொழுநராகப் பெற்ற மகளிரின் நிறையைச் சிதைக்க வல்லுநர் மூவுலகினும் உளரோ! இனித் தங் காதலன்புக்குரியாரைக் கணவராகப் பெறவொட்டாது மக்கள் தம் புல்லறிவாற் கட்டிய சிறைக் காவல் அம் மகளிரைத் தடைப்படுத்த வல்லதாவதும் மூவுலகினும் இல்லையன்றோ! **சாவித்திரி**யை அவள் தாய் தந்தையரும் ஆசிரியரும் எவ்வளவோ தடைசெய்தும் அவள் அத் தடைகளை ஒரு பொருட்படுத்தாமல் தான் காதலித்த முனிவர் மகனையே மணந்து கற்பரசியாய் விளங்கின ளென்பதும், பின்னர்த் தன் கணவனுயிரைக் கைப்பற்றிய கூற்றுவனையும் தனது வேண்டு கோளுக்கு இசைவித்து அவனைத் தன் கற்பின் திறத்தால் உயிர்பெற்றெழச் செய்தனள் என்பதும் உலகறிந்தன வல்லவோ! **தாரை** மணஞ் செய்யப்பட்டவளா யிருந்துந் தனக்கியைந்த சந்திரனைக் காதலித்துக் கூடிக் கற்புடையாள் எனப் பெயர் பெற்றமையும் அறியாதார் யார்? **துரோபதை** ஐவருக்கு மனைவியாகப் புகுத்தப்பட்டும் அவள் அருச்சுனன் ஒருவனையே தனக் கியைந்த காதலனாகக் கொண்டொழுகி '**அழியாத கற்புடையாள்**' எனப் புகழ்ந்தோதப் பெற்றமையும் அறியாதார் யார்? பரத்தையர் குடியிற்பிறந்த **மாதவி** பிறர் மேல் மனஞ் செல்லாது கோவலனையே தனக்கினிய காதலனாய்க் கொண்டு அவன் இறந்துபட்டபின் துறவுபூண்ட கற்பின் மேம்பாடு **இளங்கோவடி**களால் உயர்த்துப பேசப் பட்டிருக்கின்ற தன்றோ? இவ்வுண்மைகளை நடுநிலை பிறழாமல் உற்றுணர்ந்து பார்க்க வல்லார்க்கு ஒரு பெண்மகள் தனக்கியைந்த ஒருவன் மேல் தெய்வத்தின் அருளால் மனம் பதியப்பெற்று, அவனையே தான் வழிபடுங் கடவுளாகக் கொண்டு ஒழுகும் ஒழுக்கமே கற்பொழுக்கமென ஆன்றோரான் உயர்த்துக் கூறப்பட்ட தன்றிப் பிறிதன்று என்க. இக்கருத்துப் பற்றியே,*

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" (குறள் 55)

என்று தெய்வப்புலமைத் **திருவள்ளுவ நாயனாரும்** அருளிச் செய்தார். இங்ஙனமாகச் சிறந்த அன்புடையார் இருவரை ஒன்று கூட்டி வாழ்விக்கும் வாழ்க்கையே இல் வாழ்க்கை யெனப்படுவதன்றி, அன்பு அகத்தே ஊறிப் பெருகப் பெறாதாரைப் பிணைத்து இருக்கச் செய்வது இல்வாழ்க்கை ஆகாதென்பதனை நன்கு புலப்படுத்துவதற்கே பின்னும்,

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று" (குறள் 78)

என்று அவர் அருளிச் செய்தார். பட்டுப்போன ஒரு மரத்தைத் தளிர்க்கச் செய்தல் எவ்வாற்றானும் இயலாதது போல் இயற்கையே அன்பு உண்டாகப் பெறாதார் இருவரை ஒரு துறைப்படுத்து அவர்க்குள் அவ் வன்பினை வருவித்தல் ஒருவாற்றானும் இயலாதென இதனால் நன்கு அறிவித்தா ராயிற்று.

பழைய நாளிலிருந்த நன்மக்களும் சான்றோரும் பெண் மக்களுக்குரிய காதல் அன்பின் நிலையைத் தெளியவுணர்ந்து, அதன்வழியே அவர்களை விடுத்து அவரது கற்பொழுக் கத்தை நிலைபெறுவித்தற் பொருட்டே **அகத்திணை இலக்கணம்** வகுத்தருளினார். அதன் ஐந்திணையுட்பட்ட அன்பொழுக்க மாவது **கொடுப்பாரும் அடுப்பாரும்** இன்றி ஒருவனும் ஒருத்தியுந் தெய்வத்தின் அருளால் எதிர்ப்பட்டு ஒருவர்மேல் ஒருவர் ஆராக்காதலுற்று ஒருவரை ஒருவர் இன்றியமை யாராய்க் கூடியொழுகும் ஒழுக்கமாம். இவ்வாறு அவர் ஒழுகியபின் மணம் புகுத்தப்பட்டு இல்வாழ்க்கை நடத்தாநிற்பர். இவ்வியல்பெல்லாம் **இறையனாரகப் பொருளுரையில் ஆசிரியர் நக்கீரனாராலும், திருச்சிற்றம் பலக் கோவையார் உரையில் பேராசிரியராலும், தொல் காப்பியப் பொருளதிகார வுரையில் நச்சினார்க்கினியராலும் நன்கு விளக்கப்பட்டிருக் கின்றன**. இக்காதற் கற்பொழுக்கம் பழைய நூல்களிற் சொல்லப்பட்டபடியாகவே, பண்டைக் காலத்து மக்களுள்ளும் பரவியிருந்த தென்பதற்குத் **தமையந்தி சகுந்தலை** முதலான

கற்பிற் சிறந்த மங்கையர் தாமே தமக்குரிய காதலரைத் தெரிந்து மணந்து கொண்ட வரலாறுகளே சான்றாமென்க.

இன்னும், ஒத்தஅன்பும் ஒத்த இயல்புமுடைய ஓர் ஆண்மகனும் ஒரு பெண்மகளும் ஒருங்குகூடி ஒழுகும் ஒழுகலாறே இறைவன் திருவுளத்திற்கு இயைந்ததாம் என்பதனை வேறோர் உண்மை வரலாற்றானும் விளக்கிக் காட்டுவாம். சைவசமயாசிரியராகிய **சுந்தரமூர்த்தி நாயனார்** தம்மோடொத்த இயல்புடைய ஓர் உயர்ந்த பெண்மணியை எதிர்ப்பட்டு அவள்பாற் காதலன்பு கொள்ளப் பெறாத இளம் பருவத்திலிருந்தஞான்று, அவர்தம் சுற்றத்தார் அவரது உயர்ந்த தன்மைக்கு இசைந்தாள். ஒருத்தியைக் கண்டெடுக்கத் தக்க அறிவும் ஆற்றலும் இல்லாமையால், தமக்குத் தோன்றியபடி ஒரு பெண்ணைத் தெரிந்து அவளை அவர்க்கு மணம் பொருத்தப் புகுந்தார். மெய்யன்பராகிய அந் நாயனார்க்கு மிகவும் அணுக்கமாய் நின்ற இறைவன், நாயனார் இயல்புக்கு ஒவ்வாத ஒருத்தியை அவரோடு பிணைத்துவிட முயலும் அவ் வுறவினரின் அறியாமைச் செயலைத் தடை செய்தற்குத் திருவுளம் பற்றி மணப்பந்தலில் ஓர் அந்தண முதியோனாய்த் தோன்றி அதனைத் தடை செய்து நிறுத்தி நாயனாரையும் அச் சுற்றத்தார்பால் இருக்க விடாமல் தனக்கு ஓர் அடிமையாய்க் கொண்டு சென்றமையும் இத்தமிழுலகம் முழுதும் அறியு மன்றோ? அங்ஙனம் அம்முதன்மணத்தைத் தடைசெய்து நிறுத்திய முதல்வனே, பின்னர் நாயனார் தம்மியல்புக்கு முழுதும் ஒத்த **பரவை நாச்சியாரையும் சங்கிலி நாச்சியாரையும்** எதிர்ப்பட்டு அவர்மேல் உண்மைக் காதலன்புகொண்டு உருகாநிற்க. அவ்வாறே அந்நாச்சிமாரும் நாயனார்மேல் அளவுபடாப் பெருங்காதலன்பு கொண்டு ஆற்றாராய்நிற்க இருபாலும் ஒத்துநிகழா நின்ற அம்மெய்யன்பு நிகழ்ச்சியைக் கண்டு அவ்விருவரையும் சுந்தரமூர்த்தி நாயனார்க்கு உடனே மணம் புரிவித்த வியத்தகு அருள் நிகழ்ச்சியும் இத் தமிழ்நாடு நன்குணரு மன்றோ? இம்மெய்வரலாற்றின் நுட்பத்தை உற்றாராய வல்லார்க்கு ஒத்த இயல்புடைய இருவர் பால் நிகழும் உண்மைக் காதலன்பே இறைவன் திருவுளத்திற்கு இசைந்ததாதல் நன்கு புலனாதலின், அவ்வன்பின் முதிர்ச்சி யுற்று நின்றாரே இறைவன் திருவடிக்

கண்ணும் மெய்யன்பு உடையராய் அதனைத் தலைக்கூடுவ ரென்பதும், அவ்வன்பில் வழுவாதொழுகிய நன்மங்கை யரே கற்பொழுக்கத்தில் தலை நின்றா ராவரென்பதும் நன்கு பெறப்படும்.

இனி, இக்காதலன் பின் நிலைதெரியாமலும், அதனை ஆராய்ந்துபார்த்து அதற்கு ஏற்பச் செய்யாமலும் உறவினரும் பெற்றோரும் பிறரும் இருவரைத் தமக்குத் தோன்றியபடி மணம் புகுத்துவதனால் அதில் அகப்பட்ட ஆண்மகன் தன்பெருமைத் தன்மையும் பெண்மகள் தன்கற்பின் றன்மையுஞ் சிதையப் பெறுகின்றனர். அவர்கள் தமக்கிசைந் தாரைப் பெற்றுக்காணுங் காதலன்பின் விளக்கத்தை அறியாமையால், இழிந்த காமஇன்ப மென்னும் இருள்வழிப் பட்டுப் பலதுன்பங்களை உழந்து கடிதிற் கூற்றுவனுக்கு இரையாகின்றனர். உயர்ந்த தொன்றைக் காணாதவர்க்கு இழிந்தவற்றில் மாறிமாறி மனஞ் செல்லுதல் இயல்பாதலால், உயர்ந்த காதலன்பை அறியப்பெறாத மைந்தரும் மகளிரும் காமவின்பத்திற் பற்றுதலுடையராய் உள்ளம் ஒருவர்பால் நிலையுறப் பெறாமற், பலர்பால் மாறி மாறி ஓடப்பெற்று, அதனால் உடம்பிலும் உயிரிலும் உள்ள வன்மை விரையக் கெட்டுத், தம்மைப் படைத்த முதல்வனையும் நினையாமல் அவன் கருத்துக்கு மாறாய்நடந்து மாண்டு போகின்றனர்! ஐயோ! இறைவனாற் பிறப்பிக்கப்பட்டது எதற்கென அறியாமல் இருளிலுந் துன்பத்திலும் மாண்டு போகும் மாந்தர் அளவுபடாத இரக்கமுள்ள ஆண்டவன் செய்த அருட்டொழிலை வறிதாக்கினால் இவர் எந்நாளில் உய்வரோ அறிகிலம்!

இனி இறைவன், மைந்தர் மகளிரைக் காதலன்பின் வழிவைத்து நடத்துதல் எதன்பொருட்டெனின், அதனை யுஞ் சிறிது விளக்கிக் காட்டுவாம்: ஒருவர் ஒருவரை இன்றியமை யாராய் உயிர்போற்கொண்டு ஒழுகும் உண்மைக் காதலன்பு என்பது இடைவிட்டுப் போகாமல் அவ்வுயிர் களிடத்து எக்காலத்தும் ஒரு தொடர்பாய் நிகழ்வதாகலின்; எக்காலத்தும் அன்புருவாய் நிற்கும் இறைவனியல்போடு அஃது ஒத்ததாக விளங்குவதாம். அவ்வாறு இறைவனியல்போடு ஒத்த அக்காதலன்பிலேயே நினைவுஞ் செயலும் ஈடுபட்ட அவர்கள் செருக்குச் சினம் கவலை வருத்தம் முதலான ஆணவத் தன்மைகள் சிறிதும் இலராய் மனந் தூயராய் இருப்பர்.

அங்ஙனந் தூயரான அவர்க்குப் பிறக்கும் பிள்ளைகளும் ஆணவத்தன்மைகள் குன்றிப் பேரன்பாற் சிறந்து தூயராய் இறைவன் திருவருளின்பத்தைப் பெறா நிற்பர். எல்லாம்வல்ல முதல்வன் ஆண்பெண் பிறவிகளை வகுத்ததெல்லாம், தன்னியல்போடு ஒத்த உயர்ந்த காதலன்பைத் தோற்றுவித்து, அதனால் அவரைத் தூயராக்கிப், பிறவிக்கு வராத உயிர்களையும் அவர்பாற் பிறக்கச்செய்து, தூயரான தாய்தந்தையர் சேர்க்கையாற் பிறத்தலின் தாமும் விரைவிலே எளிதிற் றூயராகி இங்ஙனமாக எல்லா உயிர்களும் கடிதில் தனது திருவருளின்பத்தைப் பெறுதற் பொருட்டேயாம். இப்பெருநோக்கம் ஈடேறுதல் குறித்தே ஒருவர் ஒருவர் மேற் காதலன்பு கொள்ளுதற்கு வாயிலாக முதலில் அழகையும், அதன்வழியே அறிவையும், அதன் வழியே இனிய இயல்பு களையும், அவர்பாற்றோற்றுவிப்பா னாயினான். இவ்வா றெல்லாம் இறைவன் அமைத்திருக்கும் அமைப்புக் களின் சிறப்புக்களையும் அவற்றின் பயன் களையும் உய்த்துணர்ந்து பாராமல் இவை தம்மையெல்லாம் வெறுஞ் சொல்லளவிலே இகழ்ந்து பேசுவோரும், இவற்றில் வெறுப் புடையார்போற் காட்டுவோரும், கடவுளின் படைப்பையும் அரும்பெரு நோக்கத்தையும் இகழ்வோராயும் வெறுப்போராயும் அறியாமை யிற் புகுதலின் அவரெல்லாந் தம் பிறவிப் பயனை இழந்து கடவுளின் திருவருளையும் பெறாராய் ஒழிவர். அழகிலும் அறிவிலும் அன்பிலுஞ் சிறந்த ஆண்பெண் பாலார் தத்தமக் கியைந்தாரோடு பொருத்த வொட்டாமற்**சாதி குலம் சமயம் செல்வம் செருக்கு உயர்வு** முதலான ஆணவ ஏதுக்களைக் காட்டிப் புல்லறிவுடைய மக்கள் ஒவ்வாதவர்களை ஒருங்கு பிணைத்தலால், அங்ஙனம் பிணைக்கப்பட்டவர்கள் கவலையுந் துன்பமுஞ் சினமுமே தம்வாழ் நாள் முடியுமட்டுங் கொண்டு உழலுதலால் அவர் காதலன்பு தினையுளவுங் காணார். இந்த அல்லல்களுக்கு இடையிடையே ஒரு நொடியிற்றோன்றிப் பின் ஒருநொடியில் மறைந்து போகுங் காமத்தால் அவர்கள் ஒன்றுகூடுதலின் அக் கூட்டத்திற் பிறக்கும் பிள்ளைகளும் இழிந்த இயல்புகள் உடையராய்த் தத்தம்பிறவிப்பயனை இழந்து ஆணவத் தொடர்பால் ஓயாமற் பிறவிவட்டத்திற் கிடந்து சுழன்று இறைவனுக்கு ஓயாத வேலையைக் கொடுக்கின்றனர். ஆண்டவனது திருவருள் நோக்கத்திற்கு ஒத்து

நடந்து தாமும் விரைவில் தூயராய்த் தம்மிற் பிறக்கும் பிள்ளைகளும் விரைவில் தூயராய் அவனது திருவடி இன்பத்தைப் பெறுவாரோ, தாமுந் தூயராகாமற்றம் பிள்ளைகளுந் தூயராகாமல் ஆணவக் கட்டுப்பாடுகளைத் தம் புல்லறிவாற் செய்துகொண்டு உழல்வாரோ, எவர் உலகத்திற்கும் உடையானுக்கும் இனிய ரென்று ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்குங் காற் காதலன்பின் றோற்றத்திற்கு இசைந்த ஒழுகலாறு வாய்ந் தோரே உலகிற்கும் உடையானுக்கும் இனியராவ ரென்பது நன்கு புலனாகாநிற்கும்.

தமிழ்நாட்டில் முற்காலத்திலிருந்த நன்மக்கள் தத்தமக்கு ஒத்தாரோடு பொருந்திக் காதலன்புடையராய் ஒழுகிய வரையில் தாமுந் தம் கால்வழி வந்தோரும் எல்லா நலங் களினுஞ் சிறந்து தூயராய் இறைவனருள்வழி நிற்போராய் நாகரிகத்திற் சிறந்து விளங்கினர். அவ்வுயர்ந்த அன்புக்கு இடந்தராத ஆணவக் கட்டுப்பாடுகளைச் செய்து கொண்டு அவற்றிற் பட்டுழலத் துவங்கிய பிற்றைநாள் முதல் இது வரையில் அவர் தம் பெருமைகளையும் பெருநலங்களையும் இழந்து அயல்நாடுகளினின்று வந்த **கிரேக்கர் துருக்கர்** முதலிய வேற்றினத்தாரால் நெருக்கப்பட்டு அவர்க்கு அடிமைகளாகி வர வர உயிரற்ற பிணம் போல் வெற்றுடல் ஓம்பி மங்கி வருகின்றனர். மேல் புலத்துள்ள வெள்ளைக்கார நன்மக்கள் இத்தகைய கட்டுப்பாடுகள் பெரும்பாலும் இலராய் இறைவன் திருவருணோக்கத்திற்கு ஒத்த காதலன் பினால் ஒருவரோ டொருவர் இயைந்து ஒருமித்து வாழ்த லால் தாமும் தம் மக்களும் எல்லாநலங்களினும் நாளுக்குநாள் உயர்ந்து, இந் நிலவுலகையெல்லாந் தமது வெண்கொற்றக் குடை நீழலிலிருத்திச் செங்கோலோச்சி வருகின்றனர். கீழ்நாட்டிலுள்ள நம்மனோர் நாளுக்குநாள் எல்லா வகையிலும் அருகிப் போதலையும், மேல்நாட்டிலுள்ள வெண் மக்கள் நாளுக்குநாள் எல்லா நலங்களிலும் பெருகி வருதலையும் நடுநிலை திறம்பாமல் உற்றுணர்ந்து பார்ப்ப தொன்றே, நம்மனோர் இறைவன் திருவருணோக்கத்தொடு மாறுபட்டு நடந்து மங்குகின்றன ரென்பதையும், வெண் மக்கள், அதற்கு ஒத்து நடந்து பொங்குகின்றன ரென்பதையுந் தெளிவுறக் காட்டுதற்குப் போதுமானதாகும். இவ்வாறு சொல்லுதல்கொண்டு மேல் புலத்து வெண் மக்களே காதலன்பின் தோற்றத்திற்கு முழுதும்

இசைந்த எல்லா ஏற்பாடுகளும் உடையரென்று கொள்ளற்க. அவருள்ளுஞ் சிற்சிலர், உயர்நிலை செல்வம் தொழில் முதலான புல்லிய ஏதுக்கள் கொண்டு, காதலன்புடையார் கணவனும் மனைவியுமாய்ப் பொருந்துதற்கு இடங்கொடாமற், பொருத்த மில்லாதவரைத் தாம் விரும்பியவாறு பிணைத்து விடுதலும் உண்டு. என்றாலும், இந் **நாவலந் தீவின்கண்** உள்ள நம்மனோரில் எங்கும் பொருந்தாச் சேர்க்கைக்குரிய கட்டுப்பாடுகளும் அவற்றைச் செய்து வைப்போரும் மலிந்து கிடத்தல்போல மேல்நாடுகளில் இல்லையென்பதே உண்மை. மேல்நாட்டவர் தம்முள் இடையிடையேயுள்ள போலிக் கட்டுப்பாடுகள் சிலவற்றையுங்கூட வரவர விலக்கி வருகின் றார்கள். ஊன் உண்டலையும் மயங்கச் சாறு பருகுதலையும் மேல்நாட்டார் நாளுக்கு நாள் விடுத்து வருதல்போல, உண்மைக் காதலன்பின் சேர்க்கைக்கு மாறான இடைஞ்சல்களையும் மெல்லமெல்ல விட்டு வருகின்றார்கள். இவைகளை யெல்லாம் முற்றும் ஒழித்து அவர்கள் முழுதுங் தூயராய் விளங்கும் நாள் விரைவில்வரும் என்பது அவர்கள் இப்போது ஒழுகும் ஒழுகலாற்றினால் நன்கு விளங்குதலால், அவர்கள் மட்டுமே இந் நிலவுகையெல்லாம் தமது செங்கோலின் வழி வைத்து, எல்லாரையுஞ் சீர்திருத்தி எல்லாருந் தமது ஒழுகலாற்றினைக் கைப்பற்றி நடக்குமாறு செய்வரென உய்த்துணர்கின்றேம். இந்நாவலந் தீவிலுள்ள நம்மனோர் தாமாகவுஞ் சீர்திருந்தாமல், மேல் நாட்டிலுள்ள வெண் மக்களைப் பார்த்தாயினுஞ் சீர்திருந்தாமல். இஞ்ஞான்று உள்ளபடியாகவே இறைவன் திருவுளத்திற்கு மாறாக நடந்து வருவராயின், உரமில்லாத புற்பூண்டுகள் உரமுள்ள புற் பூண்டுகளின் பக்கத்தே கிளைத்து வளர மாட்டாமல் தாமாகவே கரிந்து மறைந்து போதல்போல, இவர்களும் சில நூற்றாண்டுகளிலே தங்கால் வழியில் எவருமே இல்லாதபடி மாண்டு மறைந்து போவ ரென்பது திண்ணம். எப்படியாக வேனும் உயிர்களைத் திருத்தி அவர்களைத் தனது திருவடிப் பேரின்பத்தின்கட் சேர்ப்பித்தலிலேயே அருள்சுரந்து நிற்கும் இறைவன், அங்ஙனஞ் சிறிதுந் திருந்தாது மாண் டொழியும் நம்மனோரைப் பெரிதுந் திருத்திப் பெருகும் மேல்நாட்டு வெண்மக்களுக்குப் பிள்ளைகளாகப் பிறப்பித்து, அவ் வழியால் அவர்களை மேல்நிலைக்கு உயர்த்துவா னென்பதுந் திண்ணம். இப்போது மேல்நாட்டு வெண்மக்களை

யும் அவர் தம் ஒழுகலாறுகளையும் இகழ்ந்து ஏளனஞ்செய்யும் நம்மனோர், அவர்கட்குப் பிள்ளைகளாய்ப் பிறக்கும் அப்போது அவர்களையும் அவர்கள் ஒழுகலாறுகளையுஞ் சிறந்தெடுத்துப் பாராட்டி ஒழுகுவராதலால், அழிக்கும் ஆற்றலும் படைக்கும் ஆற்றலும் உடைய முதல்வன் தான் வேண்டியவாறு உயிர்களைப் பிறவிகளிற் செலுத்த வல்லனாய் நிற்பதையும், அவனது பெருவல்லமைக்கு முன் நம்மனோர் தம் செயலெல்லாம் ஏதொரு திறமுமின்றி நிற்பதையும் நன்கு ஆழ்ந்து நினைத்துப் பார்த்துத் தெய்வத்தின் கட்டளையாற் காதலன்பு கொளப் பெற்றாரை அவர் வழியே விடுத்து அதற்கேற்ற முறைகளை வகுத்தலே ஆண்பெண்பாலார் வாழ்க்கை தூயது ஆதற்கும், அவர் நீண்டகாலம் இன்பவாழ்க்கையில் வாழ்ந்து தூயரான மக்களைப்பெற்று இறைவன் திருவருள் நோக்கத்தை ஈடேற்றி அவனது பேரின்பத்தை விரைவில் எய்தற்கும் வழியாம் என்று கடைப்பிடிக்க.

ஆற்றேல், ஆண்பாலாரில் உயர்ந்தோரும் பெண் பாலாரில் உயர்ந்தோருங் காதலன்பாற் கூடிவாழும் வாழ்க்கையே சிறந்ததெனின், மற்றை உயர்ந்ததோரல்லா தாரும் இழிந்தாருங் காதலன்புடையராய் மருவிவாழுமாறு யாங்ஙனமெனின்; உயர்ந்தோ ரல்லாதாரிலும் இழிந் தோரிலும் ஆண் பெண்பாலார் உளராகலின் அவ்வவர்க்குள் ஒத்த இயல்புடையார் ஒருவர்மேல் ஒருவர் அன்பு மீதூரப் பெற்றுக் கணவனும் மனைவியுமாய் வாழ்தற் குரியரென்க. இஃது,

> “அடியோர் பாங்கினும் வினைவல பாங்கினுங்
> கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர்”

என்று **ஆசிரியர் தொல்காப்பியனார்** கூறியவாற்றானும், இழிந்தோர்க்குள் நிகழும் அன்பின் முறைகளையும் உடன்எடுத்துப் பாடிய **கலித்தொகைப்** பாட்டுக்களாலும் இனிது பெறப்படும். அங்ஙனமாயின், உயர்ந்தோர்க்குரிய காதலன்பின் தன்மைக்கும், அவரல்லாது பிறர்க்குரிய அன்பின் தன்மைக்கும் வேறுபாடு என்னையெனின்; உயர்ந்தோர்க்குக் கல்வியும் அறிவும் அழகும் செல்வமும் மிகுந்திருத்தலால் அவற்றிற்கு ஏற்ப அவர்பால் நிகழுங் காதலன்பும் சாலவுந்

தூயதாய் அளவற்ற சிறப்பினதாய் இருக்கும். மற்று அவரல்லாத பிறர்க்குக் கல்வியும் அறிவும் அழகும் செல்வமும் வாயாமை யால் அவர் தமக்குள் அத்தூய காதலன்பு அவ்வளவினதாகத் தோன்றப் பெறுதல் இயலாத தேயாம் என்றாலும், அவருள்ளும் ஒத்த இயல்புடையார் உண்மையன்பு கொள்ளப் பெறுங்கால், அவர்க்குள்ள இழிந்த இயல்புகள் ஒடுங்கிப் போக, அவரும் நாள்வழியே தூயராய் ஒழுகி, மேற்பிறவிகளிற் சென்று பிறந்து உயர் காதலன்பு தோன்றப் பெற்று முழுதுந் தூயராவரென்று உணர்தல் வேண்டும்.

இனி, மேலே கூறியனவெல்லாங் கொள்கையளவிலே உண்மையேயாயினும், இவை தம்மை இஞ்ஞான்றுள்ள மக்களுள் வழங்குமாறு செய்வித்து, இவரையெல்லாஞ் சீர்திருத்துமாறு எங்ஙனமெனின்; கல்வியும் அறிவுஞ் செல்வமு முள்ளவர்கள் ஊக்கமுந் துணிவும் உடையவர் களாய் மேற்கூறிய கொள்கைகளை வழக்கத்திற் கொண்டு வருதற்குப் பெரிதுமுயன்று தாமே அவைகளின்படி முன்நடந்து காட்டுதல் வேண்டும். குற்றமுள்ளதோ இல்லதோ வழக்கமாயுள்ள தொன்றனை மாற்றப் புகுந்தால், அதிற் புகுவாரைப் புறம்பழித்துத் துன்புறுத்த முன்நிற்பது மக்கள் இயற்கை. ஆயினும், அப் புறம்பழிப் புரைக்குந் துன்பத் திற்கும் அஞ்சிப் பின்வாங்காமல் முயன்று தம்முடைய கொள்கைகளை வழக்கத்திற்குக் கொண்டுவந்து நிறை வேற்றினால், பிறகு அங்ஙனம் செய்தாரைப் புகழ்ந்து கொண்டாடி அவரைத் தெய்வமேபோற் கருதி வணங்கு வதும் மக்களியற்கையாக இருக்கின்றது. மேல் நாட்டவர்களுள் இத்தகைய சீர்திருத்தங் களை நிலைநாட்ட முயன்ற பெரியோர்களிற் பலர் பிறராற் பழித்துத் துன் புறுத்தப் பட்டார்கள்; பலர் நெருப்பிலிட்டுக் கொளுத்தப் பட்டார்கள்; பலர் கற்களால் அடிக்கப்பட்டு இறந்தார்கள்; பலர் உயிரோடு தோலுரிக்கப்பட்டார்கள்; பலர் தூக்கிலிடப் பட்டார்கள்; பலர் வெட்டப்பட்டார்கள்; பலர் சிலுவையில் அறையப்பட்டார்கள். இன்னும் முன்னாளில் மக்களைச் சீர்திருத்த முயன்ற பெரியோர்கள் பட்ட பாடுகளை யெல்லாம் எடுத்துரைக்கப் புகுந்தால் ஏடு இடங்கொள்ளாது அவ்வாறெல்லாம் அவர்கள் துன்புற்றுச் செய்த சீர்திருத் தங்களால் இன்பமெய்தி நன்றாய் வாழத் துவங்கியபின் அப் பெரியாரைப் பிற்காலத்து மக்களெல்லாம் தெய்வமாக வைத்து

வழிபாடாற்றி வருகின்றனர். ஆதலாற் பிறர்கூறும் பழிப் புரைக்கும் அவர் செய்யுந் துன்பங்களுக்கும் அஞ்சிச் சிறுதும் பின்வாங்காமல், மேலே காட்டியபடி காதலன்பின் தோற்றத் திற்கும், அதனால் மக்கள் தூயராய் இறைவன் திருவருணெறி நின்று அவன் திருவடிப் பேரின்பத்தினைப் பெறுதற்கும், இவற்றிற் கெல்லாம் பெருந்தடையாய்நிற்கும் **சாதி குலம் செருக்கு செல்வம் நிலை அறியாமை** என்னும் இவைகளை யெல்லாம் தகர்த்தெறிதற்கும் இயைந்த ஏற்பாடு களை அறிவும் முயற்சியும் நற்பொருளும் உடையார் விரைந்து முயலல் வேண்டும். இவைகளை விரைந்து செய்யாமல் நம்மனோர் இன்னுந் தூங்கிக்கிடப்ப ரானால் இவரெல்லாம் கால்வழி யின்றிச் சில நூற்றாண்டுகளில் மாண்டு மறைந்துபோதல் திண்ணம்.

இனி, நம்மனோரைச் சீர்திருத்தவேண்டிய ஒழுக லாறுகள் எவ்வெவை எனிற் கூறுதும்; ஆண்மக்களைக் கல்வியிற் பயிற்றி வருதல்போலவே பெண்மக்களையும் கல்லூரிகளுக்குச் செல்ல விடுத்து உயர்ந்த கல்வியினை அவர்கள் பெறுமாறு செய்தல் இன்றியமையாது முதலிற் செயற் பாலதாம். பெண்பிள்ளை களைக் கல்வியிற் பயிற்றா மலும், சிறிதுபயிற்றினும் அவர்கள் மங்கைப் பருவ மெய்திய பன்னிரண்டாண்டுமுதல் சிறைச் சாலையில் அடைத்து வைப்பது போல் வீட்டில் அடைத்து வைத்து, மணஞ் செய்வதற்கு வந்து கேட்கும் பற்பலரிடமும் இவ்வளவு பணந்தந்தாற் பெண்ணைக் கொடுப்போம் என்று விலைபேசி கடைசியாக எவர் மிகுதியான பணங்கொடுக்க உடன்படுகின் றாரோ, அவர் கல்லாதவராயினும், அறிவில ராயினும், அழுகிருந்த மூலையிற் குடியிருந்து அறியாராயினும், அப்பெண்ணுக்குத் தந்தையோ பாட்டனோ என்று பலருங் கருதத் தக்கபடி நரைத்துதிரைத்துப் பழுத்து மிக மூத்தோராயினும் அவர்க்கு விற்றுவிடுதல்போல் அவரைக் கொண்டு அவள் கழுத்திற் றாலியைக் கட்டி வீட்டைவிட்டு சுடலைக்கு அனுப்புவதுபோல் அச்சிறுபெண்ணை அவளை விலைகொண்டவன் வீட்டுக்கு அனுப்புதலினும் பெருந் தீவினை இவ்வுலகத்தில் உளதோ சொல்லுமின்! தனது நிலைமையை அறியும் அறிவும், தான் உலக வாழ்க்கையின் இடைநின்று நடக்கவேண்டிய முறையுஞ் சிறிதும் பகுத்துணர்தற் கில்லாத ஏழைச்சிறுமியை இங்ஙனம்

விலைபேசித் தொலைத்துவிடும் பெற்றார் உற்றார்க்கும், ஆடுமாடுகளை வளர்த்து, அவற்றை மிகுந்த விலைபேசிக் கொள்ளும் இறைச்சிக்கடைக்காரர்க்கு விற்று அவை தம்மைக் கொலை செய்விப்பார்க்கும் ஏதேனும் வேற்றுமை உண்டோ புகலுமின்! இனி, எம்மகளை மணஞ் செய்வார்க்கு இத்துணைப்பொருள் தருவோம் என மணமகனை விலைபேசி வாங்கி, அவன் தன் அறிவுப்படி நடக்க வொட்டாது, **மாமன் மாமி மனைவி** என்பார்தம் விருப்பப் படியெல்லாம் நடக்குமாறு ஏவி, அவனைமதிப்பு குறைச்சலாய் நடத்தி, அதனால் அவன் தன்மனைவி யிடத்தும் அவளுக்குப் பெற்றார் உற்றாரா யிருப்பவரிடத்தும் அன்பிலனாய் அடங்கி ஒடுங்கி அச்சத்தேதடும் அறிவுகுன்றி ஒழுக, அவன் மனைவியும் தன் தாய் தந்தையர் ஈந்த பொருளுக்கு ஆவலுற்று வந்த வன்றானே யென்று அவனிடத்து அன்பிலளாய் அவனை இகழ்ந்து ஒழுக இவ்வாறு அவ்விருவரையும் இன்பமில்லாத துன்ப வாழ்க்கையிற் பூட்டிவைப்போர் அவ்விருவர்க்கும் பொல்லாப் பகைவரேயாவரல்லது பெற்றாரும் உற்றாரும் ஆவரோ சொல்லுமின்! இங்ஙன மெல்லாம் வலிந்து பூட்டி வைக்கும் வல்வாழ்க்கையால் வருந் தீங்குகள், இதில் தொடர்புடையார் மட்டில் ஒழியாமல், இவர்கள் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகட்கும் அப்பிள்ளைகளின் பிள்ளைகளுக்கு மாக எல்லாரையும் நீளத் தொடர்ந்துபற்றி ஒரு நூற்றாண்டிற்குள் அவர்களின் கால்வழியே இல்லாதபடி துடைத்துவிடுகின்றன! ஆகையாற், குழந்தை பிறந்தவுடனே மாப்பிள்ளையையோ பெண்ணையோ தேடி மணம்புரியுந் தீவினையைப் பற்றிப்பேசாமல், அவர்களைக் கல்வியிலும் அன்பிலும் அறிவிலும் அழகிலும் பிறநலங்களிலும் வளரச் செய்யும் வழி வகைகளைத் தீரத்தெளிந்து தம் மக்களை எல்லாப்படியாலும் மேம்படச் செய்தலிலேயே ஈன்றோரும் அவரைச் சேர்ந்தோரும் தங்கருத்தைச் செலுத்தல் வேண்டும்.

இனி, அவர்கள் உலக வாழ்க்கையின் இயல்புகளையும் அதிலுள்ள நன்மை தீமைகளையும் நன்குணர்ந்து, தீமையை விலக்கி நன்மையைக் கைக்கொண்டு, தம்மைப் பாதுகாத்துப், பலர்க்கும் பயன்பட ஒழுகும் வழிதுறைகளை நன்குணர்ந்த இளைஞரானபின் அவர்களைப் புல்லிய கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தாமல், அவர்களைத் தாராளமாய் உலவிவருவதற்கு

இடங்கொடுத்தல் வேண்டும். ஆனாலும் பெண்மக்கள் மெல்லிய இயல்பு உள்ளவர்களாதலால் அவர்களைத் தாராளமாக இயங்கவிடுதலில் மட்டுஞ் சில ஒழுங்குகளை அவர்களுக்கு நெருக்கம் உண்டாகாதபடி செய்தல் இன்றியமையாததே யாகும். இளம்பருவத்து ஆண்மக்களும் பெண்மக்களும் சிற்சில நெருக்கமில்லா வரையறைகளோடுந் தாராளமாக உலகில் இயங்கிவர இடங்கொடுத்தால், அவர்கள் தத்தமக்கு இசைந்தவர்களைத் தெரிந்து ஒருவர்மேல் ஒருவர் காதலன்பு கொள்ளப்பெறுவர். அங்ஙனம் அன்பு கொள்ளப் பெற்றவர்களை அவர்கட்குப் பெற்றாரும் நண்பரும் ஆவார் தெரிந்து மணம்புரிவித்து இல்வாழ்க்கையில் நிலைப்பித்தல் வேண்டும். இனி, அவ்வாறு அன்பு கொள்ளப்பெற்ற இளைஞருள், ஒருவரை யொருவர் அறியாத பெருங் குற்றங் குறைபாடுகள் இருக்குமாயின், அவற்றையறிந்து, அவர்கட்கு அறிவித்து அவர் தம்மை விழிப்பாயிருக்கச் செய்வதும் அவர்தம் பெற்றார்க்கும் நண்பர்க்கும் இன்றியமையாக் கடமையாம் என்பதனையும் ஈண்டு வற்புறுத்துகின்றாம். ஆனாலும், சாதி குலம் செருக்கு செல்வம் நிலை அறியாமை முதலிய போலி ஏதுக்களை முன்னிட்டு அவர் தமக்குள் விளைந்த காதலன்பினைப் பழுதாக்குதல் எவர்க்கும் நன்றாகாது; மற்றுக், **கல்வி அன்பு அறிவு அழகு இயற்கை** முதலான உண்மை ஏதுக்களிற் குறைபாடு உண்டாயின், அதனை எடுத்துக்காட்டி அவர் தம்மை விழிப்பாயிருக்கச் செய்தல் பெற்றாரும் மற்றாருமாகிய எவர்க்கும் இன்றி யமையாக் கடமையேயாகும்.

இனி, மனையாளை இழந்தவன் இளைஞனாயிருந் தாலும், பலமுறை மணம் புரிந்து மனையாளை யிழந்தோ இழவாமலோ ஆண்டில் மிக முதிர்ந்தவனாயிருந்தாலும் அவ்விருவரும் விரும்புகிறபடி யெல்லாம் சின்னஞ்சிறு பெண்களை அவர்கட்கு அடுத்தடுத்து மணஞ்செய்விப்பதில் எவருங் குற்றங்காணாத போது, ஒன்றுமறியாப் பேதைச் சிறுமிகள் தாம் ஏதும் அறியாச் சிறுபருவத்தே பெற்றார் உற்றாரால் மணம் புகுத்தப்பட்டுச் சிலநாளிலோ அன்றிச் சில திங்களிலோ அல்லது சில ஆண்டுகளிலோ கொண்டானைக் கூற்றுவனுக்குக் கொடுத்து விட்டபின், திரும்ப அச்சிருமிகள் மணஞ்செய்து கொள்வதை மட்டுங் குற்றமாக நினைதல் நம்மனோர்க்கு ஈரமில்லாக்

கொடுநெஞ்சம் உண்மையைக் காட்டுகின்றதன்றோ? ஒருகால் மணஞ்செய்விக்கப்பட்ட மங்கையர் தங் கொண்டானை இழந்தபின் மறுபடியும் மணஞ் செய்து கொள்ள விரும்பினால், அவர்கள் அவ்வாறே செய்து கொள்ளுமாறு இடந்தருதல் வேண்டும். அவ்வாறு செய்யாமல் அவர்கள் தலையை மொட்டை அடித்தும், வெள்ளைப் புடவை உடுப்பித்தும், அணிகலங்கள் பூணாமல் தடுத்தும் அவ்விளம்பெண்களைச் சீரழித்து வைப்பதனா லேயே அவர்களைக் கற்பொழுக்கத்தில் நிலைபெறச் செய்துவிடலாம் என்று நம்மனோர் கொண்ட எண்ணம் பெருந் தவறுதலாகவே முடிதலை ஆங்காங்கு நீளக் கண்டு வருகின்றேம்; இத்தகைய கொடிய கட்டுப்பாடுகளாற், **கருச் சிதைத்தல், தற்கொலைபுரிதல்** முதலான அறக்கொடிய தீவினைகள் நமது நாட்டின்கண் பெருகி வரக் காண்கின்றேம். உண்மையை உள்ளவாறே ஆராய்ந்து காணும் ஈர நெஞ்ச முள்ள சான்றோர்களும், இத்தீவினைகளையும், இவற்றிற்கு ஆளாக்கப்படும் ஏழையிளம்பெண்களின் இரங்கத்தக்க நிலைகளையும் நினைந்து நினைந்து, **'இத் தமிழ்நாடு இத்தீவினையினின்று மீளுநாள் எந்நாள்! எந்நாள்'** என்று இரங்கி உருகாநின்றார்! பல்லுஞ் சொல்லும் போய்க், காடு வாவா என்ன வீடு போ போ என்ன ஆண்டில் மிக முதிர்ந்த முதியோரும் ஆறாந்தாரமாக ஆறு ஆண்டுள்ள ஏழைச் சிறுமியை மணக்க அடங்காப் பேரவாக் கொண்டிருக்கையிற், கட்டிளமையிற் சிறந்து திகழும் இளைய மங்கையர்க்கு இன்பத்தில் விருப்பம் இல்லாமல் இருக்குமா! மிகச் சிறிய ஈ எறும்பு முதல் மக்கள் தேவர் ஈறான எல்லா உயிர்கட்கும் இன்பநுகர்ச்சியில் இயல்பாகவே வேட்கை இருக்கையில் ஏழைச் சிறுபெண்கள் மட்டும் அஃது இல்லாதிருக்க வேண்டுமென்று கட்டுப்பாடு செய்து அவர்களை வாழ்நாள் எல்லாம் வருந்தச் செய்வது தெய்வத்திற்கு அடுக்குமா? எல்ல அவாக்களையும் முழுதும் அறுத்தேம் என்று சொல்லி, உணவின்றி என்பு எழுந்து ஊன்உலர்ந்த உடம்பினையுடைய அருந்தவத்தோர்களும் தமது மனநிறையழிந்து தம்மினும் மிக இழிந்த மாதரையும் விரும்பிச் சென்ற பழைய வரலாறுகள் பல உளவல்லவோ! எத்துணை யாண்மையுடையோரும் எத்துணை யறிவுடையோரும் எத்துணை யடக்கமுடையோரும் எத்துணை ஒழுக்கமுள்ளோரும் எத்துணை யுலகை வெறுத்தோரும்

ஆண்பாலரேனும் பெண்பாலரேனும் தம்மால் விரும்பத்தக் காரைக் கண்டவிடத்து எல்லாவற்றையும் மறந்து அவர்மேற் பெருவிருப்புடையராய் மறைவாகவோ வெளிப்படை யாகவோ அவரைக் கூடுதற்கேற்ற முயற்சிகளைச் செய்து இன்பந் துய்க்கின்றனர். தாங்கொண்ட இன்ப வேட்கையைப் பிறர் அறியாவாறு மறைக்கவும். அதனைப் பிறர்க்குத் தெரியாமல் நிறைவேற்றவும் வல்ல அறிவும் செல்வமும் திறமையும் உடையவர்கள் பிறரால் இகழப்படாமல் தங்கருத்தின்படி நடந்து, **‘முற்றுந்துறந்தவர், பற்றுவிட்டவர்’** என்னும் நன்மதிப்பையும் பெறுகின்றார்கள். தமது விருப்பத்தை நிறைவேற்றத்தக்க நிலைமைகள் வாயாதவர்கள் பிறர்பால் இகழ்ச்சியினையும் மதிப்புக் குறைச்சலினையும் அடைகின்றார்கள். முடிவாக ஆராய்ந்து பார்க்குங்கால், இகழ்வார் இகழப்படுவார், புகழ்வார் புகழப்படுவார் முதலான எத் திறத்தவரும் இவ் இன்ப வேட்கையைக் கடந்தவர் அல்லர். இன்ப விருப்பென்பது எல்லா உயிர்களோடும் பிணைந் திருப்பதாகும். இன்பத்தைவிட்டு உயிரும், உயிரைவிட்டு இன்பமும் பிரிந்திருப்பனவல்ல. ஒன்றை விட்டால் மற்றொன்று தனித்திராமல் உடனே அழிந்துபடும். இகழ்புகழ் முதலிய வெளிமினுக்குகளுக்கு மேலே காணப்படாமல், அவற்றின் பிடிக்கு அகப்படாமல் உயிர் களின் உள்ளத்தின் உள்ளே ஒளிர்ந்து கொண்டு அவ் வுயிர்களை மேன்மேல் முயற்சிகளிற் கிளரச் செய்துகொண்டு நிற்கும் ஆற்றல்வாய்ந்தது அவ்வின்பம் என்று ஆழநினைந்து பார்த்து அறிதல் வேண்டும். இவ்வாறு உயிர்களின் உண்மை இயற்கையை ஆராய்ந்து பார்ப்பவர்க் கல்லாமற், பிறர்க்கு ஆண் பெண்களைப் பொருந்தச் சேர்த்தலின் சிறப்பு விளங்காது. தாம் காமவேட்கையில் முதல்வராய் நின்று கொண்டே தமது நிலையை யுணராமற், பிறரைமட்டும் இகழ்ந்து கொண்டு செல்பவர் உலகத்துக்கும் உலகினை வகுத்த இறைவற்கும் மாறாக நடந்து தம்மையும் பிறரையும் பெருந்துன்பத்திற்கு ஆளாக்கி ஒழிவர். மக்களியற்கையைக் கூர்ந்து ஆராய்ந்துபார்ப்பவர்கள் ஆண்பாலார்க்கு இன்ப வேட்கையிருத்தல்போலவே, பெண்பாலார்க்கும் அஃது இருக்குமென நன்குணர்ந்து மணஞ்செய்து கணவனையிழந்த மகளிரை மறுபடியும் மணஞ்செய்வித்துக் கொடுத்து, அவரை மணம் இன்றி வைத்தால் வரும் பெருந் தீமைகளை ஒழித்து

*வருகின்றனர். இந் நாவலந் தீவின்கண்* **வடநாடுகளினும், மலையாளத்தினும், யாழ்ப்பாணத்தினும்** *உள்ள நம் இந்து நன்மக்கள் ஒருமுறை மணம்புரிந்து கணவரை இழந்த மகளிர்க்கு மறுமுறையும் மணம் நடத்தி அவரை வாழ்க்கைப் படுத்தக் காண்டலால், இவ்வாறு செய்யும் வழக்கம் நமக்குப் புறம்பானது அன்றென்பதும், அது பண்டைக்காலந் தொட்டு நம்மனோர்க் குள் நடைபெற்று வருவ தொன்றேயா மென்பதும்; இச் சிறந்த வழக்கம் பிற் காலத்துவந்த தந்நலம் பாராட்டும் இரக்க மில்லாச் செருக்குடைய சிலரால் மாற்றப்பட்டுச்* **சோழ நாடு பாண்டிநாடுகளில் நிலை பெறலாயிற்றென்பதும் நன்கு விளங்காநிற்கும்.** *மாதரை மறு முறையும் மணம்புரிவிக்கும் முறை, பண்டைக் காலத்தில் இந்நாவலந் தீவெங்கும் பரவி யிருந்ததென்பது பழைய ஆரிய வேதங்களினும் மிருதி நூல் களினும் புராண இதிகாசங் களினுந் தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கின்றது. இதற்குச் சான்றாக அந் நூல்களிலிருந்து சில மேற் கோள்களை இங்கெடுத்து காட்டுகின்றாம்:*

**எசுர்வேத தைத்திரிய ஆரணியகம்**, *ஆறாம்பிரபாடகம், பதினான்காம் செய்யுளில் "இதோ உயிரிழந்து கிடக்கும் நின்கணவன் பக்கத்திற் படுத்துக்கிடக்கும் ஓ மாதே எழுந்திரு. நின்னைச் சூழ்ந்து இங்கே உயிரோடிருக்கும் இக் கூட்டத்தி னரிடம் வந்து, கைம்பெண்ணைத் திரும்ப மணஞ் செய்து கொள்ள விரும்பும் ஒருவற்கு மனைவியாகுக!" என்று சொல்லப்பட்டமை பெண்மக்கள் பண்டைநாளில் மறு மணங் கூடினதனைத் தெளிவுறக் காட்டுகின்றதன்றோ?*

*இனி இருக்குவேதத்திற் (7,8,18) போந்த "ஓ அசுவினி குமார, இரவில் நீ எங்கே தங்குகின்றாய்? பகலில் எங்கே தங்குகின்றாய்? நீ எங்கே உறைகின்றாய்? ஒரு கைம்பெண் தன் இரண்டாங் கணவனுக்குக் கவர்ச்சியை உண்டுபண்ணுதல் போலவும், ஒரு மனைவி தன் கணவன் தனது படுக்கையில் வந்திருக்கும்படி அவனுக்குக் கவர்ச்சியை விளைத்தல் போலவும் எந்த வேள்வியாசிரியன் அவிகொடுத்தலால் வேள்விக்கண்ணே நின்னை வரவழைக்கின்றான்" என்னும் மந்திரவுரை ஒரு கைம்பெண் திரும்பவும் ஒருவனை மணங்கூடி வாழும் வாழ்க்கை எல்லார்க்கும் ஏற்புடைத்தாதலைக் காட்டுகின்றதன்றோ?*

இனி, **அதர்வனவேதத்திற்** *(9, 5, 27)* போந்த "முதலில் ஒரு கணவனை மணந்தவள் பின்னரும் இரண்டாங் கணவனாக மற்றொருவனை மணக்கின்றாள்; ஆனால், அவ்விருவரும் அஜபஞ்சோதனங் கொடுத்துப் பிரியா திருக்கவேண்டும்" என்னும் மந்திரவுரை மங்கையர் மறுமணத்தைக் கட்டளை யிடுவதோடு; "ஒருவகை அவியாகிய பஞ்சோதனத்தைத் தருகுவனாயின், இன்னும், மற்ற அவிகளைக் கதிரவனுக்குத் தருகுவனாயின், இரண்டாங் கணவன் தான் இரண்டாம் முறை மணந்துகொண்ட மனைவியோடும் துறக்க உலகத்தில் அதே இடத்திற்குச் செல்கின்றான்" என்னும் மந்திரமும் *(9,2,28)* அது நல் வினையாய்ப் பின்னர் அவரைத் துறக்கத்திற்குச் செலுத்துமாறும் நன்கெடுத்துக் காட்டுகின்றது.

இனி, **நாகமன்னன் புதல்வியான உலூபி** என்பவள் முதலில் மணந்த கணவனை இழந்தபின் தன் தந்தையால் **அருச்சுனனுக்கு** மனைவியாய் இரண்டாம்முறை மணஞ் செய்விக்கப்பட்ட வரலாறு **மாபாரத**த்தின்கட் சொல்லப் பட்டிருத்தலின், மறுமுறை மணம் அக்காலத்தில் யாவரானுங் கைக்கொள்ளப்பட்ட தன்மை ஐயுறவின்றித் துணியப்படும்.

இவ்வாறு பண்டைநாளில் இந்நாவலந் தீவெங்கும் பரவியிருந்தும், இஞ்ஞான்றும் இத்தீவின் சிற்சில பகுதிகளில் தவிர ஏனைப் பெரும்பகுதிகளிற் பரவியிருப்பதும், இவ்விந்து நாடல்லாத ஏனைப் புறநாடுகள் எங்கணும் பண்டும் இன்றும் பரவிக் காணப்படுவதுமாகிய மாதர் மறுமுறை மணத்தை மறுபடியும் இத்தென்றமிழ் நாட்டவர் வழக்கத்திற்குக் கொண்டு வருகுவராயின், அதனாற் பல கொடுந்தீவினைகள் நீங்கப்பெற்று, எல்லாரும் நீண்டகாலம் இனிதாக உயிர் வாழ்வார்கள். ஆண்பாலாரைப்போலவே இறைவனாற் படைக்கப்பெற்ற பெண்பாலாரும் எந்நேரமும் எக்காலுங் கண்ணீருங் கம்பலையு மாய்த் தாம் துன்புறுவதோடு, தமது துன்பத்தை உலகெங்கணும் பரப்பிவருந் துன்பவாழ்க்கையை ஒழித்து இன்பவாழ்வில் அமர்வர். அதனால், எல்லாரும் இன்புற்று, இன்பவுருவாய் விளங்கும் முதல்வன் திருவடியைத் தலைக்கூடுவர்.

இனிப் பொருத்தமில்லாத வகையாய் மணம் பூட்டப் பட்டுப் பாம்பும் கீரியும்போல் ஒருவரையொருவர் பகைத்துப் பேர் அல்லலிற்பட்டு உழலுங் கணவனையும் மனைவியையும்,

புறத்துள்ள பரத்தையர்பாற் பெருவிருப்பு வைத்துத் தன் மனையாளைக் கொடுமையாய் நடத்திவரும் ஆடவனையும் சூதுகட்குடி முதலியவற்றான் மிக மயங்கித் தன் மனைவியை எந்நேரமும் பெருந்துன்பத்தில் ஆழ்த்துங் கொடியனையும், செவ்வனே ஒருவரையொருவர் ஆராய்ந்துபாராமற் பிழை பட அன்புவைத்து மணங் கூடியபின் ஒருவர் இயற்கை மற்றவர்க்குப் பிடியாமல் மிக அருவருத்து வருவோரையும் ஒருங்கிருந்து காலங்கழிக்கச் செய்வதால் அவர் தமக்கேனும் பிறர்க்கேனும் ஏதொரு பயனும் விளையாமையோடு, உலகின் துன்பமும் துன்பவாழ்க்கையுமே மேன்மேற் கிளைத்தற்கு இடஞ் செய்வதால், அவரைவேறு வேறு பிரித்து அவரவர்க்கு இசைவானவருடன் திரும்பவும் மணம்பொருத்துதல் நன்று. ஏறுக்குமாறாய் மணங்கூடிய இருவரை அக் கூட்டுற வினின்றும் வேறுபிரித்து, மறுபடியும் அவர்களை இயை பானவரோடு மணம் புணர்த்தும் வழக்கம் பண்டை நாளில் இருந்த தென்பதூஉம், அது **மனு** முதலான **மிருதி** நூல் களானுந் தழுவப்பட்டிருக்கின்றதென்பதூஉம், நம்மனோர் கருத்திற் பதித்து, அதனை இந்நாளிலும் நம்மனோர்க்குள் வழக்கத்திற்கு கொண்டுவருதல் வேண்டும்.

'வெளியூர்க்குப் போன தன் கணவனைப் பற்றி நீண்ட நாள் வரையில் ஏதொரு செய்தியும் எட்டாதவிடத்தும், தன் கணவன் இறந்துபட்ட விடத்தும், தன் கணவன் பற்றற்ற துறவியாய்த் தன்னைவிட்டு நீங்கினவிடத்தும், தன் கணவன் ஆண்டன்மை இழந்து அலியானவிடத்தும், கடைசியாய்த் தன் கணவன் கழுவப் படாத ஐம்பெருந் தீவினைகளைச் செய்து கிழ்மகன் ஆகியவிடத்தும் இவ்வைம்ருெந் துன்பங் களில் ஒரு பெண்வேறொரு கணவனை மணந்து கொள்ளலாமென்று **மிருதி** நூல்கள் கட்டளை யிடுகின்றன,' என்னு **மனுமிருதி** கூறுகின்றது.

"நால்வேறுவகைப்பட்ட அலிகளுள் தன் கணவன் ஒருவனாகியவிடத்து அவனோடு புணர்ந்திருந்தாலுங்கூட அவன் மனைவிமார் அவனைவிட்டுப் பிரிந்துவிடலாம்" என்றும், **"அக்ஷிப்தன், மோகபீஜன்"** என்னும் வேறிரு வகையான அலிகளுள் தன் கணவன் சேர்ந்தவனாயிருந்தால், ஆறு திங்கள்வரையிற் பார்த்துவிட்டு அவன் மனைவிமார் அவனைப் புணர்ந்திருந்தாலுங்கூட அவனை விட்டு வேறொரு

வனை மணந்து கொள்ளலாம். இனித், தன் மனையாள் அல்லாத வேறு பெண்களைக் கண்டால் மட்டுங் காமங்கொள் கின்ற ஏழாவது வகையான அலியைச் சேர்நதவனாயிருந்தால், மனையாள் வேறொருவனை மணம் புரிந்து கொள்ளல் வேண்டும்" என்று **நாரதமிருதி** நுவலுகின்றது.

"இழிந்த இனத்தினின்று வந்தவனாயிருந்தால், தீய இயற்கை யுடையவனாயிருந்தால், அலியாக இருந்தால், கீழ் மகனாய் இருந்தால், முயலகன் என்னும் காக்காவலி யுடையனாயிருந்தால், நோயாளியாயிருந்தால், கூத்தாடு வோனாயிருந்தால், ஒரே கோத்திரத்தானாய் வகுப்பானா யிருந்தால், இவ் வெல்லாவகைகளிலும் ஒரு பெண்மகள் மணஞ்செய்து கொடுக்கப்பட்டவளாயிருந்தாலும் அவளை வேறுபிரித்துத் திரும்பவும் மணஞ்செய்வித்தல் வேண்டும்" என்று **வசிட்டமிருதி** கட்டளை தருகின்றது.

இன்னும் இங்ஙனமே மறுமுறை மணத்தை ஏற்றுக் கொண்டு கூறும் பழைய நூல்களின் மேற்கோள்களை யெல்லாம் இங்கெடுத்துக் காட்டப் புகுந்தால் இது மிக விரியுமாதலால், மேலே காட்டப்பட்டவை தம்மால் அது சான்றோர்க்கெல்லாம் உடன்பாடானதென்று உணர்ந்து கொள்க. ஆண்பாலாரைப் போலவே பெண்பாலாரும் எல்லா உரிமைகளும் பெற்று இனிது வாழுமாறு அத்துணை இரக்கத்தோடும் அருளோடும் அவர்கட்கு மறுமுறை மணத்தைச் செய்துவைத்தும், அதனைச் செய்யுமாறு கட்டளையிட்டு வைத்தும் தீவினை நிகழ்ச்சிக்கு இடமில்லாத ஏற்பாடுகளை அமைத்துவைத்த மேலோரின் கால்வழியில் வந்தோரென்றுமட்டுந் தம்மைப் புகழ்ந்து பேசிக் கொண்டு, அவர்க்குள்ள இரக்கமும் ஈரநெஞ்சமும் இல்லாமற் பெண் மக்களை அறக்கொடிய காட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தி ஆண்மக்களாகிய தாம்மட்டும் நெறிதப்பி வேண்டிய வாறெல்லாம் நடந்து கொண்டு, உலகில் தீவினைகள் மேன்மேற் பெருகச் செய்து, அம்மேலோர்க்கு முற்றும் மாறாய் நடக்கும் இக்காலத்தவர் செய்கையிலும் வெட்கக் கேடானது வேறொன்று உண்டோ? **'அத்திப்பழத்தைப் பிட்டால் அத்தனையுஞ் சொத்தை'** என்னும் பழமொழிக்கு இணங்க வெளிக்கு நெறிதவறாதார் போன்றும் உயர் குலர்த்தார் போன்றும் ஏமாற்றி நடந்து கொண்டு உள்ளே எல்லாத்

தீவினைகளும் நிறைந்து ஊழலாய் இருக்கச் செய்வார் செய்கையினும் மானகுறைச்சலானது பிறிதொன் றுண்டோ? உடம்பில் ஒரு **கழலைக்கட்டி** கண்டு மிகவுந் துன்புறுவோன் அதனை மூடிவைத்துக் கொண்டு நலம் பாராட்டுவனாயின், அதன்கண் உள்ள நஞ்சு அவனுடம்பின் அகத்தைத் துளைத்து அவனைப் பெரிதும் வருத்தி உயிரிழக்கச் செய்தல் போல இத்தகைய கொடுந் தீவினை களை நெடுக மூடிவைத்துக் கொண்டு வருபவர் கால் வழியின்றி அற்றுப்போதல் திண்ணம். இனி, அக்கழலையை அறுத்து அதன்கண் உள்ள நச்சுநீரை வெளிப்படுத்தி அதற்கு நல்ல மருந்துகள் இட்டு அதனை ஆற்றுவோன் அந்நோய் தீர்ந்து இன்புற்று வாழ்தல் போலப் பெண்மக்களைச் சீரழிக்கும் இக் கொடுந் தீவினைகளை வேரோடுங் களைந்து அவரை நலம்பெற வைப்பவர்கள், அதனாற் றாமும் நலம் எய்தி இம்மையிலேயே எல்லா இன்பமும் பெற்று நீடுவாழ்வார்கள். மேல்புரத்தவரான வெள்ளைக்கார நன்மக்கள் ஒருமுறையோ பலமுறையோ மணங்கூடியவர்களுள்ளும் பொருத்தம் இன்மை காணப்படு மாயின் அவர்கள் வேறுவேறு பிரிந்து தத்தமக்கிசைந்தவரோடு பொருந்த இடந்தருதலை நம்மனோர் கருத்திலிருத்தி, அதனால் விளையும் நலங்களைக் கூர்ந்து பார்த்தல் வேண்டும்; நலந்தரும் ஏற்பாடுகளின் சிறப்பை அறியாமல் அவற்றைக் குறைகூறிச் செல்வதால், அங்ஙனஞ் செல்வார்க்கும் அவர்தம் கால்வழியில் வருவார்க்குஞ் சிறுமையுஞ் சீரழிவுமேயன்றி வேறேதும் உண்டாவதில்லை. அது நிற்க.

மறுமுறை மணத்தால் மற்றொரு மேலான நன்மை உண்டாகும். இப்போதுள்ள இரங்கத்தக்க நிலையில், ஆண்டில் முதிர்ந்த ஒருவர் தம் மனையாளை இழந்தால் திரும்ப அவர் மணஞ்செய்து கொள்ளுதற்கு ஆண்டில் மிக இளைய சிறு பெண்ணையே கைக்கொள்ள வேண்டுவதாகின்றது. பிறகு, முதியோரான அவர்க்கும் அச் சிறு பெண்ணுக்கும் அறிவிலும் பழக்கத்திலும் முயற்சியிலும் இன்னும் பலவகைகிளிலும் ஏற்றத்தாழ்வுகள் மிகுந்திருத்தலால், அவ்விருவர்க்கும் இடையில் ஒன்றுமை யென்ப தின்றிப் பல பெருந்தீமைகள் கிளைக்கின்றன மற்று. மறு முறை மணம் என்பது வழக்கத்தில் வருமானால், முதியராய் மனையாளை இழப்போர் தம் அறிவுக்கும் ஆண்டிற்கும் பழக்கத்திற்கும் ஒத்துக், குடும்பச் சுமை ஏற்று நடத்தத் தக்க மாதரைத் தெரிந்தெடுத்து மறுபடியும்

மணந்து கொண்டு இனிது வாழலாம். அங்ஙனமே, கணவனை இழந்தோளும் தன்கொத்த இயல்புடைய ஒருவரைத் தெரிந்து மணந்து, அவர்தங் குடும்பச் சுமைக்கு உதவியாயிருந்து இனிது வாழலாம்.

இவ்வாறு, மறுமுறை மணம் வழக்கத்துக்குவரின் மாதர்க்குக் கற்பொழுக்கம் என்பது நிலைபெறுவது யாங்ஙனமெனின்; அதனையும் ஒருசிறிது விளக்குவாம்: **ஒரு பெண்மகள் தன் மனத்திற்கியைந்த காதலனொடு கூடி வாழுங்கால் அவன் சொல்வழி நிற்றலும், அவனையன்றி ஆடவர் பிறரை அவனோடொப்பக் கனவிலும் நினையாமையும் ஈகையறங்களிற் சிறந்து எல்லார்க்கும் இனியளாய் அமைதியோடு ஒழுகுதலுமே கற்பொழுக்கமாவதாகும். "கற்பெனப் படுவது சொல் திறம்பாமை"** என்னுந் திருமொழியுந் தன் காதலனோடு கூடிவாழும் ஒரு மாது அவன் கற்பித்த நற்சொல்வழி நடத்தலே கற்பொழுக்கமாம் என வற்புறுத்துரைத்தல் காண்க. ஒரு காதலனோடு கூடியிருக்கும் வரையில் அவனுக்கு மாறாக நடவாது அவன் மனம் உவப்ப நடத்தலே மாதர்க்குக் கடமையாதல் பெறப்பட்டமையின், **அவன் இறந்தபின் வேறொருவனை மணந்து நல்லளாய் ஒழுகுதல் அவளது கற்பொகுக்கத்திற்குச் சிறிதும் பழுதா மாறில்லை**. ஒரு காதலனோடிருக்கையில் அவனுக்கு மாறாய்ப் பிழைபட ஒழுகுதலே மாதரின் கற்பொழுக்கத் திற்குக் குற்றமாம் என்க. இனித் தனக்கு எல்லாவற்றானும் ஒவ்வாத ஒருவனோடு பிணைத்து விடப்பட்ட ஒரு நங்கை அவனைவிட்டு நீங்கித் தனக்கொத்த இயல்புடையானைக் கூடிவாழ்தல் அவளது கற்பொழுக்கத்திற்குப் பழுதா மாறில்லை யென்பதனை மேலெடுத்துக்காட்டிய **மிருதி நூல்** உரைகள் தெளிவுறுத்துதல் காண்க. பண்டைக்காலத்திலும் **தாரை** என்னும் நங்கை முதலில் தனக்கொவ்வாத ஒருவரை மணந்தாளாயினும், பின்னர் அவரை விட்டுப் பிரிந்து சந்திரனை மணந்தமையும், அதுபற்றி அவளது கற் பொழுக்கம் பழுதுறாமையும் மேலெடுத்துக்காட்டினாம். **துரோபதை** பாண்டவர் ஐவரில் எவ்வெவரை எவ்வெவ் வாண்டிற் கூடியிருந்தனளோ அவ்வவர் சொல்வழிநின்று அவரையன்றிப் பிறரை நினையாது ஒழுகினமையாலன்றோ அவளும் அழியாத கற்புடையாள் என்று சான்றோராற் புகழ்ந்தேத்தப் பட்டாள். இவைகளையெல்லாம் நுண்ணிதாக ஆராய்ந்துணர் வார்க்கு ஒரு பெண்மகள் ஒருவனோடு

அன்புற்று மருவி வாழுங்கால் அவன்வழி முழுவதும் நிற்றலே கற்பொழுக்கமா மென்பதும், அவன் இறந்தபின் அவள் வேறொருவனை மணந்து பின்னர் அவன்வழி நிற்றல் அவள் கற்பொழுக்கத்திற்கு வழுவாகாதென்பதும் இனிது விளங்கும்.

இனித் தெய்வத்தன்மை வாய்ந்த காதல் அன்பாற் பிணிக்கப் பட்ட ஒரு நங்கை தன் காதலன் இறந்தபின்னும், அவன் உயிரோடு வேற்றுநாட்டில் அகன்றபின்னும், உயிரோடு தன் மருங்கிருப்பினும் ஊழ்வலியால் நோயானுங் கட்குடி சூது முதலானவற்றானும் தனக்கொவ் வாதவன் ஆனபின்னும் வேறொருவனை மணத்தல் அவளது காதல் அன்பிற்கு ஒவ்வாதாலெனின்; நன்று சொன்னாய், தெய்வத் தன்மை வாய்ந்த அத்துணைக் காதலன்பு உடைய ஒரு மாது தன் காதலன் இறந்து பட்டான் என்பது தெரிந்த அளவானே **தானும் இறந்து படுவள்; தீப்பாய்தல், நான்று கொள்ளுதல், நீரிலமிழ்தல், பட்டினிகிடத்தல்** முதலான வழிகளால் தன்னுயிரை மாய்த்தல் காதலன்பாகாது; **காதலன் இறந்த துணையானே கதுமென ஏங்கி உயிர் நீங்குதலே உண்மைக் காதலன்பின் விளைவாமென இறையனாராகப் பொருளு ரையும் திருச்சிற்றம்பலக் கோவையாரும் நன்கெடுத்து மொழிதலின்** அவ்வியல்புடைய நங்கையரைப்பற்றி ஈண்டு ஏதுமே கூறல் வேண்டா. மற்று, இந் நிலவுலகத்திலுள்ள பெண்பாலார் எல்லாம் அத்துணை விழுமிய காதலன்பு உடையராதல் காணப்படாமையானும், அவரவர் இயல்புக்கு ஏற்ப அவ்வவர்பால் நிகழும் அன்பும் பலபடியான ஏற்றக்குறைச்சல் உடையதாய் நிகழக் காண்டலானும் சிற் சிலர் ஒழிய ஏனை எல்லார்க்கும் இனிய **'மறுமுறை மணத்தின்'** ஏற்றத்தை ஈண்டெடுத்து விளக்கினாமென்க. இன்னும், **மறுமுறை மணத்தில் அறவே விருப்பமில்லாத மங்கையரையும், இறைவன் திருவருள்வழி நிற்றலின்றி மணவாழ்க்கையிற் புகுதற்கு மனம்பற்றாத மாதரையும் அவற்றின்கண் செல்லுமாறு வற்புறுத்தல் ஆகாதென்பதும் ஈண்டே அறியற்பாற்று.**

அற்றாயின், மணவாழ்க்கை சிறந்ததோ, அதனை யொழித்து இறைவனையே நாடி நிற்கும் அருள் வாழ்க்கை சிறந்ததோ என வினைவின் அதனையும் ஒரு சிறிது விளக்குவாம்: இவ்வுலகத்தின் இயல்பையும், இவ்வுலகத்திற் பலவகைப்

பிறவிகள் எடுத்துப் போதரும் உயிர்களின் இயல்பையும் ஆழ ஆராய்ந்துபார்க்குங்கால், உயிர்கள் இவ்வுலகிற் பிறவிக்கு வந்த பின்னர்தான் அவை சிறிதுசிறிதாக அறிவு விளங்கப்பெற்று வருதல் புலனா கின்றது. எனவே, பிறவிக்கு வந்தாலன்றி உயிர்கள் அறிவு விளங்கப்பெறா வென்பதும் இதுகொண்டு தெளியப்படும். இது தெளியவே, உயிர்களைப் பல்வகை உடம்புகளிற் பிறப்பித்து அவை தமக்கு அறிவை முற்றும் விளக்கி அதன்பின் தனது திருவடிப் பேரின்பத்தை நல்குதலே இறைவனது திருவுளக்குறிப்பாதலுந் தெளியப்படுகின்றது. இங்ஙனம் உள்ள தனது திருக்குறிப்பு நிறைவேறும் பொருட்டே இறைவன் முதலில் உலகினை அமைத்து, அதன்பின் ஆண்பெண் என்னும் இருகூற்றிற்பட்ட பல்வகை யுடம்புகளை யமைத்து, அவற்றின்கண் எண்ணிறந்த உயிர்களைப் பிறப்பித்து, அவை தமக்கு அறிவினை முறை முறையே வளரச் செய்து வருகின்றான். ஆண்பெண் சேர்க்கையாலன்றி உயிர்கள் வேறுவகையாய்ப் பிறவி எடுத்தற்கு அவன் எங்கும் இடந்தர வில்லை. இப்போது மக்கட்பிறவியில் வந்தன போக, இன்னும் எண்ணிறந்த உயிர்கள் எல்லாம், விலங்குகள் பறவைகள் ஊர்வன நீர்வாழ்வன முதலிய பிறவிகளின் வழியே படிப் படியாய் ஏறி மக்கட்பிறவிக்கு வரவேண்டியிருக்கின்றன. இனி, இயங்கு முயிர்களேயன்றி நிலைக்கு முயிர்களாகிய புற்பூண்டு மரஞ்செடி கொடிகளில் உள்ளனவும் அங்ஙனமே மேன்மேற் பிறவிகளில் ஏறி மக்கட்பிறவிக்கு வரல்வேண்டும். இனி, மக்கட் பிறவியினுள்ளும் எண்ணிறந்தோர் இன்னும் எண்ணிறந்த பிறவிகளை எடுக்க வேண்டும். இனிப், பிறவிக்கு வந்த இவை போகப், பிறவிக்கு வராத உயிர்களும் எண்ணிறந்தன வாயிருத்தலால், அவையெல்லாம் பிறவிக்கு வந்தாகல் வேண்டும். இவை யவ்வளவும் ஆண்பெண் சேர்க்கையால் மட்டுமே பிறவிக்கு வருமாறு வகுத்திருக்கும் இறைவன்றன் அமைப்பின் பான்மையை உன்னியுணர்ந்து பார்க்குங்கால், ஆண்பெண் ஒருங்கு சேர்ந்து வாழும் மணவாழ்க்கையே அவனமைப்புக்கு இசைந்த சிறப்புடையதாதல் விளங்கா நிற்கின்றது. என்றாலும் மணவாழ்க்கையைக் கைக்கொள்ப வர்கள் தம்முள் ஒத்த அன்புடைய காதலனுங் காதலியுமாய் இருத்தல் வேண்டு மென்பதையும், அவ்வாறு ஒத்த அன்பு வாயாதவர்கள் துன்பமுங் கவலையும் எய்தி ஆண்டு முதிராமுன்னரே மாண்டுபோவதோடு அவர் வயிற்றிற் பிறந்த

*பிள்ளைகளுஞ் சீர்கேடுடையவர்களாய்த் துன்ப வாழ்க்கை யுட்பட்டுத் தம் பெற்றாரைப் போலவே தாமும் விரைவில் மாய்ந்து போவரென்பதையும் ஒவ்வொருவரும் கருத்திற் பதித்துத்,* **தத்தமக்கு ஏற்ற துணை வாய்த்தாலல் லாமல் மணவாழ்க்கையிற் புகுதலாகாதென்பதனை ஈண்டு வலியுறுத்துகின்றாம். மணவாழ்க்கை யென்பது இன்பத் திற்கும் இனிய பிள்ளைகளைப் பெறுதற்கும் வாயிலாயிருக்க வேண்டுமே யல்லாமல், துன்பத்திற்குந் துயர்தரும் பிள்ளை களைப் பெறுதற்கும் வாயிலாதல் ஆகாது***. மேலுந் தமக்கேற்ற துணையைத் தேடும் முயற்சியில் உள்ளவர்கள், தங் குலத்தில் தமக்கேற்றது இல்லாவிட்டால், வேறு குலத்தில் ஏற்ற தொன்றனைத் தேர்ந்து மணம்புரிதற்குச் சிறிதும் அஞ்ச லாகாது. பொருந்தாக் கட்டுப்பாடுகளுக்கு அஞ்சித், தமக்கு உயிர்த் துணையாகற்பாலதனைக் கைவிடுபவர்கள் இன்ப வாழ்க்கைக்கும் இறைவனருளுக்கும் உரியவராக மாட்டார்கள். அவர்கள் நீண்டநாற் இந் நிலவுலகத்தில் வாழ்ந்து அறிவையும் அன்பையும் வளர்க்க மாட்டாதவர்களாய்க் கடிதில் இறந்து, வேறொரு பிறவியிற் புகுந்து ஆண்டும் அவ்வாறே விரைவில் மாய்ந்து, அவ்வாறே பிறவி வட்டத்தில் ஓயாமற் கிடந்துழல்வர். எனவே,* ***ஆசிரியர் தெயவத் திருவள்ளுவர்***,

"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்" (குறள் 792)

*என்று அருளிச் செய்த மெய்யுரை, கேண்மையில் மிகச் சிறந்து உடலும் உயிருமாய்ப் பொருந்தத்தக்க கணவனும் மனைவியு மான இருவர்மேற்றாய் நிற்றல் போல், வேறுபிறர்மேல் நில்லாமையுந் தெற்றென விளங்கா நிற்கும். அவரது சேர்க்கை பெரிதும் ஆய்ந்தாய்ந்து நிகழற்பால தாகுமென்பதனை மேலும் வலியுறுத்தல் வேண்டாம். இவ்வாறெல்லாம் ஆராய்ந்து கொள்ளற்பாலதாகிய மண வாழ்க்கைக்கு ஏற்ற தகுதியில்லாத வர்கள், துறவு வாழ்க்கை யிற் புகுந்து தமக்கும் உலகிற்கும் நன்று ஆற்றுதலே செயற் பாலாரென்க.*

*அற்றேல், மணவாழ்க்கை தகுதியாக வாய்க்கப் பெற்றவர்கள் ஒழுகவேண்டிய முறைகள் எவ்வெவை யென்றால், அவற்றையும் முறையே விளக்கப்புகுவாம்.*

## 2. இன்பமுங் கருவும்

இறைவன் உயிர்களை ஆணும்பெண்ணுமாய் வகுத்து அமைத்தது எதற்காக என்று சிறிது ஆழ்ந்து ஆராய்வோ மாயின், அறியாமையிருளிற் படிந்துகிடந்த அவ்வுயிர்களுக்கு அறிவு வெளிச்சத்தைக் கொடுக்கவும், அறியாமையே இன்பமாய்க் கொண்டு இருந்த அவற்றிற்கு அறிவோடிருந்து நுகரும் இன்பத்தின் விழுப்பம் இன்னதென்று அறிவிக்கவும், அவ்வின்ப நுகர்ச்சியின் வாயிலாக அவை தம்மோடொத்த உயிர்களைப் பிறவிக்கு வருவிக்கவுமே யாமென்பதனை நன்குணர்ந்துகொள்வோம். எனவே பிறவி யெடுத்ததா லாய பயன் அறிவு விளக்கமும் இன்பப்பேறும் பிறவுயிர்த் தோற்றமுமேயாதல் எல்லார்க்கும் ஒப்ப முடிந்த தொன் றாகும்.

இம் மூன்றில் மக்கள் அறிவுடையராதல் கலை நூல் களை ஆராய்ந்து கற்றலானுங், கலைவல்ல சான்றோருடன் பழகுதலானும் வரற்பாலதாகும். மணற்கேணியைத் தோண்டத் தோண்ட அதன்கண் நீர் மிகுதியாய் ஊறா நிற்கும்; அதுபோல் உயர்ந்த அறிவு நூல்களை ஒருவன் கற்கக்கற்க அவன் அறியாமை நீங்கி அறிவுவிளக்கம் உடையனாகுவன். கல்லாதவர்கட்குஞ், சென்ற பிறவிகளிற் பயின்ற பயிற்சி வயத்தால் அறிவு மிகுந்து காணப்படுமேனும், அவ்வறிவும் மேலும் பல நூல்களைக் கல்லாதவழி மலினம் எய்தி மறையும். அறியாமை முற்றும் நீங்கும் வரையில் இடைவிடாது கல்விகற்றலை ஒருவன் கைந்நெகிழ விடலாகாது. இதுபற்றியே **தெய்வத் திருவள்ளுவர்**.

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு" (குறள் 397)

என்று அருளிச் செய்தார். இன்ன நேரத்திலேதான் மாயும் என்று அறியப்படாத இந்நிலையில்லா உடம்பையும்,

இவ்வுடம்பின் தொடர்பால் வந்து சடுதியிலே மறைந் தொழியுஞ் சுற்றத்தாரையும் பாதுகாக்கும் பொருட்டு அழியும் பொருளுக்காக அல்லும்பகலுமாய்ப் பாடுபட்டு உழைத்து வரும் மக்கள், இவ்வுடம்பையுஞ் சுற்றத்தாரையும் போல் நிலையின்றிச் செல்வதல்லாத எம் உயிரின் அறிவை விளக்கி, அவ்வவ்றிவோடு உடன்கலந்து பிறவிகடோறும் எம்மோடு உடன்வருந் தன்மைத்தாகிய அழியாக் கல்விப் பொருளைப் பெறுதற்கு எவ்வளவு முயற்சி யுடையவர்களாய் இருக்க வேண்டும்! பிறவிகடோறும் இங்ஙனம் உயிருடன் விரவி வந்து அதன் அறியாமையை நீக்கி அறிவை முறைமுறையே விளங்கச் செய்ய வல்லதாகிய கல்வியை ஒவ்வொரு பிறவியிலுங் கற்று அறிவு நிரப்ப வேண்டுவது இன்றியமை யாததாய் இருக்க, அவ்வாறு செய்தலை விடுத்து, **'யாம் இயற்கை யறிவு உடையமாகலின் எமக்குக் கல்வி வேண்டாம்'** எனக் கரைபவரின் புல்லறிவைக் கல்வியிற் சிறந்த சான்றோர்கள் ஒரு பொருட்டாகக் கருதுவரோ? ஆகவே, பிறவிகடோறும் பயின்ற பயிற்சிவயத்தால் இப்போது அறிவுடையவர்களாய் உலவு வோரும் இடை யறாது கல்வி பயின்று மேலுமேலுந் தமதறிவை வளர்த்தா லன்றி, அவ்வறிவு திரும்பவும் அறியாமையாற் கவரப்பட்டு மழுங்கிப் போகும். பாசி நிறைந்த ஒரு குளத்தில் ஒரு கல்லை விட்டெறிந்தால், எறிந்த கல்லானது விழுந்த இடத்திலுள்ள பாசிமட்டுஞ் சிறிது நீங்கி, அக்கல் நீரில் அமிழ்ந்தியவுடனே மீண்டும் அப்பாசி அவ்விடத்தை மூடிக் கொள்ளும். அது போலவே, ஒரு சிறிது பயின்ற கல்வியால் நமதறியாமையின் ஒரு சிறுபகுதி சிறிது நேரம் நீங்குமேனும், அப் பயிற்சியை விட்டபின் உடனே அவ்வறியாமை மீண்டும் நமதறிவை மூடிக் கொள்ளும்; இங்ஙனஞ் **சிறிது விளங்க இடந்தந்து மறுபடியும் நமதறிவை மறைப்பதாகிய அறியாமையின் செயலையே 'மறதி' என்று நாம் வழங்குகின்றோம்**. இப் பொல்லாத மறதிக்குணம் நம்பால் இருக்கும் வரையில் நாம் நமதறியாமையிருளைக் கடந்து அறிவுடையராதல் இயலாது இத்துணைப் பொல்லாத மறதியை நாம் அறவே ஒழிக்க வேண்டுமானால், இடைவிடாத கல்விப் பயிற்சியும், அதன்வாயிலாக நினைவை ஒருமுகப்படுத்தி இறைவன் திருவருள் உருவிற் பதித்து நிறுத்தும் பழக்கமும் நம்பால் நிகழுமாறு செய்து கொள்ளல் வேண்டும். ஓவாது

செய்யும் இவ்விருவகை முயற்சியே, ஒரு குளத்தில் நிறைந்த பாசியை முற்றும் வாரியகற்றி அக்குளத்தின் நீரை முழுதுங் துப்புரவு செய்யும் பெருமுயற்சியோடொத்து, நமதறியாமையை ஒருங்கே நீக்கவல்லதாகும். ஆகவே, அறியாமை நீங்கி அறிவைப் பெற்று, அவ்வறிவொளி வாயிலாக இன்பத்தை நுகர்தற்கு அடிப்படையாக உள்ளது கலைநூற் பயிற்சியாகிய கல்வியே யாகுமென்று எல்லாரும் இவ்வுண்மையை உள்ளத்திற் பதித்துக் கொள்வார்களாக!

அஃது உண்மையே யென்றாலுங், கல்வியறிவுடைய வர்கள் நுகரும் இன்பந்தான் சிறந்ததென்று கூறுதல் என்னை? கல்வியறிவில்லாதவர்களுங் கல்வியறிவுள்ளவர்களைப் போலவே இன்பம் நுகர்ந்து வாழ்தலைக் காண்கின்றோ மேயெனிற்; பன்றி மலந்தின்று களித்தலையும், பைங்கிளி தீஞ்சுவை மிக்க மாங்கனி வாழையங்கனிகளை நுகர்ந்து இன்புறுதலையுங் கண்டிலையோ? இவ்விருவேறு வகையான இன்ப நுகர்ச்சிகளில் உள்ள வேறுபாடு கண்டவர்க்கே, கல்வியறிவுடையார்பால் நிகழும் இன்பத்தின் உயர்வும் அஃதில்லார்பால் தோன்றும் இன்பத்தின் தாழ்வுந் தெற் றெனப் புலனாகாநிற்கும்.

கல்விப் பயிற்சியில் மிக்கவர்க்கு நுண்ணர்வு மிகுதிப் படுதலால், அவ்வுணர்வு நிகழ்ச்சிக்கு இடமான அவர்தம் உடம்பும் அவ்வுடம்பில் அமைந்த பொறிபுலன்களும் உணர்வு மிகுந்தனவாயிருக்கும். அத்துணை உணர்வு மிகுந்த அவர்தம் உடம்பின் உறுப்புகள் இனிமை மிகுந்த பண்டங் களோடு ஒன்று சேருங்கால், அவை அவர்க்கு அளவுபடாத இன்பத்தினை விளைக்கும். அறிவு மழுங்கிய பலர்க்குப் புலனாகாத சில பண்டங்களின் மணம், அறிவு விளங்கிய சிலர்க்கு உடனே புலனாதலும், அறிவு குறைந்த பலர்க்குப் புலனாகாத வேறு சில பண்டங்களின் சுவை அறிவு நிறைந்த சிலர்க்கு உடனே புலனாதலும், அறிவு நுணுக்க மில்லாத பலர்க்குப் புலனாகாத சில அருமுயற்சிகளின் நுட்பங்கள் அறிவு நுணுக்கம் வாய்ந்த மற்றைச் சிலர்க்கு உடனே புலனாதலும் நாடோறும் நமது வாழ்க்கையில் நன்கறியப்பட்டு வருகின்றனவல்லவோ? ஆகவே கல்வியறிவு வாய்ந்தார்பால் நிகழும் இன்பத்தின் பெருமைக்கும், அஃதில்லார்பால் நிகழும்

அதன் சிறுமைக்கும் உள்ள வேறுபாட்டினை நன்குணர்ந்து, இவ் வுலகவாழ்க்கையில் நுகர்தற்குரிய இன்பங்களைச் சிறக்க நுகர்தற்கும், மறுமையுலகில் வரற் பாலதாகிய பேரின்ப நிலையினை முன்னுணர்ந்து அதனைப் பெறுதற்காந் தவமுயற்சி யினை நன்கு செய்தற்குங் கல்விப் பயிற்சியானது இன்றியமையாத தாகுமென்றுணர்ந்து கொள்க. இவ்வுண்மைகள்,

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு" (குறள் 396)

என்றும்,

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்உடைய ரேனும் இலர்" (குறள் 430)

என்றுந் தெய்வத் **திருவள்ளுவரால்** நன்கு அறிவுறுத்தப் பட்டிருக்கின்றன.

இனி, அறிவு விளக்கத்தின்பின் இன்ப நுகர்ச்சியும் மகப்பேறும் மக்கட்பிறவி எடுத்தவர்கள் அடைதற்குரிய பயன்களாகும். நாவாற் சுவைத்தற்குரிய இனிய உணவுகளை உட்கொள்ளுதலுங், கண்ணாற் காண்டற்குரிய அழகிய காட்சிகளைக் காண்டலும், மூக்கால் மோத்தற்குரிய நறுமண விரைகளை மோத்தலுஞ், செவியாற் கேட்டற்குரிய இனிய இசைகளைக் கேட்டலும், உடம்பால் உறுதற்குரிய மெல்லணைகளிற் கிடத்தலும் இன்பந் தருவனவேயாயினும் அவையெல்லாம் இவ்வைம்புல வின்பங்களும் இவற்றினும் மிக்க புணர்ச்சியின்பமும் ஒருகாலத்து ஒருங்கே நுகரவல்ல **காதலரின் இணை விழைச்சு இன்பத்திற்கு ஒரு சிறிதும் ஒவ்வா.** காதற்புணர்ச்சி யின்பமே உலகவாழ்க்கைக்கு உயிராய் உலவுகின்றது; இறைவன் திருவடியைத் தலைக்கூடும் மறுமை யின்பத்திற்கும் அதுவே வழிகாட்டியாயிருக்கின்றது; ஓர் ஆடவன் தனக்கேற்ற மாதினைக் கூடி இன்பம் நுகர்தற்கும், ஒரு மாது தனக்கினிய காதலனை மருவிக் களித்தற்கும் எவ்வளவு முயல்கின்றனர்! அம் முயற்சியில் அவர் தமது உயிர் போவதையும் எண்ணிப் பார்க்கின்றார்களில்லை! மணங் கூட்டப்பட்டார்க்குரிய கட்டுப்பாடுகளை வகுத்து, அக் கட்டுப்பாடுகளினின்றும் வழுவினார்க்கு இன்னஇன்ன துன்பங்கள் செயற்பாலன வென்று எத்தனையோ சட்ட

திட்டங்களை அமைத்து வைத்திருந்தும், மக்கட் டொகுதியினர் அம் முறையில் வழுவா வண்ணங் காதலரைத் தடுக்க வல்லராயினரா? சிறிது மில்லையே. மணங் கூடினார் தம்முள் இசைவு காணாராயின், தமது வாழ்க்கையிற் பிழைத்து ஒழுகு தற்கோ, அதற்குத் துணிவிலாராயின் மங்கி மடிவதற்கோ வன்றோ முனைந்து நிற்கின்றனர்! இக்காதலின்பத்தின் பொருட்டாக எத்தனை துன்பங்கள்! எத்தனை மிகுதியான பொருட் செலவுகள்! எத்தனை உயிர்க் கொலைகள்! இவ்வளவு இடர்பாட்டிற்கும் அஃது ஏதுவா யிருத்தலை உற்று நோக்குங்கால், ஒருவரையொருவர் விழைந்து காதலின்பம் நுகர்தற்குரிய தகுதியுடையராய் மண வாழ்க்கை வாய்க்கப் பெற்றார்க்குள்ள புணர்ச்சியின் பத்தினும் மிக்கது பிறிதில்லை யென்பது தெற்றென விளங்கற் பாலதேயாம். இது கண்டன்றோ தெய்வப்புலமைத் திருவள்ளுவனார்,

“கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள” (குறள் 1101)

என்றும்,

“தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு” (குறள் 1103)

என்றும் அருளிச் செய்தார். மாணிக்கவாசகப் பெருமானும்,

“சொற்பால் அமிழ்திவள் யான்சுவை யென்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வந் தந்தின்று நான்இவ ளாம்பகுதிப்
பொற்புஆ ரறிவாலர் புலியூர்ப் புனிதன் பொதியில்வெற்பிற்
கற்பா வியவரை வாய்க்கடி தோட்ட களவகத்தே”

என்று திருவாய்மலர்ந்திருத்தலுங் கருத்திற் பதிக்கற்பாற்று.

இத்துணைச் சிறந்த புணர்ச்சியின்பத்தைப் பெறுதற்குத் தக்க காதலன்பு வாய்ந்து மணங்கூடினார்க்கு, அவர் தம் வாழ்நாள் எல்லையளவும் இன்பமே பெருகுமல்லது, துன்பஞ் சிறிதுமே வாராது. கணவனாயினான் தன்னை விடத் தன் மனைவியையே உயிர்போற் கொண்டு ஒழுகுவனாகலின், அவட்கு விருப்பம் அல்லாதவற்றை, அவள் வெறுப்பன வற்றை, அவட்குத் துன்பந் தருவனவற்றைக் கனவினுஞ்

செய்யத் துணியான்: மனைவியாயினாளுந் தன் கணவரைத் தன்னுயிர்க்குயிராய்க் கருதி அவனைத் தெய்வமேபோற் கொண்டு பேரன்பின்பாலளாய் ஒழுகுவளாகலின், அவளும் அவன் விரும்பாதவற்றை, அவன் வெறுப்பனவற்றை, அவற்குத் துன்பந் தருவனவற்றை ஒரு சிறிதுமே செய்யத் துணியாள். அவ்விரு வருங் கூடியிருக்குமிடம் நறுமணங் கமழும் பூஞ்சோலையாகவே விளங்கும்; அவ்விருவர்தம் இன்பச் சேர்க்கையிற் றோன்றுஞ் சிறுமகார் அப் பூக்களினின்று தோன்றுந் தீஞ்சுவைத் தெண்கனிகளாகவே வயங்குவர்.

ஆனால், இத்தகைய காதலின்ப மணவாழ்க்கை இந் நாட்டில் ஆயிரவரில் ஓரிருவர்க்காயினும் வாய்ப்ப தில்லையே! சாதிக் கட்டுப்பாடு சமயக்கட்டுப்பாடு குடும்பக் கட்டுப்பாடு குடிச்செருக்கு செல்வசெருக்கு முதலான கொடிய காரணங் களாற், காதலன்பு உடையார் ஒருங்கு சேர்ந்து மணஞ்செய்து கொள்ளுதற்கு ஏலாமல், அன்பி லாரை மணந்து துன்புறும்படி வலிந்து புகுத்தப்படுகின்றனர். அதனாற், கவலையும், மனநோய் உடல்நோயும் வறுமையும் ஆங்காங்குள்ள குடும்பங்களில் மிகுவதோடு, அக் குடும்பங் களிற் பிறக்கும் பிள்ளைகளும் நோய் கொண்டவராயோ, அறிவில்லாதவராயோ, கொடிய ராயோ, தீதுசெய்யுந் தொழிலராயோ தோன்றி இவ்வுலக வாழ்க்கையை நரக வாழ்க்கையாக்கி வாழ்நாள் முதிரா முன்னரே மாண்டொழி கின்றனர்! இத்தகைய நிலையில் இந்நாட்டவர் இருப்பத னாலேயே, இவர் தம்மைச் சீர்திருத்து தற்பொருட்டு இத்தகைய நூல்கள் எழுத வேண்டுவது இன்றியமையாததாயிற்று.

எனவே, இப்போது போலி மணவாழ்க்கையிற் புகுத்தப் பட்டுக் கணவனும் மனைவியுமாய் இருப்பவர் அன்பில்லா மையுடன் அறியாமையும் உடையராயிருத்தலின், அவர் தம் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளின் பொருட்டாக வாயினுந், தம் அறிவையும் அன்பையும் வளர்த்துத் தமது வாழ்க்கை யினைச் சீர்திருத்திக் கொள்ளற்பாலார். காதலன்பால் மணங்கூடினவர் களுங்கூடத் தமதறியாமையாற் பல பிழை களைச் செய்து துன்புறுதல் கூடுமாகலின், அவர்களுந் தமது வாழ்க்கைக்கு இன்றியமையாதனவான அறிவுமுறைகளைத் தேர்ந்து ஒழுகுதல் நன்றாகும். ஆகவே, இவ் விருதிறத் தார்க்கும்

பயன்படும் பொருட்டுக் கீழே எழுதப்படும் வாழ்க்கைக் குறிப்புகளை அவ் விருவகையாருங் கருத் தூன்றிக் கற்று, அவற்றின்படி நடந்து கொள்வார்களாக!

முதலில், மணமக்கள் புணர்ச்சியின்பம் நுகர்தற்கேற்ற இளமைப்பருவம் எதுவென்பதும், புணர்தற்குரிய பொழுது எதுவென்பதும் ஆராயற்பாலன. இவ் விந்திய நாட்டின்கண் உள்ளாரிற் பார்ப்பனரும், பார்ப்பனரைப் போல் தம்மைத் தாமாகவே உயர்ந்த சாதியாராக உயர்த்திக் கொள்ள விழைந்து அப் பார்ப்பனரைப் போல் நடக்கும் வேறு சில வகுப்பாருமே, மணங்கூடுதற்கேற்ற கட்டிளமைப் பருவம் வரும் முன்னமே சிறுவர் சிறுமிகளை மணம் புகுத்து கின்றனர். ஏனைப் பல்பெரும் பிரிவினரான மக்களெல்லாருந் தக்க இளமைப் பருவம் வந்த பின்னரேதான் மணஞ்செய்து கொள்கின்றனர். மக்களினுந் தாழ்ந்த உயிர்களெல்லாம் ஆணும் பெண்ணுமாய்க் கூடிக் களிக்கும். இயற்கை நிகழ்ச்சியினை உற்று நோக்குவோ மாயின், ஆணும் பெண்ணும் மருவுதற்கேற்ற இளமைப் பருவம் அணுகும் முன் அவர்தம்மை மணங் கூட்டுதல் கடவுள் வகுத்த அமைப்புக்கு முற்றும் மாறானதாகும் என்பது விளங்கா நிற்கின்றது. **ஓரறிவுடைய மரஞ் செடி கொடிகளுங் கூடப் பூத்துத் தேன் ததும்புகின்ற பருவத்திலன்றோ, வண்டுகள் தம்மை அணுகுதற்கு இடந்தருகின்றன**! ஆடு மாடு நாய் பூனை முதலான விலங்குகளுந் தாம் ஒருங்கு பொருந்துதற் கேற்ற பருவம் வரும்போதன்றோ ஒன்று சேர்ந்து இன்புறுகின்றன? உலக இயற்கை இவ்வாறிருப்ப, ஆறறிவுடைய மக்களென்றும், அவருள்ளுந் தாமே உயர்ந்தோரென்றுஞ் சொல்லிக் கொள்ளும் வகுப்பினர் சிலர் மட்டுஞ், சிற்றறிவுடைய விலங்குகளுஞ் செய்யாத குழவிப்பருவ மணத்தைச் செய்வதற்கு விடாப்பிடி யினராய் நிற்பது எவ்வளவு இழிக்கத்தக்கதா யிருக்கின்றது! **'மணம்' என்பது ஆணும் பெண்ணும் மருவுதற் பொருட்டு அறிவுடையோர் முன்னின்று செய்யும் ஏற்பாடாயின்,** மருவுதற்கு ஏலாத நிலைமையிலுள்ள சிறுவர் சிறுமியரை மணங்கூட்டுவோர் அறிவுடையராவரோ? பேதைச் சிறார்கள் பாவைக் கல்யாணஞ் செய்து விளையாட்டயர்தற்கும், போலிமக்கள் பேதைச் சிறாரை மணம் பொருத்துதற்கும் வேற்றுமை யுண்டோ சொன் மின்கள்!

மேலுஞ், சிறுபருவ மணத்தால் விளையுங் கேடுகளும் பல கல்வி கற்றற்கும், அங்ஙனங் கல்வி கற்கும் முகத்தால் அறிவை உயர்ந்த துறைகளிற் செலுத்துதுற்கும் ஏற்றதாகிய சிறு பருவத்திலேயே நம் அருமைப் பிள்ளைகட்குக் காம நினைவினை எழுப்பிவடுதல் எவ்வளவு தீயது! மணஞ் செய்யப்பட்ட சிறுவர்களோதாம் மணங் கூட்டப்பட்டது எதற்காக என்பதை உடனே உணர்ந்து கொள்கின்றார்கள். அதனால் அவர்கட்குக் காமநினைவு அந்தப் பருவத்திலேயே தலையெடுத்து நிற்கத் துவங்கிவிடுகின்றது. கல்வி கற்று அறிவைப் பலமுகத்தால் வளர்த்தற்குரிய அச் சிறு பருவத்திலேயே காமநினைவு தலையெடுத்து நின்றால் அவர்கள் கல்வியிலும் ஒழுக்கத்திலுஞ் சிறந்தாராகித் தமக்கும் பிறர்க்கும் பயன்படுதல் எப்படி? அங்ஙனம் மணம் பொருத்தப்பட்ட சிறுவருஞ் சிறுமியரும் ஓரில்லத்திலேயே யிருக்க நேர்ந்தாலோ உடம்பு முற்றாத அந்தப் பருவத் திலேயே அவர்கள் புணர்ச்சி செய்யப் புகுந்து விடுகின்றனர். இதனைப் பலகாற் பலவிடத்துங் கண்டுங் கேட்டும் இருக்கின் றோம். உடம்பின் உறுப்புகள் புணர்தற்கேற்ற வளர்ச்சியினை எய்தாத அவ்வளவு பிள்ளைமைப் பருவத்திலேயே அவர்கள் காமப் புணர்ச்சியில் கண்ணாக நின்றால், அவர்தம் கல்வியறிவு பழுதுபடுதலோடு அவர்தம் உடம்பினுறுப்பு களும் பழுதாகி அவர்கள் விரைவில் மாள்வர் என்பதனை நாம் சொல்லுதலும் வேண்டுமோ? இதனாலேதான், பிள்ளைமைப்பருவத்திலேயே மணஞ்செய்யும் பார்ப்பனார்க்குள் இளைஞர் சாவு மிகுதியாயிருக்கின்றது; அதனாலேதான் அவ்வினத்தார்க்குள் இளம்பருவக் கைம் பெண்கள் பெருந் தொகையினராய் இருக்கின்றனர்!

அதுவல்லாமலும், பேதைப்பருவச் சிறுமியரை இளைஞரேயல்லாமல், இளமைப்பருவந் தாண்டியவர்களும் மணஞ்செய்து கொள்ளும் மிகக் கொடிய வழக்கம் இந் நாட்டின்கண் மிகுந்திருத்தலாற் காமச்சுவை கண்ட கட்டிளைஞரும் இளமைகடந்து முதிர்ந்த ஆடவருந் தாம் மணந்துகொண்ட பேதைச் சிறுமிகளை அவர்கள் பூவாத தற்கு முன்னமே வலிந்து பற்றிப் புணர்கின்றார்கள். அதனால், அவ்வேழைச் சிறுமியர் தமது பெண்ணுறுப்புப் பழுது பட்டுப். பின்னர்த் தம் வாழ்நாள் எல்லையளவுங் கொடுநோய்

பலவற்றிற்கு இரையாகி மாள்கின்றனர்! ஐயோ தெய்வமே! இத்தகைய அட்டுழியம் இவ்விந்திய நாடல்லாத வேறெந்த நாட்டிலேனும் நடக்கக் கண்டதுண்டோ! கேட்டதுண்டோ! மற்றை நாடுகளிலில்லாத ஒரு பெருங் கொடுமையினை இந் நாடு தன்னகத்துள்ள ஏழைப் பெண் மக்களுக்கு இழைத்து வருகையில் இஃது அந் நாடுகளை விட நாகரிகத்திற் சிறந்ததென்று சொல்வதினும் வெட்கக் கேடான செய்தி வேறொன்று உண்டோ சொல்லுமின்கள்! இத்தகைய அடாத செய்கைகளைச் செய்வாரை உயர்ந்த சாதியாராகச் சொல்லு தலும், அவர்களை எல்லாச் சடங்குகட்குங் குருவாக வைத்து அவற்றை நடப்பித்தலும் அவர்கள் செய்யும் அத் தீய செயல்களைப் பின்பற்றி அவற்றைத் தாமுஞ் செய்ய முந்து தலும் நம் அருமைத் தமிழ் மக்கட்குப் பொருந்துமோ என்பதனைக் கூர்ந்து பார்மின்கள்! அது கிடக்க.

இனி, நம் அருமைப் பெண்மக்களைப் பூத்தவுடனே மணஞ் செய்விக்கலாமோ வென்றால், அதுவும் ஆகாமை காட்டுவாம்: பெண்மக்கள் மங்கைப் பருவம் எய்தியவுடனே அவர்களுடம்பின் உறுப்புகள் வளர்ந்து முற்றி விட்டன என்று நினைப்பது பிசகு **தோளெலும்பு, தோட் பட்டை யெலும்பு, வயிற்றின் கீழுள்ள முக்கோண எலும்பு**, **காலெலும்பு** முதலியனவெல்லாம் வளர்ந்து முற்றுவது, **பெண்பாலார்க்கு இருபத்து நாலாவது ஆண்டிலும், ஆண்பாலார்க்கு இருபத் தெட்டு அல்லது முப்பதாம் ஆண்டிலும்** நிகழ்கின்றன வென்றும், ஆகவே அவ் வாண்டுகள் வரையில் அவர்கள் மணங்கூடுதலாகாதென்றும், இவ்வுண்மைகளை நன்காராய்ந்து கண்ட அமெரிக்க **மருத்து நூலாசிரியர்**[1] ஒருவர் தமது நூலில் நன்கு விளக்கியிருக் கின்றார். குளிர் மிகுந்த நாடுகளிலுள்ள பெண்மக்கள் பூப்பதற்குக் காலம் நீளுதலுஞ், சூடுங் குளிரும் ஒத்த நாடுகளிலுள்ள இளமகளிர் பூப்பதற்கு அங்ஙனங் காலம் நீளாமையும் பகுத்துணர்ந்து பார்க்கும் வழி, **வெளி நாடுகளிலுள்ள மகளிர் இருபத்து நான்கு ஆண்டுகட்கு மேலும், நம் இந்தியநாட்டு மகளிர் இருபது ஆண்டுகட்கு மேலும், மணஞ்செய்து கொள்ளுதலே சாலச் சிறந்ததாகும். இந்நாட்டின் கணுள்ள இளைஞர்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் இருபத்தெட்டு அல்லது முப்பது ஆண்டுகட்கு முன் மணஞ் செய்து கொள்ளல் ஆகாது.**

*ஏனென்றால், இந் நாட்டின்கட் பெண்பாலாரைவிட ஆண்பாலாரே தமது குழவிப்பருவந் தொட்டு அறிவு நூற் கல்வியொடு தொழிற் கல்வியும் பயிலவேண்டியவர் களாயிருக்கின்றனர். அங்ஙனம் பயின்று அறிவுபெறுதற்கும், பெற்ற அவ்வறிவு கொண்ட பல முயற்சிகளைச் செய்து பொருள் ஈட்டுதற்கும், ஈட்டிய பொருளை இனித் தாம் புகும் மனைவாழ்க்கை இடரின்றி நடைபெறும் பொருட்டுச் சேர்த்தொரு தொகையாக்குதற்குங் குறைந்தது அவர்க்கு இருபத்தெட்டாண்டாவது செல்லல் வேண்டும். இவ்வாறு அறிவும் முயற்சியும் உடையராய், பொருள் தொகுத்தற்குரிய சுறுசுறுப்பு வாய்ந்த புத்திளமைக் காலத்திலேயே நம் இளைஞர்கள் மணஞ்செய்து கொள்வார்களானால், அதனால் அவர்கள் அடையுந் துன்பத்தை அளவிட்டுச் சொல்லுதல் ஏலுமோ?*

*முதலிற் கல்வி கற்றற்கு மூளையில் மிகுந்த வலிவு இருத்தல் வேண்டும். பின் மூளையிலிருந்துண்டாகும் ஒரு வகைக்* ***கருநீர்*** *அம் மூளையை வலுப்படுத்துவதுடன், உடம்பினுறுப்புகள் எங்கும் பரவி அவை தம்மை மிகவும் உரம்பெறச் செய்தும் வருகின்றது. இத்தகைய கருநீர், உடம்பினுறுப்பு எதனையும் அளவுக்கு மிஞ்சி வேலை செய்ய விடாமற் பாதுகாக்கும் வரையில், அவ்வுறுப்புகள் எல்லாவற்றிற்கும் வலிமைதந்து, உடம்பைச் செழுமையாக வளர வைக்கும் மற்றுக் காம விருப்பமே எந்நேரமுங் கொண்டு புணர்ச்சி செய்தலாலோ, உடம்பின் மிகச் சிறந்த சாறாகிய* ***கறை*** *(விந்து) ஒழுகிப் போதலுடன், மூளையின் சாறாகிய உயர்ந்த கருநீரும் வீணே செலவாகி மூளையையும் அறிவையும் கண் முதலான பொறிகளையும் பழுதுபடுத்தா[2] நிற்கும்! இங்ஙனம் அளவுக்கு மிஞ்சிய புணர்ச்சியாற் கறையையுங் கருநீரையுந் தொலைத்து விடுவார்க்கு மூளையில் வலிவு குன்றுதலால், அவர்க்கு அறிவும் வலிகுன்றும்; அது குன்றவே அவர் அரிய பெரிய நூல்களைக் கற்றலும் கற்றவைகளை மறவாது நினைவில் அமைத்தலும் இயலா; கல்வியும் நினைவுமில்லா தொழியவே, அவர் அரிய பெரிய அறிவு முயற்சிகளைச் செய்து பொருள் தேடுதலும் இயலாது.* **"பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை"** *என்ற தெய்வத்*

திருமொழிப்படி, அவர் தாம் வறுமைப்பட்டுத் துன்புறுவ தோடு, தம்மைச் சார்ந்த மனைவி மக்கள் பெற்றார் உற்றார் முதலியோரையுந் துன்பத்திற்கு ஆளாக்குவர்.

அதுவேயுமன்றிக், **கறையுங் கருநீருங்** கழிந்தவர்க்கு, அவர்தம் உடம்பு சாறற்ற சக்கைபோல் ஆய்விடும். அந் நிலையில், அவர் வருத்தமான ஏதோர் உடம்பு முயற்சியுஞ் செய்ய வலியற்றவராய்ப், பலவகை நோய்கட்கு இரை யாகுவர், ஆனதனாற்றான், அறிவு குறைந்த மக்களுங்கூடக் கொள்ளை நோய் அம்மை யோய் நச்சுக் காய்ச்சல்நோய் ஊரெங்கும் பரவியிருக்குங் காலங்களிற் கணவனும் மனைவியும் ஒன்றுசேராமல் விலகியிருத்தல் வேண்டுமெனக் கட்டுரைத்து வருகின்றார்கள். நோய் பரவிய அக்காலங்களிற் புணர்ச்சி செய்து தமது உடம்பிலுள்ள வலியநீரைக் கழித்து விடுபவர்கள் பெரும்பாலும் அந்நோய்களாற் பற்றப்பட்டு உயிர்துறத்தல் கண் கூடாக அறியக்கிடக்கின்றது. ஈதென்னை! உடம்பிலுள்ள கருநீர்ச் செலவிற்கும் நோய்க்கும் தொடர்பு இருக்கின்றது? என்று வினவினாற் கூறுதும்; உடம்பில் ஊறுங் கருநீர் உடம்பை மட்டும் வலிவேற்றுவது அன்று; நோயை விளைவிக்கும் நுண்ணிய நச்சுப் புழுக்கள் உடம்பினுள் நுழைந்தால், அவை அங்கே இருக்க இடம் விடாமல் அவற்றை உடனே வெளிப்படுத்தும் பேராற்றலும் அக்கருநீர் உடையதாகும். அங்ஙனமே **வித்துநீரும்** (விந்துவும்) உடம்பகத்து ஓடி உயிர்க்கு நிலைக்களனாய் இருக்குஞ் செந்நீரினின்று வடித்தெடுக்கப் பட்ட சாறாகும்[3]; நாற்பது பலஞ் செந்நீர் (இரத்தம்) திரண்டு ஒரு பலம் விந்து வாகின்றது. அது புணர்ச்சிக்கண் இன்பத்தைத் தருதலும் புதிய ஒருயிரைத் தோற்றுவித்தலும் வல்லதாயின், அதன் வலிமையை என்னென்று கழறுவேம்! செந்நீரினின்று வடித்த இவ் வித்துநீர் திரும்பவுஞ் செந்நீரிற் சுவறிவிடுமாறு செய்ய வல்லவர்க்கு உடம்பு பொன்போல் மினுமினுவென்று சுடர்விட்டு விளங்கும்; நரையின்றி மயிர் கறுத்துப் பளபளப்பா யிருக்கும்; கூற்றுவன் அவரை அணுகான் என்றாலும், வித்துநீரைச் செந்நீரிற் சுவறச்செய்வது எளிதானதன்று. தவவொழுக்கத்திற் சிறந்த உண்மை நல்லாசிரியனை யடுத்துப் பன்னெடுநாட் பணிசெய்து ஒழுகி, அவன் மனமுவந்து அறிவுறுக்கும் மெய்யுரையால் மூச்சை யடக்கத் தெரிந்தவர்க்கே அது

வாய்வதாகும். மற்றையோர் அங்ஙனம் முழுதும் அதனைச் செந்நீரிற் சுவறுவிக்க மாட்டாராயினும், அதனை மிகுதியாய்ச் செலவு செய்யா மலும், இயன்றவளவு அது செந்நீரிற் கலக்குமாறு செய்யவும் பழகிக் கொள்ளலாம். காமநினைவிற் கருத்தைச் செலுத்தாது கல்வியிலேயே பெரும்பாலுங் கருத்தைச் செலுத்துகின்றவர் கட்கு, அவர்தம் வித்துநீர் இயல்பாகவே திரும்பவும் அவர் தஞ் செந்நீரிற் சுவறி அவரது உடம்பை அமிழ்த வடிவாக்கு கின்றது. எவ்வளவுதான் அழகிற் குறைந்தவராயினும், அறிவுநூற் கல்வியில் மிக்கவர்க்கு அவரது முகத்தில் ஓர் ஒளிவிளக்கந் தோன்றி எல்லார்க்குங் கவர்ச்சியை யுண்டாக்கு தலும், எவ்வளவுதான் அழகின் மிகுந்தவராயினும் அறிவுநூற் கல்வி கல்லாதவர்பால் அவ்வொளி விளக்கமும் கவர்ச்சியுங் காணப்படாமையும் ஆராயுங்காற், கற்றவர் உடம்பில் வித்து நீர் மிகுதியாய் செலவழியாது சுவறியிருத்தலுங், கல்லாதவர் பால் அஃது அங்ஙனம் ஆகாமையுந் தெற்றென விளங்கா நிற்கும். எனவே, கல்வி கற்றற்குங், கற்ற கல்வியறிவு துணை யாகப் பல நன்முயற்சிகளைச் செய்து பொருள் தொகுத் தற்கும், உலக வாழ்க்கையில் மாறிமாறி வரும் நலந்தீங்குகளிற் பட்டுழன்று மனத்திட்பம் பெறுதற்கும் உரித்தாகிய புத்திளமைக்காலத்தே ஒருவன் மணஞ்செய்து கொள்வ னாயின், அவன் அம்முயற்சிகளை யெல்லாஞ் செய்தற்கு இன்றியமையாத அறிவுவலிமை உடல் உலிமையில்லா னாய்த், தன்னையுந் தன்னைச் சார்ந்தாரையுந் துன்ப வெள்ளத்தில் அமிழ்த்துவன்.

அஃதுண்மையே யாயினும், வாழ்க்கைக்கு வேண்டிய செல்வவளம் வாய்த்த குடும்பங்களிற் பிறந்த இளைஞர்க்கு, அங்ஙனம் வருந்திப் பொருளீட்ட வேண்டுவது இன்மையின், அவர் அவ்விளமைக் காலத்தே மணஞ்செய்து கொள்ளு தலாற் போதரும் இழுக்கென்னை யெனிற்; செல்வவளம் உடையார்க்குங் கல்வி இன்றியமையாதது செல்வத்தைத் தானுந் துயத்துப் பிறர்க்கும் பயன்படுத்தற்குக் கல்வியறிவு கட்டாயமான தொன்றன்றோ? கல்வியறி வில்லாதவன் பெற்ற செல்வமும், இளங்குழவி கையிற் கிடைத்த பொற்கிண்ணமும் ஒருவாற்றால் ஒக்கும். அக் குழவியானது அப் பொற் கிண்ணத்தின் அருமை தெரியாமல் அதனைக் கண்ட கண்ட இடமெல்லாம் வீசியெறிந்து விளையாடும்; கல்லாதவன்

கையிற் கிடைத்த காசோ தனக்கும் பிறர்க்கும் பயன்படாமை யோடு, அவன் றனக்கும் பிறர்க்கும் தீங்கிழைப்பதுஞ் செய்யும், மேலுந், தான் உடம்பு வருந்தப் பாடுபாட்டுத் தேடாமல், தம் முன்னோர் தேடிய பொருளைக் கொண்டு உயிர்வாழப் பார்ப்பவனுக்கு, உடம்பு முயற்சி யில்லாமையால், அவனுடம்பின் அகவுறுப்பு களிற் கொழுப்பு மிகுந்து செந்நீர் குழாய்களை அடைத்துவிட, அவன் பலவகை நோய்கட்கு ஆளாகின்றான். செல்வக் குடியிற் பிறந்து முயற்சி யவிந்திருக்கும் இளைஞரிற் பெரும்பாலார்க்கு ஆண்குறி வலிவிழந்து போதலால், அவர் மணஞ் செய்தலாற் போதரும் பயன் என்னையோவென்று நகையாடி விடுக்க, செல்வக் குடியிலுள்ள மகளிரிற் பெரும்பாலார் தமக்குரிய ரோடு இன்புறுதற்கு ஆகாமையால், அவர்தம் அகத்தே பணிபுரியும் ஏவலாட்களைக் கூடி இன்புறுகின்றாரென்பதும் பலரறிந்த செய்தியன்றோ? ஆதலாற், செல்வக்குடியிற் பிறந்தவர்களுங் கல்வி கற்றுத் தாமாக வருந்திப் பொருள்தேடித் தம் முடம்பை நோயில்லாத நிலையில் வைத்துக் கொண்டு, அதன்பின் மணஞ்செய்து கொள்ளுதற்கு ஏற்ற காலம் ஒருவற்கு இருபத்தெட் டாண்டுக்கு மேலாவதேயாமென்பதூஉம் இதனாற் பெறப்படுதல் காண்க.

இனிப், பெண்மக்களில் இருபதாண்டுக்கு மேலும், ஆண்மக்களில் இருபத்தெட்டாண்டுகட்கு மேலும் ஆக மணஞ் செய்து கொண்டவர்கள் புணர்ந்தின்புறுதற்கேற்ற பொழுதுகள் இவையென்பதும் ஆராயற்பாற்று. புதிதாக மணஞ்செய்து கொண்டவர்களிற் பெரும்பாலார் காமவெறி கொண்டு ஒருவரைதுறையின்றிப் புணர்வது வழக்கமாகி விட்டது. இக் காமநுகர்ச்சியில் மிகுதியாய்க் குற்றஞ் செய்பவர்கள் ஆண்பாலரேயாவர். பெண்பாலரில் அக்குற்றத்திற்கு ஆளாவார் மிகச் சிலர் ஆண்பாலாரைப் போலவே பெண்பாலாருங் காமவுணர்வு கொண்டவர் களாயிருக்க வேண்டுமாகையால், ஆண்பாலார்க்கு மட்டுமே அக்குற்றத்தை யேற்றுதல் பொருந்துமோ வெனில், அவ்வியல்பினையும் ஒருசிறிது விளக்கிக் காட்டுவாம்:

“பெருமையும் உரனும் ஆடூஉ மேன”

என்றும்,

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப"

என்றும் பண்டைத் தமிழாசிரியரான **தொல்காப்பியனார்** அருளிச் செய்திருக்கும் உண்மையினைக் கூர்ந்து நோக்குங் கால், ஆண்மைக்குணனும் வல்லறிவும் ஆண்மக்களிடத்தில் இயற்கையாய் காணப்படுதலும், அச்சமும் நாணமும் மெல்லறிவும் பெண் மக்களிடத்தில் இயல்பாக அமைந்து கிடத்தலும் நன்குணரப்படும். ஆணுக்குரிய ஆளுங் குணமும் வலுக்கட்டாயஞ் செய்தலும் ஆண்மக்களிடத்தேயன்றி, ஆண்விலங்குகளிடத்துங் கிளர்ந்து தோன்றுதலைக் காண் மின்கள்! அங்ஙனமே, பெண்ணுக்குரிய அச்சமும் ஆணை யெளிதிலே தன்மருங்கு அணுகவிடாத நாணமும் பெண் மக்களிடத்தே யன்றிப் பெண் விலங்குகளிலும் அமைந்து கிடத்தலைக் காண்மின்கள்! இங்ஙனம் ஆண்பெண் அமைப்புகளில் இயற்கையாய்க் காணப்படுகின்ற இருவேறு இயற்கைகளே ஆண்பாலார் வலிந்து செல்லுதற்கும் பெண் பாலார் அதற்கு இணங்காமல் ஒதுங்கி ஒழுகுதற்கும் ஏதுவாயிருக்கின்றன.

இன்னும், பெண்பாலாரின் பெண்ணுறுப்பு ஆண் பாலாரின் ஆணுறுப்பைவிட மெல்லிய தன்மையுடைய தாகும். எல்லா இரக்கமும் அருளும் உடைய இறைவன் அவ்வளவு மெல்லிதாக அதனை அமைத்திலனாயின், ஆணுறுப்பு அதனுள் உரைசிப் புண்ணாகிப் பெருந் துன்பத்தை விளைத்துப் புணர்ச்சி வேட்கையே ஆண் பாலார்க்கு இல்லாமற் செய்து விடும். அத்துணை மென் றன்மையுடையதாக அமைக்கப் பட்ட பெண்ணுறுப்புப் புத்திளமகளிர்க்கு இன்னும் மெல்லிதாக இருக்கு மென்பதனை யாம் விண்டு சொல்லுதலும் வேண்டுமோ! அதுவேயுமன்றிப் புணர்ச்சியிற் பழகாத புத்திளமகளிர் தமது பெண்ணுறுப்பு வாயிலின்கீழ் மெல்லிய ஒரு தோல் அமைக்கப்பட்டிருக்கின்றது: அஃது ஏதுக்காக அவ்வாறு அமைக்கப்பட்டுளதென்றால், மெல்லிய பெண்ணுறுப்புப் புழையினுள்ளே புறப்பொருள் ஏதும் புகாமைப் பொருட்டும், பனிக்காலத்து நளிரால் அதற்குப் பிணி நேராமைப் பொருட்டும், இன்னும் அதனைப் பழுதுபடுத்தும் வேறெதும் அதனை அணுகாமல் தடைசெய்தற் பொருட்டுமேயாம் என்று மருத்து

நூலாராய்ச்சியிற் றேர்ந்த ஆங்கில ஆசிரியர்கள் நுவலுகின்றார்கள்[4]. முதன்முதல் புணருங்கால் இம் மெல்லிய தோல் கிழிந்து செந்நீர் ஒழுகுமாதலால், அதனை இளமகளிர் பொறாது வருந்துவர். அவ் வருத்தத்தையறிந்து, மணஞ் செய்த புத்திளமகளிரோடு அடுத்தடுத்து மருவுதலைக் கணவனா யினார் விலக்கி விடுதல் வேண்டும். பெண்ணுறுப்புப் புணர்ச்சியிற் பழகும் வரையில் மனைவியின் குறிப்பறிந்து மருவுங் கணவர்பால் மகளிர்க்கு மாறா அன்புங் கவர்ச்சியு முண்டாம். புணர்ச்சியிற் பழகிய பின்னரும் மனைவியின் வேட்கை யறிந்து மருவுங் கணவரே தாம் பெரிது இன்புறுவதொடு, தன் மனைவியர்க்கும் பேரின் பத்தை விளைப்பர்.

இங்ஙனம் இருவர் மாட்டும் மிக்க இன்பம் விளையு மாறு புணரும் புணர்ச்சியே, இருவர்க்கும் உடல்நல மனநலங் களைத் தருவதாகும். இருவர்க்கும் ஒத்த இன்பம் விளைதலால் இருவருள்ளமும் பெருங்களிப்பாற் றுளும்பும்; களிப்பிற் சிறந்த உள்ளத்தின் வயமாய் நிற்கும் அவர்தம் உடம்பின் அகவுறுப்புப் புறவுறுப்புக்களும் அக் களிப்பினால் ஊடுருவப் பெற்று மிகவுந் துலக்கமுடைய தாகும்; அக்களிப் பினால் உந்தப் பெற்ற அவருடம்பின் மின்னொளி யோட்டங்கள் ஒன்றோடொன்று விரவி, அவர்க்கு முன்னில் லாத ஒரு கிளர்ச்சியினையுந் தெய்வ குணங்களையும் உண்டாக்கும். இங்ஙனம் ஒருவருடம்பிலோடும் நுண்ணிய மின்னொளி யோட்டம் மற்றவருடம்பிற் பாய; உடம்பாடும் எதிர்மறையும் ஆன அவ் விருவகைப் பேராற்றலும் ஒருங்கு கலத்தலால், அவர் ஆண்டின் முதிர்ந்தாலும் உடம்பின் முதிராராய் என்றும் இளைஞராய் நூறாண்டும் நூறாண்டிற்கு மேலும் இனிது உயிர்வாழா நிற்பர். இவர்தம் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளும் நோயற்ற திண்ணிய யாக்கை வாய்ந்தவர் களாய், அறிவிலும் நன்முயற்சியிலுந் தெய்வ குணங்களிலுஞ் சிறந்து தமக்கும் பிறர்க்கும் பயன்பட்டு நீடுவாழா நிற்பர் என்றுணர்ந்து கொள்க.

அஃதுண்மையே யென்றாலும், மனைவியைப் புணர்தற் கேற்ற காலமும் புணரும் முறையும் அறிவுறுத்துகவெனிற் கூறுதும்: மகளிர்க்குத் திங்கடோறும் பூப்புநிகழ்ந்த ஐந்தாம் நாளிலிருந்து பதினாறாம் நாள்வரையிற் புணர்ச்சி வேட்கை

உண்டாமென்றும், அப்பன்னிரண்டு நாட்களிற் கூடும் கூட்டமே கருவினைத் தோற்றுவிக்குமென்றும் பண்டை யாசிரியரான **தெய்வத் தொல்காப்பியனார், திருமூலர்** முதல் இன்றை மருத்துவ நூலாசிரியர் ஈறாக இவ்வுண்மைகளை நன்காராய்ந்து கண்ட பேரறிஞர் கூறா நிற்கின்றார். இங்ஙனம் மகளிர்பாற் புணர்ச்சி வேட்கை நிகழ்தற்குரிய காலவரையறை ஆண்பாலாரில் அறிவிலும் ஆராய்ச்சியிலும் வல்ல ஆசிரிய ராற் கூறப்படினும், பெண்பாலாரின் இயற்கையைப் பெண் பாலாரில் அறிவாராய்ச்சி வல்ல பெருமாட்டிமாரே கூறத் தெரிவது மிக்க பயனுடைத்தாம். ஆகவே, இத்துறையில் மிக நுண்ணிய ஆராய்ச்சி செய்து அரும்பெரு நூல்கள் எழுதி யிருக்கும் ஆங்கில மாதரான **மேரிஸ்டோப்ஸ்** (Marie Stopes) என்னும் அம்மையார் கூறுவதை இங்கே மொழிபெயர்த் தெழுதுகின்றாம்: வேறொருவர்மேல் வைத்த காதலாற் தூண்டப்பட்டுச் சிக்குப்படுதல் இல்லாத காதலன்பு வாய்ந்த மனைவிமார், தொழின்முயற்சியால் வெளியூர் சென்ற தங்கணவரைப் பிரிந்துறையும்படி நேர்ந்த காலங்களில் அம் மாதர்பால் நிகழ்ந்த புணர்ச்சி வேட்கைக்குரிய நாட்களைத் தெரிந்து கொள்ளுதலே அவ்வுண்மையைத் தெளிதற்கு உறுதி வாய்ந்ததாகு மெனக் கண்டறிந்தேன். அத்தகைய மாதர், தங் கணவன்மார் தம் அருகிருத்தலையும் தம்மோடு இனிது ஒருங்கு வாழ்தலையும் நாடோறும் விழைகுவாராயினுஞ், சில குறிப்பிட்ட நேரங்களில்தாம் அவரைப் புணர்ந்திருக்கும் வேட்கை மிகப் பெருகுதலையும் மேற்கொண்டு உணர்கின் றார்கள். அவ்வாறு புணர்தல்வேட்கை நிகழும் நாட்களைக் குறித்துவைக்கும் படியான் கேட்டுக்கொண்ட மங்கைமார் எல்லாருந், தமக்குப் பூப்பு நிகழ்தற்குரிய காலத்திற்குச் சிறிது முன்னும், பூப்பு நின்றபிற் சில கிழமைகளிலும், அஃதாவது பதினான்கு நாட்கட் கொருமுறையுந் தமக்குப் புணர்ச்சி வேட்கை மிகாநின்றது என ஒத்து ஒருமுகமாய்க் கூறினர். அப் பெற்றியரான அம் மாதாரிடதிருந்தே, புணர்ச்சி வேட்கை அடுத்தடுத்துப் பெருகுங் காலமுறையினைத் தெரிந்து கொண்டேன்"[5] என்று அவ் வம்மையார் ஆராய்ந்துரைத்த உரை கருத்திற் பதிக்கற்பால தொன்றாம். இங்ஙனமே ஆண் பாலாரில் மருத்து நூலாசிரிய ராயிருப்பாரும் இவ் வுண்மையை ஆராயந்து கண்டு கூறி யிருக்கின்றார்.

நோய்கொண்ட மகளிர்மாட்டுஞ், செல்வக் களிப்பால் அளவுக்கு மிஞ்சி உணவுகொண்டு கொழுப்பு மிகுந்திருக்கும் பெண் பூதங்கள் மாட்டும் இவ்வியற்கை பிறழ்ந்து காணப்படினும், உடம்பு நல்ல நிலைமையிலுள்ள மங்கைமார் எல்லார் மாட்டும், பூப்பிற்குப் பின்னும் முன்னும் பதினான்கு நாட்கட் கொருகாற் புணர்ச்சி வேட்கை நிகழ்தல் இயற்கை யாய்க் காணப்படுகின்றது. ஆகவே, அந்நாட்களைக் குறிப் பாலா யினும் வெளிப்படையாலாயினுந் தெரிந்துகொண்டு, தம் மனைவிமாரை மருவுவார்க்கே மிக்க இன்பமுங் களிப்பும் உண்டாம். அந் நாட்களில் தம் கணவரை மருவிப் பெரிது இன்புறும் மகளிர் தம் கணவர்பால் அளவிறந்த விழைவு டையராய் அவர்க்கு உயிரும் உடலுமாய் ஒத்து நடப்பர். மற்றுப் புணர்ச்சிவேட்கை நிகழும் நாட்களிற் கூடாமலும், அவ்வேட்கை யவிந்த நாட்களிற் கூடியுந் தமக்குத் துன்பத் தைச் செய்யுங் கணவர்பால் மனைவிமார்க்கு உள்ளன்பு இல்லையாத லோடு, அவர்மாட்டு வெறுப்பும் நிகழா நிற்கும். இயற்கையிலே நல்லகுணமும் மனத்திட்பமும் வாய்ந்த மனைவிமார், தம் கணவர் தமக்கு வெறுப்பன செய்யினுந், தமது மனப்புழுக்கத்தை வெளிக்காட்டாது உள்ளடக்கி யொழுகுவர். ஆயினும் அவர்க்குள்ள அப் புழுக்கம் அவரு டம்பை நஞ்சாக்கி நோய்கொள்ளவோ, உயிர்மாளவோ செய்யுமென்பது திண்ணம். இருவர் நெஞ்சம் ஒன்றாகாமல் வேறுபட்டு நிற்றலால், மனைவாழ்க்கையும், நிறம் மங்கி மணம்போன மலர்போல், வெறுங் கடமைக்காகவே நடவாநிற்கும் இந்நிலைமையில் அவர் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளுந் தமக்குந் தம் தாய்தந்தையார்க்கும் உலகத் திற்கும் பயன்படுதலில்லாராய்ப் பிறந்து, துன்பத்தாற் குறுகிய வாழ்நாள் உடையராய்க் கழிவர் என்க.

இனி, இயற்கையில் அத்துணை நல்லகுணமும் மனவுறுதியும் வாயாத மகளிரும், நல்லகுணமுடையராயினும் புணர்ச்சி வேட்கையை அடக்க வலியற்ற மடவாருந் தம் கணவர் வழி நில்லாது, தமக்கேற்ற ஏனை யாடவரை மருவிக் களியாநிற்பர். மேலே எடுத்துக்காட்டிய **மேரி ஸ்டோப்ஸ்** என்னும் மருத்துநூற் பெருமாட்டியார் இதற்கு ஓர் உண்மை நிகழ்ச்சியை எடுத்து மொழிந்திருக்கின்றார். ஒருகால் ஒரு

மங்கையை நோக்கி **"நீர் ஏன் நும் கணவர்மாட்டு உண்மை யாக நடந்து கொள்ளவில்லை?"** யென்று வேறொரு மருத்துவர் கேட்டபோது அம்மாது **"குறைந்தது பதினான்கு நாட் கொருகால் யான் புணர்ச்சியை விரும்பினேன்; அந் நேரத்தில் என் கணவர் வாயாதபோது எவர் முதலில் எதிர்ப்பட்டாரோ அவரை மருவலாயினேன்"** என விடை பகர்ந்தனராம்[6]. ஆதலால், தன் மனைவிமார்க்குப் புணர்ச்சி வேட்கை நிகழும் காலமறிந்து அவரைக் கணவன்மார் மருவுவராயின், இருவர்க்கும் இன்பம் பெருகுவதோடு அரிய கற்பொழுக்கத்திலும் இருவரும் வழுவாராய் நடந்து மனநலனும் உடல் நலனும் வாய்ந்த மக்களைப் பெற்று நீடு வாழ்வர்.

இனி, மனைவியாயினாள் கருக்கொண்டிருக்குங் காலங்களிற் கணவன் அவளை மருவுதல் நன்றோ தீதோ என வினவின், அக் காலங்களிலும் மனைவிக்குப் புணர்ச்சி வேட்கை நிகழுமாயின் மருவுதல் நன்றென்றும், அஃதில்லை யாயின் அவ்வாறு செய்தல் தீதென்றும் உணர்ந்து கொள்க. மேலுங், கருக்கொண்ட மகளிர் தம் காதலரோடு இடை யிடையே, கூடிக் களித்தலால், அக் களிப்பினால் உந்தப்படுங் கருவும் மகிழ்ந்த உள்ளத்தினதாய் வளர்ந்து மாட்சிமைப் படும்; அதுவேயுமன்றி, இடையிடையே உளமும் உடம்புங் கனிந்த புணர்ச்சி நடத்தலால், மனைவியின் பெண்ணுறுப்புக் குழையுடையதாகிக் கருவுயிர்க்குங்கால், வருத்த மிகுதியினை உண்டாக்காது. இவ்வாறன்றிக் கருவுயிர்க்குங்காறுங் கணவனைப் பிரிந்து தனித்துறையும் மகளிர்க்கு இன்ப வுள்ளம் இல்லாமையாற் கரு மாட்சிமைப் படாததொடு, புணர்ச்சியின்மையாற் பெண்ணுறுப்பும் இறுகிக் கருவுயிர்க்குங்காற் பெரு நோயினை யுண்டாக்கும்.

என்றாலுங், கருக்கொண்ட மகளிரைக் கூடுங் கணவர், மிகவும் விழிப்பாக மிகவும் மென்மையாக அவரை மருவுதல் வேண்டும். அவர்மேற் படுத்துக் கொண்டு கூடுதல் அவர்க்கும் அவர் வயிற்றிலுள்ள கருவுக்கும் பெருந்தீங்கு பயப்பதாகும். குந்திய நிலையிலும், ஒருக்கணித்துப் படுத்த நிலையிலும் மருவுதலே சிறந்த முறையாகும்.

மேலுங், கருக்கொண்ட மகளிரே யல்லாமற், கருக் கொள்ளாத மகளிரொடு புணருமிடத்தும், இரு முழங்கை களையும் இருமருங்கும் ஊன்றிக்கொண்டு, அவர்மேல் மெல்லென இனிதாய்ப் படுத்துப் புணர்தல் வேண்டுமேயன்றி, அவர்மேற் றமது உடம்பின் சுமையை முழுதுமேற்றி அவரை நசுக்கித் துன்புறுத்திவிடுதல் ஆகாது. தன்னைப் புணரும் ஒவ்வொரு முறையுந் தன் கணவன் தன்னைத் திக்முக்காடச் செய்கின்றனன் என்றும், அவன் அங்ஙனந் தன்னைப் புணர்ந்தபின் தான் அவ்விளைப்புக்களைப் பினின்று மீளப் பல மணிநேரங்கள் செல்கின்றன வென்றும், அவ்வாறன்றி வேறு இனிய எளியமுறையால் மருவுதலை அவன் அறியாத வனாயிருக்கின்றான் என்செய்வேன்! என்றும் ஓர் இளமங்கை தம்மிடம் முறையிட்டு வருந்தியதை மேற் குறிப்பிட்ட மேரி ஸ்டோப்ஸ் என்னும் அம்மையார் தாம் எழுதிய நூலில் எடுத்துக் காட்டி யிருக்கின்றார்.

இவ்வாறெல்லாந், தம் மனைவியரின் மனநிலை உடல் நிலைகளை நுனித்தறிந்து, அவர்க்குந் தமக்கும் மிக்க இன்பம் விளையுமாறு அவரை மருவிவாழ்தலே நல்லறிவும் நற் குணமும் வாய்ந்தஉண்மைக் கணவராவார். எல்லார்க்கும் உரிய உயர்ந்த ஒழுகலாறாய் இருக்கக், கணவரிற் பெரும் பாலார் தம் மனைவியரின் இருவகை நலங்களையும் கருதிப் பாராது, அவரை மரக்கட்டைகளாகவுங் கருங்கற் சிலை களாகவும் நினைத்து, அவர் விருப்பின்றி வெறுப்பாய்க் கிடக்க, அவர்பால் தமது சாற்றை இரண்டொரு நொடியில் தொலைத்துவிட்டு, அவ்வாற்றால் அவரையும் வருத்தித் தமது நலத்தையுஞ் சிதைத்துத் தம் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளின் நலத்தையுங் கெடுத்துத் தொடர்பாகத் தமக்கும் பிறர்க்கும் பெருந் துன்பத்தை விளைத்து வருகின் றார்கள். மனைவியின் வேட்கைக் குறிப்பும், அதனையறிந்து மருவுங் காலமும் அறியாது, காம மயக்கமே எந்நேரமுங் கொண்டு, கண்ட கண்ட நேரமெல்லாம் புணர்ந்து தன்னையுந் தன் பிள்ளைகளையும் பாழ்படுத்தின தன் கணவனைப் பற்றி முறையிட்டுக் கூறிய ஒரு மாதின் துன்பவுரை யினை ஈண்டு மொழி பெயர்த்து வரைகின்றோம்

“புதல்வரைப் பெறுதலில் எனக்குள்ள திகிலை,யாங்கள் மணஞ்செய்து கொள்வதற்கு முன்னமே என் கணவற்கு யான் தெரிவித்தேன். தாயின் நிலைமையை அடைதலால் வரும் பொறுப்பையுந் துன்பத்தையும் யான் ஏன்றுகொள்ளல் இயலாதென்றேன். அவரும் அதனைச் சிலகாலம் வரையில் தடைசெய்தற்கு வேண்டும் ஏற்பாடு செய்தார். பின்னர் இவ்வேற்பாடு பராமுகஞ் செய்யப்பட்டது. முறையாக மணம் நடந்தேறிய பிறகு, தம் பெயருக்குக் கெடுதலில்லாமலும் சட்டவொழுங்கு சமய வொலுங்கின் ஒருப்பாட்டுடனுந் தாம் வேண்டியமட்டுந் தம் காமத்தைத் தீர்த்துக் கொள்ளலா மென்பது அவர்க்குப் பட்டது; ஆகவே, தாம் விரும்பிய போதெல்லாம் யான் புணர்ச்சிக்கு இசைய வேண்டுமென அவர் வற்புறுத்தினார். யாங்கள் ஒன்றுசேரத் துவங்கிய காலத்தில் அவர் தாம் மொழிந்த சொல்லுறுதியைச் சிதைத்தார். ஓ அந்தப் பொல்லாத மணநாள் இரவே! இம் மண்ணுலகில் இருக்கும் வரையில் நீ ஒரு போதும் நீங்காத துயரத்தை என்னுள்ளத் திலும் என் மனைவாழ்க்கையிலும் இருத்தினாயன்றோ! யான் அதனை என்றும் மறவேன். ஆயிரக்கணக்கானவர்க்குச் செய்ததுபோல, எமது சேர்க்கை யின் சாவுக்கும் அஃது இலச்சினை இட்டது.

“அவரும் உடல்நலங் குன்றிவிட்டார்; யானும் அப்படியே யாங்கள் இருவேமும் மனவலியுங் குறைந்து விட்டோம் என்றாலும், நோய்கொண்ட வித்து என் வயிற்றகத்தே ஊன்றப் பட்டது; சூல் கொண்டேன். எமக்கும் எம் பிள்ளைக்கும் வேண்டிய மனைவாழ்க்கை வசதிகளை முன்னமே செய்து கொள்ளாமையால், யாங்கள் ஏழை களாகவும் வறியவர் களாயும் இருந்தோம். குழந்தை எப்படிப் பிழைக்கப் போகின்ற தென்பதை நினைந்து நினைந்து அடைந்த திகிலிலும் மனநோயிலும் அக் கருவானது வளர்ந்து, அடுத்துவந்த மாசித்திங்களிற் பிறந்தது, மூன்று திங்கள் யான் பெரும்பாடு பட்டபிறகு, வேண்டாது பிறந்த அம் மகவின்பால் மன இணக்கமுடையளானேன். ஆயினும். அது பிறப்பதற்கு முன், அதன் உயிர்வாழ்க்கைக்கு மாறாய் யான் கொண்ட பகைமைக் குணமும் பொறுமையின்மையும், என்றுங் கலைக்கலாகாதபடி அக் குழந்தையின் மாட்டுப் பதிந்து

காணப்படலாயின. இந்த மணிநேரம் வரையில் அப் பிள்ளை வேண்டாமையாற் பிறந்த பிறவிக்கு இரையா யிருக்கின்றது.

"ஓராண்டுக்குள் யான் மறுபடியுந் தாயாக வேண்டியிருப்பதைக் கண்டேன். அதனால் யான் வெருக்கொண்டு தளர்ந்த நிலைமையளானேன். எனது தலைச்சன்பிள்ளை பிணிப்பட்ட தாயும் பெரிதுந் துன்புறுத்துவதாயும் இருந்தது (அது வேறு எப்படியிருக்கக்கூடும்?); அதனை அடிக்கடி உன்னித்துப் பால் கொடுக்க வேண்டியிருந்தது; என் கணவரோ எங்களைப் பாதுகாத்தற்பொருட்டு விறகு வெட்டி விற்றார். **வறுமையோடுங் கொடிய மனத்துயரத்தோடும் மல்லாடும் நிலையிற் புதல்வர்களை இவ்வுலகத்திற் றோற்று விப்பது எவ்வளவு அடாத செயல்** என்பதை முன்னும் பின்னும் உணர்ந்தேன். யான் உள்ளம் மயங்கியவளானேன். இத்தகைய நிலைமையில் தாயாயிருப்பதை விட இறந்து படுவதே வேண்டற்பாலதென உணர்ந்தேன். என் குழந்தையைத் தொலைத்து விடுதற்கும் ஒரு விருப்பமும் ஓர் உறுதியும் என் நெஞ்சத்துள் நுழைந்தன. எனக்கு நேய மாயிருந்த ஓர் அம்மையாரிடம் அதைப்பற்றிக் கலந்தேன்; அவருடைய தூண்டுதலாலும் உதவியாலும் அதைக் கொலை செய்தேன். என் பிள்ளைக்கு நன்மை செய்தற்கேற்ற முற்குறி இல்லாதிருந்தும், மறுபடியும் ஓர் ஆண்டுக்கு உள்ளாகவே யான் சூல்கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்பட்டேன்; அஃதெனக்கு மிகப்பெரிய மனநோயினை விளைப்ப தாயிற்று; அந்தக் காலத்தில் யான் மற்றுமொரு மகவினைப் பெறுதல் ஆகாதென உணர்ந்தேன் எல்லாஞ் சாக்காடுபோல் இருண்டு காணப் பட்டது. யான் மறுபடியும் மகிழ்ந்து ஏற்கும் வரையில் இந்தத் துன்பத்திற்கு என்னை ஆளாக்காமல் விட்டுவிடும்படி என் கணவரை யான் எவ்வளவோ கெஞ்சி வேண்டினேன்; ஆனால், என் கணவரோ என் வேண்டு கோளையும் என் நிலைமையையும் ஒரு பொருட் படுத்தாமல், தாம் தமது காமத்தைத் தீர்த்துக் கொள்ளுதலிலேயே பிடிவாதமாய் நின்றார்.

பின்னர் யான் ஒரு மருத்துவரிடஞ்சென்று, எனது துயரமான நிலையினையும், இந்த நிலையில் மற்றுமொரு குழந்தையைப் பெறுதற்கு யான் வேண்டாமையினையும் எடுத்து

உரைத்தேன். அவர் தம்முடைய முறையினையுந், தம்முடைய மருந்துகளையுங் கருவிகளையும் உடனே காட்டி, அக் கருவினை அழிக்க வேண்டிய வழியும் எனக்குச் சொன்னார். அவர் சொன்னபடியே மூன்று திங்கள் செய்து, அதில் வெற்றி பெற்றேன். கருக்கொண்டு ஐந்து திங்கள் கழிந்தபின் மகவினை யான் கொன்றேன்.

இது நிகழ்ந்த சில திங்களுக்குப்பின், மறுபடியும் என் மனம் புண்பட்டுத் துன்புறும்படி, திரும்பவும் சூலி யாக்கப்பட்டேன். மறுபடியும் என் குழந்தையை அழிக்கத் தீர்மானித்தேன்; ஆனால் அத் தீர்மானத்தைச் செய்கையிற் காட்டப் புகுந்தபோது, என் மனத்துணிவு என்னைவிட்டு அகன்றது. என் உடம்பும் உயிரும் அழியும் நிலையில் இருந்தன. உயிரோடிருக்கும் என் மகவின் பொருட்டு யானும் உயிரோடிருக்க விரும்பினேன். தன் உயிர் வாழ்க்கை இயற்கைக்கு மாறாயும் அருவருக்கத் தக்கதாயுங் காணப் பட்ட எனது பிறவாக் குழந்தைக்கு யான் எவ்வளவு நன்மை செய்யக்கூடுமோ அவ்வளவுஞ் செய்ய மனவுறுதி கொண்டேன். என்னுடைய மனநிலை உடல்நிலையானவை அப் பச்சிளங் கருவின் உயிரை எவ்வளவு மிகுதியாய்த் திரிபு படுத்துமென அறிந்தேன்! ஆகவே, எனது தீய ஊழ்வினைப் பயனுக்கு ஒருவாற்றால் யான் இணங்கி நடத்தலே செயற்பாலதெனக் கண்டு அந்நிலைமையில் யான் எவ்வளவு மகிழ்வாயிருக்க வேண்டுமோ அவ்வளவுக்கு என்னை விட்டுக் கொடுத்தேன். யான் எதிர்பார்த்தபடியே பிறந்த அம் மகவின் இயற்கையும் இருந்தது. அம்மகவுக்கு யான் முழுதும் நன்மை செய்ய ஏலாதவளானேனே! வேறு யான் யாது செய்யவல்லேன்!

அக் குழந்தையும் பிறந்தவுடனே, என் கணவர் தாம் வழக்கமாகச் செய்துவரும் முறைகடந்த செயலைச் செய்வதிற் பிடியாய் நின்றார். எனது விருப்பம் ஏதும் இல்லாமலே, மறுபடியும் யான் வலுக்கட்டாயமாய்க் கருக்கொள்ளும்படி செய்யப்பட்டேன். என் மகவினைத் தொலைத்துவிடுதற்கு யான், துணியக்கூடவில்லை; கருச் சிதைத்தலானது மிகக் கொடியதாகவும் விலங்கினியற்கை யுடையதாகவும் இயற் கைக்கு மாறானதாகவும் அருவருக்கத் தக்க தாகவுங் காணப்

பட்டது. ஆகவே, என் மகவின் பொருட்டு என்னாலான நன்மையை அதற்குச் செய்ய யான் உறுதி செய்தேன். அதனை யான் மகிழ்ந்து வரவேற்கக் கூடாவிடினும், அஃது உயிர் பிழைத்திருத்தலை அமைதியுடன் பொறுத்துக் கொள்வதற்கு மனம் ஒருப்பட்டேன்.

இந்த மகவினைக் கருவுயிர்த்த பிறகு, இனி எமது வறுமையைப் பங்கிட்டுக் கொள்வதற்கும், வேண்டாத உயிர் வாழ்க்கையில் வரும் பிழைபாடுகளாலுந் தீங்குகளாலுந் துன்புறுதற்கும் இன்னும் நான் குழந்தைகளைப் பெறுதல் கூடாதென உணர்ந்தேன். அதைவிட உடனே என் உயிரை மாய்த்து, அவ்வாற்றால் என் உயிரையும் மகப்பெறும் என் வலிவையும் அழித்துவிடுதலே நன்றென வுணர்ந்தேன். ஏடும்பத்தைப் பராமரிக்கும் முழுப் பொறுப்பையும் என் கணவர் என்மேல் ஏற்றிவிட்டார். என் பிள்ளைகளைக் கருத்தாய்ப் பார்ப்பதற்கு எனக்கு ஒரு மணி நேரங்கூட ஒழிவு கிடைக்கவில்லை என்றாலும், என் கணவரோ தமது காமவிருப்பத்தைத் தீர்த்துக் கொள்ளுதலிலேயே இன்னும் விடாப்பிடியாய் நின்றார். யானோ உயிரோடிருக்கும் ஒரு தொழுத்தையாய் விட்டேன். உயிர் பிழைத்திருப்பதில் விருப்பமேயில்லை. கல்லறையே எனக்கொரு புகலிட மாகவுஞ் சாக்காடே எனக்கொரு தோழனாகவுங் காணப் பட்டன.

இந்த நிலைமையில், இந்நிலைமை என் கணவற்கு நன்கு தெரிந்திருந்தும், இரண்டுமுறை நான் கருக்கொள்ளும்படி அவர் கட்டாயப்படுத்திவிட்டார். என் கருவைச் சிதைக்கும் படி ஒரு மருத்துவரை அமர்த்திக் கொண்டேன். அங்ஙனம் அதனைச் சிதைத்தமையால், எனது உயிர் நிலைக்கு வலிவாயிருக்கற் பாலது, அஃதாவது யான் கருக்கொள்ளுந் தன்மையானது முற்றுமே அற்றுப் போயிற்று. எனது பெண்டன்மைக்கு ஒளிசிறந்த ஓர் அருமணியாயுள்ளதனை எண்ணினின்றும் அகற்றப்பட்டேன் பெண்பாலார் மட்டுமே துன்புறுந் துன்பத்திற்பட்டேன்; உடம்பைப் பற்றிய துன்பத் தின் மட்டுமே யன்றிக், கசந்த கழிவிரக்கத்தாலும் உள்ள நோயாலும் நைந்தேன்.

“இத்தனை துன்பமும், என் கணவன் தன் புல்லிய காமவிருப்பத்தை ஒரு நொடிப் பொழுதில் நிறைவேற்றிக்

கொள்ளுதற் பொருட்டாகவே யான் படவேண்டுவதாகின்ற தென்னுந் திகிலான அழிவுணர்ச்சியோடு கூடவேயான் பட்டேன். எனது உடம்பை அவரது காமத்திற்காக ஒப்படைத்து விடுவது, மணஞ் செய்துகொண்ட மகளிரின் உடம்பு அவர்தங் கணவர்க்கு உரிமைப் பொருளாதல் பற்றியே என்னும் நன்னம்பிக்கையுடனேயே அவ்வாறு செய்தேன்; மக்கள் நேயவாழ்க்கையைப் பற்றியுஞ் சமய வொழுக்கத்தைப் பற்றியும் யான் கற்ற பொய்க்கல்வி அத்தகையதா யிருந்தது. அவரும் அங்ஙனமே சொன்னார். யான் அறிவுகேட்கப்போன எல்லா மாதர்களும், என் கடமையாவது கணவனுக்கு இணங்கி நடப்பதே யாமென்றுங், கணவர்க்கு அஃது உரிமையே யாதலால் அவர் அதனை எதிர்ப்பார்க்கின்றன ரென்றும், அவர்க்குக் காமஎழுச்சி உண்டாம்போதெல்லாம் அவரதனைத் தீர்த்துக் கொள்ளு தலே வேண்டுமென்றும், இந்த வழியால் மட்டுமே மனைவி மார் தம் கணவரின் அன்பை நிலையாகப் பெறுதல் கூடுமென்றும் மொழிந்தனர். ஆகவே, யான் அவரது காமத்திற்கு என்னை வாய்பேசாமல் வருந்தி ஒப்படைத்து விட்டு அதன்பின் யான் கொண்ட கருவை யழிப்பதொன்று, அல்லது யான் அவரைவிட்டு நீங்கி, யானே ஒருங்கிருந்து வாழமுடியாத அவருடைய இரக்கத்திற்கு என் மக்களை விட்டுப்போதலொன்று; இதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. எனது இயற்கையின் மென்றன்மைக்குக் கருச் சிதைத்தலானது மிகவும் வெறுப்பாகத் தோன்றியது; இஃது இடையிடையே என்னை யானே வெறுக்கும்படி செய்தது.

“எனது முதற்பிள்ளை மூன்று திங்கள் வளர்ந்ததும், என்னை விடுவித்துக் கொள்ளுதற்குப் பெரும்பாடு பட்டேன், என் குழந்தைக்கு இரண்டு திங்களானதுந், தமது காம விருப்பத்திற்கு இணங்கும்படி என்னை என் கணவர் கட்டாயப்படுத்தினார். அவரது நடக்கையாகனது மிகவுந் கடைப்பட்டதாகவும் அருவருக்கத்தக்கதாகவும் எனக்குத் தோன்றியது. என் பொருட்டும், என் பிள்ளையின் பொருட்டும் என்னை விட்டுவிடும்படி என் கணவரை மன நோயோடு அழுது கெஞ்சினேன்; துணையற்ற என் பிள்ளையில்லாவிட்டாற், சட்டப்படி யுண்டான அவ்வுறவை நான் தீர்த்திருப்பேன். ஆனால், அம்மகவின் பொருட் டாகவே, அவரது வலிந்த

செயலுக்கு என்னையே யான் தாழ்வாக நினைந்து இணங்கலானேன. என்னைச் சூழ உள்ள மற்றைத் தாய்மார்கள் மனைவிமார்களும் அத்தகைய வன்செயல்களுக்குங் கருவழிக்கும் இழிந்த பழக்கத்திற்கும் உள்ளாவதை அவர்கள் சொல்லியபடியும் யான் அப்போது அறிந்தபடியும் எண்ணிப்பார்த்து, யானும் என் குழந்தையின் பொருட்டு உலகவாழ்க்கையிலிருக்க முடிவுசெய்தேன் என்றாலும், அப்போதுகூட யான் தாயாவதற்கு எனக்குள்ள உரிமைகளின் முறையையும், அதன்பொருட்டு எனக்கு உண்டாகற் பாலதான தொடர்பையும், நீங்கள் எவ்வளவு உறுதியாக ஆராய்ந்து பார்க்கின்றீர்களோ அவ்வளவு யானும் ஆராய்ந்து பார்த்தேன். நீங்கள் அதனை எவ்வளவு தெளிவாகக் காண்கின்றீர்களோ அவ்வளவுக்கு யானுங் கண்டேன். எனது பெண்டன்மையின் இயற்கையுணர்ச்சிக்கு உண்மையாகவும் முறையாகவும் நடக்க விரும்பிய என்னை, அப்போது சூழ இருந்த இழிந்தாரது சேர்க்கையானது நசுக்கிவிட்டது. எப்போது, எந்த நிலைமையில் யான் அவர்பாலிருந்து மகப்பெறுதலை ஏற்று, அவரது மகவுக்குத் தயாதல் கூடுமென்று எனக்குள்ள உரிமையினை வற்புறுத்தினேன். எப்போது, எத்தனைமுறை யான் தயாயாதற்கு என்னை இசைவிக்க வேண்டுமென்பதை யானன்றோ சொல்லல் வேண்டுமென அழுத்திப் பேசினேன். ஆனால், அவரோ என்மேற் சினங்கொண்டு தாம் என்னை யுடையவ ரென்றும், எல்லா வகையிலும் யான் என் கணவர்க்குக் கீழ்ப்படிந்து ஒழுகுதலே செய்தல் வேண்டு மென்றும், யான் மனையாளா யிருத்தற்குத் தகுதியில்லே னென்றும், என்னையும் என் பிள்ளைகளையுந் தாம் விட்டு நீங்குதலே செயற்பால தென்றும் அச்சுறுத்திக் கூறினார். இவைகேட்டு, எனக்கும் என் பிள்ளைகட்கும் பெருந் துன்பம் வரக்கூடு மென்றும், மேற்கே நெடுந்தொலைவில் உதவிசெய்யும் நண்பர் இன்றித் தனியேமாய் வறுமைப் பட்டிருத்தலின் என் சிறுமதலை உணவும் பெறாமல் வருந்த நேருமென்றும் அஞ்சி என் உள்ளத்திற்பட்ட உண்மைகளை வெளிவிடாமல் அடக்கி வைத்தேன்; அது முதல், எனக் குண்டான வெறுப்பையும், மனத் தத்தளிப்பையும் என் நெஞ்சினுள்ளேயே இருத்திவைத்தேன். எனக்கும் என் கணவர்க்கும் உண்டான காம உறவைப்

பற்றியமட்டில், யான் என்னை ஓர் இழிந்த மாதாகத், துன்பத்திற்கே பிறந்தவளாக ஒவ்வொரு வகையிலும் எண்ணி ஏங்கலானேன். இப்போதும் யான் அதனை நினைத்து மிகவுந் துன்புறுகின்றேன். யான் கையில் ஒருமகவை வைத்திருக்கையில், எங்கே யான் மறுபடியுங் கருக்கொள்ளும்படி வலிந்து புகுத்தப்படுகின் றேனோ என்னும் பெருந்திகிலால், என் கணவருடம்பு என்மேற் படுதலில் எந்நேரமும் பேரச்சங் கொண்டிருந்தேன். ஒரு மகவுக்கு யான் பால் கொடுக்குங்காலம் முடியும்முன், அதனை அகற்றி, வேறொரு மகவுக்குப் பாலூட்ட நேர்வது குறித்துப் பெரிதுங் கலங்கினேன். இக் கலக்கம் பொறாமல், 'ஓ இறைவனே! இந்த அருவருப்பான கட்டிலிருந்த விடுதி பெற வழி இல்லையோ!' என்று அலறினேன்.

"என் கணவரிடத்து அன்பில்லாமையினால் இத்தகைய மனநிலை கொள்ளப் பெற்றேனென்று நினைதலாகாது. அவர்பால் யான் அன்பற்ற சொற் சொல்லியதுமில்லை, அன்பற்ற நினைவு கொண்டதுமில்லை; அவர் பொருட்டு யான் மனமகிழ்ச்சியுங் கொண்டு வறுமையையும் வசதிக்குறைவு களையுந் தாங்கினேன். என்றாலும், கணவன்மார் தம் மனைவிமாரிடத்து முறைகடந்து கொடுமையாகவும் அருவருப்பாகவும் நடந்துகொள்ளுதலை யான் அன்றும் இன்றும் என்றும் என் எல்லா வுணர்வொடும் வெறுத்தே பேசுகின்றேன்; தம் மனைவிமார் இயற்கையாகவே வேண்டாதிருக்கையில், அவரது இயற்கைக்கு அது மிகவும் வெறுப்பாயிருக்கையில், அவர் கருக்கொள்ளும்படி வலுக் கட்டாயஞ் செய்வதும், அவர்க்கு நேருந் துன்பங்களையும் பொறுப்புகளையுங் கணவன்மார் தாம் ஏற்றுக்கொள்ள மனமின்றி ஏதுஞ் செய்யாமலிருப்பதும் எவ்வளவு கொடுமை!"

இவ்வாறு தன் கணவனால் தானுந் தன் மக்களும் அடைந்த துன்பங்களைக் கன்மனமும் கரைந்துருகும்படி எடுத்துரைத்த அயல்நாட்டு மாதின் நிலைமையிலேயே, இத் தமிழ்நாட்டிலுள்ள மாதரிற் பெரும்பாலருங் கிடந்து துன்புறுகின்றனரென்பதை அவரவரும் ஆங்காங்கு அறிந் திருப்பர். இத்தனை துன்பமான நிலைமையில் தம் மனைவி யரை நையவைத்துத், தாம் தமது காமநினைவு சென்றபடி

யெல்லாம் ஒழுகும் வரையில், மாதராடவர்க்கு இம்மையிலும் உண்மையின்ப மில்லை; மறுமையிலும் அஃது அவர்க்கு உளதாகாது. அதனால், அவர் இப்பிறவியிலும் இனிவரும் பிறவிகளிலும் நீண்டகாலம் உயிர் வாழாது இறப்பதோடு, அவர் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளும் நல்ல குணமும் நல்ல அறிவும் நல்ல செய்கையும் வாயாதவர்களாய்த், தமக்கும் பிறர்க்கும் பயன்படுதலின்றிச், சிறு பருவத்திலேயே மாண்டு போவர். ஆகையால், தம்மைப்போல் தம் மனைவி யருங் கடவுளாற் படைக்கப்பட்டு இம்மை மறுமை நலங் களைப் பெறுதற்குரிய உயர்ந்த உயிர்களாவர் என்பதை ஆடவர் ஒவ் வொருவரும் நினைவிற் பதித்து, அவரது மனப்பான்மை யறிந்து, அவர்க்கு இன்பம் பெருக அவரை மருவி வாழ்தலே செயற்பால தென்க.

**அடிக்குறிப்புகள்**

1. Read the 2nd Chapter in “The Science of a New LifeP by Dr. John Cowan, M.D.
2. Ibid, 97
3. Ibid, p. i
4. Ibid, p .75; see also Dr. Syulvanus Stall’s ‘What a Young Husband ought to know’, p. 132.
5. ‘Married Love’ by Dr. Marie C. Stopes, D.Sc., D. Phil., pp. 37, 38.
6. Ibid, p 45.
7. Ibid pp. 109-113.
8. Ibid p. 66.
9. Quoted in Dr. Sylvanus Stall’s ‘What a Young Husband ought to know’, pp. 164-170.

# 3. மக்கட் பேறு

**இ**னித், தம்முள் ஒத்த அன்பும் இன்பமும் வாய்ந்த கணவனும் மனைவியும், நல்லறிவு நல்லுடம்புடைய மக்களைப் பெறுதலிற் கண்ணுங் கருத்தும் உள்ளவர் களாயிருத்தல் வேண்டுமாகலின், அவர் மக்களைப் பெறும் முறைகளை நன்கு தெரிந்து அவற்றின் படி வழுவா தொழுகல் இன்றியமை யாததாகும். ஆகவே, அம் முறைகளை யாம் பெரிது ஆராய்ந்து கண்டவாறே இங்கெடுத்து விளக்கிக் காட்டுவாம்:

கருவினைத் தோற்றுவித்தற்குரிய வித்து ஆண்மகனிடத் திலேதான் அமைக்கப்பட்டிருக்கின்றது; ஆனால், அவ்வித்துத் தானாகவே கருவினைத் தோற்றுவித்து விட மாட்டாது. மரஞ் செடி கொடிகளின் விதை நிலத்தின் கண் ஊன்றப் பெற்றாலன்றி முளையினைத் தோற்றுவிக்க மாட்டாதவாறு போல, ஆண் மகனிடத்துள்ள வித்தும் பெண் மகளின் கருப்பை யிலூன்றப் பெற்றாலன்றி மகப் பேறுண்டாதல் இல்லை. இத் தன்மைத் தாகிய கருவித்து ஆண் குறியைச் சார்ந்த இரு விதைகளி னுள்ளே உண்டாகின்றது! விதைகளினுள்ளே அங்ஙனந் தொகுப்பபட்டிருக்கும் வெண்ணிறத்ததாகிய வித்துநீர் புணர்ச்சிக் காலத்தே ஆண்குறிக் குழாய் வழியே வெளிப்படத் துவங்கிப், புணர்ச்சி முடிவிற் பெண்குறிக் குழயினுட் செல்கின்றது. **வித்து** என்னுந் தமிழ்ச் சொல்லே **விந்து** என மெலிந்து வடமொழியிற் **பிந்து** என வழங்கப்படுகின்றது. இவ்விந்து நீரில் எண்ணிக்கைக்கு அடங்காத எத்தனையோ புழுக்கள் இருக்கின்றன. ஒரு முறையில் ஓராண்மகனிடத்திருந்து வெளிப்படும் விந்து நீரிலுள்ள புழுக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெண்ணின் கருப்பையில் நுழைந்தால், அவை இவ்வுலகத்துள்ள அத்தனை பெண் மக்களையுங் கருக் கொள்ளச் செய்தற்குப் போதும் என்று மருத்து

நூலாசிரியர்கள் நுவல்கின்றனர். ஆனால், இத்தனை கோடி புழுக்களுள்ளும் ஓரோவொன்றே மாதர் கருப்பையிற் புகுந்து, அங்குள்ள முட்டையிற் கூடி ஒன்றாகிக், கருவினைத் தோற்றுவிக்கின்றது; அளவிலடங்கா ஏனைப் புழுக்க ளெல்லாமுமோ மாண்டு மாதரின் பெண்ணுறுப்பினின்று புறங்கழிக்கப்படுகின்றன.

இனித், தந்தையின் வித்துநீரினின்று அவ்வாறு தாயின் குறியினுள் நுழையும் புழு எக்காலத்துங் கருவாகி விட மாட்டாது; தாயின் கருப்பையில் வரும் முட்டையுடன் கூடி ஒன்றானால் மட்டுமே அது கருவாவதற்குரிய தகுதி யுடைத்தாம். மற்றுத் தாயின் கருப்பைக்குள் அம் முட்டை எக்காலும் வருவதுமன்று; அவர்க்குத் தீட்டுண்டான நாள் முதற் கொண்டு பதினைந்து நாட்கள் வரையிலுமே, அது கருப்பைக்குள் வருவதாகும். அந் நாட்களிற் புணர்ச்சி நிகழுமாயின் தந்தையின் விந்து நீரிலிருந்து நெளியும் எண்ணிறந்த புழுக்களும் மிக்க சுறுசுறுப்புடையனவாய், பெண் குறியினுள்ளே மேல்நிலைக்கண் முகைவடிவா யிருக்குங் கருப்பையை நாடிச் சென்று, அதன் சிறு புழைவழியே அதனுட் புகுந்து அதனுள் அப்போது வந்திருக்கும் முட்டையைப் பற்றிக் கொள்ள முயல்கின்றன. அம் முயற்சியினால் அப்புழுக்களுட் பெரும் போராட்டம் உண்டாக, அதில் வெற்றி பெற்ற ஒரு புழுவே அங்குள்ள தாயின் முட்டையைப் பற்றிக் கொண்டு அதனோடு இரண்டறக் கலந்து, கருவாகி வளரத் துவங்குகின்றது. இங்ஙனம் வித்துநீரிற் காணப்படும் புழுவானது, ஒரு மிகச் சிறிய பாம்பின் வடியுடையதாயிருக்கின்றது.

இனித் தாயின் வயிற்றகத்தே முட்டைக் கருவறை (Ovaries) யிலிருந்து, கருப்பையின் இருபுறத்தும் அமைந்த குழாய் (Fallopian tubes) வழியே தீட்டுடன் கலந்துவரும் முட்டையானது மேலே தெளிவான மூடுதோல் உடையதாய், இத்தோலினுள்ளே பலவேறு அளவான சிறுசிறு மணி வடிவு வாய்ந்த மஞ்சட்கருவும் அக்கருவினை அகத்தடக்கிய பிசுபிசுப்பான நீரும் பொருந்தியதாய் இருக்கும். இது, நான்கு கிழமைகள் அல்லது இருபத்தெட்டு நாட்கட் கொரு நாள் வெளிப்படுந் தீட்டுடன் கலந்து கருப்பைக்குட் போந்து

தங்குகின்றது. அக்காலத்திற் புணர்ச்சி நிகழுமாயின், விந்துநீரிலுள்ள வித்துப் புழு அம் முட்டையிற் புகுந்து இரண்டும் ஒன்றாக, அவ்வாறு கருக்கொண்ட அம் முட்டையானது கருப்பையின் அகத்தே அதன் தோலில் ஒட்டிக் கொண்டு கருவாக வளரத் துவங்கும். இவ்வாறு தீட்டுடன் கலந்துவரும் முட்டையானது தாயின் கருப்பையுட் பதினைந்து நாட்கள் வரையில் தங்கியிருந்து, அக்காலத்திற் றன்னுடன் வந்து சேர்ந்து ஒன்றாதற்குரிய வித்துநீர்ப்புழு வராவிட்டால், அங்கிருக்க இடம் பெறாமற், கருப்பை யினின்றும் புறங்கழிக்கப்படுகின்றது. ஆகவே, மக்கட் பேற்றை விரும்பும் மாதராடவர், மாதர்க்குத் தீட்டுவந்த **நான்காம் நாளிலிருந்து பன்னிரண்டு நாட்கள் வரையிற் புணர்தல் இன்றியமையாத தென்று உணர்தல் வேண்டும்;** மற்று, மக்கட்பேற்றை அவாவாதவர்கள் தீட்டுவந்த பதினாறு நாட்கள் வரையிற் புணராதிருந்து, அதன்பின் புணர்வராயின் மகப்போறு உண்டாகாதென்றும் அறிந்து கொள்வார்களாக. தீட்டுவந்த நான்காம் நாளிலிருந்து எட்டாம் நாள் வரையில் தாயின் கருப்பையுள் தங்கும் முட்டையானது மிக்க வலிவுஞ் சுறுசுறுப்பும் உடையதாயிருக்குமாகலின், அந்நாட்களில் உண்டாகும் கருவானது உடல்நல மனநலன்கள் மிகுதியும் உடையதாகுமென்று இவ்வுண்மையை நன்காராய்ந்து கண்ட மருத்து நூலாசிரியர் ஒருவர் நுவல்கின்றனர்[1]. ஆகவே அந்நாட்களிற் கூடி நன்மகப் பேற்றை யடைதலே எவர்க்கும் நன்றாம்.

அற்றேற், பூப்புநிகழ்ந்த அன்றுதொட்டே மாதரின் கருப்பைக்குட் கருமுட்டை வந்து தங்குமென்றமையிற், பூப்பு முதல் மூன்று நாளும் புணர்தலால் வரும் இழுக்கு என்னை யெனின்; ஆசிரியர் நக்கீரனார்,

"பூப்புப் புறப்பட்ட ஞான்று நின்றகரு வயிற்றில்
அழியும்,
இரண்டாம்நாள் நின்றகரு வயிற்றிலே சாம்,
மூன்றாம் நாள்
நின்றகரு குறுவாழ்க்கைத்தாம், வாழினுந்
திருவின்றாம்;
அதனாற் கூடப்படா தென்பது"

*என்று **இறையனாரகப் பொருள், 43 ஆஞ் சூத்திர** வுரையிற் கூறி,*

"பூப்புமுதன் மூநாட் புணரார் புணரின்
யாப்புறு மரபின் ஐயரும் அமரரும்
யாத்த கரணம் அழியும் என்ப"

*என்னும் பண்டையாசிரியர் அருளிய சூத்திரத்தையும் எடுத்துக் காட்டுதலானும், இங்ஙனமே பண்டைத் தெய்வ ஆசிரியரான **தொல்காப்பியனாருங்** கூறுதலானும், பூத வேதமாகிய **விவிலிய நூலும்*** (Leviticus 5th chapter) *பூப்பு நிகழ்ந்த நாட்களிற் புணர்தல் கூடாதென மொழிதலானும் அந்நாட்களிற் புணர்வராயின் மனைவியுங் கணவனும் நச்சுக் காய்ச்சல் முதலான கொடுநோயாற் பற்றப்பட்டு உயிரிழப்ப ராகலானும் அம்மூன்று நாட்களும் புணர்ச்சிக்கு ஆகாவென விலக்கப் பட்டன வென்க.*

*இனிப், பெண்மகப் பெறுந் தாயை இகழ்தலும், ஆண் மகப் பெறுவாளைப் புகழ்தலும் நம்மனோர்க்குள் வழக்க மாயிருக்கின்றன. உண்மையான் ஆராய்ந்து காணுங்கால், தாம் வேண்டிய மகவைப் பெற்றுக் கொள்ளும் ஆற்றல் ஆண்மக்கள்பாலமைந்து கிடக்கின்றதே யல்லாமற், பெண் மக்கள்பால் அன்று. இதனை ஆராய்ந்து காணமாட்டாத மடவோரே பெண்பாலாரைக் குறை கூறுவர். தாம் விரும்பிய மகவைப் பெறும் ஆற்றல் ஆண்மக்களிடத்தே அமைந்து கிடக்கவும், அதனைப் பயன்படுத்தும் முறை தெரியாமற், கண்ட கண்ட நேரமெல்லாந் தம் மனைவியரை மருவித், தற்செயலாய் ஆணையோ பெண்ணையோ உண்டாக்கிவிடுங் குற்றம் ஆண்மக்கள் பாலதாயிருக்கின்றது. ஆண் பிள்ளை உண்டாதற் குரிய காலத்தையும் முறையையுந் தெரிந்து தம் மனைவியரைக் கூடும் ஆடவர் தப்பாமல் ஆண்பிள்ளையே பெறுவர்; பெண்பிள்ளை உண்டாதற்குரிய காலத்தையும் முறையையுந் தெரிந்து மருவும் ஆடவர் பெண்பிள்ளையே தவறாமற் பெறுவர். இஃதிவ்வாறிருக்க, இது தெரியாமற் புணரும் ஆடவர் குற்றமோ மகளிர் குற்றமோ தங் கருத்துக்கு மாறான மக்களைப்பெறுதலென்பதை அன்பர்கள் உற்று நோக்குதல் வேண்டும்.*

இனி, அவ்வாற்றல் ஆடவர்பாலதேயாயின், அவர் அதனை அறிந்து பயன்படுத்துமாறு யாங்ஙனமெனிற் கூறுதும், மாதர்க்குப் பூப்புநிகழும் நாளையும் நேரத்தையும் மிகவுங் கருத்தாகக் குறித்து வைத்துக் கொள்ளல் வேண்டும். அதன்பிறகு, பூப்புநிகழ்ந்த நேரத்திலிருந்து இருபத்து நான்குமணி நேரங் கழிந்த பொழுதை ஒரு நாளாகக் கணக்குச் செய்தல் வேண்டும்; இவ்வாறு மூன்றுநாள் முற்றக் கழிந்த பின்னர், நான்காம்நாள் ஆறாம்நாள் எட்டாம்நாள், பத்தாம் நாள் பன்னிரண்டாம்நாள் தம் மகளிரை மருவுங் கணவர் திண்ணமாக ஆண்மகவே பெறுவர்; ஐந்தாம் நாள் ஏழாம்நாள் ஒன்பதாம்நாள் பதினோராம்நாள் மருவுவோர் திண்ணமாகப் பெண்மகவே பெறுவர். பூப்பு நிகழ்ந்தபின் இவ்வாறு கணக்குச் செய்ய வேண்டிய திருத்தமான முறை தெரியாமல், நம்நாட்டு மாதராடவர் அதனைப் பிழைபடக் கணக்குச் செய்கின்றனர். யாங்ஙனமெனில்; திங்கட்கிழமை இரவு பத்துமணிக்கு ஒரு மாது பூப்பு நிகழப்பெற்றால், அடுத்தநாள் செவ்வாய்க் கிழமையை இரண்டாவது நாளாகக் கணக்குச் செய்கின்றனர்; உண்மை யால் நோக்கு மிடத்து அஃது ஒருநாளிற் பாதியேயாகின்றது. திங்கட் கிழமை யிரவு பத்துமணிக்குப் பூப்பு நிகழப் பெற்றாளுக்குச் செவ்வாய்க்கிழமை இரவு பத்து மணி யானாற்றான் ஒரு நாளாகின்றது. இந்தக் கணக்கை ஆராய்ந்து பாராமையால், இந்த முறை தெரிந்தவர்களுங் கூடப் பிழைபடத் தம் மனைவி யரை மருவித், தாம் எண்ணியதற்கு மாறான மக்களைப் பெறுகின்றார்கள்! ஆகவே, திங்கட்கிழமை யிரவு பத்து மணிக்குப் பூப்பு நிகழப் பெற்றாளுக்குச், செவ்வாய்க் கிழமை யிரவு பத்துமணி கழிந்ததே ஒருநாளென்றும், புதன்கிழமை யிரவு பத்துமணி கழிந்ததே இரண்டாம் நாளென்றும், வியாழக்கிழமை யிரவு பத்துமணி கழிந்ததே மூன்றாம் நாளென்றும், உணர்ந்து, அவளை வெள்ளிக்கிழமை யிரவு பத்துமணிக்குள் மருவுதலே நான்காம்நாட் புணர்ச்சி யென்றும், ஞாயிற்றுக்கிழமை யிரவு பத்து மணிக்குள் மருவுதலே ஆறாம்நாட் புணர்ச்சியென்றும் இவ்வாறே நெடுகக் கணக்குச் செய்து கொள்க.. இங்ஙனந் திருத்தமாகக் கணக்கு செய்தபடி தம் மங்கையரை நான்கு ஆறு எட்டுப் பத்துப் பன்னிரண்டாம் நாட்களிற் கூடுவார்க்கு ஆண்மகப் பேறு உண்டாதல் திண்ணமே யாம். இனித், திங்கட்

கிழமை யிரவு பத்து மணிக்குப் பூத்தாளுக்குச், சனிக்கிழமை யிரவு பத்துமணி வரையில் ஐந்தாம்நாளும், மறு திங்கட்கிழமை யிரவு பத்துமணி வரையில் ஏழாம் நாளும், மறு புதன்கிழமை யிரவு பத்துமணி வரையில் ஒன்பதாம் நாளும் ஆகுமென்று, இங்ஙனமே நெடுகக் கணக்குச்செய்து, அவ்வொற்றைப்பட்ட நாட்களில் தம் மனைவியரை மருவுவார்க்குப் பெண் மகவே யுண்டா மென்றுந் தெளிந்து கொள்க.

இனி, இம் முறையன்றி இன்னும் ஒன்றுண்டு, ஆண் மகனது வலப்பால் விதையில் ஆண்கருவை உண்டாக்கும் வித்துநீரும் இடப்பால் விதையிற் பெண்கருவை யுண்டாக்கும் வித்துநீரும் அமைந்துள வென்று ஆங்கில அமெரிக்க மருந்து நூலாசிரியர் ஆராய்ந்து கண்டிருக்கின்றனர். ஆதலாற், புணர்ச்சிக்கு ஒன்றிரண்டு நாட்கள் முன்னரே வலப்பால் விதையை மேல் உயர்த்திக் கட்டி வைத்திருந்து புணர்வார்க்கு ஆண்மகவும், அங்ஙனமின்றி இடப்பால் விதையை மேல் உயர்த்தி வைத்திருந்து புணர்வார்க்குப் பெண்மகவும் உண்டாமென்று உணர்ந்து கொள்க; இதனை அமெரிக்க ஆசிரியர்கள் விலங்கினங்கள் மாட்டு வைத்து நன்காராய்ந்து முடிவுகட்டி யிருத்தலை அவரெழுதிய நூல்களிற் காண்க.[2]

அற்றேல், முன்சொன்ன முறையும் பின்சொன்ன முறையும் ஒன்றோடொன்று மாறுபடாதோவெனின்; மாறுபடாது, பெண்மக்கட்கு நான்கு ஆறு எட்டுப் பத்துப் பன்னிரண்டாம் நாட்களில் வெளியாகுங் கருநீர் பெண் டன்மை குறைந்து, ஆண்டன்மையினை ஏற்றற்கு உரியதாயும், ஐந்து ஏழு ஒன்பது பதினோராம் நாட்களில் வெளியாகுங் கருநீர் பெண்டன்மை மிகுந்து பெண்கருவினை ஏற்றற் குரியதாயும் இருக்கும் இருவிதைகளுள் ஒன்றை மேலுயர்த்து வைத்துக் கட்டிப் புணருங் காலத்தன்றி, மற்றைக் காலங்களில் ஆண்மக்களுக்கு இருவிதைகளிலுள்ள விந்துநீரும் ஒருங்கே வெளிப்படுந் தன்மையதாகும்; அங்ஙனம் இருவிதை களினின்றும் வெளிவரும் விந்துநீரில் ஆண்கரு பெண்கரு இரண்டும் இருத்தலின், இரட்டைப்பட்ட நாட்களில் புணரும் புணர்ச்சிக்கண் மாதர்க்குக் கருப்பையினின்று வரும் கருநீர் ஆண்மகனின் ஆண்கருவை மட்டும் ஏற்குந் தன்மைத்தாய் ஆண்மகவை யுண்டாக்குமென்றும், ஒற்றைப்பட்ட நாட்களில்

அவர்க்குவருங் கருநீர் ஆண்மகனின் பெண் கருவை மட்டும் ஏற்குந் தன்மைத்தாய்ப் பெண்கருவை யுண்டாக்குமென்றும் உணர்ந்து கொள்க.

அற்றேல், வலப்பால் விதையை உயர்த்து வைத்திருப் பவன் ஒற்றைப்பட்ட நாளில் தன் மனையாளைக் கூடின் ஆண்மகவு உண்டாதல் என்னையெனின், இரண்டு விதையின் நீரும் ஒத்துப் பாயுங்கால், இரண்டிலொன்றை ஏற்கும் ஆற்றல் மனையாளின் கருநீர்க்கு உளதென்றும், அங்ஙனமின்றி வலப்பால் விதையை மேலுயர்த்தி வைத்துப் புணர் வானுக்கோ அவன்றன் அவ்விதையினுள்ளிருக்கும் ஆண் கருநீர் மிக்க வலிமையுடையதாய்ப் பாயுமாகலின், அஃது அவன்றன் மனையாளின் கருப்பையிலிருந்து வெளியாகுங் கருநீரின் வலிவையடக்கி அதன்கட் டன் ஆண்டன்மை யினையே பதிக்கு மென்றும் உணர்ந்து கொள்க. இவ்வுண்மை யுணர்த்து தற்கன்றோ **தெய்வத் திருமூலர்**,

"ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகிற் பெண்ணாகும்
பூணிரண் டொத்துப் பொருந்தில் அலியாகும்,
தாண்மிகு மாகிற் றரணி முழுதாளு
மாண்வச மிக்கிடிற் பாய்ந்தது மில்லையே"

என்று அருளிச் செய்தார். எனவே, தான் விரும்பிய மகவைப் பெறுதற்குரிய ஆற்றல் தன்பாலிருந்துந், தன்னைத் தன் விருப்பத்திற் கேற்பச் சீர்திருத்திக் கொள்ளாமல், தன் மனையாளைக் கொண்டு ஆண்மகவையோ பெண் மகவையோ பெற விழையுஞ் சோம்பேறி, தன் விழைவுக்கு இசைய அவளை இரட்டைப்பட்ட நாளிலாயினும் மேற்காட்டிய கணக்குப் பிசகாமற் கருத்தாயிருந்து மருவுதல் வேண்டும்; இதுதானுஞ் செய்யாமற் சோம்புவனாயின், அவன் தன் கருத்துக்குந் தன் மனையாள் கருத்துக்கும் மாறான மக்களைப் பெற்றுத், தானுந் துன்புற்றுத் தன் மக்களையுந் துன்புறச் செய்து, வாழ்நாள் முதிரா முன்னரே மடிவனென்க.

இன்னும், மேற்காட்டிய **தெயவத்திருமூலர்** திருப்பாட்டிற் போந்த **"தாள்மிகு மாகில் தரணி முழுது ஆளும்"** என்னும் அடியின்கண் வைத்து அறிவுறுத்தப்பட்ட நுண் பொருள், இவ்வுலக முழுதையும் விலையாகக் கொடுத்தாலும் எளிதிற்

கிடைப்பதன்று. அஃதென்னை யெனிற், சிறிது விளக்குதும்; தாம் பெறும் மக்கள் அறிவு ஆற்றல் முயற்சி களிற் மிக்காராய்த் தமக்கும் பிறர்க்கும் பயன்பட்டுச் சிறத் தற்கும், அவற்றிற் குறைந்தாராய்த் தமக்கும் பிறர்க்கும் பயன் படாராய்க் கழிதற்கும் முதலில் அவர் தந்தையாயினானும், பின்னர் அவர்தம் அன்னை யாயினாளுங் காரணராய் நிற்றல் கருத்திற் பதிக்கற்பாற்று. முதலில் தந்தை யாயினான் தாயின் கருப்பையுட் கருவை யூன்றுங் காலையில், தன் எண்ணத்தை எவ்வளவு உயர்ந்ததாக்கி, எவ்வளவு வலிவுள்ளதாக்கி, எவ்வளவு பயன்படுவதாக்கி வைத்துள்ளானோ, அவ்வள வுக்கு அவன் பெறும் மகவும், பின்னர்த் தாயின் உயர்ந்த எண்ணத்தாலும் உயர்ந்த அறிவாற்றலாலும் உயர்ந்த அறிவு முயற்சியாலும் பின்னும் வலிவுடையதாகி வளர்ந்து இவ்வுலகை யெல்லாந் தன் அறிவாற்றல் ஆணை வழிப்படுத்து ஆட்சி செய்வதாகும்" இவ்வுண்மையினையே **"தாள்மிகு மாகில் தரணி முழுதாளும்"** என்னும் மேலைத் திருமொழி அறிவுறுத்தவ தாயிற்று; **'தாள்'** என்பது உயர்ந்த அறிவு முயற்சி; **'தரணி'** என்பது இந்நிலவுலகு.

இனி, இவ்வாறு தன் எண்ணத்தைத் தன்வயமாக்கி மனையாளை மருவாமற், பலவாறு சிதர்ந்தோடுந் தன் எண்ணத்தின் வழித் தான் சென்று, தன் அறிவாற்றல் முயற்சி களை வலுப்படுத்தாதவனுக்கு, அவன்றன் விந்துநீர் தாயின் கருப்பையிற் பாய்ந்தும், பயன்றருவதின்மையிற் பாயாத தாகவே கருதற்பாற்றென்பார் **"ஆண்வசம் மிக்கிடிற் பாய்ந்ததும் இல்லையே"** என்று பின்னும் வலியுறுத்து ஓதினார்.

ஆகவே, மனையாளை இரட்டைப்பட்ட ஒற்றைப் பட்ட நாட்களிற் புணர்ந்து தான் வேண்டிய மகவைப் பெறுதலை விடத், தன் எண்ணத்தையும் நினைவையும் ஒருமுகப்படுத்தி வலிவாக்கி, வலப்பால் விதையையோ இடப்பால் விதை யையோ உயர்த்திக் கட்டித், தன் மங்கையைக் காதலித்து மருவித் தான் வேண்டியபடி உயர்ந்த மக்களைப் பெறுதலே எவர்க்கும் நன்றாமென்று உணர்ந்து கொள்க.

இனி, வலப்பால் இடப்பால் விதையை ஒழுங்கு படுத்திக் கொண்டு புணரும் இப் பருப்பொருள் முறையைக் காட்டினும்,

உயிர்வளியாகிய **'பிராணவாயு'**வின் இயக் கத்தை ஒழுங்கு படுத்தி அந் நுண்பொருள் முறையால் தான் வேண்டிய சிறந்த மக்களைப் பெறுதலே சாலச் சிறந்த முறையாமென்று கடைப்பிடிக்க.

நமது உயிர்க்காற்றாகிய மூச்சானது நம் மூக்கின் இருபுறத்துள்ள புழைகளில் மாறிமாறி ஓடும் இயல்பிற்றென் பதை முன்னரே விளக்கிப் போந்தாம். இம் **மூச்சானது வலது புழையில் ஓடுங்கால் அது பகலவன் நாடியிற் செல்கின்ற தெனவும், இடது புழையில் ஓடுங்கால் அது திங்கள் நாடியிற் செல்கின்றதெனவும் யோகநூல்கள் கூறாநிற்கும். பகலவன் நாடியில் ஓடும் மூச்சு வெப்பமும் ஆண்மையும் மிகுந் திருக்குமென்றும், திங்கள் நாடியில் ஓடும் மூச்சுக் குளிர்ச் சியும் பெண்மையும் அமைந்திருக்குமென்றும் உணர்தல் வேண்டும்.** பகலவன் நாடியில் அஃதாவது மூக்கின் வலது புழையில் மூச்சு ஓடுங்கால் தம் மனைவியைப் புணர்வார்க்குத் தப்பாமல் ஆண்கருவே யுண்டாம்; திங்கள் நாடியில் அஃதாவது மூக்கின் இடது புழையில் மூச்சு ஓடுங்கால் தம் மங்கையை மருவு வார்க்குத் தவறாமற் பெண்கருவே உண்டாம்; மூக்கின் இரண்டு புழைகளிலும் மூச்சு ஒத்து ஓடுங்காற் புணர்வார்க்கு ஆணும் பெண்ணுமல்லாத அலிப்பிறவியே உண்டா மென்று கடைப் பிடிக்க. இவ் வரும்பேருண்மை ஆசிரியர் **தெய்வத்திருமூலர்**,

"குழவியும் ஆணாம் வலத்தது ஆகிற்
குழவியும் பெண்ணாம் இடத்தது ஆகிற்
குழவி இரண்டாம் அபானன் எதிர்க்கிற்
குழவி அலியாகுங் கொண்டகால் ஒக்கிலே"

என்று அருளிச்செய்தவாற்றால் நன்கறிந்து கொள்ளப்படும். இத் தெய்வ ஆசிரியர் கூறிய இவ்வுண்மை வெறுஞ் சொல்லள விற்றன்று என்பது இந் நூலாசிரியனே இதனைச் செய்கையில் வைத்து ஆராய்ந்து தெளிந்ததொன்றாகும்; கோடி கோடி யான பொன்னையும் பிறவற்றையுங் கொடுத்தாலும், பழைய ஆசிரியர்கள் இம் மறைபொருளைப் பிறர்க்கு எளிதில் அறிவிக்கமாட்டார்கள். நம் தமிழ்நாட்டவர் தங்கருத்துக்கு மாறான மக்களைப் பெற்றுத், தம் மனைவியரைக் குற்றஞ்

சொல்லி வருத்துதலைக் கண்டு இரங்கி, அவர்க்கு மெய்யறிவும் அதனால் மெய்ப்பயனும் விளைதல் வேண்டியே, இவ்வரும்பெரு மறைபொருளை இத்தனை திறப்பாக எழுதி வெளிவிடுகின்றாம் என்று இதனைப் பயில்வார் உணர்ந்து, இம் மறைபொருளைப் பாதுகாத்து பயன்படுத்தி வாழ்வாராக! தகுதியில்லாதவர்க்கு இம்மறை பொருளை வீணே வெளிப்படுத்தா திருத்தலே இதனைப் பயில்வார்க்குரிய நன்பெருங் கடமையாகும்.

அற்றேலஃதாக, மூக்கின் புழைகளில் மூச்சு மாறி மாறி ஓடுங் காலங்களை உற்றுணர்ந்து, தங் கருத்துக்கு இசைந்த மகப்பெறுங்காலம் அணுகும் வரையிற் காத்திருந்து மகளிரை மருவுதல் எல்லார்க்கும் இசையாதா லெனின்; உண்மை ஞானாசிரியனை யடுத்துத் தெரிந்து பிராணாயாமம் (மூச்ச டக்கல்) நன்கு செய்யப் பழகி கொண்டார்க்குத், தாம் நினைந்தபோதெல்லாந் தமது மூச்சை வலது புழையிலோ இடது புழையிலோ திருப்பிக் கொள்ளுதல் எளிதிற் கூடும். அவரல்லாத மற்றையோர் சிறிதுநேரம் இடது கைப் புறமாகஒருக்கணித்துப் படுத்திருப்பார்களாயின், தமது மூச்சு அந்நேரஞ்சென்றபின் வலதுபுழையில் ஓடக் காண்பார்கள்; இனி அங்ஙனமே சிறிதுநேரம் வலதுகைப்புறமாகப் படுத்திருப்பார்களாயின், தமது மூச்சு அந்நேரங் கழிந்தபின் இடது புழையில் ஓடக் காண்பார்கள்.

இவ்வாறு, தாம் பெறவிரும்பும் மகவினைத் தோற்று வித்தற்கு இசைந்தபடியாகத், தமது மூச்சு ஓட்டம் ஒழுங்கு படும் வரையில், அமைதியாக அன்பு பெருக இன்சொல் மொழிந்து மனைவியைத் தழுவித்தழுவிக், காதலின் இருவருயிரும் உடம்பும் உருகி ஒன்றாகப், புறத்தொழில் முற்றி, அதன்பின் மூச்சு ஓட்டம் ஒழுங்குபட்டமை கண்டு மருவுதல் வேண்டும். இருவர் நினைவுந் தூயதாக இருத்தல் இன்றியமையாதது. இன்பவிருவினரான கடவுளையும், **உலகத்திற்கு அரும்பெரு நன்மைகளைச் செய்த சான் றோர்கள், சமயாசிரியர்கள், நல்லிசைப் புலவர்கள், வள்ளல்கள், அரசர்கள், ஆண்மையிற் சிறந்தவர்கள் முதலாயி னாரையும், அவர் செய்த செயற்கருஞ் செயல்களையும் நினைவில் வைத்து, இருவரும் அளவளாவி மகிழ்ந்து பேசுதல் வேண்டும். இவ்வளவு** சிறந்த நிலையில்

மருவுங் காதலர் உயிரும் உடம்புந் தூயவாக, இவ்விரண்டன் பிழிவாய் அவ்விருவருள்ளிருந்தும் பெருகுங் கருநீர் எல்லா நலங்களும் பொருந்தப் பெற்றதாய் இருக்குமாதலின், அவ்விரு கருநீர்ச் சேர்க்கையினுண்டாம் மகவு, அவர் தாம் விரும்பிய நலங்கள் முற்றும் வாய்ந்ததாயிருக்குமென்பதனை யாம் விண்டு விளம்புதலும் வேண்டுமோ என்க.

இனித், தூய ஓர் உயிரை உலகத்திற்குக் கொண்டு வரும் இத் தூய முறையினையுந், தமது தூய பெருங் கடமையினையும் ஒரு சிறிதுங் கருதிப்பாராது, விலங்கினங்களுஞ் செய்யாத மிக அருவருப்பான வகையில் ஆடவர் தம் மாதரைப் புணர்ந்து, தமது கருத்துககு மாறான, உலகத்திற்குப் பயன் படாத, தமக்கும் பிறர்க்குந் தீங்கிழைக்குந் தீய புதல்வர்களைப் பெற்று, இப் பிறவியைப் பாழாக்குதல் எத்துணைக் கொடிது! தம் மனைவி நோய் கொண்டிருக் கையில் அவரை மருவுங் கணவர் எத்தனை பேர்! தம் மனைவியோடு கலாய்த்து அவர் மனம் நைந்திருக்கையில் அவரைப் பின்னும் வலிந்து வருத்திப் புணர்வார் எத்தனைபேர்! இனித் தமதுடம்பு நோய் கொண்டிருக் கையிலோ, தமதுள்ளங் கவலையிலுந் துன்பத்திலும் மூழ்கிக் கிடக்கையிலோ, அல்லது தமதுடம்பும் உயிருஞ் சுறுசுறுப் பின்றி அயர்வுகொண்டிருக்கையிலோ வெறுங் காம வெழுச்சிகொண்டு, சிறிதுங் களிப்பின்றி மாதராடவர் மருவாராயின், அந்நிலையில் அவர்தங் கருநீர் நஞ்சாகி நீர்த்துக் கழியுமாதலால், நீண்ட புணர்ச்சியின்பம் அவர்க்கு வாயாமையோடு, அவர்க்கு மகப்பேறுண்டாதலும் அரிதாம்; அன்றி, மகப்பெறுதல் ஒரோவழிக் கூடுமாயினும் **அம்மகவு மெலிந்து நோய்கொண்டு விரைவிற் சாம்; அல்லது கருவிலேயே சிதையும்; இவற்றிற்குத் தப்பிப் பிழைக்கு மாயினும், அது மனநல உடல்நலம் வாயாமையின் நீண்ட காலம் உயிர்வாழாமையே யன்றித் தான் உயிரோடு இருக்குங்காறுந் தனக்குந் தன் பெற்றார்க்கும் பிறர்க்குங் கொடுந்துயரையே தந்தொழியும்**. ஆதலால், தான் வேண்டியபடி யெல்லாங் காமவயத்தனாய் நடந்து, வழிவழித் தீமையைப் பெருக்காது, தன் மனையாளுந் தன்போற் சிறந்த ஓர் உயிரென்றுந், தானும் அவளுங் கூடி இன்புற்று நன் மக்களைப் பெற்று வாழதற்கேற்ற காலங்களும் முறைகளும் உளவென்றும் நன்குணர்ந்து பார்த்து, யாம் மேலேகாட்டிய நன்முறைகளைக்

கடைப்பிடித்தொழுகித், தானுந் தன் மனையாளுந் தன் புதல்வர்களுந் தூய இன்ப வாழ்க்கைக் குரியராய் நடத்தலி லேயே ஒவ்வோர் ஆண் மகனுங் கருந்தூன்றக் கடவனாக!

இதுவேயுமன்றிக், கணவனாயினான் தன் மனைவியை மருவுங்கால், அவள் வயிற்றகத்துள்ள மலக்குடல் சிறுநீர்ப் பைகள் துப்புரவாயிருக்குங் காலங்களை நன்காராய்ந்து கண்டு பின் மருவுதல் வேண்டும். ஏனென்றால், அவள் மலக்குடலில் மலம் மிகுந்து அது புடைத்திருக்கும்போது, புணர்ந்து கழித்த விந்துநீர் கருப்பைக்குள் நெருக்குண்டு வலி குறைந்து நிற்கும்; அந்நிலையில் உண்டான மகவு **அறிவு கூர்மையின்றி மக்குப் பிள்ளையாயிருக்கும்.** அங்ஙனமே அவளது சிறுநீர்ப்பை புளிப்பு நஞ்சுள்ள சிறுநீரால் நிறைந்திருக்கும்போது புணர்ந்து கழித்த விந்து நீருங் கருப்பைக்குள் நெருக்குண்டு கிடக்கு மாகலின், அந் நிலையில் உண்டான மகவு **ஊமைப் பிள்ளை யாயிருக்கும்.** மல நீர் அடைப்பு இரண்டு மிருக்கையிற் புணர்ந்து கழித்த விந்துநீர் கருப்பையிற் பெரிது நெருக்குணு மாகலின், அப்போது உண்டான **மகவு இரண்டுகண்ணும் இழந்து குருட்டுப் பிள்ளையா யிருக்கும்.** இவ்வரும் பேருண்மை ஆசிரியர் **தெய்வத்திருமூலரால்,**

> “மாதா உதரம் மலம்மிகின் மந்தனாம்,
> மாதா உதரஞ் சலம்மிகின் மூங்கையாம்
> மாதா உதரம் இரண்டொக்கிற் கண்இல்லை,
> மாதா உதரத்தில் வந்த குழவிக்கே”

என்னுந் திருப்பாட்டால் அறிவுறுத்தப்பட்டமை காண்க.

இனி, அன்னையின் அகட்டில் மலநீர் மிகுந்திருக்கங் காற் பாய்ந்த விந்துநீர் அவ்வாறு குறைபாடுடைய மக்களைப் பிறப்பிக்குமென்று ஆசிரியர் கூறியதுகொண்டு, தந்தை யாயினான் வயிற்றகத்து மலநீர் அடைப்புகள் இருக்குங் காலத்தும் அவன் புணர்ச்சிக்கட் கழித்த கருநீர் ஆற்றல் குறைந்த மகவினைத் தோற்றுவித்தற்குப் பின்னும் ஒரு கருவியாதலை **‘ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்’** என்னும் உத்தியால் அறிந்து கொள்க. எனவே, கணவற்கும் மனைவிக்கும் மலநீர் அடைப்புகள் இருக்குங் காலங்களாகிய காலை மாலை வேளைகளில் அவ்விருவரும் புணர்தல்,

தமக்குந் தாம் பெறும் புதல்வர்க்கும் உலகத்திற்கும் பெருங் கேடு பயப்பதாமென்பதை ஒவ்வொருவருங் கருத்திற் பதித்தல் வேண்டும்.

இன்னுஞ், செல்வருஞ் செல்வர்வீட்டு மகளிரும் பெரும்பாலும் உடம்பு முயற்சியில்லாத சோம்பேறிகளாய் இருப்பதோடு, தமக்குள்ள செல்வ வளத்தாற் கொழுமையான உணவுகளையுந் தின்பண்டங்களையும் வேளை நேரம் அறியாமல் எந்நேரமுந் தின்று வயிற்றை நிரப்பின வண்ண மாய் இருப்பவர்களாதலால், அவர்கட்குக் காலை மாலையே யன்றி எந்நேரமும் அடிவயிற்றில் மலஞ்சேர்ந்த படியாய் இருக்கும். ஆகவே, அத் தன்மையோர் தாம் மருவுவதற்கு இரண்டு மணிநேரம் முன்னரே **'நீரேற்றி'** (எநிமா) என்னும் கருவி கொண்டு தமது மலக்குடரைக் கழுவித் துப்புரவு செய்தல் வேண்டும். மலம் நிறைந்த வயிற்றோடு புணர்ந்தால் விந்து விரைவிற் கழிய இருவர்க்கும் புணர்ச்சியின்பமும் இல்லை யாப்போம். தீனிப்பையிலும் உணவு சிறிதாயிருந்து செரிக்கும் படி, நொய்யான வுணவுகளிற் சிலவற்றைச் சிறிதே அயிலல் வேண்டும்; ஏனென்றால், மிகுந்த வுணவு கொண்டவர்க்குக், **கறைகழிந்தபின்** அவ்வுணவு செரியாதாயிருந்து வயிற்று வலியினையும் மயக்கத்தினையும் வாய்க் கக்கலினையும் இன்னும் பல நோய்களையும் வருவிக்கும்.

இனி, மிகுந்த உடம்புழைப்பு, மூளையுழைப்பு உள்ளவர்களுந் தமக்கு அயர்வுள்ள வேளைகளிற் புணர்ச்சி செய்தல் ஆகாது. இவர்களுந் தம்முடைய மலநீர்க் குடர்களை நன்கு துப்புரவு செய்து, பொருத்தமான உணவினைச் செரிக்கும். அளவறிந்து உட்கொண்டு, இளைப்பாறி அயர்வு நீங்கிய பின்னரோ, அல்லது நன்றாய்த் தூங்கித் தூக்கங் கலைந்த பின்னரோ கலவியிற் புகுதல் வேண்டும்.

அற்றேற், கலவிக்கு ஏற்றகாலம் யாதோவெனிற் கூறுதும்: இத்துறையில் ஆழ்ந்த ஆராய்ச்சி செய்தவரான **கவ்வன்** என்னும் ஆசிரியர், நன்மக்களைப்பெற விழைகுவார் பகற்காலத்திற் பதினொரு மணிமுதற் பன்னிரண்டு மணி வரையிற் கலத்தலே நன்றென்று கட்டுரைத்துச் சொல்கின்றார்; அதற்கு அவர் கூறுங் காரணங்களாவன: **முதலில்**,

ஒளிவிளங்கு நேரமே எல்லா உயிர்களுந் தமது அறிவு மலரப்பெற்று முயற்சியுஞ் சுறுசுறுப்பும் உடையன வாயிருக்குங் காலமாகும்; மற்று, இருள் மிகுந்த நேரமோ அறிவும் முயற்சியுங் குன்றி இளைப்பாறுதற்கு உரிய தொன்றாகும். உடம்பும் உயிரும் அழகொளியும் அறிவொளியும் வாய்ந்த பிள்ளைகளைப் பெறல் வேண்டு மாயிற், பகலவன் சுடர்விளங்கத் தோன்றித் திகழும் பகற்காலமே அதற்கேற்றதாகும் என்பது. **இரண்டாவது,** பகலவன் கிழக்கே தோன்றும் விடியற் காலை முதல் நண்பகல் வரையில் உடம்பின் ஆற்றல்கள் மிகுந்து கொண்டே சென்று, பின்னர் அவன் மேற்கே சாயுந் தோறும் அதன் ஆற்றல்களுங் குறைந்துகொண்டே போம்; முற்றும் இருள் சூழ்ந்தவுடன் அவ்வாற்றல்கள் மிகக் குறைந்த நிலையிற் கிடக்கும்; அவ்வாறு இருள் மலிந்த காலத்தில் உடம்பு வலியுஞ் சுருங்கிப் போதலால், அப்போதுண்டாகுங் கரு அழகும் ஆற்றலும் உடையதாய் இராது என்பது. பகற் காலத்தே புணரலுறு வாரும், பகலவன் மென்மேலுயரும் முற்பகற்பொழுதையே அதற்குரியதாகத் தெரிந்தெடுக்க வேண்டுமேயல்லால், அவன் சாயும் பிற்பகற் பொழுதை எடுத்தலாகாதென்பதும் அவரது கருத்தாகும்.

இக்கருத்து உண்மையாவதொன்றே யாயினும், அதனைப் பின்பற்றி நடத்தல் செல்வத்தின் மிக்கார்க்கன்றி ஏனை யோருக்குச் சிறிதும் இசையாது; செல்வம் உடை யாரிலும் பகற் பொழுதில் முயற்சி பல உடையராய் ஒழுகு வார்க்கும் அஃது இசையாது. ஏனென்றால், உடம்பு வலிவும் அறிவுவலிவும் மிகுவதற்குப் பகலவனெழுச்சி ஒரு காரணமேயாயினும், அதனைவிட அதற்குச் சிறந்த காரணம் விந்துநீர் உடம்பை விட்டுக் கழிந்துபோகாமல், அதன்கண் ஊறப் பெறுதலேயாம். வலிமை மிகுந்துள்ள முற்பகற் பொழுதிற் புணர்ச்சிசெய்து விந்துவைக் கழித்துவிட்டால், உடம்பும் உயிரும் பெரிதும் வலிகுன்றிப்போம்; அந்நிலையில் உடம்பு முயற்சியேனும் அறிவு முயற்சியேனுஞ் செய்வார் களாயின், அங்ஙனஞ் செய்பவர்கள் மேலும் மேலும் வலி குறையப் பெற்றுப், பல கொடுநோய் களுக்கு ஆளாகி விரைவில் மடிவர். மேலும், புணர்ச்சி நிகழ்ந்த பின் குளிர்க் காற்று மேலே படுதலுமாகாது. விந்து கழிந்து வலிகுன்றிய நிலையிற் குளிர்ங்காற்று மேலே வீசப் பெற்றவர் கட்கு நீர்க்கோவையும் இருமலுங் காய்ச்சலும் வருதலைக்

காணலாம். நீர்க்கோவையே எல்லா நோய்க்கும் வித்தாகு மென்று இவ்வுண்மையை நன்காய்ந்த மருத்து நூலாசிரியர் கூறுகின்றனர். எமதாராய்ச்சி யிலும் அது முற்றும் உண்மை யாதல் காண்கின்றேம். அதுவேயுமன்றி, ஊரில் அம்மைநோய் நச்சுக்காய்ச்சல் குளிர்காய்ச்சல் கழிச்சல் முதலான நோய்கள் பரவியிருக்குங் காலங்களில், உரமான உடம்பு வாய்ந்தவர்கள் கூடப் புணர்ச்சி செய்தல் ஆகாது; ஏனென்றால், விந்து கழிந்து வலிகுறைந்த நிலையில் அவர்களின் உடம்பு, கட்புலனாகாத அந்நோய்ப் புழுக்களாற் பற்றப்பட்டு நோய்கொண்டு துன்புறுதலைக் காண்கின்றேம். திண்ணிய யாக்கை யுடையவர் களுக்கே அத்தகைய தீங்கு வருமானால், மெல்லிய உடம்புள்ள வர்க்கு விந்து கழிந்த நிலையில் அந்நோய்கள் வருமென்பதை யாம் விண்டு விளம்புதலும் வேண்டுமா? ஆகவே, மெல்லிய உடம்புள்ளவர்கள் பகற் காலத்தில் புணர்தலையும், புணர்ந்தபின் வெளியே சென்று பல முயற்சிகள் செய்தலையும் அறவே விடுதல் வேண்டும். வெளியே செல்ல வேண்டாமல் இல்லத்திலேயே இனிது உறங்கிக் காலங் கழிக்குஞ் செல்வர் கட்கோவென்றாற் பகற்புணர்ச்சி ஒருகாற் றீது செய்யாத தாகலாம்; ஏனை யோர்க்கு அது சிறிதும் ஆகாதென்க.

இன்னும், பகற் புணர்ச்சியானது அறிவு முயற்சி உடம்பு முயற்சி மிகுதியுடையார்க்கு ஆகாதென்பது, புணர்ச்சிக்குப் பின் எல்லார்க்கும் வரும் அயர்ந்த உறக்கமே சான்றாம். விந்து கழிந்த நிலையில் உடம்பாற்றல் உயிராற்றல்கள் குறைதலால், அக்குறையினை நீக்கி நிறைவு செய்தற்கே அயர்ந்த துயில் வருகின்றது. அங்ஙனந் துயில் கொள்ளுதற்குங், கொள்ளுந் துயில் புறத்துள்ளவரின் இயக்கத்தாலும், ஓசையாலுங் கலையாதிருத்தற்கும், பசி நீர்வேட்கையால் இடையிடையே கண்விழியாமல் ஆறுமணி நேரமாயினுந் தொடர்ந்து செவ்வையாய்த் தூங்குதற்கும் மிக இசைந்தகாலம் இராப் பொழுதேயாகும். அக்காலத்தே பகலவன் விளக்கம் இல்லா மையால் உயிர்கள் பசியும் நீர்வேட்கையும் இன்றி, முயற்சி யவிந்து, அயர்ந்து உறங்குவனவாகும்; அக்காலத்தே எங்கும் ஓசையின்றி எல்லாம் அமைதியாயிருக்கும்; இங்ஙனமாக இராக்காலமே இடையூறின்றித் தொடர்பாக இனிது உறங்கு தற்கு ஏற்றகாலமாயிருத்தலாலும், இனிய புணர்ச்சிக்குப்பின் அத்தகைய நீண்ட தூக்கம் உடம்பின் நலம்பேணுதற்கு

இன்றியமையாது வேண்டியிருத்தலாலும், அதுவேதான் இன்ப புணர்ச்சிக்கும் ஏற்றகாலமாம் என்று உணர்ந்து கொள்க.

அற்றேற், பகலவன் ஒளியில்லாத இராப்பொகுதில், உயிரும் உடம்பும் வலிவும் சுறுசுறுப்புங் குன்றி உறக்கத்தை நாடும் அப்பொழுதில் நிகழ்த்தும் புணர்ச்சி இன்பம் பயவாமையானும், அந்நிலையில் ஆற்றல் குறையக் கழிந்த விந்துநீரினின்று உண்டாம் மகவு உடம்புஒளி உயிர்ஒளி அமையப் பெறாமையின் அழகு அறிவு உடையதாகாமை யோடு, உடம்புயிராற்றல்களுங் குறைந்து அடுத்தடுத்து நோய்வாய்ப் படுமாகலானும் இராக்காலப் புணர்ச்சி மற்று நலம் பயப்பதால் யாங்ஙனமெனிற் கூறுதும்: **இராக் காலக் கலவியால் இக் குற்றங்கள் உண்டாதல் உண்மையே யாயினும், நமது அறிவைச் செலுத்திக் காம நினைவை அடக்கிச் சில ஏற்பாடுகளை ஒழுங்காகச் செய்து கொள்ளுதலால், இக் குற்றங்கள் அணுகாமற் காத்தல் எவர்க்கும் எளிதில் வாய்வதே யாகும்.** அற்றாயின், அவ்வேற்பாடுகள் இன்ன வென்று காட்டுகவெனிற் காட்டுதும்.

முதலில், இராக்காலத்தே அயர்ந்து தூங்குதற்குரிய முன் நேரத்தில், அஃதாவது ஒன்பது அல்லது **பத்துமணி முதற் பன்னிரண்டு மணி வரையிற் கலவியிற் கருத்தைச் செலுத் தாமற் கணவனும் மனைவியும் நன்றாக அயர்ந் துறங்கி விடுதல் வேண்டும்.** அவ்வாறு மூன்றல்லது நான்கு மணி நேரஞ் செவ்வையாய் உறங்கியபின் உடம்பும் உயிரும் அயர்வுநீங்கி வலிவுஞ் சுறுசுறுப்பும் உடையவாகும்; அங்ஙனம் ஆனபின் இருவருங் காதல் கொண்டு முத்தமிடுதல் தழுவுதல் முதலான அன்பின் செயல்களாலும் இன்ப வுரைகளாலும் உடம்பும் உயிருங் குழைந்துருகும் வரையில் அவ்வாறிருந்து, அதன்பின் விரையாமல் அமைதியாய் நினைவை ஒருவழி நிறுத்திக் கலத்தல் வேண்டும்; நினைவை ஒருமுகப்படுத் தினார்க்கன்றி ஏனையோர்க்குக் கலவியின்பம் நீள நிகழாதென்றுணர்ந்து கொள்க.

இனி, இரண்டாவதாக, இருள் மிகுந்த நேரத்திற் கலத்தலால் உண்டாகுங் கரு இருள்போற் கரிய மேனியும் மழுங்கிய அறிவும் உடையதாய் அமையுமாதலால், இருளிற் கலத்தலாகாது; இதனாலேதான் மறைநிலாக்காலத்தில்

(அமாவாசையிற்) புணர்தலாகா தென்று ஊரவருஞ் சொல்கின்றனர். ஆகவே, இருள் செறிந்த இராக்காலத்திற் கலத்தல் யாங்ஙனமெனின்; இவ்விடர்ப்பாடு மிக எளிய தொரு வழியால் நீக்கப்படும் என்பதனை யறியாத நம் மக்களின் அறிவுதான் என்னே! நன்கு சுடர்ந்து எரியும் பளிங்கு விளக்கினைத் தமது படுக்கை யறையில் ஏற்றி வைத்து, அதன் பேரொளி தமது உடம்பெங்கும் படுமாறு தாம் அணிந்திருந்த ஆடையணி கலங்களை முற்றுங் களைந்து வைத்துவிட்டு, காதலர் இருவரும் இன்புற்று மருவும் முறை எளிதிற் செய்யக்கூடியதாயிருப்பவும், இதனைச் செய்துகொள்ள அறியாமல், இருட்டில் விலங்குகளைப்போற் புணர்ந்து, அறிவும் உடம்பும் இருண்ட அழகில்லா மக்களைப் பெறுதல் எவருடைய குற்றம் என்பதனை ஒவ்வொருவரும் உணர்ந்து பார்த்தல் வேண்டும்.

அஃது எளியதொன்றேயாயினும், மகளிர் தமக்கு இயற்கையேயுள்ள நாணத்தால் அங்ஙனம் ஆடையணி கலங்களை முற்றுங் களைந்துவிட்டு, வெளிச்சத்தில் வெற்றுடம்பினராயிருக்க இணங்காரேயெனிற்; காதலன்றன் கலவி யின்பத்தை நாடின மகளிர்க்கு நாணம் எற்றுக்கு? தம் காதலர் அல்லாத மற்றவரைக் காணின் நாணுதலே கற்புடை மகளிர்க்குச் சிறந்ததாகுமல்லால், தமக்கு உயிரினுஞ் சிறந்த காதலர் மாட்டும் அவ்வாறு நாணுதல் அவர்க்குச் சிறிதும் ஆகாது; அஃது உண்மை நாணமாகாமற் கரவொழுக்கத்தின் பாற் பட்ட நாணமே யாகும்.

மேலும், இறைவன் அருளிரக்கத்தாற் செய்யும் படைப்புத் தொழிலுக்குத் தாமோர் உதவியாய் நின்று, ஓர் உயிர்க்கு உடம்பைத் தந்து அதனைத் தமக்குப் பிள்ளையாய்ப் பெற்றுக்கொள்ளும் முயற்சியே புணர்ச்சி யாதலால், அதனைக் குற்றமுடையதாக நினைத்தலும், நினைத்து நாணி இருளிற் கலந்து அழகும் அறிவும் இல்லா மக்களைப் பெற்று, அவரை வாணாளெல்லாம் பெருந்துன்பத்திற்கு ஆளாக்கு தலும் எத்துணைக் கொடுமை! புணர்ச்சிக் காலத்து நாணி மாதரார் தம் கண்களைப் பொத்திக் கொள்ளுதலும், தமதுடம்பை ஆடையால் மறைத்தலும் எவ்வளவு தீயவென்ப தனை, மக்கட்பேறு வேண்டி வியாசமுனிவனை மருவிய அரச

மங்கையர் இருவரில் ஒருத்தி தன் கண்களைப் பொத்திக் கொண்டு புணர்ந்தமையாற் **கண்குருடான திருதராட்டிரனைப்** பெற்றதும், மற்றொருத்தி தன் உடம்பை ஆடையால் மறைத்துப் புணர்ந்தமையால் உடம்பெங்கும் பாண்டு நோய்கொண்ட **பாண்டவனைப்** பிள்ளையாகப் பெற்றதும் நன்கெடுத்துக் கூறும் பாரத கதையால் நன்கு அறிகின்றனம் அல்லமோ? மூன்றாவதாக வந்து அம் முனிவனை மருவிய ஏவற்காரி அத்தகைய பொய்ந் நாணம் இன்றி, உடம்பைத் திறப்பாக விட்டு அவனோடு அன்பினால் அளவளாவிக் கலந்தமை யாலன்றோ அழகும் அறிவும் வலிமையும் அன்பும் ஒருங்கமைந்த பெரியோனான **விதுரனைப்** பிள்ளையாகப் பெற்றாள்? தன் காதலனை யொளித்துத் தனக்கென வரைந்து வைப்பது ஏதுங் கற்புடைய மகளிர்க்கு இல்லாமையால், அவர் புணர்ச்சிக் காலத்தில் தங் காதலர்பால் நாணஞ் சிறிதுமின்றி யொழுகுதலே வேண்டற் பாலதா மென்க. எனவே, **சிறந்த விளக்கொளியில் இருவ ருடம்பையுந் திறப்பாகவிட்டு மருவி வாழுங் காதலர்க்கு அழகிலும் அறிவிலும் வலிமையிலுஞ் சிறந்த மக்கட் பேறுண்டாதல் திண்ணமேயாமென்றுணர்ந்து கொள்க.** இரவுகாலத்தில் இங்ஙனம் விளக்கொளியிற் கலக்கும் எளியமுறை யிருக் கையில், இதனைவிட்டுப் பகற்காலத்தில் கலந்து இருவருடம் பின் நலனையுஞ் சிதைத்தல் எற்றுக் கென விடுக்க.

இனி, பகற்காலத்தே யன்றி **விடியற்காலத்திலும் மருவுதல் ஆகாது.** அப்போது மலப்பை சிறுநீர்ப்பைகளில் இருவர்க்கும் மலமுஞ் சிறுநீரும் நிறைந்திருக்குமாகையால், அப்போது புணர்வாரை அம் முடைநாற்ற அழுக்கின் நஞ்சு வேக்காளந் தாக்கி இருவர்க்கும் நளிர்காய்ச்சல் கழுத்தின் பிடரியில் நரம்பிசிவு முதலான நோய்களை உண்டாக்கும். அதுவேயு மன்றி, விடியற்காலையில் வீசுங் குளிர்ங்காற்றும் விந்துகழிந்த உடம்புக்குத் தீது பயப்பதாகும்.

அறியாமையால் இங்ஙனம் விடியற்காலையில் புணர்ந்து நளிர் (சந்தி) கொள்ளப்பெற்றவர்கள், உடனே நீரேற்றி வைத்து மலநீர்க்குடரைத் துப்புரவு செய்து, சாம்பலை வறுத்து வறுத்துக் கழுத்துப்பிடரி முதுகுமார்பு இடுப்புக் கைகால் உள்ளங்கால் வரையில் ஒற்றடங் கொடுத்துக் கம்பளிப்

போர்வையால் உடம்பை மூடிக் கொண்டு அயர்ந்துறங்கல் வேண்டும்; உடம்பு நல்ல நிலைக்கு வரும் வரையிற் கோதுமைநொய்க் கஞ்சியைத் தவிர வேறு ஏதும் அருந்தல் ஆகாது; அதுவும் நன்றாய்ப் பசியெடுத்த போது தான் அருந்தல் வேண்டும்.

எனவே, **காதலர் இனிது மருவிப் பின்னர் நோய்க்கு ஆளாகாத இன்பத்தை நுகரவுந் தாந்தாம் விரும்பியபடி அழகும் அறிவும் வலிமையும் ஒருங்கமைந்த மக்களைப் பெற்று மகிழவும் வேண்டுவார்களாயின், நள்ளிராக் காலத்தில் விளக்கொளி வீசும் ஒரு தனியறையில் மேற் சொன்னவாறு தமதுடம்பின் மேல் ஏதொரு மறைபுப்பும் இலராய், இறைவனையும் பெரியோரையும் அவர் செய்யு செயற்கருஞ் செயல்களையும் பேசிப்பேசி, அன்பால் அகமும் புறமுங் குழைந்தபின் மருவுதலே செயற் பாலாரென்க.**

**அடிக்குறிப்புகள்**

1. Dr. John Cowan in ‘The Science of a New Life’, p. 170
2. For instance, See Dr. Cowan’s ‘The Science of a New Life’, Ch.VIII.

# 4. தாயின் மனநிலையுங் கருவின் அமைப்பும்

மேலத்தியாயத்தில் தன் மக்கட்பேறு வேண்டுந் தாய் தந்தையர் இருவருந் தாந்தாம் விரும்பிய மக்களைப் பெறத் துவங்கும் முன்னும் பின்னும் இன்றியமையாது தெரிந்து ஒழுக வேண்டிய முறைகளை எடுத்துப் பேசினோம். இவ்வத்தி யாயத்தில் தாயானவள் கருக்கொண்டபின் விழிப்பாய் இருந்து ஒழுகல் வேண்டும் முறைகளை எடுத்துக் கூறுவாம். ஆண் கருவையோ பெண்கருவையோ தாயின் அகட்டிற் பதித்தற்குரிய ஆற்றல் தந்தையாவான் மாட்டுத் தான் அமைந்திருக்கின்றது. ஆனால் அங்ஙனந் **தன்னகத்துப் பதிக்கப்பட்ட கருவை அழகுடையதாகவோ அழகில தாகவோ 'அறிவுடைய தாகவோ அறிவிலதாகவோ, நோயுள தாகவோ' நோயில தாகவோ, நல்லியல்பு வாய்ந்ததாகவோ நல்லியல்பு வாயாதாகவோ ஆக்கக்கூடிய ஆற்றல் தாயின் மனநிலை அறிவுநிலையினையும் அவளைச் சூழ்ந்திருப் போரின் மனநிலை அறிவுநிலையினையும் பொறுத்த தாயிருக்கின்றது**. ஒரு தாய் நல்லியற்கையும் நல்லறிவும் நன்முயற்சியும் உடையவளாயிருப்பனும், அவளைச் சூழ்ந்திருப்போர் அம்மூன்றும் இல்லாத தீயராயிருப்பின், அதனால் அவள் மனநிலை கெடும்: அது கெடவே அவள் வயிற்றகத்துள்ள கருவின் அமைப்புங் கெடும். ஆகவே, தீயோராற் சூழப்பட்டிருப்பவர்கள் கருக்கூடுதற்குக் சிறிது காலம் முன்னுங் கருக்கூடிக் கருவுயிர்க்குங்காலங் கழிந்து குழந்தை பால் மறக்குங் காலம் வரும்வரையில் ஆவது அத்தீயகூட்டத்தை விட்டகன்று தனித்து உறைதல் இன்றியமையாததாகும். ஏனென்றால், தாய்வயிற்றிலிருக்குங் கருவானது தாயின் செந்நீரினாலேயே (இரத்தத்தினாலேயே)

ஊட்டப்பட்டு உருவாகின்றது; தாயின் செந்நீர் எவ்வள வுக்குத் தூயதாயிருக்கின்றதோ அவ்வளவுக்கு அதனால் ஊட்டப்படுங் கருவுந் தூயதாய் வளரும்; மற்றுத் தாயின் செந்நீர் தூய்மை கெட்டு எவ்வளவுக்கு நஞ்சாகின்றதோ, அவ்வளவுக்கு அதனால் ஊட்டப்படுங் கருவும் நலங்கெட்டு நஞ்சாகின்றது.

இனித், தாயின் செந்நீர் தூயதாயிருத்தற்கு அவள் உண்ணும் உணவும் அவள் எண்ணும் எண்ணமுமே முதன்மை வாய்ந்தனவாயிருக்கின்றன. ஊண் உண்பவர்கட்குத் தூய செந்நீர் உளதாதல் இல்லை; அதனால் அவருடம்பும் இயற்கையுங் கொடியவாய் இருக்கின்றன. ஊன் தின்னும் புலி கரடி சிங்கம் ஓநாய் முதலியவற்றின் கொடிய வடிவத் தையும், புற் பூண்டு இலை காய் கனி விதை முதலியவை களேயே தின்னும் ஆடு மாடு குதிரை மான் முதலியவற்றின் அழகிய அமைதியான வடிவத்தையும் நினைந்து பாருங்கள்! ஊன் தின்னும் புலி ஓநாய் முதலியவற்றின் வயிற்றிற் பிறக்குங் குட்டிகளுங் கொடிய புலியும் ஓநாயுமாகவே பிறத்தல் போல, இரக்கமற்ற கொலைத் தொழிலால் வரும் ஊனைத் தின்னும் ஒரு மாதின் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளுங் கொடிய உருவமுங் கொடிய இயற்கையும் வாய்ந்தவர்களாகவே யிருப்பரென்பதில் ஐயம் உண்டா? ஊன்தின்பாரிலும் வேறுபல காரணங்களால் அழகியராய் அமைதியுடையராய்ப் பிறப்பார் உளரேனும், உற்று ஆராய்ந்தால் ஊனுணுவினால் வந்த நஞ்சும் அந் நஞ்சினால் விளைந்த நச்யில்பும் அவர் பால் இருக்கக் காணலாம். அங்ஙனமே, மரக்கறியுணவு கொள் வாரிலும் வேறுபல காரணங்களால் அழகு இலராய்க் கொடுங்குணம் வாய்ந்தவர்களாய்த் தோன்றுவார் உளரா யினும், உற்று ஆராய்ந்தால் மரக்கறியுணாவினால் வந்த நலமும் அதனால் உண்டான சில நல்லியல்புகளும் அவர் பாலிருக்கக் காணலாம். அற்றேல், மரக்கறியுணவு கொள் வாரிற் சிலர் பலர் அழகிலராய்த் தீயராய்த் தோன்றுதற்கு ஏது வென்னையெனின்; அத் தீங்கு அவர்தந் தாய்தந்தையர் உறவினரிலிருந்து வந்த தென்பதனைப் பின்னே விளக்கிக் காட்டுதும்.

இனிக் மரக்கறியுணவிலுங் **காப்பி, தேயிலை, புகை யிலை, சுண்ணாம்பு வெற்றிலைபாக்கு, மிகுதியான மிளகாய்க்காரங், கடுகின்காரம், பெருங்காயம், மரப்புளி,**

**மிகப் புளித்த தயிர், எருமைப்பால், எருமைநெய், கடலுப்பு** முதலியவைகளைத் தொடர்பாக உட்கொள்வார் சைவர் பார்ப்பனரிலும் பலர் உளராகலின், அவற்றால் அவர்தம் செந்நீர் நஞ்சாய்ப்போக, அந் நச்சுநீரிற் றோன்றிய மக்களும் அழகிழந்து நச்சியில்புடையராய்ப் பிறக்கின்றனரென ஓர்ந்து கொள்க. **பச்சை மிளகாய்க் காரத்தை மிகுதியாய் அடுத்தடுத்துச் சேர்ப்பார்க்குக் காது செவிடாதலையும்**, அவர் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளிற் சிலர் காது கேளாத வராயுஞ், சிலர் வயிற்றுளைச்சல் வயிற்றுப் போக்குடையராயுஞ், சிலர் சொறி சிரங்கு கொள்ளபெற்றவராயுந் துன்புறுதலை யாம் நேரே கண்டறிந் திருக்கின்றேம். இங்ஙனமே எம்மொடு தொடர்புடையார் பலரில் அவரவர் உட்கொள்ளும் உணவுப் பண்டத்தின் மிகுதிக்கு ஏற்ற நறுநாற்ற தீநாற்றங்களும் நல்லுடம்பு நோயுடம்புகளும் நல்லியல்பு தீயியல்புகளும் அமைந்திருத்தலை ஆராய்ந்து கண்டு இருக்கின்றேம். ஆழ்ந்து நுனித்தாராய்ந்தால், அவரவர்க்குள்ள உடம்பின் அமைப்பு களும் மனவியற்கைகளும் அவரவர் உட்கொள்ளும் உணபுப் பண்டங்களின் விளைவாகவே யிருத்தலைத் தெற்றெனத் தெரிந்து கொள்ளலாம். ஆகவே, தாம் நோயின்றி அழகிய தூய உடம்புந் தெளிந்த அறிவும் உடையராய் வாழவிரும்புதலுடன், தம் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளும் அப் பிள்ளைகள் வயிற்றிற் பிறக்கும் பேரப் பிள்ளைகளுந் தம்மைப்போலவே அழகிய தூயவுடம்புடைய ராய்த் தெளிந்த அறிவுந் தூய நெஞ்சமும் வாய்ந்தவர்களாய் வாழவேண்டு மென்னும் விருப்பமுடையார் ஒவ்வொரு வரும் **ஊனுணவை** அறவே ஒழித்துவிடுதல் வேண்டும். அங்ஙனம் அவ்வூனு ணவை யொழித்தலே யன்றிச், சைவ வுணவிலும் உட் கொள்ளத் தகாதனவாக மேலெடுத்துக் சொல்லிய **காப்பி தேயிலை மிக்க மிளகாரக் காரங் கடுகின் காரம்** முதலியவை களையும் விலக்கி விடுதல் வேண்டும். **கருப்பையிலிருக்குங் கருவுக்குத் தாயின் உணவே உணவாயிருப்பதன்றித்,** தந்தையின் உணவு உணவாகா மையாற், **கருவமைப்பின் நலத்திற்குத் தாயானவளே பெரும் பொறுப்பாளி யாவளென்பதைத் தாய்மார் அனைவருங் கருத்திற் பதித்தல் வேண்டும்.**

இனி, இங்ஙனந் தாயினுணவு கருவின் நலந் தீங்கிற்குக் காரணமாயிருத்தல்போலவே, அவள் மனநிலையும் அதன்

நன்மை தீமைக்குக் காரணமாயிருக்கின்றது. ஒருவருடம்பின் அமைப்பும் அவரது மனநிலையும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையதாயிருக்கின்றது. மனவியல்பில் இனியராயிருப்பார்க்கு இனியவுடம்பு வாய்த்தலும் இனிய வுடம்பு வாய்ந்தார்க்கு மனவியல்பும் இனியதாயிருத்தலும் நுணுகி ஆராயிற் புலனாம். அற்றாயின், இனிய வுடம்புடைய ராய் இருப்பாரிற் சிலர் பலர் அதற்கு மாறான கொடிய மனவியற்கையுடையரா யிருக்கவுங் காண்கின்றோமே யெனிற்; பொதுப்பார்வையில் இனிய வுடம்புடையராய்த் தோன்றுதல் பற்றி ஒருவரை இனியரென்றல் ஆகாது; சிறப்பு நோக்கில் வைத்து அவருடம்பின் ஒவ்வோர் உறுப்பின் அமைவையும் ஆராய்ந்தறிந்தாற், செவ்விதல்லா அவரது மனநிலைக்கு ஏற்ற இன்னா அமைப்புகள் அவருடம்பின் உறுப்புகளிற் பதிந்திருத்தலைக் கண்டு கொள்ளலாம். அமெரிக்கா தேயத்து அறிஞர்கள் மக்களுடம்பின் உறுப்பு களை மிக ஆழ்ந்தாராய்ந் தெழுதியிருக்கும் **உறுப்பியல் நூலையும்** (Physiognomy) **மண்டைவடிவ நூலையும்** (Phrenology) நன்கு பயின்றறிந்தவர் கட்கே யாம் கூறும் இவ்வுண்மை நன்கு விளங்கும். ஆகவே, பொதுப் பார்வைக்கு இனிதாய்த் தோன்றும் உடம்பு உடைமை பற்றி ஒருவரை இனியரென்றலும், அதற்கு இன்னாதாய்த் தோன்றும் உடம்பு உடைமைபற்றி ஏனையொருவரை இன்னாதார் என்றலும் ஆகாவென்றுணர்ந்துகொள்க. இவ்வாற்றால், **ஒவ்வோர் உறுப்பும் இனிய அமைப்பு உடைய தாகவே வாய்க்கப் பெற்றார்க்கு, அவரது மனநிலையும் இனியதாகவே யிருக்கு மென்பது துணிபு;** அங்ஙனமே, **மனநிலை இனிது வாய்ந்தவர்கட்கு அவரது உடம்பின் உறுப்புகளிற் பெரும் பாலனவும் இனியவாகவே அமைந் திருக்குமென்பது முடிக்கப்படும்**.

அற்றேல், மனநிலை நன்கமைந்தார்க்கு அவருடம்பின் உறுப்புகள் அத்தனையும் நன்கமையுமெனக் கூறாமற், **'பெரும்பாலன'** என்று அடைகொடுத்துக் கூறினமை ஏனென்றால்; எத்துணைச் சிறந்த மனநலன் வாய்ந்தார்க்கும் ஆணவமலப் பற்றுண்டு; ஆணவமலப்பற்று நீங்கிப் போனால் இப்பிறவியும் ஒரு நொடிப்பொழுதுகூட நில்லாது. இவ் வுண்மை கண்டே **தெய்வத் திருவள்ளுவர்**.

"அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கால்
இன்மை யரிதே வெளிறு" (குறள் 503)

என்றும், அதனாற்,

"குணநாடிக் குற்றமு நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்." (குறள் 504)

என்றும் அருளிச் செய்தார் என்க. எனவே, எத்துணை உடல் நல மனநலங்கள் உடையார்க்கும் இடையிடையே சிற்சில குற்றங்களும் இருக்குமாதலாற், பெரும்பான்மை பற்றியே ஒருவர்பாலுள்ள நலங்களைத் தெரிதல் வேண்டுமென்பதற்கு அவ்வாறு கூறினாம் என்பது.

இங்ஙனம் ஒருவரது மனநிலையும் அவரது உடம்பமைப்பும் ஒன்றோடொன்று மிக நெருங்கிய தொடர்புடையவாயிருத்தலால், அகத்தே மனத்தை அறிவிலும் அழகிலும் உயர்ந்த இன்பங்களிலுந் தோய்வித்துப் புனிதமாக்க ஆக்கத், தன் கருப்பையிலுள்ள கருவையும் ஒரு தாயானவள் மிகவும் புனிதமாக உருவாக்குதல் கூடும். அற்றேல், தாயின் மனநிலை கருவை யுருவாக்குதல் எதன் வாயிலாக நடைபெறுகின்றதெனின்; **முதலில்** மன இயக்கங்களால் திரிபடைவது தாயின் செந்நீரே யாகும்; **இரண்டாவது** திரிபடைவன அச் செந்நீரால் ஊட்டப் படுந் தாயின் உடம்புந் தாயின் கருப்பை யிலுள்ள மகவினுடம்பு மாகும்; **மூன்றாவதாகத்** திரிபடை வது அவ்வுடம்பொடு கூடி நடைபெறும் மகவின் மனமே யாகும். ஆகவே தாயின் மனநிகழ்ச்சிகளை ஏற்று, அவை தம்மை மகவின் உடலுக்கும் உணர்வுக்கும் ஏற்றுவது தாயின் செந்நீரேயாகு மென்றுணர்ந்து கொள்க.

இங்ஙனந் தாயின் மனநலம் அவளது செந்நீரின் நலத்திற்கும், அந்நலமின்மை அவளது செந்நீரின் நலமின்மைக்கும் ஏதுவாயிருத்தலை **எல்மர் கேட்ஸ்** (Elmer Gates) என்னும் ஆசிரியர் பலமுகத்தான் ஆராய்ந்து உறுதிப்படுத்தியிருக்கின்றார். "ஒருவன் சினங்கொண்ட ஐந்து நிமிடத்தி லெல்லாம், அவனது செந்நீரில் ஒரு பழுப்பு நிறமான வண்டல் உண்டாயிற்று; அதுகொண்டு மன அதிர்ச்சியினாற் செந்நீரிற் பிறபொருட் கலப்பு உண்டாதல் அறியப்பட்டது. இங்ஙனம்

உண்டான வண்டலை வடித்தெடுத்து விலங்குகட் கேனும் மக்களுக்கேனும் உட் செலுத்தினால், உடனே அவ்விருவகை உயிர்கள் மாட்டும் மனக்கொந்தளிப்புஞ் சினமும் உண்டாயின. இங்ஙனமே தன் மகவினை இழந்து பெருந்துயர் கொண்ட ஒரு மாதின் செந்நீரிற் சாம்பல் நிறமான ஒரு வண்டல் உண்டாயிற்று; தான் செய்த குற்றத்தை நினைந்து மிக வருந்தின ஒருவரின் செந்நீரில் ஊதா நிறமுள்ள வண்டல் உண்டாயிற்று. சினம், தீயவெண்ணம், மனத்தளர்வு முதலிய அதிர்ச்சிகளால் உடம்பின் செந்நீரில் தீய வண்டற் கலவைகள் உண்டாதலும், அவற்றிற் சில கொடிய நஞ்சாகவிருத்தலும், இசைவான இன்பமான மன அசைவுகளால், உடம்பை வளர்க்கும் நன்பொருட் கலவைகள் உண்டாகி உடம்பினை யார்க்கும் அணுக்களை உயிர்ப்பேற்றுதலும் யான் செய்த ஆராய்ச்சி களாற் புலனாயின[1]" (Quoted in Leroy Berrier's 'Cultivation of Personal Magnetism', pp. 30, 31) என்று அவ்வாசிரியர் கட்டுரைத்தல் காண்க. இங்ஙனந் தாயின் மனந் தீய குணங்களாற் பற்றப்படும்போது அவளது செந்நீர் நஞ்சாகி அவள் வயிற்றகத்துள்ள கருவைத் தாக்கி யழித்தலும், அல்லது அதன் உடல்நிலை மனநிலை களைத் திரித்துத் தீயவழிகளிற் செலுத்துதலும், அவ்வாறன்றி அவள் மனம் நல்ல குணங்களால் ஊடுருவப் பெற்றக்கால் அதற்கேற்ப அவளது வயிற்றிற் கூடிய கரு நன்கு உருவாகி அழகிலும் அறிவிலும் நல்லியல்பு நற்செயல் களிலும் மேம்பட்டுத் திகழ்தலும் மாறாது நடைபெறுதலைத், தெரிந்த சில உண்மை நிகழ்ச்சிகளால் விளக்கிக் காட்டுவாம்.

ஒருகால் ஒரு மாது தன் கைக்குழந்தையை மார் போடணைத்துப் பால்கொடுத்துக் கொண்டிருக்கையில் அது திடீரென இறந்து போயிற்று. ஏதொரு நோயும் இல்லாது மிகவுஞ் செம்மையாயிருந்த அக் குழந்தை சடுதியில் அங்ஙனம் இறந்து போனதைப்பற்றி எல்லாரும் இறும் பூதுற்று வருந்தினர். உடனே அதனை மருத்துக் கழகத்திற்கு எடுத்துப்போய், அங்கிருந்த அதன் ஆசிரியர்பாற் காட்ட, அவர் அதன் உடம்பின் செந்நீரை ஆராய்ந்து பார்த்து அது முற்றும் நஞ்சாகி யிருக்கக்கண்டார். கண்டு அங்ஙனம் அது நஞ்சான காரணம் யாது என்று அவர் நெடுநேரம் அதன்

தாயையும் அவள் வீட்டாரையும் உசாவி ஆய்ந்தும் ஏதும் புலனாகவில்லை. கடைசியாக அவர் ஒரு புதிய நினைவு கொள்ளப்பெற்று, **"நீ அம் மகவுக்குப் பால் கொடுத்துக் கொண்டிருக்கையில் யாது செய்தாய்?"** என்று அதன் தாயை வினவினார். அதற்கு அவள் **"ஐயா, என் மகவுக்கு யான் பால் கொடுதத்துக் கொண்டு இருக்கையில், எனக்கும் மற்றொருத் திக்கும் சண்டை நிகழ்ந்தது; அவள் என்னை மிக இழித்துப் பேசிய சொற்களைக்கேட்டு எனக்குப் பெருஞ்சினம் மூண்டது; அதனால் யானும் அவளைக் கடிந்து பேசினேன்; இவ்வளவுதான் நடந்தது"** என்றாள். உடனே அம் மருத்துவர் அம் மாதினுடம்பில் ஓர் ஊசியைக் குத்திச் சில துளிச் செந்நீரை எடுத்து ஆராய்ந்து பார்க்க, அவளது செந்நீரே நஞ்சாகி யிருக்கக் கண்டார். கண்டு, அம்மாதின் குருதி அவள் கொண்ட சினத்தால் நஞ்சாகவே, அந் நச்சுநீரிற்றோன்றிய **முலைப்பாலும் நஞ்சாகி**, அவளது மகவைக் கொன்றதென முடிவு செய்தார். இதனாற், பால்மாறாத தன் மகவுக்குப் பால்கொடுக்குந் தாயானவள், அது பால் மறுக்குந்தனையும் எவ்வளவு விழிப்பாக இருக்க வேண்டுமென்பது விளங்க வில்லையா? இவ்வுண்மையினைத் தெரிந்துகொள்ளாத கொடிய அறியாமையினாலேயே, நம் தாய்மார்களிற் பலர் தம் அருமைக் குழந்தைகளைக் கூற்றுவனுக்கு இரையாக்கி விடுகின்றனர். நம் தாய்மாரிற் பலர் தம் மாமியாரோடு கலாய்த்துச் சினந்து பேசுங்காலங்களினுந், தமக்கு வருத்தந் துன்பம் வந்த காலங்களினுந் தம் கைக்குழந்தைகளை யெடுத்துப் பால் கொடுக்கின்றார்கள். ஈது எவ்வளவு பெருந் தீமை! மகவுக்குப் பால்கொடுக்குந் தன் மருமகளோடுங், கருக்கொண்டிருக்குந் தன் மருமகளோடுஞ் சினங்கொண்டு சண்டையிடுதலால், அம் மருமக்கள்மார்க்குஞ் சினம்மூண்டு சண்டையிடுதலால், அவர் தம் மகவினைக் கொல்லும் என்றறியாத கொடிய மாமிமார் இருத்தலினாலேயே, நம் தமிழ் மக்களிற் குழந்தைப் பருவத்திலேயே சாவாரும், அதற்குத் தப்பினாற் பலவகை நோய்களுக்கு ஆளாவாரும், அதற்குந் தப்பினாற் பல இழிகுணங்களாற் பல கொடுஞ் செயல்களாற் பற்றப்படுவாரும் மிகுதியாயிருக்கின்றனர். மாமிமார் நல்லவராக வாயாதபோது அவரோடொருங்கிருந்து வாழு மாறு தம் மனைவியரை ஏவுங் கணவன்மார் தாம் செய்யும்

இவ்வறிவில் செயலால் தமக்குந் தம் மகவுக்கும் உலகத்திற்கும் விளையுந் தீமைகளை நன்கறிவராயின், அவர் அவ்வாறு செய்வர் கொல்லோ! மாமிமார், நாத்துணார்மாரே யன்றி, மன வருத்தத்தையுஞ் சினத்தையும் உண்டாக்குவார் வேறு எவரே யாயினும் அவரது கூட்டுறவு, கருக்கொள்ளும் மகளிர்க்குச் சிறிதும் ஆகாது.

இன்னும், நம் தமிழ்நாட்டில் மற்றொரு பெருந்தீமை இருக்கின்றது. ஒருவனுக்கு நான்கு பிள்ளைகள் இருந்தால் அவன் அந்நால்வர்க்கும் இளம் பருவத்திலேயே மணம் முடித்து,எல்லாரையும் ஒரு குடும்பமாகவே தன்னுடன் வைத்துக் கொள்கின்றான். ஆண்டு முதிர்ந்த அவன் கிழமனைவி, தான் இளமையாயிருந்தபோது தன் மாமியா ரால் தான்பட்ட துன்பங்களைச் சிறிதேனுங் கருதிப்பாராது தன் புதல்வர் நால்வர்க்கும் வந்த மருமக்கள்மாரைக் கண்ணில் துரும்பைவிட்டு ஆட்டிவிடுகின்றாள்! அவர்கள் தத்தங் கணவன்மாருடன் சிறிது அன்பாய்ப் பேசினாலுங் குற்றம், மாமியார் மாமனார் நாத்துணார்முன் அயர்ந்து சிறிது குந்தினாலுங் குற்றம், அவர்முன் பேசினாலுங் குற்றஞ், சிரித்தாலும் குற்றம், அழுதாலுங் குற்றம், படித்தாலுங் குற்றம், பசியெடுத்து அவர்கட்கு முன்னே சிறிது உணவெடுத் தாலுங் குற்றம், தூக்கம் வந்து அவர்கட்கு முன்னே சிறிது தூங்கினாலுங் குற்றம்; பொழுதுவிடிந்து நள்ளிரவாகு மட்டும், அம் மருமக்கள்மார் சொல்வது பேசுவது நடப்பது செய்வது ஆகிய எல்லாவற்றிலும் அங்ஙனங் குற்றமே கண்டு, அவர்களை ஓயாமல் துன்புறுத்திக் கொண்டிருக்கும் மாமியார் நாத்துணார் முதலான நச்சுப் பாம்புகள் பக்கத் திலே யிருக்கப் பெற்றால், எத்தகைய பொறுமை வாய்ந்தார்க் கும் மன அமைதி கெட்டு நெஞ்சு புண்ணாகிச் செந்நீர் நஞ்சாகுமென்பதனை நாம் விண்டு சொல்லுதலும் வேண்டுமோ! இவ்வளவு துன்பமான நிலைமையில் இருக்குந் தம் மனைவிமாரொடு கணவர் தம் காதலன்பைக் காட்டுதற்கும், மனைவிமார் தம் காதலரன்பைப் பெறுதற்குங் காலமும் இடமும் வாயாமல், எவர் பார்த்து விடுவரோவென வஞ்சி இருவரும் ஒருவர் முகத்தை யொருவர் பாராமலே கார்இருளில் மிகவிரைந்து புணர்ந்து கணவன்மார் கழித்த விந்துவினாலுங், கவலையுந் துயரமுங் கொண்ட அவர்

மனைவிமார்க்கு அப்போது வெளிப்பட்ட கருநீரினாலுங் கூடியுண்டான மகவு அழகேனும் அறிவேனும் நல்லியல்பு களேனும் வாய்ந்ததாயிருக்குமோ எண்ணிப் பாருங்கள் அன்பர்களே! இத்தனைக் கொடுங் கட்டுப்பாடு களுக்கும் கல்லைப்போல் உள்ளடங்கிக் கிடக்கும் பெற்றோர்களுக்குப் பிள்ளைகளாய்ப் பிறத்தலினாலேயே, நம் தமிழ்மக்களிற் பெரும்பாலார் அழகற்ற கரியநிறம் வாய்ந்தவராயுந், திருத்தம் இல்லா உறுப்புகளுங் குள்ளமான வுடம்புகளும் உடையராயும், மென்மேல் வளர்ந்து விரியும் ஆராய்ச்சியறிவு இல்லாத வராயும், உயர்ந்த நோக்கமும் உள்ளன்பும் வாயாதவராயும், இக் கட்டுப் பாடுகளில்லா மையின் உயர்ந்தோரானவர்க்குப் பிள்ளைகளாய்ப் பிறந்து உயர்ந்த நோக்கமும் உயர்ந்த அறிவும் உடையராய்த் திகழும் அயல்நாட்டவரால் இகழ்ந்து ஒதுக்கப்படும் நிலையின ராயு மிருந்து, வற்றல் மரம் போல் வாணாளை வீணாளாய்க் கழித்து, ஆண்டு முதிரா முன்னரே அழிந்து போகின்றனர்! ஐயகோ! இப்பாழும் நிலையினின்றும் மீண்டுவந்து, அறிவொளி யுலகிற் செலுத்தும் பெருநெறி கண்டு இவர்கள் பிழைக்கும் நாள் எந்நாளோ!

இனி, இத் தீமைகளை உணர்ந்தபின்னாயினும் நம் தமிழ்நாட்டுப் பெற்றோர்கள், தம் மக்களுக்கு மணஞ்செய்த பின், அவரவர் தத்தம் மனைவிமாரோடு தனித் தனியேயிருந்து இனிதே வாழ்க்கை செலுத்தி இனிய பிள்ளைகளைப் பெற்று, இறைவன் தரும் அரிய இம் மக்கட் பிறவியைப் புனிதப்படுத்து மாறு செய்வாராக! இங்ஙனம் மணஞ்செய்து கொண்ட மக்களைத் தனித்திருந்து வாழ்க்கை செலுத்துமாறு ஒழுங்கு செய்யும் உயர்ந்த பழக்கம், பண்டைக் காலத்திருந்த நம் தமிழ் முன்னோர்கள் கைக்கொண்டு நடந்ததொன்றே யல்லாமல், அது புதுவதாக நம்மால் மட்டுஞ் சொல்லப்பட்ட தொன் றன்று. சிலப்பதிகாரம் என்னும் நமது பழந்தமிழ்க் காப்பியத்தை நோக்குவீர்களாயிற், **கோவலன்** என்னுந் தம் செல்வத் திருமகனுக்குக் **கண்ணகி** என்னுங் கற்பரசியை மணஞ் செய்து வைத்த அவன் பெற்றோர்கள்; அவர்தம் வாழ்க்கைக்கு வேண்டும் வளங்களெல்லாம் அமைத்து, அவர்களைத் தனியே ஓர் இல்லத்திலிருந்து வாழ்க்கை செலுத்த வைத்தார்

*களென்பது தெளிவாகச் சொல்லப் பட்டிருத்தலை அறிவீர்கள்.* ***அது மனையறம் படுத்த காதையின்*** *ஈற்றில்,*

"வாரொலி கூந்தற் பேரிற் கிழத்தி
மறப்பெருங் கேண்மையோடு அறப்பரி சாரமும்
விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெறக் காண
உரிமைச் சுற்றமோடு ஒருதனி புணர்க்க
யாண்டுசில கழிந்தன இற்பெருங் கிழமையிற்
காண்டகு சிறப்பிற் கண்ணகி தனக்கென்"

*என்று சொல்லப்பட்டமையால் நன்கறியப்படும். இங்ஙனமே,* ***காரைக்காலம்மை****யாரை மணஞ்செய்து கொடுத்த பின், அவர்தம் பெற்றோர்கள் அவரையும் அவர்தங் கணவரையுந், தம்மில்லத்துக்கு அருகிலே அமைத்த பிறிதோர் இல்லத்தில் இருத்தி வாழ்க்கை செலுத்த வைத்தமை, ஆசிரியர்* ***சேக்கிழாரால்****,*

மங்கலமாம் மனைவினைகள் முடித்தியல்பின்
வைகும்நாள்
தங்கள் குடிக்கு அரும்புதல்வி யாதலினாற்
றனதத்தன்
பொங்கொலிநீர் நாகையினிற் போகாமே
கணவனுடன்
அங்கண் அமர்ந் தினிதிருக்க அணிமாடம் மருங்கு
அமைத்தான்

*என்று கூறப்பட்டிருத்தல் காண்க. இங்ஙனம் நம் பண்டைத் தமிழ்மக்கள் கைக்கொண்டு ஒழுகிய இவ்வுயர்ந்த பழக்கத் தைக் கைவிட்டு, ஒரு தாய்தந்தையர் வயிற்றிற் பிறந்த மக்களும், அவர்தம் மக்களும் எல்லாம் ஒன்று கூடிக் கொண்டு ஓர் இல்லத்தில் ஒருங்கிருத்தலினாலேதான், இளைய மங்கையரின் மனநிலை உடல்நிலைகள் சிதைவுறுகின்றன; அங்ஙனம் அவை சிதைதலினாற்றான். அவர் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளும் மனநல உடல் நலங்கள் வாயாதவர்களாய், அறிவின்றி நோய் கொண்டு விரைவில் மூத்து மாய்ந்தொழி கின்றனர்.* ***வந்தேறுங் குடிகளான ஆரியர் கொணர்ந்த இத் தீய பழக்கம் இத்***

தமிழ்நாட்டவர்க்குட் புகுந்தமையினாலேயே, முன்னில்லாத பல கொடிய தொற்று நோய்களும் இப்போது இந்நாட்டில் தோன்றி, ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கான மக்களைக் கொள்ளை கொண்டு போகின்றன. கணவன் மனைவி இருவரும், அவர் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளும் ஒரு சிறு வீட்டிலிருந்தாலே, அவருடம்பிலிருந்து கழியும் நச்சுப் பொருள்களும் அவர் மூச்சிலிருந்து வெளிவரும் நச்சுக்காற்றும் அவ்வீட்டின் தூய்மையைத் தொலைத்து அதனை நஞ்சாக்கி விடும். ஒரு குடும்பத்தவர் இருப்புக்கே இத்தனை கெடுதி யுண்டாகும்மானாற், பல குடும்பத்தைச் சேர்ந்தாரும் ஒருங் கிருப்பதனால் விளையுந் தீமை இன்னும் எவ்வளவு பெரிதா யிருக்கும்! ஆதலால், தம்முடைய மனநல உடல்நலங்களைப் பேணித் தம் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளையும் ஈடேற்ற விழையும் பெற்றோர்கள் தாந்தாம் தத்தம் மக்களொடு மட்டும் தனித்திருந்து வாழ்க்கை செலுத்துதலையே கடைப்பிடித்து நடத்தல் வேண்டுமென்க.

இனி, இங்ஙனந் தனித்துறை வாழ்க்கை வாய்த்த பின்னும் அன்னையாவாள் தன் எண்ணத்தைத் தூயதாக வைத்துக் கொள்ளுதல் வேண்டும்; அவ்வாறின்றித் தீய எண்ணங்கள் தன் உள்ளத்தைக் கவர்ந்து கொள்ள இடங் கொடுப்பளாயின், அவள் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகள் கட்டாயந் தீய எண்ணங்களுடையராகவே யிருப்பர். இவ்வுண்மையை நன்கு விளக்குதற்கு மெய்யாக நடந்த சில நிகழ்ச்சிகளை இங் கெடுத்துக் காட்டுதும்:

“தன் சொல்லுக்கு மேன்மையுந் தனக்குத் தலைமையும் பெறல்வேண்டுமெனப் பேரவாக்கொண்ட ஒரு மாது, எந்த வகையிலாவது தான் எண்ணியதைப் பெறுவதிற் கருத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய வெளிப்பகட்டையும் விடாப் பிடியையுங் கண்டு, அவள் சேர்ந்திருந்த ஓர் அறநிலைக் கழகத்தார் நம்பிக்கைக்கு இடமான ஓர் அலுவலை அவள்பால் ஒப்படைத்தனர். தன்னலந் தேடுவதில் இயற்கையிலேயே நினைவு கொண்ட அவளது அவாவினை, இங்ஙனம் வந்து வாய்த்த அவ் வலுவலானது பின்னும் மிகுதியாய்த் தூண்டி விட்டது. ஓராண்டு கழிந்ததும், அக் கழகத்தின் பொருள் வைப்பில் ஒரு பகுதியைக் கவர்ந்து, தன் செலவுக்குப்

பயன்படுத்திக் கொண்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு அவள் அவ் வேலையினின்று விலக்கப் பட்டாள். மற்று, அவள் அவ்வேலையில் அமர்ந்திருந்த காலத்தில், அவளுக்கு ஒரு பெண்பிள்ளை பிறந்தது. அப்பிள்ளை வளர்ந்துவரும்போது அதன் இயற்கை அதன் செய்கையிற் புலப்படத் துவங்குகை யிலேயே, எதனையும் மறைத்துத் தனக்கென எடுத்துக் கொள்வதிலுந், திருடு வதிலுமே அதன் எண்ணம் மிகுதியாய் ஓடிற்று. இவ்வாறு அதன் எண்ணந் தீய நெறியிற் செல்லுதற்கு, அதன் தாய் அதனைக் கருக் கொண்டிருக்கையிற் பழகிய திருட்டுத் தொழிலே காரணமாமென்பது திண்ணமாய்ப் பெறப்படு கின்றதன்றோ?"

"இன்னும் **வெர்மாண்டு** என்னும் ஊரிலிருந்த ஒரு மடந்தைக்கும் அவள் கணவனுக்கும் மனக்கசப்பு உண்டாகி அவள் அவனொடு சிலகாலம் பேசாதிருக்கும்படி செய்து விட்டது. அக் காலத்தில் அவள் கருக் கொண்டிருந்த மகவு பிறந்து வளர்ந்து பேசத் துவங்குகையில், தகப்பன் அச் சிறுவனையெடுத்துத் தன் மடிமீது வைக்கும் போதெல் லாம் அவன் வாய்பேசாமலே இருக்கக் கண்டான். இங்ஙனமே அச்சிறுவன் ஐந்தாண்டு வளர்ந்தும், தன் தகப்ப னுடன் மட்டும் வாய்திறந்து பேசுவதேயில்லை. தந்தையாயி னான் எவ்வளவோ முயன்று பார்த்தும், அவனைத் தன்னுடன் பேச வைக்க முடியவே இல்லை. கடைசியாக அவனை அடிப்பதாக அச்சுறுத்தியும், அடித்தும் அப்பையன் பெருமூச்செறிந்து புலம்பினனேயன்றித், தான் மிக முயன்றுந் தன் தகப்பனுடன் பேசுதற்குக் கூடாதவனே ஆயினான். அப் பையன் இப்போது பெரிய ஆளாகியுந், தான் தன் தகப்பனுடன் பேசுதற்கு முயன்றால் அது தன்னாற் கூடாமற் பெருமூச்செறிந்து புலம்பினபடியாகவே யிருக்கின்றான்."

இனிப், பொருள் சேர்ப்பதிற் பேராவல்கொண்ட ஒரு மங்கை, அவ் வவாவினால் தானுந் தன் வயிற்றிற்பிறந்த பிள்ளைகளும் பட்ட துன்பத்தை எடுத்தெழுதி யிருக்கிறாள்; அதனை இங்கே மொழிபெயர்த்து வரைகுதும்:

"யான் எனது இருபத்துநான்காம் ஆண்டில் மணஞ் செய்யப்பட்டேன்: என் பெற்றோர்களிடமிருந்து எனக்கு மிகவுந் திண்ணிய உடம்பு வாய்த்தது. என் கணவர் என்னிலும்

நான்கு ஆண்டு மூத்தவர்; அவர்க்குந் திருவருளால் மிக நல்லுடம்பு வாய்த்தது. ஆனால், யாங்கள் செய்யத் துவங்கிய முயற்சிதான் தவறானது; எது வந்தாலும் வரட்டும், நாம் பணக்காரராதலே செயற்பால தென்று உறுதி செய்தோம். யாங்கள் ஒரு பெரிய காணியைப் பயிரிடுதற்கு எடுத்துக் கொண்டோம்; எனது நல்வாழ்வுக்கு ஒரு பிளவைக்கட்டி போலப் பணஞ்சேர்க்கும் பேர்அவா என்னைப் பற்றிக் கொள்ளவே, ஒரு நாளைக்குக்கூட ஒரு கூலியாளை உதவிக்கு வைத்துக் கொள்ளாமல், இருபது பேர் கொண்ட ஒரு குடும்பத்தவர் செய்ய வேண்டிய அத்தனை வேலைகளையும், யான் கருக்கொண்டிருந்த காலத்திலேயும் யான் ஒருத்தியே ஓயாமற் செய்தேன். யான் முதலிற் பெற்றவை இரட்டைப் பிள்ளைகள். அப்போது என் வாழ்க்கையானது, பொதுவாய்க் குடியானவர்க்குரிய எளியதொரு வாழ்க்கை யாகவே யிருந்தாலும், இப்போதுள்ள நிலையில் அதனை எண்ணிப் பார்க்கையில் அஃதுடம்பின் நலம் பேணுதற்கு இசையாத கொழுமையுடைய தென்றே கருதுகின்றேன்.

'யான் கருவுயிர்ப்பதற்குச் சிறிது முந்தியே, தோலைப் பற்றிய சொறி என்முகங், கழுத்துக், கைகள் முதலியவற்றில் தோன்றியதுடன், என் பொருத்துக்களிலும் வீக்கம் உண்டா யிற்று. இது வெப்பத்தால் உண்டாயதென்றும், விரைவில் மறைந்துவிடுமென்றும் எண்ணினேன். ஆனால், என் எண்ணம் ஏமாற்றம் அடைந்தது; ஏனென்றால், யான் பெற்ற மிக மெலிந்த சிறுமகவுகளிரண்டும், எனது தவறான வாழ்க்கை நிலையால் எனக்கு உண்டான சொறிகளால் தாமும் மூடப்பட்டிருந்தன யானோ குழந்தைகளைப் பெறுதற்கு மிக விழைந்தேன்; தாயின் அன்புக்குமுன் யான் கொண்ட பொருளவா நிற்க மாட்டா தாயிற்று; என்றாலும், நான்கு திங்களுக்குள், நோயால் நைந்த அவ் விருமகவுகளுங் காலமாயின. யான் கடவுளால் ஒறுக்கப் பட்டேனாகவே எண்ணினேன்; முடிவாக என் ஊழ்வினை யின்படி நடக்கட்டு மென்று விட்டு, எனது துயரத்திற்கும் எனக்கும் ஏதொரு தொடர்புமில்லை யென்றே எண்ணினேன். அதன்பின்யான் பெற்ற மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது பிள்ளையும் அங்ஙனமே பிணிப்பட்டிருந்தமையாற்

சிறிதுகாலந் தங்கி அதன்பின் அவைகளும் இறந்து போயின. கடைசியாக, உயிரோடிருக்குங் குழந்தைகளைத் தவிர, மற்றவகையி லெல்லாம் என் பேரவா நிரம்பின.

"இறுதியாக, என் அன்புமிக்க தாய் நோய்ப்பட்டமையால், யான் வேறோர் இடத்திற்குப் போக வேண்டியவளானேன்; ஆறாவதாய் யான் சூல்கொண்டிருந்த அக்காலம் முற்றும், என் அன்னையை ஓம்பும் முயற்சியில் இருந்தேன். அங்ஙனம் யான் முன்போற் கடுந்தொழின் முயற்சியில் இல்லாமையால், எனக்குண்டான அத் தீவினை நிகழ்ச்சி களின் காரணங்களை என்னவென ஆராய்வதில் என் உள்ளம் இயற்கையாகவே திரும்பலாயிற்று. இறைவன், தான் வகுத்த ஒழுக்கமுறைகளினின்றும் வழுவுவாரைத் தான் வேண்டியபடியெல்லாம் ஒறுக்கின்றனனா? என்று நினைந்து பார்க்கையில், நம்மை அடக்கியாளும் பொருட்டு நமக்கு வகுத்துக் கொடுக்கப்ட்டிருக்கும் இயற்கை யொழுங்குகளினின்றும், நாம் வழுவி யொழுகுகையில் மட்டுமே, நமக்குக் கடவுளின் ஒறுப்பு வருகின்றதென்றும் நம்பிக்கை என் உள்ளத்தில் முதன்முதல் தோன்றுவதாயிற்று. யான் மகப்பெறுங் காலமும் வந்தது. யான் அடைந்த களிப்பினையும் நன்றியுணர்வி னையும் எண்ணிப் பார்மின்கள்! ஏனென்றால் மிகவும் அழகியனாய்ப் பிறந்து எனக்கு ஆறுதலைத் தந்து என்னை வாழச் செய்து உயிரோடிருக்கும் ஓர் அரும்பெறல் மகனுக்கு யான் தாயாயிருக்கப் பெற்றேன் அல்லனோ! அவனும் அவனுக்குப்பின் பிறந்த புதல்வியர் மூவரும் உயிர்வாழ் கின்றனரேனும், பெருஞ் செல்வந் தொகுத்தல்வேண்டி யான் செலுத்திய பிழைபாடுள்ள வாழ்க்கையினால் என் உடல்நலஞ் சிதைந்தமையின், என்னிலிருந்துவந்த அம் மக்களுடம்பும் மெலிவுடையவாகவே யிருந்தன."

இனிச் சூல்கொண்டிருக்கும் மகளிர் அழகிய அல்லா வடிவங்களையேனும், இயற்கைக்கு மாறான அமைப்புகளை யேனும் உற்றுநோக்குதல் ஆகாது; சிலகாற் பார்க்கும்படி நேர்ந்தால்; அவை தமது கருத்திற் பதியாமல், வேறு நல்ல துறைகளில் உடனே நினைவைத் திருப்புதல் வேண்டும். இங்ஙனம் செய்யாராயின், தாம் கருத்திற்பதித்த அருவருப் பான

வடிவங்களின் அமைப்புத், தம் வயிற்றிலுள்ள கருவிற் பதிந்துவிடும். இதற்கு இரண்டு உண்மை நிகழ்ச்சிகளை இங்கு எடுத்துக்காட்டுவாம்:-

*“அப்பம் விற்கும் ஒரு மாது தான் சூல் கொண்டிருந்த மூன்று திங்கள் வரையில் அத்தொழிலைச் செய்து வந்தாள். ஒரு கையில் இரண்டு பெருவிரல் முளைத்த ஒரு சிறு பிள்ளை நாடோறும் இவள்பால் அப்பம் வாங்க வரும். அப்பம் வாங்கக் காசு கொடுக்கும் போதெல்லாம் அப்பிள்ளை அக் காசினை அவ்விரண்டு பெருவிரல்களுக்கு நடுவே வைத்துக் கொடுக்கும். இவ்வாறு மூன்று திங்கள் கடந்தபிறகு அந்த மாது அப்பக் கடையை விட்டு வீட்டிலேயே தங்கினாள்; என்றாலுந் தன்பால் அப்பம் வாங்க வந்த அப்பிள்ளையின் இருபெருவிரல் வடிவம் அவள் உள்ளத்தில் அழுந்திப் பதிந்தது. பத்துத் திங்களுங் கழித்து அவள் ஈன்ற மகவின் ஒரு கையில் இரண்டு பெருவிரல் முளைத்திருந்தன.”*

*“இன்னும் ஒரு மாது ஒற்றைக்கை மட்டும் உள்ள ஒரு மகவினை ஈன்றாள். அக் குழந்தையின் மற்றைக் கை மணிக்கட்டிலிருந்து முழங்கை வரையில் வெட்டியெடுக்கப் பட்டதுபோல் இருந்தது. அஃது ஏன் அப்படிப் பிறந்தது என்று அம் மாதினை வினவ, அவள், தன் கணவனுடன் பிறந்தான் ஒருவன் தன் ஒரு கை முழங்கை வரையில் வெட்டி யெடுக்கப்பட்டவனென்றுந் தான் சூல்கொண்ட சில திங்கள்வரையில் அவன் தம்முடன் வந்திருந்தனனென்றும் விடை பகர்ந்தாள். அவனது நிலைமையை முன்னமே அறிந்திருந்தமையால் அவள் அவனைக் கண்டு திடுக்கிட்டி லள் ஆயினும், அவள் கருக்கொண்ட சில திங்கள் வரையில் அவள்பால் உண்டான மனப்பதிவானது அத்தகைய இடுக்கணை விளைவித்தது.”*

இவ்வாறு அருவருப்பான மனப்பதிவுகள் கருவின மைப்பை அருவருப்பாக்குதல் போலவே, அழகிய உயர்ந்த நல்ல மனப்பதிவுகள் தாயின் கருப்பையிலுள்ள மகவுக்கு அழகையும் உயர்வையும் நல்லியல்பையும் அமைத்து விடுகின்றன. இதற்குச் சில உண்மை நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டுதும்:-

மேல்நாட்டில் நிகரற்ற வெற்றி வேந்தனாய் விளங்கிய **நெப்போலியன்** என்னும் மன்னர் மன்னன் வரலாறு பெரிதும் வியக்கத்தக்க தொன்றாகும். அவன் மிக ஏழைமையான ஒரு போர் மறவனுக்குப் பிள்ளையாய்ப் பிறந்து, பின்னர் அஞ்சாநெஞ்சினனாயப் பல பெரும் போர்களை நடத்தி வெற்றி பெற்று வேந்தன் நிலைக்கு உயர்த்தப்பட்டவன். இவன் இத்தகைய உயர்ந்த நிலையை எய்துதற்கு அவன் தாயே காரணமாயிருந்தாள். அவன் தந்தை ஓர் ஏழைப்போர்மறவன். அவன் போர்மேற் சென்ற ஒரு காலத்தில் அவனைப் பிரிந் திருத்தல் ஆற்றாத அவன் காதல் மனைவியும் அவனோடு உடன்சென்றாள். அங்ஙனஞ் சென்ற போது அவள் நெப்போலியனைக் கருக் கொண்டிருந்தாள். போர்முனையிற் சென்ற காலங்களிலும், அவள் அவனுடன் குதிரைமேற் சென்று வந்தமையால் அவளுக்குச் சுறுசுறுப்பும் உடல்நலந்தரு பழக்க வழக்கங்களும் உண்டாயின. அப்போது அவள் அடிக்கடி பல தத்துகளுக்கும் இடர்களுக்கும் உள்ளா யினாள். சண்டையின் கொந்தளிப்பாலும் ஆரவாரத்தாலுஞ் சூழப்பட்டதோடு, அவற்றில் மிகுதியால் ஈடுபடவேண்டியும் இருந்தமையால், அவற்றால் வருந் திகிலிலுந் துன்பத்திலும் அவள் பழகி விட்டாள்; அதுவேயுமன்றி அவளுள்ளமும் அவற்றிற்கு இணங்கிவிட்டதோடு, ஒருவகையில் அவற்றின் கண் இன்பமும் எய்தலாயிற்று. இத்துணை அஞ்சா ஆண்மை நிலையிலிருந்த அத்தாய் வயிற்றிற் பிறந்தமையினாலேயே, நெப்போலியன் அடங்கா ஆண்மையும், போர்த்தொழில் புரிவதிற் பெருவேட்கையும் பேராவலும் வாய்ந்தவனாய் உலகமுழுதுந் தன்னடிப்படுத்த வல்லவனானான்.

***பர்னஸ்*** (Burns) என்னும் புலவர் பெருமானின் வரலாற்றை உற்று நோக்குவார்க்கு, அவர் தம் தாயின் சிறந்த மனநிலையால் தாமும் எவ்வளவு சிறந்த புலமைத் திறத்தை அடையலானார் என்பது நன்கு விளங்கும். "அவரின் அன்னையின் பிறப்புத் தாழ்மையானது தான்; அவளது அழகும் நடுத்தரமானதே; என்றாலும், மற்ற வகைகளி லெல்லாம் அவள் வியக்கத்தக்க ஒரு மங்கையாவள். அவளது உள்ளம் ஒருநிலைப்பட நிற்கும் பேறு வாய்ந்தது! அவளின்

சமயவுணர்ச்சியோ ஆழமும் உறுதியும் மிக்கது; அவள் தன் மணவாழ்க்கையை மிகவுந் திருத்தமாக நடத்துவதிற் பெரு விருப்புடையவள்; பல வகைப்பட்ட தனது வாழ்க்கையில் தான் களைப்புற்ற நேரங்களிலெல்லாந், தான் ஏராளமாய் நெட்டுருச் செய்து வைத்திருந்த இசைப் பாட்டுகளையுங் கதைப் பாட்டுகளையும் மகிழ்ச்சியுடன் பாடிக் கொண்டிருப் பது அவளது வழக்கம். தனது கட்பார்வையில் தன் மூத்த மகனை யொத்திருந்தாள்; அவளுடைய கண்கள் ஒளியும் அறிவும் வாய்ந்திருந்தன; ஒவ்வொருவர் இயற்கை நடை யினையும் விரைவில் நுட்பமாய்க் கண்டறிவள். அவள் நெடுங்காலம் உயிர்வாழ்ந்து, தன் மகன் பெரியவொரு நல்லிசைப் புலவனாய் விளங்குதலைக் கண்டு, அவன் தன் திறமையால் எய்திய பயன்களிற் பங்கு பெற்றாள்.''

இன்னும், ''ஒருவன் இசைபாடுவதில் வல்லனல்ல னாயின், அவனது பிறவியமைப்பில் ஏதோ பிழைபாடுளது என்னும் எண்ணமுடைய ஓர் இசைவாணன் சில ஆண்டு களுக்கு முன், இசையறிவு சிறிதுகூட வாயாத ஒரு மங்கையை மணந்து கொண்டான். இசைபாடுந் திறமை வாய்ந்த பிள்ளைகளைத் தன் கணவன் விரும்புதலும், அத்திறமை வாயாத பிள்ளைகளை அவன் சிறிதும் விரும்பாமையுங் கண்ட இம்மங்கை, இசையறிவு இல்லாத பிள்ளை தனக்குப் பிறந்துவிட்டால் என்செய்வ தென்று முதலிற் பெருந்திகில் கொண்டாள், என்றாலும், அத்தகைய பிள்ளை தனக்குப் பிறக்காலாகாதென்னும் மனவுறுதி மிக்கவளாய், ஒரு கின்னரப் பெட்டியை (Piano) வாங்கி, ஒவ்வொரு நாளுஞ் சில மணி நேரம் அதனை இயக்கித் தான் பாடக்கூடிய அளவு தன் குரலை அதன்கட் பழக்கிவந்தாள். இப்பழக்கத்தோடு, தன் பிறப்பு வளர்ப்பில் தனக்கில்லா விட்டாலுந் தன் தந்தைக் காவது ஓர் இன்பஊற்றாய் இருக்கத்தக்க பிள்ளையே தனக்குப் பிறக்க வேண்டுமென இவள் தன் முழுமூச்சுடன் கொண்ட ஓர் உரமான விருப்பமும் ஒன்று சேர்ந்தது. இங்ஙனம் உறுதி கொண்டு பழகிய இத் தாய்வயிற்றினின்றும் பிறந்த மக்கள் இருவர் உளர். இவர்கள் பிறவியிலேயே இசைப்புலமை வாய்ந்து வந்தமையால், இவர்கள் எந்த இசையையும் ஒருமுறை கேட்டதும் பாடவல்லவர்களாயுந்

தமக்கு முன்வைத்த எவ்வளவு சிக்கலான இசைக் கருவி கயையும் இயக்குந் திறமுடையவராயும் இருக்கின்றனர். இங்கொன்று நினைவிற் பதிக்கற்பாலதுளது; இப் பிள்ளை களின் அன்னை இசையில் மிக வல்லவளாய்ச் சிறிவா விடினும், இவள் கொண்ட மனவுறுதியும் விழைவுமே அவ்வளவு இசைப் புலமையிற் சிறந்த மக்களைத் தோற்று வித்தற்கு ஏதுவாயின வென்பதே அதுவாம்.

இன்னும், ஒரு தாய்க்கு மிகச் சுறுசுறுப்பான நல்லறிவு வாய்ந்த குழந்தை ஒன்றிருந்தது. அக் குழந்தைக்கு மூன்று திங்கள் ஆகையிலேயே அதன் அறிவின் துலக்கத்தைக் கண்டு அவள் நண்பர் எல்லாரும் வியந்து பேசுவாராயினர். அத்தாயோ அவர்களை நோக்கி, என் மகவுக்கு அவ்வளவு அறிவின் துலக்கத்தை யானே உண்டாக்கினேன் என்றாள். அதற்கு அவர்கள் நீ எப்படி அதனைச் செய்தாய் என்று வினவினர். உடனே அவள் ‘பள்ளிக்கூடத்தில் யான் பாடங் கற்பிக்கும் பிள்ளைகளிற் பெரும்பாலார், யான் சொல்லிக் கொடுப்பதையே தெரிந்து கொள்ளமாட்டாத அத்தனை மழுங்கலான அறிவுடையவர்களாயிருந்ததைப் பார்த்து என் பிள்ளை அவர்களைப்போல் இருக்கலாகாதெனவும், சொல்வ தெதனையும் மிகுவிரைவில் தெரிந்து உணர்ந்து கொள்ளக் கூடிய அறிவுவிளக்கம் வாய்ந்ததாயிருக்க வேண்டு மெனவும் விழைந்து, அவ்விழைவிலேயே என்னுள்ளத்தை நிறுத்தி வந்தேன்; அதனால் நல்ல பயன் விளையுமென்றும் எதிர்பார்த் திருந்தேன். இங்ஙனம் யான் நினைத்தபடியே செய்யக் கூடுமென அறிஞர் சிலர் சொல்லக் கேட்டேன்; அஃதவ்வாறே ஆகக் கூடுமென்பதில் யான் இப்போது உறுதி கொண்டிருக்கின்றேன்’ என மறுமொழி தந்தாள்.

இவ்வுண்மையை எம் அருமைப்புதல்வி **நீலாம்பிகை** யினிடத்துக் கண்ட வரலாற்றினைவும் இங்கு ஒரு சிறிது வரைகின்றேம். **நீலாம்பிகை** தன் தலைமகள் **மங்கையர்க் கரசியைக்** கருக்கொண்டிருந்த ஞான்று, நோயில்லாத உடல்நலமும், அறிவுநலமும், மனக்களிப்பும் வாய்ந்து திருஞானசம்பந்தப் பெருமான் வரலாற்றை அடுத்தடுத்து ஓதுவதிலுஞ், செந்தமிழ்க் கட்டுரைகள் எழுதுவதிலும் உள்ளம்

ஈடுபட்டு நின்றனர். இத்தகைய சிறந்த உடல்நல மனநலங்கள் வாய்ந்தபோது உண்டாகிப் பிறந்தமையால், **மங்கையர்க் கரசி**யென்னும் அவர்தஞ் சிறுமி திண்ணிய உடல்நலமுந் தெளிந்த அறிவுங் கல்வியில் விருப்பமும் அமைதியும் வாய்ந்த வளாய்க், காண்பாரெல்லார்க்கும் பெற்றார்க்கும் வியப்பும் மகிழ்ச்சியும் விளைத்து வருகின்றாள். மேலுங் கடவுளில்லை யென்று பாழ்ங் கொள்கை பேசித் திருஞான சம்பந்தப் பெருமான் முதலான நம் தெய்வ ஆசிரியரை இகழ்ந்து ஆரவாரம்புரிந்த ஒரு புதுக் கூட்டத்தாரை எதிர்த்து, அவருடைய பாழ்ங் கொள்கைகளை மறுத்து, யாம் அஞ்சா ஆண்மையோடும் உள்ளக் கிளர்ச்சியோடும் ஓரவைக்களத்திற் பேசியஞான்று. மங்கையர்க்கரசியைக் கருக்கொண்டிருந்த நீலாம்பிகையும் அவ்வவைக்களத்திற் போந்து எமது விரிவுரை யினைக் கேட்டனர். அங்ஙனங் கேட்டமையால், யாம் அப்போது இருந்த ஆண்மைநிலை அம்மகவின் மூளையில் நன்கு பதியப்பெற்றுப் பிறந்தமையின், அது பிறந்து வளர்ந்த சில திங்களில் எல்லாம் ஆண்மைத்தன்மையொடு கைகளை மடக்கி யெடுத்துக் கண்களைப் பரக்க விழித்து நகைத்து விளையாட்டுக் காட்டும்.

இங்ஙனமெல்லாந் தாயானவள் தன் நினைவுக்கு ஏற்றபடிவாகவும், அந் நினைவினைத் தாக்கும் உணர்வு களுக்கு ஏற்றபடியாகவுந் தன் வயிற்றகத்தே உருவாகுங் கருவின் இயற்கையை அமைப்பவளாய் இருக்கின்றன ளென்பதை எல்லாரும் நினைவிற் பதித்து வைத்தல் வேண்டும். இத் தமிழ்நாட்டின் கண் உள்ள மாதர்களில் மிகச் சிலரைத் தவிர மற்றையோரெல்லாருங் கல்வியறிவு சிறிதும் இல்லாத விலங்குகளாகவே இருத்தலாலும், அவர்கட்குப் பெற்றோராகவும், உடன் பிறப்பினராகவுங் கணவராகவும் வாய்ப்போரும் அவர்களைப் போலவே கல்வியறிவு பெறாத விலங்குகளா யிருந்தலாலும், இவர்களிடையே பிறக்கும் பிள்ளைகளும் இவ் விலங்கின் குட்டிகளாய் இருக்குமல்லது; அழகிலும் அறிவிலும் அன்பிலுஞ் சிறந்த உயர்ந்த மக்கட் பிறப்பினராதல் யாங்ஙனங் கைகூடும்? எந்த நாட்டிற் கல்வியுங் கற்றோர் கூட்டமுங் கல்விக்கேற்ற உயர்ந்த நாகரிக வாழ்க்கையும் மிகுந்திருக்

கின்றனவோ, அந்த நாட்டிலேதான் வழிவழியாக உயர்ந்த மக்கள் உண்டாகுவர். பாருங்கள்! உலக மெங்கணுங் கல்விஅறிவு ஆராய்ச்சியிலும் நாகரிக வாழ்க்கை யிலுந் தலைசிறந்தாராய்க் திகழும் மேல்நாட்டு வெள்ளைக் கார நன்மக்களின் கால் வழியில் வருவோ ரெல்லாம் அவரை யொப்பவே முன்னேற்றத் தில் முனைந்து நிற்கின்றனர். மேல்நாட்டவருள்ளும் **ஸ்காத்லாந்து** தேயமக்கள் ஏனை நாட்டவரைவிடக் கல்வியறிவு ஆற்றல் தொழின் முயற்சி முதலிய எல்லாவற்றிலுந் தலைசிறந்து நிற்கின்றார்கள்; இதற்குக் காரணம் என்னென்றால்: "ஸ்காத்லாந்திலுள்ள குடியானவர்கள் தம்முடைய குடிசை களைப் பள்ளிக்கூடங்களாக்கி விடுகின்றனர்; மாலைக் காலத்திற் கதகதப்புக்காக வளர்க்குந் தீயின் பக்கத்தே கைந்நாற்காலியிலமர்ந்திருக்குந் தந்தையானவன் தான் அறிந்த செய்திகளைத்தன் பிள்ளை களுக்கு அறிவிப்பதில் தவறுவ தில்லை. அவனுக்குள்ள கலையறிவு சிறியதும் அன்று; ஐரோப்பா தேயவரலாறு முற்றுந், தனது பிரித்தானிய தீவின் இலக்கியங்களும், அவற்றுள்ளும் முதன்மையாய்த் தெய்வத்தைப் பற்றிய நூல்களும், பாடல்களும், ஸ்காத்லாந்து நாட்டின் வரலாறும் அவன் நன்கறிந்திருப்பன். வரலாற்று நூல் எழுதுவார்க்குந் தெரியாத வீட்டுச் சண்டை சச்சரவுகளும், நாட்டவர் பேராண்மைகளும் முற்றுகைகளும் இவைபோல்வன பிறவும் அறிவுள்ள ஒரு குடியானவன் தெரிந்திருப்பன். இசைப் பாட்டுகளுங் கதைப்பாட்டுகளும் அவன் மிகுதியாய் உருவேற்றியிருப்பன். நீண்ட காவியப் பாட்டுகளுஞ் சிலகால் அவன் நினைவிலிருக்கும் ஸ்காத்லாந்திற்குப் பெருமைதந்த பெருமக்களின் செயல்களும் வாழ்நாள் வரலாறுகளுஞ் சிறிதேனுந் தெரிந்திருந்தாலல்லாமல் அவன் தனது கல்வி யறிவைப் பெரிதாக எண்ணுவதில்லை. அவன் தனது நினைவிற் பதியவைத்தனபோக, அவன் தனது அலமாரியில் வைத் திருப்பன யாவை என்பதுஞ் சிறிது கூறுவேம். பொது வான ஒவ்வொரு குடியானவனுக்குஞ் சிறியதொரு நூல் நிலையம் உரியதாயிருக்கும் வரலாற்று நூல்கள் தெய்வ நூல்கள் என்னும் இவற்றுடன், நல்லிசைப் புலவர்கள் இயற்றிய செய்யுள் நூல்கள் இவனிடம் மிகுதியாய்த் தொகுப்பப் பட்டிருக்கும். **மில்டன்**

(Milton) யங் (Young) என்னும் நல்லிசைப் புலவர்கள் பாடிய பாக்களில் அவர்கட்கு விருப்பம் மிகுதி” என்று அந் நாட்டவர் தங் கல்வியறிவின் ஏற்றத்தைச் சொல்லிக் கொண்டு போம் **கவ்வன்** என்னும் மருத்துவ ஆசிரியர், இக் காரணத்தினாலே தான் ஸ்காத்லாந்து, மற்றை நாடுகளைவிட இயல்நூற் புலமையிலுங் கலைநூற்புலமையிலுஞ் சிறந்த ஆசிரியரைப் பெருந் தொகுதியாய்த் தோற்றுவித்தது என்று முடித்துக் கூறுகின்றார்.

இங்ஙனம் ஒரு நாட்டிலுள்ள மக்கள் எல்லாருங் கல்வியில் வேட்கையும் புலமையும் உடையராய்த் திகழ்வார் களானால், அவர் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளெல்லாரும் அறிவற்றால் களில் மேன்மேற் பெருகிச் சுடரொளி ஞாயிறு போற் றுலங்குவார்களென்பதில் ஐயமென்னை? கல்வி யறிவும் ஆராய்ச்சியுணர்வும் உயர்ந்த நோக்கமும் கடவுள் நினைவும் அன்பும் உதவியும் இல்லாத மக்கள் வகுப்பு வெறு விலங்கினத்தோடு ஒப்பதாயிருத்தலின், எல்லா அறிவும் உடைய முதல்வன் உயர்ந்த அறிவுடைய உயிர்களை அவ் வகுப்பின்கட் டோற்றுவியாமல், வேறு விழுமிய உணர் வொழுக்கமுடைய இனங்களிலேதாம் அவர்களைத் தோற்றுவிப்பன், ஓரோ வொருகாற் **சேற்றிற் செங்கழுநீர் தோன்றி னார்போல,** உயர்ந்த உணர்வொழுக்க மில்லா ரிடையே உயர்ந்தோர் சிலர் அருகித் தோன்றினாலும் அவ்வுயர்ந் தோராற் பெறத்தக்க பெரும் பயனை அக் கீழ்மக்கள் பெறாரா கலின், அவர் அருமை யறிந்து அவர்க்குச் சிறப்புச் செய்து அவர்பாற் பெறும் பயன் எய்துவார் வேறு சிறந்த இனத்த வரே யாவர். நறுமணங் கமழ விரிந்த செறியிதழ்ச் செந்தா மரையின் பக்கத்தே நாளுந் தவளையிருப்பினும் அஃது அதன் இன்சுவை நறவைப் பருகல் அறியாது; தொலைவிலிருந்து வரும் வண்டினமே அதனைப் பருகிப் பெரிதும் இன்புறும். ஆகவே, அறிவிலும் ஆராய்ச்சி யிலும் நுண்ணுணர்விலும் அன்பிலும் அன்பொழுக்கத்திலும் ஒரு கூட்டத்தார் எவ்வளவுக்கு மேன்மேற் பெருகுகின்றனரோ, அவ்வளவுக்கு அவர்பால் அறிவுடையோர் தொகை தொகை யாய் வந்து பிறப்பர் என்று அறிதல் வேண்டும். இதனாலன்றோ பார்ப்பனர் வேளாளர் முதலான இனங்களில் அறிவான்

*மிக்கார் மிகுதியாய்க் காணப்படுகின்றனர். மற்று, அவரல் லாத மற்றை யினங்களிலோ அறிவிற் சிறந்தார் தொகை வரவர அருகிப்போதலுங் கண்கூடாய் அறியப்பட்ட தொன்றாகும்.* **வயிற்றுப் பிழைப்புக்காக எந்த இனத்தார் எந்தத் தொழிலைச் செய்ய நேர்ந்தாலுந், தாம்செய்யும் அத் தொழிலாற் பிறவுயிர்க்குத் துன்பம் வராமற் பாதுகாத்து ஒழுகிக்கொண்டே, தமது அறிவைக் கல்வியாராய்ச்சியிலுங் கடவுள் வழிபாட்டிலும் பிறர்க்குதவி யாற்றுவதிலும் புகச் செய்து, தாமுந் தம்மைச் சார்ந்தாருந் தூயராய் வாழ்வதிற் கருத்தூன்றி நிற்றல் வேண்டும்**. *அங்ஙனம் நிற்பார் எவராயினும் அவர்பாற், சிறந்தோர் பிள்ளைகளாய்த் தோன்றி அவரது காலினை நீண்ட வாழ்நாளிலும் நிலையான இன்பத்திலும் வழிவழிப் பெருகச் செய்வர் என்க.*

## 5. மகப்பேறும் மக வளர்ப்பும்

*கருக்கொண்ட மகளிர் அக் கருவினை உயிர்க்குங் காற்படுங் கொடுந் துன்பத்தையும் அல்லது கருவுயிர்க்க முடியாமல் இறந்து படுவதையும் எண்ணிப் பார்க்குங்கால் நெஞ்சம் நடுங்குகின்றது. அது நீராய் உருகுகின்றது. இவ்வாறவர் துன்பப்படுவதும் இறந்து படுவதும் ஏன்? இவற்றிக்குக் காரணம் யார்? மக்களா அல்லது மக்களைப் படைத்த கடவுளா? நாம் கேளாதிருக்கவும், ஏனை எவராலும் படைத்துக் கொடுக்க முடியாத மிகச்சிறந்த இவ்வுடம்பையும், இவ்வுடம்பிலிருந்து நாம் நுகருதற்குப் பல்வேறு வகையான அரும்பண்டங்களையும், இவை யெல்லாமிருந்து நடை பெறுதற்கு மிக வியப்பான இவ்வுலகத்தையும் நமக்குப் படைத்துக் கொடுத்த இறைவன் நம்மிடத்து எவ்வளவு அன்பும் எவ்வளவு அருளும் உடையனவாக இருத்தல் வேண்டும்! இவ்வளவும் அவன் நமக்குத் தந்தது, நாம் அவற்றால் இன்பத்தையடைய வேண்டுமென்னும் நோக்கம் பற்றியே யல்லாமல் துன்பத்தை அடையவேண்டு மென்னுந் தீய எண்ணம் பற்றியதாய் இருத்தல் ஆகாதே. இறைவன் நமக்காக அமைத்துக் கொடுத்திருக்கும் இவ்வியத்தகும் அமைப்புகளை ஆராயுந்தோறும், அவன் நம்பால் வைத்திருக்கும் அன்புக்கும் அருளுக்கும் ஓர் எல்லையே இல்லை யென்பது நன்கு விளங்காநிற்கும். இறைவன் வகுத்திருக்கும் அமைப்புகளின் அருமையையும் நோக்கத்தையும் ஆராய்ந்து பார்க்கமாட்டாத மடவோரே கடவுண்மேற் குற்றஞ் சொல்வர்கள். மற்றுக், கடவுளமைப்பின் நன்மையையும், அதற்கு மாறாய் நடக்கும் மக்கள் நடையின் தீமையையும் மாறிமாறி ஆழ்ந்தாராய்ந்து பார்க்கவல்ல அறிஞர்க்கோ, மக்கள்படும் அளவிறந்த துன்பமெல்லாம் அவர்கள் தஞ்செயலால் வருவித்துக் கொள்வனவேயாமென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல்*

தெள்ளிதின் விளங்கும். மக்களினுந் தாழ்ந்த விலங்கினங்களிந் கருக்கொண்ட பெண் விலங்கு அக்கருவை உயிர்க்குங்கால், நம் பெண்மக்களைப் போல் துன்பப்படக் கண்டதுண்டோ? இன்னும் மக்களிலேயேநாகரிகத்திற் குறைந்தவராகக் கருதப்படும் **வில்லியர் வேட்டுவர் பள்ளர் பறையர்** முதலான இனங்களில் உள்ள பெண் மக்கள் தாம் கருவுயிர்க் குங்கால் இங்ஙனம் பெருந் துன்பமுறக் கண்ட துண்டோ? அல்லது அவரிற் கருவுயிர்க்க முடியாமல் இறந்துபட்ட வரைத்தாம் கண்டதுண்டோ? இல்லையே. அங்ஙனமிருக்க, நாகரிகமுள்ளவர்களாக எண்ணப்படும் இனத்தவர்களில் மட்டும் பெண்பாலார் கருக்கொண்ட காலந்துவக்கிப் பெருந்துன்பம் உழத்தலும்; அக்கருவினை யுயிர்க்குங்கால் அதனை எளிதில் உயிர்க்க மாட்டாமல் ஆங்கில மருத்துவர் கருவி கொண்டெடுக்கு மளவு ஆற்றொணாத் துயர்க்கடலிற் படுதலும், அல்லது தாமுந் தங்கருவும் உயிரிழத்தலும் என்னை? என்று கூர்ந்து பார்க்குங்கால், இவர்கள் இங்ஙனம் துன்புறுவது, தாங் கைக் கொண்ட பொல்லாப் பழக்க வழக்கங்களினாலேயே யல்லாமல் இறைவன் அமைத்த அமைப்பினால் அன்றென்று நன்குணர்கின்றேம். அங்ஙனமாயின், நாகரிக இனத்தார் கொண்ட பொருந்தாப் பழக்க வழக்கங்கள் யாவையெனிற் காட்டுதும்.

ஏழையெளியமக்கள் தமக்குள்ள வறுமையினாற் கொழுமையான உணவுகளை அடுத்துடுத்து சாப்பிடுவதற்கு இயலாதவர்களாய் இருக்கின்றார்கள். பசியெடுத்த வேளையிற் **கேழ்வரகு சோளக்கூழோ** அல்லது **சோறோ கீரையோ** கிடைத்தமட்டில் உட்கொண்டு, நெற்றித் தண்ணீர் நிலத்தில் விழப் பாடுபடுகின்றார்கள். ஒரு நாளுக்கு இரண்டு வேளை நல்லுணவும் இவர்கட்குக் கிடைப்பது அரிது. இவர்களுடம்பின் அகத்தும் புறத்துமுள்ள உறுப்புகள் உழைப்பினால் மிகுந்த வலிவேறப் பெற்றிருப்பதுடன், உடம்பினுள்ளோடுஞ் செந்நீரும் வேண்டியவளவு சூடு உடையதாகி எங்குஞ் செவ்வனே பரவித், தன் கண் அவ்வப்போது வந்து சேரும் அழுக்குகளாகிய நஞ்சையும் வியர்வையாக உடனுக்குடன் வெளிப்படுத்தி விடுகின்றது. உணவினாற் செந்நீரில் ஏறிய வலிவிற் போதுமான பகுதி உழைப்பினாற் குறைபடுதலின் அக் குறைவினை நிறைவு

செய்தற்கு அவர்கட்கு நல்ல பசியெடுக்கின்றது; அங்ஙனம் பசியெடுக்கின்ற வேளையில் எளிதிலே செரிக்கத்தக்க கொழுப்பு மிகுதியாயில்லாத உணவை அவர்கள் உட் கொள்ளுதலால், அவர்கள் உண்ட உணவிற் பெரும்பகுதி நன்றாய்த் செரித்துச் செந்நீராக மாறி உடம்பை நோய் அணுகாமல் வலிவாக்கி நன்கு வளர்க்கின்றது. மேலும், அவர்கள் வெயில் வெளிச்சத்திலுந் தூயகாற்றிலும் வெளியே நடமாடுகின்றவர்களாயிருத்தலால், அவர்களுடம்பு இயற்கை வளர்ச்சி யுடையதாயும் நோய் அணுகப் பெறாததாயும் இருக்கின்றன. இவ்வேழை மக்களில் எவரேனும் பருத்திப் பொதிபோற் குறுக்கே வளர்ந்த உடம்பு வாய்ந்தவரா யிருக்கக் கண்டதுண்டோ? இயற்கையில் எவ்வளவினதாய் இருக்க வேண்டுமோ அவ்வளவினதாக வளர்ந்த திண்ணிய யாக்கை யுடையராயன்றோ அவரெல்லாம் இருக்கக் காண்கின்றேம்.

இனிச், செல்வம் உடைய மக்களைப் பாருங்கள்! இவர்களில் ஊன் உண்பவர்கள் மிகவுங் கொழுப்பான **ஆட்டிறைச்சி கோழியிறைச்சி மீனின்** தசை முதலிய வகைகளைத் **தேங்காய் முந்திரிப் பருப்பு** முதலான பல்வகைத் கொழும் பண்டங்களுடன் சேர்த்து நெய்யிற் பதப்படுத்தி வைத்துக் கொண்டு, நெய் பாலிற் சமைத்த உயர்ந்த சோற்றையும், **உழுந்து கடலை கோதுமை** முதலியவற்றாற் பாலேட்டிலும் வெண்ணெயிலுஞ் செய்த சர்க்கரைப் பாகு இலட்டுகம் முதலான இனிய திண்பண்டங்களையுங், **வடை தோசை அப்பம் உப்புமா** முதலான சிற்றுண்டிகளையுங், **காப்பி தேயிலை கொக்கோநீர் ஆவிநீர்** (Aerated Waters) முதலான **பருகு நீர்களையுங், கோழிமுட்டை வாத்து முட்டை** முதலியவற்றால் ஆக்கிய **அடைகள் குழம்பு** களையும், இன்னும் இவைபோல் எம் சொல்லளவில் அடங் காத எத்தனையே வகையான பண்டங்களையும் நெய் ஒழுக ஒழுக வேளைநேரம் அறியாமல் நாள் முழுதும் இரவிலும் உட்கொண்ட வண்ணமாய் இருக்கின்றார்கள். இவர்களிற் **சாராயம்** முதலான மயக்கந்தருஞ் சாறுகளைக் **குடிப்பாரும், ஓயாமல் வெற்றிலை பாக்குப் புகையிலை** மெல்வாரும், **புகைச் சுருட்டுப்** பிடிப்பாரும், **அவின் தின்பாரும்** பலர் உளர். இவ்வளவுந் தின்னும் பூதங்களாகிய இவர்கள் வேலை வெட்டியாவது செய்கின்றார்களோ வென்றால் அதுவும்

இல்லை. தமக்குரிய இன்றியமையாத வீட்டு வேலைகளையும் ஏவற்காரரைக் கொண்டே செய்விக்கின்றார்கள். வேலைக் காரரை நெருக்கிப் பிழிந்து வேலைவாங்கும் இவர்கள் தாம் இருந்த இடம்விட்டு அசைவதுமில்லை; எச்சில் உமிழ்வதற் கோ பக்கத்திற் பணிக்கம்; ஆடை கட்டுவதற்கோ தோழன் தோழிமார் உடம்பு குளிப்பதற்கும், ஒப்பனை செய்வதற்கும், உணவிடுவதற்குங் கைகழுவி விடுதற்கும் ஊழியக்காரர். நெருப்பண்டை போனால் உடம்பு எரியுமென்று இவர்கள் அடுப்பண்டையுஞ் செல்லார்; வெயிலிற் போனால் உடம்பு கருத்துப் போகுமென்று இவர்கள் வெயிலிலுஞ் செல்லார்; குளிர்ங்காற்றுப் பட்டால் மூக்கிற் சளி பிடித்துக் கொள்ளு மென்று காற்றிலுஞ் செல்லார். இத்தகையவர் உடம்பில் நல்ல இரத்தம் இருக்குமா? அவ்விரத்திலுள்ள நச்சுநீர் அவ்வப்போது வெளிப்படுதற்கு இடனுண்டா? இவர்கள் உடம்பின் அகத்தும் புறத்தும் உள்ள உறுப்புகள் செவ்வனே அசைந்து வலி வேறுதற்கு வழியுண்டா? ஒன்றுமே இல்லை. இந்த நிலைமையில் இவர்கள் எப்படி யுயிர்பிழைத் திருக்கின்றார்கள் என்பதை நினைந்து பார்த்தால் அஃதொரு பெருவியப்பாகவே யிருக்கின்றது! எப்படியோ உயிர் பிழைத்திருந்தாலும் இவர்களது வாழ்க்கை தொடர்பான துன்பமுடையதாகவே காணப்படுகின்றது. எங்ஙனமென்றால், இவர்கள் அடுத்தடுத் துண்ணுங் கொழுவிய வுணவு உயிற்றிலே சென்றால் எளிதிற் செரிப்பதில்லை; முன்னுண்டது அரைவாசிகூடச் செரியாம லிருக்கையிற் பின்னுங் கொழுமையான உணவுகளைத் துறத்திய வண்ணமாய் இருப்பதால், இங்ஙனஞ் சுமைசுமையாக வந்துசேரும் பண்டங்களை அரைப்பதற்கு நரம்பாலுந் தோலாலும் ஆக்கப்பட்ட தீனிப்பையானது இயலாதாய், அவற்றோடு **உரைசிப் புண்ணாகிக் கொடிய வயிற்றுளைவு இரத்தக்கழிச்சல்** முதலான துன்பம் மிகுந்த நோய்களை உண்டாக்குகின்றது. இரும்பாற் செய்யப்பட்ட திரிகையிலிட்டு இப் பண்டங்களை அரைத்தாலோ அது சில நாளில் தேய்ந்து போகின்றது. மெல்லிய தோற்பை யாகிய தீனிக்குடல் இவைகளை அல்லும் பகலும் புண்படாமல் எங்ஙனம் அரைக்க மாட்டும்? நோய் வந்த பிறகாவது இவர்கள் சும்மாயிருக் கின்றார்களா? உடனே மருத்துவரை வருவித்து மருந்துமேல் மருந்துவாங்கி உண்பதுஞ், "சுடச்சுடக்

காப்பித்தண்ணீர் அருந்தலாமா? பத்தியமாக வெள்ளாட்டுக் கறி சேர்த்துக் கொள்ளலாமா? கோழிக்குஞ்சு மிளகுசாறு குடிக்கலாமா? முட்டையுஞ் சாராயமுங் கலந்து சாப்பிட லாமா? ஆவியுப்பு நீரும் (Soda) பாலுங் கலந்து குடிக்க லாமா? சுதும்புக்கருவாடு திருக்கைக் கருவாடு தொட்டுக் கொள்ள லாமா?" என்று இங்ஙனமாக ஓயாமற் பத்தியவுணவு கேட்பதில் மருத்துவர் ஆவியை வாங்குவதும், அவர் எங்கே தமக்குவரும் வருவாய் கெட்டு விடுமோ என அஞ்சி "அதிற் சிறிது சேர்த்துக் கொள்ளலாம், இதிற் சிறிது சேர்த்துக் கொள்ளலாம்" என்று சொல்ல அதனையே சாக்காகக் கொண்டு அப் பண்டங்களை மேலும் மேலும் அடைப்பதுஞ் செய்கின்றார்கள். நோய் கொண்ட காலத்தும் இவ்வாறுண்ணவே தீனிப்பையானது இவைகளை ஏற்றுக் கொள்ளமாட்டாமற் புறந்தள்ள, அவர்கள் அவைகளைக் கக்கி விடுகின்றார்கள். இங்ஙனங் கக்கிய பிறகாவது சும்மாவிடுகின்றார்களா? இல்லை இல்லை "மகளுக்கு இளைப்பு வந்துவிடுமே, மாவுக் கஞ்சியாவது சோடா பாலாவது மிளகுநீர்ச் சோறாவது கொடுங்கள்" என்று சொல்லி, அருகிற் கூற்றுவன் தூதர் களைப் போற் சூழ்ந்து கொண்டிருக்கும் அறிவில்லாப் பெண்கள் பின்னும் விடாமல் அவ்வுணவுப் பொருள்களை வலிந்து கொடுக்கின்றார்கள. நோயாளி தன்னால் ஒருசிறிதும் உள்கொள்ளல் முடியா தென்று சோர்ந்து படுக்கும்வரையில் அருகிலிருப்பவரும் விடுவதில்லை. மருவத்துவரும் மருந்து மேல் மருந்து கொடுப்பதை நிறுத்துவதில்லை. இந்த அறிவில்லா இரங்கத்தக்க நிலையிற் செல்வரில்லத்துப் பெண்பாலார் ஆண்பாலாரில் எத்தனையோ பேர் ஆண்டு முதிரா இளம்பருவத்திலேயே இறந்து படுகின்றனர். தப்பித் தவறிப் பிழைப்பவர்கள் என்போர், உணவும் மருந்தும் உட் கொள்ள முடியா நிலைமையிற் சிலநாள் சோர்ந்து கிடக்க, அப்போது உள்ளுள்ள தீனிப்பை முதலிய கருவிகள் சுமை நீங்கித் தத்தம் நிலைக்குவந்து, தந்தந் தொழில் களைச் செவ்வனே செய்யத்துவங்க, அந்நேரத்திற் பால் நீர்க்குமேற் பிறிது ஏதும் உட்கொள்ள வியலாத பதத்திலிருந்து நோய்நீங்கிப் பிழைத்தெழுபவர்களேயாவர். இவ்வாறு துன்பப்பட்டுப் பிழைத்தெழுந்த பிறகாவது இவர்கட்கு நல்லறிவு வருகின்றதா வென்றால், இல்லை, இல்லை. தாம் நோய்வாய்ப் பட்டது,

அடுத்தடுத்துக் கொழுமையான உணவுகளை உண்டதனாலே தான் என்பதைச் சிறிதும் உணராமல், "அது மாரிகுற்றங் காளிகுற்றம் மலையான் குற்றம் பூவாடைக்காரி குற்றம்" எனப் பெரிதும் பிழைபட நினைந்து, மாரிக்குக் காப்புக் கட்டுகிறவர்களும் வேங்கட மலை யானுக்குக் காணிக்கை செலுத்துகிறவர்களும். முனீசுவரனுக்கு ஆடு கோழி வெட்டிப் பூசை போடுகிறவர் களுமாய்ப், பின்னும் பின்னுந் தமது பழைய வழக்கப்படியே வாய்கொண்ட மட்டும் வயிறு பிதுங்கும் மட்டுந் தின்றுதின்று, தாம் நோய்க்கு இரையாகி மடிவதல்லாமல், தம்வயிற்றிற் பிறந்த பிள்ளைகளையும் நோய்க்கு ஆளாக்கி விரைந்து மடியச் செய்கின்றார்கள்! தம் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளையும் நோயணுகாமற் பாதுகாக்கும் வகை யறியாத விலங்குகட்கு ஏராளமான செல்வமிருந்து பயன் என்ன? அச்செல்வமானது அவர்களை மேலும்மேலும் நோய் வாய்ப்படுத்துக் கூற்றுவனுலகுக்கு வழிகாட்டி விடுப்பதாயிருக் கின்றதே யன்றி வேறில்லையே!

இனிச், செல்வர் வீட்டு மகளிரைப் பார்த்து, நடுத்தர நிலையிலுள்ள மாதர்களும் கொழுமையான உணவு களையுங், காப்பி தேயிலை முதலியன சேர்ந்த நச்சு நீரையும் உட்கொள்வதுடன், தமது வீட்டு வேலை ஒவ்வொன்றுக்கும் வேலைக்காரரை அமர்த்தச் சொல்லித் தம் ஆடவரையுந் துன்புறுத்துகின்றார்கள். இயற்கைக்கு மாறான இவ்வொழுக லாற்றல் தாம் பெரிதுந் துன்புறுவதொடு தம் வயிற்றிற் பிறக்கும் பிள்ளையையுந் துன்புறச் செய்து, விரைவில் வறியவர்களாகிக், கூலிவேலை செய்வதற்கும் இயலாதவர் களாய்க் கடைசியில் ஐயம் ஏற்றுண்டு வாழ்நாட் கடத்து கின்றார்கள்.

ஆகவே, செல்வராயிருப்பினும், ஏழைகளாயிருப்பினும், நடுத்தரவாழ்க்கையிலிருப்பினும் இயற்கைக்கு மாறுபடாமல் நடந்து வருபவர்களுக்குப் பிள்ளைப் பேற்றினால் ஏதொரு துன்பமும் விளையாதென்றறிந்து கொள்க. **கருக்கொண்ட மகளிர் தமது வீட்டுவேலையைத் தாமே மனம் வைத்து மகிழ்ச்சியோடு செய்தல் வேண்டும்.** மிகவுஞ் சுமையான தண்ணீர்க்குடந் தூக்குதல் முதுற் சில கடுமையான வேலை களை மட்டும் பிறரையாவது ஏவற்காரரையாவது கொண்டு

செய்வித்துக் கொள்ளல் வேண்டும். ஏனைச் சமையற் றொழில், வீடுகூட்டி மெழுகித் துப்புரவு செய்யுந் தொழில் முதலியன வெல்லாம் அவர்கள் தாமே செய்தலே நன்று. ஆனால், இத் தொழில்களைச் செய்யுங்கால் இளைப்புக் களைப்பு வரும் அவ்வளவுக்கும் அவற்றைச் செய்தலாகாது; இளைப்புக்கு இடஞ்செய்யும் வேலைகளை இடையிடையே பிறருதவி கொண்டு செய்தல் வேண்டும். இவ்வாறு வீட்டு வேலைகளை அளவறிந்து செய்வதனாலும், அவற்றை நாளுக்குநாட் பெருக்காமல் உயிர்வாழக்கைக்கு வேண்டிய வளவிற் கொணர்ந்து சுருக்கிச் செய்தலாலும் உடம்பினுள்ளும் புறம்புமுள்ள உறுப்புகளெல்லாம் அசைய வேண்டும் அளவு அசைந்து வலிவேறித் தாயின் உடம்பையும் அவளுடம்பகத் துள்ள கருவையும் நோயணுகாமற் செவ்வையாக வளர வைக்கும்: வீட்டுச் செலவைச் சிக்கனமாக்கிக் குறைத்துச் செய்வதனால் வறுமையின்றி வளமாய் வாழலாம். சிலர் இல்லங்களிலே எந்நேரமும்உண்டியுஞ் சிற்றுண்டியுஞ் செய்த வண்ணமாய் இருக்கின்றார்கள். இதனால் வீட்டு வேலைகள் அளவின்றிப் பெருகி, அவற்றைச் செய்வார்க்கு அயர்வினை வருவிப்ப தல்லாமலும் பொருட்செலவும் மிகுதி யாகி வறுமைக்கு வழிகாட்டும்; மேலே காட்டியபடி, எந் நேரமும் உண்டியுஞ் சிற்றுண்டியும் அருந்துதலால் அவ் வீட்டிலுள்ளார் அனைவரும் பலவேறு நோய் கொண்டோராயுந் துன்புறு கின்றார்கள். ஆதலால், உணவுகள் சிற்றுண்டிகளை மிகுதிப்படுத்தலாகாது.

**அறிவுமுயற்சியுடையவர்கள் காலையில் தனிப் பாலைக் காய்ச்சியேனும், அல்லது அதனோடு சிறிது இஞ்சிச் சாறுஞ் சருக்கரையுங் கலந்தேனும் செரிக்கும் அளவறிந்து உட் கொள்ளுதல் போதும்.** அறிவு முயற்சியோடு உடம்புழைப்பும் உள்ளவர்கள், காலையிற் சிறிது இட்டிலி அல்லது உப்புமா அல்லது தோசை அல்லது வடை அல்லது அப்பம் உட் கொண்டு பாலும் பருகலாம். அறிவு முயற்சி, யில்லாமல் உடம்புழைப்பு மட்டும் உள்ளவர்கள் **காலையிற் சோறுந் தயிருஞ் சிறிது துவையலுங் கூட்டி உணவாகக் கொள்ளலாம்.** ஆனால், உடம்புழைப்பில்லாமற் சும்மா இருப்பவர்கள் காலையிற் சிறிது பருகுநீரையன்றி வேறெதனையும் உட்கொள்ளா மலிந்தாற்றான் நோயின்றி வாழலாம். நோயில்லாத மக்களைப் பெறலாம்.

பகலில் **உச்சிப் போதிலோ நன்கு சமைத்த சோறுஞ் சுவையான ஒரு குழம்பும் ஒரு மிளகுநீரும் ஒருகறியுந் துவட்டின கீரையும் மோரும் உட்கொண்டாற் போதும்.** இவ்வளவுக்கு மேற் கொழுமையான பலவகைக் குழம்பு களையும் பலவகைக் கறிகளையும் பாயசம் வடை இலட்டுகம் பாலேடு முதலியவை களையும் நாடோறுஞ் செய்வித்து விலாப்புடைக்கத் தின்று வருவதும், பிற்பகலிலும் அங்ஙனமே சிற்றுண்டிகள் பல செய்வித்து அருந்துதலும் பெருந்தீங்கு பயப்பனவாகும். **என்றோ ஒரு சிறப்பு நாளில் இத்தகைய கொழுவிய உணவுகளை உண்பது குற்றமாகாது;** என்றாலும், அன்றைக்குங்கூடக் காலையில் ஏதும் அருந்தா திருந்து, உச்சிப்போதிலும் இவற்றை அயிலுங்கால் முக்கால் வயிற்றுக்கு மேல் அயின்று விடுதலாகாது ஒருகால் ஒரு பார்ப்பனர் கொழுமைமிக்க பல்வகை இன்சவை உணவு களை வயிறுகொள்ளும் அளவுக்கு மேல் வாய் கொண்ட மட்டும் விழுங்கி, அதனால் மூச்சுவிட மாட்டாமற் கீழே கிடந்து புரண்டு கொண்டிருந்தனராம். அதனைக் கண்டு அவர்மேல் இரக்கமுற்ற ஒரு மருத்துவர், "ஐயரே, யான் ஓர் உழுந்தளவு மருந்து கொடுக்கின்றேன்; அதனைக் உண்பீரா னால் மிகுதியான உணவு வெளிப்பட்டு நலம் உண்டாகும்" என்றனராம். அதனைக் கேட்ட அவ்வையர் போங்காணும் போம், என் வயிற்றில் அவ்வுழுந்தளவு மருந்து கொள்ளும் இடமிருந்தாற், பின்னும் சிறிது உண்வு கொண்டு இருப் பேனே! என்று மறுமொழி கூறினராம். இவ்வாறு ஒரு வரை யறையின்றித் தின்பவர்கள் நோயை விலைகொடுத்து வாங்குபவர்களாயிருத்தலால், அத்தன்மையோர்க்கு எம் போல்வார் எத்துணையறிவு கூறினாலும், அஃது அவர் செவியில் ஏறாது. ஆதலால், அவரை யொழித்து ஒழிந்த ஏனையோரே எம்சொல் வழியில் ஒழுகி நோயின்றி இனிது வாழற்பாலார் என்க.

இனி, இராப்பொழுதிற் கொள்ளும் உணவிற் கருக் கொண்ட மகளிர் இன்னும் விழிப்பாக இருத்தல் வேண்டும். பகலவன் இல்லாத இராக்காலத்தில் மக்களின் உடம்பு வலி குறைந்ததாயிருக்கின்றது; அதனால், வயிற்றிலுள்ள தீனிப்பையுஞ் செயல்குறைந்த தாய் மெல்ல நடக்கின்றது. அந்நேரத்தில் எளிதாகச் செரியாத உணவுப் பண்டங்களை

உட்கொண்டால் நோய் உண்டாகும்; ஆதலால், அப்போது முக்கால் வயிற்றுக்கு மேல் அருந்துவது கூடாது. அன்றி மிகுந்துண்டாலோ மூச்சுத் திணறி வயிற்றுவலி கொண்டு தாயானவள் வருந்துவதுடன், அவளது வயிற்றிலுள்ள கருவும்மிகுந்த உணவேறிய தீனிப்பையினால் நெருக்குண்டு வருந்தும், அல்லது மூச்சுவிட முடியாமற் சாவினுஞ் சாம். உட்கொள்ளும் உணவு மிகுந்த குளிர்ச்சியும் மிகுந்த சூடும் மிகுந்த காற்றும் உண்டு பண்ணாதனவாய் இருத்தல் வேண்டும். அழகிய வெண்ணிறம் அல்லது பொன்னிறம் வாய்ந்த பிள்ளை களைப் பெறவேண்டுந் தாய்மார்கள் இரவிற் பாற்சோறு மிசைதல் வேண்டுமென்று **'பிருக தாரணிய கோபநிடதம்'** நுவலுதலாலும், அஃது இக்காலத்திற் கருவாராய்ச்சிக்காரர் கூறும் உரையோடு ஒத்து நிற்றலாலுஞ் சூல்கொண்ட மாதர் இரவிற் பாற்சோறு அயின்று அழகிய மக்களைப்பெற்று இன்புறுவார்களாக.

இன்னுந், தாய்மார் தாங்கொண்ட கருவை உயிர்க் குங்காற் சிறிதுந் துன்பமின்றி உயிர்த்தற்கு எளியதொரு வழியிருக்கின்றது. அஃதாவது: வயிற்றில் வளருங் கருவின் உடம்பிலுள்ள எலும்புகள் கற்போல் வல்லென்று கெட்டியா காமல் மெழுகுபோல் மென்பதமாக வளருதற்குத் தக்க உணவுகளையே தெரிந்து உட்கொள்ளல் வேண்டும். **வெள்ளியமா, சீமை அவரை, பட்டாணி, வாற்கோதுமை, வெண்ணெய் பாற்கட்டி** முதலிய பண்டங்கள் எலும்பைக் கெட்டிப்படுத்துவனவென்று ஆங்கிலமருத்து நூலாசிரியர் கள் ஆராய்ந்து உரைத்தலாற், **கருக்கொண்ட மகளிர் அரைத்த மாவிற் சமைத்த சிற்றுண்டிகளையுஞ், சீமை அவரை முதலியவற்றிற் செய்த கூட்டுகளையும், வாற்கோதுமைக் கஞ்சியையும், வெண்ணெய் கட்டிப்பால் முதலானவை களையுந் தாம் கருவுயிர்க்கும் அளவும் உண்ணலாகாது**. அவற்றில் அவா மிகுதியாயிருந்தால் என்றைக்கோ ஒருகாற் சிறிது அயிலலாம். அடுத்தடுத்து அவற்றை உண்ணலும் ஆகாது. **கருவுயிர்த்தற்கு ஒரு திங்கள் வரையிலும் அவற்றைக் கண்ணெடுத்துப்** பார்த்தலும் ஆகாது. இவ்வாறு செய்தலை விடுத்து அப் பண்டங்களை அடுத்தடுத்து மிகுத்துண்பார் களாயின், அவற்றால் வயிற்றிலுள்ள மகவின் எலும்புகள்

இறுகிக் கெட்டியாகு மாதலால், அம் மகவினைப் பெற மாட்டாமல் தாயும் பிள்ளையும் உயிர் துறப்பர்; அல்லது ஆங்கில மருத்துவர் உதவியாற் கருவி கொண்டு மகவு எடுக்கப்பட்டு உயிர் பிழைப்பினும், ஈருயிரினுடம்பும் நலிவு கொண்டு வருந்தும் நிலையிலேயே யிருக்குமென்ற றிந்து கொள்க.

இன்னுஞ், சூல்கொண்ட மாதர் விடாய் எடுத்த காலங்களிலெல்லாந் **தூயதண்ணீர் அல்லது வெந்நீரையே பருகல் வேண்டுமல்லாமல், உப்புக்காரநீர் (Soda Water) காப்பி தேயிலை கொக்கோநீர் முதலியவைகளைப் பருகலாகாது**. இனிய பழங்களையே அவர்கள் மிகுதியாக அருந்துவார் களாயின் விடாயும் பசியும் அவர்களை வருத்தா; உடம்பில் தூய நல்ல இரத்தம் ஓடித்தாயின் உடம்பையுங் கருவின் உடம்பையும் நோயின்றி நன்கு வளரச்செய்வதுடன், கருவுயிர்க்குங்கால் தாய்க்குச் சிறிதுந் துன்பம் வராமலும் பாதுகாக்கும்.

இம்முறைகளின்படி வழுவாது நடந்துகொண்டே, உடம்பின் புறத்தும் அகத்தும் அழுக்குச் சேராமல் நன்கு கழுவி அடிக்கடி துப்புரவு செய்தல் வேண்டும். பெண் மக்களிற் பெரும்பாலார் தமதுடம்பின் புறத்தை அடுத் தடுத்துக் கழுவுதலிற் கருத்து வைத்திருத்தல் போலத், தமது டம்பின் அகத்தே சாக்கடையாய் உள்ள மலநீர்க் குடல்களைக் கழுவித் துப்புரவு செய்வதில்லை. இதனால் அவர்களும் அவர்கள் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளும் அவர்களை மருவுங் கணவர்களும் பலவகையான நோய்களாற் பற்றப் பட்டுப் பெரிதுந் துன்புறுகின்றார்கள். பெண்மக்கள் அறிவுடையவர் களாய்த் திருத்தித் தம்மைத் துப்புரவு செய்யும் முறைகளைக் கைப்பற்றாதவரையில், அவர்களைச் சார்ந்தே உயிர்வாழ வேண்டிய நிலையிலுள்ள அவர்களின் மகாருங் கணவரும் இனிது உயிர்வாழ்தற்கு இடமே யில்லை. இவ்வுண்மையை அவர்களே உணரா விடினும், அவர்களைச் சேர்ந்தோராவது அதனை அவர்கட்கு நன்கெடுத்துக் காட்டி நாடோறுமாவது ஒரு கிழமைக்கு இருமுறை மும்முறை யாவது **நீரேற்றி** (எநிமா) கொண்டு அவர்கள் தமது மலநீர்க் குடல்களைத் துப்புரவு செய்யுமாறு வற்புறுத்தல் வேண்டும். இதனோடு, உடம்பு

முழுதும் படுமாறு பிற்பகலில் வெயிற் காய்தல் வேண்டும். இவ்வாறு நடந்துவரும் மாதர்கள் தாங்கொண்ட கருவை உயிர்காக்குங்காற் சிறிதும் வருத்த மின்றி உயிர்ப்பர். குழந்தையுந் தாயும் மிகச் செவ்விய நிலையில் இருப்பர்.

இனிப், பிறந்த குழந்தைக்கு மலநீர்கள் செவ்வையாக வெளிப்படாவிட்டால், **நீரேற்றியில்** ஆழாக்கு **வெது வெதுப் பான சவர்க்கார நீரைவிட்டுக், குழந்தையின் மலக் குடரில் அதனை ஏற்றினால், உடனே அழுக்கு முழுதும் வெளியாகிக் குழந்தை நலமாயிருக்கும்**. இவ்வாறு செய்வதிற் சிலர் அச்சமுறுகின்றார்கள்; அஃது அறியாமை யேயாகும். எமது இல்லத்தில் எம் கடைசிமகள் பிறந்தபோது, அவட்குப் பிறந்தவுடனே மலநீரடைப்புகள் இருந்தன; அவை மருந் திலும் வெளிவரவில்லை; உடனே யாம் பிறந்த மறுநாளே ஆழாக்குச் சவர்க்கார வெந்நீர் கொண்டு நீரேற்றி வைத்தேம்: வைத்த பின் அழுக்கு முற்றுங் கழிந்து அப்பிள்ளை நலமுற லாயிற்று, பிறந்த குழந்தைக்கு இவ்வாறு செய்தலேயன்றி, அதனைப் பெற்ற தாய்க்கும் நீரேற்றிகொண்டு மலநீர்க் குடலையும், பெண்குறி வழியாகக் கருப்பையையுங் கழுவி விடுதல் வேண்டும். மகவீன்ற பெண்பாலார் பலர் சிலர்க்குச் செந்நீர் வெளிப்பட வேண்டியளவுக்கு வெளிப்படாமற் கட்டுப்பட்டு நின்று பெருநோயினையும், உயிர்க்கிறுதி யினையும் விளைப்பதுண்டு. எமதில்லத்திலேயே எம் முதன் மகள் தலைப்பிள்ளையீன்ற மறுநாளில் வயிற்றகத்தே செந்நீர்க்கட்டு உடையளாகி அன்றிரவில் இரண்டொரு மணி நேரம் பட்ட துன்பம் அளவிடற் பாலதன்று. செய்வதின்ன தென்று தெரியாமல் மருத்துவிச்சியும் பிறருந் திகைத்து வருந்துவதைக் கண்டு, யாம் உடனே நீரேற்றியில் இளஞ் சூடான சவர்க்கார நீரை நிரப்பி, அவள் அன்னையைக் கொண்டு அவளது கருப்பைக்கு அந்நீரைச் செலுத்து வித்தேம். செலுத்திய இரண்டொரு நிமிடத்தி லெல்லாம், அவளது வயிற்றினுள்ளே கட்டுப்பட்டு நின்ற செந்நீர் அவ்வளவும் வெளியாகி, அருகிருந்தா ரெல்லாரும் வியக்கும் படி அவட்கு உடனே முழுநலன் உண்டாயிற்று.

தாயின் முலைப்பாலிலேயே குழந்தையின் மலநீர்க் குடரை துப்புரவு செய்தற்கு ஏற்ற முதற்பொருள்கள்

கலந்திருத்தலால் **தாய்ப்பால் கெடாம விருக்கத்தக்க** உணவு களையே தாயானவள் அருந்திவருவது நன்று. இதனாற் குழந்தையின் உடம்பொடு தாயின் உடம்பும் நலமாய் வளரும். பச்சரிசியைவிடப் **புழுங்கலரிசியிற் சமைத்தவுணவே சிறந்தது. அறைக்கீரை, பொன்னாங்கன்னிக் கீரை, சிறுகீரை** வகை களை மாறிமாறிச் சமைத்து உட்கொண்டால், தாய்க்கு மலச்சிக்கல் உண்டாகாது. **தித்திப்பான அத்திப்பழங் குடகு நாரத்தம்பழம் செவ்வாழைப்பழஞ் சீமை இலந்தைப்பழம்** முதலியவற்றை உணவுக்குமேல் உட்கொண்டு வந்தால் இரத்தந் தூயதாகும். **குழந்தை பால் மறக்கும் மட்டும் மாம்பழம் பலாப்பழம் நாவற்பழம் வாழைப்பழம் முதலியவைகளை அறவே விலக்கிவிடல் வேண்டும். பறங்கிக்காய், பீர்க்கங்காய், பூசணிக்காய், புடலங்காய், முள்ளங்கி** முதலான மிகக் குளிர்ந்த பண்டங்களுஞ் சேர்க்கலாகாது. துவரம் பருப்பிற் செய்த மிளகுநீர் மட்டுமே ஆகுமே தவிரத் துவரம் பருப்பின் புழுக்கலாவது குழம்பாவது ஆகா. **இளமுருங்கைக் காய், வெண்டைக்காய், கத்தரிக்காய், அவரைக்காய் முதலியன சேர்த்துத் தேங்காய்ப்பால் விட்டுச் செய்த பொரித்த குழம்பே மகவீன்ற தாய்க்கு மிக இசைந்ததாகும்**. இஞ்சி, சுக்கு, கொத்தமல்லி, ஏலக்காய் என்னும் அவற்றில் ஏதேனும் ஒன்றை உடம்பின் நிலையறிந்து சேர்த்துக் காய்ச்சிய ஆவின்பாலும், அது வாயாதேல் தூய தண்ணீர் அல்லது வெந்நீரும் பருகுதற்கு நல்லனவாகும். உடம்பிற் குளிர்ச்சி மிகுந்திருக்குங்காற் சூடான பண்டங்களையுஞ் சூடுமிகுந்திருக்குங்காற் குளிர்ச்சியான பண்டங்களையும் பகுத்தறிந்து சேர்ப்பவர்களக்கு நோய் சிறிதும் அணுகாது.

மகவீன்று இரண்டு மூன்று திங்கள் சென்றபின், தாய் தன் உடம்பை வலுப்படுத்துற்கேற்ற பண்டங்களைச் செரிக்கும் அளவறிந்து சேர்த்துவந்தாற், பிள்ளையின் உடம்பும் வலிவேறி அழகாய் வளரும் கசப்பில்லாத வாதுமைப்பருப்பை அரைத்து ஆவின் பாலில் இட்டுக் காய்ச்சிக் சீனாக்கற்கண்டின் பொடியுங் கலந்து காலையிற் பருகலாம். உழுத்தம்பருப்பு எலும்பையும் எலும்பின் மூளையையும் உரமாக்கி மேனியையும் அழகுபெற வளரச் செய்யும் சிறந்த தன்மையுடையதாகையால்,

அதிற் செய்த வடை அப்பளம் முதலானவைகளை இடை யிடையே உட்கொள்ளலாம். உழுத்தம்பருப்பிற் செய்த சிற்றுண்டிகளை ஓர் ஒழுங்கான முறையில் உட்கொண்டு வருபவர்களுக்கு, எலும்புருக்கி ஈளை நீரிழிவு முதலியன வரா. ஆனாலும், இவற்றைத் தொடர்பாக உட்கொள்ளுதலும் ஆகாது; உடம்பு சிறிது நலிவாயிருந்தாலும் இவற்றை அருந்தலாகாது. உடம்பு நல்ல நிலைமையில் இருக்கும் நேரங்களில் மட்டுமே இத்தகைய கொழுவிய பண்டங்களை அளவாக அயிலல் வேண்டும்.

இனிக், **கருவுயிர்த்த மாதர் இருக்கும் அறைகளிற் பெண்பாலார் மிகுதியாக வருதற்கு இடங்கொடுத்தல் ஆகாது.** ஏனென்றால், வருபவர்களிற் பெரும்பாலார் வீணான பலவகைச் செய்திகளைப் பேசுபவர்களாய் இருத்த லாலும், அச்செய்திகளிற் பல கவலையுந் துயரமுந் தருவன வாய் இருத்தலாலும் அவைகளைக் கேட்டலாற் கருவுயிர்த்த மாதர்க்கு மன அதிர்ச்சி யுண்டாகிப் பல துன்பங்களை வருவிக்கும். அதனால் அவர் உடம்பு நலங்கெடுவதோடு, நலங்கெட்ட உடம்பிலிருந்துண்டாகும் பாலைப் பருகும் மகவும் உடம்புநலங் கெடும். இன்னுங் கருவுயிர்த்த அறையில், அழுக்குங் குப்கைக் கூளங்களும் முடைநாற்றம் வீசுந் துணிகளும் இத்தலாகாது. நல்ல காற்றும் வெளிச்சமும் அதன் கண் உலவுவதற்கு வழிசெய்தல் வேண்டும். கருவுயிர்த்த மாதர்க்கு ஆடைகளை அடிக்கடி மாற்றிவரல் முதன்மை யானது. குழந்தையை மெதுவான துணிகளின்மேற் படுக்க வைத்தலுடன், அத்துணிகள் அதன் மல நீர்களால் நனைவதனை நினைப்பாக அடுத்தடுத்துப் பார்த்து, அவற்றையும் மாற்றி வருதல் இன்றியமையாதது.

மகவு பசித்து அழும் நேரங்களில் அல்லாமல் மற்ற நேரங்களில் தாயானவள் பால் கொடுத்தலாகாது. சிற்சில கால் **வயிற்றுவலி, தலைவலி, காய்ச்சல், மலநீர்** அடைப்பு முதலிய காரணங்களாலும் குழந்தை அழும். அது பசித்தழுகின்றதா? நோயினால் அழுகின்றதா? என்பதனை ஆராய்ந்து பார்த்து, நோயால் அழுவதாயிருந்தாற் பால்கொடாது, அந்நோய் நீங்குதற்கான ஒழுங்குகளைச் செய்தல் இன்றியமையாதது. இவ்வாறின்றி, அஃது அழும் நேரமெல்லாம் பால்கொடுத்து

*வழக்கம் பண்ணுவது தாய்க்கும் பிள்ளைக்கும் துன்பத்தையும் நோயையுந் தரும்.*

*இனித், தாய்க்கும் பிள்ளைக்குந் தலைமுழுக்குச் செய்வித்தலோ, உடம்பைமட்டுங் கழுவுவித்தலோ, இரு வருடம்பின், நிலையையுங் காலத்தின் இயற்கையையும் அறிந்து செய்தல் வேண்டும். இருவர்க்கும் உடம்பு செவ்வை யாயிருந்தால் வெயிற்காலத்தில் தண்ணீரிலுங், குளிர் காலத்தில் வெந்நீரிலும் அவர்கள் முழுகலாம். குளிர்ந்த நீரைவிட வெதுவெதுப்பான நீரைப் பயன்படுத்தல் எக்காலத் திற்கும் இசைந்ததாகும்.*

*இனி, மகவீன்ற தாய்க்குப் பால் இருந்தால், அவளே பத்துத் திங்கள் வரையில் தன் மகவுக்குப் பால் கொடுத்து வரல் வேண்டும். தாயின் மனநிலைக்கும் அவளிடமிருந்துண் டாகும் முலைப் பாலுக்கும் நெருங்கிய ஒற்றுமை யிருத்தலால், தாம் வருந்திப் பெற்ற குழந்தை நல்ல நிலைமையில் இருக்க வேண்டும் என்னும் விருப்பம் உடைய தாய்மார் ஒவ்வொரு வரும், வருத்தங் கவலை சினந் துயரம் முதலிய துன்பங்கள் தம் உள்ளத்தைத் தாக்காதபடி கருத்தாய் இருத்தல் வேண்டும். அமைதியும் மகிழ்ச்சியும் உயர்ந்த எண்ணங்களும் உயர்ந்த நினைவுளுந் தோன்றப் பெற்ற உள்ளத்தளாயே யிருக்கப் பழகிக்கொண்ட தாயின் முலைப் பாலைக் குடிக்கும் மகவு தவறாமற் சிறந்த உடல்நிலை மனநிலை வாய்க்கப்பெறும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.*

*தாய்க்குப் பால் இல்லாவிட்டால், வேறொருத்தியைச் சம்பளத்திற்கு அமர்த்திப் பிள்ளைக்குப் பால்கொடுப்பிப்பது செல்வர் இல்லங்களில் வழக்கமாக இருக்கின்றது. ஆனால், இதைவிடப் பிள்ளைக்குத் தீங்கு பயக்கக்கூடிய பொல்லாத வழக்கம் வேறில்லை.* ***சம்பளத்திற்கு அமர்த்தப்படும் ஏழை எளிய பெண்களின் மனநிலை உடல்நிலைகள் விரும்பத் தக்கனவாய் இரா****. அவர்கள் நிலையினை ஆராய்ந்து பார்க்கத் தக்கவர்கட்கே அவ்வுண்மை விளங்கும்; அவ்வியல்புகளை ஈண்டெடுத்தெழுதுவது நன்றாகாது. தாய்ப்பால் இல்லா விட்டால்,* ***ஆவின்பாலில் அளவுக்களவு வெந்நீர் கலந்து சிறிது சர்க்கரையுஞ் சேர்த்து அதனை மகவுக்கு ஊட்டுதலே***

**மிகச் சிறந்ததாகும்.** ஆவின் பாலை ஏடுபடர வற்றக் காய்ச்சு தல் ஆகாது. குழந்தை வளரவளரப் பாலிற் கலக்கும் வெந் நீரின் அளவைக் குறைத்துக் கொண்டு வந்து, **பத்துத்திங்கள் ஆனபிறகு நீர் கலவாமலே பால் பருகுவிக்கலாம்**. இக் காலங்களில் மகவுக்கு மலநீரடைப்புகள் உண்டாகாதபடி பார்த்துவரல் வேண்டும். விளக்கெண்ணெயைச் சிறிது சூடாக்கி அதனைக் காலைப்பொழுதில் இடையிடையே கொடுத்து வந்தாற், பிள்ளையின் மலநீர்க்குடல்கள் துப்புரவா யிருக்கும். ஆவின் பாலைத் தவிரப் பெட்டிப்பால் முதலியன கொடுத்தல் ஆகாது. பெட்டிப்பால் கொடுத்து வந்த பிள்ளைகளுக்கு மலச்சிக்கலுஞ், சீழ்க்கட்டிகளும் உண்டாகித் துன்புறுத்தலை யாம் நேரே பலகாற் கண்டிருக்கின்றேம்.

இனிக், குழந்தைகட்குப் பல்முளைக்கத் துவங்கின வுடன், வெறும் பால்மட்டும் அவற்றின் உடம்பு வளர்ச்சிக்குப் போதாமையால், வலுவான வுணவுகளைச் சிறிதுசிறிதாகக் கொடுக்கத் துவங்கல் வேண்டும். கடையில் விற்கும் **அம்புக்கிழங்குமா** (arrow-root flour) முதலிய வற்றால் ஆகிய கஞ்சி குழந்தையின் உடம்பு வளர்ச்சிக்குப் பற்றாதென்றுங், கோதுமை நொய்யும் ஆவின்பாலுஞ் சேர்ந்த கஞ்சியுஞ் சில பழவகைகளுங் கொடுத்தலே அதன் வளர்ச்சிக்கு இசைந்ததாகு மென்றும் ஆங்கில மருத்துவ ஆசிரியர்கள் ஆராய்ந்துரைத்த லால், அவர் கூறுகிறபடி உணவூட்டுதலே செயற்பாலதாகும் என்க.

ஒன்றரையாண்டு வளர்ந்த குழந்தைக்கு உணவாகக் கொடுக்கற்பாலது யாதெனின்; எவ்வெவ்வூரார் எவ்வெவ் வுணவை உட்கொண்டு பழகி வளர்ந்து வந்திருக்கின்றரோ, அவ்வுணவையே அவ்வக் குழந்தைகட்குக் கொடுத்து வளர்த்து வருதல் நன்று. இத் தமிழ்நாட்டில் உள்ளாரிற் பெரும்பாலார் அரிசியிற் சமைத்த வுணவையே உட்கொள் கின்றனர்; தமிழருள்ளும் ஏழை யெளியவர்களா யிருப்ப வர்கள் கேழ்வரகிற் சமைத்த கூழையே மிகுதியாகப் பயன்படுத்து கின்றனர். கொங்கு நாட்டில் உள்ளவர்கள் சோளங் கம்பு முதலியவற்றிற் சமைத்தவைகளை அருந்து கின்றனர். மலையாளத்தில் உள்ளவர்கள் பச்சரிசி நொய்யில் தேங்காய்ப்பால் விட்டுக் காய்ச்சிய கஞ்சியைக் குடிக்கின்றனர்.

இங்ஙனமே இன்னும் ஊர்ஊர்கடோறும் பயன்படுத்தப்படும் உணவுகள் பல்வேறு வகையினவாய் இருக்கின்றன. ஆகவே, எவரெவர் எவ்வெவ்வகை யுணவிற் பழகி வளர்ந்திருக் கின்றனரோ, அவரவர் அவ்வவ்வகை யுணவினையே தமது இரத்தத்தில் ஊறி வளர்ந்த மகவுக்குங் கொடுக்கலாம். இதுகொண்டு, தாம் வழக்கமாய்க் கையாண்டுவந்த உணவை மாற்றப்படாதென்பது கருத்தன்று. காலவசதி இடவசதி பொருள்வசதிகட்கு ஏற்ப உணவை மாற்றுவது குற்றமன்று. ஆனால், அங்ஙனம் மாற்றவேண்டிய முதன்மையையும், மாற்றினால் வரும் நலத்தையும் நன்கறிந்து அவ்வாறு செய்தலே நன்றாகும். அங்ஙனம் வழக்கமாய்க் கொள்ளும் உணவை விலக்கி வேறு புதிய வுணவை யுட்கொள்ளுங்கால், வயிற்றிற் செரியாக் குணமுங் குடலில் மலச்சிக்கலுஞ் சிலர்க்குச் சிலகாற்றோன்றும்; அங்ஙனம் நேருமாயிற், புதிய வுணவைச் செரிக்கும் அளவிற் குறைத்து உண்பதொடு, மலச்சிக்கலையும் நீரேற்றிக்கொண்டு நீக்கிவிடல் வேண்டும். இங்ஙனஞ் செய்து வருதலுடன் சூடான வெந்நீரையும் இடையிடையே பருகி வருக; சிலநாளிற் புதியவுணவும் உடம்புக்கு மிக இசைந்ததாய் விடும்.

இனிக், குழந்தைப்பருவந் தாண்டிப் பிள்ளைப் பருவத்தையடையும் மகாருக்கு உணவுதருங் காலத்தை வரையறைப்படுத்தல் வேண்டும். மூன்றாண்டுகட்கு மேற்பட்ட பிள்ளைகள் அடுத்தடுத்து உணவு கேட்பதும், அவர்கள் கேட்கும்போதெல்லாம் பெற்றோர்கள் உணவு களுஞ் சிற்றுண்டிகளுங் கொடுப்பதும் வழக்கமாயிருக் கின்றன. ஒருகால் உட்கொண்ட உணவு நன்றாய்ச் செரித்துப்போக பிறகு நன்றாய்ப் பசியெடுத்த நேரத்திலே தான் பின்னும் உணவு கொடுத்தல் தக்கது. முன் உண்டது பாதி செரித்துஞ் செரியாமலும் இருக்கையில் மீண்டும் உணவேற்றினால், இரண்டும் நஞ்சாகித் தீனிப்பையைப் புண்படுத்தும்; அல்லது கக்கல் கழிச்சல் மப்புக்காய்ச்சல் முதலான பலவகை நோய்களை உண்டாக்கிப் பிள்ளை யையும் பெற்றோரையும் பெரிதுந் துன்புறுத்தும். ஆதலால், உணவு தரும் நேரங்களை வரையறை செய்து அந்நேரங்களில் மட்டும் அதனை யவர்கட்குத் தருக. ஆண்டில் முதிர்ந்த வர்களைவிட, அதில்

முதிராத இளம் பிள்ளைகளுக்கு உண்ட உணவு விரைவிற் செரிக்கும். ஆண்டு முதிர்ந்தவர்கட்கு உணவு செரிக்குங்காலம் **மூன்று மணி முதல் ஐந்து மணி நேரம் வரையில் ஆகும்**. அவருள்ளும் உடம்புழைப்புள்ளவர் கட்கு விரைவாகவும் அஃதில்லாது வறிதேயிருப்பவர்கட்கும் அறிவு முயற்சி யுடையவர்கட்கும் மெதுவாகவும் உணவு செரிமானமாதலை எவரும் வழக்கத்திற் கண்டு கொள்ளலாம். எப்படியும் ஒருகால் உணவு கொண்டபின், மறுகால் உணவு கொள்வதற்கு இடையிற் குறைந்தது மூன்றுமணி நேரமாவது செல்லவிடுவதே ஆண்டில் முதிர்ந்தார்க்கு, அஃதாவது இருபது ஆண்டு முதல் ஐம்பதாண்டு வரையிற் சென்றார்க்கு நல்லதாகும். ஐம்பதாண்டுக்குமேற் சென்றவர்கள் **மூன்றரை, அல்லது நான்கு அல்லது ஐந்து மணிநேரம் இடைவிட்டு உணவெடுத்தலே சிறந்த முறையாகும்**. ஆனால், மிகுந்த உழைப்புள்ளவர்கட்கு இங்ஙனம் நீண்ட காலவரையறை வைப்பது நன்றாகாமையின், அன்னவர்கள் நமக்குச் செவ்வையாகப் பசியெடுக்கும் நேரம் அறிந்து உணவெடுத்தலே செயற்பாலது. மற்று, மூன்றாண்டுகட்கு மேல் ஐந்தாண்டு வரையிலுள்ள பிள்ளைகட்குக் காலையிற் றுவங்கி மாலை வரையில் **ஆறு வேளையும் இரவில் மூன்று வேளையுமாக** இரண்டு மணி நேரத்திற்கு ஒருகால் மெலியவும் வலியவுமாக உணவுகளை மாறி மாறிக் கொடுக்கலாம். இவ்வொன்பது வேளைகளிலும் வலிய வுணவு மூன்றல்லது நான்கு வேளையும், மெலியவுணவு ஐந்தல்லது ஆறுவேளையுங் கொடுத்தலே செவ்வியது. இங்ஙனமே ஐந்தாண்டுமுதற் பத்தாண்டுவரையிலுள்ள பிள்ளைகட்கு மூன்றுவேளை வலிய வுணவும் மூன்று வேளை மெலிய வுணவும், பத்தாண்டுகட்கு மேலுள்ள இளைஞர்கட்கு இரண்டுவேளை, அஃதாவது நடுப்பகலிலும் மாலையிலும் வலிய வுணவுங் காலையிலும் பிற்பகலிலும் மெலிய வுணவுங் கொடுத்தல் போதும் முப்பத்தைந் தாண்டுகட்குமேல் உள்ளவர் காலையிற் சிறிது மெலிய வுணவும், நடுப்பகலிலும் மாலையிலும் வலியவுணவும் உட்கொள்ளல் நன்று; இடையே வேண்டியிருந்தாற் பாலேனும் பாலிற்செய்த பருகுநீரேனும் அருந்தலாம். நாற்பத்தைந் தாண்டுகட்கு மேற்பட்டவர்கள் காலையிற் சிறிது

பருகு நீரும் உச்சிப் பொழுதில் வலியவுணவும், மாலையில் மெலிய வுணவுமே உட்கொண்டுவரின், நோய் அணுகாமல் நூறாண்டுகள் இனிது உயிர்வாழலாம். எல்லாருமே பாலும் பழ வகைகளும் வித்துவகைகளுங் கிழங்குவகைகளும் மெலிய வுணவாகப் பயன்படுத்தி வரல் பெரிதும் நலம் பயக்கும். எல்லாருமே பசித்தபின் உணவெடுத்துக், காலை மாலையில் மலக் கழிவினைக் கருத்தாய்ப் பார்த்து வேண்டியவளவு உடம்பு முயற்சி அறிவு முயற்சியுடையராய் ஒழுகிவருதல் இன்றியமை யாததாகும்.

இனிப் பிள்ளைகள் ஏழெட்டு ஆண்டுகள் வளர்ந்த பின், தாய்தந்தையர் காவலைக் கடந்து, பள்ளிக்கூடங்கட்கும் மற்றை வெளியிடங்கட்குஞ் செல்ல உரிமை பெறுகின் றார்கள். அக் காலங்களிலே, பெற்றோர்கள் அவர்களுடன் கூடவே யிருந்து அவர்களைப் பாதுகாத்தல் ஏலாதாகலின், அப்போது அச் சிறு பிள்ளைகள் பல வழியாற் கெட்டுப போகின்றார்கள்; அல்லது குறும்பு விளையாட்டுகளாலுந் தம்மோடொத்த ஏனைச் சிறுவர்களொடு சண்டையிடுதலாலுந் **தம்முடம்பைப் பழுதாக்கிக் கொள்வதல்லாமலுஞ், சில நேரங்களில் உயிரையும் போக்கிக் கொள்கின்றார்கள்.** ஆதலாற், பெற்றோர்கள் அக் காலங்களில் தம் பிள்ளைகளின் வெளிநடக்கைகளைக் கேட்டறிந்து, அவர்களைச் சீர்திருத்தி நல்வழியில் நடக்கும்படி செய்தல் வேண்டும். பள்ளிக்கூடத்தி லேயே சிறுவர்களுக்கு நேசர்களும் பகைவர்களும் ஏற்படுகின்றார்கள். சிறுவர் சிலர் பலர் தம் தாய்தந்தையரின் இயற்கையிலிருக்கும் அவர்களுடைய பழக்க வழக்கங் களிலிருந்தும் நல்ல நடைகளையோ கெட்ட நடைகளையோ கற்றுக் கொள்கின்றனர். **நல்லவைகளைக் கற்பதைவிடத் தீயவைகளைக் கற்பதிற் சிறியவர் முதற் பெரியவர் ஈறான எவர்க்குங் கருத்தும் முயற்சியும் எளிதிலே செல்லும். ஆகவே,** பெற்றோரிலிருந்தும், பிற சேர்க்கையிலிருந்துந் தாம் முற் பிறவியிற் செய்த ஊழ்வினை யிலிருந்துந் தீய நடைகளைப் பெற்றுத் தீயராய் ஒழுகுஞ் சிறுவர் சிறுமிகளுடன் தம் மக்கள் நெருங்கிய **நேசமுடையராய் நடவாதபடி விழிப்பாயிருத்தல் தாய் தந்தையர்க்கு இன்றியமையாத கடமையாகும்**. தீய

பிள்ளைகளுடன் சேர்ந்து எத்தனை நல்ல பிள்ளைகள் சிறு சுருட்டுப் பிடிக்கக் கற்றுக் கொள்கின்றார்கள்! எத்தனை பிள்ளைகள் வெற்றிலைபாக்குப் புகையிலை மெல்லக் கற்றுக் கொள்கின்றார்கள்! எத்தனை பிள்ளைகள் மூக்குத்தூள் முகரவும் அவின் தின்னவும் கற்றுக் கொள்கின்றார்கள்! எத்தனை பிள்ளைகள் பொய் சொல்லவுஞ் சீட்டாடவுந் தெரிந்து கொள்கின்றார்கள்! எத்தனை பிள்ளைகள் திருடவுங் குத்துச் சண்டையிடவும் பிறரை மிக இழிந்த கொச்சைச் சொற்களால் திட்டவுஞ் செய்கின்றார்கள்! **எத்தனை பிள்ளைகள் கைப்புணர்ச்சி எருவாய்ப்புணர்ச்சி சிறுமிப் புணர்ச்சி செய்து தம் முடம்பைப் பாழாக்கிக் கொள்கின் றார்கள்**! இன்னும் இங்ஙனமே தீய சிறாருடன் சேர்ந்து நல்ல சிறாருந் தீயராகிச் செய்யும் அட்டூழியங்களை யெல்லாம் எடுத்துச் சொல்லப் புகுந்தால் இவ்வேடு இடங்கொள்ளாது.

இவ்வாறு தீய பிள்ளைகளுடன் சேராமல், நல்ல பிள்ளைகளுடன் சேர்வதிலேயும் பல பொல்லாங்குகள் இருக்கின்றன. ஏனென்றால், எல்லாப் பிள்ளைகளுக்கும் பல வகையான விளையாட்டுகளை விளையாடுவதில் விருப்பம் அளவுபடாமலிருக்கின்றது; இது பிள்ளைகட்கு விலக்க முடியாத ஓரியற்கையாகும். விளையாடுவதனாற் பிள்ளை களின் உடம்பு மிகுமுயற்சியுஞ் சுறுசுறுப்பும் உடையதாகி அழகியதாக வளர்வதோடு, அறிவையும் வலுவாக்கி விளங்கச் செய்யும். ஆகவே, பிள்ளைகளை விளையாட வொட்டாமல் தடைசெய்வதும் பெருந் தீங்கு பயப்பதாகும். ஆதலால், விளையாட விடுவதிலும் பிள்ளைகளின் உடம்புக்குப் பழுது வராலும் உயிர்க்கு இறுதிவராமலுந் நம்மலான மட்டும் முயன்று பாதுகாக்க வேண்டுவது பெற்றோர்க்குப் பெருங் கடமையாகும். இவ்விவ்வாறு விளையாடினாற் கால் கை முறியும். உறுப்புகள் பழுதாய்ப் போகும். உயிர்போய்விடும்; ஆகையால் முரட்டுத்தனமான விளையாட்டுகளை யொழித்து மென்மையான விளையாட்டுகளையே விளை யாடல் வேண்டும் என்று தாய்தந்தையர் தம் மக்களுக்கு அடிக்கடி உருக்கத்தொடு நல்லறிவு புகட்டிவரல் வேண்டும்.

எமது பிள்ளைமைப் பருவத்தில் யாம் முரட்டுதனமாக விளையாட்டுகள் சிலவற்றை விளையாடி, அவற்றால் உடம்பு

பழுதாகாமலும் உயிர்போகாமலுந் தப்பிப் பிழைத்தது தம்பிரான் அருளேயாகும். அவற்றுட் சிலவற்றை இங் கெடுத்துக் கூறுகின்றேம். யாம் ஏறக்குறைய ஆறாண்டுப் பிள்ளையா யிருந்தபோது ஒரு திருவாசலில் ஒரு தமிழ் உவாத்தியாரால் நடத்தப்பட்ட தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் தமிழ் எழுத்துக்கள் கற்றுவந்தேம். அப் பள்ளிக் கூடத்திற்கு அருகாமையில் உயரமான ஒரு **தேர்முட்டி**யிருந்தது. அஃதேறக்குறைய முக்கால் தென்னமர உயரம் இருக்கும். பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே போகும் நேரங்களில் என்னொடு தமிழ் கற்கும் பிள்ளைகளின் மனத்துணிவு மிக்க சிலர் படிவழியே அத் தேர்முட்டியின் மேலேறி அங்கிருந்து கீழே நிலத்திற் குதிப்பர். இதனைப் பலகாற் கண்ட யாமும் அவ்வாறு செய்ய ஆவல் கொண்டு, ஒருகால் துணிந்து அத் தேர்முட்டிமேல் ஏறிக் குதிப்பதற்காகக் கீழ்நோக்கினேம்; கீழே கிடுகிடு பாதாளமாயிருக்கக் கண்டு குதியாது அஞ்சி நின்றேம்; மற்றைப் பிள்ளைகள் எம்மை ஏளனஞ் செய்துதாம் குதித்து விளையாடுவாராயினர். அடுத்தநாள் யாம் அத்தேர் முட்டிக்குச் சென்று பிள்ளைகள் மேலிருந்து கிழே குதித்து விளையாடுதலைக் கண்டு மனத்துணிவு கொண்டு எப்படியோ மேலிருந்து கீழே குதித்து விட்டேன்; கீழே மணல் மிகுதியாய் இருந்தமையால் அச்சமும் உடம்பு அதிர்ச்சியுந் தவிர வேறேதுந் துன்பம் உண்டாகவில்லை. அதனால், மேன் மேல் மனத் துணிவுங் கிளர்ச்சியுங் கொண்டு விரைவில் தேர்முட்டிமேல் ஏறுவதுங் கீழே குதிப்பதுமாகிய விளையாட்டிலே சில நாட்கள் மிகவுஞ் சுறுசுறுப்பாக ஈடுபட்டு நின்றேம். ஒருகால் மேலிருந்து குதித்ததில் எமது ஒருகால் சிறிது மடங்கியது. மறுநாள் அம் மடக்குத் தீர்ந்து விட்டமையால் மறுபடியும் அவ் விளையாட்டை யாம் விடவில்லை. இவ்வாறு சிலநாட்செல்ல ஒருநாள் யாம் மேலிருந்து குதிக்கையில் மணலிற் புதைந்திருந்த ஒரு கூர்ங்கல் எமது உள்ளங்காலிற் குத்தி விட அதனால் யாம் சிலநாள் வரையிற் பெருந்துன்பப்பட்டுப், பின்னர் அவ்விளை யாட்டை அறவே விடுத்தேம். எம்மோடு அவ் விளையாட்டை விளையாடி வந்த மற்றப் பிள்ளைகளில் ஒருவனுக்குக் குதித்ததிற் கால்மடங்கிப் பழுதாய்ப் போனதிலிருந்து, அவ்வப் பிள்ளை களின் பெற்றோர்கள் அப் பள்ளிக்கூட

உவாத்தியாரைச் சினந்து, அவரால் அவ்விளையாட்டு நடவாமல் நிறுத்தினர்.

இன்னும், நாகையில் எமதில்லத்தின் பின்புறத்தே தோட்டத்திலிருந்த ஓர் உயரமான தென்னமரத்தின் மேலேறி அதன் உச்சியிலிருந்தபடியே கீழுள்ள நிலக்காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து வந்தேம். ஏறுங்காலும் இறங்குங்காலும் எமது மார்பு அம் மரத்தில் உரைசிக் காயப்படுவதுண்டு என்றாலும் அங்ஞான்றிருந்த மனத் துணிவினால், அதன் மேலேறி மகிழ்வதை விடவில்லை. பின்னர் ஒருகால் எம் நண்பர் ஒருவரோடு அவரது இல்லத்திற்குப் போன போது, அவரது வீட்டுக் கொல்லையிலிருந்த ஓர் உயர்ந்த தென்ன மரத்தின்மேல் எவரையேனும் ஏற்றி ஒரு தேங்காய் பறிக்க விரும்பினார். உடனே யாமே ஏறிப் பறிக்க முயன்றதுகண்டு, அவர் எம்மைத் தடுத்தும், அவரது சொல்லைக் கேளாமலே மேலேறி விட்டேம். தேங்காயைப் பறித்துக் கீழே யெறிந்தபின், யாம் கீழ் இறங்குகையில் அம் மரத்தின் மேற்புறம் வழுவழுப்பா யிருந்தமையால், எம்முடைய கைகால்கள் நழுவத்துவங்கி யாம் கீழே விழுந்தறு வாயிலிருந் தேம், அப்போது யாம் அடைந்த திகிலும் நடுக்கமும் எடுத்துச் சொல்லல் இயலாது. சில நொடிப்பொழுதில் யாம் கீழ்விழுந்து மாயும் நிலையி லிருந்ததைக் கீழிருந்த நண்பர் கண்டு அலறிக் கூவினார். உடனே அவ் வீட்டினுள்ளிருந்தா ரெல்லாங் கடுகி ஓடிவந்தனர். வந்தவருள் ஆண்மைமிக்க ஒருவர் உடனே அம்மரத்தின் மேலேறி எம்மை ஒருகையால் தாங்கிக் கொண்டபடியாய், மெல்லக் கீழே யிறக்கிக் கொணர்ந்து எம் உயிரைப் பிழைப்பித்தார். அது முதல் எந்த மரங்களிலும் யாம் ஏறுவதேயில்லை.

இன்னும் நாகை நகருக்கு மேற்புறத்தே ஒரு பெருங் குளம் உண்டு. அதில் தலைமுழுகுதற் பொருட்டு யாமும் எம் நண்பரான பிள்ளைகள் சிலரும் ஒருங்குசேர்ந்து பெரும் பாலும் நாடோறும் விடியற்காலையில் அக் குளத்திற்குச் செல்வதுண்டு. அக்குளத்தின் இருபுறங்களிலும் பகுதி பகுதியாகப் படித்துறைகள் கட்டப்பட்டிருக்கும். ஒவ்வொரு படித்துறையின் இருபக்கங்களிலும் படிகளின் உச்சியிலிருந்து நீரின் கீழ்ப்படி வரையில் சரிந்து தாழ்வாய்ச் செல்லும் மட்டமான சுவர்கள் உண்டு. ஆட்கள் எவரும் இல்லாத

படித்துறையாய்ப் பார்த்து அதில் நாங்கள் இறங்குவது வழக்கம்; ஏனென்றால், வேற்றாட்கள் முழுகும் படித்துறைகளில் இறங்கினால் யாங்கள் விரும்பியபடி யெல்லாம் விளையாடியுங் குதித்தும் நீந்தியும் நீராடல் இயலாது. இங்ஙனம் வேற்றாள் வழக்கம் இல்லாத படித்துறையில் இறங்கி யாம் நீந்திக் குதித்து விளையாடும் விளையாட்டுக்கு ஓர் அளவே யில்லை. யாம் திரும்பி வீடு போய்ச்சேர மூன்றுமணிநேரம் பிடிக்கும். இவ்வாறு யாங்கள் வழக்கமாய் நீராடி வருகையில், ஒருநாள் எமக்கு ஒரு பேரிடர் நேர்ந்தது. புதுப்புனல் வந்து நிரம்பி அக்குளம் மேற்படி வரையில் நீர் ததும்பும் வேனிற்காலத் திறுதியில் ஒருநாள் வழக்கம்போல எமக்கு நண்பரான பிள்ளைகளும் யாமும் அதில் நீராடச் சென்றேம். அப்பிள்ளை களுள் மனத்துணிவு மிக்க இரண்டொருவர் படித்துறைப் பக்கங்களிள்ள மட்டச் சுவர்களின் மேலேறி நெடுக விசைத்தோடி யிறங்கிக் கீழே நீரிற் குதிப்பாராயினர்; குதித்த விசையால் அவர்கள் நீரின் ஆழுத்திற் சென்று, மறுபடியும் மேல் எழும்ப இரண்டொரு நிமிடங்கள் செல்லும்; அவர்கள் நீந்துவதிலும் நீரின் அடியிற் சென்று நிலத்தின் மண் கொண்டு வருவதிலும் வல்லவர்கள் நீர் மிகுதியாய் இல்லாத காலங்களில் யாமும் நீரின் அடி வரையிற் சென்று நிலத்துமண் கொண்டு வருவதுண்டேனும், நீர் மிகுந்து இருக்குங் காலங்களில் அது செய்தல் எம்மால் இயல்வதில்லை; அதுவல்லாமலும் நீரின் ஆழத்திற் செல்வதிலும் எமக்கு அச்சம் மிகுதியுமுண்டு: ஆழம் மிகுதி யில்லாத நீரில்மட்டும் அஞ்சாது நீந்துவேம். அங்ஙன மிருந்தும், அன்றொருகால் எம்நண்பர் இருவர் பக்கச் சுவர்களில் ஏறி ஓடிவந்து நீரினும் குதித்து நிலத்துமண் கொண்டுவருவது கண்டு, யாமுங் கிளர்ச்சி மிக்கு, அங்ஙனமே செய்யத்துணிந்து ஒரு சுவர்மேல் ஏறி விசை யோடு ஓடிவந்து நீரினும் குதித்தேம்; குதித்த விசையால் யாம் அக் குளத்தின் அடிநிலத்திற்குப் போய், அங்கிருந்த மண்ணைக் கையில் எடுத்துக்கொண்டு மேல் எழும்புகையில், ஆழம் மிகுதியாயிருந்தமையால் மூச்சையடக்கி மேல் எழ மாட்டாமல் திணறி நீரின் உள்ளேயே உயிர் துறக்கும் நிலையில் இருந்தேம்; மேலிருந்த நண்பரில் திறம்மிக்க ஒரு சிறுவர்யாம் உடனே மேல் எழாமைகண்டு, உடனே அவ்வாழத்திற் குதித்து எம்மை மேலெடுத்துவந்து கரையிற் சேர்த்தனர்; அங்ஙனம் அவர் உடனே செய்திரா விட்டால் யாம்

நீரினுள்ளேயே உயிர்துறந்திருப்பேம், அவர் செய்த அச் செயற்கரிய உதவி எழுமையும் மறக்கற்பாலதன்று. கரைமேற் சேர்ந்து சிறிது நேரத்திற்குப் பின்னரே தான் யாம் உயிர்ப்பும் உணர்வும் வரப்பெற்றேம்.

பின்னும் ஒருகால், யாம் மற்றோர் இளைஞருடன் நாகைக்கு மேல்பாலுள்ள புத்தூர்ச் சத்திரக்குளத்தில் நீராடச் சென்றேம். எம்முடன் போந்த இளைஞர் நாட்டுப் புற வாழ்க்கையுடையவர்; திண்ணிய யாக்கையும் சிலம்பம் ஆடல் நீந்துதல் முதலியவற்றில் மிக்க திறமையும் வாய்ந்தவர்; எம்பால் மிக்க நேயம் உள்ளவர். இவரும் யாமும் அக்குளக் கரைக்குச் சென்றதும் அக் குளத்தின் வடகரையிலிருந்து தென்கரைக்கு நீந்திச் சென்று மீண்டும் வடகரைக்கு நீந்திவரத் தீர்மானித்தோம். அக்குளம் மிகப் பெரியதும் மிகச் சிறியதும் அல்லாமல் நடுத்தரத்ததாய் இருந்தாலும், யாம் அதனை முழுதும் நீந்திவரக் கருதியது எமது வலிவினளவுக்கு மேற்பட்டதாகும். எப்படியோ அதனை இருவேமும் நீந்து தற்குத் துணிந்து வடகரையிலிருந்து நீந்தித் தென்கரைக்குச் சென்றோம்; எம் நண்பர் எம்மைவிட உடல்வலி மிகுந்த வராகையால் அவர் எம்மை விட விரைவாக நீந்தித் தென் கரை யேறினார்; அவர்க்குப் பின் சில நொடிப்பொழுதில் யாமும் அக் கரைமீதேறினேம். ஆனால், எமக்குக் கைகால்கள் தளர்ந்து விட்டன; இளைப்புங் களைப்பும் இருந்தன. என்றாலும் இரண்டொரு நிமிடம் இளைப் பாறியபின், திரும்ப வடகரைக்கு நீந்திச்செல்ல எழுந்தேம். எமது ஓய்ந்த நிலைமையைக் கண்ட எம் நண்பர் அது பற்றி எம்மை ஏளனஞ் செய்யாமல், “நீங்கள் திரும்ப நீந்தல் வேண்டாம்; யான் மட்டும் மீள நீந்திச் செல்கின்றேன்; நீங்கள் கரைவழியே சுற்றி வாருங்கள்” என்றார். எனக்கோ அவர் சொல்லியபடி செய்வதுமானக் குறைச்சலாகத் தோன்றியது. ஆகவே, யாமும் அவருடன் இறங்கி மீண்டும் நீந்திச் செல்லலானேன். வரவர எம்முடைய கை கால்கள் ஓய லாயின; வடகரைக்கு அருகிலே பெரும்பாலும் வந்து விட்டேம்; ஆனால், அப்போது எம் கை கால்கள் அசைக்க முடியாத வாறாய்ச் சோர்ந்து யாமும் நீரினுள் அமிழ்ந்த லாயினேம்; அந் நேரத்தில் எமக்குச் சிறிது முன்னே நீந்திச் சென்ற நண்பர் எம்மைத் திரும்பிப் பார்த்து

யாம் உயிரிழக்குந் தறுவாயிலிருப்பதை உணர்ந்ததும் உடனே மீண்டுவந்து எம்மைத் தமது விலாப்புறத்தில் அணைத் தெடுத்தபடியாய்க் கரைகொணர்ந்து சேர்த்தனர். அவர் செய்த அச் செயற்கரு நன்றியும் எம்மால் எழுமை யெழுபிறப்பும் நினைந்துருகற் பாலதாகும். அதன்பின் எமக்குக் களைப்புத் தீரச் சிறிதுநேரஞ் சென்றது. அதுமுதல் நீர்விளையாட்டை விட்டொழித்தேம்.

இங்ஙனமாக எம்மைப்போலவே நீர் விளையாட்டு அயர்வாரும், மரமேறி யிரங்குவாரும், இன்னும் இவை போன்ற இடரான செயல்களைச் செய்வாரும் இளைஞரிற் பலர் உளர். ஆதலாற், பெற்றோர்கள் மிகவும் விழிப்பாயிருந்து இத்தகைய கொடிய விளையாட்டுக்களில் தம் புதல்வர்கள் மனஞ் செல்லாதபடி அவர்களைத் தடை செய்தல் வேண்டும். இடர் பயவாத விளையாடல்களிற் கருத்துச்செல்லும்படி அவர்களைத் தூண்டிவரல் வேண்டும்.

இங்ஙனந் தம் புதல்வர்களின் அறிவையும் முயற்சியையுந் தீங்கு பயக்குந் துறைகளிற் செல்ல விடாமையோடு, அவை தம்மைக் கல்வி கற்பதிற் புகுத்தி உரப்படுத்தி வருதல் பெற்றோர்க்குத் தலைப் பெருங் கடமையாகும். **"கல்வியின் ஊங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை"** என்ற அறிஞருரைப் படி, மக்கட்கு இப்பிறவியிலும் இனி வரும் பிறவியிலும் உண்மைத் துணையாவது கல்வியைத் தவிர வேறு யாதுளது? கல்வியால் அறிவுமிகும் அறிவுடையார்க்கு வராத நலங்கள் இல்லை. உலகத்திற் காணப்படுந் தீங்குகளுந் துன்பங்களு மெல்லாம் அறிவின்மையால் வருவனவே யாகும். இவ்வுண்மை உலகத்தில் நிகழும் நிகழ்ச்சிகளைச் சிறிது ஆராய்ந்து பார்த்தாலும் நன்கு விளங்கும். மக்கள் அறிவிற் சிறந்தாராய் விளங்க விளங்க உலகத்திற் காணப்படும் அளவிறந்த துன்பங்களுங் கவலைகளுந் தீங்குகளும் இருக்க இடம் பெறாமல் மறைந்தொழியும். ஆகவே, அறிவை விளங்கச் செய்தற்கு இன்றியமையாக் கருவியான கல்விப் பயிற்சியானது மக்களெல்லார்க்கும் முதன்மையானது. எவ்வளவுக்கு ஒருவர் உயர்ந்த நூல்களைக் கற்று வருகின்றனரோ, அவ்வளவுக்கு அவரது அறிவு பெருகும்.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு" (குறள் 396)

என்று தெய்வப்புலமைத் **திருவள்ளுவர்** உரைத்த மெய்யுரையைத் தாய் தந்தையராவார் தம் நினைவிற் பதித்துத் தம் புதல்வர் புதல்வியரைக் கல்விப்பயிற்சியில் இடையறாது பழக்கி வருதலை முதற்பெருங் கடமையாக மேற் கொள்வாராக! ஏனென்றாற் பெற்றோர் தம் மக்கட்குச் செய்யும் பேருதவி இதுவேயாகும்.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்" (குறள் 67)

என்று **திருக்குறள்** என்னுஞ் செந்தமிழ்மாமறை அறிவுறுத்துகின்றதன்றோ?

இத் திருக்குறளில் தந்தையின் உதவி மகனது கல்வி விளக்கத்திற்கு உரியதாகக் சொல்லப்படினுந், தந்தையினும் பார்க்கத் தாயின் உதவியே இளஞ் சிறார்க்குப் பெரிதும் நலம் பயப்பதாகும். ஏனென்றால், தம் மக்களோடு இடையறாது நெருங்கிப் பழகுதல் தாய்க்கு வாய்த்திருத்தல் போலத், தந்தைக்கு வாய்த்தல் அரிதன்றோ? ஆகவே, தம் மக்களின் கல்வியறிவு விளக்கத்திற்கு ஒரு பெருங் காரணரான தாய்மார் தாமுங் கல்வியறிவிற் சிறந்தாராயிருப்பினன்றி, அவர்தம் மக்கள் அதிற் பெரியராதல் யாங்ஙனங் கைகூடும்? இன்னும் இதனை விரிப்பிற் பெருகுமாதலால், இதனை இவ்வளவில் நிறுத்தி மேற்செல்வாம்.

இனிப், பெற்றோர் தம் மக்களுக்குக் கல்வியறிவு புகட்டும் வகையினைப் பற்றிச் சிறிது பேசுவாம்; நமது நாட்டில் ஆங்கில அரசும் ஆங்கில மொழிப் பயிற்சியும் மிக்குத் தோன்றிய நாள் முதல், இங்குள்ள பெற்றோர்கள் தம் மக்களை ஆங்கிலமொழி பயிலுமாறு வற்புறுத்தி அப் பயிற்சியில் அவர் தேர்ச்சிபெறும் மட்டும் ஏராளமான பொருளைச் செலவழிக்கின்றார்களேயல்லாமல், தமக்குரிய தமிழ்மொழியில் அவர்களைப் பயிற்றச் சிறிதும் முயல்வ தில்லை; அதுவேயுமன்றித், தமிழ்மொழி பயில விரும்புந் தம் மக்களையும் அது செய்யாவாறு தடை செய்கின்றனர். இவ்வாறிவர்கள் ஏன்

செய்கின்றனரென்றால், "தமிழ் கற்றவர்கட்குப் பிழைப்புக்கு வழி இல்லை; ஆங்கிலங் கற்றவர்க்கோ அரசியற்றுறைகளில் உயர்ந்த சம்பளத்துடன் உயர்ந்த நிலைகள் கிடைக்கும்; அதனால் மிகுதியான செல்வத்தையடைந்து இவ்வுல வாழ்க்கையை இனிது நடத்தலாம்" என்பதே நம் நாட்டுப் பெற்றோர் எல்லார்க்கும் ஒத்த கருத்தாக இருக்கின்றது. இவர்கள் கருத்து ஒரு வகையிற் பொருத்தமாகக் காணப் படினும், மற்றைப் பல வகையில் அது தம் மக்கட்கும் தம் நாட்டவர்க்குந் தமக்குந் தீங்கு பயப்பதொன்றாகவே முடிகின்றது. யாங்ஙன மென்றால், அரசியலில் உயர்ந்த நிலைகளையும் அவற்றால் உயர்ந்த சம்பளங்களையும் பெற்று இவ் வுலகத்திற் பெருமையொடு தாம் இனிது வாழும் நோக்கம் ஒன்றைத் தவிரத், தமது பிறவியைத் தூய்மை செய்தற்கும், பிறர் நலம் அடைதற்குரிய உதவிகளைச் செய்தற்கும், உலகமும் உடம்பும் உடம்பைப் பற்றிய செல்வமும் நிலையின்றி மாற ஒவ்வொருவரும் வேறுவேறு பிறவிகளிற் செல்லுதலை நாடோறுங் காண்ட லின் அதன் உண்மையை அறிதற்கும், இங்ஙனம் இம்மை மறுமை அமைப்புகளை மாறிமாறிச் செல்லச் சுழற்றும் எல்லாம் வல்ல இறைவன் திருவுளக் கருத்தினை ஆராய்ந்து தெளிந்து உருகுதற்கும் இன்றியமையாத பேரறிவை வளர்ப்பதே கல்விப்பயிற்சியின் பயனாகு மென்னும் வேறு உயர்ந்த நோக்கத்துடன் ஆங்கிலக் கல்வி கற்பிக்கப்படா மையால், நம் நாட்டு இளைஞர்கள் ஆங்கிலத்திலும் உயர்ந்த நூல்களைக் கற்றுப் பேரறிவு பெறுகின்றார்களில்லை. கல்லூரியிற் கற்றுப் பட்டம் வாங்கினபின் தாம் கற்ற நூல் களையும் விற்றுவிட்டு, அரசியற் றுறைகளில் ஊழியஞ் செய்து பிழைத்தலிலேயே கருத்துடையவர்களாய் இருக்கின்றனர். தாய்மொழியாகிய தமிழின் பயிற்சி இவ்விளைஞரின் பெற்றோராலும், உறவினராலும், நண்பராலும் இகழ்ந் தொதுக்கப்பட்டமையால், இவர்கள் தமிழில் நாலுவரி கூடப் பிழையின்றிப் பேசவும் எழுதவுந் தெரியார்; அங்ஙனந் தெரியாத ஒரு பெருங் குறைபாட்டை ஒரு பெருங் குற்றமாக நினையாமல், அவர்கள் அதனைத் தமக்கொரு பெருமையாகவுஞ் சொல்லிக் கொள்ளுதலை எங்கும் பார்க்கலாம். இங்ஙனந் தாய்மொழியாகிய தமது தமிழை இகழ்ந்தொழுகும் ஆங்கிலம் அரை குறையாய்க் கற்றுப் பட்டம்பெற்ற இளைஞர்கள், தமிழ் ஒன்றே தெரிந்த தம்

நாட்டவர்பால் அன்பும் இரக்கமும் இன்றி அவரை அருவருத்து நடக்கின்றனர்; தம்போல் ஆங்கிலம் உணர்ந்தார் சேர்க்கை யினையும், அவர்போல் நடக்கும் நடையினை யுமே பெரிது விழைகின்றனர்; அதனால் தம் பெற்றார் உற்றாரையும் ஒரு பொருட்படுத்தாது, அவர் கூறும் அறிவுரைகளையுங் கேளாது தாம் வேண்டியபடி யெல்லாம் ஒழுகு கின்றனர்.

இவர்களிற் பலர் அரசியல் நிலைகளைப் பெற்றால், தாம் குடிகளுக்கு ஊழியக்காரர்கள் என்பதையும், அவ்வூழி யத்தின் கடமைகளையும் அறவே மறந்து, அவ்வேழை யெளிய குடிமக்களிடமிருந்து அறம் வழுவி எவ்வளவு பொருள் சுறண்டக் கூடுமோ அவ்வளவுஞ் சுறண்டி விடுகின் றார்கள். அங்ஙனஞ் சுறண்டிச் சேர்த்த பொருள் கொண்டு தம் மனைவி மக்களை மினுக்குவதுந், தமக்கு வேண்டிய வல்லாத வசதிகளைச் செய்து கொள்வதுங், **குடிப்பதும், ஊன் தின்பதும், மகளிர் பலர் தோள் மருவுவதுஞ்** செய்து ஆண்டு முதிரா முன்னரே மாய்ந்து போகின்றனர். இவர்களிற் பெரும்பாலார் தெய்வம் ஒன்றுண்டென்றே நினைப்ப தில்லை. தமிழ் கற்றுத் தேவார திருவாசகம் ஓதி இறைவனை வழிபடுவாரைக் கண்டால் இவர்கள் பழித்து நகையாடு தலைக் காணலாம். ஆகவே, ஆங்கிலம் கற்றவர்களிற் பெரும்பாலார் தமக்கும் பிறர்க்கும் பயன்படுதலிலாமை யேயன்றிக் குடிமக்கள் பொருளை அறம் வழுவிப் பறிப்பவர்களாயும் இருத்தலால் இப்போது ஆங்கிலங் கற்பிக்கும் முறை பிசகானதென்று உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

இதுகொண்டு, ஆங்கிலம் பயிலலாகா தென்பதும், ஆங்கில மொழிப்பயிற்சியே அவர்களின் தீயநடைக்குக் காரணமாமென்பதும் **எமது கருத்தாக எண்ணிவிடலாகாது.** ஆங்கிலமொழிப் பயிற்சி செவ்விதான முறையிற் செய்யப் படுமானால், அது தன்னைப் பயில்வார்க்கும் அவரொடு தொடர்பு உடையார்க்கும் **மிகச் சிறந்த நலங்களைத் தருமென் பதில் எட்டுணையும் ஐயம் இல்லை**. ஆங்கில மொழிக்கண் உள்ள நூல்களும் இயற்கை யமைப்பின் நுட்பங்களையும், உயிர்களின் தன்மைகளையும் இறைவன்றன் அளப்பரிய மாட்சிகளையும் விளக்குவதிற் றலைசிறந்து நிற்கின்றன. ஆதலால், **ஆங்கில நூற் பயிற்சியால் நலமே யல்லாமல் தீது**

**வருதற்கு இடஞ் சிறிதுமில்லை மற்று**, நம் நாட்டவர்களோ ஆங்கில மொழிப் பயிற்சியிலுள்ள அருமைகளைச் சிறிதும் உணராதவராகலின், அவர்கள் அதனைத் தம் மக்கட்கு உண்டாக்கி வைப்பது வயிற்றுப் பிழைப்புக்கே யல்லாமல் அறிவு விளக்கத்திற்கு அன்று. உயர்ந்த நோக்கமின்றிப் பொருளுக்குந் தலையெடுப்பிற்கும் வீண் பெருமைக்குமாக இழிந்த நோக்கத்துடன் ஆங்கிலம் பயிலுதலாலேதான் நம் இளைஞர்கள் தீயராய் மாய்கின்றனர். ஆங்கில மொழிக்கே உரிய வெள்ளைக்கார நன்மக்கள் தம் மொழிப்பயிற்சியாற் சிறந்த நலங்களைத் திண்ணமாய்ப் பெற்றும் பெறுவித்தும் நீடுவாழ்கின்றனரே யல்லாமல் நம்மவர்களைப்போற் கெட்டு விரைவிற் பட்டுபோதலைக் காண்கிலேம். மேலும், **ஆங்கில நன்மக்கள் தமது தாய் மொழியாகிய ஆங்கிலத்தை முதலில் நன்கு கல்லாமற் பிற மொழிகளைக் கற்க மாட்டார்கள்**. மற்று, நம் நாட்டவர்களோ தமது தாய்மொழியாகிய தமிழைச் சிறிதுங் கல்லாமலே ஆங்கிலங் கற்கப் புகுகின்றனர்; ஆங்கிலப் பள்ளிக்கூடங்களில் தமிழ் சிறிதாயினுங் கற்பிக்கப் படுதலினாற்றான், தமிழ்ப் பயிற்சியும் ஊடே ஊடே காணப்படுகின்றது. இல்லையாயின் தமிழ்ப் பயிற்சி அறவே மறைந்து போயிருக்கும். இங்ஙனந் தமது தாய்மொழிப் பயிற்சியை இகழ்ந்திருக்கும் வரையில் நம் நாட்டவர் உயர்ந்த அறிவாற்றல்களைப் பெறுதலும் ஏலாது. அவர்கள் தமக்கும் பிறர்க்கும் பயன்படுதலும் வாயாது. அதனால் அவர்கள் மனந் தூயராய் நீண்டநாள் உயிர்வாழ்தலுங் கைகூடாது.

ஆகையால் நம் நாட்டவர்கள் முதலில் தாம் தம் தாய் மொழியாகிய தமிழை ஆராய்ச்சி முறையிற் செவ்வையாகப் பயிலுதலொடு, தம் பிள்ளைகளும் அதனை நன்கு பயிலுமாறு செய்தல் வேண்டும். தமிழை ஓரளவுக்கு நன்கு பயின்றபின் ஆங்கிலம் பயிலுதல் இன்றியமையாதது. இம் மொழிகளைப் பயிலுங் காலத்தில் தம் பிள்ளைகளுக்கு உயர்ந்த நோக்கம் உண்டாகும்படி பெற்றோர்கள் அவர்கட்கு உயர்ந்த எண்ணங்களை எழுப்பிவிடல் வேண்டும். **தமிழிலாவது மற்றை மொழிகளிலாவது தம் பெயர்கூட எழுதத் தெரியாத எத்தனையோ பெயர் பெருஞ்செல்வர்களாக இருக்கின் றார்கள்.** ஆனால், ஒருவர்க்குக் கல்வியறிவு வாய்பபதோ மிக அருமையாக இருக்கின்றது: அருமையாக இருந்தாலும்

கல்வியறிவு பெற்றவர்களுக்குள்ள சிறப்பும் அதனால் அவர்கள் அடையும் பயனும் என்றும் அழிவில்லாதனவாகும். செல்வம் மட்டும் உடையவர்களுக்கு உள்ள சிறப்பும் பயனும் அச் செல்வம் உள்ளவரை யிருந்து பின்னர் அவர்களை விட்டு நீங்கும். கல்வியுடையவர் ஏற்றமுறையில் முயல்வராயிற் செல்வம் அவர்க்குத் தானே வரும்; செல்வம் உடையவரோ இடையிலே எவ்வளவு முயன்றாலும் உயர்ந்த கல்வி யறிவைப் பெறுதல் ஏலாது. ஆதலால், ஆன்றோர் இயற்றியுதவிய அரும்பெறல் நூல்களை ஆழமாக அழுத்தமாக ஆராய்ந்து கற்று அறிவு நிரப்புதலிலேயே கருத்து முனைந்து நிற்றல் வேண்டும். வேண்டிய அளவு கல்வி கற்றபிற் பொருள் தேடும் முயற்சி களைச் செய்தல் வேண்டும். அங்ஙனம் முயன்று பொருள் தேடுவதும் பிறர்க்குத் தீங்கு பயவாத வகையிலே செயப்படுதல் வேண்டும் அங்ஙனமின்றித் தமது நன்முயற்சியினளவுக்குக் கிடைக்கும் பொருளினும் மிகுதியான பொருளை விரைவிற் சேர்த்துக் கொள்ளல் வேண்டுமெனப் பேரவாக் கொண்டு, முறை தவறிப் பிறரை வருத்தியோ அல்லதவரை ஏமாற்றியோ அவருடைய பொருளைக் கவர்ந்தால்,

> “அழக்கொண்ட வெல்லாம் அழப்போம் இழப்பினும்
> பிற்பயக்கும் நற்பா லவை” (குறள் 659)

என்ற **தெய்வத் திருவள்ளுவர்** அருளுரைப்படி, அவர் அங்ஙனம் கவர்ந்த பொருளும் அதற்கு முன்னமே அவர்பால் உள்ள பொருளும் அவர் அழுது அழுது மாயும்படி அவரை விட்டு ஒருங்கே தொலைந்தொழியும்; அதனால் அவர்க்கு ஆற்றொணாத் துன்பமுந் தீவினையும் பழிப்புமே மிச்சமாய் நிற்கும். கல்லாதவரிலுஞ் சிலர் இரக்க நெஞ்சமும் அருளொழுக்கமு முடையராய் நல்வழியிற் பொருள் தேடி அதனை நல்வழியிற் பயன்படுத்துகின்றன ரென்றாற், கல்வியறிவு பெற்றவர் இன்னும் எவ்வளவு ஈரநெஞ்சமுடைய ராய்ப் பொருள்தேடி, இன்னும் எவ்வளவு சிறந்த துறைகளில் அதனைப் பயன்படுத்தல் வேண்டும்! அவ்வாறின்றி, ஆங்கிலங்கற்ற நம்மவரிற்பலர் உயர்ந்த சம்பளம் பெறும் உயர்ந்த நிலைகளைப் பெற்றும், பேரவாக் கொண்டவர் களாய் நெறி திறம்பிக் கைக்கூலி வாங்கிக் குடிமக்கட்குத் தீது

செய்பவர்களாயின், இவர்கள் கல்வி கற்றதனாற் பெற்ற பயன் யாது? தீவினையும் பழியும் பாவமும் அல்லவோ! இரவிலே மறைந்துவந்து பிறர் பொருளைக் கவருங் கல்லாக் கள்வர்கள் கொடியரோ! பகலிலே எல்லாரும் விழித்திருக்கையில் அவரை வருத்தியும் ஏமாற்றியும் பொருள் பறிக்குங் கற்ற அலுவலாளர் கொடியரோ! என்பதை உணர்ந்து பார்த்தல் வேண்டும்.

இனித், தமிழ் முதலான தாய்மொழிகளைத் தம் மக்களுக்குக் கற்பிக்கும் பெற்றோர்களுக்கு இத்தகைய தீய பேரவா இல்லாமையால், அவர்கள் அவர்களின் அகக்கண்திறப்பிக்கும் நோக்கம் ஒன்றே கொண்டு அவற்றைக் கற்பிக்கின்றார்கள்; அதனால், அப்பிள்ளைகள் தம் தாய்மொழியைக் கற்றுப் பெரியரானபின் அன்பும் அடக்க ஒடுக்கமும் ஈரநெஞ்சமும் வாய்ந்து, கிடைத்த மட்டில் மன நிறைவுடையராய்த், தாம் கற்ற தாய்மொழி தம் நாட்டவர் எல்லார்க்குந் தெரிந்த தொன்றாகையால், அதன் வாயிலாகத் தாம் அறிந்த அரும்பெரும் பொருள்களை அவர்கட்கு எடுத்துச் சொல்லி, அவர்களை நலப்படுத்தித் தாமும் நலம் அடைகின்றார்கள். மற்று, ஆங்கிலங் கற்றவர்களோ தாம் அறிந்தவைகளை இத் தமிழ்நாட்டவர்க்கு எடுத்துச் சொல்ல வேண்டி நேருங் காலங்களில், அவற்றைச் செவ்வையாகத் தமிழிற் பேசவுந் தெரியாமல் விழிக்கின்றார்கள்; ஆகையால், இத்தகையவர்களால் நாட்டவர்க்கு யாது நன்மை விளையக்கூடுமென்பதை உணர்ந்து பார்மின்கள்! ஆகவே, தமது நலத்தையும், நாட்டவர் நலத்தையும் உண்மையாகக் கோரும் பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு முதலில் தாய்மொழியாகிய தமிழை நன்கு கற்பித்து வைத்து, அதன்பின் ஆங்கிலம் முதலான அயல்மொழிகளை நன்மை பயக்கும் முறையிற் கற்பித்தலை விடாப் பிடியாய்க் கொண்டு ஒழுகுவார்களாக!

மேலும், எல்லாருமே வயிற்றுப் பிழைப்புக்கென்றும் அரசியலில் உயர்ந்த நிலைகளைப் பெறுதற்கென்றும் கல்வி கற்றல் பெரும் பிழையாகும். மிடிப்பட்டு வருந்துவோர் **உழவு, நெசவு** முதலான பல்வகைக் கைத்தொழில்களில் தமக்கு ஏற்றதொன்றையும், பல்வேறு வாணிகத் துறைகளில் தமக்கேற்ற தொன்றையுங் கைப்பற்றி, அதனை அறிவோடும் விடாமுயற்சி

யோடும் பொய் கலவாமல் இனிய தன்மையுடன் செய்து வருவார்களானால், அவர்க்குள்ள **மிடி** விரைவில் நீங்கி மிகுந்த வருவாயினைப் பெற்று இனிது வாழ்வார்கள். அங்ஙனமே அரசியலில் உயர்ந்த நிலைகளைப் பெறுதற்கேற்ற அறிவும் ஆற்றலும் உடைய சிலரே, அந்நிலைகட்கு இசைந்த கல்வியினைப் பயின்று, நடுவுநிலை திறம்பாமல் ஈரநெஞ்ச முடையராய் அவற்றில் அமர்ந்து அறத்தை வளர்த்தல் வேண்டும். இவ்வாறு அவரவர் தத்தந் தகுதியறிந்து கல்விகற்றுப் பொருள்தேடும் முயற்சியிற் புகுவராயின், அவர் தமக்கும் பிறர்க்கும் மிகுதியும் பயன்படுதல் உடையராய் உலக வாழ்க்கையை ஒழுங்குற நடாத்தி நீண்ட காலம் நன்கினிது வாழ்வார்கள்.

என்றிதுகாறும் உரைத்தது கொண்டு, கல்வி கற்பதன் முதல் நோக்கம்: **அரும்பேருண்மைகளை யறிந்து, அறிவு விளங்கித் தமக்கும் பிறர்க்கும் பெரிது பயன்படும் அற நெறியில் ஒழுகுதலே யாம்** என்றும், அதன் இரண்டாம் நோக்கந் **தத்தம் அறிவாற்றலுக்கு ஏற்ற நன்முயற்சியிற் புகுந்து பிறர்க்குத் தீங்குபயவாத வகையிற் பொருள் ஈட்டி, அது கிடைத்தமட்டில் மனநிறைவுடையராய், அதனைப் பயன்படுதுறைகளில் அளவறிந்து செலவு செய்து அறத்தைப் பெருக்குதலே** யாமென்றும், பெற்றோர் அனைவரும் நன்கு உணர்ந்து, அவ்வுணர்ச்சியைத் தம்மக்கள் உள்ளத்தில் ஆணித்தரமாகப் பதியவைத்தல் வேண்டும். அறிவும் அன்பும் விரவிய இத்தகைய அறவொழுக்கம் உலகில் நிலைபெறு மாயின், இடருங் கவலையும் இன்னாமையும் முற்றும் ஒழிய, நம்மனோர் தம் பிள்ளைமைப் பருவந்தொட்டே உரமான உள்ளமும் உடம்பும் உடையராய்க், காழ்ப்பேறிய ஆலமரம் போல் நீடுவாழ்வ ரென்றுணர்க.

இனித், தம் மக்கள் கல்வியிற் சிறந்து, அதன்பிற் பொருள் தேடும் முயற்சியிற் புகுந்து, இல்லறவாழ்க்கையை இனிது நடப்பித்தற்குத் தக்க அளவு பொருள்வருவாயை ஒழுங்கு படுத்திக் கொண்டபின், அவர்கட்கு மணஞ் செய்வித்தல் வேண்டும். மற்று, இந்நாட்டவரோ கல்விகற்றுத் தேர்ச்சி யடையா முன்னும், பொருள்தேடும் முயற்சியிற் புகா முன்னும், அதிற் புகுந்தாலும் வாழ்க்கைக்கு வேண்டியவளவு பொருள்

*வருவாய் இல்லாத காலத்தும் விரைந்து தம் மக்களுக்கு மணஞ்செய்து விடுகின்றார்கள். அதனால், தம் மக்கள் வறுமைப்பட்டுத் துன்புறுதலையும், அவர் வயிற்றிற் பருவம் முதிராமுன்னரே அடுத்தடுத்துப் பிறக்கும் பிள்ளை களும் வேண்டியவளவு உணவு முதலிய வசதிகள் பெறாமல் நோய்கொண்டு நைதலையும், அவருட் பலர் இடையிடையே இறந்து படுதலையுங் கண்டு, அப்போதுந் தாஞ் செய்த தீராப் பிழையினை ஒப்புக் கொள்ளாமல்,* ***"நாம் என்ன செய்யலாம்! இப்படியெல்லாம் ஆகவேண்டுமென்று இறைவன் எங்கள் தலையில் எழுதிவிட்டான்; அன்றெழுதின எழுத்தை அழித் தெழுத முடியுமா!"*** *என்று சொல்லிக்கொண்டு, அவர் களோடு தாமும்உடன் துன்புறுகின்றார்கள்! மணஞ்செய்து வாழ்தற்குத் தக்க வசதிகள் வாயாதிருக்கையில், தாம் இருக்கும் வறிய நிலையினையும், மணஞ்செய்து விட்டால் தம் மக்கட்கும் அவர்தம் மக்கட்கும் உண்டாந் துன்ப நிலையினையுஞ் சிறிதேனும் உணர்ந்து பாராமல், தாமே அவர்களை மணவாழ்க்கையிற் பிணைத்து விட்டுப், பிறகு துன்புறுங்கால் இவையெல்லாம் இறைவன் எழுதின எழுத்து என்று இறைவன் மேற் பழிசுமத்துவது நம்மவர்க்கு எவ்வளவு மடமையாக இருக்கின்றது! இறைவன் இவர்களுக்குப் பகுத்துணர்வைக் கொடுத்தது இதற்குத்தானா! பகுத்துணர் வில்லாத விலங்குகளுந், தாம் கருக்கொள்ளுதற்கேற்ற காலத்தன்றி மற்ற நேரங்களிற் புணராமை எவரும் அறிந்த தன்றோ? இவ்விலங்கு களுக்கு இல்லாத பகுத்துணர்வை, இறைவனருளாற் பெற்ற மக்கள், தமது பகுத்துணர்வைப் பயன்படுத்தி ஏற்ற காலங்களில் தம் இளைஞர்க்கு மணஞ் செய்ய வேண்டுவதாயிருக்க, அதனைச் சிறிதாயினும் பயன் படுத்தாமல் ஏலாத காலங்களில் அவரை மணம் பொருந்தி விட்டு, எல்லாருமாய்த் துன்பத்திற்கிடந் துழல்வது விலங்குகளுஞ் செய்யாத கடைப்பட்ட செயலன்றோ? பெற்றோர் களாவார் இவ்வாறு பகுத்துணர்வின்றிச் செய்யும் பொருந்தா மண வாழ்க்கை யினாலேயே இந் நாட்டிற் பிள்ளைகள் அடுத்தடுத்துப் பிறந்து நோய்கொண்ட யாக்கையினவாய் ஆண்டு முதிராமுன்னரே மாண்டு போகின்றனர்; தப்பிப் பிழைப்பனவும் நோயிலும் வறுமையிலும்*

வளர்ந்து இளம் பருவத்தே இறந்தொழிகின்றன. இப் பிள்ளைகளைப் பெறுந் தாய்மாரின் உடம்பும் அவர்தம் வாழ்க்கையும் இதனால் எவ்வளவு துன்பத்திற் கிடமாயிருக்கு மென்பதை உணர்ந்து பார்மின்கள்! பிள்ளைகளுந் தாய்மாரும் இங்ஙனம் அல்லற் பட்டால், இவர்கட்குத் தந்தையுங் கணவனும் ஆயினார் இன்னும் எவ்வளவு மிகுதியான துன்பத்திற்காளாகுவ ரென்பதையும் உணர்ந்து பார்மின்கள்! இத்துணை மிடிப்பட்ட நிலையிலிருந்தால் இந்நாடு செழிப்பதெங்கே! இந்நாட்டவர் நீடு இனிது வாழ்வதெங்கே! ஆகவே, ஒவ்வொரு குடும்பத்தவரும் மணஞ் செய்தற்குஞ் செய்து இனிது வாழ்தற்கும் ஏற்ற வசதிகளைத் தேடிக் கொள்ளும் வரையில், தம் மக்கட்கு மணஞ் செய்யாது, அதற்கேற்ற ஒழுங்குகளை மட்டுஞ் செய்வாராக!

இனி, மணஞ் செய்தற்கேற்ற வசதிகள் கிடைத்தபின் மணமகளுக்கு ஏற்ற மணமகனையும், மணமகனுக்கேற்ற மணமகளையுந் தேடிப்பார்த்து மணஞ்செய்தல் வேண்டும். மணஞ்சூடும் இருவர்தம் உடல்நிலை அறிவுநிலை அன்பு நிலை யென்னும் இவைகள் இயன்றமட்டும் இசைவாக இருக்கப் பார்த்து மணஞ்செய்வித்தல் இன்றியமையாதது. இருவருடம் பிலும் பழுது இருத்தல் ஆகாது; இருவரும் நோய் இல்லாத உடம்பினராய் இருத்தல் வேண்டும். ஏதேனும் நோய் இருந்தால் அதனை முற்றுந் தீர்த்துவிட்ட பிறகுதான் அவர்களை மணங்கூட்டல் வேண்டும். **தீர்க்க இயலாத நோய் ஆணுக்கேனும் பெண்ணுக்கேனும் இருந்தால் அவர்களை மணங் கூட்டுவது, அவ்விருவர்க்குந் தீங்கு பயப்பதுடன், அவர் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகட்கும் பேரப் பிள்ளைகட்கும் அவர்க்குப் பிறக்கும் பிள்ளைகட்குமாகத் தொடர்பான தீமையினை விளைவிக்கும்.** இன்னும் மணமகனை விட மணமகளின் உடம்பு உயரத்திற் சிறிது குறைந்ததாக இருத்தல் வேண்டும்; அங்ஙனமே மணமகளின் உடம்பு பருமனிலுஞ் சிறிது குறைந்ததாக இருத்தல் வேண்டும். குள்ளமான ஆண்மகனுக்கு உயரமான பெண்ணைச் சேர்த்தலும் ஒல்லியா யிருப்பவனுக்குத் தடித்தவளாயிருக்கும் ஒருத்தியைச் சேர்த்தலும் ஆகா. ஆண்மகனிலும் பெண்கள் ஆண்டிற் குறைந்தவளாக இருத்தலே நலமுடைத்து.

பெண்ணானவள் பதினெட்டு அல்லது இருபதாண்டு உடையவளாயிருந்தால் அவளுக்குக் கணவனாய் அமைபவன் அவளுக்கு மேற் பத்தாண்டு மூத்தவனாய் இருபத்தெட்டு அல்லது முப்பதாண்டுள்ளவனாய் இருத்தலே நன்று! ஏனென்றால், ஆணுடம்பைவிடப் பெண் உடம்பு விரைவில் மூத்துப் போகின்றது; அடுத்தடுத்து மகப்பெறும் பெண் பாலார் உடம்பு விரைவில் மூத்துப் போதலைக் காணலாம். பெரும்பாலும் நாற்பது அல்லது நாற்பத்தைந்தாண்டுகட்கு மேற் பெண்பாலார் கணவனோடு உடனுறையத்தக்க நிலையை இழக்கின்றனர். ஆண்மகனோ பழுதிலாத யாக்கை யனா யிருந்தால் எழுபது அல்லது எழுபத்தைந்தாண்டு வரையில் மனைவியோடு உடனுறையத் தக்கவனாயிருக் கின்றான். அறுபதாண்டு முதிர்ந்த ஆண்பாலர் சிலர் பதினாறு ஆண்டுடைய இளமங்கையரை மணந்து மகப் பெறுதலையும், அவர் தம் இளமனைவியர் முப்பது முப்பத்தைந்தாண்டுகட் கெல்லாம் மூத்துப் போதலையுங் கண்டிருக்கின்றேம்; ஆகையால், ஒத்த ஆண்டுடைய ஆணையும் பெண்ணையும் மணப்பித்தால், நாற்பத்தைந்து முதல் அறுபதாண்டு வரையிலுங்கூட ஆண்மக்கள் சிலர் பலர் மூவாதிருக்க, அவரோடு ஒத்த ஆண்டுள்ள அவர் தம் மனைவிமார் நாற்பத்தைந்துக்கு மேலெல்லாங்கிழத்தன்மை உடையராய் விடுகின்றனர். அதனால், மணமகளுக்கு மேல் மணமகனாவான் பத்தாண்டா யினும் மூத்தவனாயிருத்தல் இன்றியமையாத தென்று எல்லாரும் நினைவிற் பதித்து வைத்து, அதற்கேற்ற முறையில் மணமக்களை ஒருங்கு கூட்டல் வேண்டும்.

இன்னும், உடம்பின் அழகானது மக்கள் எல்லார்க்கு மகிழ்ச்சியினை விளைவிப்பதொன்றாய்த் திகழ்கின்றது. ஆணிலாயினும், பெண்ணிலாயினும் அழகுடையர்களைக் கண்டு மகிழாதவர்களும்/ அவர்கள்பால் அன்பு வையாத வர்களும் உலகில் இல்லை; அங்ஙனமே அழகின்றி அருவருப் பான யாக்கையுடையவர்களைக் கண்டால் வெறுப்படையாத வர்களும் உலகில் இல்லை; அழகிய யாக்கையின் திருத்தமான அமைப்பில் இறைவனது படைப்பின் ஆற்றல் மிக்கு விளங்குகின்றது. **இரவிவன்மர்** வரைந்த ஓவியங்களின் அழகும், அவற்றின்கண் அவரது அறிவாற்றல் விளங்கித் தோன்றுதலுங் காண்மின்கள்! **அழகற்ற அமைப்பிலே இறைவனது**

**படைப்பின் திறம் புலனாகின்றிலது**. அவர் செய்த தீவினையும் அத் தீவினைக்கு ஏதுவாய் நின்ற ஆணவமும் இறைவன்றன் ஆற்றல் அவர்தம் உடம்பமைப்பில் தோன்ற வொட்டாமல் மறைக் கின்றன. ஆதலால், அழகற்ற வர்களைவிட அழகுடையவர்கள் பலவகையிற் சிறந்த இயல்புள்ளவர் களாகவேயிருக்கலாம். அற்றேல், அழகுள்ள வர்களிலுஞ் சிலர் பலர் தீய வியல்புள்ள வர்களாகக் காணப் படுதல் என்னை யெனின்; நம் நாட்டவர் தமது சாதியிறு மாப்பினாற் செய்து வைத்திருக்கும் பொருந்தாக் கட்டுப்பாடுகளும், அவர் சேர்ந்திருக்கும் இனத்தவரின் தீய இயல்புகளுமே அவர் அங்ஙனந் தீயவியல்புடையராதற்குக் காரணங் களாகும்; என்னை? ஆசிரியர் தெய்வத் **திருவள்ளுவர்**,

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு" (குறள் 452)

என்றும்,

"மனநலன் நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநலம் ஏமாப் புடைத்து" (குறள் 458)

என்றும் அருளிச் செய்திருக்கின்றனரல்லரோ? ஆகவே, அழகுடையவர்கள் நல்லியல்புகள் உடையராயிருந்தும், தம் மனம்பிடியாதவர்களுடன் சேர்க்கப்படுதலாலும், நல்லியல்பு கள் இல்லாருடன் நட்பு வைத்து ஒழுகுதலாலுமே அவர் தாமுந் தீய இயல்புகள் கொள்ளப் பெறுகின்றார். இங்ஙனம் அவர்களைத் தீயராக்குதற்கு உரிய இருவகைக் காரணங் களையும் ஒழித்து, **அழகிய மணமகளுக்கு அவள் விரும்பிய அழகிய ஒரு மணமகனையும், அழகிய ஒருவனுக்கு அவன் விரும்பிய அழகிய ஒரு மாதையும் பொருத்தி மணஞ் செய்தலை நம் நாட்டவர்கள் விடாப்பிடியாய்க் கொண்டு ஒழுகுவார் களானால், இருவரும் பிழைபட நடவார்கள். மாதர்க்குக் கற்பொழுக்கமும் மைந்தர்க்கு மனத் திட்பமும் அப்போதுதான் நிலைபெறும்**. இவ்வெளிய இனிய ஏற்பாட்டை விடுத்து, அழகியாள் ஒருத்திக்கு அவள் வேண்டாத ஒருவனைப் பொருத்துதலும், அழகியான் ஒருவனுக்கு அவன் வேண்டாத ஒருத்தியைப் பொருத்து தலுஞ் செய்யும் வரையில், மகளிர் கற்புடையராதலும் மைந்தர்

பிழைபடாதொழுகுதலும் நிலைபெறா. எத்துணை அறிவு நூல்களை எழுதி வைத்தாலும், எத்துணைக் கட்டுப் பாடுகளைச் செய்து வைத்தாலும், எத்துணைப் பெருந் துன்பங்களை விளைத்தாலும் மனமகிழ்ச்சி யில்லாமையாற் பிழைத் தொழுகுவாரைச் சீர்திருத்தல் இயலாது. மணங்கூடி நன் மக்களைப் பெற்று உலகத்தை நன்னெறிக்கண் உய்த்தற்குரிய மணமக்களின் அழகும் இயல்பும் மனப்பாங்கும் அறிந்து அவர்களை ஒருங்குசேர்த்தலே இன்றியமையாத தாகும். அன்றி, வெறுஞ் சாதிக்கட்டுப்பாடு செல்வச் செருக்கு வெளியார வாரங்களையே பெரிது நினைந்து ஒவ்வாதவர்களை ஒருங்கு சேர்த்தல், வரவரத் தீமை பெருகுதற்கே வாயிலாகும் என்று எல்லாருந் திண்ணமாக உணர்தல் வேண்டும். சாதிக் கட்டுப்பாடு முதலான புல்லிய காரணங்களின் வயப்படாமல் அவற்றைப் போழ்ந்து சென்று காதன்மணங்கூடியவர்கள் இல்லற வாழ்க்கையைப் பிழையற இனிது நடத்துதலையும் அவர் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகள் அறிவிலும் அன்பிலும், ஆற்றலினுஞ் சிறந்து திகழ்தலையும் ஓரோவிடங்களிற் கண்டாவது நம்மனோர் காதன் மணத்தின் பெருமாட்சி யுணர்ந்து சீர்திருந்துவாராக! நம் பண்டையா சிரியர்கள் எல்லாருங் காதன்மணத்தையே சிறந்தெடுத்துப் பேசி யிருத்தலைத் **தொல்காப்பியம், இறையனாரகப் பொருள், அகநானூறு, கலித்தொகை, திருச்சிற்றம்பலக் கோவையார், பெரிய புராணம்** முதலிய அரும் பெருந் தமிழ் நூல்களிற் காண்பாராக. அவற்றைப் பயில மாட்டாதார்,

"மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவரும் பூண்டீர்ப்பி னல்லால் - ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான்கசடஞ்
செல்லாது தெற்றி நின்று"

என்றும்,

"காதன் மனையாளுங் காதலனும் மாறின்றித்
தீதில் ஒருகருமஞ் செய்பவே"

என்றும்,

"காதலிருவர் கருத் தொருமித்து - ஆதரவு
பட்டதே இன்பம்"

என்றும் பள்ளிக்கூடச் சிறார் பயிலும் பழைய அறநூற் செய்யுட் களையேனும் கேட்டுணர்வாராக!

இனி, இங்ஙனம் மணங்கூடுவாரின் உடல் நிலைமை யினை அறிந்தாராய்ந்து மணம் பொருத்துவதுடன், அவரது அறிவு நிலையினையும் ஏறக்குறைய ஒக்கப்பார்த்தலுங் கட்டாயஞ் செயற்பாலது. கல்வியறிவிற் சிறந்த ஓர் ஆடவனுக்கு, அவ்வறிவு சிறிதும் வாயாதாள் ஒருத்தியையும், அது வாய்த்தாள் ஒருத்திக்குக் கல்வியறிவில்லா முழு மகனோருவனையும் பிணைத்தல், அவரது வாழ்க்கையைப் பாழ்படுத்துவதேயாகும். அறிவுடையார் ஒருவர் அஃதில்லார் ஒருவரோடு உடன் கூடியிருப்பது, பகுத்தறிவில்லா விலங் கொடு கூடியிருப்பதையே ஒக்கும்; என்னை?

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்" (குறள் 410)

என்றும்,

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்உடைய ரேனும் இலர்" (குறள் 430)

என்றும்,

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு" (குறள் 396)

என்றுந் தெய்வத் திருவள்ளுவர் அருளிச் செய்திருக்கின்றன ராகலின் என்பது. ஆகவே, கல்வியறிவுடையாருக்கு அஃதுடையாரையும், அஃதில்லாருக்கு அஃதில்லாரையுங் கூட்டி மணஞ் செய்வித்தலே நன்றாமென்றறிதல் வேண்டும். இவ்வாறு செய்யப்படுமானாற்றான், இன்ப வாழ்க்கையும் அவரவர்க்கேற்ற மக்கட்பேறு முண்டாம் என்றுணர்ந்து கொள்க.

இனி, உடல்வனப்பும், கல்வியறிவும் வாய்த்து மணங் கூடினார்க்கு அன்பு உண்டாதல் தானே நிகழுமாகலின், அன்பு நிலையினை மணங்கூடுவார்பால் ஆராய்தல் வேண்டப்படா தெனின்; அற்றன்று, அழகுங் கல்வியறிவும் உடையாரிலுஞ் சிலர் அன்பற்றவராயுங் கொடுந்தன்மை யுடையராயும்

இருக்கின்றனர்; அழகறிவுகள் உடையராயினும் அன்பிலரானால், அவையிரண்டு மிருந்தும் பயனில்லை. அன்புதான் எல்லா வற்றினுஞ் சிறந்தது. அழகறிவுகளோடு அன்பும் உடையாரைத் தெய்வப் பிறவியாகவே நினைத்தல் வேண்டும்; அன்பில்லாதவரை மக்களினும் விலங்குகளினுந் தாழ்ந்த மரப்பிறவியாகவே நினைத்தல் வேண்டும். இதனாலான்றோ தெய்வ ஆசிரியர் **திருவள்ளுவர்**,

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று" (குறள் 78)

என்று அருளிச் செய்தார். அன்பு உடையார்க்கு அழகறிவுகள் இல்லையாயினும் அது குற்றமாகாது. அது பற்றி அவர் இகழப் படார்; மற்று, அழகறிவுகள் உடையார்க்கு அன்பில்லையாயின் அது பெருங்குற்றமாகும். அதுபற்றி அவரை எல்லாரும் இகழ்வர். ஆதலால், தம் வாழ்நாள் முழுமையும் அன்பினாற் பிணிப்புண்டு வாழவேண்டிய மணமக்களை, அவர் ஒருவர் மீதொருவர் அன்புகொள்ளப் பெறுகின்றனரா என்பதை நன்காராய்ந்து பார்த்துப் பின்னர் அவரை மணங்கூட்டுக. ஒருவர்மீதொருவர் அன்பு கொள்ள மாட்டாராய் இருக்கையில், அவர் தம்மை மண வாழ்க்கையிற் பிணைத்து விடுதலாலன்றோ, எத்தனையோ குடும்பங்கள் அலைக்கழிந்து சின்னபின்னமாய்ச் சிதைந்து போகின்றன! அவர் வயிற்றில் ஏதோ தப்பித்தவறிப் பிறக்கும் பிள்ளைகளும் அன்பற்ற வன்கண்ணராகிச் சீர்குலைந்துபோகின்றனர்! ஆகையாற், பின்வருவதை முன்னுணர்ந்து பார்த்து, எல்லா வற்றினுஞ் சிறந்த அன்பினால் ஒருவரையொருவர் இன்றி யமையாராய் நினையும் இருவரையே மணம் பொருத்து தற்குப் பெற்றாரும் உற்றாரும் நன்கு முயன்று, தம் மக்களையும் அவர் கால்வழியில் வருவாரையுஞ் சீருஞ் சிறப்பும் எய்தச் செய்தல் வேண்டும் என்பது.

## 6. கருவிலக்கு

எல்லா வசதிகளும் உடையராய் மணஞ்செய்து கொள்பவர்கள் எத்தனை பிள்ளைகள் பெற்றாலுந் துன்பம் இல்லை என்றும், வேண்டிய வசதிகள் வாய்க்கப் பெறாதாரே மக்கட்பேற்றை மட்டுப்படுத்தல் வேண்டும் என்றும், வசதிகள் உடையராயினும் இலராயினும் எல்லாம் ஊழ்வினைப்படி நடக்கவிடுதலே முறையென்றும் பலபடக் கூறுவார் பலப்பலர் உளர். இங்ஙனங் கூறுவார் கொள்கை களை யாராய்ந்து எமது முடிந்த கருத்தையும் இங்கு விளக்கிக் காட்டுவாம்.

முதலில், எல்லாவசதிகளும் வாய்ந்தார் அடுத்தடுத்து மகப் பெற்றாலுந் துன்பமின்றி வாழலாம் என்று எண்ணுவது பிழையாகும். மகப்பெற்ற தாயின் உடம்பும் அவளுடம்பின் அகத்தேயுள்ள கருப்பை முதலிய உறுப்புகளும் வலிவேறி, மறுபடியும் அவள் கருக்கொள்ளுதற்கு ஏற்ற பதத்தையடைய **இருபத்தொரு திங்கள்** (மாதம்) ஆகின்றனவென்று, இவ்வியல் பைப் பலவாற்றால் நன்கு ஆராய்ந்து பார்த்த அமெரிக்க மருத்துவ ஆசிரியர்கள் கணக்குச் செய்திருக்கின்றார்கள் **மகப்பெற்ற நாளிலிருந்து ஒன்பது திங்கள் முடியத் தாயா னவள் தன் மகவுக்குத் தன் முலைப்பாலை ஊட்டவேண்டிய வளா யிருக்கின்றாள்;** அங்ஙனம் பாலூட்டுங் காலத்தில் அவளுடம்பின் வலிய சாறு எவ்வளவோ கழிந்து போதலால், மகவுக்குப் பால் மறப்பித்த பின்னும் ஓராண்டு வரையில் அவள் ஓய்ந்திருந்து இழந்த வலிமையைப் பெறல் வேண்டும்; அவ்வாறு பெற்ற பிறகுதான் திரும்பவும் அவள் கணவனை மருவுதற்கு இசைந்த நிலையினளாகின்றாள். இங்ஙனம் இருபத்தொரு திங்களுக்குப் பின், அவள் கணவனை மருவுதற்குத் தகுதி யுடையளாயினும், மறுபடியும் அவள் கருக்கொள்ளுதற்குப் பின்னும் ஓராண்டு கழிதலே நன்று. கருவுயிர்த்து இருபத்தொரு திங்கள் செல்லுதற்கு முன்

அவளை அவள் கணவன் மருவுதலும் ஆகாது; **ஒரு பிள்ளை பெற்று மூன்றாண்டு செல்லுதற்குமுன் அவள் வேறொரு மகவினைப் பெறுதலும் ஆகாது**. இவ்வாறாகத் தாயின் உடம்பு நிலையும், அவள் ஈன்ற மகவின் உடம்புநிலையும் உரம் பெறுதற்கு வேண்டிய கால அளவினை மிக நுணுகி ஆராய்ந்து வரையறுத்திருக்கும் ஆங்கில மருத்துவ ஆசிரியரின் அறிவுரைக்கு மாறாக, அவளை மருவுங் கணவன்மார் தம் மனைவியர்க்கும் அவரீன்ற பிள்ளைகட்கும் அளவிறந்த துன்பத்தை விளைவித்துத் தாமும் அல்லற்படுவர். நோய் அற்ற திண்ணிய யாக்கையுடைய தம் மனைவிமாரையே அவர் கருவுயிர்த்த நாலைந்து திங்களில் மருவுதல் குற்றமுடைத் தென்றால், அடிக்கடி நோய்ப் பட்டுங் கருவீன்றும் மெலிந் திருக்கும் மனைவியரைக் கூடுதல், இன்னும் எவ்வளவு பெருந்துன்பத்திற்கு இடஞ் செய்யும்!

மேலும், மகவு ஈன்று அல்லும்பகலும் அம் மகவினை வளர்த்தற்குப் பெரும்பாடுபட்டு வருந்தும் நிலையிலுள்ள தாயானவள், அவ் வருத்தம் ஒரு சிறிதாயினும் நீங்குதற்கு முன்னமே மற்றுமொரு மகவினைப் பெற்று, அதனையும் முதலீன்ற குழவியினையும் ஒருங்கே வளர்க்க நேருந் துன்பத்தினும் வேறு பெருந்துன்பம் உலகிலுண்டோ எண்ணிப் பார்மின்! எவ்வளவு அன்புடைய கணவனாயிருப் பினும், எவ்வளவு இரக்கமுடைய தந்தையாயிருப்பினும், அவன் மகப்பெற்று வளர்க்குந் தன் மனைவி படுந்துன்பத்தில் ஆயிரத்தில் ஒரு கூறேனும் படுபவனல்லன். ஆதலால், அவன் தன் மனைவி ஐந்தாண்டுகட்குள் நான்கு சிறு குழந்தைகளைப் பெற்று, அக்குழந்தைகளை ஒருங்கே வளர்க்குஞ் சொலற் கரிய நினைத்தற்கரிய துன்பத்தினை விளையாதிருப்பானாக! இங்ஙனம் இடையே சிறிதும் ஓய்வின்றி மகப்பெறுதலால், தாயின் உடல்நல மனநலங்கள் சிதைவதல்லாமலும், அவளீன்ற பிள்ளைகளுந் தக்க முறையிற் பேணப்படுதல் இயலாமையால் தம்முடைய உடல்நல மனநலங்கள் இழந்து குறுவாழ்க்கை யினராயும், அதற்குத் தப்பினால் நல்லறிவிலா ராயும் போகின்றனர். ஆதலால், எத்தகைய வசதியுடைய ராயினும் அடுத்தடுத்து மகப் பெறுவார் அதனாற் பெருகுந் துன்பங் களுக்குத் தப்புதல் ஒருவாற் றாலும் ஏலாதென்றுணர்ந்து கொள்க.

இனி, எல்லா வசதிகளும் வாய்க்கப் பெற்றார்க்கே அடுத்து அடுத்து மகப்பெறுதல் அளவிறந்த துன்பத்தை விளைக்கு மென்றால், வசதிகள் இல்லார்க்கு அஃது இன்னும் எவ்வளவு மிகுதியான துன்பத்தைத் தருமென்பது சொல்லுதலே வேண்டா. அற்றன்று, வசதிகளுடையார்க்குத்தான் பன்மகப் பேறு துன்பந் தருமேயன்றி, வசதிகள் இல்லா தார்க்கு அஃது அத்தனை துன்பத்தைத் தரக் காண்கிலேம்; **வேடர் வில்லியர் பறையர், பள்ளர்** முதலான வகுப்பினர் எத்தகைய வசதியும் வாயாராயிருந்தும், அவர்க்கு ஆண்டுக் கொரு குழந்தை பிறந்தும் அவரெல்லாம் பன்மகப் பேற்றைத் துன்பமாகக் கருதக் காண்கிலேமெனின்; அவ் வகுப்பினர் துன்ப வாழ்க்கையிலேயே பழகி விட்டமையாற் பன்மகப் பேற்றால் வருந் துன்பத்தை அவர் துன்பமாக எண்ணு கின்றிலர். இன்பத்திலிருந்தவனுக்கே துன்பத்தின் கொடுமை விளங்கும். இனிய திண்பண்டங்களை உட்கொள்ளும் வளமுள்ள மாந்தர்கள் கசப்பான வேப்பிலையைத் தின்பார்களோ? அவர்களால் அருவருக்கப் படும் வேப்பிலை ஒட்டகத்திற்கு எவ்வளவு இனிய வுணவாக இருக்கின்றது? ஆகவே, நாகரிகமும் அறிவு வளர்ச்சியும் உள்ள மக்கட்குப் பன்மகப்பேறு துன்பமாய்த் தோன்றுதல் போல, நாகரிகமும் அறிவு வளர்ச்சியும் இல்லா மக்கட் கூட்டத்தார்க்கு அது தோன்றாதாயினும், பன்மகப் பேற்றால் அவரும் பட்டினியும் பசியுமாய்க் கிடந்து, கிழிந்த கந்தை யுடுத்து, வெயிலிலும் மழையிலுங் குளிரிலுங் காற்றிலும் அலைவுற்றுத் தாமுந் தாம் பெற்ற பிள்ளைகளுமாக மிகத் துன்புறுதலை அணுகிப் பார்ப்பவர் அறிந்து கொள்ளலாம். ஆகவே, அவரும், நாகரிக வகுப்பினரில் ஏழைகளாயும் ஆளுதவியில்லாதவர் களாயும் இருப்பவர்களும் அடுத்தடுத்து மகப் பெறுதலை நீக்க வேண்டியவர்களாயிருக்கின்றனர் என்றுணர்ந்து கொள்க.

இனி, எல்லாம் ஊழ்வினைப்படிதான் நடக்கும், நற் செயலால் ஆவதொன்றில்லை என்று கேட்பவர்க்கு மட்டும் எளிதாகச் சொல்லிவிட்டுத் தமது காமவேட்கைப் படியெல் லாம் வரைதுறையின்றி மருவித் தம்மெண்ணத்திற்கு மாறான ஆண் பெண் மக்களையுங், குணங்கெட்ட பிள்ளைகளையும் ஆண்டுகடோறும் பெற்றுத் தாமும் அவரும் வேண்டியவளவு

உண்ணச் **சோறும்** உடுக்கக் **கூறையும்** இருக்க **உறையுளும்** இன்றித் துன்புறுவார் நிலைமையினைச் சிறிது ஆராய்வாம். எல்லாம் ஊழ் வினைப்படி தான் நடக்குந், தமக்கு ஒரு செயலும் இல்லையென்று சொல்பவர்கள் தஞ்சொல்லும் செயலும் பெரிது மாறுபட்டவர்களாயிருக்கின்றார்கள். எல்லாம் ஊழ்வினையின் படி நடக்கட்டும், நம் செயல் அற்று இருத்தலே நாம் செயற்பாலது என்றிருப்பார் எவரையுங் காண்கிலேம். ஒவ்வொருவருங் காலையிலெழுந்து நள்ளி ரவில் துயில் கொள்ளச் செல்லும் அளவும் பொருள் தேடுதற்குப் பேயாய்ப் பறக்கின்றனர். இஃது இவர்கள் செயலா? ஊழ்வினையின் செயலா? அங்ஙனம் பொருள் தேடுங்காற் பெரும்பாலார் தம் நலம் ஒன்றுமே கருதிப் பிறர்நலஞ்' சிறிதுங் கருதாதவராய்ப், பிறர் கையிற் பொருளைக் கவர்தற்குப் பல்வேறு வகையான தீவினைகளையுஞ் செய்கின்றார்கள். இங்ஙனம் செய்வது இவர்கள் செயலா? ஊழின் செயலா? பிறர்க்குச் சோறு கொடுத்தல், திருக்கோயில்கள் எடுப்பித்தல், கல்விக் கழகங்கள் நிலைபெறுத்தல், மருத்துவ விடுதிகள் அமைத்தல், நூல் இயற்றுதல், மாணாக்கர்க்குக் கல்வியறிவு புகட்டுதல் முதலான நல்வினைகளைச் செய்யுங்கால் எல்லாம் **"இதனை நான் செய்தேன்; இதனைச் செய்தற்கு இவ்வளவு அரும்பாடு பட்டேன்"** என்று சொல்லித் தமக்குப் புகழையும் புண்ணியத்தையுந் தேடுபவர்கள், **"இந் நல்வினைகளை ஊழ்செய்தது, நான் செய்யவில்லை, இவை என் செயல்கள் அல்ல"** என்று சொல்லக் கண்டதுண்டோ? நல்வினைகளைச் செய்யுங்கால் எல்லாம், அவைகள் என் செயல்கள் என்று தம்மைப் புகழ்ந்து பேசிக் கொள்ளுபவர்கள், அங்ஙனமே தாம் தீவினைகளைச் செய்யும் போதும் அவைகளைத் தஞ்செயல் என்று சொல்லித் தம்மைத் தாமே இகழ்ந்து பேசுதலன்றோ நடுவு நிலைமையாகும்? அவ்வாறு செய்தலை விடுத்து, யாம் இத் தீவினையைச் செய்தது எம் செயலன்று, ஊழ்வினையின் செயல் என்று ஏமாற்றிப் பேசி அவைகளைச் செய்த குற்றத்தினின்றுந் தம்மை எளிதிலே விடுவித்துக் கொள்ளப் பார்ப்பது நன்றாகாது.

அற்றேல், எல்லாம் நமது செயலாலேயே வருகின் றனவோ, அல்லது ஊழ்வினையின் செயலால் வருகின் றனவோ,

அவ்வியல்பை அறிவுறுத்துகவெனிற், கூறுதும். உலகில் மக்கள் தம் அறிவு ஆற்றல்களாற் செய்யுஞ் செயல்கள் வேறே. அவர்தம் அறிவுக்கும் ஆற்றற்கும் மேற்பட்டு ஊழ்வினையால் நடைபெறுவனவும் வேறே யென்று பகுத்தறிதல் வேண்டும். தமக்குள்ள **மெய் வாய் கண் மூக்குச் செவி** என்னும் ஐம்பொறிகளாலும் பொருள்களைக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றுச் செய்யுஞ் செயல்கள் மக்கள் செயலேயாகும்; அங்ஙனமே தமது மனத்தால் ஓர் உணர்வினைப் பற்றுதலும் பற்றிய உணர்வில் இது நல்லது இது தீயது, இது மெய் இது பொய், இஃது இதனை ஒப்பது இஃது இதனின் வேறாவது என்று ஆராய்ந்து உணர்தலும், ஆராய்ந்து தெளிந்தவற்றில் துணிபு கொள்ளுதலும், முன் அறிந்தவைகளைப் பின் நினைவு கூர்தலும், ஒரு நினைவை மற்றொன்றோடு தொடர்பு படுத்தலும், ஒருவர்க்கு நன்று ஆற்றுதலும், ஒருவர்க்குத் தீது புரிதலும், ஆணும்பெண்ணு மாய் மருவி யின்புறுதலுந், தாம் பெற்ற மக்களைப் பாதுகாத்தலும், பொருள் தேடும் முயற்சிகளைச் செய்தலும், இன்னும் இவைபோல்வன பிறவுமெல்லாம் மக்கள் செயலே யாகும்.

இனிக் கள்வரால் அலைக்கப்படுதலும் அரசினரும் அவர்க்குக்கீழ்த் தலைமை நடாத்துவோருஞ் செய்யும் பிழையான ஏற்பாடுகளால் துன்புறுத்தப்படுதலும் அயர்ந்து துயில்கையிற் பாம்பு தேள் முதலான நச்சுயிர்களால் நஞ்சு ஏற்றப்பட்டு இறத்தலுந் துடித்தலும், மரக்கலமேறிக் கடலிற் செல்லுங்காற் சூறைக்காற்றில் அகப்பட்டு அம் மரக்கலத்தோடு நீரில் அமிழ்தலும், அருந் திறமையொடு நன்கு சூழ்ந்து செய்த வாணிகமுந் தமது கப்பல் கடலில் மூழ்கிப் போனமையால் நொடித்துப் போதலும், பருவ காலத்தே நிலத்தைப் பண்படுத்திச் செய்த பயிரும் மழையின் மையாலும் மிகுமழையாலும், அழிய மிடிப்படுதலும், நில அதிர்ச்சியால் வீடுகள் இடிந்து விழச் சாதலும், எரிமலைகள் சடுதியிற் கக்கிய நெருப்பால் நாடு நகரங்கள் எரிந்து சாம்பராக அவற்றோடு உடனெரிந்து தாமுஞ் சாம்பராதலும், இங்ஙனம் நிகழும் இயற்கையழிவு நிகழ்ச்சிகளில் அகப்பட்டு எண்ணிறந்தார் அழிந்துபட ஒருசிலர் அழியாது தப்பிப் பிழைத்தலும், பிறவிமுதல் வறுமைப்பட்டு வருந்தினான் ஒருவன் இடையே

தற்செயலாய்க் கிடைத்த பெரும் பொற்புதையலால் மிக்க செல்வமுடையனாதலும், ஒருவன் எவ்வளவு முயன்றாலுங் கல்வியில் வல்லனாகமாட்டா தொழிதலும், மற்றொருவன் சிறு முயற்சிசெய்த வளவிலே கல்வியில் வல்லனாகிக் கேட்பார்ப் பிணிக்குஞ் சொல் வன்மையுங் கற்பார்ப் பிணிக்கும் நூல் வன்மையும் மிகப் பெறுதலும், ஒருவன் எவ்வளவு கற்றாலுந் தவம்புரிந்தாலுங் கடவுளுணர்ச்சி வரப் பெறாமற் பாழ்படுதலும், மற்றொரு வன் நன்கு கற்றாலும் நன்கு கல்லா விட்டாலுங் கடவுளு ணர்ச்சி வாய்ந்தவனாய் மறைபொருள் நிகழ்ச்சிகளை அகக்கண் கொண்டு காண்டலும், ஒருவன் பிறந்ததுமுதற் றீயனாய் எதனாலுந் திருந்தாமற் பிறர்க்குத் தீங்கிழைத்தே இறத்தலும், மற்றொருவன் பிறவிக்கு வந்ததுமுதலே இனிய குணங்கள் உடையனாய்ப் பிறர்க்குற்ற இடுக்கண் களைந்து பேருதவியாற்றுதலும், இன்னும் இவைபோல்வன பிறவு மெல்லாம் ஊழ்வினை காரணமாக நிகழ்வனவாகுமென்று அறிந்துகொள்ளல் வேண்டும்.

இவ்வாறு தன் செயலால் நிகழும் நிகழ்ச்சிகளும், ஊழ்வினை காரணமாக நிகழும் நிகழ்ச்சிகளும் என இருதிறப்பட்டவற்றுட், கணவனும் மனைவியும் மருவி மகப் பெறுதல் அவ்விருவர்தஞ் செயலால் நிகழ்வதேயன்றி ஊழ்வினையால் நிகழ்வதன்று. இனிக், **கணவனும் மனை வியும் மகப்பேறுவேண்டி எத்தனையாண்டு மருவினும், மகப்பேறு வாயாமையும் ஆங்காங்கு நிகழக் காண்கின் றனமே யெனின், அஃது அவரது செயலுக்கு மேற்பட்ட தாயிருத்தல் கொண்டு, அஃது ஊழ்வினைப் பயனென்றே கொள்ளப்படுமென்க.** பெரும்பாலும் ஆண்பெண் புணர்ச்சியாற் கருக்கூடுதற்கேற்ற அமைப்புகளே எங்கும் காணப்படுதலாலும், அதுகொண்டு தாம் வேண்டுங் காலத்துக் கருவினை வருவித்தலும் வேண்டாக் காலத்து அதனை வருவியாது விடுதலுங் கணவனும் மனைவியு மாயினார் செயக்கூடுமாதலாலும், அங்ஙனந் தம்மாற் செய்யக்கூடியதைச் செய்யாமலும் விலக்கக் கூடியதை விலக்காமலும் வரைதுறையின்றி யொழுகல் பகுத்தறிவுடைய மக்கட்குப் பெரியதொரு குற்றமேயாகும். இருள்மிகுந்த இராக்காலத்தில் விளக்கேற்றுதலும் ஒளி மிகுந்த பகற்காலத்தில் அதனை

அவித்தலும் எவருஞ் செய்யக் காண்டுமல்லமோ? இரவு பகலிரண்டிலும் அதனை ஏற்றி வைப்பாரையும், அல்லததனை அவித்து வைப்பாரையும் கண்டதுண்டோ? அங்ஙனமே தமக்கு மகப்பேறு வேண்டுங் காலத்து அதனைப் பெறுதலும் அதனை வேண்டாம் காலத்து அதனை விலக்குதலும் மக்கள் தம் முயற்சியாற் செய்துகொள்ளற் பாலனவே யாகும். அங்ஙனம் பகுத்தறிந்து ஒழுகாமல், வரைதுறையின்றி மருவித் தாம் வேண்டாக் காலத்தும் மகப்பேற்றிற்கு இடஞ்செய்து, அதனால் தாமுந் துன்புற்றுத் தம் மக்களையுந் துன்பத்திற்கு ஆளாக்கி வைத்து, வெளிப் பேச்சுக்கு மட்டும் **“எல்லாம் ஊழ்வினைச் செயல்!”** என்றுரைப்பது பகுத்தறிவு வாய்ந்த மக்கட்குச் சிறிதும் அடாததொன்றாம் என்க.

இன்னும், மக்களினறிவு நிகழ்ச்சிக்கும் முயற்சிக்கும் உதவி செய்யும் உடம்பும், அவ்வுடம்பினுள் மனம் முதலிய அகக்கருவிகளும், வெளியிற் **கண் கை கால்** முதலிய புறக் கருவிகளும் அமைந்திருத்தல்போல, ஊழ்வினை என்பதற்கு உடம்பும் அகக்கருவி புறக்கருவிகளும் அமைந்திருத்தல் உண்டோ? ஊழ்வினை யென்பது ஒருவன் முற்பிறிவியிற் செய்த செய்கையின் உறைப்பே அல்லாமல் வேறு தனிப் பட்டதொரு பொருள் அன்று. ஒருவன் அடுத்தடுத்துச் செய்த செய்கை யானது நாளடைவில் அவனுக்கு நீக்க முடியாத பழக்கமாய் அவனது உள்ளத்திற் பதிந்து விடுகின்றது. முதலில் ஒரு சிறு குழந்தையானது நடக்கக் கற்றுக்கொள்ளும் போது எத்தனைமுறை எழுந்துநின்று கீழ்விழுகின்றது! எத்தனை முறை தத்தித் தத்தித் தள்ளாடி விழுகின்றது. இவ்வா றெல்லாஞ் சிலநாள் வரையில் தத்தளித்து, நடக்கக் கற்றுக் கொண்டபின் அஃது எவ்வளவு நன்றாய் நடக்கின்றது. இங்ஙனமே தீயதொன்றையேனும் நல்ல தொன்றையேனும் முதன் முதற் கற்றுக் கொள்ளுங்கால் எல்லாரும் அதனை அடுத்தடுத்துச் செய்தே பழகிக் கொள்கின்றனர். தீய பழக்கங்களுட் பெருங் குற்றம் உடைய தாகப் பெரும்பாலாராற் கருதப்படாத ‘மூக்குத் தூள் ஏற்று தலைக் கருதிப்பாருங்கள்!’ முதலில் அதனை முகரும் போது இடர்ப்பட்டு முகர்கின்றார்கள்; ஆனால் அடுத்தடுத்துச் சிலபல நாட்கள் பழகியபின், சிறிது நேரத்துக் கொருகால் மூக்குத்தூள் முகரும் பழக்கம் எளிதாக அமைந்து

விடுகின்றது; அதன்பின் அப் பழக்கத்தை விடுவது அதில் உறைத்து நிற்பார்க்குச் சிறிதும் இயல்வதில்லை! அது போலவே, ஒருவன் **யாழ் முழவு** முதலான இசைக் கருவி களை இயக்கப் பயிலுகையில் அதனை முதலில் எவ்வளவு இடர்ப்பட்டு நாடோறும் பயில்கின்றான்; மற்று அதனை விடாப்பிடியாய் நன்குபயின்று தேர்ச்சி பெற்ற பிறகோ அவன் கைவிரல்கள் எவ்வளவு எளிதாய் இனிதாய் அக்கருவிகளை இயக்கிக் கேட்பாரை இன்புறுத்துகின்றன! இவ்வாறு நம் கண்ணெதிரே ஒருவன் இப் பிறவியிலே முன் நாட்களில் அடுத்தடுத்துப் பழகிய பழக்கமானது பின் நாட்களில் அவனால் எளிதிற் செய்யப் படுதற்கு இசைவுடையதாய் அவனைவிட்டு நீங்காதாய், அவற்கும் அவனொடு தொடர்புடையார்க்குந் துன்பத்தையோ இன்பத்தையோ தருதல்போல, முற்சென்ற பிறவிகளில் ஒருவன் பழகிய நல்வினை தீவினைகளும் அவனுள்ளத்தில் ஊறி ஒன்றாகி, இப்பிறவியில் அவனுக்கும் அவனொடு தொடர் புடையார்க்கும் நன்மை தீமைகளைப் பயந்துவிடுகின்றன. இப்பிறவிகளிற் செய்து தொகுத்த நல்வினை தீவினைகளும் அங்ஙனமே செய்தாருள்ளத்தில் வேறறப் பதிந்து நின்று இனிவரும் பிறவிகளில் அவர்க்கும் பிறர்க்கும் நன்மை தீமைகளை விளைவித்தற்கு முனைந்து நிற்கும் என்றுணர்ந்து.

அற்றேல், முற்பிறவியிற்செய்த தீவினையால் இப்போது நேருந் தீயஊழை ஒருவன் நீக்குதல் கூடுமோ, கூடாதோ வெனின்; அவனுடைய அறிவுக்கும் முயற்சிக்கும் அடங்கத் தக்கவைகளை அவன் பெரிது முயன்றால் நீக்கிக் கொள்ளலாம்; மற்று அவனுடைய ஆற்றலில் அடங்காத வனாய் அதனை மேற்கடந்து நிகழும் ஊழ்வினை நிகழ்ச்சி களாக மேலே காட்டப்பட்டவைகளை அவன் தன் அறி வாற்றல் கொண்டு நீக்குதல் ஏலாது. தஞ்செயலை அறவே மறந்து இறைவன்றன் அருட்செயலின் வழி நிற்பார்க்கு மட்டுமே அவற்றால் தாக்கப்படாமல் உய்தல் கைகூடும் என்க.

ஆகவே, மக்களின் அறிவுமுயற்சிகொண்டு பெறத் தக்கவைகளுள்ளும் விலக்கத்தக்கவைகளுள்ளும், மகப்பேறு மகவிலக்கு என்னும் இரண்டும் அடங்கி நிற்றலின், தாமுந் தம் மக்களும் இனிது நீடுவாழல் வேண்டும் என்னும் நல் அவா

வுடையவர்கள் எல்லாரும் ஏற்றகாலத்து மகப்பெறுதற்கும் ஏலாக்காலத்து அதனை விலக்குதற்கும் முனைந்து நிற்பாராக!

இனி, மேற் கூறியவைகளே யன்றி, மகப்பெறுதற்கு ஏலாத வேறு சில குறைபாடுகளும் உண்டு. மணஞ்செய்த வுடனே கருவுண்டாகுமானாற், கணவனோடு உடனுறையத் தக்க நிலையை அப்போதுதான் பழகத் துவங்கும் தாயின் உடம்பு அப் பழக்கத்தை அடைதற்கு முன்னரே அதனால் தடைசெய்யப் பட்டு, அக்கருவினை நன்கு வளரச் செய்யாது. கரு மாட்சிமைப்படாத தோடு அவளுடம்பு பழுதுபடும். மணஞ் செய்த சில நாட்களிலெல்லாங் கருக்கொண்ட பிள்ளைகள் பத்துத்திங்கள் முற்றுதற்கு முன்னரே பிறத்தல் உண்டு. செவ்வனே பாதுகாக்கப்பட்டு வளர்ந்தாலும் அப் பிள்ளைகள் நீண்டகாலம் உயிர் பிழைத்திருப்பதில்லை. இருபது முதல் முப்பது ஆண்டு கட்குமேல் அவர் உயிர் பிழைத்திருக்கக் காண்கிலேம். ஆதலால், மணம் ஆகி ஓர் ஆண்டு வரையில் மனைவி கருகொள்ளாதபடி செய்து கொள்ளல் வேண்டும்.

இன்னும், மனைவியாவது கணவனாவது கொடிய நோயாற் பற்றப்பட்டிருக்குங் காலங்களிலுங் கருவுண் டாதற்கு இடந்தரலாகாது. ஏனென்றால், அவருடம்பிலுள்ள செந்நீர் நஞ்சாகி யிருக்குமாதலால், அந்நிலையில் உண்டாகும் பிள்ளைகளின் உடம்பும் நஞ்சு ஏற்றப்பட்டனவாய் இருக்கும். மகார் சிலர்க்கு அவர் பிறந்த சில ஆண்டுகள் வரையில் உடம்பு நோய் இல்லனபோற் காணப்படினும், பின்னர் அவர் இளமைப்பருவத்தையும் அதன்பின் நடுப்பருவத்தையும் அடையும்போது, மறைந்திருந்த அந்நோய் தலைக்காட்டும், அல்லது, ஊரில் தொற்று நோய்கள் பரவியிருக்குங் காலங்களில் அம் மகார் அந் நோய்களால் எளிதிலே பற்றப்படுவர். அல்லது, வேறு நோயாளிகள் சிலர் அவர் பக்கல் அணுகினாலும் அவர்க்குள்ள நோய்கள் அம் மகாரைப் பற்றிக் கொள்ளும். இஃது எதுபோல வென்றால், **நன்றாகப் பண்படுத்தப் பட்டிருக்கும் நிலம் தன்னுள் உழவர் பெய்த விதைகளை ஏற்றுச் செழுமையாக வளரச்செய்தல் போல வென்க.** முன்னமே தாய்தந்தையரிடமிருந்து பெற்ற நச்சுநீராற் பதப்படுத்தப் பட்டிருக்குஞ் சிறுவரின் உடம்பு, மற்றை நோயாளிகளிடமிருந்து வரும் நோய்ப் புழுக்களைச் செழுமையாக வளரச் செய்தற்கு ஏற்ற நிலமாக இருக்கின்றது.

ஆதலால், நோய்கொண்ட தாய் தந்தையர்க்குப் பிறந்த பிள்ளைகளின் உடம்பிலுள்ள நச்சு நீர் அவர் சிறுவரா யிருக்கும்போதே அவருடம்பைவிட்டுத் தொலையுமாறு உடனே கருத்தாக முயலல் வேண்டும். அற்றேல், அம்மகார் உடம்பு தூயவாதற்குச் செய்ய வேண்டுவன யாவையெனின்; நன்றாய்ப் பசித்தபோது மட்டும், ஊன்கலவாத தூயஉணவு கொடுத்தலாலும், அவர் தூவெந்நீரை அடுத் தடுத்துப் பருகுமாறு செய்தலாலுந், தூய காற்றும் வெளிச்சமும் படும் அகன்ற வீடுகளில் அவரை வைத்து வளர்த்தலாலும், வெயில் வெளிச்சம் மிகுதியும் உள்ள இடங்களில் அவருடம்பின்மேற் சிறிதும் ஆடையின்றி ஒடியாடி விளையாடி வியர்க்கச் செய்தலாலும், அச்சம் சினம் முதலான தீய இயல்புகள் அவர்க்குண்டாகாதபடி அவர் எந்நேரமும் மகிழ்ந்திருக்கச் செய்தலாலும், இளமரச்சோலைகள் பூந்தோட்டங்கள் யாறு குளம் ஏரி கடலோரங்களில் அவர்களை உலாவச் செய்தலாலும், உயர்ந்த ஓவியங்கள் இயற்கைக் காட்சிகள் தேவார திருவாசக இசைகள் முதலான வைகளை அவர்கள் கண்டுங் கேட்டும் இன்புறச் செய்தலாலும் அவர்தம் உடம்பிலுள்ள நச்சுநீர் அறவே தொலைந்தொழியச் செய்து அவர்க்கு முழுநலத்தையும் நீண்ட வாழ்நாளையும் பெருகச் செய்யலாம். இன்னும் அறியவேண்டிய தீர்க்கு முறைகளைப் பின்வரும் இயல்களில் விரித்துரைப்பாம். இங்ஙனம் வந்த நோய் தீர்ப்பதைவிட, நோயே வராதிருக்கும் நிலையில் வைத்து மகாரைப் பெறுதலே பெரிதும் வேண்டற் பால தாகையால், **மனைவியாவது கணவனாவது நோயாற் பற்றப் பட்டிருக்கையிற் கருவுண்டாவதற்கு இடஞ் செய்யா திருப்பாராக!**

இனித் தீயநோய்கள் யாவையோவெனின்; **நச்சுக் காய்ச்சல் குளிர்காய்ச்சல், பொருத்துப்பிடிப்பு, மண்டையிடி, ஈளையிருமல், எலும்புருக்கி, நெஞ்சுவலி, வயிற்றுவலி, கொறுக்குப்புண், மலச்சிக்கல், இரத்தக்கழிச்சல், சிறு நீரடைப்பு, விரைவலி, விரைவீக்கம், தொழுநோய் (குட்டம்) படைநோய், சொறிசிரங்கு, கைகால் வீக்கம், சோகை** முதலியனவாகும். இந் நோய்கள் இருக்கும் வரையிற் கணவனும் மனைவியும் மருவுதல் ஒரு சிறிதும் ஆகாது அன்றி, அடங்காக் காமவயத்தராய் மருவநேரினுந், தம்மோடு அந்நோய்கள்

ஒழியப் பார்க்கவேண்டுமேயன்றி ஏதொரு குற்றமும் அறியாச் சிறுமகாரை அந்நிலையில் தோற்றுவித்து அவரையும் அளவுபடாத் துன்பத்திற்கு ஆளாக்கிவைத்தல் ஆகாது. இக் கொடிய நோய்களாற் பற்றப்பட்டவர்கள், யாம் பின்னே வரையும் முறைகளை அறிவொடு விடாப்பிடியாய்ச் செய்து, அந்நோய்களை நீக்கிக்கொண்டு, அதன்பின் மகப்பேற்றினை விரும்புவாராக!

இங்ஙனமே **கட்குடி, சூது, திருட்டு, விலைமாதர் சேர்க்கை, பொய், கொலை** முதலான தீவினைகளிற் பழகி அவற்றை விடாப்பிடியாய்க் கொண்டிருப்பவர்களும், அத் தீயநடைகளை விட்டுத் திருந்தும் மட்டும் மகப்பேற்றினை விரும்புதல் சிறிதும் ஆகாது. ஈதென்னை! இத்தகைய தீவினைகளைச் செய்பவர்கள் நல்லபிள்ளைகளைப் பெறக் கருதாராகையால், அவரை நோக்கியும் இவ் வறிவுரையினைச் சொல்லல் வேண்டுமோ வெனின்; அற்றன்று, கட்குடியில் தேர்ந்தவனாயிருப்பவனும், வேறொரு சிறுவன் கட்குடித் தலைக் கண்டால் அவன்மேல் அருவருப்புற்றுக் **“கட் குடித்துக் கெடாதே”** என்று நல்லறிவு கூறுகின்றான். அங்ஙனமே சூது, திருட்டு, விலைமாதர் சேர்க்கை, கொலை முதலான தீத்தொழில்களைச் செய்பவர்களும், வேறு சிறார் அத் தொழில்களைச் செய்யக் கண்டால் அவர்மேல் வெறுப்படை வதும், நன்னடையுள்ள சிறுவர்களைக் கண்டால் அவர்மேல் உவப்புறுவதும் பார்த்ததில்லையா? தாஞ் செய்யுந் தீத்தொழில்களை வேறு சிறார் செய்யக் கண்டாலே மனம் வருந்தும் அத் தீவினையாளர், தாம் பெற்ற மக்கள் அத் தீயவற்றைச் செய்யக் கண்டால் மனம் உளையாதிருப்பார் களோ? எத்தகைய கொடியவர்களும் நல்லவர்களைக் கண்டு மனம் மகிழ்கின்றார்களே யல்லாமல், தம்மைப் போலவே கொடியவர்களாயிருப்பவர்களைக் கண்டு மனம் மகிழ்தல் இல்லையே. ஆகையால், தீவினைகளைத் தேடிச் செய்பவர்களும் அத் தீவினைகள் தம்மட்டில் ஒழிய வேண்டுமென்று விரும்புகின்றார்களே யல்லாமல், தம் மக்களும் அவர் கால் வழியில் வருபவர்களுந் தம்மைப் போலவே தீயவர்களாய் வரல் வேண்டுமென விரும்புகின்றார்களில்லை. இதற்கு உண்மையில் நிகழ்ந்த தொன்றனை இங்கெடுத்துக்

காட்டுதும்; தமிழ் ஆங்கிலப் புலமையிலும் இயற்கை நுண்ணறிவிலுந் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒரு தமிழ்மகன் இற்றைக்கு நாற்ப தாண்டுகளுக்குமுற் சென்னை மாநகரில் இருந்தார்; கணக்குநூலில் இவர்க்கிருந்த புலமை அஞ்ஞான்று உலகம் எங்கணுமிருந்த எந்த ஆசிரியர்க்கும் இல்லை என்று ஆங்கில ஆசிரியர்களாலேயே இவர் கொண்டாடப் பட்டவர்; ஒரு பேர் ஆங்கிலக் கல்லூரியிலும் இவர் ஆசிரியராய் அமர்ந்திருந்தார். ஆனால், இவரது நடையோ மிவுந் தகாதது; திருட்டைத் தவிரக் கட்குடியிலுஞ் சூதாட்டத்திலும் அயல் மாதர் சேர்க்கையிலும் ஊனுணவு கொள்வதிலும் அளவுக்கு மிஞ்சிச் சென்றவர். என்றாலுந் தாஞ் செய்யுந் தீவினைகளைத் தம் மாணாக்கரேனும் வேறு பிறரேனுஞ் செய்யக் கண்டால் அவர்மேற் சினந்து **“இத் தீவினைகளைச் செய்து கெடாதீர்!”** என்று அறிவு புகட்டு வராம். அது கேட்ட அப்பிறர் **“கல்வியறிவில் தலைசிறந்த தாங்கள் மட்டும் இத் தீவினைகளைச் செய்யலாமா?” என்று எதிர்த்து வினவினால், அவ்வாசிரியர், “யாம் செய்கிறபடி நீர் செய்யாதீர், யாம் சொல்லுகிறபடி நீர் செய்யும்”** என்பராம். ஆகவே, நல்ல பிளைகளைப் பெறல் வேண்டுமென்னும் விருப்பம் இயற்கையிலே வாய்ந்த அத் தீயவர்களுந் தாம் அத் தீய செயல்களினின்று விலகி நல்லராகும் மட்டும் மகப் பெறாதிருத்தலிற் கருத்து வைத்தல் வேண்டும்.

அற்றேல், அஃதாக: மேற்காட்டியவாறு மகப்பெறு தற்குத் தகுதியில்லாத காலங்களிற், கருவுண்டாகாமல் விலக்குதற்கு ஏற்றதொரு வழி காட்டுகவெனிற், கணவனும் மனைவியும் அக் காலங்களில் மருவாது தனித்திருத்தலே மிகச் சிறந்ததாகும். ஆனால் எத்தகைய பொல்லாங்குகள் இருப்பினும், அவை தம்மை எட்டுணையும் நினையாது, காம எழுச்சி யுண்டான வுடன் புணர்ச்சி செய்தலிலேயே உறைந்து நிற்பார்க்கும். **“புணர்ச்சி தவிர்க!”** என்று நல்லறிவு சொன் னால் அஃது அவர் காதில் நுழையுமோ? அவர் அவ்வறிவுரை யினை ஒரு சிறிதும் எடாராய்த் தாம் வேண்டியவாறு புணர்ச்சி செய்தே தீர்வர்! அறிஞர் உரைக்கும் நல்லுரை யினை எடாத அவர் எப்படிப் போனாலும் போகட்டும் என்று விட்டு நாம் வாளாது இருக்கலாம். ஆனால், அவர் செய்யுந் தீவினையால் அவற் வயிற்றிற் பிறக்கும் ஏதும் அறியா இளங்குழவிகளும் தம்

பெற்றோர் விளைத்த பொல்லாங்கு கட்கு உள்ளாகித் தம்வாழ்நாள் எல்லையளவுந் துன்புற வேண்டி வருமே என்பதனை நினைந்து உளம் மிகக் கரைந்தே, நம் அறிவுரை கேளாக் கணவரும் மனைவியருந் தமது வரைகடந்த காமவேட்கையாற் புணரினுங், கருக் கூடாதவாறு செய்து கொள்ளத் தக்க முறைகளை யாம் ஈண்டுக் காட்டுதல் இன்றியமையாத தாகின்றது. "புணர்ச்சி தவிர்க" என்னும் அறிவுரையை எடுத்து அதன்வழி யொழுகுநர் நூறாயிரவரில் ஒருவர் கூட இல்லாமையை நன்காராய்ந்து அறிந்ததனாலே தான் கருவிலக்க வேண்டிய இன்றியமையாமையினையும், புணர்ச்சிக்கட் கருவுண் டாகாதபடி விலக்கும் முறைகளையும் ஆங்கில ஆசிரியர்கள் வெளிப்படையாக விளக்கிப் பல்லாயிரக் கணக்கான நூல்களுந் துண்டுத் தாள்களும் வெளியிட்டு வருகின்றார்கள்; விரிவுரைகளுஞ் செய்து வருகின்றார்கள். இப்போது **உலகம் எங்ஙனுங் கருவிலக்கு முறைகள் பரவிப், பல்லாயிரக் கணக்கான மக்களாற் கையாளப்பட்டு வருகின்றன.** நம் தமிழ்நாட்டின்கண் உள்ளாரும் ஏலாக் காலங்களிற் கருக் கொள்ளாமல் இனிதுவாழும் பொருட்டு, அம் முறை களையும் அவற்றை யாம் ஆராயந்து எமதறிவிலும் பழக்கத் திலும் எளியவாய் இனியவாய்க் கண்டெடுத்த முறைகளயையும் ஈண்டு விளக்குவான் புகுகின்றேம். மகப்பெறுதற்கு இசைந்த தகுதியும் வசதியும் இல்லாதவர்கள் மட்டும் இம் முறைகளைக் கையாண்டு கருவிலக்கலாமேயொழிய அதற்கு ஏற்ற தகுதியும் வசதியும் உள்ளவர்கள் அவற்றைத் தழுவி நடந்து இறைவனது பெருஞ் சினத்திற்கு ஆளாகாதிருப்பாராக! வசதி வாய்ந்த கணவரும் அவர்தம் மனைவியரும் ஒன்பதுக்குக் குறையாத நன்மக்களைப் பெற்று உலகத்தைக் கடைத்தேற்றுவார்களாக! வசதி வாயாதவர்கள் நோய் கொண்ட **உடல் பழுதுபட்ட மக்களையும், பொய் கொலை களவு காமங் கட்குடி சூது முதலிய வற்றிற்றலைகால் தெரியா தொழுகும் மக்களையும் பெற்று உலகத்தைப் பாழ்படுத்தா திருப்பாராக!**

அக் கருவிலக்கு முறைகளை எடுத்துக் கூறுதற்குமுன், ஆண்குறி பெண்குறி அமைப்புகளைப் பற்றிச் சிறிதேனுந் தெரிந்து கொள்ள வேண்டுவது முதன்மையாய் இருக் கின்றது. **ஆண்குறி** யென்பது நரம்புந் தசையுங் கூடிய ஒரு சிறு நீண்ட

உறுப்பாகும்; அதன் நடுவில் நீளச் செல்லும் ஒரு சிறு துளையிருக்கின்றது. இச் சிறு துளையானது இரண்டு வகையிற் பயன்படுவதாய் இருக்கின்றது. இடுப்பின் அகத்தே பின்புறத்தில் அமைந்துள்ள குண்டிக்காயில் வந்து சேருஞ் சிறுநீரை அவ்வப்போது வெளிப்படுத்துதற்கு ஒரு சிறு வழியாக இது முதலிற் பயன்படுகின்றது. அதன் பிறகு, இதன் இருபுறத்தும் உள்ள விதைகளில் தொகுப்பப்படும் விந்துநீர் புணர்ச்சிக் காலத்து அங்கிருந்து வெளிவருதற்கும் இஃது ஒரு சிறு வழியாக இரண்டாவது பயன்படுகின்றது. இவ்வாறு பிற்பக்கத்துள்ள சிறுநீர்க் கழிவுக்கும், முற்பக்கத்துள்ள விந்துநீர்க் கழிவிற்கும் இது பொதுவாய் நிற்றலிற், குண்டிக் காயிலிருந்தும் விதை களிலிருந்தும் அவ் விருவகை நீர்களை இதற்குக் கொண்டு வருஞ்சுரை நரம்புகள் வேறு அகத்தே அமைக்கப்பட்டிருக்கின்றன. காமவேட்கை நிகழும் போது ஆண்குறியின் நரம்புகளுள்ளே செந்நீர் பெருகிவந்து நிரப்ப, அஃது எழுச்சி பெற்று விறைத்து நிற்கின்றது. இவ்வாறு விறைத்து நின்றால் அல்லாமல் இது பெண்குறியில் அமைந்து குழாயினுள் நீளச் செல்ல மாட்டாது. உடம்பு நல்ல நிலைமை யில் உள்ளவர் கட்குங், கொடிய நோய்களினாற் பற்றப் படாதவர்கட்கும், அளவுக்கு மிஞ்சிக் கொழுமையான உணவையுட் கொண்ட தனால் இரத்தக் குழாய்களிற் கொழுப்பு வந்து அடைக்கப் பெறாதவர்கட்குங் காம வேட்கை எழும்போதெல்லாம் இத் தசைத் துண்டகம் எழுச்சி பெற்று விறைத்து நிற்கும், மற்று, நரம்பைப் பற்றிய நோய்கள் உடையார்க்குங், கொழுப்பு மிக்கஊன் உணவினையும் பிறவுணவுகளையும் மிகுதியாக உட்கொள் வார்க்கும் ஆண்குறி எழுச்சி பெறமாட்டாதாய்த் தோல் போற் சுருங்கிச் சோம்பி ஒட்டிப் போகின்றது. ஊன் உணவினை மிகுதியாக விழுங்கும் வெள்ளைக்காரர் துலுக்கரிலுஞ், சைவவுணவிலும் நெய்ப்பு மிக்க பண்டங் களை விலாப்புடைக்கத் தின்று கொழுப்பாற் செந்நீர்க் குழாய்கள் அடைபட்டிருக்கும் பார்ப்பனர் சைவர்களிலும் இப் பெருங் குறைபாடுடையவர்கள் பெருந் தொகையாய் இருக்கின்றன ரென்று கேள்வி யுறுகின்றேம். அத்தகையோர் சிலர் தமக்குள்ள அக்குறை பாட்டை எமக்கு நேரே தெரிவிக்கவும் தெரிந்திருக் கின்றேம். இத்தகைய அலிகளிற் சிலர் பலர் தமக்குள்ள இப்பெருங்

குறைபாட்டையுங் கருதிப்பாராது, ஏழைப் பெண்களை மணஞ்செய்து கொண்டு, தாம் கெட்ட தல்லாமலும் அப் பெண்களையும் மற்றை ஆடவர் தோள் மருவச் செய்து, அவர்களைப் பெரும் பழிக்கு உள்ளாக்கு கின்றார்கள்! அது கிடக்க.

இனிப் **பெண்குறி**யானது ஒரு நீண்ட குழாய் ஆகும். இக் குழாயின் உள்ளே தலைப்பிற் கருப்பையானது ஒரு முகை வடிவாய் அமைந்திருக்கின்றது. இக் கருப்பையின் கீழ் முனையானது ஒரு சிறு முகைவடிவாயிருக்க, அதன் மேற்பகுதி ஒரு பெரு மாதுளங்காய் போன்ற வடிவு வாய்ந்துளது. கீழுள்ள சிறுமுகையின்கீழ் ஒரு சிறுதுளை யிருக்கின்றது. மாதர்க்குத் திங்கள்தோறும் விடாய் உண்டாம் போது மாதுளங்காய் போல் உள்ள மேற்பகுதியினும் செந்நீர் நிரம்பிக் கீழுள்ள சிறுதுளையின் வழியாக வெளிவருகின்றது. இங்ஙனஞ் செந்நீர் வெளிவருகையில், அதனுடன் கரு முட்டையுஞ் சேர்ந்து வருகின்றது. மூன்று நான்கு நாட்களிற் செந்நீர் ஒழுக்கு நின்றபிறகும் இக் கருமுட்டை அக் கருப்பையினுள் **எட்டுமுதற் பன்னிரண்டு நாட்கள் வரையில் தங்கி நிற்கும்**. அதுவரையிற் கருப்பைக் கீழுள்ள சிறு துளையின் வாயுஞ் சிறிது திறந்த படியாக இருக்கும். அக் காலத்திற் புணர்ச்சி நிகழுமாயின், ஆண் குறியின் முனை அத் திறந்த வாயினுட் சிறிது நுழையும். இஃதேன் இவ்வாறு திறந்திருக்கின்றதென்றால், ஆண் குறியிலிருந்து வெளிப்படும் விந்துநீர் அக்குறியின் முனை வழியாக அக் கருப்பையினுட் சேர, அந்நீரின்கண் உள்ள எண்ணிறந்த கருப்புழுக்களில் ஒன்று, அங்கு முன்னரே வந்து நிற்பதாகிய கருமுட்டையுடன் ஒன்றுசேர்ந்து கருவினை உண்டாக்குதற்கேயாம். மாதர்க்கு வரும் விடாய் ஒழுங்கு நின்றபின் **பன்னிரண்டு நாள் வரையிற் கருப்பைச் சிறுதுளைவாய் திறந்திருப்பதுடன் அதன் உள்ளேயுள்ள கருமுட்டையும் உயிர் உள்ளதாய் இருக்கும்.** அப் பன்னிரண்டு நாட்களுட் புணர்ச்சி நிகழாதாயிற், கருப்பையினுள் வந்திருந்த கருமுட்டை உயிர் அற்றதாகி அதன் சிறுதுளையின் வழியே புறங்கழிக்கப்படும்; கீழுள்ள அச் சிறுதுளை வாயுஞ் சுருங்கி மூடிக்கொள்ளும். மறுபடியும் விடாய் வருங் காலத்தேதான் அச் சிறுதுளை வாய் திறக்கும். இவ்வியல்புகளை **‘மக்கட் பேறு’**

என்னும் அத்தியாயத்திலும் முன்னமே எடுத்துக் காட்டி யிருக்கின்றேம்.

இனி, இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள பெண் குறியின் அமைப்புக் கருக்கொள்ளுதற்கு ஏற்ற முறையில் அமைந்துள தாயினும், அஃது அதற்குமட்டுமே பயன்படுவதாக வைக்கப் பட வில்லை. ஏனென்றாற் கருவமைப்பு ஒன்றை மட்டும் நோக்கிப் புணர்ச்சி நிகழமாட்டாது, மேலுங், கருக் கொள்ளுதலாலும், கொண்ட கருவை உயிர்த்து வளர்ப்ப தாலும் உண்டாம் பெருந்துன்பந் தாய்க்கு உள்ள அளவு தந்தைக்கு இல்லை. ஆகவே, புணர்ச்சியாற் கருக்கொள்ளு தலைத் தவிர வேறொரு பயனும் இல்லையாயின், அத்துணைப் பெருந் துன்பத்திற்கு இடமான ஒரு முயற்சி யைக் கணவனுடன் கூடிச் செய்தற்கு மனைவியானவள் ஒரு தினைத்தனையும் ஒருப்படவே மாட்டாள். அதுவேயு மன்றிக் கணவனும் புணர்ச்சிக்கண் இதனைத் தவிர வேறொரு பயனையும் காண்கிலனாயின், அவனும் அதன் கண் ஒருசிறிதும் புகான். ஆதலாற், பெருந் துன்பத்திற்கு வித்தான இப்புணர்ச்சிக்கண் இருவருக்கும் அடங்கா வேட்கை செல்லுமாறு, ஆண் பெண் உறுப்பின் சேர்க் கையில் இன்னதென் றுரைக்கலாகாத ஒரு பேரின்பத்தைத் தோற்றுவித்து, அதன் வாயிலாகப் புதிய உயிர்களை உடம்புகளிற் புகுத்தி இவ்வுலகத்திற்குக் கொண்டு வரும் இறைவன்றன் படைப்பின் அருமை நினைக்குந்தோறும் பேருருக்கத்தினை வருவிக்கின்றதன்றோ!

முன்னமே காட்டப்பட்டபடி, மகவினைக் கருக் கொண்டு ஈன்று வளர்த்தற்கண் தாய்க்குள்ள துன்பத்தில் ஆயிரத்தில் ஒருகூறுதானுந் தந்தைக் கில்லையாதலால், அத்தனை துன்பங்களையும் கருதாமல் அவள் நிற்றற் பொருட்டுப், புணர்ச்சிக்குரிய உறுப்புகளில் ஆணைவிடப் பெண்ணுக்கு இன்பவுணர்வு பன்மடங்கு மிகும்படி ஈடு கொடுத்து எல்லா இரக்கமும் வாய்ந்த இறைவன் அமைத் திருக்கின்றான். யாங்ஙனமெனின்; ஆண்மகனுக்கு ஆண் குறியின் முனை மட்டுந்தான் இன்பவுணர்வுக்கு இடமாயுள்ளது; பெண் குறியின் உள்நுழைந்த ஆண் குறியின் முனையானது, **பெண்ணின் கருப்பைக் கீழ் முகையின் முனைமேற்படுந் தோறும் மட்டும் அவனுக்கு இன்பம் உண்டாகும். மற்றுப்**

**பெண்மகளுக்கோ அவளுறுப்புகள் பலவும் இன்பவுணர்வு பெருகும் பெற்றியவாய் அமைந்திருக்கின்றன.** புணர்ச்சித் துவக்கத்திலேயே, பெண்குறியின் முகப்பின் மேலுள்ள ஒரு சிறிய உறுப்பு ஆண்குறியின் முனை தன்மேல் உரைசுந்தோறும் மிக்க இன்பத்தினைத் தோற்றுவிக்கின்றது. இதற்கும் மகளிரின் மார்பின் மேலுள்ள கொங்கைகளின் காம்பு கட்கும் இன்ப நரம்பின் தொடர்பு இருத்தல் ஆராய்ச்சியாற் புலனாகின்றது. பெண் குறி முகப்பின் மேலுள்ள சிற்றுறுப்பு ஆண்குறி முனையினால் உரைசப்படுகையிற், கொங்கைகளின் காம்பு களுங் கணவன்றன் கைவிரல்களால் மெல்லென நெருடப் படுமானால் மனைவிக்கு மிக்கதோர் இன்பவுணர்வு தோன்றா நிற்கும். அப்பொழுதே மனைவியின் கீழிதழைச் சுவைத்தால், இன்னும் அவ்வின்பவுணர்வு மிகப் பெருகா நிற்கும். இவ்வாறு மகளிரின் புறத்துறுப்புகளான பெண் குறி முகப்பின் சிற்றுறுப்பும், அவர்தங் கொங்கை காம்புகளும், அவர் வாயின் கீழிதழும் இன்பவுணர்வுக்கு இடனாக அமைக்கப்பட்டிருத்தல் போலவே, அவர்தம் அகத்துறுப்புகளான பெண்குறிக் குழாயின் உட்சுற்றுங், கருப்பைக் கீழ்முகையின் முனையும் இன்னும் மிகுதியான இன்பவுணர்வினைத் தோற்றுவிக்குங் கருவிகளாய் அமைந்திருக்கின்றன. ஆண் குறி வீங்கி விறைத்துப் பெண்குறி குழாயின் உட்சுற்றில் நன்கு நெருங்கி உரைசுதலானும், அதன் முனை கருப்பைக் கீழ்முகை முனையினை நன்கு சென்று பொருந்துதற்கேற்ற நீளமுடைத்தாய் அதன்மேற் சென்று நெருங்கிப் பதிதலானும் மகளிர்க்கு ஆற்றொணாப் பேரின்பம் உண்டாம். ஆகவே, இன்பவுணர்வு மிகுதிவாய்ந்த மகளிரின் புறத் துறுப்பு, அகத்துறுப்புகளின் இயற்கையறிந்து மருவுங் கணவர்பால் மாதர்க்கு மிக்க அன்பு தோன்றுமாறுபோல், அவ் வியற்கையறியாது மருவி ஒரு நொடிப்பொழுதில் தமது விந்துநீரை வீனே கழித்தொழியுங் கணவர்பால் உண்மையன்பு தோன்றாதென்றுணர்ந்துகொள்க.

இன்னும் புறத்துறுப்புகள் அளவில் மாதர்க்கு இன்பத்தைத் தோற்றுவித்தல் ஆடவர் எவர்க்கும் எளிதே யாயினும், அங்ஙனம் புறத்தே எழுப்பிய இன்பத்தை, அகத்துறுப்பியக்கதால் உண்டாகும் இன்பத்தோடு ஒருங்கு

கூட்டிப் புணர்ச்சி யின்பத்தை நிறைவு செய்வதோ ஆடவர் எல்லார்க்கும் எளிதிற் கைகூடுவதன்று. **நீண்ட மனைவிக்குக் குள்ளக் கணவன் பிணைக்கப்படுவனாயின்**, அவளது கருப்பைக் கீழ்முனையினைச் சென்று நன்கு பதிதற்கேற்ற நீட்சியினை அவனது ஆண்குறி உடையதாகாமையின் அவட்குப் புணர்ச்சியின்பங் கெட்டுப் பெரியதொரு துன்பத்தினை விளைவியாநிற்கும். அங்ஙனமே ஒல்லியாயிருப்பா னொருவனைத் தடித்த ஒரு பெண்ணோடு பிணைத்து விட்டால், அவனது குறி அவளது குறிக்குழாய்க்கு ஏற்ற பருமனுடைய தாகாமையின், அக் குழாயின் உட்சுற்றில் வீங்கி உரைசமாட்டாதாய் அவட்கும் புணர்ச்சி யின்பத்தைப் பயவாதொழியும். எனவே, மகளிர்க்கு மகப்பேற்றால் வரும் பெருந்துன்பத்திற்கு ஈடாக எதிர்நிற்கும் பேரின்ப வுணர் வினைப் பயத்தற் பொருட்டாகவே, எல்லா அருளிரக்கமும் உடைய இறைவன் அவர்தம் புறத்துறுப்பு அகத் துறுப்புகளை அத்துணை இன்பவுணர்ச்சிக்கு இடனாகப் படைத்திருத்த லால், அவ்வருள் நோக்கறிந்து அவரை மருவுதலே, பிள்ளைப் பேற்றால் மிகத் துன்புறுதலில்லாத ஆடவர்க்கு இன்றியமை யாத கடமையாகும். இக் கடமை யினை நன்குணர்ந் தொழுகுவார்க்கே மனைவியின் உண்மை யுள்ளன்பும் நன்மக்கட் பேறும் உளவாம் என்பதூஉம் உணர்ந்து கொள்ளப்படுமென்க.

இங்ஙனமெல்லாம் பெண்குறி ஆண்குறிகளிற் காணப் படும் வியத்தகும் அமைப்புகள் புணர்ச்சி யின்பத்தின் வாயிலாக, உயிர்களைப் பிறிவிக்கு வருவித்தற் பொருட் டாகவே இறைவனால் வகுக்கப்பட்டிருத்தலால், **மக்கள்பாற் காணப்படும் புணர்ச்சியின்ப வேட்கையை அவர்கள் ஒழித்து விடல் வேண்டுமென்று எளிதாகச் சொல்லுஞ் சொற் பயன்படு சொல்லாகமாட்டாது**. புணர்ச்சி யின்பத்தினும் மிக்கதான இறைவன் றிருவடிப் பேரின்பத்திற் படிந்து ஏதொரு செயலும் அற்றுத் தம்மை மறந்து கிடப்பார்க்கே அப்புணர்ச்சி யின்பத்தையும் மறந்திருத்தல் கைகூடும். ஏனையோரிற் பழுதற்ற நல்ல யாக்கையினை யுடையார்க்கு அவ்வேட்கையினை அவித்தல் ஏலாதாகையால், அவர் அவ்வின்பத்தினை நுகர்ந்தாலும், வசதியில்லாக்

காலங்களிற் கருக் கொள்ளா திருக்கும் வகையில் அவ்வின்பத்தை நுகர்தலே செயற் பாலது.

மேலும், புணர்ச்சிக்கண் இன்பமுங் கருக்கோளும் உண்டாதல் அல்லாமலுங், கணவனது உடம்பின்கண் உள்ள மின் ஆற்றல்களும் மனையாளது உடம்பின்கண் உள்ள மின் ஆற்றல்களும் ஒருங்கு கலந்து இருவர்க்கும் உடம்பின் நலத்தையும் அறிவு விளக்கத்தையுஞ் சுறுசுறுப் பையுந் தருகின்றனவென்றும், புணர்ச்சியின்பம் நுகராது தனித்து உறையும் ஆடவர் மகளிர்க்கு உடம்பு நலங்குறைதலுடன், அறிவு விளக்கமுஞ் சுறுசுறுப்பும் மேனிவடிவுங் குன்றுகின்றன வென்றும் இத்துறையில் நன்கு ஆராய்ச்சி செய்து முடிவுகண்ட ஆங்கில அமெரிக்க ஆசிரியர் நுவல்கின்றனர்.[2] ஆகவே, மாதர் ஆடவர் புணர்ச்சி மகப்பேறு ஒன்றையே நோக்காது, வேறு பல நலங்களையும் நோக்கியே இறைவனால் வகுக்கப்பட்ட தென்பது இனிது விளங்கா நிற்கும். புணர்ச்சி நிகழுங்கால் இருவருடைய வித்துநீரும் வீணாகாதபடி மேலிழுத்து உடம்பை வலுப்படுத்துவதாகிய **'வஜ்ரோலி முத்திரைப்'** பழக்கத்தை யோக நூலாரும் வலியுறுத்துதல் காண்க.[3]

இனி, வசதியில்லாக் காலங்களிற் கருக் கூடாதவாறு புணர்ச்சியின்பந் துய்த்தற்குச் சிலர் பலர் கையாண்டு வரும் முறைகளையும், அவற்றின் குறைபாடுகளையுங், கரு விலக்குதற்கேற்ற சிறந்த சில முறைகளையும் ஈண்டெடுத்து விளக்குவாம்.

அறிவும் அவாவடக்கும் ஆற்றலும் வாய்ந்தார் சிலர், தம் மனைவியர்க்குப் பூப்பு உண்டாம் நாளிலிருந்து பதினைந்து நாள் வரையில் அவரை மருவாதிருந்து, அதன்பிறகு சிலநாள் வரையில் அவரை மருவுகின்றனர். இவ்வாறு செய்தலாற் பெரும்பாலுங் கருக்கூடாமல் விலக்கலாமேனும், இதன்கட் சில தவறுகள் நேர்ந்து விடுதலால், எதிர்பார்த்ததற்கு மாறாகக் கருவுண்டாய் விடுகின்றது. **மகளிர் சிலர்க்கு இருபத்திரண்டு நாட்கட்கு ஒருகாற் பூப்பு உண்டாகின்றது; வேறு சிலர்க்கு இருபத்தைந்து நாட்கட்கு ஒருகாற் பூப்பு வருகின்றது; மற்றுஞ் சிலர்க்கு முப்பது நாட்கட்கு ஒருகாற் பூப்பு**

***நிகழ்கின்றது; இன்னுஞ் சிலர்க்குச் சில திங்களில் இருபத்திரண்டு நாளிலும், சில திங்களில் இருபத்தைந்து நாளிலும், சில திங்களில் முப்பது நாளிலும் அது வருகின்றது***. பூப்பு நிகழ்ந்த பதினைந்து நாட்கட்குப்பின் மருவினாலும், விந்து நீரில் உள்ள புழுக்கள் சில கருப்பைக்குட்புகுந்து பத்துப் பன்னிரண்டு நாட்கள் வரையில் உயிரோடிருக் கின்றன. மறுபடியும் மாதர்க்குப் பூப்புண்டாம் போது அதனொடு கலந்துவருங் கருமுட்டையுடன், அங்ஙனம் உயிரோடிருக்கும் விந்துநீர்ப்புழு ஒன்று கூடிக் கருவினை உண்டாக்கி விடுகின்றது. ஆகையால், இம்முறையைக் கைப்பற்றினவர்கள் ஏமாந்து போகின்றனர். இனி, அவர்கள் அங்ஙனம் ஏமாறாதபடி இம் முறையைக் கொண்டு கரு விலக்க வேண்டுமானால், யாம் கூறுகின்றபடி செய்தல் வேண்டும். தம் மனைவிமார்க்குப் பூப்பு நிகழுங் காலத்தை ஒரு குறிப்பேட்டில் விடாமற் குறித்து வரல் வேண்டும். இருபத்திரண்டு நாட்கட் கொருகாற் பூப்பு நிகழப்பெறும் மாதரைப் பதினைந்து நாட்கட்குமேல் இருபத்தொருநாள் வரையில் மருவுதற்கு ஆறுநாட்களே இடையிலிருக்கின்றன. இந் நாட்களில் மருவியபின் விந்துநீரில் உள்ள புழுக்கள் பெண் குறிக்குழாயிலுங் கருப்பையிலுந் தங்காதபடி அவ்வுறுப்புகளை இவ்வாறு நாட்களுக்குட் கழுவி வெளிப்படுத்தல் வேண்டும். எங்ஙனங் கழுவுவதெனிற் கூறுதும். பெண் குறிக்குழாயுங் கருப்பையும் மிக மெல்லிய தன்மையுடைய வாகையாற் குளிர்ந்த நீர்விட்டுக் கழுவுதலாகாது; குளிர்ந்தநீர் அங்குச் சென்றால் மாதர்க்கு நீர்க்கோவை உண்டாம்; ஆதலால், மிக்க சூடு இல்லாமல் வெதுவெதுப்பாயுள்ள நீரிற் சிறிது உப்பைக் கரைத்து, வேப்பெண்ணெயுஞ் சிறிது கலந்து, அங்ஙனங் கலந்த வெந்நீரை ***நீரேற்றியில்*** (எநிமா - enema) நிரப்பி, அதன்பிற், ***பயின்*** (ரப்பர்க்) குழாயின் முனையிற் பெண் குறியின் உட்செல்லுஞ் சிறிது வளைந்த கருவியை அதன் மேலுஞ் சிறிது வேப்பெண்ணெயைத் தடவி கொண்டபிற் கீழே படுத்து, அதனைக் குறியினுட் செலுத்தினாற் குறியின் குழாயிலுங் கருப்பையிலும் உள்ள புழுக்களை அந் நீர் கழுவி வெளிப்படுத்தி விடும். உப்பும் வேப்பெண்ணெயும் அந்நீரிற் கலத்தல் ஏன் என்றால், விந்துநீர்ப் புழுக்களின் உடம்பு உப்புநீரிற் கரைந்துவிடும்; வேப்பெண் ணெயிலும் அப்

புழுக்கள் உயிர்வாழமாட்டா. இன்னும் வேப்பெண்ணெயை இவ்வுப்பு நீரிற் கலப்பதைவிடப், புணர்தற்குத் துவங்கும் முன்னரே அதனை ஆண்குறியிற் சளிக்கப்பூசிப், பின்னும் அவ்வாண் குறியின் வாயிலாகவே அவ்வெண்ணெயைப் பெண்குறியின் கருப்பைக்கீழ் முகைவரையிற் போகச் செய்து, அதன்பிற் புணர்ச்சி செய்தால், அதன்கண் வெளிப்படும் விந்துநீர்ப் புழுக்கள் வேப்பெண்ணெ யிற் கலந்து உடம்பு கரைந்து மடிதலின், அவை கருப்பையுட் புகமாட்டா. இங்ஙனஞ் செய்தாற் புணர்ந்தவுடனே, பெண்குறியின் உட்பகுதியை மேற்சொன்னபடி உப்புநீர் செலுத்திக் கழுவவேண்டுவது வேண்டா. புணர்ச்சிக்குப் பின் வரும் அயர்ந்த துயிலி னின்றும் இருவரும் எழுந்து துன்புறுதலும் வேண்டா. மறுநாட்களில் மேற் சொன்ன உப்புநீரை யுட்செலுத்திக் கழுவிவிடலாம்.

ஆனாலும், இம்முறையானது மாதர்க்குப் பூப்பு நிகழ்ந்த பதினைந்து அல்லது பதினாறுநாட்கட்குப்பின் புணர் வார்க்கே பயன்றருவதாகும். அஃதென்னை? வேப்பெண் ணெயில் விந்துப் புழுக்கள் உயிர்வாழாவென்பது மேலே சொல்லப்பட்டமை யாற், பூப்புநிகழ்ந்த நான்காம் நாளிலி ருந்தும் வேப்பெண் ணெயை இருகுறியிலுஞ் சளிக்கப் பூசிக் கொண்டு புணர்ந்தால், விந்துநீர்ப் புழுக்கள் அதில் மடிந்து போமல்லவோ வெனின்; அற்றன்று, பூப்பு நிகழ்ந்த நான்காம் நாளிலிருந்து பதினைந்து நாள் வரையிற் கருமுட்டையானது கருப்பையுட் சுருசுருப்பா யிருக்குமாதலால், அக்காலத்திற் புணர்ச்சியில் வெளியாகும் விந்துநீர்ப் புழுக்களிற் சில வேப்பெண்ணெய் படாத ஓர் எள்ளளவு இடம் இருப்பினும், அதன் வாயிலாகச் சாகாது உள் நுழைந்து கருமுட்டையுடன் கூடிக் கருவினை உண்டாக்கி விடுதலுங் கூடும். ஆதலாற், பூப்பு நிகழ்ந்தபிற் பன்னிரண்டு நாட்கள் வரையில் வேப்பெண் ணெயைப் பூசிப்புணர்த லாலேயே கருக் கூடுதலை விலக்கிவிடலாமென்று உறுதியாகச் சொல்லல் இயலாது. ஆனாலும், வசதியுள்ள கணவன் மனைவிமார் பூப்பு நிகழ்ந்தபிற் பன்னிரண்டு நாட்களிலும் வேப்பெண்ணெயை இருகுறியிலுஞ் சளிக்கப் பூசிப் புணர்ந்து கருக் கூடுகிறதா இல்லையா என நன்காராய்ந்து பார்த்துத் தாம் கண்ட முடிபை

எமக்கு அன்புகூர்ந்து தெரிவிப்பராயின், அதனை யாம் உலகிற்குப் பயன்படுமாறு வெளிப்படுத்துவேம். புணர்ச்சிக்கண் வேப்பெண்ணையைப் பயன்படுத்துவதால் இன்னும் ஒரு பெருநன்மை உண்டா கின்றது; அஃதென் னென்றால், மாதர் ஆடவர்க்குக் குறிகளிற் கொறுக்கு முதலான நோய்கள் இருந்தால், அந்நோயின் நச்சுப்புழுக்கள் வேப்பெண்ணெயில் மாண்டுபோக, அந்நோய் ஒருவரிலி ருந்து மற்றொருவர்க்கு ஒட்டாது. ஆனால், வேப்பெண் ணெயைப் பயன்படுத்து கிறவர்கள், ஆண்குறி நெருங்கி யியங்குதற்கு ஆகாவாறு பெண்குறிக் குழாய் தளர்ச்சி யுறுகின்றதேயெனத் தடை நிகழ்த்தல் கூடும். பெண் குறிக்குழாய் அங்ஙனந் தளர்ச்சியுறுதலால் மாதர்க்கு புணர்ச்சி யின்பஞ் சிறிது குறைபடுதல் உண்மையே யென்றாலும், வேப்பெண்ணெய் பூசுதலால் வரும் பெரும் பயன் கருதி இச் சிறு குறைபாட்டைக் கருதலாகாது. பெண்குறிக் குழாய் மிகத் தளர்ச்சியுற்றால் மனைவியின் தொடைகளை நெருங்க வைத்து மருவினால் அச் சிறு குறைபாடும் இல்லையாகும். மனைவி இங்ஙனம் மருவுதலை மிக விரும்பினாலன்றி இது வேண்டற்பாலதன்று; ஏனென் றாற், புணர்ச்சியின்ப மிகுதிக்கு ஆண்குறியின் முனையுங், கருப்பைக்கீழ் முகைமுனையும் ஒருங்கு செறியப் பொருந்து தலே இன்றியமையாததா மாகலினென்க.

இனி, ஒருசாரார் கருக்கூடுதலைத் தவித்தற்குப் பின் வருமாறு மருவுதல் வேண்டுமென்ப: கணவனும் மனைவியும் அன்பினால் அகங்குழைந்துருகி, இன்புறு சொன் மொழிந்து, ஒருவரையொருவர் ஆரத் தழுவி, முத்தங்கொண்டு, இதழ் வைத்துங்; கணவன் மனைவியின் கொங்கைமுகத்தைவந்து, கடிதடப் புறவுறுப்பினைக் குறி முனையால் இன்புற உரைசிப், பின்னர் நினைவைத் தன்வயப் படுத்து விந்துநீர் வெளிப் படாவாறு நெடுநேரம் புணர்ந்து, மனைவிக்கு இன்பம் முற்றியவுடன் விந்து நெகிழாமலே புணர்ச்சி யினின்று விலகியும்; இன்பந் துய்க்கப் பழகி கொள்வாராயின், அஃதவர்க்குக் கழிபேரின்பம் பயந்து இருவருடம்பையும் உயிரையும் என்றும் இளமையோடு வளமுற வாழச்செய்யும் என்பதே அவரது அறிவுரை[4] இவ்வாறு மருவுதலாற் கணவற்கு விந்து நெகிழாமையின், அது கருப்பையுட் செல்லுதலுங்

கருவினைத் தோற்றுவித்தலும் இல்லையாய் ஒழிதல் திண்ணமேயாமென்பதூஉம் அவர்தங் கோட்பாடு. ஆனால், அங்ஙனம் விந்து நெகிழாமற் றடைசெய்து நிறுத்தல் **“காற்றைப் பிடிக்குங் கணக்கறிந்து”** தவப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றார்க்கன்றி ஏனையோர்க்குச் சிறிதுங் கைகூடா தென்பது எமது கருத்து. எத்தனை மங்கையரை மருவினும் யோகிகள் விந்து விடார்கள் என்று **ஆசிரியர் திருமூலர்** அருளிச்செய்த அருளுரை யோகத் தேர்ச்சி யுடையார்க்கன்றி ஏனையோர்க்கு ஆகாதென்க. அதுவேயுமன்றிப், புணர்ச்சி யிறுதிக்கண் ஆண்மகனிலிருந்து வெளிப்படும் விந்துநீர் பெண்மகளின் கருப்பைக் கீழ்முகையிற் படும்போது, அஃதவர்க்குச் சொல்லொணாப் பேரின்பத்தை விளைக்கின்ற தென இதனை நன்காராய்ந்து கண்ட **மேரி ஸ்டோப்ஸ்** (Marie Stopes) அம்மையார் நுவலுதலின், விந்து நெகிழாத புணர்ச்சி மனைவிக்குப் புணர்ச்சி முடிவிலெழும் பேரின்பத்தைப் பயவாதென்பது தேற்றமாம். அது கணவற்கும் அவ்வின்பத் தினை நிறைவு செய்யா தென்பதே எமக்குங் கருத்தாகும். ஆதலால், இம்முறை அருந்தவத்தோர்க்கன்றி ஏனை யோர்க்குப் பயன்படாதென விடுக்க.

இனி, மற்றும் ஒருசாரார், புணர்ச்சி முடிவின்கண் ஆண் மகற்கு விந்து வெளிப்படு நேரத்தில் அவன் தன் ஆண் குறியினை வெளியே உருவிவிடுவனாயின், விந்துநீர் வெளியே ஒழுகிப் போகப், பெண்மகட்குக் கருக்கூடுதல் இல்லையாய் ஒழியும் என்பர். புணர்ச்சியின்பத்திற் படிந்து நிற்கும் ஆண்மகற்கு அவ்வின்பம் அவன் வயமின்றி அவனை மீதூர்ந்து நிற்குங்காலம் அவற்கு விந்துநீர் பெண் குறியினுட் பாயும் நேரமேயாம். அந்நேரத்தில் ஆண் குறியின் முனையுங் கருப்பைக் கீழ் முகையும் ஒன்று சேர்ந்து ஒருங்கு செறியாவிட்டால் அவ்வின்பங் கலைந்து இருவர்க்கும் பெருந் துன்பத்தைத் தரும். இன்பம் நுகரப் போய் இவ்வாறு துன்புறுதலைவிட அதனை நுகரப்புகாது வாளாதிருத்தல் நன்றன்றோ? ஆகையாற், செய்தற்கு ஏலாத இம் முறையைச் செய்வார் சிலர் இருத்தல் கூடுமேனும், இதனை யருவருத்து விடுதலே செயற்பாலதா மென்க. மேலும், புணர்ச்சி முடிவில் வெளிப்படும் விந்துவினாலே தான் கருக்கூடுகின்ற தெனக் கருதுவதும் பிழையேயாகும். புணர்ச்சிக்கு முன் ஆண்

குறியிலிருந்து கசிந்து பெண்குறிக் குழாயை வழுவழுப் பாக்கும் பிசின் நீரினுங் கருவினை உண்டாக்கும் புழுக்கள் இருக்கின்றன வென்று, இஞ்ஞான்றை மருத்துவ ஆசிரியர்கள் ஆராய்ந்துரைத்தலின், விந்துநீர் வெளிப்படுதற்குமுன் புறங்கசியும் இப் பிசின்நீர் பெண் குறிக்குழாயிற் பட்டாலுங் கருக்கூடி விடும். விந்துநீர் கருப்பைக்குட் சென்றாற்றான் கருவுண்டாம் என்று நினைப்பதும் பிசகாகும். பிசின் நீரிலிருந்தாவது விந்துநீரிலிருந்தாவது ஒரு கடுகளவு நீர் பெண் குறியின் வெளிப்புறத்தே பட்டாலும் அந் நீரிலுள்ள புழுக்கள் அக் குறிக்குழாயினூடு விரைந்துசென்று கருப்பையுட் புகுந்து, அங்குள்ள கருமுட்டையுடன் ஒருங்குக் கூடிக் கருவினை யுண்டாக்கி விடுகின்றவென்று மருத்துவ ஆசிரியர்கள் நன்காராய்ந்து கண்டிருக்கின்றனர். ஒருகால் ஒரு மருத்துக் கழகத்திலிருந்த ஓரிளமங்கையின் பெண் குறி முகப்பிலே ஒரு கடுகளவு விந்துநீரை எடுத்துவைக்க, அவளுக்கு உடனே கருவுண்டாயிற்று. இதுபோன்ற பல ஆராய்ச்சிகளாற் பிசின் நீராவது விந்துநீராவது உள்ளே செல்லாமற் கடிதட வாயிலிலே பட்டாலுங் கருவுண்டாதல் கண் கூடாக அறியப்பட்டுக் கிடத்தலின், புணர்ச்சியிறுதிக்கண் வெளியாம் விந்துநீரை உள்ளே செல்ல விடாமல் ஆண்குறியை வெளியே யிழுத்து, அதனை ஒழுக விடுதலினாலேயே மாதர்க்குக் கருவுண்டாதலைத் தடுத்து விடலாமெனக் கருதுவது சிறிதுங் கைகூடாதென விடுக்க.

இனிப், பின்னும் ஒருசாரார் **பயின்பையை**[6] ஆண் குறிமேற் புகுத்திக் கொண்டு மாதரை மருவினால், விந்துநீர் அப்பையினுள்ளே யிருக்குமாகையாற் கருக்கூடுதலைத் தவிர்த்தற்கு இதுவே சிறந்த முறையாமென்பர். பெண்குறிக் குழாய் மிக மெல்லிய தோலால் அமைக்கப்ட்டுள்ளதாகலின், அதனைப் போலவே மென்மை வாய்ந்த ஆண்குறியைத் தவிரக் கைவிரல் பட்டாலும் எரிவெடுக்கும் அதனும் பயின்பையொடு கூடிய ஆண்குறி உரைசின் அஃது எரிவெடுக்கு மென்பதை யாம் விண்டு சொல்லுதலும் வேண்டுமோ! அற்றன்று, ஆண்குறியைப் புகுத்திய பயின்பையின்மேல் வேப்பெண் ணெயைச் சளிக்கப் பூசிப் புணர்ந்தால், அங்ஙனம் அஃது எரிவெடாதெனின்;

அஃதொக்கும்; ஆனாலும், புணர்ச்சி யிறுதிக்கண் ஆண் குறியிலிருந்து வெளியாம் விந்துநீர் பெண்மகளின் கருப்பைக் கீழ்முனையிற் சென்று பட்டாலன்றி அவட்குப் புணர்ச்சி யின்பம் நிரம்பா தென்பதனை மேற்காட்டின மாகலின், ஆண்குறியிற் கோத்த பயின்பையின் உள்ளே தங்கிவிடும் விந்துநீர் அவட்கு அவ்வின்பத்தை நிறைவு செய்யாதென்க. ஆகவே, இம்முறையுங் கைக்கொளற் பாலதன்றென விடுக்க.

அற்றேற், கருக்கூடுதலை விலக்குதற்கு மிகச் சிறந்த முறை யாதெனிற், கூறுதும். புணர்ச்சித் துவக்கத்திலும் முடிவிலும் ஆண்மகன்மாட்டு உண்டாம் பிசின்நீரிலும் விந்துநீரிலும் உள்ள கருப்புழுக்கள், பெண்மகளின் கருப்பைக் கீழ்முகைச் சிறுதுளை வழியே கருப்பைக்குட் செல்லாதவாறு அத்துளையை மூடிவிடுதலேயாம். இஃதெங்ஙனஞ் செய்யக்கூடுமெனின்; இதற்கென்றே வெள்ளைக்கார நன் மக்களாற் செய்து விற்கப்படும். பயின் **சிறு குல்லா**[7] (small Rubber Cap) வைக் கொண்டு அதனை எளிதிற் செய்து கொள்ளல் கூடுமென்க. இப் பயின் சிறுகுல்லா மூன்று அளவினதாக இருக்கின்றது; ஒன்று மிகச் சிறியதாய், மிகக் குள்ளமான ஒல்லிப் பெண் பிள்ளையின் கருப்பைக் கீழ்முகையைச் செறியப் பொருந்தி மூடிக் கொள்ளுதற்கு ஏற்றது; மற்றெ ய மடித்துப் பிடித்து, அவ்விரல்களிலும் வேப்பெண்ணெயைத் தடவிக் கொண்டு, பின்னர் அதனை மெல்லெனத் தனது பெண்குறிக்குழாயின் வழியே உட்செலுத்தி, உள்ளே பூமொட்டு வடிவாய் நடு விரலுக்குத் தென்படுந் தனது கருப்பை முகையில் அக் குல்லாவை அவ்விரல்கள் இரண்டினாலுமே எளிதிற் செவ்வையாகப் பொருத்திவிடலாம். இமற்குப் பிறருதவி வேண்டுவதில்லை. அங்ஙனந் தானே செய்துகொள்ளத் தெரியாதவளுக்கு, அவள் கணவனே அங்ஙனம் அதனைப் பொருத்தி விடலாம். அக்குல்லாவுக்கும் விரல்களுக்கும் வேப்பெண்ணெய் செவ்வையாகத் தடவியிருந்தால், அவற்றைப் பெண்குறிக் குழாயில் நுழைப்பது எளிதாதலுடன் அக் குழாயும் எரிவெடாது. இவ்வாறு அக் குல்லாவைப் பொருத்திய சிறிது நேரத்திற்குப் பின் புணர்ச்சி செய்தால், ஆண்மகனிலிருந்து கழியும் விந்து நீரிலுள்ள புழுக்கள் கருப்பையினும் புக மாட்டா.

இங்ஙனம் விந்துநீர் கருப்பையினுட் புகாதாயினும், அது கருப்பைக் கீழ் முகையிற் சுற்றிலும் பட்டுப் பெண்மகட்கு இன்பத்தை விளைத்தலின், பயின் குல்லா பொருத்துவதால் இருவரும் எய்தும் இன்பத்திற்கு ஏதும் இடையூறு நிகழாதென் றுணர்ந்து கொள்க. அதுவேயுமன்றிப், புணர்ச்சிக்குப் பின் வருந் துயிலும் கெடாது. இருவரும் அச்சமின்றி இனிது உறங்கலாம். மற்றை நாட்காலையில் அக் குல்லாவைக் கருப்பை முகையினின்றுங் கழற்றி வெளியே யெடுப்பதற்கு முன், மேலே காட்டப் பட்டிருக்கிறபடி இரண்டு சிறு கரண்டி உப்பு இட்டுக்கரைத்த ஓர் உழக்கு வெதுவெதுப்பான நீரை நீரேற்றிவழியாகப் பெண்குறிக்குள் ஏற்றினால், அஃது அங்குள்ள விந்துநீர்ப் புழுக்களைக் கரைத்து வெளிப்படுத்தி விடும். அதன்பின், உள்ளே கருப்பைக் கீழ் முகையிற் பொருத்தியிருக்கும் பயின்குல்லாவை நடுவிரல் கொண்டு அதன் விளிம்பைக் கிளப்பி அகற்றி வெளியே எளிதாக எடுத்துவிடலாம். வெளியேயெடுத்த அக் குல்லாவைச் சவாக்கார நீரினாற் செவ்வையாகக் கழுவி, ஒரு சிறு பீங்கான் தண்ணீரில் அதனை வைத்து விடுக. அங்ஙனம் அதனைத் தண்ணீரில் வைப்பது எதற்கென்றால், அது கெடாமல் நெடுநாட் பயன் படுதற்கேயாம்; தண்ணீரிலின்றி வெறிதாய் வைத்திருந்தால் அது சிலநாட்களிற் கிழிந்துவிடும்.

இனிப், பயின்குல்லாவைப் பொருத்தியபின் மேல்நாட்டு மருந்துக் கடையில் விற்குங் கரைமருந்து வாங்கி[7], அதில் ஒரு சிறு துண்டைப் பெண்குறிக் குழாயின் அகத்தே நுழைத்துவிட்டால் அஃது அங்கே கரைந்து நெய்வடிவாக நிற்குமென்றும், அப்போது விந்து நீர் அங்கே பாயுமாயின் அதிலுள்ள கருப்புழுக்களை அந் நெய் கரைத்து மாய்க்கு மென்றும், இங்ஙனம் பயின்குல்லாவானது கருப்புழுக்கள் கருப்பைக்குள் நுழையாமல் தடை செய்யக், கரை மருந்தானது அவற்றைக் கரைத்து மாய்த்தலால் இவ்விரண்டையும் ஒருங்கு பயன்படுத்து வார்க்குக் கருக்கூடாமல் விலக்குதல் திண்ணமாமென்றும் **மேரி ஸ்டோப்ஸ்** அம்மையார் கூறுகின்றார். கருக்கூடுதலைத் தவிர்க்குங் கட்டாயத்தில் உள்ளவர்கள் அவ்விரண்டையும் பயன்படுத்தி மறுநாட்

காலையில் உப்பு வெந்நீர்விட்டுப் பெண்குறியைக் கழுவியபின் பயன்குல்லாவைக் கழற்றி வெளியில் எடுத்து விடலாம். அவ்வளவு கட்டாயத்தில் இல்லாதவர்கள், முதலில் வேப்பெண்ணெயைப் பயன்படுத்தி, மறுநாள் குறியை உப்புவெந்நீர் செலுபயன்படுத்தியுங் கருக்கூடுதலை விலக்க முடியா விட்டால், அதன்பிற் கரை மருந்தை பயன்படுத்திப் பார்க்கலாம். அதுவுங் கருக் கூடுதலைத் தடை செய்யாவிட்டால், அதன் பிற் பயின்குல்லாவை யாம் முன்னே கூறியபடி கருப்பை முகையிற் பொருத்திவிடலாம். இதனைப் பொருத்துவது மட்டுஞ் சிறிது கருத்துடன் செய்தல் வேண்டும். பயின் குல்லாவின் நடுமையங் கருப்பை முகை நடுமையமாகிய சிறு துளையைச் சென்று பொருந்தி அதனை அடைத்துக் கொள்ளும்படி பெண்மகள் தன் நடுவிரலாற்றன் கருப்பைக் கீழ் முகையைத் தடவிப் பார்த்துக் கருத்தாக அதனைப் பொருத்துதல் இன்றியமை யாதது. குல்லாவின் நடுமையம் முகையின் சிறுதுளையை விலகிச் சாய்வாகப் பொருத்தப் படுமாயின், அது பொருத்தியும் பயன் இன்றாம். ஏனெனிற், சாய்வில் இடுக்கிருக்குமாயின் அதன்வழியே விந்துநீர்ப் புழுக்கள் கருப்பையுட் புகுந்துவிடும். ஆதலால், இதிற் பிழைபடாமற் செய்வது இதனைப் பயன்படுத்தும் மாதர்க்கு முதன்மையாகும். தாமாகவே பயின்குல்லாவைப் பொருத்திக்கொள்ள மாட்டாதவர்கள், வெள்ளைக்கார மருத்துவ மாதரிடஞ் சென்று, அவரால் அது செய்யக் கற்றுக் கொள்ளல் வேண்டும் என்று உணர்க.

இனிப், பெண்மக்கட்குக் கருவுண்டாகாமல் விலக்கு தற்கு மற்றொரு திட்பமான முறை யிருக்கின்றது. அஃதாவது, ஆண்மக்கள் தமது ஆண்டன்மை யிழவாமலே தம்மை மலடாகச் செய்து கொள்ளுதலேயாம். **வெள்ளைக்கார மருத்துவத்தில் தேர்ந்தவர்களிடஞ் சென்றால் அவர்கள் எவரையும் எளிதிலே மலடாகச் செய்து விடுவார்கள்.** அங்ஙனஞ் செய்து கொண்டபின் தம் மனைவியரை எத்தனை காலம் மருவினாலுங் கருவுண்டாகாது. அமெரிக்க தேயத்தில் உள்ள ஆண்பாலாரில் ஆயிரக்கணக்கானவர்கள் இங்ஙனந் தம்மை மலடுபடுத்திக் கொண்டு, தாமுந் தங்குடும்பத்தாரும்

இனிது வாழ்கின்றார்கள். அவரைப் போலவே, நம் நாட்டவருஞ் செய்து கொண்டு இனிது வாழ்தலிற் கருத்தூன்றக் கடவராக!

**அடிக்குறிப்புகள்**

1. See Dr. John Cowan's The Science of a New Life, P. 117.
2. See Dr. Marie C. Stopes' Wise Parenthood', pp. 49, 50; and 'Married Love' Ch. VII.
3. ஹடயோகப் பிரதீபிகை, 3ஆம் இயலில் இதனியல்பு காண்க.
4. Read Harry Gaze's 'How to Live for Ever'.
5. The 'Pro Race' Ca Pessary recommended by Dr. Marie Stopes preferable. This can be obtained from any first class Chemist.
6. The 'Pro Race' Chinosol Solubles preferable.

## 7. நோய் இல்லாத நீண்ட வாழ்க்கை

இதுகாறும் விரித்து விளக்கிய பகுதிகளிலிருந்து, விலங்குகளுக்கு இல்லாத பகுத்துணர்வு வாய்ந்து பிறந்த மக்கள் நமது நன்முயற்சியினாலே நோயில்லாத நீண்ட வாழ்க்கை யினராய் நூறு ஆண்டு வரையில் இனிது வாழலாமென்பது நன்கு விளங்கும், இது கொண்டு நூறாண்டு வரையிற்றான் மக்கள் உயிரோடிருத்தல் கூடும்; அதற்கு மேல் உயிரோ டிருத்தல் இயலாதென்று கருதி விடற்க; நூறாண்டு வரையில் நன்கு உயிர்வாழப் பழகிக் கொண்ட வர்கள், அப் பழக்கத்தை விடாமற் பின்னும் பழகப்பழக நூறாண்டுக்கு மேல் **இருநூறு முந்நூறு** ஆண்டுகளும் அதற்கு மேலும் உயிர்வாழ்தல் எளிதிற் கைகூடுவதேயாகும். இஞ்ஞான்றும் **முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக முழு நலத்தோடு உயிர்வாழும் ஒரு சீனர் சீனதேயத்தில் விளங்குகின்றார்**. அவரது நீண்ட வாழ்நாளை வியந்து அத்தேயத்து அரசினர் அவர்க்கு மிக்க சிறப்புச் செய்து வருகின்றார்கள். இன்னும் அவரைப்போலவே நீண்ட காலம் உயிர்வாழ்ந்தார் சிலரை இந்நூலின் முதற்பகுதியிலும் எடுத்துக் காட்டியிருக்கின்றேம்.

அற்றேல், பிறப்பு உள்ளபோதே இறப்பும் உளதென்பது கண்கூடாய்க் காணப்பட்டு வருவதொரு நிகழ்ச்சியன்றோ வெனின்; அற்றன்று; நாம் இருந்து உயிர்வாழ்வதற்கென்று இறைவனால் வகுத்துக் கொடுக்கப்பட்ட இவ்வுடம்பை நாம் பழுதாக்கி விடுதலினாலேயே, மறுபடியும் இறைவன் நம்மை வேறொரு பிறவியிற் புகுத்தி நமக்கு மற்றுமொரு புதிய வுடம்பைக் கொடுக்கின்றான். அதனையும் நாம் பழுதாக்கி விட மேலுமொரு புதியவுடம்பைக் கொடுக்கின்றான். இங்ஙனம் எண்ணிறந்த உடம்புகளைச் சிறிதும் அயர்வின்றி அருவருப் பின்றி இறைவன் நமக்கு ஓவாது படைத்துக் கொடுத்து

வருவதெல்லாம், எந்தப் பிறவியிலாயினும் நாம் மெய்யறிவு வரப்பெற்று அப்பிறவியைப் பாழாக்காமல் நீள வுயிர்வாழ்ந்து, நம்மைப் பொதிந்த ஆணவமலத் தடையை முழுதுங் களைந்து, இனிப் பிறவியெடுப்பதற்கு இடனின்றி இறைவன் றிருவருளின் பத்திற் படிந்தொன்றாகி என்றும் பெயராப் பேரின்ப வாழ்வில் அமர்தற்கேயாம். எண்ணிறந்த பிறவிகளைப் படைத்துக் கொடுக்கும் ஒழியா வேலையை இறைவனுக்குத் தராமல், இப்பிறவியையே நமது பகுத்தறிவு முயற்சி கொண்டு மிக நீளச் செய்து, அவ்வாற்றால் நமதுயிரைத் தூய்தாக்கி, இதிலிருந்த படியே இறைவன்றிரு வடியைத் தலைக்கூடப் பெறுவமாயின், அது நம் ஆண்ட வனுக்கு எவ்வளவு உவப்பாய் இருக்கும்! நமக்கு நம் தந்தை யாயினான் அமைத்துக் கொடுத்த ஓரழகிய வீட்டை நம் கண்ணுங் கருத்துமாய்ப் பாதுகாத்து, அஃதிடையிடையே பழுதுறுந் தோறும் அதனைப் புதுப்பித்து, அதன்கண் நீள இருந்து உயிர் வாழ்ந்து வருகுவமாயின் அது நம் தந்தைக்கு எவ்வளவு மகிழ்வினைத் தரும்! அவ்வாறின்றி, அவன் முதலிற் கட்டிக் கொடுத்த ஒரு வீட்டைச் சில நாட்களிற் பாழாக்கித், திரும்பவும் மனம் வருந்தி அவன் அமைத்து வைத்த மற்றொரு வீட்டையும் அங்ஙனமே சிலநாட்களிற் பாழாக்கி, இங்ஙனமே அவன் அடுத்தடுத்து அமைத்துத் தருந் தோறும் அவ்வரிய இல்லங்களை யெல்லாம் நாம் தொடர்பாக அழித்து வருகுவமாயின், அக் கொடிய செய்கையால் நாம் அளவின்றித் துன்புறுதலோடு நம் அன்புறு தந்தையையும் நீளத் துன்பத்திற்கு ஆளாக்கி, அவனுக்கு நம்மாட்டு அளவிறந்த அருவருப் பினையும் ஆறாச் சினத்தினையும் விளைவிப்போம் அல்லமோ? ஆதலால் இறைவன் அருள்கனிந்து கொடுத்த இம் மக்கட் பிறவியை நம்மால் இயன்றமட்டுமெல்லாஞ் சிறிதுஞ் சோம்பாது நின்று பாதுகாத்து நீண்டு வாழச் செய்குவமாயின், இறைவன் றிருவருளும் நமது முயற்சிக்கு உற்ற துணை யாயிருந்து, அதனை மேலும் மேலும் நீண்டு நிலவச் செய்யுமென்று கடைப்பிடித்தல் வேண்டும். அற்றேல், **மாணிக்கவாசகர் திருஞானசம்பந்தர்** முதலான நம் தெய்வ ஆசிரியரெல்லாம் நீண்டகாலம் உயிர்வாழாது மறைந்துபோய தென்னை யெனின்; அவரெல்லாம் மேற்சென்ற பிறவிகளில் மிக நீளவாழ்ந்து, பின்னெடுத்த பிறவியில் முற்றுந் தூயராகித் தாம்

*உலகத்திற்கு ஆற்ற வேண்டும். பேருதவிகளை ஆற்றியபின், இங்கிருக்க வேண்டுவதின்மையின் இறைவன் றிருவருள் ஒளியிற் கலந்து விட்டனராகலான், அவர்க்கு இனிப் பிறவி யில்லை யென்பதூஉம், பிறவியாற் பெறுவன வெல்லாம் முடித்துப் போயினரென்பதூஉம் உணர்ந்து கொள்க. இவ்வுண்மையை,*

"மைப்பொலியுங் கண்ணிகேள் மாலயனோ டிந்திரனும்
எப்பிறவியுந்தேட என்னையுந் தன் இன் அருளால்
இப்பிறவி ஆட்கொண்டு இனிப் பிறவாமே காத்து"

(திருவம்மானை 12)

*எனவும்*

"அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவமாயங் காத்தென்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலு நாம் ஒழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ"

(திருத்தெள்ளேணம், 4)

*எனவும் மாணிக்கவாசகர் தமக்குப் பிறவியொழிந்தமையுந் தாம் சிவமாந்தன்மை யெய்தினமையுந் தெளியவுணர்ந்த மனத்திட்பத் தோடு அருளிச் செய்தவாற்றானும், அங்ஙனமே* ***திருஞான சம்பந்தரும்,***

"அப்பரிசிற் பதியான அணிகொள் ஞானசம்பந்தன்"

*எனத் திருப்பிரமபுரப் பதிகத்தில்* ***'ஒப்பரிய பூம்புகலி'*** *என்னுஞ் செய்யுளில் தாம் சிவமாந்தன்மை பெற்றமையும்,* ***'வடிகொள் வாவி'*** *என்னுஞ் செய்யுளில்* ***"அந்தமில் ஞான சம்பந்தன்"*** *எனத்தாம் இறவாநிலை யடைந்தமையும் நன் கறிந்த மனவுறுதியோடு அருளிச் செய்தவாற்றானும் ஐயமின்றித் தேறப்படுமென்க. ஆகவே, அவர்போல் முற்றுணர்வு பெறும் வரையில், நாம் நமக்குக் கிடைத்த இவ்வரிய மக்கட்பிறவியை நம்மால் ஆனமட்டும் முயன்று நீண்டகாலம் இருக்கச் செய்து, நமதுயிரையும் புனிதமாக்கி, இறைவன் திருவருள் ஒளியில் நமதுணர்வைப் படிவித்த வண்ணமாய் வாழ்ந்து வருதற்குக் கடைப்பிடியாய் நிற்றல் வேண்டும். இங்ஙனம் நம் உயிரையும் உடம்பையுந் தூயவாக்கி*

நீண்டுவாழச் செய்தலிற் கருத்துவை யாது, எந்நேரமும் மனைவி மக்கள் உற்றார் மற்றார்க்குப் பாடுபடுதலிலும் ஏராளமாகப் பொருள்திரட்டித் தொகுப்பதிலும், வெளி மினுக்கான பட்டங்கள் நிலைகள் பெறுவதிலுங் கருத்தைச் செலுத்தி அம் முயற்சியிலேயே முனைந்து நிற்பவர்கள் ஐயோ பருவம் முதிராமுன்னரே இறந்தொழிவார்கள்! அவர்களைச் சேர்ந்தவர்களும் ஏமாந்து மிகவுந் துன்புறு வார்கள்! இப்பிறவியில் வீண்பாடுபட்டு அவர்கள் இறந் தொழிந்தவுடனே எல்லாம் வல்ல இறைவன் அவர்களுடைய நல்வினை தீவினைகட்கு ஏற்றபடி அவர்களை மக்கட் பிறவியிலோ அன்றி விலங்கின் பிறவியிலோ திரும்பவுஞ் செலுத்துவான். அங்கும் இப்படியே வீண்பாடுபடுவராயின், அப்பிறவியும் ஒழிய மேலும் வேறு பிறவி வரும். இவ்வாறு இடையறா தொழுகும் நீரோட்டம்போல் தொடர்பாக வரும் பிறவிகளிற் சென்று சென்று துன்புறுவராயின், அவர் அங்ஙனந் தம்மைச் தூய்மை செய்யாமற் பிறர்க்குழைத்தும் பொருள் சேர்த்தும் உயர்ந்த பட்டங்கள் சிறந்த நிலைகள் பெற்றும் அடைந்த பயன் யாது? **நீ உலகம் எல்லாம் ஒருங்கு பெற்றாலும் நின் உயிரை இழந்து விடுவையாயின் யாது பயன்?** என்ற **கிறித்து முனிவரின்** அமுதவுரை ஒவ்வொரு வருள்ளத்திலும் பசுமரத்து ஆணிபோற் பதிந்து நிற்கற்பால தாகும். உடம்பையும் உயிரையும் ஒருங்கு வளர்க்கும் அரும்பெருஞ் சிறப்பினை நமக்கு அறிவுறுத்துதற்கன்றோ நம்மாட்டு அருள்பெரிதுடைய நம் தெய்வத்தவ ஆசிரியரான **திருமூலர்**,

“உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே”

என்றும்,

“உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின் றேனே”

என்றும் அருளிச் செய்தனர். ஆதலால், எந்த முயற்சியைச் செய்தாலும் எந்த நிலையிலிருந்தாலும், உடம்பையும் உயிரையுந் தூயவாக ஒருங்கு வளர்த்தலில் முதல் நாட்டமும், அதற்கு மாறாகாத மற்றவைகளில் இரண்டாவது நாட்டமும் வைத்தலே பகுத்துணர்வு வாய்ந்த மக்கட் பிறவி யெடுத்தார்க்கு இன்றியமையாததாகும். இவ்வின்றியமை யாமையினை வற்புறுத்தி, நீண்ட வாழ்க்கைக்குரிய முறைகளை விளக்கமாகத் தெரிவிக்கப் புகுந்ததனாலும், இத்துறையில் எழுதப்பட்ட வேறு சிறந்த நூல்கள் இது காறுந் தமிழில் வந்திலாமையினாலும் இந்நூலை இத்துணை விரிவாக எழுதலாயினேம்.

இனி, மேற் பிரிவுகளிற் சொன்ன பொருள்களைக் கருத்தூன்றிக் கற்று அவற்றின்படி நடப்பார்க்கு நோயில்லா நீண்ட வாழ்க்கை இரவிற்குப் பின்வரும் பகல்போலத் தானாகவே வரும் என்றாலும், நோயில்லா வாழ்க்கை யென்பது நோய் அணுகப் பெறாத வாழ்க்கையென்றும், மக்கள் தமக்கு இயற்கையேயுள்ள சிற்றறிவால் மேற்சொன்ன நன்முறைகளி னின்றும் வழுவிப் பலவேறு நோய் கொண்ட விடத்து அவற்றைத் தீர்த்துக் கொள்ளும் முறைகள் தெரிந்தாலன்றி அவர்கள் இனிது நீடுவாழ்தல் ஏலாமையின் அவைதம்மைத் தீர்த்து வாழும் வாழ்க்கை யென்றும் இருபொருள் தந்து நிற்றலின், மேற் பிரிவுகளில் விளக்கிக் காட்டிய முறைகளின்படி நடந்து நோய் அணுகப் பெறாது வாழ்ந்தவர்கள், ஒரோ வொருகால் அம் முறைகளினின்றும் வழுவி நோய்களாற் பற்றப்பட்ட விடத்து அவை தம்மைத் தீர்த்துக் கொள்ளுதற் கேற்ற முறைகளைத் தெரிந்துரைத்தல் வேண்டுதலின், நோய்கள் வருமாற்றையும், வந்த நோய்கள் தீர்த்துக் கொள்ளுமாற்றையும் இதன்கண் விளக்கப்புகுவாம்.

**நோய் வருதற்குக் காரணங்கள்:** தூயகாற்றும் பகலவன் ஒளியும் நன்கு உலவாத ஒடுக்கிடங்களில் நீள இருத்தல், வெயிற்காலத்துங் குளிர்காலத்தும் உடம்பில் வெப்ப தட்பங் கள் மாறி நிற்குமாறு செய்து கொள்ளாமை: அஃதாவது வெயிற்காலத்தில் உடம்பு குளிர்ந்த நிலையிலுங் குளிர் காலத்திற் கதகதப்பான நிலையிலும் இருக்கச் செய்து கொள்ளாமை, தலைமுழுகுதற்கும் பருகுதற்கும் புழங்கு தற்கும்

பயன்படுத்தும் நீர் **மலநீர்க்கலப்பு சகதிநீர் சாக்கடை நீர் பிண** நீர்க்கலப்பு இல்லாததாகத் தெரிந்தெடுத்துப் பயன்படுத்தாமை, வீடுகளிற் குப்பை கூளங்களும், அழுக்குஞ் சகதியும் முடைநாற்றமும் மிகுந்திருக்க விடுதல், நச்சு நீருள்ள விலங்கின் இறைச்சி மீனிறைச்சி பறவை யிறைச்சிகளை விழுங்குதல், சைவவுணவுப் பொருள்களிலும் நஞ்சுள்ளன வாகிய **காப்பி தேயிலை கோக்கோ மரப்புளி மிளகாய்** முதலியவைகளை உட்கொள்ளுதல், உணவுகளைக் **களிம்பு, துரு முதலான நஞ்சுள்ள செப்புப் பித்தளை வெண்கலம் ஈயம் இரும்பு அலுமீனியப் பாண்டங்களிற் சமைத்தல்**, உடம்பின் நிலை யறியாமல் அடுத்தடுத்துத் தண்ணீரிற் றலை முழுகல், பலநாள் தலைமுழுகா திருத்தல், நாடோறுந் தூய ஆடைகள் உடுத்தாமல் அழுக்கும் முடைநாற்றமும் உள்ள ஆடைகளைத் தொடர்ந்துடுத்தல், மிகுசினம் மிகுதுயரம் மிகுகவலை மிகுதிகில் அடைதல், உரத்தகுரலில் தொடர்ந்துபேசல், சண்டையிடல், உடம்பினளவுக்குமேல் ஓடல் குதித்தல், ஆடல், உடம்புக்கு வேண்டுமளவு உடற் பயிற்சி செய்யாமை, தொற்று நோய்களும் பிறநோய்களும் உள்ளவர்பால் நெருங்க நேர்ந்தால் அவை தம்மைத் தொடராதிருக்கும் முறைகளை விழிப்பாய்ப் பற்றாமை. ஊரில் தொற்றுநோய் மிகுந்துள்ள காலங்களிற் கைக் கொள்ள வேண்டிய முறைகளைக் கைக்கொள்ளாமை; மாதர் ஆடவர் மருவ வேண்டுமளவு கடந்து மருவுதல், அவர் மருவ வேண்டுமளவு மருவாது தனித்திருத்தல், நோய் கொண்ட மகளிர் ஆடவரை மருவல், ஓயாது மருந்துண்டல், பசித்தபோது உணவு எடாமை, பசியில்லாத போதும் அடுத்தடுத்து உணவெடுத்தல், உறக்கம் வருங்கால் விழித் திருத்தல், எந்நேரமும் உறங்குதல், அளவுக்கு மிஞ்சிப் படித்தல் எழுதுதல், அளவுக்கு மேற்பட்ட மூளையுழைப்பு, உடம்புக் கும் மூளைக்கும் வேண்டுமளவு ஓய்வு கொடாமை முதலியனவாகும்.

நோய்வருதற்கு வாயிலான இக் காரணங்களைக் கண்டறிந்து விலக்கினா லல்லாமல் நோய்கள் விலகா: நல்ல முறைகளால் அவை நீக்கப்பட்டாலும், அக் காரணங்கள்

உள்ளவரையில் அவை திரும்பத் திரும்பக் கிளைத்தபடி யாகவே யிருக்கும். இவ்வுண்மை கண்டே தெய்வப் **திருவள்ளுவர்**,

> "நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்" (குறள் 948)

என்று அருளிச் செய்தார். வெட்ட வெட்டத் துளிர்க்குங் கொறுக்காய்ப்புளி மரத்தை முற்றும் ஒழிக்க வேண்டு மானால் அதனை வேருடன் கல்லி யகற்றல் வேண்டுமன்றோ? அது போலவே, நோய்வருதற்குரிய காரணங்களை ஆராய்ந்தறிந்து விலக்கினாலன்றோ திரும்ப நோய்கள் வராவென்பது திண்ணமாம். அதுநிற்க.

இனி, ஒரு நோய் வந்தவுடனே அஃது இன்ன காரணத் தால் வந்ததென்பதைத் தெரிந்து கொண்டு மறுபடியும் அந்நோய் வருதற்கு வழியான அக்காரணத்தைத் தொலைப்ப துடன், வந்த அந்நோய் தீர்தற்குரிய முறைகளையுங் கடைப்பிடியாய் நின்று செய்தல் வேண்டும். எந்த நோய் வந்தாலும் முதலில் அது மலக்குடரை வறட்டித் தீனிப் பையின் வலிவைக் குறைக்கின்றது. மலக்குடர் வறள்வதால் அதனுள் உள்ள மலச்சக்கையானது தீய்ந்து கருகி அதனை விட்டு வெளிவராதாய்ச் சேர்ந்திருக்க, அதன்கண் உள்ள நஞ்சை அக் குடலின் நெடுக உள்ள மணிகள் உரிஞ்சி அதனைச் செந்நீரிற் கலப்பிக்கின்றது; இதனாற் செந்நீர் நஞ்சாகி உடம்பெங்கும் ஓடி உறுப்புகளைப் பழுதாக்கி நோயை விளைக்கின்றது. மலக்குடரில் உள்ள அச் சக்கை அங்ஙனந் தீய்ந்து திரண்டிருத் தலால், அக் குடரின் மேற் பாகத்துள்ள தீனிப்பையானது அதனால் நெருக்கப்பட்டுத் தான் இயங்க வேண்டுமளவு இயங்காமலுந், தன்கண் வந்த உணவில் தான் பிரித்தெடுத்துக் கொண்டு சாறுபோக மிச்சமான மலச்சக்கையை, முன்னே தன்னினின்று கீழ்ச் செலுத்தப்பட்ட மலத்தால் அடைப்பட்டுக் கிடக்கும் அம் மலங்குடருக்கு மீண்டுஞ் செலுத்த மாட்டா மலும் வலிவு குன்றி, வந்த நோய் மிகுதற்குத் தானும் ஒரு காரணமாய் இருக்கும். ஆதலால், வந்த நோய் எதுவாயிருந் தாலும் அதனை நீக்குதற்கு முதலிற் செய்யவேண்டுவது: மலக்குடரிலுள்ள பழைய மலச்சக்கையைப் புறம்படுத்தித் துப்புரவு செய்தலேயாகும் என்று நினைவிற் பதித்துக் கொள்க.

*முதலிற் செய்ய வேண்டிய இம் முறையை விடுத்து வேறு எது செய்தாலும் நோய் மிகுமேயன்றிச் சிறிதுங் குறையாது.*

*அற்றேல், மலக்குடரைத் துப்புரவுசெய்தற்கு ஏற்ற தொரு முறை காட்டுகவெனிற், காட்டுதும். மக்களுடைய மலக்குடர் இரண்டுபடி நீர் கொள்ளத்தக்கது. ஏனென்றால் மலக்குடரின்* ***சிறுகுழாய்ப் பகுதி இருபது அல்லது இருபத்தைந்தடி நீளமும், பெருங்குழாய்ப் பகுதி ஐந்தடி நீளமும் உள்ளது***[4] *ஆகவே, இக் குடருக்கு ஒருபடி நீர் ஏற்றி அதனைக் கழுவித் துப்புரவு செய்வதில் எவரும் அஞ்ச வேண்டுவதில்லை. இனி, நன்றாய்க் கொதிக்கும் வெந்நீரில் ஒரு படியெடுத்து, விரற் பொறுக்கக் கூடிய சூட்டில் அதனை ஆற்றி, அதன்பின்* ***"விநோலியா வெள்ளை ரோசாச் சவர்க்கார"****த்தில்* (Vinolia White Rose Soap) *சிறிது அந்நீரிற் கரைத்து, அதனை* ***நீரேற்றிக் குவளை*** (Enema Can) *இல் நிரப்பிவிடுக. அக்குவளையின் கீழுள்ள தூம்பிற் பொருத்தி யிருக்கும்* ***பயின்குழாயின்*** (Rubber tube) *கடைசி முனையி லுள்ள செருகு குழாயின் திருகை மூடிய படியாகவே தொங்கவிட்டு, நீர் நிரம்பிய அக்குவளையைச் சுவரில் நாலடி யுயரத்தே ஓர் ஆணியில் மாட்டிவிடுக. அதன்பின் மேற் சொன்ன செருகு குழாயின் முனையிற் சிறுவிரல் நீளம் வரையில் மேற்சொன்ன சவர்க்காரத்தைச் சளிக்கத் தடவிப், பிறகு அதிலுள்ள திருகைத் திறந்துவிட்டால், மேலே குவளையில் நிரப்பிய வெந்நீர் அக் குழாயின் வழியாகக் கீழ் இறங்கி அம்முனையின்கட் பீரிட்டு அடிக்கும்; அங்ஙனஞ் சிறிதுநீர் வெளியானபின் அம்முனையை ஒரு விரலால் அடைத்துக் கொண்டு, கீழே வலதுபுறமாய்ப் படுத்து, அதே முனையை எருவாய்க்குட் புகுத்துக. அவ்வாறு புகுத்திய சிறிது நேரத்திலெல்லாம் மேலே குவளையில் நிரப்பிய வெந்நீர் முழுதும் மலக் குடரின் உள்ளே ஏறிவிடும். அதன்பின் மெல்லென எழுந்து வெளியே சென்று மலத்தைக் கழித்து விடுக. செருகு குழாயை எருவாய்க்குட் புகுத்தும் முன் அதனைத் திறந்து சிறிது வெந்நீரை வெளிவிடுதல் ஏனென்றால், நீரேற்றிக் குவளையிலிருந்து தொங்கும்* ***பயின்குழா****யில் முன்னமேயுள்ள காற்று மலக்குடரின் உட்செல்லாமல் அதனை அதனினின்று வெளிப்படுத்துதற் கேயாம் என்க.*

விரற்பொறுக்கக்கூடிய வெந்நீரை மலக் குடருக்கு ஏற்றுவது ஏனென்றால், மலக்குடருக்குச் சூடேற்றி அங்குள்ள நோய்ப் புழுக்களைத் தொலைத்தற்கும், உடம் பெங்கும் வியர்த்துச் செந்நீரிலுள்ள நஞ்சு வியர்வைத் துளைகளின்வழி வெளி வருதற்குமேயாம். அவ் வெந்நீரில் வெள்ளை ரோசாக் சவர்க்காரத்தைச் சிறிது கரைப்பது ஏனென்றால், மலக்குடரிலுள்ள நெய்ப்பசை போகாமல் அதற்கு வழுவழுப் பினை உண்டாக்குதற்கும் அஃது எரி வெடாம லிருத்தற்குமேயாமென்க.

இனிப், பெரும்பாலும் எந்த நோய் வந்தாலும் அதனைத் தீர்த்தற்கு விரற்பொறுக்கக் கூடிய வெந்நீரை ஏற்றுதலே நன்று. ஆனால், வயிற்றுளைச்சல், அம்மை என்னும் நோயாற் பிடியுண்டவர்கட்குமட்டும் அங்ஙனஞ் சூடான வெந்நீரை ஏற்றுதல் ஆகாது. மற்று, வெந்நீரை நன்றாக ஆற்றி வெறுவெதுவென்றிருக்கும் பதத்தில் அதனை மலக் குடருக்கு ஏற்றுதலே செயற்பாலது.

இன்னுங், கக்கற் கழிச்சல் (வாந்திபேதி) என்னுங் கொடு நோய் கொண்டவர்க்கு, நேரம் போகாமல் நல்ல சூடான சவர்க்கார வெந்நீரில் இரண்டு கை உப்பையிட்டுக் கரைத்து, அதனை மலக்குடருக்கு ஏற்றல் வேண்டும். ஏனென்றால், உப்பானது நோய்ப் புழுக்களின் உடம்பைக் கரைத்து அவை தம்மை மாய்க்குந் தன்மை வாய்ந்தது.

இவ்வாறாக, எந்த நோய் வந்தாலும் உடனே நீரேற்றி கொண்டு மலக்குடரைக் கழுவித் துப்புரவு செய்யவே, அந் நோயின் கடுமை அரைவாசிக்குமேற் குறைந்து விடும் என்று திண்ணமா யுணர்ந்து கொள்க.

இனி, இதனையடுத்துக் கட்டாயமாகச் செயற்பாலது: தீனிப்பைக்கு உணவு கொடாமற் பட்டினி கிடத்தலேயாம். எவ்வளவு நேரம் பட்டினி கிடப்பதென்றால், நன்றாகப் பசியெடுக்கும் வரையிலென்க. **“துய்க்க துவரப் பசித்து”** என்று ஆசிரியர் **திருவள்ளுவர்** அருளிச்செய்த அறிவுரையைக் கடைப்பிடித்து ஒழுகுவார்க்கு மருந்துண்ண வேண்டிய கட்டாயமே நேராது. உடம்புநோய் தீர்ந்து நல்ல நிலைமைக்கு வரும்வரையிற் பட்டினி கிடக்கும் மனத் திட்பம் உடையார்க்கு,

எத்தகைய நோய் இருப்பினும் அது தீர்ந்தொழிதல் திண்ணமே யாம்; இதற்கு உண்மையில் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்றனை இங்கெடுத்துக் காட்டுதும் **பியூரிண்டன்** (E.E. Purinton) என்னும் அமெரிக்க அறிஞர் தமது இளமைக்காலத்திற் பல்வகை நோய்களாற் பெரிது வருந்திப் பின்னர்ப் பட்டினி கிடந்து அந்நோய்களைத் தீர்த்துக் கொண்டபின் தாம் எழுதி வெளியிட்ட **"பட்டினி கிடத்தலின் மெய்ம்மை"**[2] என்னும் நூலில் தமது வரலாற்றைப் பின்வருமாறு எழுதியிருக் கின்றார்:-

*யான் பிறந்த இருபத்தைந்து ஆண்டுகள் வரையில் யான் சிறிதும் நலம் இன்றி நோய்வாய்ப் பட்டிருந்தேன். ஏனென்றால், அப்போது என்னிடத்தில் உண்மை யென்பதே யில்லை. யான் என் மனச்சான்றுக்கு ஒத்தபடியாகவாவது என் நண்பர்கட்கு ஒத்தபடியாகவாவது நடக்கத் துணிந்தே னில்லை. நாகரிக வாழ்க்கையும் பண்டை மொழிப் பற்றும் மதப்பற்றும் ஒருங்கு சேர்ந்து என்னை என் இயற்கைக்கு மாறாகத் தோன்றும்படி செய்து யான் இப்போதிருக்கும் செயற்கை நிலையில் வைத்து என்னைத் துன்புறுத்தலாயின.*

*"வலிவற்ற குழந்தையாய்ப் பிறந்து, என் பிள்ளைமைப் பருவத்தும் இளமைப் பருவத்தும் நோயாற் பிடியுண்டு அரைவாசி நோயாளியாகவே யிருந்தேன். பதினைந்து வகையவான உடம்போடொத்த நோய்கள் மாறிமாறி வந்து என்னைத் துன்புறுத்தின. கடைசியாக என் குடும்பத்தவரும், நண்பரும் மருத்துவரும் எனது முடிவையறிந்து கைவிட்டு மனங் கலங்கினர். ஒருமுறை யான் ஆறுவகையான மருந்துகள் உட்கொண்டு வந்தேன்: யான் ஐம்பது வீசை எடையிருக்க வேண்டியதற்கு மாறாக, முப்பத்தேழு வீசைதான் இருந்தேன்; ஒரு நாளின் பெரும் பகுதியை நெருப்பண்டையிலும், படுக்கையிலும் யான் கழித்து வந்தமையால் எனக்கும் பிறர்க்கும் பயன்படாத அஞ்சத்தக்க நிலையை அடைந்தேன். எனக்கிருந்த நோய்கள் முதன்மையாய் நரம்பைப் பற்றியனவும் வயிற்றின் கோளாறுகளுமேயாகும்; இவை என்னுடம்பின் ஏற்றக் குறைச்சலான அமைப்பினால் உண்டான வைகளாகும். ஒழிவின்றிச் சுறுசுறுப்பாயிருக்கும் மூளையை என் தந்தை யினிடமிருந்துங், குள்ள வடிவாய் நடுக்கம் வாய்ந்த உடம்பின்*

அமைப்பையும் மிகக் கூரிய உணர்வையும் என் அன்னை யிடமிருந்தும், அடங்கா அவாவினை இருவரிட மிருந்தும் என் பிறப்புரிமையாய் யான் பெற்றுக் கொண்டேன். யான் தள்ளாடாமல் நிற்கமுடியாதென்பது எனக்குத் தோன்றிற்று. பன்னிரண்டாம் ஆண்டில் என் தலையின் அமைப்பு ஒரு பெரிய ஆளின் தலையினமைப்பை ஒத்ததா யிருக்க, என்னுடம்பின் அமைப்போ எட்டாண்டுப் பையன் அமைப்பை ஒத்துக் காணப்பட்டது; ஆனால், என் உயிரின் உணர்ச்சியோ யான் கண்ட எல்லாரினும் முதிர்ந்து தோன்றியது. எவருமே என் நிலைமையை இன்னதுதான் என்று அறிந்து கொள்ள முடியவில்லை. இவ்வுலகத்தில் எனக்குப் பெரியதொரு தடுமாற்றத்தை விளைத்தது என்னைப் பற்றியேயல்லாமல் வேறொருவரைப் பற்றிய தன்று.''

''வண்டியில் ஏறிச் செல்லலாவது, ஏணையில் இருத்தலாவது என்னாற் கூடுவதில்லை; மரத்தில் ஏறினாலோ மயக்கமுங் களைப்பும் நோயும் வந்து விடும். உடம்பு சிறிது அலண்டாலும் மனத்திற்குச் சிறிது எரிச்சல் உண்டா னாலும் உடனே தலைவலி தோன்றிப் பலநாள் என்னைத் துன்புறுத்தும்.

கடைசியாக உடற்பயிற்சி செய்யத் தலைப்பட்டேன். உணவு கொள் வகைகள், தண்ணீர் மருத்துவம், மூச்சுப் பழக்கம், முயற்சி யியக்கங்கள், முயற்சியில்லா இயக்கங்கள், வெயிற் காய்தல், காற்றிலுலவல், களிமண் மருத்துவம் முதலான பலவேறு இயற்கை முறைகளையுங் கையாண்டு பார்த்தேன்.

இவையெல்லாம் உதவி செய்தன எனக்கிருந்த நோய்களிற் பாதி இப்போது மறைந்தொழிந்தன. ஆனாலும், என் உள்ளமும் உயிரும் எளிதிலே அமைதி பெறவில்லை. ஆகவே, மந்திரம் உருவேற்றுதல், மனநூன் முறைகள், புதிய அறிவுநூன் முறை களைக் கையாளுதல், கீழைத்தேய மெய்யறிவு நூல்களை அவற்றோடொத்த சமயக் கொள்கை களை ஆராயதல் என்பவற்றில் தலையிட்டேன். என்றாலும், இவையனையவும் ஏறக்குறைய மக்களாற் செய்யப் பட்டவைகள். எனக்கோ கடவுளைப் பெற வேண்டுமென்பது ஆவல்.

"அதன்பின் முப்பதுநாட் பட்டினி கிடக்கலானேன். இவ்வாறு பட்டினி கிடந்ததன் வாயிலாகக் கடவுளைக் கண்டு கொண்டேன். கடவுளைக் காணவே என்னை யான் இன்னனென்றுங் கண்டேன். இங்ஙனம் பட்டினிகிடந்த ஒரு திங்களும் யான் ஏதும் உணவெடுக்கவில்லை. தண்ணீரைத் தவிர வேறேதும் பருகவில்லை; ஆனாற் சில வேளைகளில் மட்டும் புளிப்புள்ள பழச்சாற்றைப் பருகிய துண்டு. இப் பேராண்மைச் செயலால் யான் பெறக் கருதியவை நான்கு:- அவை: **புதிய வுடம்பு, இன்பம், தலைமை, அறிவொளி** என்பனவாகும். அவை ஒவ்வொன்றுங் கைகூடின. என்னுடம் போ யான் பத்தாண்டு களுக்குமுன் அடைந்திராத பெரு நலத்தை யடைந்தது: இன்ப நுகர்ச்சியிலோ யான் சிறு பிள்ளையாயிருந்த காலத்து நுகர்ந்து இன்புற்றவைகளையெல்லாம் நுகர்ந்து இன்புற்றேன்; மனத்திட்பத்திலோ யான் இதற்குமுன் எதனாலும் அடையாத அடக்கியாளுந் திறத்தை அடைந்ததுடன், இனி எதுவும் அசைக்கமாட்டாத உரத்தினையும் அடைந்தேன்; மெய்யுணர்ச்சியிலோ, கதிரவன் எழும் இடத்திற்கும் எட்டாத் தொலைவில் உள்ள வான்மீன் ஒளிக்கும் அப்பாற்பட்டுப் பேர் ஒளி விளக்கத்தக்க தாய்த் திகழும் எல்லையற்ற தனிப்பெரும் பொருளின் முடிந்த உண்மைகளும் அருள்வெளிகளுந் திறந்திருக்கக் கண்டேன்.

நீங்களும் அங்ஙனமே செய்யலாம்; அதனின் மிகுதி யாகவுஞ் செய்யலாம். ஆனால், நுங்கட்கு வேண்டியவை; நாம் இதனைச் செய்து முடிக்கக்கூடும் என்னும் நம்பிக்கையும் அதனைச் செய்முறையின் செவ்வையான உணர்ச்சியும் எல்லாம் வல்ல இறைவனது குறிப்பேட்டிலே நுங்கட் கென்று பதிந்து வைக்கப்பட்டிருக்கும் உயர்ந்த வருங்கால அறிவிப்பினை மெய்யாக்க விழையும் உறுதியான நோக்கமு மேயாகும் என்க.

இங்ஙனமாக முப்பதுநாட் பட்டினிகிடந்து அவ் வாற்றால் தம் உடம்பின்கண் இருந்த நெடுநாட்பட்ட கொடும் பிணியை நீக்கிக் கொண்டது மல்லாமல், வேறுபல பெறற் கரும் பேறுகளையுங் கடவுட் காட்சியையும் பெற்ற இத் துரைமகனார் தம் உண்மையுரைக்குமுன், அத்தகைய அரும்பேறறிவு முயற்சியும்

அம் முயற்சியை முடிக்கும் ஆற்றலும் இல்லாத நூறாயிரவர் வாய்க் கொழுப்புமிக்கு **"இவையெல்லாம் பொய்!"** எனக் கூறும் வெறும்பதருரை தலைக் காட்டுமே சொல்லுங்கள்! எனவே பசியெடுக்கும் வரையில் ஏதும் உட்கொள்ளாமல் மனமகிழ்ச்சியோடு பட்டினி கிடத்தலைப்போல, நோய் நீக்கவல்ல வேறுமுறை யாண்டும் இல்லையென்று கடைப்பிடித் துணர்ந்து கொள்க.

அவ்வாறாயின், எல்லாருமே முப்பதுநாட் பட்டினி கிடத்தல் வேண்டுமோ வெனின், அற்றன்று; அவரவரது நோயின் வன்மை மென்மைக்கும், உடம்பின் திட்ப நுட்பத்திற்கும் ஏற்றவாறு நன்கு ஆராய்ந்து அறிந்து ஒருநாள், இரண்டுநாள், மூன்றுநாள், ஒரு கிழமை, ஒரு திங்கள் பட்டினி கிடத்தல் வேண்டும். எந்தவகையானுந் தீராத கொடிய நோய்களை நீக்கிக் கொள்ள வேண்டுவாருங், கொடுங் குணங்கள் கொடுஞ் செயல்கள் உடையராய்த் தமது உயிர் தடித்த மாசு ஏறப்பெற்று அதனால் மிகத் துன்புற்றுப் பின் அதனின் நீங்கித் தமதுயிரைத் தூயதாக்கி இறைவன் அருளொளியிற் படிவிக்க வேண்டுவாரும் முப்பது நாட் பட்டினி கிடத்தலே செயற்பாலது. மற்றுச் சிறுசிறு நோய்களாற் பற்றப்பட்டாரும், நொய்ய உணவு சிறு துயில் கொள் வாருந், தமக்குரிய நல்லியற்கையால் எந் நேரமும் நல்லவை களையே நினைப்பாரும் நல்லவைகளையே செய்வாரும் இறைவன்றிரு வுருவிலேயே தமது கருத்தை ஈடுபடுத்தி யிருப்பாரும், உயர்ந்த நூலாராய்ச்சியில் எந்நேரமுந் தமது அறிவைச் செலுத்தி யின்புறுவாரும் அங்ஙனம்பல நாட்கள் பட்டினி கிடத்தல் வேண்டா. தமக்குப் பட்டினி கிடக்க வேண்டுங் கட்டாயம் நேரும் போதுமட்டுந் தமதுடம்பு தாங்கும் அளவறிந்து ஒருநாள் முதல் மூன்றுநாள் வரையிற் பட்டினி கிடக்கலாம்.

அற்றேற், பட்டினிகிடக்கும் போது கைக்கொள்ள வேண்டிய முறைகள் யாவையெனிற், கூறுதும் காலைக் கடன்களை முடித்தபின், தன்னுடம்பின் நலத்துக்கு எற்றபடி தண்ணீரிலாவது வெந்நீரிலாவது தலை முழுகி உடம்பிலுள்ள அழுக்கை நன்றாய்த் தேய்த்துக் கழுவிவிடல் வேண்டும். **அக்குள், குறி, எருவாய்** முதலான இடங்களில் எள்ளவும்

அழுக்கு இராதபடி கருத்தாய்ப் பார்த்துக் கொள்க. அதன்பின் தோய்த்து உலர்த்திய ஆடையுடுத்திக் **கூந்தல் முகங் கைகால்களில் ஈரமும் நமிப்பும்** இல்லாதபடி தணலில் அகிற் புகையிட்டு அவற்றை முறையே புலர்த்திக் காய்ச்சிவிடுக. அதன்பின் இறைவன் அடையாளமான ஒரு திருவுருவை எதிரே வைத்து, அதனை நீராட்டி மலர்சூட்டிச் சாந்தம் அப்பித், தேவார திருவாசகம் முதலான கடவுட் பாடல்களை நெஞ்சம் நெக்குருகப் பாடி வழிபடுக. அதன்பின் நாப் பொறுக்கக் கூடிய சூட்டில் வெந்நீர் அருந்துக. மூளைக்கு மிகுந்த உழைப்பினைத் தராத நூல்களை இன்பவுணர்ச்சிடன் பயிலுக; இவ்வகையில் **அடியார் வரலாறுகள், செயற்கருஞ் செயல்கள் செய்த அறிஞர்கள் வரலாறுகள், மனநிலையைக் குலையாத நல்ல கதைகள், கடவுள் மேல் அன்பர்கள் பாடிய பாடல்கள்** முதலானவைகளே பயிலத்தக்கவை. இந் நூல்களைத் தொடர்ந்து பயிலாமல் இடையிடையே விட்டு விட்டுப் பயிலுதல் வேண்டும். தொடர்பாக ஒரே யிடத்தில் இராமலுந், தொடர்ந்து நில்லாமலுந், தொடர்ந்து நடவா மலும், படுக்கையிலேயே கிடவாமலும், இச் செயல்களை மாறி மாறிச் செய்துவருக. சாயங்காலந்தோறும் மேலே சொல்லியிருக்கும் முறைப்படி நீரேற்றி கொண்டு மலக்குடரைத் துப்புரவு செய்தலிற் கருத்திருக்க வேண்டும். இரவில் உறக்கம் வரும்போது நன்றாக உறங்கி விடுதல் வேண்டும். உறங்கச் செல்கையிலும், உறக்கம் நீங்கி விழிக்கை யிலும் உடம்பின்நலம் உயிர் நலங்களைப் பற்றியும், இறைவன் அருளொளியானது தன் உடம்பினும் உயிரிலுங் கலந்து நின்று அவையிரண்டையும் ஓவாது இயக்கி அவற்றைத் தூய வாக்கும் புனித இயக்கத்தைப் பற்றியும், அழகு அறிவு அன்பிற் சிறந்தாரைப் பற்றியும், பேராண்மையிற் சிறந்தாரைப் பற்றியும் நினைத்தல் பெரிதும் வேண்டப்படுவதாகும். பட்டினி கிடக்கும் நாட்களில் இடையிடையே தாங்க முடியாதபடி பசியெடுத்தால், உடம்பில் நோய்தீர்ந்துவிட்ட தென்பதுணர்ந்து, சிறிது சிறிதாக உணவருந்தத் தொடங்குக. பட்டினி கிடந்து பசியெடுத்தவுடனே உரமான உணவை உட்கொள்ளல் ஆகாது. கோதுமை நொய்மை ஆவின்பாலில் இட்டுக் காய்ச்சிய கஞ்சியை முதலிற்குடித்து, அது நன்றாய்ச் செரித்து மீண்டும் நல்லபசி யெடுக்கும்போது மட்டுஞ் சிறிது சோறு உட்கொள்ளலாம்.

இராப்பொழுதா யிருந்தாற் கடும்பசி யெடுத்தாலுஞ் சோறுதின்ன லாகாது. எளிதிற் செரிக்கத்தக்க **கோதுமை வாற்கோதுமைக்கஞ்சி**, அவரவர் உடம்புக்கு **இசைந்த பழங்கள்**, சில நொய்ய சிற்றுண்டிகளை மட்டும் இரவில் அருந்தல் நன்று.

இனி, நோய் நீக்குதற் பொருட்டாவது, இம்மை மறுமைக்குரிய பிறநலங்களைப் பெறுதல் வேண்டி நோன்பு நோக்கும் போதாவது பட்டினி கிடப்பவர்கள் மேற் சொல்லியவாறு செய்தலே முறையாயிருக்க, அதனைவிடுத்து நோன்பு நாட்களிலே தாம் மிகவும் கொழுமையான எளிதிற் செரியாத பண்டம் பணிகாரங்களைப் பெரும்பாலார் விலாப்புடைக்கத் தின்கின்றார்கள். அதனாற் பின் நாட்களில் நோய்கொண்டு வருந்தும்போது தாம் நோன்பு நோற்று வணங்கிய தெய்வத்தை நொந்து கொள்கின்றார்கள். நோன்பு நாட்களிற் கடும்பசி யெடுத்தால் உட்கொள்ளற்பாலன **பழங்களே**யாகும். இதுபற்றியே வடவர்கள் பழஉணவைப் **'பலாகாரம்'** என வழங்குவர்; பலம் என்பது **பழம், ஆகாரம் என்பது உணவு; பலாகாரம்** என்னுஞ் சொல் வழக்கத்திற் **பலகாரம்** எனத் திரிந்து விட்டது. அச்சொல்லின் உருவந் திரிந்தாற் போலவே அதன் பொருளுந் திரிந்து **பணிகாரம்** என்றாயிற்று; ஆகவே, பட்டினிகிடக்கும் நாட்களிற் பசியின் கொடுமையைத் தணித்தற்குச் சில பழவகையான உணவாகக் கொள்ள வேண்டுவது விடுத்துக் கொழுமையான இட்டிலி, தோசை, வடை, முறுக்கு, வாதுமைப்பாகு, உப்புமா, கோதுமையடை, இலட்டுகம்முதலியவைகளை விலாப் புடைக்கத் தின்று, வற்றக் காய்ச்சிய பாலுங் காப்பியும் பருகு கின்றார்கள். மற்றும்பலர், ஒரு பொழுது என்று வைத்துக் கொண்டு பகற்பொழுதில் நெய்ப் பொங்கல் பருப்புக் குழம்பு, உருளைக்கிழங்கு வாழைக்காய் கத்திரிக்காய் முதலிய காய்களின் துவட்டல், தயிர்ப்பச்சடி, அப்பளம், வடை, பாயசம் மிளகுநீர், ஏட்டுத்தயிர் முதலியவைகளை வயிறு பெருக்க விலாப்புடைக்க மூச்சுவிட முடியாதபடி தின்கின் றார்கள்! நம்முடைய உறுப்புகளில் ஓயாமல் வேலை செய்வது தீனிப்பையேயாகும். மிகுதியாக அதுவேலை செய்வத னாலும், அதனால் எளிதிற் செரிப்பித்துக் கொள்ள முடியாத மிகக்

கொழுமையான பண்டங்களை அது கொள்ளும் அளவுக்குமேல் அது தாங்கும் அளவுக்குமேல் அதற்கு இடுவதனாலுமே உடம்புக்கு நோய் வருகின்றது; அதனால் அறிவு மழுங்கிப் போகின்றது. ஆதலினாற்றான், இடை யிடையே பட்டினிகிடந்து உடம்புநல உயிர் நலங்களை மிகுவித்துக் கொள்ளுதற்கு நோன்பு நாட்கள் ஆன்றோர் களால் வகுத்து வைக்கப்பட்டன. அவர்கள் அங்ஙனஞ் செய்து வைத்த நுட்பம் அறியாமற், பட்டினி கிடக்க வேண்டிய அந்நாட்களில், மற்ற நாட்களில் உண்ணும் உணவைவிட மிகச் கொழுமையான பண்டங்களை நெய் சொட்டச் சொட்டச் செய்துண்டு, தம் உடல்நல மனநலங் களைப் பழுதுபடுத்திக் கொள்வது பெரிதும் அருவருக்கற் பாலதா மென்க.

இனி, மிகக்கொடிய நோய்களால் தொடர்பாகப் பற்றப்பட்டிருப்பாரும், மிகக் குறைந்த அறிவினால் தீய குணங்கள் தலைவிரித்தாடக் கடவுள் இல்லையென்று பாழ்ஞ் சொற் கூறித் தமக்கும் பிறர்க்குந் தீது செய்வாருந், தமக்குள்ள அப் பெருங் குறைபாடுகளை நீக்கிக் கொள்ள விழைகு வாராயின், அவர்கள் **முப்பதுநாட் பட்டினி கிடத்தல் இன்றி யமையாததாகும்**. முப்பது நாட் பட்டினி கிடந்தால் உடம்பில் எத்தகைய கொடுநோய் இருந்தாலும் அது வேரோடு அற்று ஒழிதல் திண்ணம்; அதுவேயுமன்றி இவ்வுலகில் தமது நிலைக்குப், பொருந்தத் தாம் பெறக் கருதிய நலங்களையுங் கட்டாயம் பெறுவர்; அம்மட்டோ இதுவரையிற்றாம் காணாத மேலுலகக் காட்சிகளையும் எல்லாம் வல்ல இறைவன்றன் அருள் விளக்கத்தையுங் காண்பார்கள்.

ஆனாற் சடுதியில் எவரும் முப்பதுநாட் பட்டினி கிடத்தலாகாது. முதலில் ஒன்றிரண்டு நாட்கள் பட்டினி கிடந்து பிறகு ஒருதிங்கள் இடைவிட்டு மூன்று நாட்கள் பட்டினி கிடத்தல் வேண்டும்; அதன்பின் ஒருதிங்கள் இடைவிட்டு ஐந்துநாட்களும், அதன்பின் ஒருதிங்கள் கழித்து எழுநாட்களும், இங்ஙனமே ஒவ்வொரு திங்கள் இடையிடையே விட்டுவிட்டுப் பத்து நாட்கள், பன்னிரண்டு நாட்கள், பதினைந்து, பதினேழு இருபது இருபத்திரண்டு இருபத்தைந்து இருபத்தேழு நாட்களும் பட்டினி கிடந்து, கடைமுறையாக முப்பதுநாட் பட்டினி கிடத்தலை மேற் கொள்க.

பட்டினி கிடக்கத் துவங்குதற்கு முன்னரே ஒரு கிழமை முடிய மலக்குடரை இளக்கும் உழுந்து வடை சீமை அத்திப்பழம் இனிப்பான நாரத்தம்பழம் முதலானவைகளை அருந்தி வருக; ஆவின் பாலையும் பருகுக: தொடர்பாகப் பட்டினி கிடத்தற்கு ஏற்றகாலம் வேனிற் காலமே யாகும்; அக் காலத்திற் பலவகையான நல்ல பழங்கள் கிடைக்கும்; இரத்தத்தைத் துப்புரவு செய்தற்கு இன்றியமையாததான நீரை அடுத்தடுத்துப் பருகுதற்கும் இரத்தத்திற் கலந்துள்ள நச்சுநீர்கள் வியர்வையாக வெளி வருதற்கும், வெயிற் காய்தற்கும், வெளியே தென்றற் காற்றில் உலவுதற்கும், மக்கள் விடும் நச்சுக் காற்றை உள்ளிழுத்து அவர்க்கு வேண்டிய உயிர்க்காற்றை வெளிவிடும் மரங்களின் நிழலிலே யிருத் தற்கும் மிக இசைந்தகாலம் வெயிற் காலமன்றோ? ஆதலால், அக்காலத்தில் தொடர்பாகப் பட்டினி கிடத்தலே நன்று.

இனிச், செல்வச் செருக்குடையார் பலர் மழைக்கால பனிக் காலங்களில் மட்டுந் தம் ஊர்களில் இருப்பதும், வேனிற் காலத்தில் நீலகிரி, கோடைக்கானல் முதலான மிகக் குளிர்ந்த மலைநாடுகளிற் சென்று வைகுவதுஞ் செய்கின்றார்கள். இவ்வாறு இவர்கள் எந்நேரமுங் குளிரிலேயே காலங் கழித்தலால், இவர்களுடம்பு நன்றாய் வியர்ப்பதற்கு வழியில்லாமற் போகின்றது. அதனால், இவர்களது இரத்தத்திற் கலந்துள்ள நச்சுநீர் நாளுக்கு நாட் பெருகி, இவர் களைப் பருவம் முதிரா முன்னரே உயிர்மாளச் செய்கின்றது. மூளையுழைப்பு மிகுதியாய் உடையவர்கள் மட்டும் வேனிற் காலத்தில் சில நாட்கள் குளிர் மிகுந்த மலை நாடுகளிற் கழித்தல் நலம் பயக்குமேனும், ஏனையோர்க்கு அதுநன்மை பயவாது. மூளையுழைப்புள்ளவர்களும் வெயிலின் கடுமை மிகுதியாயுள்ள சித்திரைத் திங்கள் இறுதியிலும் வைகாசி யிலும் மட்டுங் குளிர்ந்த அம் மலை நாடுகளில் தங்கலாம்; அதுவும் அவர்ளுடம்புக்கு இசையும் நாட்கள் வரையில்தான், சிறிது இசையாவிடினுங் கீழேயுள்ள தம் ஊர்கட்கு வந்து விடல் வேண்டும். மற்று நோயாளிகளோ வேனிற் காலத்திற் குளிர்மிகுந்த மலைநாடுகளிற் சென்று சிலநாட்கள் கூட வைகுதல் ஆகாது.

இனித், தொடர்பாகப் பட்டினி கிடப்பவர்களுஞ் சிலநாட் பட்டினி கிடப்பவர்கட்காக மேலே சொல்லிய முறைகளையே கைக்கொண்டு நடத்தல் வேண்டும். காலை யில் தலைமுழுகுதல், இறைவனை வழிபடுதல், மனமகிழ்ச்சிக் குரிய நூல்களைப் பயிலுதல், இடையிடையே வெந்நீர் நாரத்தம் பழச்சாறு அருந்தல், இயன்றளவு **நடத்தல் உலவல் குனிதல் நிமிர்தல் வளைதல், உறக்கம்** வரும்போதெல்லாம் பகலிற் சிறிதுஉறங்கல், இரவில் நீளத்துயிலல், நாடோறும் மாலையில் நீரேற்றி கொண்டு மலக்குடரைக் கழுவல், இரவிற் கடும்பசி யெடுத்தாலும் அவரவர் உடம்புக்கு இசைந்த பச்சைப் பழங்களையோ அல்லது உலர்ந்த பழங்களையோ சிறிதாக அருந்தல், அருந்தியபிற் சிறிது நேரம் உலவல் முதலான முறைகளைக் கருத்தாக மகிழ்ந்தவுள்ளத்தோடு கடைப் பிடியாய்ச் செய்து வருக; வேண்டுமாயின், ஓராழாக்கு ஆவின்பாலிலே, மூன்று நான்கு நல்ல எலுமிச்சம் பழங்களைப் பிழிந்தெடுத்த சாற்றைக் சேர்த்துக் குலுக்கிக் கண்ணாடிப் புட்டிலிலேனும், மட்பாண்டத்திலேனும், பீங்கானிலேனும் வைத்து விடுக. சிறிது நேரஞ் சென்றபின் இக்கலவையின் தடித்த பகுதி அவ் ஏனத்தில் அடியில் வண்டலாய் படிந்துவிட, மேலே தெளிவான மோர் நிற்கும்; அம்மோரை மட்டும் இறுத்து உச்சிப்பகலில் அதனைப் பருகலாம். இஃது அளவிறந்த நன்மை பயப்பது; பட்டினி கிடத்தலால் உண்டாகும் அடிச்சூட்டை முதன்மையாய்த் தணித்து மலக்குடர் குண்டிக்காய் முதலிய அகவுறுப்பு களையுஞ் செந்நீரையுந் தூய்மைசெய்வது; பித்தம் மிகுதிப் படவொட்டாமல் அதனை ஒத்த நிலையிலும் வைப்பது. ஆனால், இதனை அரையாழக்குமேற் பருகலாகாது. ஏனென் றாற், பட்டினி கிடப்பதன் முதன்மையான நோக்கம் பசித்தீயை மிகுதிப் படுத்தி, அது செந்நீரிற் கலந்த நச்சு நீரை யெல்லாம் உரிஞ்சி எரித்துவிடுமாறு செய்வதும், ஓயாது இயங்குந் தீனிப்பை முதலான அகவுறுப்புகளுக்கு ஓய்வு தருவதுமே யாகும்.ஆதலாற் பட்டினி கிடக்கும் போது மிகுந்தெரியும் பசித் தீயானது அவிந்து போகாதபடி மிக மெல்லிய நீர்த்த வுணவையே மிகச் சிறிதாக உட்கொள்ளல் வேண்டுமென் றறிக. அவ்வாறின்றிப், பசித்தீ அவிந்து விடும்படி நீர்த்த உணவையே சிறிது மிகுத் துண்ணினும் பட்டினி கிடத்தலாற் பெறக்கருதிய

பெரும்பயனைப் பெறுதல் ஏலாது. ஆகவே, அடுத்தடுத்துப் பசித்தீ மிகும்படி யாகவும் அது பட்டினி கிடப்பவர் தாங்கும் அளவைக் கடந்துசெல்லாதபடி யாகவும் நீர்த்த நல்லுணவை அளவறிந்து உட்கொள்க.

இவ்வாறு மலக்குடரையுந் தீனிப்பையையும் மேற் கூறிய முறைவழுவாது துப்புரவு செய்யவே எத்தகைய நோயுந் தானாகவே நீங்கிவிடும். மலக்குடரையுங் குண்டிக் காயையுங் கழுவி விடுதற்கு நீரேற்றி ஒன்றுமே போதுமாயினும், மேற்குடருந் துப்புரவாதற்கு ஒரோவொருகாற் கழிவுமருந்து உட்கொள்ளுதலும் வேண்டப்படுவதாகும். ஒவ்வொருவரும் எளிதில் உட்கொளளுதற்கேற்ற கழிவு மருந்தை இங்கே கூறுதும், இறுக்கமான குடருடையவர்கள் பத்துக் கடுக்காயும் இளக்கமான குடருடையவர்கள் ஆறு அல்லது ஏழு கடுக்காயும் எடுத்து, அவைகளை உடைத்து, உள் உள்ள விதைகளை எறிந்துவிட்டுத் தோலையுஞ் சதையையும் இடித்துத் தூளாக்கி, அத்தூளை உழக்கு நீரில் இட்டு, ஒரு மட்பாண்டத்திற் காய்ச்சி, அரையாழாக்காகச் சுண்டியபின், அச்சாற்றை இறுத்துக் காலையிற் பருகி விடுக. இங்ஙனங் கடுக்காய்ச்சாறு அருந்தி மலக்குடரின் கீழ்மேற் பகுதிகளைத் துப்புரவு செய்தலை ஒரோவொருகாற் செய்தலே போதும். நீரேற்றி கொண்டு மலக்குடரைக் கழுவாதவர்கள் தாம் வேண்டும்போதெல்லாங் கடுக்காய்ச்சாறு அருந்தலாம். இஃதருந்தி இரண்டு மூன்றுமுறை மலங்கழிந்தபின், வாற் கோதுமைமாக் கஞ்சியில் ஆவில்பால் விட்டுக் காய்ச்சி, அதனைக் காலையிற் பத்து அல்லது பத்தரை மணிக்குக் குடித்துப் பின்னர் இரண்டு மணிக்குச் சிறிது பருப்பு மிளகுநீருஞ் சோறுங் கறிவேப்பிலைத் துவையலும் உட்கொள்ளலாம்.

இனி, நமதுடம்பிற் சேரும் சக்கையையும் அழுக்கையும் நச்சுநீரையும் நச்சுக்காற்றையும் வெளிப்படுத்துதற்கு இறை வனால் அமைத்து வைக்கப்பட்ட கழிகால் மடைகள்: **மலக்குடல், சிறுநீர்ப்பை, வியர்வைத்துளை, மூச்சுப்பை** என்னும் நான்குமேயாகும். மலக்குடல் சிறுநீர்ப்பைகளைக் கழுவித் துப்புரவு செய்தல் நீரேற்றியினாலுங் கடுக்காய்ச் சாற்றினாலும் எளிதிலாம் என்பதனை மேலே விளக்கின

மாகலின், ஏனையிரண்டனையும், துப்புரவு செய்யுமாற்றை இங்கே சுருக்கிக் கூறுவாம்: இவற்றின் விரிவை மேலே நீரைப் பற்றியுங் காற்றைப் பற்றியும் எழுதிய பிரிவுகளிற் கண்டு கொள்க.

வியர்வைத்துளைகளின் வழித் தோலின் மேல் அழுக்கும் நச்சுநீரும் விரைந்துவந்து சேர்தற்கு, நாப் பொறுக் கக்கூடிய தூயவெந்நீரைக் கால் அல்லது அரையாழாக்கு விழுக்காடு ஒருமணிநேரத்திற்கு ஒருகாற் பருகிவருக. இவ்வாறு செய்யவே இரத்தத்திலுள்ள அழுக்கு அவ்வளவுந் தோலின்மேல் வியர்வையாக வந்துவிடும். இங்ஙனம் வருந்தோறும் வியர்வையை உடனுக்குடன் ஒரு துண்டினால் துடைத்து விடுதல் கட்டாயமாகச் செயற்பாலது; அவ்வாறு துடையா விட்டால் வியர்த்த நீர் திரும்பச் செந்நீரிற் **சுவறி, வேர்க்குரு, சிரங்கு, சொறி, படை** முதலிய நோய்களை வருவிக்கும். இந் நோய்கள் வரும் வகையாய்ப் பிசகி நடந்து விட்டாலும், மலக்குடரைக் கழுவி, உணவைக் குறைத்து, வெந்நீரை யடுத்தடுத்துப் பருகி, வியர்வையை அது வருந்தோறுந் துடைத்து, ஆடையை நாடோறும் மாற்றிக் காலையில் வெந்நீரில் தலைமுழுகி வருதலே செயற்பாலது. இவற்றோடு, ஆவிபிடித்தலுங், கந்தகநெய் தடவுதலும் ஒருசிலர்க்கு வேண்டப்படும்; ஒருசிலர்க்கு வேண்டப்படா.

அற்றேல், ஆவிபிடிக்கும் முறை யாங்ஙனமெனிற், காட்டுதும்: அரைப்படி அல்லது முக்காற்படி கொள்ளத்தக்க ஒரு மண்சட்டியில் அவ்வளவே நீர் அச் சட்டியின் வாய் ஓரத்திற்குச் சிறிது குறைய நிரப்பி, அதன்பின் ஒரு மண் தட்டால் அதனை மூடி அடுப்பிலேற்றிக் கொதிக்க வைக்க; அந்நீர் நன்றாய்க் கொதித்து ஆவிமூடியைக் கிளப்பிக் கொண்டு குபுகுபுவென்று மேலே எழுகையில், அதனை இறக்கிக், காற்று அடைப்பான ஓர் அறையில் வைத்து, அச்சட்டியின் உயரத்திற்குமேற் சிறிது உயரமான ஒருசிறு மணையை அதன் அண்டையில் இட்டு, அதன்மேல் அமர்ந்து கொள்க; அதன்பின் அச்சட்டிமேல் உள்ள தட்டைக் கால்வாசி திறந்து, திறந்த அவ்வழியே வரும் நீராவியில், ஆண்குறியைப் பிதுக்கித் திருப்பித் திருப்பிக் காட்டுக; இங்ஙனம் ஆவிபிடிக்குங்கால் அச்சட்டியை உள்ளிட்டு உடம்புமுழுதும் நன்றாகப் போர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்; உடம்புந் தலையும்

நன்றாக வியர்க்கும், அப்போது ஒரு கைத்துண்டுகொண்டு வியர்வையைத் துடைத்துக் கொண்டே யிருத்தல் வேண்டும்; இவ்வாறு அச்சட்டியிலிருந்துவரும் நீராவி அடங்கும்மட்டும் ஆவி பிடித்த பின், எழுந்து குளிர்ந்த நீர்கொண்டு அடிவயிறு ஆண்குறி தொடை முதலிய உறுப்புகளை மட்டுங் கழுவிவிட்டு, வயிற்றிலுள்ள சிறுநீரையுங் கழித்துவிடுக; அதன்பின் தோய்த்துலர்ந்த ஆடையுடுத்துக்கொண்டு, பிறிதொரு சட்டியில் வளர்த்த தீயின் முன்னேயிருந்து சிறிது வியர்க்கும் வரையில் அம்மையப்பரை வழிபடுக. ஆவி பிடித்தபின் காற்று மேலேபடும்படி வெளியே செல்லுதலும் ஆகாது, கடுமுயற்சி செய்தலும் ஆகாது. ஆதலால், ஆவி பிடித்தற்கு மிக இசைந்த நேரம் மாலைக்காலமேயாகும். கற்றல், எழுதல், பொருள்தேடல் முதலான எல்லா முயற்சி களையுஞ் செய்தபின், மாலை எட்டுமணிக்கு நீரேற்றி கொண்டு மலக்குடரைக் கழுவி, மேற்சொல்லியவாறு ஆவிபிடித்து, இறைவனை வழிபட்டு எளிதிலே செரிக்கத் தக்க மெல்லிய உணவு கொண்டு, சிறிது உலவியபின் துயில் கொள்க. ஊன் உணவு கொள்வாருங், காப்பி தேயிலை கோக்கோநீர் பருகுவாரும் ஆவி பிடித்தல் ஆகாது. யாம் கூறும் முறைகளைக் கைக்கொள்வோர், ஊனுணவையுங் காப்பி முதலிய நச்சுநீர்களையும் அறவே ஒழித்துவிடல் வேண்டும். ஆண்மக்களைப் போலவே பெண்மக்களுந் தமது குறியை ஆவியிற்காட்டி உடம்பை வியர்க்க வைக்கலாம்; ஆனால் அவர்கள் **பூப்பு உண்டான நாள்முதல் அது முற்றும் நிற்கும் நாள்வரையில் ஆவிபிடித்தல் ஆகாது;** மேலும் அவர்கள் ஆவிபிடித்தபின் ஒரு துண்டைத் தண்ணீரில் தோய்த்து முக்கால்வாசி பிழிந்துவிட்டு அடி வயிற்றையும் இடுப்பையுஞ் சூழக்கட்டி, அதன் மேற்புடவை உடுத்துக் கொள்ளல் வேண்டும்; இவ்வாறு பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் கட்டியிருந்தபின் அவ் ஈரத் துணியை அவிழ்த்து விடலாம்; கட்டிய ஐந்து நிமிடத்திலெல்லாம் உடம்பின் சூடு அவ் ஈரத் துணியில் ஏறிவிடுதலின், அதனை இடையிடையே அவிழ்த்துத் திருப்பிக் கட்டுதல் நன்று. இங்ஙனம் ஆவி பிடித்தலை மகளிர் கருத்தாகவும் விழிப்பாகவுஞ் செய்தல் வேண்டும்; ஆவி பிடித்து வருகையில் தீட்டுப்படுவதாகத் தெரிந்தால் உடனே அவர்கள் ஆவி பிடித்தலை நிறுத்திவிட்டுக், கொப்பூழிலிருந்து அடி

வயிற்றையும் இடுப்பையுஞ் சூழ ஈரத் துணியை அடுத்தடுத்துக் கட்டிவரல் வேண்டும்; அங்ஙனஞ் செய்தால் இடைக் காலத்தில் வந்த தீட்டு நின்றுவிடும்.

அதனொடு, காய்ச்சி ஆறிய நல்ல தண்ணீரைத் தெளிவாக வடித்து வானத்தின் நீலநிறம் உடைய ஒரு கண்ணாடிப் புட்டிலை உள்ளும் புறம்பும் நன்றாக அழுக்கறக் கழுவித் துணியாற் றுடைத்துப் பளப்பளப்பாக்கி அதனுள் அந்நீரை நிரப்பிப், பிறகு அப்புட்டிலை நான்கு மணி நேரத்திற்குக் குறையாமல் வெயிலில் வைத்தெடுத்து,அதன்பின் அதிலுள்ள நீலநீரிற் கால் ஆழாக்கு விழுக்காடு அரைமணி அல்லது ஒருமணி நேரத்திற்கு ஒருகாற் பருகிவந்தால் தீட்டு நின்றுவிடும். பெரும்பாடு முதலான கொடிய பிணிகளாற் பிடியுண்ட மாதர்கள் ஆவிபிடித்தல் ஆகாது; அவர்கள் மலக்குடரை நீரேற்றிக்கொண்டு கழுவி அடிவயிற்றில் மேற் சொல்லியவாறு ஈரத்துணிகட்டி நீலநீரும் அருந்தி வருவார்களாயின் அந்நோய் விலகும். ஆனாலும், நோய் நீங்கும் வரையிற் கொழுமையான சைவ உணவுகளையும் அவர்கள் உட்கொள்ளலாகாது. குளிர்ச்சியான சவ்வரிசிக் கஞ்சியே அவர்கட் கேற்ற நல்லுணவாகும்; பழங்கள் சாப்பிட வசதியுள்ளவர்கள் **நாரத்தை, அத்தி, சீமை இலந்தை, குடகுச் கிச்சலி, கொடி முந்திரி** முதலான பழங்களை உணவாகக் கொள்ளலாம். அது நிற்க.

மேலே, ஆவிபிடிக்கும் வகையைச் சொல்லுகையில் ஆடவரும் மாதருந் தத்தங் குறிகளைமட்டுமே ஆவியிற் காட்டி உடம்பை வியர்க்க வைக்க வேண்டுமென்ற தென்னை? உடம்பு முழுமையும் ஆவிபிடித்தலன்றோ மற்றையாசிரியர்களாற் சொல்லப்பட்டதெனின்; வெப்பம் மிகுந்த இவ் விந்தியநாட்டில் உள்ளவர்கள் முழுவுடம்பும் ஆவியிற் காட்டி வியர்க்க வைத்தால், அவர்கள் வலிவு குன்றுவர்களென்பதை யாம் பல்லாண்டுகள் பழகிப் பார்த்துத் தெரிந்திருக்கின்றேம். முழுவுடம்பும் ஆவி பிடிப்பவர்கட்கு உடம்பு மெலிந்து போகின்றது! வெப்பு நோய் வருகின்றது; தொடர்ந்து இதனைச் செய்பவர்கட்கு எலும்புருக்கி வயிற்றுளைச்சல் முதலான நோய்களும் வருகின்றன. ஆதலால் அதனைவிடுத்து, வேறு எந்த எளிய முறையில் ஆவிபிடித்து உடம்பு முழுதும் வியர்க்க

வைக்கலாம் என்று அல்லும் பகலும் உழன்று பல்லாண்டுகள் பற்பல முறைகளைச் செய்துபார்த்துக், கடைசியாகக் குறிகளுக்கு ஆவிபிடித்தலே மிகச்சிறந்த முறையாதல் கண்டு தெளிந்தேம். ஏனென்றால், நமதுடம்பின் நடுமையமான இடம் ஆண்குறி பெண்குறிகளேயாம்; இன்பத்திற்கும், உயிர்த் தோற்றத்திற்கும், உலகிற் பலமுகமாய் விரிந்து தோன்றும் அலகிலாத் துன்பங்களுக்கும் இவையே பிறப்பிடமாவன; உடம்பினை ஆக்குவனவும் இவையே; அதனை அழிப்பனவும் இவையே; நமதுடம்பின் உச்சி யிலிருந்து உள்ளங்கால் வரையிற் பரந்து செல்லும் எல்லா நரம்புகளுக்கும் முதலும் முடிவும் இவையே; நமதுடம் பெங்கும் ஓடும் இரத்தத்தில் வடித்த சாறாகிய வித்துநீர் தங்குவதும் வெளிப்படுவதும் இக்குறிகளிலே யன்றோ? ஆதலால், ஆண்குறி பெண்குறிகளை மேற்சொல்லியவாறு ஆவியிற் காட்டி வியர்க்க வைத்தால் உடம்பெங்கும் வியர்த்துத் துப்புரவாகும்.

மேலும், எவ்வகைத் தொற்றுநோயும் ஆண்குறி பெண் குறிகளிலே எளிதில் ஒட்டிக்கொள்வதுபோல, உடம்பின் மற்றையுறுப்புகளிலே ஒட்டமாட்டாது; அங்ஙனம் குறிகளில் ஒட்டிய நோயோ எளிதில் நீங்கவும் மாட்டாது. குறிகளிற் பற்றியநோய்களைத் தீர்த்துக் கொள்ளுதற்குத் தம் வாழ்நாள் முழுதும் மருந்துண்டும் அது தீரப்பெறாமல் இறந்துபோன பலரையாம் பார்த்திருக்கின்றோம். அத்துணைக் கொடிய தீராக் குறிநோய்கள் உடையாரும் யாம் மேலே காட்டி யிருக்கும் முறை வழுவாது குறிகளுக்கு ஆவிபிடித்து வருகு வராயின், அந்நோய்கள் முற்றுமே நீங்கப்பெற்று நலம் பெறுதல் திண்ணம். குறிநோய்கள் உடையோர் கணவனும் மனைவியு மாய் ஒருங்கு உறைபவராயின், அவருள் ஒருவர் மட்டும் ஆவிபிடித்தால் அந்நோய் நீங்கா. ஒருவரிலிருந்து ஒருவர்க்கு இரத்தக் கலப்புண்டாதலால், ஒருவர் ஆவிபிடித்து நோய் தீர்த்துக் கொண்டாலும், மறித்தும் அவர் மற்றவரை மருவும்போது அவரிலிருந்து அந்நோய் மறித்தும் அவரைப் பற்றிக்கொள்ளு மென்றுணர்க. ஆகவே, குறிநோயுள்ளவர் களும் ஏனைத் தொற்றுநோயுள்ளவர்களுமான கணவன் மனைவிமார் நோய்தீர்க்கும் முறை எது செய்தாலும் இருவரு மாக அது செய்தலே நலந்தருவதாகும். அதுவேயுமன்றித், தமக்குள்ள அந்நோய் அவரோடு அற்றொழியும் மட்டும் அவர்

மருவுதலும் ஆகாது. ஆவி பிடித்துவருங் காலங் களிலும் மருந்துண்டுவருங் காலங்களிலும் அறவே புணர்ச்சி தவிர்த்தல்வேண்டும்; இல்லையேல், ஆவிபிடித்தலும் மருந் துண்டலுஞ் சிறிதும் நலம்பயவாவென்பது கடைப்பிடிக்க. குறிகளுக்கு ஆவி பிடிக்குங்கால் அடிவயிற்றின் கீழிருந்து காலின் அடிவரை யிற்றான் அவ் ஆவி படலாமேயொழிய அடிவயிற்றுக்குமேலே உடம்பில் எங்கும் அவ் ஆவி படலாகாது. ஆதலால், இடுப்பிற் கட்டிய ஆடையை அவிழ்த்து விடாமல், அவ் ஆடைக் குள்ளேயே அடிவயிற்றின் கீழுள்ள எல்லா உறுப்புகளும் நீராவிக்குள் மூழ்குமாறு அமர்ந்து கொண்டு, உடம்பின் மேற்பகுதியையும் நன்றாகப் போர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

இன்றுங், குறிநோய் உடையவர்கட்குச் சிறுநீர்ப்பை யாகிய குண்டிக்காயினும் மண்ணீரல் கல்லீரல்களிலும் நோய் உண்டாகும். அதனால் இடுப்பின் பிற்புறம் விலாப் புறங்களிற் குத்துவலி யுண்டாதலைப் பலர்மாட்டுக் கண்டிருக்கின்றேம். அதனுடன் தொடையிலிருந்து உள்ளங்கால் வரையில் உளைச்சலும் வருவதுண்டு. இங்ஙனம் நோவெடுக்குங் இடங்களுக்கெல்லாந் தனித்தனியே ஆவி பிடித்தால் அந்நோய் நீங்கும். பின்புறத்துங் கீழ் உறுப்புகளிலும் ஆவிபிடிக்கத் தெரியாதவர்கள் தம் உடம்பு தாங்கக்கூடிய அளவு சூடுள்ள வெந்நீரை அவ்விடங்களின் மேல் தொடர் பாக ஊற்றினால் அந்நோய் நீங்கும். வெந்நீர் விட்டவுடன் அவ்விடங்களை நீரில்லாமல் துடைத்து விட்டு[6] **வலிதீர்மருந்து** (Pain Balm) கொண்டு தேய்த்துத் துணியினால் மூடிவைக்க வேண்டும். இவ்வாறு மற்ற இடங்களுக்கு வெந்நீர் விட்டு வலிநீக்கினாலுங், குறிகளுக்கு மட்டும் ஆவி பிடித்தலே இன்றியமையாது செயற்பாலது.

இங்ஙனமே, **தலைவலி, பல்வலி, பல்லீரல்வலி, பிடரி வலி, முதுகுவலி, நெஞ்சுவலி** கொண்டவர்களும், முறை யாகக் குறிகளுக்கு ஆவிபிடித்துவரின் அவை நீங்கும். குறிகளுக்கு ஆவி பிடித்தும் அவை விரைவில் நீங்காவாயின், வலியுள்ள அவ்விடங்களுக்கும் ஆவிபிடித்து வலிதீர் மருந்தை அவற்றில் தேய்த்து விடுக. இவை செய்தும் அவ்வலி தீராவிடிற், சாம்பலைப் பொறுக்கக்கூடிய சூட்டில் வறுத்து வறுத்து

வலியுள்ள இடங்களுக்கு வேண்டும் அளவு ஒற்றடங் கொடுத்து, அதன்பின் அவற்றின்மேல் வலிதீர் மருந்தைத் தேய்த்துப் போர்த்துக் கொள்ளுதல் வேண்டும். எந்த நோய் வந்தாலும் முதலில் நீரேற்றி கொண்டு மலக்குடரைத் துப்புரவு செய்தலை மறவற்க; அதன் பிறகுதான் ஆவிபிடித்தல் பட்டினி கிடத்தல் முதலான மற்றை முறை களைச் செய்தல் வேண்டும். பசியெடுக்கும் வரையில் உணவு கொள்ளலாகாது; **பசியெடுத்த பின்னும் நோய்தீரும் வரையிற் கோதுமை வாற்கோதுமைக் கஞ்சியில் ஆவின்பால் சேர்த்துப் பருகுதலே செயற்பால தென்பதும் நினைவிற் பதித்துக் கொள்க**. இவ்வளவும், நோய்களுக்கு ஆவி பிடிக்கும் முறை நன்கு விளக்கப்பட்டது. இது கொண்டு, வியர்வைத் துளைகளின் வாயிலாக வெளிப்படுத்துதற்குரிய நஞ்சையும் அவற்றின் வழியே உடம்பினுட் செல்லும் நஞ்சையும் நீக்கி உடம்பைப் பாதுகாக்கும் எளிய நன்முறை நன்குணர்ந்து கொள்ளப்படு மென்க.

இனி, உடம்பினுட் சேரும் நச்சுக்காற்றை வெளிவிட்டு, வெளியேயுள்ள தூயகாற்றை உள்ளிழுத்துச் செந்நீரைத் தூயதாக்கும் மூச்சுப்பையானது, இயங்கவேண்டும். அளவு நன்கு இயங்கித் தூயகாற்றை மிகதியாக இழுத்துச் செந்நீரிற் கலப்பித்தாலல்லது, மக்களுள் எவரும் நீண்டநாள் உயிர் வாழ்தல் இயலாது தூயகாற்றை மிகுதியாக உள்ளிழுத்தடக்கி, நினைவை ஒருமுகப் படுத்தி, எல்லாம் வல்ல இறைவன் றிருவுருவில் நிறுத்தினார்க்கே பிணி மூப்புச் சாக்காடுகளைத் தொலைத்தல் கூடும். இவ்வுண்மையை அருந்தவத் தெய்வ ஆசிரியரான **திருமூலநாயனார்**,

"ஏற்றி யிறக்கி இருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை;
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே"

என்றும்,

"வளியினை வாங்கி வயத்தில் அடக்கிற்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்,

தெளியக் குருவின் றிருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியனு மாமே"

என்றும் எடுத்து அறிவுறுத்தியிருத்தல் காண்க. முன்னைக் காலங்களிலிருந்த அறிவுடை மக்களிற் பலருங் காற்றைப் பிடிக்கும் முறையில் இடையறாது பழகி வந்தவர்களாதலால், அவர்கள் நீண்டநாள் உயிர்வாழ்ந்து அறிவிலும் அன்பிலும் மேம்பட்டு இறைவன் றிருவருட் பேற்றை யெய்தினர். மற்று, இக் காலத்துள்ளவர்களோ அவ்வுயர்ந்த பழக்கத்தை அறவே தொலைத்து விட்டுப், பொருளற்ற சடங்குகள் கிரியைகள் வழிபாடுகளில் தம் பொருளையும் முயற்சியையுங் காலத் தையும் வீணே செலவழித்து மார்படைப்பு இருமல் எலும் புருக்கி முதலான கொடிய நோய்களாற் பிடியுண்டு சடுதியில் இறந்தொழிகின்றார்கள். மற்று, **மூச்சுப் பழக்கம்** (பிராணா யாம அப்பியாசம்) உடையவர்கள்மாட்டோ இத்தகைய நோய்கள் சிறிதுந் தலைக் காட்ட மாட்டா. இன்னும், இம்மூச்சுப் பழக்கத்தின் சிறப்பெல்லாம் மேலே இரண்டாம் பிரிவிலும் மூன்றாம் பிரிவிலும் விரித்து விளக்கப் பட்டிருக்கின்றன; அவை தம்மை அங்கே கண்டு கொள்க.

இனி, இங்கே மூச்சுப் பழக்கத்தினைப் பழகுமாறு மட்டும் சிறிது கூறுகின்றோம். மூச்சை யடக்கும் பிராணா யாமத்தின் இயல்பு எமது **சைவ சித்தாந்த ஞானபோதத்தின் கண் இனிது விளக்கப்பட்டிருத்தலால் அதனை ஈண்டு விரிக்கின்றிலம்.** மூச்சுப் பழக்கத்தினைப் பற்றியது எதுவும் நேரே ஞான குரவன்பாற் கேட்டுப் பழகுதலே தக்கதாகும். ஏனென்றால், ஒவ்வொரு வருடம்பின் றன்மைக் கேற்ப அப் பழக்கத்தினைப் பழகும் முறையிற் சிற்சில மாறுதல்கள் செய்ய வேண்டி வருகின்றன. இவையெல்லாம் இப் பழக்கத்திற் றேர்ந்த நுண்ணறிவுடைய ஆசிரியனுதவி யின்றி, முதலிற் பழகுவோர் தாமே தெரிந்து வழுவின்றிச் செய்ய மாட்டுவாரல்லர். புறத்தேயுள்ள தொழின் முறைகளையுங் கல்வி முறைகளையும் நன்கறிந்து அவற்றில் தேர்ச்சி பெறுதற்கு, ஆசிரியன் அவற்றைக் கற்பிக்கும் உதவி பல்லாண்டுகள் இன்றியமையாது வேண்டியிருக்க நமது கட்புலனுக்கு எட்டாமல் நமதுடம்பின் அதகத்தே நடை பெறற் பாலதாகிய நுண்ணிய மூச்சுப் பழக்கத்தைச் செவ்வனே தெரிந்து பழகுதற்கு

ஞானாசிரியன் உதவி சில நாட்களாயினும் வேண்டா திருக்கலாமோ? உடம்பின் அகத்தேயுள்ள உறுப்புகளின் வன்மை மென்மை தெரிந்து பழகாவிடின், உடம்பின் நலம் பேணுதற்கு ஏதுவாகிய மூச்சுப் பழக்கமே உடம்பிற்குத் தீது பயப்பதாயும் முடியும். **பால் கன்னல் அடிசில்** முதலான உணவுப் பண்டங்கள் உடம்பினை வளர்த்தற்கு இன்யிமையாத வாயினுங் **காலமும் இடமும் அளவும்** அறியாமல் உட்கொள்ளப் படுமாயின் அவை உடம் பினைப் பாழாக்குதலுங் காண்டுமல்லமோ? இதுபோலவே நுண்ணிய மூச்சுப் பழக்கமுமாமென்பது உணரற்பாற்று. ஆகவே, யாம் ஈண்டுக் கூறும் மூச்சுப் பழக்கந் தீது பயவாததொன்றே யாயினும், இதனையும் நேரிற் றெரிந்த ஆசிரியனோடு சில நாட்களாயினுங் கூடவேயிருந்து பழகுதலே வாய்வதென்று கடைப்பிடிக்க.

காலையிற் பன்னிரண்டுமணி வரையிற் கிழக்கு நோக்கி யும், அதன்பின் வடக்கு நோக்கியுந் தூய காற்றோட்டமுள்ள ஒரு தனியறையில் ஒரு பலகையின் மேல் அமர்ந்து கொள்க. இவ்வறை மிகவுந் துப்புரவாக இருத்தல் வேண்டும், இதன் கண் ஒரு விளக்குந் தீ வளர்க்குஞ் சிறிய ஓர் இருப்புச் சட்டியும், அத் தீயில் இட்டுப் புகைக்கும் **அகில் சந்தனஞ் சாம்பிராணி** முதலியனவுந் திருநீறும், பூவும், எல்லாம் வல்ல தனித் தலைமைக் கடவுளின் திருவுருவமுந் தேவாரம் திருவாசகம் போன்ற தெய்வ நூல்களுந், தம் ஞானாசிரியன் திருவுருவப் படமும், பண்டைத் தெய்வ ஆசிரியரின் திருவுருவப் படமும் அன்றி வேறு எத்தகைய பொருளும் இருத்தல் ஆகாது. சிற்றுயிர்களாகிய நம்போற் பிறந்து பலவாற்றான் அல்லலுழந்து இறந்துபட்டவர்களின் உருவங் களைக் கடவுளின் உருவங்களாகப் பிழைபட நினைந்து அவை தம்மை அவ்வறையுள் வைத்தலும் ஆகாது, வைத்து வழிபடுதலும் ஆகாது. ஏனென்றால் நம்போற் பிறப்பு இறப்புத் துன்பங்களில் உழன்றவர்களைத் தெய்வங்களாக நினைந்து வணங்குவார்க்கு அத் துன்பங்கள் எட்டுணையும் அகலா; அவர்களை அங்ஙனம் நினைந்து மூச்சுப் பழக்கத்தைச் செய்வாக்கு அதனால் ஏதொரு நலனும் வாராது. இதனை நன்கு வலியுறுத்துதற்கே தெய்வத் **திருவள்ளுவர்**,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்
இறைவன் அடிசேரா தார்" (குறள் 10)

என்று அருளிச் செய்தார். ஆதலால், எல்லாம் வல்லஅருட் பெருங் கடவுளின் திருவுருவ அடையாளம் மட்டுமே அவ்வறையில் வைத்து வணங்கற்பாலது. இதனை கடைப் பிடியாய்ச் செய்வார்க்கே மூச்சுப் பழக்கத்தால் அளவிறந்த நலங்கள் உண்டாகும்.

அற்றேல் முழுமுதற் கடவுளின் அடையாளமாக வைத்து வழிபடுதற்கு ஏற்ற திருவுருவம் யாதெனிற், கூறுதும். இவ்வுலகமும் இவ்வுலகத்துள்ள எல்லா உயிர்களும் அசைவினாலேயே நடைபெறுகின்றன. இவ்வசைவினை உணர்ந்து நோக்குந் தோறும், இதனை யுண்டாக்கும் இறைவனும் ஓவாது அசைபவன் அல்லது ஆடுபவன் என்னும் உண்மை புலனா கின்றது. இறைவனது ஆட்டம் நிற்குமாயின் எல்லாம் அசைவற்று நின்றுவிடும். ஆகவே, பிறப்பு வளர்ப்பு என்பன அசையும் நிலைகளே யாதலும் இறப்பு என்பது அசைவற்ற நிலையே யாதலும் உணரப்படும். நீண்டகாலம் இனிது உயர்வாழ வேண்டுமென்னும் வேட்கை யுடையவர்கள் இறைவனை அவனெப்போதும் ஆடிக்கொண்டிருக்கும் நிலையில் வைத்து வழிபடுதலே செயற்பாலது. இதற்கு **அம்பலக் கூத்தன்** திருவுருவமே சாலச் சிறந்தது. இறைவனை அமர்ந்திருக்கும் நிலையில் வைத்து வழிபடுதலும், படுத்துக் கிடக்கும் நிலையில் வைத்து வழிபடுதலுஞ் சிறந்தனவாகா. என்றாலும், ஆட்டத் தினுள்ள அழகிய மயில்மேல் இறை வனை அமர்வித்து வழிபடுதல் இரண்டாவதான சிறப்புடையது. என்னை? முதலோசையாகிய ஓங்காரம் தன்கண் ஏனை எழுத்தோசை களின் வேறுபாடு காட்டாது மிக நுண்ணிய பிழம்புவடிவாய் நின்ற எழுத்து **(சூக்கும வாக்கு)** நிலை கடந்து, நுண்ணிய எழுத்தோசை வேற்றுமை காட்டும் **(பைசந்திவாக்கு)** நிலைக்கு எழும்பி இயங்குங்கால் மயில்முட்டையின் நீர் போல் ஐந்து நிறங்கள் புலங்கொளக் காட்டி விளங்குமென்று சிவஞான சித்தியாரின் முதற்சூத்திரத்து 22ஆஞ் செய்யுளாகிய,

"வேற்றுமைப் பட்டவன்னம் வெவ்வேறு விபாக மாகித்
தோற்றுதல் அடைவொ டுக்கிச் சொயம்பிர காச மாகிச்

சாற்றிடு மயிலின் அண்டந் தரித்திடுஞ் சலமே போன்றங்
காற்றவே யுடைய தாகிப் பைசந்தி யமர்ந்து நிற்கும்''

என்பது நன்கெடுத்துக் கூறுதலால், அகத்தே நடைபெறும் ஓங்கார ஐந்நிற ஓசையில் அமர்ந்திரா நின்ற இறைவன்றன் உண்மையியக்க நிலைக்குப் புறத்தே முழுதும் ஒப்பதாயுள்ள மயிலின்மேல் விளங்கும் முதல்வன்றன் றிருவுருவினை வழிபடுதலே பெரிதும் நலம் பயப்பதாமென் றுணர்ந்து கொள்க. மயிலைத் தவிரப் பருந்து எருவை அன்னம் முதலான புட்களின்மேல் இறைவனை அமர்வித்து வழிபடுதல் இறைவன்றன் உண்மை யியக்க நிலையினைக் குறியாமையின், அஃது உமிக்குற்றிக் கைசலித்தலோடு ஒப்ப வெறும் பயனில் முயற்சியேயாம். இனி, ஓங்கார இயக்கமானது, பாம்பு வட்டமிட்டாற்போலத், தூயமாயை வெளியிற் சுழலுந் தன்மையதாகலின், அதற்கு அறிகுறியான பாம்பின்மேல் இறைவனை எழுந்தருள வைத்து வழிபடுதல் ஏற்புடையதே யாகும். இங்ஙனமே, ஓங்காரவடிவினதாகிய யானைமுகத்தில் வைத்து இறைவனை வழிபடுதலும் எவர்க்கும எளிதாகவே காணப்படுகின்றது. இவ்வாறாக அவரவர் தாந்தாம் விரும்பியதோர் ஓங்காரத் திருவுருவில் வைத்து வழிபடும் முறைகள் பலவும் ஏற்றுக் கோடற் பாலனவேயாயினும், ஓவாதியங்கும் இறைவன்றன் அருளியக்கத்தினை நினைவு கூர்ந்து வழிபாடு செய்தற்கு அம்பலக் கூத்தன் அருளுருவ அடையாளம்போற் சிறந்ததாவது பிறிதேதுமே இலதாதலைப் பகுத்தாராய்ந் தறிந்து கொள்க. எனவே, இம்மை மறுமைக்குரிய எத்தகைய நலங்களைப் பெற வேண்டித் தவம்புரிந்தாலும், அம்பலக் கூத்தன் றிருவுரு வினை நிறுத்தி அதனை உள்ளமுருகி வழிபடுதலே அந்நலங் களைப் பெறுதற்கு உண்மை வழியா மென்று கடைப்பிடிக்க.

இனி மேற்சொல்லியவாறு அமைந்த அறையினுள் இருக்கையில் அமர்ந்தவுடன், எதிரே இருப்புச் சட்டியை வைத்துத் தீவளர்த்து, அத் தீயின்கண் அகில் முதலான மணப் பண்டங்களையிட்டு, அத்தீயினை இறைவன் திருவுருவாக நினைந்து வணங்குக. அதன்பின் வலதுகாலை இடது தொடையின்மேலேற்றியபடியாய் இருந்து, உடம்பினுள்ளே அடிவயிற்றின்கீழ்க் கருவாய் எருவாய்களுக்கு இடையே யுள்ள

முக்கோண சக்கரத்தினையும் அதன்கண் எரியுங் குண்டலித் தீயின் ஒளியையுந் தெளிவாக நினைவிற் கொண்டு வருக. புறப்பொருள் எதன்கண்ணும் நினைவு ஓடாமல் அதனைத் தடுத்து அடக்கி, அகத்தே இக் குண்டலியின் ஒளியை நோக்கி வணங்குதலில் நினைவை எவ்வளவு நேரம் உறைத்து நிற்கச் செய்தல் கூடுமோ அவ்வளவுஞ் செய்க. இக் குண்டலி யொளியில் எவ்வளவுக்கு ஒருவரது கருத்து உறைந்து நிற்குமோ, அவ்வளவுக்கு அவர்தம் உளமும் உயிருந் தூயவாகி, அவரது உடம்பும் பொன்நிறமாய் மிளிரும். அவர் எண்ணும் எந்த நல்லெண்ணமுந் திண்ணமாய் நிறைவேறும். அவர் இருக்கும் இடத்திற் கூற்றுவன் அணுகான்.

இங்ஙனம் குண்டலி யொளியை நினைந்தபின், வலது கைப் பெருவிரலால் வலது மூக்கினை அடைத்துக் கொண்டு, உடம்பின் அகத்தேயுள்ள நச்சுக்காற்றை இடது மூக்கின் வழியாய்ப் புறத்தே மெல்லெனக் கழித்து விடுக. கழித்தபின், வலதுமூக்கை அடைத்த படியாகவேயிருந்து இடது மூக்கின் வாயிலாகப் புறத்தேயுள்ள தூயகாற்றை மெல்லென இழுத்து அகத்தே நிறைத்து, நிறைத்தவுடனே, இடது மூக்கை மோதிர விரலால் அடைத்துக் கொண்டு, வலது மூக்கைத் திறந்து அதன்வழியே அகத்து நிறைத்த காற்றை மெல்லெனப் புறத்தே கழிக்க. அதன்பின், இடது மூக்கையடைத்த படியாக வேயிருந்து, வலது மூக்கின் வாயிலாகப் புறத்துள்ள தூய காற்றை உள்ளிழுத்து நிறைத்ததும், அதனை யடைத்துக் கொண்டு திரும்பவும் இடது மூக்கைக் திறந்து உள்நிறைத்த காற்றை வெளியே விடுக. இங்ஙனமாக இடது மூக்கிற் றுவங்கி வலது மூக்கிற்குப் போய்த், திரும்பவும் அதன்கணிருந்து இடதுமூக்கில் வந்து முடிவது ஒரு முறையாகும்; இவ்வாறு மும்முறை செய்க. நாளேற நாளேற ஐந்து ஏழு பத்து முறையாக இப் பழக்கத்தைப் பெருக்குதல் நன்று. இது செய்தபின், மறுபடியுங் குண்டலி யொளியை நினைந்து இறைவனை வணங்கித் திருநீறிட்டு எழுந்து, உணவு கொண்டு வேறு முயற்சிகளிற் செல்க. இப் பயிற்சியினைச் செய்யுங்கால் முதலிலும் ஈற்றிலும் தனக்கு ஆகவேண்டும் இம்மை மறுமை நலங்களைப் பற்றி உறுத்து நினைந்துவரின், அவை கைகூடுதல் திண்ணம்.

இம் மூச்சுப் பழக்கத்தில், மூச்சை உள்நிறுத்தும் பிராணா யாமத்தைப் பற்றி ஏதுங் கூறாதுவிட்டது, அதனைக் குருமுகமாக நன்கறிந்தே செய்தல் வேண்டுமென்றற்கு ஆனாலும், அதன் முறைகளைத் தெரிய வேண்டுவார் எமது **சைவசித்தாந்த ஞான போதத்தின் கண்** அவை தம்மைக் கண்டு கொள்க. மூச்சுப்பழக்கத்திலும், மூச்சையடக்கும் பழக்கத்திலும் பயன்படுத்தற்பாலதாகிய ஐந்தெழுத்து மந்திரமும், அதனை உருவேற்றும் முகத்தால் முக்கோண சக்கரத்திலுள்ள குண்டலியை விழிப்பித்து, அதனைச் சுழிமுனை நாடியினூடே மேலெழுப்பி, அதனை உச்சியிலுள்ள மதிமண்டலத்தின்கட் பொருந்தச் செய்திருக்குஞ் சமாதி நிலையும் ஈண்டு உரைத்திலம்; என்னை? அவ்விழுமிய மறைபொருட்டிறங் களெல்லாம் ஞானாசிரி யனை அடுத்தே அறியற்பாலனவாகலி னென்பது.

என்றிதுகாறும் **மலக்குடல், சிறுநீர்ப்பை, வியர்வைத் துளை, மூச்சுப்பை** என்னும் நான்கு கழிகால்களின் வாயிலாக உடம்பைத் தூய்மைசெய்யும் முறைகளுந், தீனிப்பையின் இயக்கத்தைச் செவ்வனே நடைபெறச் செய்தற்பொருட்டுப் பட்டினி கிடக்கும் முறைகளும், இவை தம்மால் நோய் அணுகாமலும் நோய் அணுகினும் அஃதுடம்பில் வேர்க் கொள்ளாமலும் உடலோம்பும் வகைகளும் விரித்து விளக்கப் பட்டன. இனி, மேற்கூறிய முறைகளிற் சொல்லப்படாத வேறுசில நோய்கள் வந்தால் அவற்றைத் தீர்க்கும் வகைகாட்டி அவ்வளவில் இவ் இயலை முடிப்பாம்.

யாமெடுத்துக்காட்டும் முறைகளைத் தழுவி, அவற்றைக் கருத்தாய்ச் செய்வார்க்கு எத்தகைய மருந்தும் உட்கொளல் வேண்டப்படாது. ஆனால், எம்முடைய முறைகளை முழுமையுங் கைப்பற்ற மாட்டாமல் அவற்றுள் இரண் டொன்று மட்டுங் கைப்பற்றியொழுகுவார்க்கு, இடை யிடையே மருந்துண்ண வேண்டுவதும் இன்றியமை யாததா யிருக்கும். நோய்களின் உண்மைத்தன்மை தெரிவதும், நோய் கொண்டாரின் வருவாய்நிலை யுணர்வதும், அவர்தம் உடம்பு களின் வன்மை மென்மைக் கேற்ற மருந்தூட்டும் வகை யறிவதும், மருந்துகளை முறை வழுவாமற் செய்து முடிப் பதும் பிறவும் எல்லாம் எல்லா மருத்துவர்க்கும் எளிதில் வாயா. இவை

யெல்லாம் வல்ல மருத்துவர் கிடைப்பதும் வர வர அரிதாய் விட்டது. **மருத்துவம் நன்கறியாதவர்க ளெல்லாம் பொருளீட்டும் பேரவாவால் உந்தப்பட்டுப் போலி மருந்துகளைப் போலியாகச் செய்து வைத்துக் கொண்டு, அவை தம்மை ஆரவாரமான பொய் விளம்பரங்களாற் பொதுமக்களை ஏமாற்றி விற்று, அப்போலி மருந்துகளால் முன் இல்லாத பல நோய்களையும் வருவித்துப் பல்லாயிரக் கணக்கான மக்களை உயிர்மாளச் செய்து வருகின்றனர்.** ஆதலால், மருத்துவர் களையும் அவர் தரும் மருந்துகளையும் நீண்டகாலப் பழக்கத்தால் ஆராய்ந்து பார்த்தவர்களைக் கொண்டு தெரிந்த பின்னரே அவர்பால் மருந்துவாங்கி யுட்கொளல் வேண்டும். யாம் இருபத்தைந்து ஆண்டுகளாக ஆராய்ந்து பார்த்த மட்டிற், **காளி கட்டத்திற்** (கற்கத்தாவிற்) புகழோங்கி விளங்கும் **'கவிராஜ நாகேந்திர நாத் சென்'** என்பவர் பேராராய்ச்சியும் பேருழைப்பும் பெருந்தொகைப் பொருட் செலவுஞ் செய்து ஆக்கி விற்கும் மருந்துகளே நோய் நீக்குந் திறத்தனவாயும் உட்கொள்வார்க்கு வேறு எத்தகைய தீதுஞ் செய்யாதனவாயும் விளங்குகின்றன. தமக்குள்ள நோயின் வரலாறுகளை அவரது மருந்து நிலையத்திற்கு எழுதித் தெரிவிப்பார்க்கு அங்குள்ள மருந்துத் தலைவர் குறிப்பிடும் மருந்துகள் குறிப்பிட்ட நோய்களை நீக்கி நலம் பயப்பதில் நிகரற்றனவாயிருக்கின்றன. ஆகையாற், கீழே குறிக்கப்படும் நோய்களிற் சிலவற்றிற்கு அவர் செய்து விற்கும் மருந்துகளே பெரும்பாலும் பயன்படுத்தற் பாலன. குறிக்கப் படாத நோய்களுக்கு அவரது நிலையத்திற் கெழுதிப் பெறும் மருந்துகளையே நோயாளிகள் உட்கொளற் பாலார்.

இனி, மக்களிற் பெரும்பாலார்க்கு வரும் நோய்களிற் பல முதலில் நீர்க்கோவையிலிருந்தே கிளைக்கின்றன. நீர்க் கோவை வந்தவுடன் மூக்கிற் சளி பிடிக்கின்றது: அதன்பின் நெஞ்சிற் சளி பிடித்து இருமல் உண்டாகின்றது; அதனை யடுத்துக் காய்ச்சலும் உடம்பெங்கும் உளைச்சலும் உண்டா கின்றன; தலையில் மண்டைவலி காணப்படுகின்றது. இந் நிலையில் விழிப்பாகச் செய்யவேண்டிய முறைகளைச் செய்யாமற் சோற்றை ஊனை யுண்பார்க்கு ஓக்காளமும் வயிற்று வலியும் வளருகின்றன. இவை மிகவே காய்ச்சலும் மிகுகின்றது. அதனாற் சிலர் பலர் உடம்பு மெலிந்து மண்ணீரல் கல்லீரல் வீங்கிச் சில

கிழமைகளிலோ அன்றிச் சில திங்களிலோ அன்றிச் சடுதியிலோ உயிர் துறக்கின்றனர். வேறு சிலர் திண்ணிய யாக்கையுடையராயும் மலச்சிக்கல் இல்லாதவராயும் இருப்பின், அவரை இந்நோய் நீளத் துன்புறுத்தாமற் சில நாட்களில் அவரை விட்டு நீங்குவதும் உண்டு, அல்லது அவரையும் அடுத்தடுத்து வந்துபற்றி வேறுபல நோய்களை அவர்பால் வருவிப்பதும் உண்டு. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னெல்லாம் யாம் நீர்க் கோவையாற் பட்ட துன்பமும், அதனால் வந்த நோய்களை நீக்குதற்கு உட்கொண்ட மருந்துகளும், அவற்றைத் தீர்த்தற்கு ஆராய்ந்து பார்த்துப் பார்த்துச் செய்த இயற்கை முறைகளும் அளவிட்டுச் சொல்லல் இயலாது. கடைசியாகக் காசு பணச் செலவில்லாமல் மருந்து வேண்டாமல் மிக எளிதிலே எவருஞ் செய்து கொள்ளத்தக்க எளிய இயற்கை முறைகளைக் கண்டறிந்து, அவற்றைச் செய்யத்துவங்கிய காலந்தொட்டுத் தான் யாம் நீர்க்கோவை யாலும் அதனையடுத்து வரும், வேறுபல நோய்களாலும் பற்றப்படாது இனிது உயிர் வாழ்கின்றேம். இந்நோயை நீக்குதற்கு யாம் சொல்லப் போகும் முறை மிக எளிய தொன்றாயிருப்பினும், அதனைக் கண்டறிவதற்கு யாம் முப்பதாண்டுகளாகப் பட்ட துன்பமும் பொருட்செலவும் எளிய அல்ல. ஆகையாற், சொல்லும் முறை எளியதென்று கருதிச் கைவிட்டுத் துன்பு றாமல், அதனைப் பிசகாதுசெய்து எல்லாரும் நலமுடன் வாழ்க!

முதலில் நீர்க்கோவை வருவதற்குரிய காரணங்களைக் கண்டறிதல் வேண்டும். வெயிற் காலத்தின் வறட்சியாற் குளிர்ந்த இனிப்புநீர் தயிர் மோர் முதலியவற்றை அடுத் தடுத்துப் பருகுதல்; குளிர்ந்த நீரில் நெடுநேரந் தலை முழுகுதல், உடம்பின்நிலை தெரியாமல் நாடோறுங் குளிர்ந்த நிரில் தலைமுழுகுதல், வயிறு நிறைய உணவு கொண்டபின் நீராடுதல்: ஈரத்துணி கட்டுதல், ஈரமுள்ள இடங்களில் நீள இருத்தல்; நூல் கற்றல் நூல் எழுதல் முதலான முயற்சிகளைச் செய்து மூளையிற் சூடு மிகுந்திருக்குங்கால் தலை முழுகுதல்; குளிர்ங்காற்றுத் தொடர்பாக வீசும் போது அதற்கு எதிரில் சாளரக் கதவுகளை விரியத் திறந்து அதனூடு வீசுங் குளிர்ந்த பனிக் காற்றின் எதிரே உடம்பின்மேற் போர்வையின்றிப் படுத்து

உறங்கல்; **பகலிலும் இரவிலும் முள்ளங்கி சுரைக்காய் பீர்க்கங் காய் வெள்ளரிக்காய் கிச்சலிப்பழங் கொடி முந்திரிப் பழம்** முதலிய குளிர்ந்த பண்டங்களை அருந்தல்; **இரவில் துவரம் பருப்புப் புழுக்கல் வாழைக்காய் உருளைக் கிழங்கு அவியல்** முதலான காற்றுப்பண்டங்களை உட்கொளல்: கைகால்களிற் சூடின்றிச் குளிர்ந்திருக்க விடுதல்; ஏதோர் உழைப்புமின்றிச் சும்மா இருத்தல்; முன்னுண்டது செரியா திருக்கையிற் பின்னும் உண்டல்; மலச்சிக்கலுக்கு இடங் கொடுத்தல்; அளவுக்கு மிஞ்சிய உடம்புழைப்பு மூளை யுழைப்பு; வியர்த்த வியர்வையைந் துடையாமல் உள்ளே சுவற விடுதல்; தலையிற் கூந்தலுக்குச் சந்தனத்தைலம் முதலான வைகளைப் பூசுதல், அவற்றைத் தேய்த்துத் தலை முழுகல், காரமான பண்டங்களைக் கண்ணீர் வடியவடிய உண்டல்; ஆற்றாமைமிக்கு அழுதல் அரற்றல்; இரவில் நெடுநேரம் விழித்திருந்து நாடகம் முதலான காட்சிகளைப் பார்த்தல் முதலாக நீர்க்கோவை வருதற்குரிய காரணங்கள் பலப்பல உள.

இனி, அக்காரணங்களை அகற்றி யொழுகுமாறு காட்டு வாம். கடுங்கோடையில் வறட்சி மிகும் போது குளிர்ந்த இனிப்பு நீர்களைப் பருகாமல் அவற்றை அறவே விட்டொழித்தல் வேண்டும்; ஒரோவொருகால் நீர்மோர் மட்டும் எலுமிச்சம்பழச் சாறு கலந்து பருகலாம்; ஆனால் இதுவும் பகல் மூன்று மணிக்கு மேற் பருகலாகாது. அடுத்தடுத்து விடாய் உண்டானால் வெந்நீர் அருந்துதலே நன்று.

விடியற்காலையிற் குளிர்ந்த நீரிற் குளித்தல் முழுகுதலே சிறந்ததென்று நம்மனோர் கூறுதலும் அங்ஙனமே செய்தலுங் காண்கின்றோம். இவ்வாறு நீராடுவது தம்முடம்புக்கு இசைந்ததாகக் காண்பாரெல்லாம் அங்ஙனஞ் செய்தலே நன்று. ஆனாலும் பெரும்பாலார் செய்வது கண்டு, அது தம் உடம்பின் நலத்திற்கு இசையாமை உணர்ந்தாரும் அதனைச் செய்தல் நன்றாகாது. அவரவர் உடம்பின் வன்மை மென் மையும் வெப்ப தட்பமும் நன்கறிந்து பார்த்துத் தமக்கு ஏற்பதாயிருந்தால் வைகறைப் போதிற் குளிர் நீராடுதலும் ஏலாதாயிருந்தால் வெந்நீரில் முழுகுதலுமே செயற்பாலன. சிலர்க்குப் பகலவனெழுந்தபின் எட்டு அல்லது ஒன்பது மணிக்குக் குளிர்நீரிற் றோய்தலே நலமுடையதாயிருக்கும்;

அவர் அங்ஙனமே செயல் நன்று. வேறு சிலர்க்குப் பகலவன் எழுந்தபின்னுங் குளிர்நீர் ஆகாமல், வெந்நீரே வேண்டுவ தாயிருக்கும்; பின்னுங் சிலர்க்குப் பகலவன் தலைக்குமேல் வந்த உச்சிப் போதில் மட்டுங் குளிர்நீராட்டு இசைவ தாயிருக்கும்; மற்றுஞ் சிலர்க்கு அந்நேரத்தும் வெந்நீரே வேண்டுவதா யிருக்கும். ஆதலால், அவரவர் தத்தம் உடம்புக்கு இசைவ தறிந்து நீராடும் நேரத்தையும் அதற்கேற்ற தண்ணீர் வெந்நீரையுந் தெரிந்து ஒழுங்கு செய்து கோடலே உடம்பின் நலஞ் சிதையாமற் பாதுகாத்தற்கு வழியாகும். எங்ஙன மாயினும், **பொதுவாக எல்லாருங் காலையில் மலநீர் கழித்துப் பற்றுலக்கி வெறுவயிற்றொடு தண்ணீரிலாயினும் வெந்நீரிலா யினும் முழுகுதலே தக்கது உணவு கொண்டு அது செமியா திருக்கையில் நீராடுதல் நோயை விலை கொடுத்து வாங்குவ தேயாகும்; ஆகையால், எக்காலத்தும் வெறு வயிற்றொடு நீராடுதலிலேயே கருத்தை வைக்க.** இதுவேயன்றியும், நாடோறுந் தலைமுழுகுதலை விட அதனை இடையிடையே விட்டுச் செய்தலுஞ் சிலர்க்கு இன்றியமையாத தாயிருக்கும்; அவர் அங்ஙனமே செயற்பாலார். ஆனாலும், அவர் முதல்நாட் கட்டிய ஆடைகளை முற்றுந் களைந்துவிட்டு, உடம்பில் அழுக்குச் சேரும் இடங்களை வெந்நீர் கொண்டு கழுவி, வேறு தோய்த்துலர்ந்த ஆடைகளையுடுத்துக் கொள்ளுதல் வேண்டும். தலை முழுகல் ஆகாதார் சிலர் தமது கழுத்தின் கீழிருந்து தண்ணீரிலோ வெந்நீரிலோ உடம்பைக் கழுவிக் குளிக்கின்றனர்; இவ்வாறு செய்வார்க்கு நீர்க்கோவை உரிமை நோயாகும் என்பது சொல்லல் வேண்டா. ஆகவே, அக் கொடிய நோயாற் பற்றப்பட வேண் டாதார் கழுத்தளவு நீராடுதலை அறவே ஒழிக்கற்பாலர். தலைமுழுகுதற்கு உடம்பின் நிலை இசையாத காலங்களில், இப்போது சொல்லியபடி அழுக்குச்சேரும் இடங்களை மட்டும் கழுவித் தூய ஆடையுடுத்துக் கொள்ளுதலே அமையுமென்க. அங்ஙனமே, ஈரத்துணியைப் பத்துப் பதினைந்து நிமிடங்களுக்கு மேற் கட்டியிருத்தலும் ஆகாது; அதுவும் இடுப்பில் மட்டும் இருக்கலாமேயன்றி, இடுப்புக்கு மேல் உடம்பிலும் முழங்காலுக்குக் கீழும் படலாகாது. இதனைவிடத் துவைத்துலர்ந்த ஆடையை உடனே உடுத்துக் கொள்ளுதலே மிகச் சிறந்ததாகும்.

இனி, நூல்கற்றல் நூலெழுதல் முதலான மிக அரிய அறிவு முயற்சிகளைச் செய்வோர், அம்முயற்சிகளைச் செய்யத் துவங்கும்முன் காலைநேரத்திலேயே நீராடும் வினையை முடித்து விடுதல் நன்று. ஓரோவொருகாற் காலை நேரத்தில் அது செய்யத் தவறினால், அறிவு முயற்சிகளைச் செய்தபின் அரைமணி நேரத்திற்குக் குறையாமல் ஓய்வாய் இருந்து, அதன்பிறகு நீராடுதலே நன்று. அறிவு முயற்சி மிகுதியும் உடையார்க்கு வெந்நீரில் தலை முழுகுதலே நலம் பயக்கும் ஆனாலும், கடுங் கோடை காலத்தில் அவர் தாம் வேண்டும் மட்டுந் தூய குளிர்நீரிற்றலை முழுகுதல் இன்றியமையாத தாகும். எத்தகையோரும் எண்ணெய் அடப்பநெய் மிளகு முதலியன தேய்த்து முழுகுங்கால் வெந்நீரைப் பயன் படுத்துதலே நலந்தருவதாகும்.

இனிக், குளிர்ங்காற்று நீளவீசும் இடங்களில் இருப் போரும் அங்குச் செல்வோருந் தம் முடம்பைச் செவ்வை யாகப் போர்த்துக் கொள்ளுதல் கட்டாயமாகும். பனிக் காலங்களிற் சாளரங்களின் வெளிக் கதவுகளை அடையாமல், உள்ளுள்ள சல்லிக் கதவுகளை மட்டும் அடைத்தல் வேண்டும். பனியுங் கூதிர்காற்றுஞ் சல்லிக் கதவுகளினூடும் வருவதாகத் தெரிந்தால் வெளிக் கதவுகளையும் அடைத்து விடலாம் என்றாலும், எல்லாச் சாளரக் கதவுகளையும் அங்ஙனம் அடைத்து விடாமல், இரண்டொன்றின் வெளிக் கதவுகளை யாதல் திறந்து வைத்து, அறையினுள்ளே தூயகாற்று வருவதற்கு வழிவிடுதல் வேண்டும். இரவில் துயில்கொள்வோர் சாளரங் களுக்கு எதிரேயின்றி, விலகிப் போர்த்துக் கொண்டு துயில் கொள்க. கடுவெயிற்காலத்திற் சாளரக் கதவுகளையெல்லாந் திறந்து விட்டு, உடம்பு தாங்கும் நேரம்வரையில் அவற்றினூடுவருந் தென்றற் காற்றி னெதிரெ உறங்கலாம்; ஆனால், உடம்பு குளிர்ந்து விட்டவுடனே அங்ஙனங் கிடவாமற், காற்றோட்டங் குறைவாயுள்ள இடங் களிற் சென்று உறங்குதலே செயற்பாலது. இன்னும், இராக் காலத்தில் மரங்களின் கீழ் உறங்குதலும் ஆகாது. இல்லத் தினுள் ளுறங்குலே நலமுடைத்து.

இனிக், குளிர்ந்த பண்டங்களைப் பகலில் உச்சிப் பொழுதில் அருந்துதலே உடம்புக்கு நலந் தருவதாகும். சுடுவேனிலில் **முள்ளங்கி சுரைக்காய்** முதலான குளிர்ந்த

பொருள்களைப் பகற்காலத்திற் சிலநாட்கள் தொடர்பாக அருந்தினாலும் அவை தீது செய்யா; ஆனால், வேனிற் காலத்திலும் இரவில் இவற்றை சேர்த்தலாகாது. எனவே, மழைகால பனிக்காலங்களில் இவற்றைப் பகலிரவு எந் நேரத்துஞ் சேர்த்தல் ஆகாதென்பது தானே போதரும். இராக்காலத்திற் சேர்க்கும் உணவுப் பண்டங்கள் குளிர்ச்சி யுங் காற்றும் இல்லாதனவா யிருத்தல் வேண்டும். ஆதலாற் **காற்று மிகுதியுள்ள துவரம்பருப்புப் புழுக்கல், வாழைக்காய் உருளைக்கிழங்குக்** கூட்டு முதலியன இரவில் விலக்கற் பாலன. அன்றி இவற்றைச் சேர்க்க வேண்டியிருந்தால், துவரம் பருப்பை வறுத்து எடுத்து, அதனுடன் மிளகு, வெள்ளைப் பூண்டு உப்புச் சேர்த்து அரைத்துத் துவையலாக்கியும், வாழைக்காய் உருளைக் கிழங்குகளைத் தகடுதகடாக அரிந்து காரமும் உப்புஞ் செர்த்துப் பிசறி எண்ணெய் அல்லது நெய்யிற் சிவக்க வறுத்தெடுத்தும் பயன்படுத்துதலே நன்று.

இனிக், கை கால்களில் ஈரஞ் சேரவிடாமல், அவ்வப்போது சேரும் ஈரத்தைத் துணி கொண்டு நன்றாகத் துடைத்து விடுக. நீண்ட நேரந் தண்ணீரிலிருக்க நேர்ந்தால், அதனைவிட்டு வந்ததுங் கை கால்களைத் தணலிற் காய்ச்சிக் கொள்க. குளிர்ங்காற்றுக் கை கால்களில் மிகுதியாய்ப்பட்டு அவை குளிர்ந்திருந்தாலும், அவற்றை அங்ஙனமே தணலிற் காய்ச்சுக, இன்னும், நடத்தல், ஓடல், ஆடல், குதித்தல் முதலிய செயல்களாலும் கை கால்களிலும், உடம்பிலுஞ் சூடுண்டாகு மாறு செய்தல் மிகவும் இன்றியமையாததாகும். கூலிவேலை செய்பவர்கள் செழுமையற்ற புல்லியவுணவு கொள்பவர்களா யிருந்தும், அவர்கள் நோயற்ற திண்ணிய யாக்கை வாய்ந்தவர் களாய் நீண்டகாலம் உயிர் வாழ்தற்கும், செல்வவளம் வாய்ந்து ஏதோருழைப்புமின்றி வறிதே யிருப்பவர்கள் கொழுமை மிக்க விழுமிய வுணவு கொள்பவர்களாயிருந்தும் அவர்கள் நோய்மலிந்த பொதியுடம் புடையவர்களாய்ப் பருவம் முதிரா முன்னரே உயிர்மாளுதற்குக் காரணம் என்னென்று சிறிதாராய்ந்து பார்ப்பினும், ஏழை மக்கள் மிகுந்த உடல் முயற்சி செய்து வருதலே அவர் நோயின்றி இனிது வாழ்தற்குக் காரணமாதலுஞ், செல்வர்கள் தாம் ஏதோர் உடல்முயற்சியு மின்றித் தம் ஏவலரை எல்லாஞ் செய்யப் பணித்துத் தாம் வாளாவிருத்தலே அவர் நோய் கொண்டு மாய்தற்குக்

காரணமாதலுந் தெற்றென விளங்கா நிற்கும். ஆதலால், நீண்டகாலம் நோயின்றி வாழ விரும்பு வோரெல்லாம் உடல் வருந்த வருந்தப் பல முயற்சிகளைச் செய்தல் முதன்மையாகு மென்று கடைப்பிடிக்க.

இனி, முன்உண்ட உணவு வயிற்றுட் செரியா திருக்கையில், மிக அருமையாகக் கிடைத்த பண்டமே யாயினும் அதனை உண்ணற்க. மக்கள் உணவாகக் கொள்ளும் பண்டங்களிற் சிற்சில நெடுநேரஞ் சென்று செரித்தலும் மற்றுஞ் சில சிறிது நேரத்திற் செரித்தலும் பதின்மூன்றாம் இயலில் உணவைப்பற்றிக் கூறியவழி விரித்து விளக்கி யிருக்கின்றேம். ஆகவே, அங்கே காட்டியபடி அவை செரிக்கும் நேரத்தை நன்கறிந்து முன்னுண்டது செரித்து நன்றாய்ப் பசியெடுக்கும்போது பின் ஒருணவுகொள்க. இங்ஙனம் நன்றாய்ப் பசியெடுத்தபின் உணவு கொள்வார்க்கு மலச்சிக்கலே இராது. என்றாலும், ஒரோ வொருவர்க்கு, அளவிறந்த மூளையுழைப்பு, உடம்புழைப் பினாலும், இருந்த இருப்பில் இருந்தே நாள்முழுதும் அறிவுமுயற்சி செய்வதனாலும், நெய்ப் பசையில்லாப் பண்டங்களையே மிகுதியாய் உட்கொள்வதனாலும் அடுத்தடுத்துப் புணர்ச்சி செய்வதனாலும் நீர் பருக வேண்டுமளவு பருகாமையினாலும், இன்னும் இவை போன்ற வேறுசில காரணங்களாலும் மலச்சிக்கல் உண்டாவது காணலாம். இத்தகையோர் மலச் சிக்கலை வருவிக்கும் இக் காரணங்களை இயன்றமட்டும் முயன்று விலக்குதல் வேண்டும்; அதனாடு, தண்ணீர் அல்லது வெந்நீரை அடுத்தடுத்துப் பருகப் பழகிக் கொள்ளுதலும் இன்றியமையாதது. நெய்ப்பசை மிகுதியுமுள்ள உழுத்தம் பருப்பிற் செய்த வடை., இட்டிலி முதலியவைகளை இடையிடையே அளவாக உட்கொண்டு வருதலும் பெரும் பயன்றரும். இவற்றுடன் நாடோறுமாவது அல்லது மூன்றுநாட்கொரு முறையாவது மாலையில் நீரேற்றி கொண்டு மலக்குடரைக் கழுவித் துப்புரவு செய்வதும் அவர்க்கு இன்றியமையாது வேண்டப்படுவதாகும்.

இனித், தலையிற் கூந்தலுக்கு மணம்மிகுந்த சந்தனத் தைலம் முதலானவைகளைத் தடவுதலாற், பலர் நீர்க் கோவையும் மண்டையிடியுங் கொண்டு துன்புறக் காண்கின்

றேம். ஆதலால், மணத்தைலம் எதனையுந் தலைக்குத் தடவாது விடுதலே மிக நல்லது. அன்றிச் சிலகால் தலைக்கு நெய் தடவுவது நலமாகக் காணப்பட்டால், **எள்நெய் தேங்காய்நெய் மிளகு நெய் அடப்ப (வாதுமை) நெய்** என்னும் இவற்றுள் எது தமக்கு இசைந்ததாகக் காணப்படுகின்றதோ, இதில் மிகச் சிறிதெடுத்துக் கூந்தலுக்குத் தடவுதலே போதும். இவற்றுள் எதனையேனும் மிகுதியாய்த் தேய்த்துத் தலைமுழுகல் வேண்டினால், **முடிக்காய்** (சிகைக்காய்)த் தூள்கொண்டு அம் மிகுதியான நெய்யைத் தேய்த்துக் கழுவி விடுதலே நன்று. அங்ஙனந் தலைமுழுகி ஈரத்தைத் துவர்த்தியபின், **அகில் சாம்பிராணிப் புகை** பிடித்துக் கூந்தலைப் புலர்த்துக.

இனிக், காரமான பண்டங்களை உட்கொளாமல் விலக்கி விடுதலைத் தவிர, அதனை உட்கொண்டு விட்டுப், பிறகு அதனால் வருவதைத் தடுக்க வழிதேடுவதிற் பயனில்லை. இங்ஙனமே **அழுதல் அரற்றுதலை** நீக்குதலை விட அவற்றால் வருந் தீமையைத் தீர்த்தற்கு வேறு வழியில் லை. நாடகக் காட்சி முதலியன இரவில் நெடுநேரம் விழித்திருந்து காண நேர்ந்தக்கால், மறுநாள் வெந்நீரில் தலைமுழுகிச் சிறிதாக உணவு கொண்டு பகலில் வேண்டு மளவு அயர்ந்துறங்குதலே நன்று. இவ்வாறெல்லாம் நீர்க் கோவை வருதற்குரிய காரணங்களைத் தெரிந்து விலக்க வேண்டுமளவு விலக்கி, அல்லது அவற்றிற் சில விலக்க முடியாதபடி நேர்ந்தக்கால் அவற்றால் விளையும் தீமைகளை உடனே நீக்க வேண்டிய முறையில் நீக்கி ஒழுக வல்லார்க்கு நீர்க்கோவையென்னும் வித்து நோய் வராது; வந்தாலும் இரண்டொரு நாளில் நீங்கும்.

அஃதொக்குமெனினும், அவ்வளவு விழிப்பாயுள்ளவர் களையும் ஒரொவொருகால் ஏதோ ஒரு பிசகால் நீர்க் கோவை மிகக் கடுமையாக வந்து பற்றிக் கொள்ளுதலைக் காண்கின்றோ மாகலின், அதனைத் தீர்த்தற்கு ஏற்றதொரு வழி காட்டுகவெனிற் காட்டுதும். கடுமையான நீர்க் கோவை வந்தால், உடனே உணவு கொள்ளுதலையும் நீர் அருந்துதலையும் நிறுத்தி விடுக. அதன்பின், நீரேற்றி கொண்டு மலக்குடரைக் கழுவித் துப்புரவு செய்க. உடம்பிற் காய்ச்சல் இல்லாதிருந்தாற் குறிகளை ஆவியிற் காட்டி நன்றாய் வியர்க்கவைக்க. காய்ச்சலிருந்தால் ஆவி

பிடித்தல் ஆகாது. அதன்பிற், **சாம்பலை வறுத்து வறுத்து நெற்றியிலிருந்து உள்ளங்கால் முடிய ஒற்றடங்கொடுக்க.** ஒற்றடங்கொடுக்குங்கால் மார்பில் மிகுதியாய்க் கொடாமற் குறைவாகக் கொடுத்தல் வேண்டும். **உடம்பின் பிற்புறத்திற்கு வேண்டுமட்டும் மிகுதியாய்க் கொடுக்கலாம்**. இவ்வாறு ஒற்றடங்கொடுத்தபின், உடம்பில் வலியுள்ள இடங்களுக்கு வலிதீர் மருந்திட்டுத் தேய்த்துக் கம்பளிப் போர்வையால் உடம்பு முழுமையும் போர்த்துக் கொள்க. வியர்த்தால் வியர்வை உள்ளே சுவறாமல் உடனுக்குடன் அதனைத் துடைத்து விடுக. இவ்வாறு செய்வதுடன், உடம்புக்காவது மூளைக்காவது ஏதொரு வேலையுங் கொடாமல் ஓய்வா யிருத்தல் வேண்டும். உறக்கம் வந்தால் உறங்கலாம்; பகலில் உறங்காத நேரங்களில் இல்லத்தினுள்ளேயே இடையிடையே எழுந்து உலவுதல் நன்று. இங்ஙனங் கூறிய முறை வழுவாமற் செய்தால் இரண்டொரு நாளில் நீர்க்கோவை நீங்கி விடும். அது நீங்கியபிற் பசியெடுக்கும். அப்போது **கோதுமைநொய் அல்லது வாற் கோதுமைமா** இட்டுக் காய்ச்சிய ஆவின்பாற் கஞ்சியை அருந்துக; அவ்வாறு இரண்டொரு வேளை யருந்தியபிற், பெரும்பசி யெடுக்கக் கண்டாற் சோற்றுணவும் மிளகுநீரும் உட்கொண்டு பின்னர் வழக்கம்போல உணவெடுக்கலாம்.

இன்னும், மூக்கிற் சளியும் நெஞ்சில் இருமலும் மிகுதி யாயுள்ள நீர்க்கோவையாயிருந்தாற் சிறிது மருந்து உட்கொள் வதும் வேண்டப்படும். இதற்கென்று வேறு கடுமையான மருந்துகளை வாங்கியருந்தித் துன்புறல் வேண்டாம். யாம் இருபதாண்டுகளாக ஆராய்ந்து கண்டிருக்கும் ஓர் எளிய மருந்தை இங்கே குறிக்கின்றாம். சில இஞ்சித் துண்டுகளை எடுத்து, அவற்றின் மேற்றோலைச் சுறண்டி விட்டு, அம்மியில் வைத்து நைய நறுக்கி, ஒரு மண் சட்டியில் ஒராழாக்கு நீரிற் பெய்து காய்ச்சி, அவ்விஞ்சிநீர் கால் ஆழாக்காகச் சுண்டிய பிற், சட்டியை இறக்கி ஒரு பக்கமாய்ச் சாய்த்து வைத்து அஃது ஆறியபின், மேலுள்ள தெளிவு நீரை இறுத்து அதிற் சிறிது கொம்புத்தேன் கலந்து அக்கலவை நீரைக் காலை மாலையிற் பருக சளியும் இருமலும் நீங்கும் மட்டும் இவ்விஞ்சி நீரைப் பருகுதல் நலமுடைத்து. எவ்வளவோ பெரும் பொருட் செலவு

செய்து வாங்கியுண்ட அருமருந்து களாலுந் தீராத கொடிய நீர்க் கோவை நோய், மேற்கூறிய முறையுடன் இவ்விஞ்சி நீரையும் பருகுவார்க்கு மூன்று நாட்களில், அது தவறினால் ஒரு கிழமையில் வேரொடு அற்றொழிதலை நீண்ட காலப் பழக்கத்தால் நன்கறிந்திருக்கின்றேம். ஆகையால் நீர்க்கோவை கொண்டார் எவரே யாயினும் அவர் யாம் கூறிய இம் முறைகளை வழுவாது செய்வரேல், அந் நோய் விரைவில் எளிதிலே தீர்ந்து நலமு றுதல் திண்ணமென்க.

இனி, நீர்க்கோவையினாலாவது வேறு காரணத்தா லாவது **குளிர்காய்ச்சல் முறைக்காய்ச்சல் நச்சுக் காய்ச்சல் சளிக் காய்ச்சல்** முதலியன வந்தால் மேற்கூறியபடியே வழுவாது செய்க: அவை நீங்கும். இக் காய்ச்சல்களால் துன்புறுவோர் ஒரோவொருகால் நாம் இருக்கும் ஊரை விட்டு வேறு ஒரு வறண்ட ஊரிற்சென்று வைகுவராயின் அவை எளிதிலே நீங்கிவிடக் காண்பர்கள். **சிவபிரான் திருக்கோயில் முருகப்பிரான் மலைக்கோயில் திருமால் திருக்கோயில்** உள்ள ஊர்கட்குச் சென்று, ஆங்காங்கு இறைவனை வணங்கி, ஏழையெளியவர்கட்குங் கற்றவர் கட்கும் அறஞ்செய்து சிலநாள் வைகி வருகுவராயின் அவர் கட்கு அந்நோய் நீங்குதலுடன் அவர்கள் உடம்பும் உயிருந் தூயவாகி நீண்டகாலம் வளவிய வாழ்க்கையில் இன்புற்று வாழ்வர். அரிய மருந்துகள் தொடர்பாக உண்டும், வேறுபல முறைகளைச் செய்துந் தாங் கொண்ட நோய் நீங்கப் பெறாமல் நீளத் துன்புற்றுத் தம் உடம்பையும் உயிரையும் வெறுத்துவிட்டோர் பலர் கடைப்படியாக இறைவன் றிருக் கோயில்கட்குச் சென்று இறைவனை வணங்கி ஏழை யெளியவர்கட்கும் கற்றார்க்கும் ஈகை யறங்களைச் செய்து ஆங்காங்கு வைகிவரவே தாங்கொண்ட நோய்தீர்ந்து நலமுற்று வாழ்தலை யாம் நேரே பார்த்திருக்கின்றேம். தீராத வயிற்றுவலி கொண்டார் ஒருவர் திருவதிகையில் வந்து இறைவனை வணங்கி ஈகை யறங்களைச் செய்து அங்குச் சிலநாள் வைகவே, அவர் அந் நோய் தீர்ந்து அவ்வூரையே தமக்குக் குடியிருப்பாகக் கொண்டிருந்ததை யாம் இருபத்தேழு ஆண்டுகளுக்கு முன் அங்குச் சென்ற போது கண்டு வியப்புற்றேம். இதனாற், பழையநாளில் திருநாவுக்கரசு நாயனார்க்கு வயிற்றுவலி தீர்த்த அத் திருப்பதி, இக் காலத்தும்

அஃகுச் செல்வார்க்கு அது தீர்ந்து நலந்தருதல் பெரிதும் போற்றற்பாலதன்றோ? இன்னும், யாம் எமது பிள்ளைமைப் பருவத்தில் நாகபட்டினத்திற் கலை பயின்று கொண்டிருந்த ஞான்று, எல்லாராலும் அருவருத்து ஒதுக்கப்பட்ட ஏழைத் **தொழுநோயாளர்** (குட்டரோகி) ஒருவர், அவ்வூரில் **நீலாம் பிகைப் பிராட்டி திருக்கோயிலுக்குப்** பின்னேயுள்ள ஒரு திருக்குளத்தில் நாடோறுந் தலைமுழுகி இறைவனையும் இறைவியையுந் தொழுதுவரவே, அந்நோய் முற்றும் நீங்கி நலம்பெற்ற புதுமையினை, எம்முடன் பயின்ற தெய்வ நம்பிக்கையில்லாத மாணவர் சிலரும் வியந்து சொல்லக் கேட்டு மிக வியந்தேம்.

இன்னும், எம் அன்னையார் தமக்கு நாற்பதாண்டு ஆகியும் பிள்ளைப் பேறில்லாது வருந்துதல் கண்ட எமதருமைத் தந்தையார் அவரை அழைத்துக் கொண்டு சிவ பிரான் திருக்கோயில்கடோறுஞ் சென்று இறைவனையும் இறைவியையும் வணங்கி, **இறுதியாகத் தொண்டை நாட்டின் கண்ணதான திருக்கழுக்குன்றத்தில்** வந்து வைகி, இறைவ னெழுந்தருளி யிருக்கும் **'வேதாசலம்'** எனப் பெயரிய மலையைச் சிலநாட் சுற்றி வணங்கி ஈகையறங்களைச் செய்துவர, அந் நோன்பு முடிந்தவுடன் எம் அன்னையார் எம்மைக் கருக்கொண்டு பெற்றெடுத்தனரென்றும் அக் காரணம் பற்றியே **வேதாசலம்** என்னும் பெயர் எமக்கு இடப்பட்டதென்றும் எம் தாய்தந்தையரே யன்றி, இந் நிகழ்ச்சியினை யறிந்தாரெல்லாரும் வியந்து சொல்லக் கேட்டேம். நாகபட்டினத்தில் உள்ளாரெவர்க்கும் இப் பெயர் இல்லாமையால், அங்குள்ளார் பலரும் எமது பெயர் புதுமை கண்டு அதன் காரணத்தை உசாவுதல் வழக்கம். இங்ஙனமே தீராநோய் கொண்டார் பலர் இறைவன் றிருக்கோயில்கட்குச் சென்று வழிபாடுசெய்த லொன்றினாலேயே நோய் தீரப்பெற்ற வரலாறுகள் மிகப் பல. ஆகவே, **பிணிப்பட்டவர் நீலகிரி, கோடைகானல்** முதலான குளிர்மிகுந்த மலை நாடுகளுக்குச் சென்று, தமக்குள்ள பிணியை மிகுதிப் படுத்திக் கொண்டு கடவுள் வழிபாடும் இல்லாதவர் களாய் மாய்ந்தொழிதலைவிடக் கடவுள் நினைவை மிகுதிப் படுத்துந் திருக்கோயில்கட்குச் சென்று உயர்ந்த தெய்வ எண்ணம் உடையராய் ஈகையறங்களைச் செய்து நோய்நீங்கி இனிது வாழ்தல் நன்றன்றோ?

இக் காலத்தில் ஒரு சாரார் தெய்வ நம்பிக்கையுந் திருக்கோயில் வழிபாடும் வேண்டாமென்று கரைகின்றார். அங்ஙனமாயின், தெய்வத்தை நம்பாமலுந் தெய்வத்தை வழிபடாமலும் இருக்கும் இவர்க்கும், இயற்கையிலேயே அவ்விரண்டுஞ் செய்தற்குரிய பகுத்தறிவு வாயாத விலங்கு களுக்கும் வேறுபாடு என்னை? மக்கள் விலங்குகளினுஞ் சிறந்த உயர் பிறப்பினர் என்பது எதனால்? விலங்குகள் கண் முதலான ஐம்பொறிகளுக்குப் புலனாகாத நுண் பொருள் களை அறியவல்லன அல்ல. மக்களோ ஐம்பொறிகளுக்கும் புலனாகாத நுண்பொருள்களையும் அறிந்து அவற்றைப் பெறும் அவாவும் அறிவும் ஆற்றலும் உடையர்; அதுபற்றியே அவர் விலங்குகளினுஞ் சிறந்த பிறப்பினராகக் கருதப் படுகின்றார். இவ்வாறு மக்களைச் சிறந்தவராக ஆக்குதற்கண், உயிர்களையும் உலகங்களையும் வகுத்த இறைவனை உணரும் உணர்வே தலைசிறந்து நிற்கின்றது. ஆதலால், இவ்வுணர்வை இழக்குமாறு பொய்யறிவு புகட்டி மக்களை விலங்குகளாக்க முனைவோர்தந் தீயசொற்களைக் கேளாமல், நம்மனோர் இறைவனைத் திருக்கோயில்கடோறுஞ் சென்று வணங்கித் தம் உடம்பையும் உயிரையும் புனிதமாக்கித் தாமுந், தம் பிள்ளைகளும் நீடுவாழ்தலிற் கருத்து வைப்பாராக!

இனித், திருக்கோயில்கட்குச் செல்லும் நோயாளிகள் மக்கள் பெருங் கூட்டமாய்ச் சேருந் திருவிழாக் காலங்களில் அங்குச் செல்லலாகாது. ஏனென்றால், பெருந் தொகை யினராக மக்கள் கழிக்கும் மலநீர்களும் நச்சுக் காற்றும் அப்போது அவ்விடங்களில் நிறைந்திருக்கும். அங்குள்ள திருக்குளநீரும் அவருடைய அழுக்குங் கழிவுங் கலந்து நஞ்சாயிருக்கும். அப்போது, அவ்விடங்களில் நிறைந்த நச்சுக்காற்றை உள்ளிழுத்தலும் அங்குள்ள குளநீர் கிணற்றுநீர் ஆற்றுநீரைப் புழங்குதலும் நோயாளிகளுக்கு நோயைப் பெருகச் செய்யுமே யன்றிச் சிறுகச் செய்யா. அக்காலங்களில் தமது அறியாமை யால் அங்குச் சென்று தமது நோயை மிகுதிப்படுத்திக் கொள்ளும் புல்லர் சிலர். பலர் **"ஐயோ! பாழுந் தெய்வத்தைக் கும்பிடப் போய் எமக்குள்ள நோய் முன்னிருந்ததைவிடப் பன்மடங்கு மிகுந்து விட்டதே!"** என்று அரற்றுகின்றனர். இஃது எத்துணை மடமை! தாம் செய்த

பிழையை ஓராத இவர் மக்களாவரா? ஆதலால், திருக் கோயில்கட்குச் செல்லும் பிணியாளிகள் கும்பல் இல்லாத கோயில்கட்குச் சென்று இறைவனை யுள்ளம் உருகி வணங்கி, ஈரநெஞ்சத்துடன் ஈகையறங்களைச் செய்து பிணிநீங்கி நலம் எய்தி வாழ்வாராக!

அற்றேலஃதாக, இறைவன் திருக்கோயில்கட்குச் சென்றால் நோய் நீங்குதல் எக் காரணத்தால்? கடவுள் அருளினாலா? அல்லது கடவுள் நோய்தீர்ப்ப ரென்னும் நம்பிக்கையினாலா? அல்லது அங்குள்ள நல்ல தண்ணீர் தூயகாற்று அழகிய காட்சிகள் முதலியவற்றைப் பெற்று இன்புறுதலாலா? எனின்; இவை எல்லாமுமே நோய் நீங்கு தற்குக் காரணங்களாகும். அங்ஙனமாயின் இருந்த விடத் திருந்தே கடவுளருளைப் பெறலாகாதோ? திருக்கோயில் கட்குச் செல்லல் வேண்டுமோ? என வினவின்; விடுக்குதும்: ஆவினிடத்துப் பாலைப் பெறவேண்டுவோர், அதன் கன்றைக் கொண்டு பாலைச் சுரப்பித்துக் கறத்தலைக் காண்டுமன்றே! அதுபோலவே இறைவனிடத்து மெய்யன்பு பூண்டு ஒழுகியவாற்றால் அவனுக்கு உரிமைப் பிள்ளைகளாம் பேறுபெற்ற **மாணிக்வாசகர், திருஞானசம்பந்தர்** முதலான நாயன்மார் சென்று வணங்கிய திருக்கோயில்களிலுள்ள திருவுளங்களிலேதாம் இறைவனது அருள் விளங்கிநின்று ஏனையோர்க்கும் நலந்தரும்; இதனாலன்றோ நாயன்மார் பாடல்பெற்ற திருக்கோயில்கள் ஏனையவற்றினும் விழுமிய வாக வைத்து ஆன்றோரால் தொன்றுதொட்டுப் போற்றப் படுகின்றன; அக் கோயில்கட்குச் செல்லும் மக்களுந் தாம் பெறக் கருதும் நலங்களைப் பெற்று வருகின்றனர். ஆகவே, **நாயன்மார் சென்று வழுத்திய திருக்கோயில்களிலும், பொய்கையாழ்வார் பேயாழ்வார் சென்று வழிபட்ட திருமால்கோயில்களிலும்** இறைவன் முனைந்து நின்று அருள் செய்தல் திண்ணமேயாமென்க.

அற்றேற், கடவுள் நோய் தீர்ப்பரென்னும் நம்பிக்கை யெற்றுக்கெனின், உண்மை நம்பிக்கையில்லாதவர் உலகத்தில் உயிர்வாழ்தலே இயலாது. உலகத்தில் நாம் வாழ்க்கை செலுத்துவதெல்லாம் நம்பிக்கையையே அடிப்படையாகக் கொண்டு நிற்கின்றன. நம்மைப் பெற்ற அன்னையும் நம்பால்

அன்பு மீதூர்ந்த மனையாளும் நமது பசித்துன்பம் அறிந்து நமக்குப் படைத்த சுவைகனிந்த உணவை அமிழ்தமாகக் கருதாமல் அதனை நஞ்சமாகக் கருதி உண்ணாதிருந்தால் நாம் உயிர் வாழ்தல் கூடுமோ? நம்பால் அருள் மிகுந்த ஒரு மருத்துவர் தமது நோய்த் துன்பம் அறிந்து நமக்கு அரிய தொரு மருந்து தந்தால் அதனை நல்லதென்று நம்பாமல் தீய தென்று கருதி அருந்தாதுவிட்டால் நாம் நோய் தீர்ந்து நலம் பெறுதல் கூடுமோ? இங்ஙனமே, நம்மொடு தொடர்பு டையார் நமக்குச் செய்யும் நலங்களை யெல்லாம் நாம் நம்பாது கைவிட்டால் அது நமக்குப் பெருங்கேடாய் முடியும். ஆதலால், நம்பால் உண்மையன்புடையார் நமக்குச் செய்யும் நலங்களையெல்லாம் நாம் ஆராய்ந்து கண்டு கைக்கொள்ள அறிவும் ஆற்றலும் காலமும் நமக்கில்லா மையால், அவைகளை முற்றும் நம்பிக்கைக்கொண்டே நாம் நன்கு உயிர் வாழ்ந்து வருதல் எவருக்குந் தெளியக்கிடந்த தொன்றாம் என்க.

அங்ஙனமாயின், மெய் நம்பிக்கைக்கும், பொய்ந் நம்பிக்கைக்கும் வேறுபாடு என்னை யெனின்; அன்பிலும் அறிவிலும் முயற்சியிலும் மிக்கவராக நம்மால் தெளியப் பட்டவர்களிடத்தில் வைத்த நம்பிக்கையே மெய்ந் நம்பிக்கையாகும்; மற்று அம் மூன்றிலுஞ் சிறந்தவராகத் தெளியப்படாதவர்பால் வைத்த நம்பிக்கையே பொய்ந் நம்பிக்கையாகும். பலகாலும் ஆராய்ந்து தெளியப்பட்டவர் பால் நம்பிக்கையின்றி யொழுகுதலும் அங்ஙனம் ஆராயப் படாதவர்பால் நம்பிக்கை வைத்தொழுகுதலும் எவர்க்கும் பேரிடராய் முடியும் இவ்வுண்மை தெய்வத் **திருவள்ளுவ**ரால்,

> "தேரான் தெளிவுந் தெளிந்தான்கண் ஐயுறவும்
> தீரா இடும்பை தரும்" (குறள் 510)

என்று முன்னமே அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. இவ் வெல்லா உலகங்களையும் இவ்வெல்லா உடம்புகளையும் உயிர்கள் எல்லாவற்றிற்கும் படைத்துக் கொடுத்துப் படைத்த வற்றைச் சில காலங் காத்துப், பின்னர் அவற்றை அழிக்கும் எல்லாம்வல்ல கடவுள் ஒருவரே, நமக்கு நலமானவற்றை நாம் வேண்டுமாறு தரவல்லவ ரென்பது எல்லாராலுங் தெளியப்பட்ட ஒரு பேருண்மையாகும். இத் தன்மையரான ஒரு முழுமுதற் கடவுளை நமது நோய் நீக்கத்தின் பொருட்டு

நம்புவதே மெய்ந் நம்பிக்கை யாகும். இவ்வாறு செய்தலை விடுத்துப், படைத்தற்றொழிலைச் செய்தற்கு ஒரு கடவுளுங், காத்தற்றொழிலைச் செய்தற்கு மற்றொரு கடவுளும், அழித்தற்றொழிலைச் செய்தற்கு வேறொரு கடவுளும் உளரென நம்பி, அம் மூன்று கடவுளர்க்கும் ஏற்றத் தாழ்வு கற்பித்து, மக்கள் தம்முள் இகலிப் போராடி நோய் நீங்கப் பெறாமல் மாளுதலோ பொய்ந் நம்பிக்கையின் விளைவே யாகும். இவ்வாறே, **இறந்துபோன மக்களின் ஆவிவடிவங் களையும், பெருந்துன்பத்தில் உழன்று மாய்ந்துபோன அரசர்களின் ஆவி வடிவங்களையுந் தெய்வங்களாக நம்பி வழிபட்டுப் பயன்பெறா தொழிதலும் பொய் நம்பிக்கையின் பயனேயா மென்க.**

ஆகவே, ஒன்றுக்கும் பற்றாத எண்ணிறந்த கோடியுயிர் கட்கெல்லாம் மிக வியக்கத்தக்க உடம்புகளையும் அவ்வுடம்பு களிலிருந்து அவை நுகர்தற்கு எண்ணிறந்த கோடி பண்டங் களையும் அவை கேளா திருக்கையிலும் அவற்றிற்கு வகுத்துக் கொடுத்திருத்தல் கொண்டு, அளவிறந்த இரக்கமும் அளவிறந்த ஆற்றலும் அளவிறந்த அறிவும் உடையவராகத் தெளியப்பட்ட தனித் தலைமைக் கடவுளான நம் அம்மையப்பர், நாம் நம் பிழையால் வருவித்துக் கொண்ட நோயை இரங்கித் தீர்த்தருள்வர் என்று அவரையே உண்மையன்போடு நம்பி வழுத்துவ மாயின், அவர் நமக்கு அந்நோயை நீக்காது வாளா இருப்பரோ? நாம் உண்மையாக நம்பிய நம் உண்மையன்புள்ள அன்னையும் மனைவியும் நமக்குப் படைத்த சுவைமிக்க அடிசில் நமது பசியையாற்றி நமதுடம்பைச் செழுமையாக வளரச் செய்தல் போலவும், நம்மாற் சிறந்தவராகத் தெளியப்பட்ட மருத்துவர் தரும் அரிய மருந்து நாம் கொண்ட நோயை நீக்கி நம்மை நலமுடன் வைத்தல் போலவும் நாம் உண்மையாக மெய்யன்புடன் நம்பிய எல்லாம் வல்ல ஆண்டவனும் நாம் கொண்ட **“தீராநோய் தீர்த்தருள வல்லான்”** என்று கடைப்பிடிக்க.

இன்னும் எல்லா இரக்கமுடைய ஆண்டவன் தன்னை நம்புகின்றார்களாயிருப்பினுந், தன்னை நம்பாதவர்களா யிருப்பினும் எல்லார்க்கும் அருள் செய்யும் பான்மையனே யாயினும், நம்பிக்கை யுடையவர்கள் மட்டுமே அவனருளைப்

பயன்படுத்திக் கொள்ள வல்லவர்களாகவும், நம்பிக்கையில் லாதவர்கள் அதனைப் பயன்படுத்திக் கொள்ள மாட்டாதவர் களாகவும் இருக்கின்றனர். இஃது எதுபோல வெனிற்; பகலவன் ஒளியானது உயிருள்ள மரஞ் செடி கொடிகள் முதல் மக்கள் ஈறான எல்லா உயிர்கள் மேலும், உயிரற்ற கல் மண முதலியவை மேலும் பட்டாலும் உயிருள்ள பொருள்களே அவ்வொளியைப் பயன்படுத்திக் கொள்ளக் காண்டு மல்லாமல், உயிரற்றவை அதனால் ஏதொரு பயனும் பெறக் காண்கிலேம்; உயிருள்ளவை களிலும், ஆறறிவுடைய மக்கள் பகலவனொளியைப் பயன் படுத்துமாறுபோல், ஏனைச் சிற்றுயிர்கள் அதனைப் பயன் படுத்தக் கண்டதுண்டோ? இல்லையே, மேலும் உயிரற்ற பொருள்களிலுங் கூடத் தெளிவற்ற கற்பாறைக்குந் தெளியுடைய பளிங்குக் கற்கும் இவ்வகையில் எவ்வளவு வேற்றுமை இருக்கின்றது பாருங்கள்! தெளிவற்ற கற்பாறையிற் பகலவன் ஒளி பட்டாலும் அதன்கண் அது விளங்கித் தோன்றுகின்றதா? மற்றுத், தெளிவுடைய பளிங்குக் கல்லிலோ அஃது எவ்வளவு விளக்கமுடையதாய்த் தோன்றுகின்றது. இங்ஙனமே, நம்பிக்கை யில்லாதவர் உள்ளந் தெளிவில்லாக் கற்பாறை போல், இறைவன்றன் அருளொளியை ஏற்க மாட்டாதாய் நோய்வாய்ப் பட்டு மடிந்து போகின்றது. மற்று, நம்பிக்கை மிகப் பெற்றாருள்ளமோ, தெளிவு மிக்க பளிங்கு போல், ஐயனரு ளொளியை ஏற்று அருள் விளக்கம் நிரம்பி நோயுந் தீதுமின்றித் துலங்குகின்றது! எனவே, இறைவன்றன் அருள் எப்போதும் எல்லார்க்கும் நலம் வழங்க முனைந்து நிற்பினும் அவனது அருளாற்றலில் முழு நம்பிக்கை வாய்ந் திருப்பவர்களே அதனாற் பெறுதற்குரிய பேறுகளை யெல்லாம் ஒருங்கே பெறுவரென்பது நன்கு உணரப்படுமென்க.

இனித், திருக்கோயில்களைப் பண்டைக்காலத்தில் அமைத்த சான்றோர்கள், இறைவனருளுக்கு மாறாய் நில்லா மல் அதனோடு ஒத்துநின்று உடல்நோய் உளநோய்களைத் தீர்த்தற்கேற்ற நல்ல தண்ணீருந் தூய காற்றும் அழகிய காட்சிகளும் இயற்கையே வாய்ந்தசிறந்த இடங்களைத் தெரிந்தெடுத்தே, அவற்றின்கண் அம்மையப்பர் திருவுருவம் நிறீஇத் திருக்கோயில்களை அமைத்து வைத்தனர். அழுக்குப் படாத பளிங்கினுள்ளேயே ஞாயிற்றினொளி பெரிதும் ஊடுருவி விளங்கித் தோன்றுதல் போல, நல்ல தண்ணீரில்

மூழ்கியும் அதனைப் பருகியுந், தூய காற்றை உள்ளிழுத்துத் தூயதான உடம்பினுள்ளும், அழகிய இயற்கை மலைக்காட்சி கானகக் காட்சிகளைக் கண்டு எழுச்சி பெற்றுக் களித்து உயர்ந்தோங்கி இன்புற்றுச் சொக்கிய உள்ளத்தினுள்ளுமே இறைவன்றன் அருளொளி முனைத்து விளங்கும்; அஃதங்ஙனம் விளங்கவே உடம்பையும் உயிரையும் பற்றிய பிணி எத்துணைக் கொடியதாயிருப்பினும் அஃது அவ்விரண்டையும் அறவே விட்டு நீங்கும். உடம்புக்கும் உயிருக்கும் முன்னில்லாத நலமும் அழகும் ஆற்றலும் உண்டாம். ஆகவே, திருக் கோயில்களும் அவையமைந்த விழுமிய இடங்களுமே மக்கள் எய்திய உடல்நோய் உளநோய்களை ஒருங்கே நீக்குதற்கேற்ற இசைவுகள் முற்றும் வாய்ந்தனவாதல் கண்டு கொள்க.

இனிக், குளிர்காய்ச்சல், முறைக்காய்ச்சல், நச்சுக் காய்ச்சல் முதலிய நோய்களாற் பற்றப்பட்டவர்கள் ஒரோ வொருகால் ஏற்ற மருந்து உட்கொள்வதும் இன்றியமை யாததாகும். மிகவுங் கசப்பான **நிலவேம்வை நறுக்கி உழக்கு தண்ணீரில் இட்டு அரையாழாக்காகச் சுண்டக் காய்ச்சி வடித்துக், காலைமாலை அச்சாற்றைப் பருகிவரின் எத்தகைய காய்ச்சலும் நீங்கிவிடும்.** இது செய்ய இயலாதவர்கள் **பாட்டிலிவாலா** என்பவராற் செய்து விற்கப்படுங்[6] குளிர் காய்ச்சல் மருந்தை வாங்கி, அதன் புட்டிலின்மேல் எழுதப் பட்டிருக்கும் முறைப்படி அதனை அருந்தி வருவார்களாயின் எல்லாவகையான காய்ச்சலும் நீங்கிவிடக் காண்பர்கள். காய்ச்சல் நோய் உள்ளவர்கள் கடுக்காய்ச்சாறு அருந்தி மலக்குடரை இடையிடையே துப்புரவு செய்வதுடன் நாடோறும் நீரேற்றி கொண்டும் மலக்குடரைக் கழுவிவிடுதல் வேண்டும். அதனொடு சுடுசாம்பர் ஒற்றடமும் உடம்பெங்குங் கொடுத்தல் வேண்டும். காய்ச்சல் முற்றும் நிற்கும் வரையிற் சோறு சிறிதுந் தின்னல் ஆகாது. கோதுமை நொய்க் கஞ்சி வாற் கோதுமை மாக்கஞ்சி ஆவின்பால் சேர்த்துக் காலை நண்பகல் மாலை என்னும் மூன்று பொழுது மட்டும் பருகுக; இதனைத்தானும் அடுத்தடுத்துப் பருகுதல் ஆகாது. காய்ச்சல் நோய் உள்ளவர்கள் பிற்பகல் இரண்டு மணிக்கு மேற் காற்று உடம்பின் மேற்படாத ஓரிடத்திலிருந்து, ஆடைகளை முற்றுங் களைந்து விட்டு, உடம்பின் முற் பகுதியைக் கால்மணி நேரமும்

பிற்பகுதியைக் கால்மணி நேரமும் வெயிலிற் காய்ச்சுதல் பெரும்பயன்றரும்; ஆனால் தலையின் மேல் மட்டும் வெயிற்படாதபடி அதனை மறைத்துக் கொள்க.

இனித், தலையிலிருந்து அடிவரையில் வரும் ஒவ்வொரு நோய்களையுந் தீர்க்கும் முறை காட்டுவாம்:

மேலுறுப்புகளில் மக்களுக்குக் கண்ணைவிடச் சிறந்தது பிறிதில்லை.. கண் இழந்தவர்கள் மக்கட் பிறவிப் பயனைப் பெரும்பாலும் இழந்தவரேயாவர். உடம்பின் கண் எந்தப் பகுதியில் எத்தகைய நோய்வரினும் அது கண்ணையுந் தாக்கு கின்றது. கண்ணைச் செவ்வையாக ஆராய்ந்து பார்த்தால், உடம்பின் மற்றையுறுப்புகளில் உள்ள எத்தகைய நோயையும் எளிதில் தெளிவாக அறிந்து கொள்ளலாம் என்று, அதனை ஆராயும் முறைகளையும், அதன்கட் காணப்படும் நோயின் அடையாளங்களையும் ஓவியங்களுடன் விரித்து நன்கு விளக்கிப், புகழோங்கிய **அமெரிக்க மருத்துவ ஆசிரியர்**[8] ஒருவர் ஓர் அரிய நூல் எழுதியிருக்கின்றார். அந் நூலைப் பயின்றறிய வல்லார்க்குக், கண்ணின் வாயிலாகவே எத்தகைய உடம்பின் நோயையுந் திட்டமாகத் தெரிந்துணர்தல் கூடும்.

இனிக் **கண்ணைத் தாக்கும்** நோய்களில், மலக் குடரையும் ஆண்குறி பெண்குறிகளையும் பற்றிவரும் நோய்களே முதன்மை பெற்று நிற்கின்றன. ஆதலால், மலக்குடரை நீரேற்றி கொண்டு துப்புரவு செய்து, குறிகளை ஆவியிற் காட்டி வியர்க்க வைத்து வருவார்க்குக், கண்நோய் விரைவிற் றீர்வதுடன், அவர்களின் கட்பார்வையும் அவர்கள் உயிரோடிருக்கும் வரையிற் பழுதுபடாது.

மேலுங், **கண்ணோய் கொண்டவர்கள் காரமான உணவை அடியோடு விலக்கல் வேண்டும்.** மனைவியுங் கணவனுமாய் வாழ்பவர்களாயின், அது முற்றுந் தீர்ந் தொழியும் மட்டும் அவர் புணர்ச்சிசெய்த லாகாது. கண்ணோய் உள்ளவர்களிற் பெரும்பாலார் புணர்ச்சி செய்து, அந்நோயை மிகுதிப்படுத்திக் கொண்டு பெரிதுந் துன்புறுவதல்லாமலும், அவர்களிற் சிலர் பலர் கட்பார்வை யினையும் இழந்து விடுகின்றார்கள். **உடம்பின் வலிய சாறாகிய விந்து நீரின் வலிவினாலேயே கட்பார்வை நன்கமைந்து**

**நடைபெறுகின்றது**. கட்பார்வையின் நலம், விந்துநீரை அளவுக்கு மிஞ்சிச் செலவழியாதார் பால் நிலை பெற்றதாயிருக்கும் மற்று, அதனை வரைகடந்து செலவு செய்து, குறிநோய்களையும் வருவித்துக் கொள்வார்க்கோ, கட்பார்வை விரைவிற் பழுதுபடும். ஆதலால், விந்து நீரைப் பாதுகாத்துக், கீழுறுப்புகளையுந் தூய்மையாக வைத்துக் கொள்வார் எவர்க்குங் கண்ணொளி சிறிதுங் குறையாதாய் நீள உரம்பெற்று விளங்குமென்று கடைப்பிடிக்க.

இன்னும், கண்சிவந்து நீரும்பூளையும் மிகுங்கால், நல்ல **பனிநீரில்** (பன்னீரில்) நந்திவட்டப் பூவின்சாறு சிறிது கலந்து, அதனை அந்நோயின் கடுமைக்குத் தக்கபடி ஒருநாளில் மூன்று, நான்கு, ஐந்து அல்லது ஆறுமுறை இருகண்களிலுந் துளித் துளியாய் விடுக. இது மிகக் கடுமையா யிராவிட்டால் வெறும் பனிநீர் மட்டுமே விடுதல் போதும். கடுமை யாயிருந்தால் மட்டும் நந்திவட்டப் பூவின் சாறு பனிநீரிற் கலந்து பயன் படுத்தல் வேண்டும். மேற்கூறியவற்றோடு கண்ணிற் சதையும் வளரக்கண்டால், மூன்று சல்லிக்குப் படிக்காரம் வாங்கி அதனைத் தூய ஒரு புது மண்சட்டியில் வைத்து அடுப்பி லேற்றிப் பொரித்துப், பொரித்த அப் படிகாரத்தில் ஒரு சிறுபகுதி யெடுத்துக் கழுவிய ஒரு சிறு கண்ணாடிக் குப்பியினுள் அதனை யிட்டுப், பனிநீரை அதனுள் வடித்து ஊற்றிக் குலுக்கி, அக்குப்பியைக் **கிடேச்சினால்** (cork) அடைத்துப், படிகாரம் பனி நீரிற் கரையும் வரையில் வைத்து விடுக; அது சிறிது நேரத்திற் கரைந்து விடும்; அதன்பின் அப் பனிநீரைக் கண்களுக்குத் துளித்துளியாய் விடுக. இவ்வாறு ஒழுங்காகச் செய்துவரின் கண்ணோய் விரைவிற் நீர்ந்து விடுதல் திண்ணம்.

இங்ஙனமாகக், கண்ணோய் கொண்டவர்கள் மிகவும் விழிப்பாக இருந்து, யாங்கூறிய முறைகளின்படி ஒழுங்காக நடந்து, அதனை விரைவிற் நீர்த்துக்கொள்வதிற் கருத்து டையவர்களாயிருக்க வேண்டும். இல்லையேற் கண் போய் விடும்; அல்லது வேர்க்கொண்ட கண்ணோயினாற் கால மெல்லாந் துன்புறல் வேண்டும். மேலுங், கண்ணோயானது ஒருவரிலிருந்து மற்றொருவர்க்குத் தொற்றுந் தன்மை யுடையது. இத்துணைத் தீயதாகிய இந் நோயை உடனே தீர்த்துக் கொள்ளாமல் வைத்திருப்பவர்கள் தாந்துன்புறுவ

தல்லாமலுந், தம்மோடு உடனுறை வாரையும் அதற்கு ஆளாக்கித் துன்புறுத்தும் பழிக்கும் உள்ளாவார்கள்.

இனிக், கண்ணோய் வந்தபின் அதனைத் தீர்த்தற்குப் பாடுபடுவது எவர்க்கும் இயற்கை. ஆனால், அது வராமல் முன்னமே விழிப்பாயிருந்து ஒழுகுவார் அரியர். ஆதலால், அந்நோய் வராமல் தடைசெய்யும் முறைகளை எல்லாரும் எப்போழும் விழிப்பாயிருந்து செய்தல் வேண்டும். அற்றேல், அம் முறைகள் யாவை யெனிற் காட்டுதும்; ஒவ்வொருவரும் இரவில் ஆறுமணி நேரத்திற்குக் குறையாமல் நன்றாக அயர்ந்துறங்கப் பழகிக்கொள்ளுதல் வேண்டும். எத்துணைப் பெரிய முயற்சியுடையவர்களும் இரவிற் பன்னிரண்டு மணிக்குமேல், அஃதாவது நள்ளிரவில் விழித்திருக்கலாகாது. இரவில் எளிதிற் செரிக்கும் உணவுகொண்டு சிறிது உலாவிய பின் பன்னிரண்டு அல்லது பதினைந்து நாழிகைக்கெல்லாம் உறங்கச் சென்று, விடியற் காலையில் உறக்கம் நீங்கியவுடன் எழுதல் வேண்டும்.

நூல் கற்றல் நூலெழுதல் கணக்குப் பார்த்தல் முதலான அறிவு முயற்சிகளைக் கண்ணுங் கருத்தும் ஒருங்கு செலுத்திச் செய்பவர்கள், அரைமணி முக்கால்மணி நேரத்திற்கு ஒருகால் இடையிடையே எழுந்து தூய தண்ணீர் கொண்டு கண்களைக் கழுவி வருதல் வேண்டும். இடையிடையே அண்ணாந்து வானில் நீலநிறத்தையுஞ் சுற்றியுள்ள செடி கொடி மரங்களின் பசுந்தழை களையும் நோக்குதல் வேண்டும். இங்ஙனமே கண்ணும் மனமும் உறைத்து நிற்கும் எவ்வகைத் தொழிலைச் செய்தாலும் இடையிடையே கட்பார்வையைக் குளிரவைத்தலை மறவற்க.

இன்னும், புழுதியும் பலவகைப் பண்டங்களின் துகளுந் தூசிக்காற்றும் அங்கணநீர் நாற்றமும் நிறைந்த நகரங்களின் தெருக்களிற் சென்று வருபவர்களும், பலசரக்ககுக் கடை களிலிருந்து ஆங்குண்டாம் நெடிகளை மோப்பவர்களும் இடையிடையே யெழுந்துப்போய்க் கண்களைக் கழுவி வாயைக் கொப்புளித்தல் இன்றியமையாததாகும். கண்ணோய் கொண்ட வர் இருக்கும் இடத்திலேயே ஒருங்குறைய வேண்டியிருப்ப வர்களும் அவ்வாறே செய்தல் வேண்டும்.

மேலும், கண்ணோய் உடையவர் கண்களில் ஒருவகைச் சிறு கொசுக்களும் ஈக்களும் வந்து மொய்க்கும்; இவை மற்றவர் கண்களிலும் வந்து மொய்க்குமாயின், அவர்க்குள்ள கண்ணோய் இவர்க்கும் வந்து விடும்; ஆதலால், அக் கொசுக்கள் ஈக்கள் அணுகாமற் செய்து கொள்வதில் எல்லாரும் விழிப்பாக இருத்தல் வேண்டும்; இவற்றைத் தடுப்பதற்குச் சிறந்த முறை வலை பின்னிய கண்ணாடிகளைக் கண்ணோயுடையவர்களும் பிறரும் அணிந்து கொள்வதே யாகு மென்க.

இனிக் கண்களுக்குக் கீழுள்ள **மூக்கின்** இருதுளை களுள்ளும் அழுக்கும் அசடும் படியாமல், சுண்டுவிரலால் நீரைத் தொட்டுத் தொட்டுத் தடவி அவைகளை வெளிப் படுத்துக. சிலகாலங்களில் மூக்கின்மேல் வரும் பருக்களைக் கிள்ளலாகாது; கிள்ளினால் வினைக்கொண்டு புரையோடி மூக்கையே அஃது அரிந்துவிடுதலைப் பார்த்திருக்கின்றேம். ஒரோவொருகால் அறியாமையால் அதனைக் கிள்ளித் துன்புறுபவர்கள், அஃது ஆறு மட்டும் நீராவியிற் பிடித்து நலப் படுத்துக.

இனி, மூக்கின் கீழுள்ள **வாயை** நோயணுகாமல் வைத்துக் கொள்வதில் எல்லாரும் மிகவும் விழிப்பாக இருத்தல் வேண்டும். வயிற்றிலுள்ள தீனிப்பையும் அதன் கீழுள்ள மலநீர்க்குடர்களுந் துப்புரவாயிருக்கப் பெறுவார்க்கு வாய் உறுப்புகளில் ஏதொரு நோயும் முடைநாற்றமும் வரா தீனிப்பையும் மலநீர்க்குடர்களும் பிசகிப் போனவர்க்கே வாயினுறுப்புகளும் பழுதாய்ப் போகின்றன. உடம்பை உயிரோடிருக்கச் செய்வதற்கு முதன்மை யாக உள்ளது உணவேயாகும்: அவ்வுணவை உடம்பினும் செலுத்துவதற்கு வாயே முதன்மையான கருவியாகும்; ஆகையால், **வாயையும்,** அதன்கண் உள்ள **நாக்கு அண்ணம் பல் இதழ்** என்னும் உறுப்புக்களையும் உன்னிப்பாகப் பாது காத்து வருதல் வேண்டும்.

வயிற்றின்கண் **அழலை** மிகுந்தால் நாவிற் புண் உண்டாகும். ஆதலால், வயிற்றின் அழலையைத் தணிப்பதே நாக்கின் புண்ணை ஆற்றுவதற்கு வழியாகும். **ஆவின் மோரும் எலுமிச்சம் பழச்சாறுங்** கலந்து காலைவேளையிற் பருகி னால்

நாக்கிற் புண் ஆறும். பகற்பொழுது இராப் பொழுது களில் தோங்காய்ப்பால் சேர்ந்து பிசைந்த சோற்றை அருந்து தலாலும் இந்நோய் தீரும். இன்னும் வசதியுள்ளவர்கள், **தோல்போக்கிய கசப்பில்லாத அடப்பம்** (வாதுமைப்) பருப்புகளை அரைத்து ஆவின்பாலிற் கலக்கிச் சிறிது சூடேற்றிச், சீனாக்கற்கண்டு கலந்து காலை மாலையிற் பருகி வருவராயின், வாய்ப்புண் ஆறப்பெறுவதுடன், தமதுடம்புஞ் செழுமையாய் வளரக் காண்பார்கள். இன்னும் ஏழையெளிய வராயிருப்பினுஞ் செல்வராயிருப்பினுங் கொடிய வாய்ப் புண்ணாற் பற்றப்பட்டுத் துன்புறுபவர்கள், **கழுநீரில் மணித் தக்காளியிலை**யை யிட்டுக் காய்ச்சி அதனை மிளகு சாறாகத் தாளித்து எலுமிச்சம் பழம் பிழிந்த சாறுஞ் சிறிது கலந்து, **'அதனைக் காலையில் வெறுவயிற்றிலும்,** பகலில் உணவொடு கலந்தும் உட்கொண்டு வருகுவராயின், மிகுவிரைவில் அப் புண் ஆறப் பெறுபவர்கள், நாவிலேயன்றி, **அண்ணம், கன்னம், இதழ்** முதலிய எந்தப் பகுதியிற் புண் வந்தாலும் இவ்வாறு செய்யவே, அஃது உடனே தீரும்.'

இன்னும், வாயுறுப்புகளிற் பல்நோயாற் பலர் படுந் துன்பம் பார்த்தற்கும் ஆகாத அத்துணைக் கொடுமை யுடையதாய் இருக்கின்றது. ஆதலால், இந் நோய்வராத முறைகளை ஒவ்வொருவரும் உன்னிப்பாய்ச் செய்து பழக்கத்திற்குக் கொண்டுவரல் முதன்மையாகும். நம்நாட்டு மருத்துவர்களாற் செய்து விற்கப்படும் பல்வகைப் பற்பொடி களைக் கொண்டு பல்விளக்குதலை அறவே விட்டொழித்தல் வேண்டும். இப் பற்பொடிகளைப் பயன்படுத்துவதனாலேயே பலர் பல்வலியால் துன்புறக் காண்கிறோம். பற்பொடி இன்றியமையாது வேண்டி யிருந்தாற் **சீமைப் பற்பொடி ஒன்று மட்டுமே**[9] தீங்கற்றதாகக் காணப்படுகின்றது. நாடோறும் பல் விளக்குவதற்குத் தூள் வேறு வேண்டுவோர் **அடுப்புக்கரியும் உப்புஞ் சேர்த்து நுணுக்கி** அதனைப் பயன்படுத்தலாம். அல்லது கருவேலமரப் பட்டையை நன்றாக உலரவைத்து இடித்துத் தூளாக்கி, அத் தூளைப் பயன்படுத்தலாம். இவை களெல்லா வற்றையும் விடக், **கருவேங்குச்சி, பூலாங்குச்சி, ஆலவிழுது** முதலியவைகளே பற்றுலக்குதற்கு மிகச் சிறந்த வைகளாகும். பல்வலியும்,

பல்லோட்டமும், பல்லீரல் வீக்கமும் வந்தால் இருவேளை வாய்க்கு நீராவி பிடித்து, நுணா இலையாற் பல்விளக்குக. அவை விரைவில் நீங்கும்; பல்லீரல் வீக்கந் தீர்ப்பதற்கு வலிதீர்மருந்தில் (அமிர்தாஞ்சனம்) சிறிதெடுத்து வலியும் வீக்கமும் உள்ள இடத்தில் மூன்று மணி நேரத்திற்கு ஒருகால் தடவிவருக.

இன்னும், உணவுகொள்வதற்கு முன்னும் பின்னும் ஒரு நாளிற் பலநேரங்களிலும் வாயினுள் நீர்பெய்து கொப்பு ளித்துக், கொப்புளித்த நீரை உமிழ்ந்து வருக. கடிப்பதற்கு வருத்தமான **சீடை, பாக்கு, முறுக்கு** முதலியவைகளை உண்ணற்க. **வெற்றிலை பாக்குச்**, சுருட்டு முதலியவை களையும் பயன்படுத்துதல் ஒழிக. தீனிப்பையும் மலக்குடருஞ் செவ்வை யான நிலைமையிலிருக்கின்றனவா என்று உன்னிப் பாய்ப் பார்த்துவருக. அடுத்தடுத்துப் புணர்ச்சி செய்யாமற், **கிழமைக்கு ஒருகால்** அல்லது **திங்களுக்கு இருகாற்** புணர்தலே, இவை யெல்லா வற்றினும் பல்லைப் பாது காத்தற்குச் சிறந்த வழியாகும். ஈண்டுக் காட்டிய இவ்வெளிய முறைகளை உன்னிப்பாய்ப் பின்பற்றி வருபவர்கள் நூறு ஆண்டும் அதற்கு மேலும் பற்களைச் செவ்வையாக வைத்து நன்கு உயிர் வாழ்வார்க ளென்பது திண்ணம்.

இனிச், **செவி**களை நோயணுகாமற் பாதுகாத்தற்கு வேண்டுவன ஆராயற்பாற்று. ஏனென்றால், நமது உயிர் வாழ்கையானது ஓசையின் வாயிலாகவே நடைபெறா நிற்கின்றது. நாமும் பிறரும் ஒருவரோடொருவர் கலந்து உயிர்வாழ்வதெல்லாம் நாமும் அவரும் பேசும் சொற்களினால் நடைபெறுதலை அறியாதார் யார்? இவ்வாறு பேசப் படுஞ் சொற்களெல்லாம் ஓசைகளே யல்லாமல் வேறென்னை? இத்துணை இன்றியமையாத சொல்லோசைகளைக் கேட்டு ணர்தற்கு முதன்மையாக உள்ள செவிகள் பழுதுபட்டுப் போனால், மக்கட்பிறிவியும் அரைவாசி பழுதுபட்டதாய் விடுகின்றது. நல்லோரும் அறிவிற் சிறந்தோருங் கூறும் நல்ல அறிவுரைகளைக் கேட்டு மகிழ்தற்குச் செவியில்லாதவர்கள் உயிரோடு இருப்பினும், அவர்கள் நடைப்பிணங்களே யாவர்கள். கண்களின் உதவியாற் சான்றோர் வரைந்த நூல்களைக் கற்றறியும் நல்வினை வாய்ந்தவர்களுக்குச்,

செவிப்பழுதால் உண்டாகுங் குறை ஒருவாறு நீங்குமேனும், அங்ஙனம் கற்றறிய மாட்டாத மக்களிற் பெரும்பாலர்க்குச் செவிப்பழுதால் உண்டாகும் பெருங்குறைபாடு நீங்க வேறுவழி ஏதுமேயில்லை.

இன்னும், கண்ணாற் கற்றறிய வல்லவர்களும் நாடோறும் நடைபெறும் உலகிய லொழுக்கங்களில் ஈடுபட்டு நிற்க வேண்டியவர்களாயிருத்தலாலும், அவை தம்மை யெல்லாம் ஒவ்வொரு நேரமும் பிறர்த் எழுதிக் காட்ட அறிந்து நடக்கலாமென்றால் அங்ஙனஞ் செய்வது தமக்கும் பிறர்க்கும் அளவிறந்த உழைப்பினையுங் காலக்கழிவினையுந் தந்து முயற்சிகட்கு இடையூறு விளைத்தலாலுங் கண்ணாற் கற்றறிய வல்லவர்க்குஞ் செவிப்பழுது பெருந்துன்பம் பயப்பதேயா மென்க. ஆதலால், அறிவினியக்கத்திற்கு இன்றியமையாச் சிறப்பினவாகிய செவிகளிரண்டும் பழுது படாமற் பாதுகாப்பதிற் கற்றவர் கல்லாதவராகிய இருதிறத்தாருங் கருத்தாயிருத்தல் வேண்டும்.

முதலிற், காதுகளினுள்ளே அழுக்குச் சேராதபடி ஒவ்வொரு நாளுந் துணியைத் திரித்து அவற்றினுள்ளே செலுத்தி அவற்றைத் தூய்மை செய்துவரல் வேண்டும். துணியைத் தவிரச், சிறு குச்சி வெள்ளிச் சிறுகரண்டி முதலான வன்பொருள்களைக் காதினுள்ளே நுழைத்தல் சிறிதும் ஆகாது. செவியினுள்ளே, பறையின் மேற்றோல் போல், மூடிநிற்குந் தோல் மிக மெல்லிய தன்மை வாய்ந்தது; அதன்மேல் வன்பொருள் ஏதேனுஞ் சிறிது பிசகிப் பட்டாலும் அது கிழிந்துபடும்; அது கிழிந்து பட்டாற் காது கேளாது; எழுச்சி என்னுங் கொடிய நோயும் அதன்கண் உண்டாகும். காதெழுச்சியாற் பெருந்துன்பம் உழந்தாரையும், உழந்து உயிர்துறந்தாரையும் கண்டிருக்கின்றேம். ஆதலால், துணியைத் திரித்து நுழைத்து மென்மையாகச் செவிகளைத் துப்புரவு செய்க. இவ்வாறு செய்வதனால் உள்ளழுக்கு நீங்காவிட்டால், ஒரு சிறு பீச்சாங்குழலில் விரற்பொறுக்கக் கூடிய வெந்நீரை இழுத்து, அதனை வேண்டுமளவு மெல்லப் பலகாற் காதினுட் பீச்சுக; பெரும் பீச்சாங்குழல் கொண்டு நீரை விசையாகப் பீச்சினாற் செவியின் உட்டோல் கிழியும்; ஆதலாற், சிறு குழலால் மெல்லப் பீச்சுக. உள்ளுள்ள குறும்பியுங் அழுக்கும்

முற்றும் வெளிப்பட்டுவிடும். அதன்பின் மெல்லிய துணியைத் திரித்துவிட்டுக் காதினுள் ஈரத்தை எடுத்து விடுக.

நம்மனோர் எண்ணெய் முழுக்குச் செய்யுங்கால் அரைப்பு, சீயக்காய் தேய்த்து வருகிறார்கள்; இவற்றைத் தேய்க்குங்காற் காதிலுந் தேய்க்கின்றார்கள்; அப்போது அவை காதினுள்ளே சென்று திரள்கின்றன. நீராடியபிற் காதிற் றிரண்ட இவ்வழுக்கை இவர்கள் உன்னிப்பதில்லை. இவ்வாறு சிறிதுசிறிதாகத் திரண்ட இவ்வழுக்குக் காதினுட் பெருநோயை விளைக்குங்கால், அப்போதும் அது வந்த காரணந் தெரியாமற் காதினுட் பலவகை மருந்தைப் பிழிந்து, பின்னும் அவ்வழுக்கை மிகுதிப்படுத்தி, நோய் தீரப்பெறாமற் கொடுந்துன்பத்திற் காளாகின்றார்கள். காதினுட் டிரண்ட அழுக்கை நீக்காமல் அங்குண்டான புண்ணை ஆற்றுதல் கூடுமோ? அகவே, காதுநோய் வந்தால் முதலிந் செயற் பாலது; சிறு பீச்சாங்குழல் கொண்டு வெந்நீரைமெல்லப் பீச்சிக் காதினுள் ளழுக்கைக் கழுவி வெளிப்படுத்து தலேயாம். காதினுள் வெந்நீரை யன்றிக் குளிர்ந்த நீரை ஏற்றல் சிறிதும் ஆகாது. வெந்நீர் விட்டுக் கழுவியபின் மெல்லிய துணித்திரியால் உள்ளுள்ள ஈரத்தை மெல்ல எடுத்துவிடல் வேண்டும். இவ்வளவும் இரண்டொருநாட் செய்தவுடனேயே பலர்க்குக் காதுநோய் தீர்ந்துவிடும்.இவ்வளவிற் நீராதபடி முதிர்ந்துபோன நோயாயிருந்தால், வெந்நீர் கொண்டு கழுவியபின், நோய் உள்ள காதுக்கு நீராவி பிடித்து வருக; அந்நோய் விரைவில் நீங்கும். இவ்வாறு செய்தலை விடுத்துக் காதினுள் எத்தகைய மருந்தும் பெய்தலாகாது என்று கடைப்பிடிக்க. காதிலுள்ள புண்ணிலிருந்து சீழ்வடியு மானால், நாடோறுஞ் சிறு பீச்சாங்குழலால் வெந்நீர் பீச்சிக் சீழைக் கழுவி விட்டு நீராவிபிடித்து, அதன்பின், மெல்லிய துணித்திரியால் உள்ளீரத்தை நீக்கியபின், பஞ்சினாற் செவியை அடைத்து விடுக; இவ்வாறு புண் ஆறும் மட்டுஞ் செய்தல் வேண்டும்.

இனி, **முகத்தின்கீழ்க் கழுத்திற்** பருக்கள், கண்ட மாலை கொண்டு துன்புறுபவர்கள், நாடோறும் மலக்குடரைக் கழுவிக் குறிகளுக்கு நீராவிபிடித்து வருதல் வேண்டும். அதனோடு, இடையிடையே பட்டினி கிடத்தலும் முதன்மை யானது. பலவகைக் கனிகள் வித்துக்களை உணவிற் பெரும்

பகுதியாக உட்கொண்டு, சோற்றுணவைக் குறைத்துக் கொளல் வேண்டும்.

***பிடரியில்*** இசிவும் வலியும் வந்தால் அவ் விடத்திற்குச் சுடுசாம்பலொற்றடங் கொடுத்து, வலிதீர் மருந்தைத் தேய்த்துப் போர்த்துக் கொள்வதுடன், இங்ஙனமே அது தீரும்மட்டுஞ் செய்துவருக.

இனி, நெஞ்சவலி மார்படைப்பு வரப்பெறுபவர்கள் மிகவுங் கருத்தாயிருந்து அந்நோயைத் தீர்த்துக் கொள்வ துடன், திரும்ப அவை வராமல் தடைசெய்தலும் வேண்டும். ஏனென்றால் உடம்பின் மற்ற இடங்களில் வரும் நோய் உயிரை உடனே கொள்ளை கொள்ளாது; மற்று, ***நெஞ்சுவலி மார்படைப்பு நோய்களோ ஒரு நொடிப் பொழுதில் உயிரைக் கொள்ளையிட வல்லன***. செல்வத்தில் மிக்கவர்களுங் கல்வியிற் சிறந்தவர்களும் உரமானயாக்கை யுடையவர்களுங் கூடத் திடீரென்று இந்நோயால் இறந்துபட்டதனைப் பலகால் யாம் அறிந்திருக்கின்றேம். நமதுடம்பின் உயிரியக்க மெல்லாம் ***நெஞ்சப்பையின்*** வாயிலாகவே நடைபெறு கின்றன. நெஞ்சப்பை பழுதுபட்டால் உடனே உயிர் உடம்பைவிட்டு நீங்குகின்றது. ஆங்கில நாட்டில் ஓர் ஊரிற் சில ஆண்டுகளுக்கு முன் ஒருவர் சடுதியில் இறந்துபட்டார். இறந்துபட்ட அவரது உடம்பு ஒரு சிறந்த மருத்துச் சாலைக்கு வருவித்து ஆராயப்பட்டது. அதனை ஆராய்ந்து பார்த்த மருத்தவ நுண்ணறிவினர், அவ்வுடம்பின் அகத்தும் புறத்தும் உள்ள உறுப்புகளில் ஏதொன்றும் எந்த வகையிலும் பழுதுபடா திருக்கவும், அது திடீரென உயிர்நீத்தது என்னையென்று பலவாற்றால் ஆராய்ந்துபார்த்துங் காரணம் ஒன்றும் புலனாயிற்றில்லை. கடைசியாக அவர் ஒருணர்வினால் உந்தப்பட்டு அவ்வுடம்பின் நெஞ்சப்பையைத் தமது வலக்கையினாற் பிடித்து, அதனை மெல்லெனப் பிசைய லானார். இவ்வாறு அவர் அதனைப் பிசையத்துவங்கிய சிறிது நேரத்திலெல்லாம் அந் நெஞ்சப்பை தானே மெல்லத் துடிக்கத் தொடங்கியது அதுகண்ட அம்மருத்துவர் கத்தியினால் வகிர்ந்த மார்பை உடனே மூடித் தைத்து விடவே உயிரிழந்த அவ்வுடம்பு மீண்டும் உயிர்பெறச், செத்தவரும் பிழைத் தெழுந்தார். ஆகையால், நெஞ்சப் பையின் இயக்கமே உயிர்

உடம்பிலிருந்து இயங்கும் இயக்கத்திற்குக் காரணமா மென்றுணர்ந்து, அவ்வுறுப்புக்கு ஏதோரு நோயும் அணுகாமற் கருத்தாயிருத்தல் வேண்டும்.

நெஞ்சுக்கு வரும் நோயெல்லாம் அதன் கீழுள்ள **தீனிப் பை மலக்குடல் குண்டிக்காய் ஆண்பெண் குறிகள் என்பவற் றிற் சூடுமிகுந்து அதனால் அங்குள்ள இரத்தஞ் சுண்ட**, அதிலிருந்தெழும் நச்சுக்காற்று மேலெழுந்து நெஞ்சப் பையைத் தாக்குதலால் உண்டாவனவாகும். இஃது எதுபோல வெனின்; நான்கு சிறு குடுவைகளை ஒன்றன்மே லொன்றாக அடுக்கிவைத்து, அடியிலுள்ள குடுவையிலும் அதன் மேலுள்ள குடுவைகளிலும் நீர்நிரப்பி, எல்லாவற்றிற்கும் மேலுள்ள ஒரு குடுவையின் வாயை ஒரு தட்டால் மூடி, அடிக்குடுவையின் கீழ்த் தீயிட்டு எரிக்க; தீயை விடாமல் எரித்து வரவர, அடிக்குடுவை யிற் சூடேறி அதிலுள்ள நீர் சுண்டிச் சுண்டிய நீரினால் எழும் ஆவி அதற்குமேலுள்ள குடுவையைத் தாக்கி அதிலுள்ள நீரைச் சுண்டவைக்கும்; அதிலிருந்தெழும் ஆவியுந் தனக்கு மேலுள்ள குடுவைநீரை அங்ஙனமே செய்ய, இங்ஙனமே ஒவ்வொரு மேலுள்ள குடுவையின் நீராவியுஞ் செய்ய, இறுதியாக மேலுள்ள குடுவைவாயை மூடிய தட்டு அதனுள்ளெழும் ஆவியாற் கிளப்பப்பட்டு மேலெழுதலைக் காணலாம்; இதுபோலவே ஆண்குறி பெண்குறி வாயிலாக உண்டான சூடு அங்குள்ள இரத்தத்தைச் சுண்டவைக்க, அதிலிருந்தெழும் நச்சுக் காற்றுக், குறிகளுக்கு, மேலுள்ள மலக்குடர் குண்டிக் காய்கைளைத் தாக்கும்; அதனால் அவற்றின்கண் உள்ள மலநீர்களும் இரத்தமுஞ் சுவற, அங்கிருந்தெழும் இன்னுங் கொடிய நச்சுக்காற்று அவற்றிற்கு மேலுள்ள தீனிப்பையைத் தாக்கும்; அதனால், தீனிப்பையும் அவ்வாறே சூடுண்டு சுவற, அங்கிருந்தெழும் இன்னுங் கொடிய நச்சுக்காற்று அதற்கு மேலுள்ள நெஞ்சப்பை மூச்சுப்பைகளைத் தாக்குகின்றது; அதனால் அவை இரத்தஞ் சுவறி வலிகொண்டு இயங்கா தொழியவே, அவற்றைக் களைகணாக்கொண்ட உயிர், அங்கிருக்க இடம்பெறா தாய் உடம்பைவிட்டு நீங்கிப் போகின்றது. இங்ஙனமாக நெஞ்சப் பைக்கும் அதனை யடுத்துள்ள மூச்சுப்பைக்கும் வரும் நோயின் மூலத்தைக் கண்டறிய வல்ல நுண்ணறிவாளர்க்கு, இச் சிறந்த உறுப்புகள்

இரண்டனையும் நோயணுகாமல் வைக்கும் வழியும், நோய்வரினும் அதனை விரைந்து தீர்க்கும் எளியமுறையும் நன்கு புலனாகா நிற்கும்.

**கொறுக்குநோய்** உடைய ஆடவர் மகளிரை மருவாமல் தம் குறிகளைப் பாதுகாக்க வல்லார்க்கு நெஞ்சுநோயே வராது. மற்று, அவை தம்மைப் பாதுகாவா தொழுகி நச்சுநோயை வருவித்துக் கொண்டார்க்கோ நெஞ்சுவலி மூச்சுப்பை நோய் கட்டாயம் வரும். ஈதென்னை? குறிகளை நோயணுகாமற் பாதுகாத் தொழுகுவார்க்கும் இந்நோய் வரக் காண்டுமா லெனின்; அவர் தாம் தூயராய் ஒழுகினுந், தம்போற் றூயராய் நடந்திராத தம் பெற்றோரிலிருந்தாயினுந், தம் பெற்றோர்க்குப் பெற்றோரிலிருந்தாயினும், அவர்க்குப் பெற்றோரிலிருந் தாயினும் அந்நோய் தொடர்ந்து வந்திருக்கு மாகலின், தாம் தூயராய் நடந்தும் அந்நோய் வருதல் என்னையென்று வினாதல் ஆகாதென்க.

அற்றேலஃதாக, பிழைபடுதல் மக்களியற்கையாதலால், ஏதோ காமவயத்தராய் அன்றி யுயர்ந்த காதல் வயத்தராய் பிழைத்தொழுகியோ பிறழ்ந்தொழுகியோ அல்லது தம் முன்னோரிலிருந்தோ **கொறுக்குநோய்** கொண்டு நெஞ்சுவலி மூச்சுநோய் முதலியவற்றால் துன்புறுவோர் அவை தீர்ந்து நலமுறுதற்கு எளியதொரு வழி காட்டுகவெனிற், காட்டுதும்; நெஞ்சுவலியேனும் மார்படைப்பேனும் மூச்சுத் திணறுத லேனும் உண்டானால், இவை இவ்வாறுண்டாதற்கு, நெஞ்சையடுத்துக் கீழேயுள்ள தீனிப்பையிலிருந்து மேலெழுந்த நச்சுக்காற்றே காரணமாமென நன்குணர்ந்து, உடனே தீனிப்பைக்கு உணவு இடுதலை நிறுத்துக. திரும்ப நன்றாய்ப் பசியெடுக்கும் வரையில் எவ்வகை யுணவும் உட்கொளல் ஆகாது. இரண்டொருநாட் கழித்துப் பசி யெடுத்தால் வலியவுணவுகளை உட்கொளாமற், கோதுமை நொய்ப் பாற்கஞ்சியே பருகல் வேண்டும். அதனொடு, வெந்நீ ரடைத்த ஒரு கண்ணாடிப்புட்டிலை மார்பிலும் முதுகிலும் ஒற்றி, அவ்விடங்களில் வலிதீர் மருந்தைத் தேய்த்துப் போர்த்துக் கொள்க. இவ்வளவில் இருந்து விடாது, நீரேற்றி கொண்டு மலநீர்க் குடர்களையுங் காலைமாலை இரண்டு வேளையுங் கழுவிவிட்டுக், குறிகளுக்கு நீராவி பிடித்து அதன்பின்

ஈரத்துணியை அடிவயிற்றிற் சுற்றிக் கட்டுக. இவ்வாறு தொடர்ந்து செய்யவே அந்நோய் விரைவிற் றீர்ந்துவிடும். மறித்தும் அந் நோய் வராமல் இம்முறைகளைத் தொடர்ந்து சிறிதுகாலம் வரையிலும், அதன்பின் இடை விட்டுவிட்டுஞ் செய்துவருக. நெஞ்சுவலி மார்படைப்பு மூச்சுதிணறல் உடையவர்கள் ஊன்தின்பவராயுங் **காப்பி தேயிலை கோக்கோநீர் பருகுபவராயும் வெற்றிலைபாக்கு புகையிலை மெல்பவராயும் இருந்தால் அத் தீயபழக்கங்களை உடனே விட்டொழித்தல் வேண்டும்**. புணர்ச்சிசெய்யுங்கால் நெஞ்சப்பையும் மூச்சுப்பையும் விரைந்து இயங்குதலால் அந்நோய் நீங்கி உடம்பு முழுநலம் பெறும்மட்டும் புணர்ச்சி செய்தலையும் நீக்கிவிடல் வேண்டும். ஏனென்றால், நெஞ்சு வலியுள்ள காலங்களில் ஊனுஞ் சோறும் உண்டு உடனே உயிரிழந் தாரையுங், காப்பிநீர் முதலியன பருகி மூச்சுத் திணறி உயிர்துறந்தாரையும், வெற்றிலை பாக்கு மென்று மார் படைத்துச் சடுதியில் இறந்தாரையும், புணர்ச்சிசெய்து அன்றே உயிர்நீத்தாரையும் யாம் பலகாலும் அறிந்திருக் கின்றேம். உயிரைக் கதுமெனப் போக்குதலில் வல்ல இந் நோயாற் பற்றப்பட்டவர்கள் இதனைக் கூற்றுவனாகவே கருதி விழிப்பாக நடத்தலிற் கடைப்பிடியாய் நிற்றல் வேண்டுமென்க.

இன்னும், மூச்சுப்பையைப் பற்றிய ஈளை இருமல் உள்ளவர்களும் இந்நோய் வந்து வருத்துங் காலங்களில் மேற்சொல்லிய முறைகளையே கையாண்டு அதனை நீக்கிக் கொள்வதல்லாமலும், பின்னர் அது வராமலும் விழிப்பாக நடத்தல் வேண்டும். இவர்கள் மேற்சொல்லிய முறைகளுடன், இஞ்சிச்சாற்றில் தேன்கலந்து ஒருநாளைக்கு மூன்று பொழுதாக, அது வேரோடு அறுமட்டுந் தொடர்ந்து பருகிவரல் வேண்டும். ஈளையிருமல் உள்ளவர்கள் **சுரைக்காய் பீர்க்கங்காய் முள்ளங்கி முளைக்கீரை** முதலான குளிர்ப் பண்டங்களை அந்நோய் அறத்தொலையும் மட்டும் உட் கொளல் ஆகாது. துவரம் பருப்புக் கடலை பருப்புகளையுஞ் சேர்க்கலாகாது. ஆவின் பாலைத் தனியே பருகாமல் இஞ்சி தேன் கலந்துங் கோதுமை கலந்துஞ் சிற்றளவாகப் பருகிவரல் வேண்டும். மார்பிலும் முதுகிலுங் கைகால்களிலுங் குளிர் காற்று படாமற் போர்த்திருத்தல் முதன்மையானது.

அடுத்தடுத்து நீராடாமல் ஒருகிழமைக்கு ஒருகால் இருகால் இளம் பதமான வெந்நீரில் தலைமுழுகுதலே செயற்பாலது. எளிதிற் செரித்து விரைவிற் பசியையுண்டாக்கும் உணவு களையன்றி வேறேதும் இவர்கள் உட்கொள்ளலாகாது. இவ்வாறு செய்துவரின் இரண்டு மூன்று கிழமைகளில் இந்நோய் அறவே நீங்கப் பெற்று நலமுறுவார் களனென்பது திண்ணம்.

இனி, **வயிற்றுவலியைப்** பற்றியும், அதுதீர்க்கும் முறை களைப் பற்றியும் ஆராய்வாம். வயிற்றுவலியானது இரண்டு காரணங்களால் வருகின்றது. முதலாவது, வயிற்றின் கீழ் உள்ள குறிகளுக்கு வரும் நோய்களிலிருந்து உண்டாகும் நச்சுக்காற்று மேலெழுந்து வயிற்றின்கண் உள்ள தீனிப் பையைத் தாக்குதலால் அதற்கு நோய் உண்டாகின்றது; இரண்டாவது, மேலிருந்து இடப்படும் உணவுகளின் பொல்லாங்கானும், அல்லது உணவுகளை மிகுத்துண்ட லானும் வயிற்றுவலி உண்டாகின்றது. முதற்சொன்ன வகையில் வரும்நோயை நீக்குதற்கு நீரேற்றி கொண்டு உடனே மலநீர்க் குடர்களைத் துப்புரவு செய்தலல்லாமலும் அடுத்தநாள் கடுக்காய்ச்சாறு அருந்தியும் அவற்றைத் தூய்மைசெய்தல் வேண்டும். அதுவேயுமன்றிக், குறிகளுக்கு நாடோறும் ஆவிபிடித்து, வயிற்றைச்சுற்றி ஈரத்துணி கட்டுதலும் இன்றியமையாதது. கோதுமைநொய்ப் பாற்கஞ்சி யைத் தவிர வேறு வலிய உணவு ஏதும் உட்கொள்ள லாகாது. வலிநீங்கும் மட்டும் இரண்டு மூன்று வேளை ஏதுமே உட்கொள்ளாமற் பட்டினி கிடத்தலே மிக நல்லது. விடாய் எடுத்தால் விரற்பொறுக்கக்கூடிய வெந்நீரை யருந்துதல் பெரிதும் நலம் பயக்கும். இன்னும் வயிற்றுவலி கொண்டு துடிதுடிக்கும்போது உடனே அதனைத் தீர்த்தற்கு எளிய தொரு முறை இருக்கின்றது. அஃதாவது, நல்ல சிற்றாமணக்கு எண்ணெயை யெடுத்து அதனை வயிற்றின்மேல் உள்ள கொப்பூழில் ஊற்றிக், கை விரல்களால் தேய்த்தலே யாகும். இவ்வாறு செய்தவுடனே வயிற்றுவலி தீர்ந்துபோகும். மலநீரும் இறங்கும். இதனொடு நின்றுவிடாமல் மேற் சொன்ன முறைகளையுந் தொடர்ந்து செய்க.

இனி, உணவுகளின் பொல்லாங்கால் வரும் வயிற்று வலியைப் போக்குதற்கும் மேற்சொன்ன முறைகளின்படியே

செய்வதோடு, அவ்வலியை வருவிக்கும் உணவுப் பண்டங் களையும் நீக்கிவிடுக. **சைவர்களிற்** பலர் வயிற்று வலியால் வருந்துதற்குக் காரணம் மிகுந்த **மிளகாய் காரத்தையும் புளியையும்** அவர்கள் சேர்ப்பதே யாகும். காய்ந்த மிளகாயி லும் பச்சை மிளகாய் மிகக் கொடியது. இவற்றொடு காப்பிநீர் இட்டிலி தோசையும் அவர்கள் காலையில் மிகுத்துண் கின்றார்கள்; காலையில் உண்டது நன்கு செரியாதிருக்கை யிலேயே, **காரம் புளி மிக்க கறி குழம்புகளுடன் சோற்றையும் பகல்வேளையில் மிசைகின்றார்கள்**; மாலையிலும் இரவிலும் அவ்வாறே இங்ஙனமாகப் பொல்லாங்கான உணவை மூன்றுவேளை நான்குவேளை மிகுத்துண்டு தீனிப்பைக்கு ஓயாத வேலை கொடுப்பதனாலேயே, அவர்கட்கு வயிற்று **வலி புளியேப்பம் வயிற்றுப்போக்கு வயிற்றுளைச்சல்** முதலான கொடிய நோய்கள் வந்து அவர்களை உயிர்மாளச் செய்கின்றன. ஆதலால் அவர்கள் அந்நோய்களை நீக்கி நலமாக வாழல் வேண்டினாற், காரம் புளியைக் குறைத்துக் **கொத்தமல்லி தேங்காய்ப்பால்** சேர்த்த குழம்பு வகைகளையுங் கறிவகை களையும் உணவிற் சேர்க்கப் பழகிக் கொள்ளல் வேண்டும். காலையிலும் இரவிலும் அடுத்தடுத்து இட்டிலி தோசை முதலான வலிய சிற்றுண்டிகளை அருந்தலாகாது. கிழமைக்கு ஒருகால் அல்லது இருகால் இவை தம்மைச் செரிக்கும் அளவாய் உண்ணலாம். ஆனாலுங், காப்பி தேயிலே கோக்கோ நீரை முற்றும் விலக்கிவிடுதலே தக்கது. ஒருநாளிற் காலை நண்பகல் இரவு என்னும் மூன்று வேளைக்கு மேல் உணவு கொள்ளலாகாது. இடையிற் பசி எடுத்தால் **இஞ்சிநீர் சுக்குநீர் கொத்துமல்லிநீர்** கலந்த பாலுஞ் சிறிது பழமும் உட்கொள்ளுதலே நன்று. ஆண்டின் முதிர்ந்தவர்கள் நண்பகலில் மட்டுந் தக்கபடி யுணவு கொண்டு, மற்றையிரண்டு பொழுதுகளிலும் நீர்த்த வுணவு கொள்ளுதலேவாய்வது. மற்று, இவரல்லாத ஊனுணவு கொள்பவர்கள் வயிற்று நோய்வந்தால் ஊனுணவை அடியோடு ஒழித்தலைத் தவிர வேறு மருந்தில்லை. சைவவுணவிலும் பொல்லாங்கில்லாத பண்டங்களையே இவர்களும் அருந்திவரல் வேண்டும்.

இனி, இசையாத பண்டங்களை யுண்டு வயிற்றுப் போக்குங் கக்கலுங் கொண்டு துன்புறுவோர்கள், மேலும் அவற்றையுட் செலுத்தாமல் விலக்கி, ஓமநீர் சிறிது சிறிது பருகி

வருவராயின், அவ்விரண்டு நோயுந் தீரும். கக்கற் கழிச்சல் அல்லது வாந்திபேதி யென்னுந் தொற்று நோயுஞ் செரியாக் குணம் உடையவர்கட்கே பெரும்பாலும் வருகின்றது. இந்நோய்க்கு கைகண்ட மருந்து **கல்கத்தா நாகேந்திர நாத் சென்** என்பவர் மருந்துக்கழகத்திற் செய்து விற்கப்படுங் **“கர்ப்பூராரிஷ்டம்”** என்பதே யாகும்; இம் மருந்தால் உயிர்பிழைத்தவர் எண்ணிறந்தோராவர். இம் மருந்து கையில் இல்லாதவர்கள் ஓமநீர் பருகி வந்தால் இக்கொடுநோய் பெரும்பாலும் நீங்கும். அதிலும் நீங்கா தாயிற், காய்ந்த மிளகாயை அரைப்பித்து அதனை ஏழெட்டுச் சிறு சிறு கோலியுருண்டைகளாக உருட்டி, அவ்வொவ்வோர் உருண்டை யினுள்ளுஞ் சிறு சிறு கருப்பூரத் துண்டுகளை வைத்துப் பொதிந்து அரைமணி நேரத்திற்கு ஒருகால் இரண்டு இரண்டு உருண்டைகளாக உட்கொள்க; கக்கலுங் கழிச்சலுஞ் சிறிது நேரத்தில் நின்றுவிடும். இதனுடன் ஒருபடி வெந்நீரில் ஆழாக்கு உப்பைக் கரைத்து, அதனை நீரேற்றிக் கொண்டு மலக்குடருக்கு ஏற்றுக; இவ் வுப்புநீர் இந்நோயை உண்டாக்கின நச்சுப் புழுக்களை கொன்று விடும். இந்நோய் கொண்ட வர்களின் உடம்பிற் சூடு குறைந்து, குளிர்ச்சி மிகு மாதலாற் சுடுசாம்பலை வறுத்து வறுத்து, அவர்களுடம்பு முழுவதும் ஒற்றடங் கொடுத்துக் **கருப்பூரநெய் தடவிப்** போர்த்து விடுக. இவ்வாறு இம் முறைகளை விரைந்து செய்யவே, இக்கொடுநோய் கொண்டவர் அது நீங்கி நலம் பெறுதல் திண்ணம். இவர் நலம் பெற்றபின் ஒரு கிழமை வரையில் ஆவின் பாலாவது, மலக் குடரை இளக்கும் விளக்கெண்ணெய், உழுந்திற்செய்த உணவுப் பண்டங் களாவது உட்கொள லாகாது; **வாழைப்பூ, வாழைக்கச்சல், முருங்கைப்பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு, மிளகாய், மிளகு, சீரகங், கடுகு, உப்பு, எலுமிச்சப்பழச்சாறு முதலியவற்றிற் செய்த கறி, மிளகுநீர், குழம்புகளும் நன்கு சமைத்த புழுங்கலரிசிச் சோறுமே உணவாக எடுக்கற்பாற்று**. இவ்வாறு செய்தால் இக் கொடுநோயால் ஆண்டுகடோறும் உயிர்மாளும் எண்ணிறந்த மாந்தர்களும் உயிர் பிழைத்து நீடினிது வாழ்வர் என்க.

இனி, உணவு செரிக்கும் அளவுக்குமேல் உண்டலானும், பச்சைமிளகாய் முதலான காரம் மிகுதியுள்ள பண்டங்களை

அடுத்தடுத்து உணவிற் சேர்த்து உட்கொள்ளுதலானுந் தீனிப்பை புண்ணாகி வயிற்றுளைச்சலையும் இரத்தக்கழிச்சலையும் உண்டாக்கும். இந்நோய் மிகக் கொடியதொன்றாகையால் இதனை முற்றவிடுதலாகாது; முற்றவிட்டாற் பிறகு தீர்ப்பதரிது; கொடுந்துன்பம் உழந்து உயிர்மாளுதல் திண்ணம். ஆகவே, இந்நோயைக் காலந் தாழாது உடனே தீர்த்தற்கு முந்துக. இது தீரும் வரையில் உணவு எடுத்த லாகாது. பசியெடுத்தாற் **சவ்வரிசிக் கஞ்சியிற் சிறிது ஆவின்பால் சேர்த்து** அதனைச் சிறிதாய்ப் பருகுக. வான் நீலநிறம் உடைய ஒரு கண்ணாடிப் புட்டிலை உள்ளும் புறம்புஞ் செவ்வையாகக் கழுவித் தூய்மைசெய்து, காய்ச்சி யாறிய நல்லநீரை அதனுட் பெய்து, அதன்வாயைக் கிடேச்சி னால் அடைத்து வெயிலில் வைத்து, மூன்றுமணி நேரஞ் சென்றபின் அதிருள்ள நீரைக் காற்பலம் விழுக்காடு ஒருமணி நேரத்திற்கு ஒருகாற் பருகிவருக. அதனொடு, மிக்க சூடாயில்லாமல் வெதுவெதுப்பாயுள்ள நீரிற் சிறிது **வெள்ளை ரோசாச் சவர்க்காரத்தைக்** கரைத்து, அதனை நீரேற்றி கொண்டு ஏற்றி மலக்குடரைக் காலை மாலை கழுவித் துப்புரவு செய்க. இவ்வாறு செய்யவே இந்நோய் இரண்டொரு நாளில் தீர்ந்துவிடும். இவ்வளவிலுந் தீராத வயிற்றுளைவும் இரத்தக் கழிச்சலும் இருந்தால், ஆழாக்கு வெந்தயத்தை ஒருநாள் மாலையில் தண்ணீரில் ஊறவைத்து மறுநாட் காலையிலெடுத்து நன்றாய்க் கழுவிய அம்மியில் இட்டு மைபோல் அரைத்து, அதனை மூன்று பகுதியாக்கி, ஒவ்வொரு பகுதியையுந் தயிரிற்கலக்கிக் காலை பகல் மாலை என்னும் மூன்று வேளையும் அருந்துக. இன்னும், ஒரு துத்த நாகத் தகட்டுத் தொட்டியில் உட்கார்ந்தால், வயிற்றின் கொப்பூழ் வரையில் நிற்குமாறு குளிர்ந்த தண்ணீரை விட்டுத், தொடைக்குக்கீழ் அடிவரையிலுங் கொப்பூழுக்குமேல் உச்சி வரையிலும் வெளிக்காற்றுப் படாமற் கம்பளியைச் சுற்றிக் கொண்டு, கால்களைத் தொட்டியின் மேலாயினும் அதற்கு வெளியேயாயினும் இருக்கவைத்துத், தொட்டி நீரினுள் இருபது நிமிடம் வரையில் உட்கார்ந்திருத்தல் வேண்டும். தொடைக்குக் கீழ் உறுப்புகளுங் கொப்பூழுக்கு மேலுறுப்புகளுந் தண்ணீரில் நனைதல் ஆகாது. இவ்வாறு நீரில் இருப்பது காற்றடக்கமான ஓர் அறையிற் செய்தல் வேண்டும். இருபது நிமிடம் நீரிலிருந்த பிறகு எழுந்து நனைந்த இடத்தின் ஈரத்தைத்

துடைத்துவிட்டு, உடம்பு முழுதும் நன்றாகப் போர்த்துக் கொண்டு சிறிது வியர்க்கும் வரையில் அங்ஙனமே யிருக்க. வியர்த்தபின் பசி எடுத்தாற் சிறிது சவ்வரிசிக்கஞ்சி குடிக்கலாம். இங்ஙனம் மூன்று பொழுதுகள் வயிற்றின் அடியை நீரிலமிழ்த்திக் குளிர வைத்தலும், வெந்தய அரைப்புக் கலந்த தயிரைக் குடித்தலும், நீரேற்றி கொண்டு இளஞ்சூடான சவர்க்காரநீர் கொண்டு மலக்குடரைக் கழுவி விடுதலும், பசியெடுத்தாற் சவ்வரிசிக் கஞ்சியையன்றி வேறேதும் உட்கொளாமையும் ஒழுங்காகச் செய்து வருவார்க்கு எத்தகைய கொடிய வயிற்றுளைவு இரத்தக் கழிவுகள் இருந்தாலும் அவை மிகுவிரைவிற்றீர்ந்து போகும். இந்நோய் தீர்ந்து உடம்பு பழைய நன்னிலைக்கு வரும் வரையிற், காரமான உணவுகளையும் எளிதிற் செரியாத திண்பண்டங்களையும் எள்ளளவுங் உட்கொள்ளாமல் மிக விழிப்பாக இருத்தல் வேண்டும்; ஏனென்றாற், போனநோய் திரும்பி வந்தால் உயிர் பிழைத்தல் அரிது. வேறு வயிற்றுப் போக்குள்ளவர்களும் மேற்கூறிய முறை வழுவாது செய்வராயின் அது தீர்ந்து முழுநலம் பெறுதல் திண்ண மென்க.

இனி **ஈரற்குலை** வலிவீக்கங்களைத் தீர்ப்பதெப்படி என்பது ஆராயற்பாற்று. ஈரல் என்னும் அகவுறுப்புத் தீனிப்பையை யடுத்து வலது விலாவின் உட்பகக்கத்தே யிருப்பது. இது பித்தநீரைத் தன்னுட் பொதிந்து வைத்து வேண்டும்போது அதனைத் தீனிப்பையினுட் செலுத்தி, அங்குவந்து சேர்ந்த உணவினைச் செரிக்கச் செய்வது. எளிதிற் செரிக்கத்தக்க உணவுகள் தீனிப்பையினுள் வந்து சேர்ந்தால், அவற்றைச் செரிப்பித்தற்கு வேண்டிய சிற்றளவின தான பித்தநீர் ஈரற்குலையிலிருந்து இரைப்பைக்கு வரும். அதனால் உண்டவுணவு நன்கு செரிந்து நலத்தைத் தரும் மற்று, எளிதிற் செரியாத உணவுப்பொருள்களை உட் கொண்டாலோ, அவற்றைச் செமிக்கப் பண்ணுதற்குப் பேரளவினதான பித்தநீர் இரைப்பையுள் வந்து நிரம்ப, இரண்டுங்கூடிச் செரியாமற் போகவே, அவற்றிலிருந்துண் டான பித்தநஞ்சு இரத்தத்திற் கலந்து உடம்பெங்கும் பரவுகின்றது. இதனால் மேனியெல்லாம் மஞ்சள் நிறமுண்டா கின்றது; **தலைவலி, கிறுகிறுப்பு, ஓக்காளம், மலச்சிக்கல், பித்தக்காய்ச்சல்**

முதலிய நோய்கள் கிளைத்துத் துன்பத்தை மிகுதி படுத்துகின்றன. இந்நோய் துவக்கத்திலேயே களையப் படாவிட்டாற், பித்த சோகையும் அதனால் உடல் வீக்கமும் உண்டாகி உயிரைப் போக்கும். ஆதலால், **எளிதிற் செரியாத காப்பி தேநீர் சாராயம் புகையிலை இறைச்சி** முதலான பொருள்களை உண்ணற்க. அறியாமையால் இவைகளை யுட்கொண்டு வருந்துவோர், உடனே இவைகளை நிறுத்தி, மலக்குடரைக் கழுவிப் பசி யெடுக்கும் வரையிற் பட்டினியாயிருக்க, நீலநிறக் கண்ணாடிப் புட்டிலில் நீர் நிரப்பி அதனை வெயிலில் வைத்தெடுத்து, அந்நீரைச் சிறிதுசிறிதாகத் தொடர்ந்து பருகி வருக. பசியெடுத்தால், வாற்கோதுமைமா இட்டுக் காய்ச்சிய ஆவின் பாலைச் சிறிதாய் அருந்துக. ஈரற்குலை வீக்கம் இருந்தால் கடுக்காய்ச்சாறு குடித்து மலநீர்க் குடர்களை துப்புரவு செய்து வீக்கமுள்ள இடத்தின் மேல் வெந்நீர்ப் புட்டியில் ஒற்றடங் கொடுத்து வலிதீர் மருந்திட்டுத் தேய்க்க. இதனோடு உடல் வீக்கமும் பித்த சோகையும் இருந்தால், அவை தீரும் வரையில் மலநீர்க் குடர்களை நாடோறும் நீரேற்றிக் கொண்டு துப்புரவு செய்து, வாற்கோதுமைக் கஞ்சியும் நாரத்தம்பழம் அத்திப்பழம் கொடிமுந்திரிப்பழம் முதலியனவும் உட்கொண்டு வருதல் வேண்டும். காலையில் ஒவ்வொரு நாளும் நாலைந்து எலுமிச்சம் பழச் சாற்றில் அரைப்பலம் இஞ்சிச்சாறு கலந்து அக்கலவை யினை வெறு வயிற்றிற் பருகி வருக. இந்நோய் தீரும்மட்டுஞ் சோற்றுணவாவது வேறு வலியவுணவாவது உட்கொள்ள லாகாது. இம் முறைகளை வழுவாமற் செய்து வந்தால், இந்நோய் விரைவில் நீங்குதல் திண்ணம். **மஞ்சட்காமாலை என்னும் நோயும் பித்தநீர் மிகுதியால் வருவதேயாகையால், அதற்கும் மேற் காட்டிய முறைகளையே செய்து அதனை விரைந்து தீர்த்துக் கொள்க.**

இனி, இடதுபக்க விலாவின் உள்ளுள்ள **மண்ணீரல்** நோயினைத் தீர்க்குமாறு காட்டுவாம். குளிர்க் காய்ச்சலால் துன்புறுவோர் அதனை விரைவிற்றீர்த்துக் கொள்ளா விட்டாலும், குளிர்க்காய்ச்சல் அடிக்கும்போது சோற்றுணா வையும் வேறு வலிய உணவுப் பண்டங்களையும் விழுங்கி விட்டாலும் மண்ணீரல் நோயுடையதாகி வீங்குகின்றது.

மண்ணீரல் வீக்கத்தையே தமிழ்நாட்டவர் **'காய்ச்சற் கட்டி'** என்கின்றனர். மண்ணீரல் வீக்கம் உள்ளவரையிற் காய்ச்சல் நீங்காது. காய்ச்சற் கட்டி பெருக்கப் பெருக்கக் காய்ச்சலும் மிகுந்து உடம்பை மெலியச் செய்யும்; சிலநாட்களில் உயிரையும் இழப்பிக்கும். ஆதலாற், காய்ச்சலுடன் மண்ணீரல் வீக்கமும் உடையவர்கள் நாடோறும் மலநீர்க் குடர்களைத் துப்புரவு செய்து, **பாட்லிவாலா** என்பவராற் செய்து விற்கப்படுங் குளிர்க்காய்ச்சல் மருந்தைத் தொடர்பாக உட்கொண்டு வரல் வேண்டும். காய்ச்சல் நிற்கும் வரையில் வாற்கோதுமைக் கஞ்சியும் உலர்ந்த பழங்கள் சிலவுமின்றி வேறேதும் உட்கொளலாகாது. காய்ச்சல் நின்று கட்டி கரையும் வரையில் **ஓட் மீல்** (Oat meal) அரிசி சிறிது சருக்கரையுடன் கூட்டி இடையிடையே நன்றாக மென்று தின்பதுடன், வாற்கோதுமைக் கஞ்சியும் உலர்ந்த பழங்கள் சிலவுமே அயிலல் வேண்டும். மண்ணீரல் வீக்கம் முற்றும் நீங்கும் வரையில் எண்ணெய் முழுக்கு ஆகாது. **ஓமந் தேய்த்து** வெது வெதுப்பான நீரில் தலைமுழுகுதலே செயற்பாலது.

இனிச் சிறுநீர்ப்பைக்கு சிறுநீரைப் பிரித்துச் செலுத்துங் குண்டிக்காயில் உண்டாகும் நோய் பெரும்பாலுங் கொறுக்கு நோய் உடையவர்களுக்கே வருகின்றது. அல்லது, எந்நேரமும் இருப்பிலிருந்து வேலைசெய்யுங் **கணக்கர் வணிகர் ஆசிரியர்** முதலாயினார்க்கும், [10]**புளிப்பு நஞ்சு** உள்ள காப்பி தேயிலை கோக்கோ நீர் விலங்கின் இறைச்சி முதலியவைகளை உட்கொள்வார்க்கும் இந்நோய் வரக் காண்கின்றேம். இஃது இடுப்பின் பிற்புறத்தே, இருப்புக்கோல் கொண்டு துளைத் தாற் போல்வதொரு கொடிய வலியினைத் தருவது. கொறுக்கு நோயுடைய மகளிர் அல்லது ஆடவரை மருவிக் கொறுக்கு நோய் கொண்டவர்பால் வருங் குண்டிக்காய் வலியானது அக் கொறுக்குநோய் உள்ளவரையில் அவர்பால் வந்தே தீரும். ஆதலால் இத்தகையோர்க்கு வருங் குண்டிக் காய் வலி அவர்க்குள்ள கொறுக்கு நோயை வேரறத் தொலைத்தால் மட்டுமே தானும் வேரோடு அற்று ஒழியும். மற்று, மேற்காட்டிய உணவுப் பண்டங்களை அருந்துதலால் வருங் குண்டிக்காய் வலியோ அப்பண்டங்களை விலக்கி னால் மட்டுமே தானும் விலகும். இனி, இருப்பிலிருந்து முயற்சி

செய்பவர்கள் காலை மாலை ஒரு மைல் தொலைவு வழிநடக்கப் பழகுவதுடன் இடையிடையே யெழுந்து உலவுதலுஞ் செய்தல் வேண்டும்; அவ்வாறு செய்து வந்தால் மட்டுமே அவர்கள் அந்நோய்க்குத் தப்பலாம். பின் எந்தக் காரணத்தால் வந்த குண்டிக்காய் வலியாயிருப்பினும், அதனை உடனே தீர்த்தற் குரிய முறைகளைச் செய்தல் வேண்டும். அவை யாவையோ வெனின்; நீரேற்றிக் கொண்டு மலக்குடரைத் துப்புரவு செய்து, ஒன்று அல்லது இரண்டு நாள் சோற்றுணவை விலக்கிக், கோதுமைநொய்க் கஞ்சி அல்லது பொங்கலை யுட்கொள்ளு தலும், இடுப்பின் பிற்புறத்தே வலியுள்ள இடத்தின்மேற் பொறுக்கக்கூடிய சூட்டிற் சுடுசாம்பல் ஒற்றடங் கொடுத்தலும், அதன்பின் “அமிர்தாஞ்சனம்” என்னும் வலிதீர் மருந்திட்டுத் தேய்த்த லுமே இந் நோயின் துன்பத்தை உடனே தணியச் செய்தற் கேற்ற எளிய முறைகளாகும். இதன் கொடுமை தணிந்த பின்னும் வாளா இராமற் கடுக்காய்ச் சாறு குடித்து மலநீர்க் குடர்களைத் தூய்மை செய்தல் வேண்டும். இடுப்பின் பிற்புறத் திற்குத் தொடர்பாக நீராவி பிடித்து வந்தாற்றான் இந்நோய் வேரோடு அறும்.

இனிக் குண்டிக்காய்வலி, ஈரல், மண்ணீரல்வலி, வீக்கம், வயிற்றுவலி முதலியவற்றிற் கெல்லாம் பெருமுதற் காரணமான கொறுக்கு நோயைப் பற்றியும் அது தீர்க்கும் முறைகளைப் பற்றியுஞ் சிறிது பேசுவோம். **கொறுக்குநோய்** என்பது அஃது உடைய மகளிர் ஆடவரை மருவுதலால் ஆண்குறி பெண் குறிகளை முதலிற்பற்றி, அதன்பின் வரவரப் பெருகி அவற்றிற்கு மேலுங் கீழும் உள்ள அகவுறுப்புப் புறவுறுப்புகளை நோய்வாய்ப் படுத்தும் இயற்கையது. இது முதன் மதற் பற்றிய மூன்று முதல் ஏழு நாட்களிற் குண்டிக்காயினைத் தாக்கி இடுப்பின் பின்புறத்தே முதலில் வலப்பக்கத்திலும் அதனை யடுத்து இடப்பக்கத்திலும் பெரியதோர் உளைச்சல் நோயினை உண்டாக்குகின்றது. அதன் பிறகு வலது காலிலாயினும் இடதுகாலிலாயினும் பிட்டத்திலிருந்து தொடை முழங்கால் கெண்டைக்கால் கணுக்கால் உள்ளங்கால் முடிய அங்ஙனமே கடுப்பினை விளைக்கின்றது. உரமான உடம்பு உடையவர்கட்கு இவ்வுளைச்சல் ஒரு கிழமைக்குப் பின் தணிந்து போனாலும், அத்தணிவினை யடுத்து ஆண்குறி

பெண்குறிகளின் உட்டு ளையில் அக் கடுப்பும் எரிவும் மிகுந்து, சிறுநீர் விடுங்காற் பெருந் துன்பத்தினைத் தருகின்றன. பிறகு, குறிகளின் கடுப்பும் எரிவுந் தணிந்தவுடனே ஆண்குறியின் முனையைச் சூழ்ந்த இடங்களிலும் அரிப்புங் கடுகளவு கொப்புளங்களுங் கிளைக் கின்றன; கிளைத்த இவை இரண்டு மூன்று நாட்களிற் புண்ணாகி விடும்; புண் ஆற்றும் மருந்து இட்டால் இவை விரைவில் ஆறும்; இல்லையேல், இவை தாமாக ஆறுதற்குப் பத்து நாட்களுக்கு மேற் செல்கின்றன. இந்நோய் பிடித்தவர்கள் மீண்டும் அந்நோய் உடையாரை மருவாமல் உடனே தக்க தீர்க்கு முறைகளைச் செய்து அதனைச் சுவடறத் தீர்த்துக் கொள்வதில் மிகவும் விழிப்பாக இருத்தல் வேண்டும். இல்லையேல், நாளடையில் இது, குண்டிக்காய் வலி, ஈரல் மண்ணீரல் வலி, சிரங்கு, கை காற் பிடிப்பு, அவற்றில் உளைச்சல் முதலான பல நோய்களையும் வருவிப்பதல்லா மலும், ஆண்குறி பெண் குறிகளையும் அரித்துவிடும் சிலருக்கு எலும்புருக்கி நோயினையும் உண்டாக்கி அவரை உயிர்மாளச் செய்யும், ஆதலால், உடனே இதனை வேரறத் தொலைத்தற்கு முந்துக. தக்க மருந்துவர்களாற் கொடுக்கப்படும் உயர்ந்த மருந்துகளை நெடுங்காலம் உண்டால் இந்நோய் தீரக்கூடும். கணவனுக்கும் மனைவிக்கும் இஃதிருந்தால் அவர்கள் நெடுங்காலம் மருவாதிருந்து மருந்துண்டால் மட்டுமே இது தீரும். இடையிடையே மருவியபடியாய் அவர்கள் எவ்வளவு காலம் எவ்வளவு சிறந்த மருந்துண்டாலும், இந் நோய் நீங்குவதில்லை. இந்நிலைமையயில் அவர்கட்குக் குழந்தைகள் பிறந்தால் இப்பொல்லாத நோய் தீங்கற்ற அம்மகாரையும் பற்றிக் கொள்கின்றது. ஆதலால், இந்நோயாற் பிடிக்கப் பட்டவர்கள் மகப்பேற்றைச் சிறிதும் அடைதல் கூடாது. தம்வயிற்றிற் பிறக்கும் இளங் குழவிகளின் நன்மையைக் கோரியாயினும் இந்நோய் உள்ளவர்கள் அதனைத் தீர்த்துக் கொள்ளும் வரையில் மகப் பெறாதிருப்பாராக.

இனி, இந் நோயை மருந்தில்லா இயற்கை முறை கொண்டு விரைவிற் றீர்த்துக் கொள்ளுதலே நல்லது. மருந்தைவிட, இயற்கை முறைகளே இதனை விரைந்து தீர்க்கும் ஆற்றல் வாய்ந்தனவாய்ப் புலனாகின்றன. கொறுக்கு நோயெல்லாம் முதலில் ஆண்குறி பெண்குறிகளைப் பற்றி

அவற்றின் வாயி லாகவே உடம்பெங்கும் பரவுதலால், ஆண்குறி பெண் குறிகளைத் தொடர்பாக ஒவ்வொருநாள் மாலையிலும் நீராவியிற் காட்டி வியர்க்க வைத்து அவற்றின் கண் ஏறிய நச்சுநீரை வெளிப்படுத்தி விடல் வேண்டும். நீராவி பிடிப்ப தற்குமுன், மலநீர்க்குடர்களை நீரேற்றி கொண்டு ஒவ்வொரு நாள் மாலையிலுந் தூய்மை செய்தல் இன்றியமை யாதது குறிகளைப் பற்றிய இந் நோய் குண்டிக்காயைத் தாக்கி, அதன்பின் அங்கிருந்து கால்களில் இறங்குதலால், இடுப்பின் பிற்புறத்தையும் நாடோறும் நீராவியிற் காட்டி நன்கு வியர்க்கவைத்தல் வேண்டும். முதலில் நீரேற்றி கொண்டு தூய்மைசெய்து கொண்டு, அதன்பின் இடுப்பின் பிற் புறத்திற்கு நீராவி பிடித்து அதன்பிற் குறிகளுக்கு ஆவி பிடித்து, ஆவிபிடித்த இடங்களைக் குளிர்ந்த நீர் கொண்டு கழுவி விடுக. ஆவி பிடிப்பதற்கு முன் கட்டியிருந்த ஆடை களை முற்றுங் களைந்து விட்டுத், தோய்த்துலர்ந்த தூய ஆடைகளையே பின்னர் உடுத்திக் கொள்ளல் வேண்டும். நீராவி பிடிக்கும் போது வயிறெங்குங் கொதிப்புண்டாகு தலால், தீனிப்பையின் இருப்பக்கதுமுள்ள ஈரல் மண்ணீரல்கள் சூடேற்றப் பெறுகின்றன; அவை சூடேறவே பித்தம் மிகும்; ஆதலால், ஆவி பிடித்தவுடனே கொப்பூழிலிருந்து கீழ்வயிறு முடிய இடுப்பைச் சுற்றி ஈரத்துணியைக் கால்மணிநேரம் வரையிற் கட்டிவைத்துப், பிறகு அவிழ்த்து விடுக. மிகுதியான பித்தச் சூடுள்ளவர்கள், மேலே காட்டிய படி ஒரு துத்தநாகத் தகட்டுத் தொட்டித் தண்ணீரில் இருபது நிமிடங்கள் வரையில் இருந்து எழுந்துவிடல் நன்று. இங்ஙனம் இருக்கவேண்டிய கட்டாயம் இல்லாதவர்கள் அடிவயிற்றில் ஈரத்துணியை மட்டுஞ் சுற்றிக் கொள்ளுதலே செய்க. கொறுக்கு நோயுடையவர்கள் அது தீரும் மட்டுந் தாம் விரும்பும் உணவுப் பண்டங்களை யெல்லாந் தாம் விரும்புமாறெல்லாம் உட் கொளலாகாது; ஊன் தின்பவர் களாயிருந்தால் அவர்கள் ஊனை முற்றும் விட்டொழித்தல் வேண்டும் அங்ஙனமே காப்பி தேநீர் முதலான பருகு நீர்களும் உடனே விலக்கற்பாலன ஆகும். அவர்கள் சைவர்களா யிருந்தால் **துவரம்பருப்பை** அடுத்தடுத்துப் பயன்படுத்த லாகாது; **புளியையுங் காரத்தையும்** மிகக் குறைந்துவிடுதல் வேண்டும். நீர்க் கோவையினைத் தரும் பண்டங்கள் மழைகால பனிக்

காலங்களிற் பயன்படுத்துதல் கூடாது. இராக்கால உணவெல்லாங் காற்றுங் குளிர்ச்சியும் இல்லாதன வாய் எளிதிற் செமிப்பனவாய் இருக்கும்படி ஒழுங்குபடுத்தல் முதன்மை யானது. வெயில் வெப்பம் மிகுந்த வேனிற் காலத்தன்றி ஏனைக் குளிர்காலத்தில் அவர்கள் குளிர்ந்த நீரில் முழுகுதலாகாது; இங்ஙனமாக யாம் காட்டிய முறைகளைப் பிசகாது கைப்பற்றி நடப்பவர்கள், கொறுக்கு நோய் அறவே தொலையப் பெற்று நலமுடன் நீடுவாழ்தல் திண்ணமென்க.

இனித், தொடையைப் பற்றி வரும் தொடைவாளை, கடுப்பு முதலிய நோய்கட்கும், முழங்காற்பிடிப்பிற்கும் நீராவி வேதுபிடித்து, அல்லது அவ்வுறுப்புகளைத் தணலிற் காய்ச்சிய வலிதீர் மருந்திட்டுத் தேய்த்து வருக. மலநீர்க் குடர்களைக் கழுவிவிடுதலும் இன்றியமையாதது. இவற்றைத் தொடர்பாகச் செய்து கொண்டு, காற்றும் புளிப்பு நஞ்சும் இல்லாத உணாப் பொருள்களையுந் தெரிந்துட்கொள் வார்க்கு இந்நோய்கள் விரைவில் நீங்கிப் போகும். இவ்வாறே கெண்டைக்கால் கணுக்கால் நோய் உள்ளவர்க்குஞ் செய்துவரின் அதுநீங்கி அவரும் நலம் பெறுவர்.

இனி, **யானைக்கால் விதைவீக்கம்** உள்ளவர்களோ மேற்கூறிய முறைகளை வழுவாது தொடர்பாகச் செய்து வருதலுடன், ஒரு கிழமைக்கு மூன்றுநாள் முழுப்பட்டினி கிடக்கவும் வேண்டும்; அதனாலுந் தீராவாயின் பின்னர் ஒரு கிழமை பட்டினி கிடந்து பார்க்க; அதனாலுந் தீராவாயிற் பதினைந்துநாட் பட்டினி கிடக்க; அதுவும் முழுப் பயன் றராவிடின் ஒரு திங்கள், அல்லது நாற்பதுநாட் பட்டினி கிடந்தவர்க்கு அந்நோய்களும் பிற நோய்கள் எல்லாமும் வேரோடு அற்றொழியும் என்று கடைப்பிடிக்க. பட்டினி கிடக்கும் நாட்களில் மேற்கொள்ள வேண்டிய முறைகளை முன்னரே நன்குவிளக்கியிருக்கின்றேம்; அவைகளைக் கருத்திற் பதியவைத்து அவற்றின்படி ஒழுங்காக நடந்து வருக.

என்றிதுகாறும், உடம்பின் உச்சியிலிருந்து காலின் அடி வரையில் வரும் நோய்களையும், அவற்றைத் தீர்க்கும் முறைகளையும் எடுத்துக் கூறினாம். இனி, உடல் முழுதும் வருஞ் **சொறி சிரங்கு, படை, கட்டிகள்** முதலியவற்றைத் தீர்க்குமுறை காட்டி, அவ்வளவில் இவ் வியலை முடிப்பாம்.

*பித்தளை, செம்பு,. ஈயம், அலுமீனியம் முதலான ஏனங்களிற் சமைத்த காரஉணவை உட்கொள்ளுதலாலும், பல்வகைக் கழிவுகள் சேர்ந்த சாக்கடைநீர், சகதி, குப்பை முதலான அழுக்குகள் நிரம்பிய இடங்களிலிருந்து அவற்றி லுண்டான நச்சுக் கொசுக்களினாற் கடியுண்டு வருந்து தலானும், நோயாளிகளுடன் ஒருங்கு உறைதலானும், எக் காலத்துங் குளிர்ந்த நீரிலேயே முழுகுதலானும், நடோறும் ஆடைகளைக் களைந்து துவைத்து உலர்ந்த வேறு ஆடைகளை உடுத்தாமையானும், பலர்க்குச் சொறி சிரங்கு படை கட்டிகள் வருகின்றன.*

*இவைகளை வராமற் றடுப்பதற்குச் சிறந்த முறையா தென்றால் அவற்றை வருவிக்கும் காரணங்களை விலக்கு தலேயாம். மட்பாண்டங்களிலன்றி வேறு* **பித்தளை செப்பு ஏனங்களில் உணவு சமைக்கும் போலி நாகரிகத்தை முற்றும் அருவருத்து விட்டொழித்தல் முதன்மையானது. மிளகாய் கடுகு முதலிய காரப்பொருள்களையும் புளியையும் மிகுதி யாகக் குழம்பு கறிகளிற் சேர்த்தல் ஆகாது.** *சாக்கடைநீர் சகதி குப்பைகள் தாமிருக்கும் இடங்களிச் சேராமல் அவைகளை அவ்வப்போது அப்புறப்படுத்தி இடங்களை மிகவுந் தூய்மை யாக வைத்துக் கொளல் வேண்டும். இரவிற் கொசுக்கள் கடியாவண்ணங் கொசு வலைக்குள் உறங்குதல் வேண்டும். வீணான பட்டுச் சரிகைப் புடைவைகளுக்கும் நகைகளுக்குங் கடன் வாங்கியாயினும் பணச்செலவு செய்யத் துணிந்து நிற்கும் நம்மனோர், தமதுடல் நலத்தைப் பேணுதற்கு முதன்மையாக வேண்டப்படுஞ் சில கொசு வலைகளைச் செய்து கொள் வதற்குச் சிறு செலவு தானுஞ் செய்ய மனம் இசையாமை பெரிதும் வருந்தத் தகுவதன்றோ? தமதுடம்பு சொறிகொண்டு வீங்கி வெடித்தால் அப்பட்டுத் துணிகளும் நகைகளும் அந்நாற்றவுடம்பை அழகு செய்யுமா? செய்யாவே, ஆகையால் தமதுடம்பைப் பேணுதற்கு இன்றியமையாத கருவிகளை அமைத்துக் கொள்வதில் நம்மனோர் கருத்தைச் செலுத்திப் பொருட்செலவு செய்வாராக! இன்னும் நோயாளிகள் தம்முடன் ஒருங்கு உறையாதபடி, அவர்களுக்கு ஓரிடமுந் தமக்கோரிடமும் ஓர் இல்லத்திலேயே வகுத்துக் கொள்ளலாம். மனைவியும், கணவனுமா யிருந்தாலுங்கூட, ஒருவருக்கொருவர்*

உதவி செய்யும் நேரத்தன்றி மற்ற நேரங்களில் அவர்கள் தனித்தனி வெவ்வேறு அகன்றிருத்தலே செயற்பாலது; ஏனென்றால் ஒருவர்க்குள்ள நோய் மற்றவர்க்கும் வந்து விட்டால் ஒருவர் மற்றவர்க்கு உதவியுஞ் செய்ய இயலாமல் இருவருமாய்த் துன்புறல்வேண்டி வருமன்றோ? ஆதலாற், சிறிதாயினும் அவர் விலகியிருத்தலே நன்றாகும். இன்னுங், குளிர்ந்த நீரில் முழுகுவோர் அதனை இடையிடையே விட்டுவைத்து, விரற் பொறுக்கக் கூடிய வெந்நீரிலுந் தலைமுழுகி இரத்தத்தி லேறிய நச்சு நீரைக் கக்க வைத்தல் இன்றியமையாதது. இன்னும் ஒரு நாட் கட்டியிருந்த ஆடையை மறுநாட் கட்டியிராமல், அதனை அவிழ்த்துவிட்டு, நன்றாய்த் துவைத்துலர்ந்த ஆடையை யுடுத்துக் கொள்ளுதலும் வேண்டும். வசதியிருந்தாற் காலை மாலை இரு பொழுது களும் ஆடைகளை மாற்றுதல் மிக நல்லது. இன்னும் மலச்சிக்கலுக்கு இடம் உண்டாகாமல், கீரை வகைகளைச் சேர்த்தலுடன், பழங்கள் உழுந்திற் செய்த பண்டங்கள் நெய் பால் தயிர் முதலானவைகளையும் இடையிடையே யுட்கொண்டு வருதல் வேண்டும். இம் முறைகளை வழுவாது கைப்பற்றி நடப்பவர்க்கு அவர்தம் மேனி மாசு மறுவற்றுத், தெளிந்த அழுகு வாய்ந்து திகழும் என்க.

இனி, ஆண்பாலர் பெண்பாலரில் ஆண்டன்மை பெண்டம்மையிழந்தவரும், மகப்பெறாது மலடராயிருப்ப வரும் பலர் உளர். இவ் விருதிறத்தாரும் பார்வைக்கு மக்கள் வடிவு வாய்ந்தவராயிருப்பினும், இவர் தமது செயலாலோ தம் முன்னோரது செயலாலோ, இறைவன் வகுத்த மக்களி யற்கைக்கு மாறான **அலி பேடிகளாயும் மலடர்களாயு** மிருந்து துன்புறுகின்றனர். தமது செயலால் ஆண்மை பெண்மை யிழந்தும் மலட்டுத் தன்மை வாய்ந்தும் நடைப் பிணங்களாய் உயிர் பிழைத்திருப்பவர், பெரும்பாலும் பேதை மணம் புரியும் பார்ப்பனரிலுஞ் செல்வர்களிலுமே மிகுதியாக உளர். அஃது ஏது காரணத்தாலென்றாற் கூறுதும்; உலகத்தில் பிறந்த ஆண்பெண் உயிர்களெல்லாந் தாம் மருவுதற்கேற்ற பருவம் அடைந்த பின்னரே ஒருங்கு கூடிக் களிக்கின்றன. ஆனாற், பார்ப்பனர்களோ பெரும்பாலுந் தம் பெண் மகளை அவர்கள் பூவா முன்னரே ஆண்மைமிக்க இளைஞர்கட்கு

மணஞ்செய்து கொடுத்தலுடன், மணஞ் செய்த நாளிலேயே அவர் இருவரும் புணர்ச்சி செய்யுமாறு ஏவுகின்றனர். புணர்ச்சிக்கு ஏற்ற படியாகப் பெண்குறியின் உட்பகுதிகள் வளராதிருக்கையில், தம் பெண்மக்கள் தம்மினும் ஆண்டின் முதிர்ந்த இளைஞரைப் புணருமாறு ஏவுதலால், அச்சிறுமி களின் பெண் உறுப்புப் பழுதாய் விடுகின்றது. ஒரோவொரு குடும்பங்களில் உள்ள அறிவுமிக்க தாய்தந்தையர், பூவாத தம் சிறுமியரை அவர்தங் கணவருடன் கூடாதபடி தடுத்துக் காத்து விழிப்பா யிருந்தாலும், அச்சிறுமியரும் அவர்தங் காளைக் கணவர்களும் எப்போதாயினும் ஓரிடத்திலிருக்கும் படி நேருங்கால், அக்காளைகள் தம் மனைவி யரை, உரிமை பற்றி, அவர்தம் பெற்றோர் அறியாமலே வலிந்துபற்றிப் புணர்ந்து விடுகின்றனர். இத்தகைய பருவமல்லாப் புணர்ச்சி யினாற் பெண்மக்களே தமது பெண்டன்மை யிழந்தும், மலடராகியும் வேறுபல நோய்கள் கொண்டுந் தம் வாழ்நாள் முழுதுந் துன்புறுகின்றனர். ஆதலால், தம் **பெண்மக்களைப் பூவாமுன்னரே மணஞ் செய்யும் அறக்கொடிய வழக்கத்தைப் பார்ப்பனர்களும் அவரைப் பின்பற்றி நடக்கும் ஏனைக் குலத்தவர்களும் அடியோடு ஒழித்து விடல் வேண்டும்.** ஆண் பெண்ணுடம்பு களில் ஆற்றல் வாய்ந்த முதன்மைக் கருவி களான ஆண் பெண் குறிகள் இளமைக் காலத்திலேயே தம் நிலைகுலைந்து பழுதாய்ப் போமானால், பிறகு அவற்றைச் சீர்திருத்துதற்கு எத்தகைய மருந்தும் எத்தகைய முறையும் இல்லையென்று உறுதியாய் உணர்ந்து கொள்க.

இனிச், செல்வர்களில் ஆண்மை பெண்மை யிழப்பதும், மலடுபட்டிருப்பதும் மிகுதியாய்க் காணப்படுதற்குக் காரணம். அவர்களிற் பெரும்பான்மையோர் இயற்கைக்கு மாறான நடையுடையரா யிருப்பதே யாகும். செல்வர்கள் தமக்குள்ள செல்வ வளத்தால் உடம்பு வருந்தப் பாடுபடாத வராயிருக்கின்றனர்; அதனால் அவருடம்பின் உள்ளும் புறம்பும் உள்ள உறுப்புகள் வேண்டிய அளவு இயங்காமல் வலிவு குன்றுகின்றன; அதனால் உண்ட உணவுகள் எளிதிலே செரிக்கப் பெறாமலுஞ், செரித்தாலுங் கொழுப்பு மிகுந்து இரத்தக் குழாய்கள் அடைக்கப் பெற்றும் பல்வகை நோய்களாற் பிணிக்கப்பட்டுத் துன்புறுகின்றனர். அவர்களிற்

பலர் அங்ஙனங் கொழுமையான உணவுகளையுண்ட கொழுப்பு மிகுதியால் இரத்த ஓட்டத்தையும் நரம்புகளின் சுருசுருப்பையுங் குறைத்து விடுதலாற்றான், ஆண்மை பெண்மை யிழக்கின்றனர், மலடராயிருக்கின்றனர். இவர்கள் இக்குறைபாட்டை நீக்கி நலம்பெறுதல் வேண்டுமாயின், உடல் வருந்த உழைத்துத், தமதுடம்பு வேண்டுமளவே உணவெடுத்து, இடையிடையே ஏதும் அருந்தாமற் பட்டினிகிடந்து வருதலும் வேண்டும். இவ்வாறு செய்யவே இழந்த ஆண்மை பெண்மையை மீளப் பெற்று மலடுநீங்கி அவர் இனிது வாழ்வரென்க.

இனி, இளமைக் காலத்தில் அளவிறந்த காம வயத்தராய் ஒழுகுதலாலும், அடுத்தடுத்து நோயாற் பிணிக்கப்பட்டு உடம்பின் வலிவு குறைதலாலும், வறுமையால் உடம்புக்கு வேண்டிய கொழும் பண்டங்கள் இடையிடையே உட் கொள்ளாமையாலும், அளவிறந்த மூளையுழைப்பு உடம் புழைப்பினை இடையீடின்றிச் செய்து வருதலாலும் ஆண் பெண்பாலர் ஆண்மை பெண்மையிழப்பதும் உண்டு. முற்பருவத்திற் காமவின்பத்தை மிகுதியாய்த் துய்த்து உடல் வலிமையிழந்தவர்கள், அறைக் கீரையை அவித்து அவித்த நீரைக் கீழே உகுத்து விடாமல் அக் கீரையுடனே சுவறு வித்தெடுத்துப், பின்னர் அதனை நெய்யில் துவட்டி உணவாகப் பயன்படுத்து தலும், முருங்கைவித்து முருங்கைப்பூ இட்டுக் காய்ச்சிய பாலையாயினுங், கசப் பில்லாத தோல் போக்கிய வாதுமைப் பருப்பை அரைத்துச சீனாக் கற்கண்டின் பொடியுங் கலந்து கலக்கிய ஆவின் பாலையாயினும் காலைமாலையிருபொழுதும் பழகி வருதலும்; வேண்டியவளவு உடற்பயிற்சி செய்தலுந்; தூய காற்றுந் தூயநீர் தூயவுணவுகளை உட்கொண்டு வருதலுங்; காதலின்பக் கதைகளைப் பயிலுதலுங்; கவர்ச்சியை விளைக்கும் அழகிய மாதர் ஆடவர் உருவத்தைக் காண்டலும் நினைத்தலும்; இனிய இசைப் பாட்டுகளைக் கேட்டு நறுவிய **புழுகு முல்லை சண்பகம் மகிழ் பனிநீர் சந்தனம்** முதலிய வற்றின் குளிர்ந்த மணத்தை மோத்தலும் பிறவும் ஒழுங்காகச் செய்து வருகுவராயின், இழந்த ஆண்மை பெண்மையினைப் பெற்றுத் திரும்பவும் இன்பம் நுகர்தற்கேற்ற உரத்தினை எய்துவர். ஆனாலும், இவர்கள் இருகிழமைக்கு ஒரு காலுக்குமேற் புணர்ச்சியின் பத்தினை விரும்புதல் நன்றா காது. இவ்வாறு ஒரு திங்களில் இரண்டு முறைக்கு மேற்

புணராதவர்கள், ஆண்டில் முதிர்ந்தாலும் இளைஞராகவே யிருப்பர். மற்று, அடுத்தடுத்துப் புணர்பவர்களோ ஆண்டில் இளைஞராயினும் முதுமைமிகுந்து, அப் புணர்ச்சியின்பந் துய்க்கவும் ஏலாதவராய ரென்க.

இனி, நோயால் வருந்தி ஆண்மை பெண்மை யிழந்தவர், நோயை அறவே தொலைத்து, மேற் கூறியபடி நடப்பராயின் அவரும் வலிமையுடையராவர். **வறுமையுடையவர்கள் பெரும்பாலுந் தாம் வறுமைப் படுவதெல்லாந் தமது அறிவைப் பெருக்கி அதனைப் பயன்படுத்தாமையாலும், பொருள் ஈட்டுதற்கு வேண்டும் முயற்சிகளைக் காலமும் இடமுந் தமது தகுதியும் அறிந்து தக்கவாறு செய்யாமல் மடிந்திருத்தலாலுமே யென்பதை நன்கு உணர்ந்து, தம் அறிவையும் முயற்சியையும் ஏற்ற முறையிற் செலுத்திப் பொருள் ஈட்டி வறுமையைத் தொலைத்து விடுதல் வேண்டும்.** ஈட்டிய பொருளை வறுமைக்கு அஞ்சி மேலும் மேலும் பெருக்குவதிலேயே கருத்தைச் செலுத்தாமல், அது கொண்டு பல்வகை அறங்கள் செய்து, தாமும் விழுமிய பண்டங்களை அளவாக நுகர்ந்து இன்புறல் வேண்டும். பிறவியெடுத்தது அறிவைப் பெருக்கி இன்பத்தை நுகர்ந்து இறைவனடி சேர்தற் பொருட்டே யல்லாமல், அறியாமையிற் புதைந்து துன்பத்திலுழன்று நிரயத்திற் சேர்தற்கன்றே. எத்துணை மிகுதியாகப் பொருளைச் சேர்த்து வைத்தாலும், இறந்து போம்பொழுது **“காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே”** ஆதலால், வறுமை தீரப் பொருள் திரட்டி அறஞ்செய்து இன்பம் நுகர்க.

இனி, அளவிறந்த மூளையுழைப்பு உடம்புழைப்பினைச் செய்பவர்கள் இடையிடையே அவ்வுழைப்பினை விட்டு வைத்துக், கொழுவிய பண்டங்களையும் மேற்கூறியவாறு அருந்தி வருகுவராயின், அவருஞ் சில நாட்களில் உடம்பு வலிவினைப் பெற்று இன்பம் நுகர்தற்கேற்ற தகுதியுடைய ராவர்.

இனிப், பெண்பாலாரிற் சிலர் மகவு ஈன்றபிற், கருப்பை கீழே தொங்கிப் பெண்குறி வாய்க்கீழ் வந்து அதனை அடைத்துவிடப் பெறுதலிற், கணவனொடு கூடி வாழ்தல் இயலாதவராய் விடுகின்றனர். இவ்வாறு மாதர் சிலர் பலர்க்குக்

கருப்பை கீழே தொங்கிவிடுதல் ஏது காரணத்தால் என்பது சிறிது ஆராயற்பாற்று. பிள்ளைமைப் பருவம் முதற்கொண்டே நன்கு உழைப்பவர்களாய்ச் சுமைகளைத் தூக்கி வழக்கப் பட்டவர்களுக்கு, உடம்பின் அகத்துள்ள நரம்புகள் வலிவேறி இறுகிய நிலையிலிருக்கும்; அத்தகைய வர் எத்துணை மகவீன்றாலும், ஈன்ற சில திங்கட்குப்பின் எவ்வளவு சுமையான குடங்கள் விறகுக் கட்டுகள் அரிசி மூட்டைகள் வைக்கோற் கட்டுகள் முதலியவைகளைச் சுமந்து திரிந்தாலும், அவர் கருப்பை சிறிதுங் கீழ் இறங்குவதில்லை. ஆனாற், சிறுபருவந் தொட்டே சுமையான பொருள்களைத் தூக்கியுங் கடுமையாக உழைத்தும் பழகாத மாதர்தம் உடம்பின் நரம்புகளோ உரமில்லாதனவாய் இளகிய பதத்தில் இருக்கும்; அத்தகையவர் மகவீன்றபின் வறுமையினாலோ, தம்முடன் ஒருங்கு உறையும் மாமி நாத்துணார், தருந்துன்பத்திற்கு அஞ்சியோ, கடுமையான வேலைகளைச் செய்து சுமையான பொருள்களைத் தூக்குவ ராயின், அவரது கருப்பை நரம்பு இளகி நீண்டு அதனைக் கீழே தொங்க விடுகின்றது. ஆதலால், மென்றன்மையில் வளர்ந்த மாதரார் தம் கணவரை மருவிய பின்நாட்களிலும், மகவு ஈன்ற பின்னருங் கடுமையான வேலைகளைச் செய்தலும் ஆகாது. சுமையான பண்டங்களைத் தூக்குதலும் ஆகாது. இதில் அம் மெல்லியலார் மிக விழிப்பாக இருத்தலுடன், அவர்தங் கணவரும் அவர் கடுமையான வேலைகளைச் செய்யாத படி விழிப்பாக இருந்து அவரைத் தடை செய்து வரல் வேண்டும்.

அற்றேல், அறியாமையாற் கடுமையான வேலைகளைச் செய்துஞ் சுமைகளைத் தூக்கியுங் கருப்பை கீழே இறங்கப் பெற்றார்க்கு. அதனைத் திரும்ப மேலேறச் செய்யத்தக்கது ஏதுமுண்டோவெனிற்; பெரும்பாலுங் கீழ் இறங்கிய கருப்பை திரும்ப மேலேறுதல் அரிது. ஆனாலும், ஒரு துத்தநாகத் தகட்டுத் தொட்டியில், உட்கார்ந்தாற் கொப்பூழ் வரையில் நிற்கத்தக்க வளவு குளிர்ந்த நீரை நிரப்பி, அந்நீரிற் காலை நண்பகல் மாலையென்னும், மூன்று பொழுதும் உட்கார்ந் தெழுந்து உடம்பைச் சிறிது வியர்க்க வைக்கும் மாதர்க்குத் திரும்பவுங் கருப்பை மேலேறுதல் கூடும். எனினுங் கருப்பை கீழே இறங்குவதாகக் காணப்பட்டவுடனே இங்ஙனங் குளிர்ந்த நீரில் உட்காரும் முறையினைத் துவங்கி, மறுபடியும் அக்

கருக்பை மேலேறும் வரையில் அதனை விடாது தொடர்பாக செய்து வரல் வேண்டும். அதனோடு, அவர்கள் அரை வயிற்றுக்குமேல் உணவருந்தல் ஆகாது; உணவுஞ் சூடாக இல்லாமற் குளிர்ந்ததாகவே யிருத்தல் வேண்டும்; மலநீர் அடைப்புகள் வயிற்றில் இல்லாதபடி நாடோறும் மாலையில் ஆறிய வெந்நீரில் வெள்ளை ரோசாச் சவர்க் காரத்தைக் கரைத்து நீரேற்றி கொண்டு மலநீர்க் குடர்களைத் துப்புரவு செய்து நீரில் உட்கார்ந்து வரல் வேண்டும். உணவாகச் சேர்க்கப்படும் பண்டங்கள் துவர்ப்புச் சுவை யுடையனவா யிருக்க வேண்டுமே யல்லாமல், தித்திப்பு காரம் புளிப்புள்ளனவாயிருத்தல் ஆகாது; எலுமிச்சம்பழச் சாறு குழம்பு கறிகளிற் சேர்க்கப்படல் வேண்டும். இவ்வாறு ஒழுங்காகச் செய்துவரும் மாதர்க்குக் கீழ் இறங்கிய கருப்பை மேலேறுதல் திண்ணம், மேலேறியபின் ஓராண்டுவரையில் அவர் தம் கணவரை மருவுதல் சிறிதும் ஆகாது. மற்றுக் கருப்பை கீழ் இறங்கி நெடுநாட் சென்றபின், இம் முறை களைச் செய்தால் அவை பயன்தரா. ஆனாலும், அவர்கள் ஆங்கில மருத்துவர் உதவிகொண்டு, அவர் தருங்கருவியினாற் கீழிறங்கிய கருப்பையினை மேலேற்றுவித்து, அவர் சொல்லுமாறு நடப்பராயிற், கீழிறங்கி நெடுநாட்பட்ட கருப்பையும் மேலேறுதல் கூடுமென்க.

இனி, உடம்பின்மேல் எந்தப் பகுதியில் எந்த உறுப்பிற் **சிரங்குகள், கட்டிகள், புண்**கள் வந்தாலும் அவற்றைத் தீர்க்கும் முறை காட்டுவாம்; மேலே சொல்லிய முறைகளின் படி கருத்தாய் நடந்து வருவார்க்கு இவை வராவென்பது திண்ணமேயாயினும், அம் முறைகளை அறியாமையாலோ, அறிந்தும் அவற்றின்படி நடவாமையாலோ சிரங்குகள், கட்டிகள் வரப்பெற்றார்க்கு அவற்றைத் தீர்க்கும் முறை காட்டுதல் அறமாயிருக்கின்றது. உடம்பின் மேல் எந்த இடத்திற் சிரங்கு வருவதாயிருந்தாலும் அங்கே முதலிற் சிறிது வலி தோன்றும்; வலி தோன்றியவுடன் வாளா இராமல் நீரேற்றி கொண்டேனும் மலக்கழிவு மருந்து அருந்தியேனும் மலக்குடரைத் துப்புரவு செய்க. ஆவின் பாலும் வாற் கோதுமை மாவுங்கலந்து செய்த கஞ்சியை உச்சிப்பகலில் மட்டும் பருகி, மற்றுக் காலைப் பொழுதிலும் இராப் பொழுதிலும் ஏதும்

உணவெடாது பட்டினியாய் இருக்க அதனொடு, வலியுள்ள இடத்தைக் காலை மாலை இரு பொழுதுகளும் நன்றாய்ச் சுடச் சுட நீராவியிற் காட்டி வியர்க்கவைத்துப், பின்னர்க் குளிர்ந்த நீர்விட்டு அவ்விடத்தைக் கழுவி, ஈரத்தைத் துணியாற் றுடைத்து விடுக. இவ்வாறு மூன்றுநாட் செய்யவே, அவ்வலி தீர்ந்து போகும்; அவ்விடத்திற் கட்டியும் வராது. எமக்கும் எம்மைச் சார்ந்தார் பலர்க்குஞ் சிரங்குகள் பருக்கள் கட்டிகள் வரும் அடையாளங்கள் கண்டபோதெல்லாம் இங்ஙனமே செய்து அவை வராமற்றடைசெய்து கொண்டேம்.

ஆனாலும், இம்முறைகளைக் கடைப்பிடியாய்ச் செய்யாமல் வழுவிப் போனார்க்குச் சில நாட்களிலெல்லாம் வலி கண்ட இடம் புடைத்துக் கட்டியுண்டாகும். அவ்வாறு கட்டியுண்டாகி அதனுட் சீழ் பிடிக்குங்கால் ஆற்றொணா வலியுந் துன்பமும் விளையும் புடைத்துக் கட்டியுண்டாகத் துவங்கியபின் எவ்வளவு நீராவிவேது பிடித்தாலும் அது தீராது, என்றாலும், அந்நிலையிலும் நீராவிவேது பிடித்தலே கட்டாயமாகச் செயற்பாலது; ஏனென்றால், வேது பிடியா விட்டாற் கட்டி திரண்டு பழுக்க நீண்ட நாட் செல்லும்; பொறுக்க முடியாத வலியும் உண்டாகும். வேது முறையாகப் பிடித்துவந்தாற், கட்டி விரைவிற் றிரண்டு பழுப்பதுடன் வலியுங் குறையும். இன்னும், அதைத்துப் புடைத்த கட்டி சீழ் பிடிக்குங்கால், அச்சீழ் நரம்புகளி னூடே புரையோடிச் சென்று அடுத்துள்ள உறுப்புகளையும் பழுது படுத்திவிடும்; அங்ஙனம் ஆகாமற் பாதுகாப்பதற்கும் நீராவிவேது பெரிதும் உதவி செய்கின்றது. இங்ஙனம் வேதுபிடித்து வரும்போது சிலகால் அக்கட்டி கரைந்து மறைந்து போதலும் உண்டு. அப்படியாகாவிட்டால் அது நன்றாய் பழுத்துவரும்; இரத்தத்திலுள்ள நச்சுநீரெல்லாம் அதற்கண் வந்து திரண்டு சீழாய் நிற்கும். இவ்வாறு திரண்டு கட்டி பெருக்கப் பெருக்க அது தானாகவே உடைந்து சீழ் முழுதும் வெளிப்பட்டு விடும். வேது பிடித்துக் கட்டி பழுக்கத் துவங்குகையில் மற்றொன்றுஞ் செய்தல் இன்றியமையாதது. அஃதாவது: கேழ்வரகுமாவை ஓர் இருப்புக் கரண்டியிலிட்டு, அதிற் சிறிது நீர் கலந்து, கரண்டியை நெருப்பின்மேல் வைத்து, மாவைக் கிண்டிக் காய்ச்சிக்

குழைவான பதத்தில் இறக்கி, ஓர் இலையிலாயினும் வாழைச் சருகிலாயினும் அந்த மாவைத் தடவிப் பொறுக்கக்கூடிய சூட்டில் அதனைக் கட்டிமேல் வைத்து ஒரு துணிக் கிழிவினாற் கட்டி விடுக. இது கட்டிப் பதினைந்து அல்லது இருபது நிமிடம் ஆனபின், மறுபடியும் அங்ஙனமே கேழ்வரகுமாவைக் கிண்டி யெடுத்துக் கட்டி மேல் வைத்துக் கட்டுதல் வேண்டும். இங்ஙனமாக ஒரு நாளிற் பலமுறையுங் கேழ்வரகுமாவைக் கிண்டிக் கிண்டி யெடுத்து அக்கட்டிமேற் கட்டிவரவே, இரண்டு அல்லது மூன்று நாட்களில் அக்கட்டி நன்றாய்ப் பழுத்து உடைந்து விடும். உடைந்தபின் ஓர் ஏனத்தில் வெந்நீரை வைத்துக் கொண்டு ஒரு தூய கந்தைத் துணியை அதில் நனைத் தெடுத்து, அதனால் அக்கட்டியைச் சுற்றி அதுக்கி அதுக்கி, அதிலுள்ள சீழையுஞ் செந்நீரையும் வெளிப்படுத்திக் கழுவி விடுக. அதன் பின் ஈரத்தைத் துவர்த்தி விட்டு, மறுபடியுங் கேழ்வரகு மாவைக் கிளறிக் குழைந்தபதத்திற் சூடாக வைத்து அடுத்தடுத்துக் கட்டி வருக. சீழுஞ் செந்நீரம் நின்று உடைந்தகட்டி செம்புண்பட்டு ஆறத்துவங்கிய பின்னர்க் கேழ்வரகு மாவைக் கிண்டி இறுகிய பகத்தில எடுத்து, அப்புண்ணின்மேல் வைத்துப் பலகாற் கட்டிவரல் வேண்டும். பின்னர் இரண்டு மூன்று நாளிற் புண் தானாகவே காய்ந்து விடும். கட்டி உடைந்து ஆறத்துவங்கும் மட்டுங் கேழ்வரகு மாவை இளகிய பதத்திலும், ஆறத் துவங்கியபின் அதனை இறுகிய பதத்திலும் வைத்துக் கட்டுதலை நினைவிற் பதித்துக் கொள்க. இங்ஙனங் கேழ்வரகுமாக் கட்டும் போதுங் கட்டிக்குக் காலை மாலை வேது பிடித்தலையும், ஒவ்வொரு நாளும் மாலையில் நீரேற்றி கொண்டு மலக் குடரைத் துப்புரவு செய்தலையும் மறவற்க. வயிற்றிலும் உணவையும் நீரையும் மிகுதியாய் ஏற்றிப் பசித்தீயை அவித்து விடாமற் சிறிதாக அவற்றை யுட் கொண்டு பசித்தீ கொழுந்துவிட் டெரிந்து உடம்பின் அகத்துள்ள நச்சுநீரை உரிஞ்சி விடுமாறு செய்தல் மிகவும் இன்றியமையாதது.

நோயுள்ள காலங்களிலாயினுங், கட்டி சிரங்கு புண் முதலியவற்றால் துன்புறுங் காலங்களிலாயினும், அவற்றை மிகுதிப்படுத்துங் காப்பி, தேநீர் கோக்கோ முதலான நச்சுக் குடி நீர்களையும், ஊனையும், மயக்கப் பொருள்களையும் மக்கள்

அருந்தாதிருப்பாராக! தமது உடல்நலத்தின் பொருட் டாகவேனும் இந்நஞ்சுகளை நீக்கமாட்டாமல் அவற்றை ஆராவேட்கையுடன் உட்கொள்ளும் மாந்தர்கள், பெருங் குற்ற மில்லாத உயர்ந்தோ ரிடத்துங் குற்றங்கள் ஆராய்வதும், அவரைப் பழித்தலும், அவர்மேற் புறங்கூறுதலும், அவர்க்கு அறிவுரை கூற வருதலும் எத்துணைப் பேதைமை! எத்துணை இறுமாப்பு!

இனி, மேற் சொல்லியவாறு எத்தகைய கட்டிகளையும் புண்களையும் எளிதிலே விரைவிற் றீர்த்துக் கொள்வது எவர்க்கும் இயல்வதாகவும், அவ்வாறு செய்தலை விடுத்து, நம்மனோரிற் கற்றவர்களுங் கூட ஆங்கில மருத்துவர்களைப் பெரும் பொருள் கொடுத்து வருவித்து, அவற்றை ஆழமாக அறுப்பித்தும் புண்களினுள்ளே எரிமருந்து தடவிய திரிச் சீலைகளை நுழைப்பித்தும் பலநாட்கள் தொடர்பாகச் சொல்லொணாத் துன்பத்திற் கிடந்து நாறி நலங் குலைந்து உழல்வதோடு, ஐயோ! உயிரிழந்து மாய்கின்றார்களே! கட்டிகளை ஆழமாக அறுப்பிப்பதும், புண்களினுள்ளே திரிச்சீலைகளை நுழைப்பிப்பதுஞ் சிறிதும் அகா. யாம் மேலே காட்டிய முறைப்படி செய்து நன்றாய்ப் பழுக்க வைத்த கட்டிகளின் மேற்றோல் சிலர்க்கு அழுத்தமாயிருத்த லால், அக் கட்டிகள் உடைவதில்லை. அத்தகைய வர்க்கு மட்டும் நன்றாய்ப் பழுத்த கட்டிகளின் மேற்றோலைக் கூரிய கத்திமுனை கொண்டு கீறி விடலாம். அவ்வளவேயன்றி, அவர்க்குங்கூட அக்கட்டிகளை ஆழமாக அறுத்தல் ஆகாது; திரிச்சீலையும் அவற்றுள் நுழைத்தலாகாது. எம்மவர்க்கு வந்த மிகக்கொடிய கட்டிகளையும் எம்முடைய முறைகளால் எளிதிற் றீர்த்த உண்மை நிகழ்ச்சிகள் சிலவற்றை ஈண் டெடுத்துக் கூறுதும்.

பதினேழ் ஆண்டுகளுக்கு முன் எம்மனைவியின் மார்பிற் குழவி பால் உண்ணும் ஒரு பகுதியில் ஒரு கட்டியுண்டாயிற்று. அதற்கு நீராவிவேது தொடர்பாய்ப் பிடிக்கவே அஃது அமுங்கிப் போயிற்று. பின்னுஞ் சிறிதுகாலம் பொறுத்து மீண்டும் அதே இடத்தில் அக்கட்டி வந்தது. மறுபடியும் அதற்கு நீராவிவேது பிடித்து வரவே, மறுபடியும் அது மறைந்து போயிற்று. அதன்பிற் சிலகாலங்கழித்து அவ்விடத்திலேயே

மீண்டும் அக்கட்டி யுண்டாயிற்று. இம்முறை தொடர்பாக வேது பிடிப்பதும் அது கரையாமல் வர வரப் பெரிதாகி சொல்லொணாப் பெருந் துன்பத்தை விளைப்பதாயிற்று. பெண் பாலார்க்குக் குழவி பாலுண்ணும் இடத்திற் கட்டி புறப்பட்டால், அவர் பிழைப்பது அரிது என்று பலரும் அச்சுறுத்தினர். **ஆங்கில மருத்துவர்களோ "அதனை அறுத்துத்தான் தீர்க்க வேண்டும்; அறுத்தாலோ நன்மையுண்டாயினும் ஆகலாம், தீமையுண்டாயினும் ஆகலாம்" என்று ஐயமாகவே கூறினர்.** அந்த இடர்ப்பாடான நிலையில் ஏது வரினும் வருக என்று இறைவனை யுன்னி, எம்மனைவியார்க்கு யாமே எம்முடைய முறைகளைச் செய்யத்துவங்கினேம். நாடோறும் மாலையில் நீரேற்றிக் கொண்டு அவரது மலக்குடரைத் துப்புரவு செய்வித்துக், காலை நண்பகல் மாலை என்னும் மூன்று பொழுதுகளுங் கட்டி யுண்டாயிருந்த இடத்திற்கு வேது பிடிப்பித்தோம். வேது பிடிப்பித்தபின், இருபது நிமிடம் அல்லது அரைமணி நேரத்திற்கு ஒருகாற் கேழ்வரகுமாவைக் கிண்டி இளகிய பதத்தில் எடுத்து, அதனை ஓர் இலையிற் றடவிப் பொறுக்கக் கூடிய சூட்டில் அக்கட்டிமேல் வைத்துப் பலமுறை கட்டுவித்துவந்தேம். சோற்றுணவு கொடாமல் எளிதிற் செரிக்கத்தக்க கோதுமை வாற்கோதுமை மாக் கஞ்சியே அவர் உட்கொள்ளச் செய்தேம். இவ்வாறு ஒழுங்காக முறையாய்ச் செய்துவரவே, மூன்றாம் நாட் கட்டி உருண்டு திரண்டு நன்றாய்ப் பழுத்து வந்து விட்டது. ஆனாலும், மேற்றோல் உரப்பாகவும் அழுத்தமாகவும் இருந்தமையாற் கட்டியுடைவதற்கு வழி யில்லை. கட்டியினுள்ளே சீழ் நிரம்பி விட்டமையால் ஆயிரம் ஊசி கொண்டு துளைத்தாலென ஆற்றொணாப் பெருநோய் உண்டாயிற்று. அருகிருந்தார் எல்லாரும் எம்மனைவியாரை ஆங்கில மருத்துவ விடுதிக்கு எடுத்துச் செல்லுமாறு வற்புறுத்தினர். எமக்கோ அஃது இசையவில்லை. குழவி பாலுண்ணும் இடத்தில் அக்கட்டி இருந்தமையால் எம் மனைவி யாரும் அங்குச் செல்லாராய் எம்மையே அதனை அறுத்து விடும்படி வேண்டினர். நன்றாய்ப் பழுத்த கட்டிகளை கீறி விடும் பழக்கம் எமக்கு முன்னரே யிருந்தமையால், யாமும் அவ்வாறு செய்தற்குச் சிறிதும் அஞ்சாது, அதனைக் கீறி விட முனைந்தேம். இது கண்டு எம்

பிள்ளைகளும் பிறரும் அஞ்சி எம்மைவிட்டு இல்லத்திற்குப் புறம்பே சென்று விட்டனர். யாமோ ஓர் ஏனத்தில் வெந்நீர் கொணர்ந்து சில தூய கந்தைத் துணிகளும் பக்கத்தில் வைத்தேம்; அதன்பிறகு எம்மிடம் உள்ள மிகக் கூரிய ஒரு சிறு கத்தியினைக் கையில் எடுத்து, இறைவனை வணங்கி, எம் மனைவியார் கண்களை மூடிவிட்டு, அக் கட்டியின் அழுத்தமான மேற்றோலை நன்கு கீறிவிட்டேம். அங்ஙனங் கீறி விட்டபோது உண்டான நோய் பொறாமல் அவர் துடித்த துடிப்பு இன்னும் எமது நினைவைவிட்டு அகலவில்லை. கத்தியை அழுத்தாமல் மேற்றோலைக் கீறிவிட்டதற்கே இத்தனை துடிப்பு உண்டாகுமானால், அழுத்திக் கட்டியை ஆழத்தில் அறுத்தால் எத்தனைப் பெருந்துன்பம் உண்டாம்! அதன்மேலும், அக்கட்டியின் அறுத்த வாயினுள்ளே எரி மருந்து தடவிய திரிச்சீலையை ஊசியால் நுழைத்தால் அத்துன்பம் இன்னும் எத்துணைப் பெரிதாம்! என்பதை எண்ணிப் பார்மின்கள்! ஆனால், யாம் அப்படி யொன்றுஞ் செய்திலேம். மேற்றோலைக் கீறிய வுடனே கந்தைத் துணியை வெந்நீரில் தோய்த்தெடுத்து எடுத்து அதனால் அக்கட்டியை நன்றாய் அதுக்கி அதுக்கி அதனுள் நிறைந்திருந்த சீழையுஞ் செந்நீரையும் வெளிவரச் செய்தேம். இவ்வாறு செய்கையில் எம்மனைவியார் அந் நோயாலும் அதனினின்று மீண்ட களைப் பாலுஞ் சிறிது நேரம் உணர்விழந்து எம்மடிமீது விழுந்து விட்டார். யாமோ அக்கட்டியிலுள்ள சீழையுஞ் செந்நீரையும் நன்றாய் வெளிப் படுத்துக் கழுவிய பின் ஈரத்தைத் துடைத்து விட்டு, **“இனி அச்சமில்லை வருக”** என்று எம்புதல்வியை அருகழைத்துக் கேழ்வரகு மாவைக் கிண்டிவரச் செய்தேம். இதற்குள் எம் மனைவியாருங் களைப்பு நீங்கிக் கண்விழித்து **“எனக்கு வந்த பேரிடர் அப்பன் அருளால் நீங்கியது; உங்களுக்கு மிகுந்த வருத்தங் கொடுத்து விட்டேன்”** என்று வணங்கினார். அது கண்டு எமதுள்ளம் ஆறுதல் அடைந்தது. கீறின கட்டியின் மேல் உடனே கேழ்வரகுமாவை முன்போலவே அடுத்தடுத்து வைத்துக் கட்டிவந்தேம். நீராவி பிடித்தல் முதலான முறைகளையும் ஒழுங்காகச் செய்வித்தேம். மறுநாளே சீழுஞ் செந்நீரும் இல்லாதொழிந்தன. புண்ணுங்காயத் துவங்கியது. அது காயத் துவங்கியதைக் கண்டு கேழ்வரகு மாவை இறுகக்

கிண்டிவைத்துக் கட்டிவர, மூன்றாம்நாளே புண்ணும் இல்லையாய் ஒழிந்தது. அதற்குப் பின் அவர்க்கு அந்த இடத்தில் ஏதாரு நோயும் வந்ததில்லை. எல்லாரும் வெருக் கொண்ட அந்தக் கட்டியைக் கீறி மூன்று நாட்களில் ஆற்றிய எம்முடைய இயற்கை முறைகளை அறிந்தாரெல்லாம் மிக வியந்தனர்.

பின்னர்ப் பல ஆண்டுகள் கழித்து எம்மனைவியார்க்கு இரண்டுமுறை உள்ளங்காலில் வந்த மிகக்கொடிய புடைக் காளான் என்னுங் கட்டி எமது இல்லத்திற்கு அடுத்த இல்லில் இருந்த ஓர் அம்மையார்க்குவர, அவரைச் சேர்ந்தார் அதனை ஆங்கில மருத்தவரைக் கொண்டு பார்க்க, அவர் அதனை அறுத்து ஆற்ற மூன்று திங்களுக்குமேல் ஆயின; அதுகாறும் அவ்வம்மையார்பட்ட துன்பம் அளவிடப்படா; எழைக் குடும்பத்தினரான அவர்க்கு அதனால் உண்டான பொருட் செலவும் மிகுதி.

இன்னும், எங் கடைசிப் புதல்வனுக்குச் சில ஆண்டு கட்கு முன் ஒரு பிட்டத்தில் ஒரு கொடிய கட்டி வந்தது. அதனால் அவன் நடக்கவும் உட்காரவும் மாட்டானாய்க் குப்புறப் படுத்தபடியே பட்ட துன்பங் கணக்கிடப்படா. அவனுக்கும் மேற்சொன்ன முறைகளின்படியே செய்து மூன்று நாட்களில் அக்கட்டியை வேரறத் தொலைத்து விட்டேம்.

இன்னும், இப்போது சில நாட்களுக்கு முன் பேரனுக்கு இங்ஙனமே வந்த ஒரு பேரிடரையாம் தீர்த்ததையும் இங்கே குறிக்கின்றாம். எருவாய்க்கும் ஆண்குறிக்கும் இடையேயுள்ள கீழ் இடத்தில் எம் பேரற்கு ஒரு பெருங்கட்டி வந்தது. அதனை அறுத்துத் தீர்ப்பதொழிய வேறு வழியில்லையென்றும், ஆனாலும் அக்கட்டி மிக இடைஞ்சலான இடத்திற் புறப் பட்டிருத்தலால் அதனை அறுப்பது மிக்க இடர்ப்பாடா வதுடன் அதனை அறுத்தலால் ஆள் உயிர் பிழைப்பதும் ஐயம் என்றும் ஆங்கில மருத்துவ விடுதியிலுள்ளார் சொல்லி அவனை வீட்டுக்கே திருப்பிவிட்டனர். அவன் வேலை பார்த்த இடத்திலுள்ளார் அவனை எம்மிடஞ் செலுத்தினர். வந்த அவனை யாம் ஏற்று, அக்கட்டியினைப் பார்க்க, முதலில் அஃது எமக்கும் அச்சத்தை விளைத்தது. என்றாலும்; எல்லாம்வல்ல இறைவனருளை நினைந்து, மேற்சொன்ன

எம்முடைய முறைகளின்படி செய்து அதனைத் தீர்க்கத் துவங்கினேம். யாம் கத்தியிற் கீறவேண்டாமலே அக்கட்டி, நீரேற்றியினாலும் நீராவி வேதினாலுங் கேழ்வரகுமாக் கட்டுகளாலும் நன்கு பழுத்துத் தானாகவே மூன்றாம்நாள் உடைந்தது. உடைந்த கட்டியினை வெந்நீரில் நனைத்த துணிகொண்டு அதுக்கி நன்றாகச் சீழையுஞ் செந்நீரையும் வெளிப்படுத்திவிட்டுப், பின்னும் அம்முறைப்படி செய்யவே, பின்னும் அஃது இரண்டு நாளில் ஆறிக் காய்ந்து போயிற்று. இதனைக் கண்டார் அனைவருந் துன்பமும் இடரும் இல்லாமற் காசு பணச்செலவு நேராமல் அத்தனை விரைவில் அக்கட்டியினை வேரறத் தீர்த்த எம்முடைய முறைகளின் விழுப்பத்தை வியந்து பாராட்டினர். இங்ஙனமே, இன்னுஞ் சிலர்க்கும் யாம் கட்டிகளை விரைவில் நீக்கிய வரலாறுகளும் உண்டு. அவை நிற்க.

இனித், தொற்றுநோயாக வந்து மக்கள் பலப்பலரை ஆண்டுதோறும் உயிர்மாளச்செய்யும் அம்மைநோய் தீர்க்கும் முறைகளைச் சொல்லி அவ்வளவில் இவ்வியலை முடிப்பாம். **அம்மைநோய் என்பது வெப்புக் கொப்புளமே யன்றி வேறு ஏதும் அன்று**, இது தொடர்பாக மழை யில்லாதுபோன கடுங் கோடை காலத்திலேதான் வருகின்றது. கடுங் கோடை காலத்திலும் இடையிடையே மழைபெய்து நிலங்குளிர்ந்து தூயநீர் உண்டாகுமானால் இந்நோய் உண்டாவதில்லை. மழையின்றி வறண்டு நீரும் நிலனுங் காற்றுங் கொதிப்பெடுத் திருக்குங் கடுங் கோடையிலேதான் இந்நோய் உண்டாதலைச் சிறிது ஆராய்ந்து பார்ப்பவர்க்கும், அம்மைநோய் என்பது கோடைக் கொப்புளமே யல்லாது பிறிது ஏதும் அன்றென்பது தெள்ளிதின் விளங்கும். ஆனாற், பகுத்தறிவு சிறிதும் இல்லாதக் கீழ்மக்களோ, மாரியம்மனுக்குக் கிடாய் வெட்டிப் படையல் இடாமை யினாலேதான் இந்நோய்வருகின்ற தெனக் குருட்டுத் தனமாய் நம்பி, ஏழையுயிர்களை அப்பேய் அம்மனுக்குத் துடிக்க துடிக்க வெட்டிப் பலியிடுவதுடன், தாமும் அந்நோயால் உயிர் மாளுகின்றனர்! மாரியம்மனை நம்பிக் கும்பிடுபவர்களின் வீடுகளிலேயே ஆண்டுதோறும் பற்பலர் மாய்ந்து போதலைக் கண்டிருக்கின்றோம். ஏனென்றால், இந்நோய் தீரும் முறைகளைச் செய்தால் அம்மனுக்குச் சீற்றம் உண்டாகும் என்று பேதை மக்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டு

அது தீர்க்கும் முறை எதனையும் நோயாளிக்குச் செய்கின்றாரில்லை. நோயாளி கட்டிய துணியையும் அவிழ்ப்பதில்லை. அவன் படுத்த படுக்கையையுந் துப்புரவு செய்வதில்லை. அவைமட்டுமா! அம்மனைக் குளிரவைக்கின்றோம் என்று சொல்லிக் கொண்டு, நெருப்பு வீசுவதுபோற் காய்ச்சல் அடிக்கும் நோயாளிக்குக் கூழைப் பருகக் கொடுக்கிறார்கள்! இளநீரைப் பருகக் கொடுக்கிறார்கள். கடுங்காய்ச்சலால் உடல் வறண்டு பசியின்றித் தீனிப்பை இயங்காமல் இருக்கையில் அங்ஙனம் கூழையும் இளநீரையும் அடுத்தடுத்துக் கொடுக்கவே, உடம்பின் அகத்துள்ள உறுப்புகள் பெரிதும் பழுதுபட, அதனாற் காய்ச்சல் இன்னும் மிகுதியாக, அதனால் உடம்பின் அகம் புறம் எங்கும் பெரிய பெரிய கொப்புளங்கள் உண்டாகி வெடித்துப் புண்ணாக, நோய் கொண்டவர் ஆற்றொணாப் பெருந்துன்பம் உழந்து சாகின்றனர்! சுற்றியுள்ள கீழ்மக்கள் தாம் அறிவில்லாமற் செய்த தீய முறைகளினாலேயே அவர் செத்தார் என்பதைச் சிறிதும் உணராமல், **“மாரியாயிக்கு நாலு கடாவும் நாலு கோழியும் வெட்டாமல், இரண்டு கடாவும் இரண்டு கோழியும் வெட்டினதனால்தான் அம்மன் கோவங்கொண்டு உயிரை வாங்கினாள்!”** என்று கூடிப்பேசி அழுது, மறுபடியும் அம் மாரிப் பேய்க்கு நான்கு கடாவும் நான்கு கோழியும் அறுக்கிறார்கள்! மறுபடியும் அவரில் எவர்க்கேனும் வெப்பக்கொப்புளம் வந்து, இவர்கள் மறுபடியுஞ் செய்த பிசகான முறைகளால் உயர் இழந்தால், இவர்கள் தாஞ் செய்பிழையினை உணராமல், **“மாரியாயி நான்கு கடாவும் நான்கு கோழியும் பற்றா என்று சீறினாள். இனிமேல் ஆறு கடாவும் ஆறு கோழியும் வெட்டிப் பலியிட வேண்டும்!”** என்று கூடிப் பேசியழுகின்றனர்! இங்ஙனமே தம் வாழ்நாள் எல்லாந் தாம் செய்பிழையினை ஒருசிறிதும் ஓர்ந்து பாராப் பேதைக் கீழ்மக்கள் வீணே ஏழையுயிர்களை வெட்டி வெட்டித் தொலைவில்லாப் பழிபாவங்களுக்கு அளாகி மாண்டு போகின்றார்களே யல்லாமல், தம் அறிவால் ஆராய்ந்து பார்த்து, மாரிப்பேய் வணக்கத்தையொழித்துத் திருத்தமான முறைகளைச் செய்து, அக்கோடை கொப்புள நோய் நீங்கி, நன்கு உயிர்வாழ்கின்றார்களில்லை! ஐயகோ! இப்பேதை மாக்களுக்கு நல்லறிவு உண்டாகும் நாள் எந்நாளோ! மேற்குலத்தவராகத்

தம்மை யிறுமாந்து கருதி நடக்குஞ் சைவர்கள் பார்ப்பனராவது அப் பேதைகளுக்கு நல்லறிவு கூறி அவர்களை அப் பிழைவழியினின்று நீக்கி, நன்கு உயிர்வாழச் செய்கின்றனரோ வென்றால் இல்லை! இல்லை! அதுமட்டுமோ! மேற்குலத்தவராகிய அவர் தாமும் மாரிப் பேய் வணக்கத்தைச் செய்து, அதற்கு ஆடு கோழி வெட்டு வித்து, அக் கயவர்களைப்போலவே தாமுந் துன்புற்றுச் சாகின்றார்கள்! இனிமேலாயினும் இவர்களும் பிறருந் தீதான பிழையான முறையைக் கைப் பற்றாதொழித்து, யாங்கூறும் நல்ல திருத்தமான முறையைக் கடைப்பிடித்து ஒழுகி இனிது உயிர்வாழ்வார்களாக!

அற்றேல், இவ்வாறு கடுவேனிற் காலத்தில் வரும் அம்மையென்னுங் கடுங்காய்ச்சற் கொப்புளநோயை வராமற் றடைசெய்து கொள்ளல் யாங்ஙனமெனிற், கூறுதும்: வெயிலின் கடுமை மிகுந்துள்ள காலத்தில் எல்லாருங் குளிர்ந்த நீரிற் காலையிலாயினும் உச்சிப் பகலிலாயினும் நாடோறுந் தலைமுழுகி வரல் வேண்டும். தலைமுழுகியபின் தோய்த்துலர்ந்த ஆடைகளையே உடுத்தல் வேண்டும். தம்மை நாகரிகமுடையவராகக் கருதி வெளிமினுக்குச் செய்யும் ஆண் பெண் பாலாரிற் பலர் தாம் குளிக்கப் போம்போதுந் தலைமுழுகப் போம்போதுந் தாம் முன்னாளிற் கட்டியிருந்த ஆடையை அவிழ்த்து வைத்துவிட்டு, நீராடியபின் மீண்டும் அதனையே எடுத்து உடுத்திக் கொள்கின்றனர். இப்படிச் செய்வதுதான் **“குளிக்கப்போய்ச் சேறாடிக் கொள்வது”** ஆகும். ஒருநாட் கட்டியிருந்த துணிகளில் வியர்வைத் துளை வழியாயும் மலவாயில்கள் வழியாயும் உடம்பிலிருந்து வெளி வந்து படிந்துள்ள அழுக்கிற் கணக்கில்லாத நச்சுப் புழுக்கள் நிறைந்திருக்கும். இவை நம் ஊன்விழிகளுக்குப் புலப்படாத அத்துணைச் சிறியவாய் இருப்பினும், மேனாட்டவர் செய்துவைத்திருக்கும் **பெருக்கக் கண்ணாடியைக்** கொண்டு நோக்குவார்க்கு அவை அத் துணியில் ஒட்டியிருத்தல் நன்கு புலனாம். ஆதலால், உடம்பைக் கழுவித் துப்புரவு செய்தற்குமுன், ஆடையைக் கழுவித் துப்புரவு செய்து வைத்தல் கட்டாயமானது; நீராடியவுடனே தூய அவ்வுடையி னையே உடுத்தல் வேண்டும். இவ்வாறு செய்யாமற். குளித்துத்

தலைமுழுகியபின் முன் கட்டியிருந்த அழுக்குத் துணியையே உடுத்தால், அதன்கண்ணுள்ள நச்சுப் புழுக்கள், நீராடிய உடம்பில் நன்றாய்த் திறந்திருக்கும் வியர்வைத் துளைகளின் வழியே உட்புகுந்து, செந்நீரிற் கலந்து பற்பல நோய்களை வருவிக்கும். நன்றாய்க் குளித்து முழுகித் தூய ஆடைகளை உடுத்துஞ் சைவர் பார்ப்பனர்க்குப் பெரும்பாலும் வராத அம்மைநோய், அவர் போற் றூயராய் நடவாத கீழ் மக்களுக்கே மிகுதியாய் வருவது இக்காரணம் பற்றியேதான்; ஆதலால், நீராடியபின் தூய உடைகளையே மேற்கொள்க.

அதுவேயுமன்றி, இருக்கும் இடங்களில் அழுக்குங் குப்பையுஞ் சேராமல் நாடோறும் அவற்றை அப்புறப்படுத்தி, அவற்றைத் தீயிலிட்டுக் கொளுத்திவிடல் வேண்டும். தாம் படுக்கும் பாய்களையும் மெத்தைகளையும் அடுத்தடுத்துத் துப்புரவு செய்து வெயிலிற் காயவைத்தல் வேண்டும். தம் இல்லத்தின் உள்ளே ஒவ்வொரு பகுதியிலும் வெயில் வெளிச்சமுங் காற்றுஞ் செவ்வையாய் உலவும்படி செய்தலும் இன்றியமையாதது.

இனிக் குடிநீர் தூய கிணறுகள் ஏரிகள் குளங்களினின் றும் எடுக்கப்பட்டு மட்பாண்டங்களில் வைக்கப் பட்டால் தூயதாய்ச் சில்லென்று இருக்கும். அந்நீரில் **விலாமிச்சைவேர்** அல்லது **சந்தனக்கட்டை** இட்டு வைத்தால் உடம்புக்கு மிக்க நலந்தரும் மணம் உடையதாகும். மலங்கழிக்கும் இடங்கள் சாக்கடைகள் முதலியவற்றின் அருகிலுள்ள கிணற்றுநீர் குளநீர் பெருந் தீங்கு தரும். அங்ஙனமே மக்கள் பலர் படிந்து கெடுக்கும் ஆற்று நீர் குள நீர் முதலியனவும் பருகுதற்கு ஆகா. இவ்வருவருப்பான நீரைத்தவிர வேறு தூயநீர் கிடையாத ஊர்களில் உள்ளவர்கள், அந் நீரை நன்றாக வடிக்கட்டித் தேற்றாவிதை கொண்டு தெளிவித்து, அடுப்பிலேற்றிக் கொதிக்கவைத்து ஆற்றிப் பருகுதலே செயற்பாலார். முதன்மையாய் அம்மை, கசப்பு, நச்சுக்காய்ச்சல் பரவியுள்ள ஊர்களில் உறைபவர்கள், நன்றாய் வடிகட்டித் தெளிவித்துக் கொதிக்கவைத்து ஆற்றிய நீரையன்றி வேறெதனையும் பருகாமற் கருத்தாயிருத்தல் வேண்டும்.

இதனையடுத்துத், தாம் உண்ணும் உணவுகளிற் குழம்பு, மிளகுநீர், கறி முதலியவற்றிற்குப் **பச்சைமிளகாய், மிளகாய்,**

**கடுகு** முதலான காரப்பொருள்களைச் சேராமற் அறக்குறைத்துவிடுக. கடுங்கோடைகாலத்தில் இவற்றைச் சேர்ப்பவர்க்கு ‘அம்மை, வயிற்றுளைச்சல், சொறி சிரங்கு முதலிய நோய்கள் வரும். **ஆவின் மோரில் எலுமிச்சம்பழச் சாறு** கலந்து, அதனைச் சோற்றுடன் கலந்துண்டலும், **அறைக்கீரை, சிறுகீரை, முளைகீரை, பீர்க்கங்காய், சாம்பற் பூசணிக்காய், வாழைக்காய், உருளைக்கிழங்கு** முதலியவை களில் ஏதேனும் ஒன்றைக் கறியாக உடன்சேர்த்து உட் கொள்ளுதலுமே கோடைக்காலத்திற்கேற்ற உணவாமென்று உணர்ந்து கொள்க. காப்பி, தேயிலை, கோக்கோநீரை அறவே ஒழித்துவிட்டுக், கொத்துமல்லி விதை நன்னாரிவேர் ஏலக்காய் ஒருங்கு சேர்த்திடித்த தூள் இட்டுக் காய்ச்சிய நீரை ஆவின்பாலும் பனைவெல்லமும் கலந்து அருந்துக.

இன்னும், அம்மை முதலான கொடிய தொற்று நோய்கள் ஊரிற் பரவியிருக்குங்காறும் அவ்வூரிலுள்ள ஆண் பெண் பாலார் ஒருவரையொருவர் மருவுதல் ஆகாது. ஏனென்றால், உடம்பிலுள்ள வித்துநீர் மிக்க ஆற்றலுடையது, புதிய ஓர் உயிருக்கு அருமையானதோர் உடம்பை உண்டாக்கித் தரத்தக்க அத்துணைப் பேராற்றல் உடைய அதன் சிறப்பை என்னென்றுரைப்பேம்! இஃது உடம்பில் இருக்குங் காறும், எத்தகைய நோய்ப்புழு உடம்பினுள் நுழைந்தாலும் அஃது அங்கே இருக்க இடம்பெறாமல் வெளியே துரத்தப்படும். மற்று வித்துநீர் ஒழுகிப் போன உடம்பிலோ அஃ்த எளிதாக நுழைந்து, அகம்புறமுள்ள உறுப்புகளையுஞ் சீரழித்து உயிரையுந் தொலைக்கும். ஆதலால், தொற்று நோய் உள்ள காலங்களில் ஆண் பெண் பாலார் மருவித் தம் உடம்பிலுள்ள சாற்றைக் கழியாவிடா திருப்பாராக!

இன்னும், இத் தொற்றுநோய்களால் துன்புறுவோர் தமக்கு எவ்வளவு சிறந்த நண்பராயிருப்பினுந், தமக்கு எவ்வளவு நெருங்கிய உறவினராயிருப்பினும், அவர்க்கு அந்நோய் தீரும் வகையில் உதவிகள் செய்யலாமேயொழிய, அவர் அருகிருந்து உண்ணுதலும் அவர் பக்கத்திலேகிடந் துறங்குதலும் ஆகா. அவர்க்கு உதவி செய்வோர் குளித்து முழுகி இருவேளை தூய ஆடையுடுத்து, மலநீர்க்குடர்களைத் துப்புரவாய்வைத்து, முன்னே குறிப்பிட்டிருக்கும் உணவுப் பண்டங்களை

அரைவயிற்றுக்குச் சாப்பிட்டுத், தமதுடம்பின் நலத்தை மிகவுங் கருத்தாய்ப் பேணல் வேண்டும். அவருந் தாமும் உறையும் இல்லங்களில் அகில், சந்தனம், சாம்பிராணி முதலான அரிய மணப்பொருள்களை அடிக்கடி புகைத்தல் வேண்டும். என்றிவ்வளவுங் கருத்தாய்ச் செய்து வருவார்க்கு அம்மை முதலான எத்தகைய தொற்று நோயும் வராது.

அஃதொக்கும், எப்படியோ பிசகி நடந்து அம்மை நோய் கண்டு துன்புறுவார்க்கு அந்நோய் தீர்க்கும் முறைகளை அறிவுறுத்துகவெனிற்; கூறுதும்: அம்மைநோயாற் பற்றப் பட்டார்க்கு அது தீருமட்டும் நாடோறும் நீரேற்றி கொண்டு மலக்குடரைத் துப்புரவு செய்க; காய்ச்சி ஆறிய நீரே அம்மைநோய் கொண்டாரது நீரேற்றிக்குப் பயன்படுத்தல் வேண்டும். வயிற்றுக்கு ஏதொரு வலிய வுணவுங் கொடாமல், ஆவின்பாலில் வாற்கோதுமை மாவிட்டுக் காய்ச்சிய கஞ்சி நீரைமட்டும் ஒருநாளில் இரண்டு அல்லது மூன்றுவேளை பருகக்கொடுக்க. **அம்மைநோய் கொண்டார்க்குப் பாலும் பால் சேர்த்தது எதுவும் உள்ளுக்குக் கொடுக்கலாகாது என்று அறிவில்லாப் பேதைமக்கள் நுவல்கின்றனர்.** அம்மைநோய் கொண்ட எம் சிறார்க்கு **ஆவின் பாலும் வாற்கோதுமை மாவுங்கலந்த கஞ்சியை பருகக்கொடுத்து அந்நோயை எளிதில் தீர்த்திருக்கின்றேம்**. ஆகையால், அத்தகைய பாற்கஞ்சியுணவு கொடுத்தலால் ஏதுந் தீங்குவராது நன்மையே வருமென்று கடைப்பிடித் துணர்ந்து கொள்க.

இவ்வளவோடு இருந்துவிடாமல் மற்றொன்றுங் கட்டாயமாகச் செயற்பாலதுளது. அம்மைநோயில் இரண்டு வகையுண்டு; அவை : கடுங் காய்ச்சல் வீசி **மிளகளவு**க்கு மேற் பெருங் கொப்புளங்களை உடம்பெங்குந் தோற்றுவித்து நிறைத்து, அக் கொப்புளங்கள் உடைந்தபின் உடம்பை முழுதும் பழுது படுத்துவதாகிய பேரம்மையும் அவ்வாறின் றிக் **கடுகளவு** குருக்களைத் தோற்றுவித்து விரைவிற் றீர்ந்து போகுஞ் சின்னம்மையும் என்பனவாகும். இவையேயன்றி, உடம்பிற் காணப்படும் குருக்களின் பருமனுக்குத் தக்கபடி பயறம்மை முதலிய பல பெயர்களால் வழங்கப்படுவனவும் பல உள. பேரம்மை யல்லாத மற்றைய வெல்லாம், நீரேற்றி வைத்து மலக்குடரைக் கழுவுதலாலுங் கோதுமைமாக் கலந்த

ஆவின்பாற் கஞ்சி கொடுத்தலாலும் எளிதிற் தீர்ந்துபோகும். மற்றுப், பேரம்மையோ அங்ஙனம் எளிதிற் றீர்வதன்று; மேலும், அதனால் உடம்பில் எழும் கொப்புளங்கள் உடைந்து புண்ணாகி எத்தகைய பேரழகு வாய்ந்த உடம்பையும் பழுதாக்கிவிடும். ஆதலால், இதனால்வரும் கொப்புளங்கள் உடையாமலே இது விரைவிற் றீர்ந்து போதற்குரிய மற்றொரு சிறந்த முறையினையும் மனத்திட்பத் தொடு செய்தல் இன்றியமையாதது.

அம்முறை என்னையெனிற் கூறுதும்: கொப்பூழின் கீழ் உள்ள அடிவயிற்றின் மூலத்தில் உண்டாகும் பெருங் கொதிப்பினாலேயே அம்மை முதலான கொடிய நோய்கள் வருகின்றன. அடிவயிற்றைக் குளிரச் செய்வதாகிய சிறந்த எளிய முறையினைக் கடைப்பிடியாய்ச் செய்துவரின் அம்மை முதலான அந்நோய்கள் ஏதோர் இடையூறும் பயவாமல் எளிதில் நீங்குதல் திண்ணம். அடிவயிற்றைக் குளிரச் செய்தற்குக், குளிர்ந்த நீரை ஒரு துத்தநாகத் தகட்டுத் தொட்டியில் விட்டு அதில் உட்காரும் முறையினை 409ஆம் பக்கத்திற் காட்டியிருக்கின்றேம். அதன்படி காலை நண்பகல் மாலை என்னும் மூன்று பொழுதுகளுங் குளிர்ந்த நீரில் உட்கார்ந்துவரின், மறுநாளே அம்மைக் காய்ச்சல் குறையத் துவங்கும். இரண்டாம் நாள் மூன்றாம் நாட்களிலும் அங்ஙனமே உட்காரிற், காய்ச்சல் முழுதும் நின்று போவதுடன் மேலெழுந்த கொப்புளங்களுஞ் சுவடற மறைந்து போகும். இவ்வாறு செய்து, எமக்கு முன்னொரு கால் வந்த இக்கொடிய நோய் தீர்ந்துபோன வரலாற்றினை இங்கே எடுத்துரைப்பாம்.

இற்றைக்குப் பத்தொன்பதாண்டுகட்கு முன் யாம் வடநாடு சென்று அங்குள்ளார்க்குச் சைவசித்தாந்த உண்மை களை விரிவுரைகள் வாயிலாக எடுத்துச்சொல்லல் நேர்ந்தது. அங்கே கற்கத்தாவிலிருந்து இமயமலைமேல் **துர்ஜலிங்கத்** திற்கும், பின்னர் அங்கிருந்து கீழிறிங்கிக் **காசிக்கும்**, அங்கிருந்து **அரத்துவாரத்திற்கும்**, அங்கிருந்து மறுபடியும் இமயமலை யடிவாரத்துள்ள துரோணாசிரமத்திற்கும், அங்கிருந்து **தில்லி ஆக்ரா வம்பாய்** முதலான நகரங்களுக்கும், பிறகு **சிக்கந்தராபாக்கம் ஐதராப்பாக்கங்களு**க்குஞ் சென்று பின்னர்ப் **பல்லாவரந்** திரும்பினேம். யாம் வடக்கே சென்றது

கடுவேனிற்காலம்; வடநாடுகளில் வெயிலின்வெப்பம் மிகக் கடியது. யாம் திரும்பி ஊர்வந்து சேர ஆறு திங்கள் கழிந்தன. கடுங்கோடையில் ஆறு திங்கள் சுற்றி விரிவுரைகள் செய்து வந்தமையால் உண்டான சூடு எமதுடம்பில் மிகக் கொடிய அம்மைக் காய்ச்சலாய் வெளிப்பட்டது. இக் காய்ச்சலுண் டாகிய இரண்டாம்நாள் எமது மேனியெங்கும் மிளகளவி னவான வெள்ளைக் கொப்புளங்கள் நிறைந்தன. உடம்பின் புறத்தே மட்டுமின்றி அகத்தேயுங் கொப்புளங்கள்; இரு கண்களினுள்ளும் வாயினுள்ளுங் காதுகளினுள்ளும் எருவாயி னுள்ளுங் கொப்புளங்கள். எமதுடம்பினின்று வீசிய காய்ச்சலின் வெப்பமோ எமக்கு அருகு வருவாராலுந் தாங்குதற்கு இயலாததா யிருந்ததென்றால், அஃது எம்மை எவ்வளவு வாட்டி வதக்கியிருக்குமென்பதை உணர்ந்து பார்மின்கள்!

இவ்வாறு யாம் துன்புறும் நிலையிலிருக்கையில் எம்மைப் பார்க்க வந்த அண்டை அயலார்களெல்லாரும் யாம் கட்டிலிற் பஞ்சுமெத்தைமேற் படுக்கலாகாது என்றனர்; கீழே பாய்விரித்து அதன்மேற்றான் படுக்க வேண்டு மென்றனர் மற்றும் பலர்; நோய் தீரும் மட்டும் படுக்கைத் துணிகளையும் யாம் கட்டியிருந்த துணிகளையும் களைய லாகாது என்றனர் வேறுபலர்; மாரியாயிக்கு மாவிடித்து கும்பம் வைத்து வணங்கிக் கூழும் இளநீரும் யாம் உட் கொள்ள வேண்டுமென்றனர் இன்னும் பலர்; வாழை யிலையை விரித்துவைத்து அதன்மேல் எம்மைப் படுக்க வைக்க வேண்டுமென்றனர் மற்றைப் பலர்; வேப்பிலையை உடம்பெங்கும் அணிந்து மஞ்சள் துணி கட்ட வேண்டு மென்றனர் பின்னும் பலர்; மாரியாயி கண்கொண்டு பார்க்க முடியாமல் இவர்மேல் விளையாடுகிறாள் என்றனர் மேலுஞ் சிலர்; மாரியாத்தாள் பூட்டியிருக்கும் இத்தனை முத்துக்களும் உடைந்தால் இவர் எப்படிப் பிழைப்பாரோ என்று வருந்தினர் மற்றும் பலர்.

இவ்வாறாகப், பார்க்கவந்த பேதைமக்கள் கூறிய மொழிகளைக் கேட்டு இன்னது செய்வதென்றறியாமல் எம்மவர் மிகக் கலங்கினர். யாமோ, இனிப் புறத்தார் எவரும் இந்த நிலையில் எம்மை வந்து காணலாகாதென்று உறுதி யாகத் திட்டஞ்செய்து விட்டு, எம்முடைய முறைகளைச் செய்யத்

துவங்கினேம். யாம் படுக்கும் மெத்தையின் உறை தலையணை யுறைகளை நாடோறும் மாற்றித் துவைத் துலர்ந்த உறைகளையே அவற்றிற்கு இடுவித்தேம். அங்ஙனமே யாம் கட்டியிருந்த உடைகளையும் இரண்டு வேளைகளைந்து தூயன உடுத்திக்கொண்டேம். வீடெங்கும் நறுமணம் வாய்ந்த சாம்பிராணி புகைப்பித்தேம். எல்லாம் வல்ல இறைவனையும் இறைவியையுந் தமிழ்மறையாகிய தேவாரம் ஓதி நறுமலர் கொண்டு ஒருநாளிற் பலமுறை வழிபாடு ஆற்றும்படி செய்வித்தேம். இவற்றோடு, காலை மாலை நீரேற்றிக்கொண்டு மலக்குடரைத் துப்புரவு செய் தலும், ஒரு துத்தநாகத்தகட்டுத் தொட்டியில் விட்ட குளிர்ந்த நீரிற் காலை நண்பகல் மாலை என்னும் முப்பொழுதுகளும் முறைப்படி அரைமணி நேரமிருத்தலும், ஆவின்பாலில் வாற்கோதுமை மாவிட்டுக் காய்ச்சிய கஞ்சியைப் பசியெடுத்த போது மட்டுஞ் சிறிதாய்ப் பருகுதலும் ஒழுங்காகச் செய்துவந்தேம். இங்ஙனஞ் செய்த இரண்டாம்நாளே காய்ச்சலின் கடுமை தணிந்தது; மூன்றாம் நாட் காய்சலும் ஒழிந்தது; அதனோடு அம்மைக் கொப்புளங் களும் முற்றும் மறைந்து போயின. எமதுடம்பின்கண் அம்மைக் கொப்புளம் வந்த வடு ஒரு சிறிதுமேயில்லை. இவ்வாறு செய்யாமல், அறிவில்லாப் பேதை மக்கள் தலைக்குத்தலை சொன்னபடி யெல்லாம் நடந்திருந்தேமாயின், யாம் அக்கொடிய நோய்க்குத் தப்பிப் பிழைத்தல் அரிதாய்ப் போயிருக்கும்; தப்பிப் பிழைத்தாலும் அக் கொப்புளங்களால் உண்டான தழும்புகள் எமது அழகிய மேனியை அருவருப்பாக்கி யிருக்கும். அங்ஙனம் ஆகாமல், அந்நேரத்தில் எமக்கு நல்லறி வையும் மனத்திட்பத்தையும் கொடுத்து, எம்முடைய எளிய இயற்கை முறைகளினா லேயே அக் கொடுநோயை மூன்று நாட்களிற் சுவடறத் தீர்த்துக் கொள்ளுமாறு அருள் செய்த எம் ஆண்டவனை எங்ஙனம் வழுத்துவேம்! எவ்வாறவற்கு நன்றி செலுத்துவேம்! அத்துணை விரைவில் யாம் அக் கொடுநோய் தீர்ந்து திகழ்ந்ததை மறுபடியும் வந்துகண்ட அண்டை அயலவர் இறும்பூதுற்றனரே யன்றி, எம்முடைய முறைகளைத் தாமுஞ்செய்து தமக்கும் அந்நாளில் வந்த அக் கொடுநோயினைத் தீர்த்துக்கொள்ளாமல்

மாரியாயியைக் கும்பிடுந் தீய முறைகளையே செய்து அவர்களிற் பலர் பெருந்துன்பத்தில் உழன்று உயிரிழந்தார்கள்! அறிவு சிறிது மில்லாப் பேதைமக்கள் சிறிதுந் திருந்தாராயினும், அறிவுடைய நன்மக்களாவது எம்முடைய முறைகளைக் கடைப்பிடியாய்க் கொண்டு ஒழுகி நீடு இனிது வாழ்வார்களாக!

இதுகாறும் நன்கு விளக்கிப்போந்த இயற்கை முறை களை உறுதியாய்ப் பிடித்து அவற்றின்படி வழுவாமல் நடந்து வாழ்க்கை செலுத்தி வருவார்க்கு எத்தகைய நோயும் வராது. ஏதோ பிசகி நடந்தால் ஒரோவொருகால் நோய் வரினும், அந் நோய்களைத் தீர்த்துக் கொள்ளுதற்கு மேலே காட்டியிருக்கும் முறைகளைக் கடைப்பிடித்து நடந்தால், ஏதொரு செலவு மின்றி, மருத்துவ ருதவியின்றி அவை எளிதிலே தீர்ந்து போகும்.

எந்தநோய் வந்தாலும் உடனே மருத்துவரை வருவித் தலும், அவர்தரும் அல்லது குறித்துக்கொடுக்கும் மருந்து களை விழுங்குதலும் மேலும் மேலும்நோயினை வளர்ப்ப தற்கே வழியாகும். நோய்வரும் அடையாளங் கண்ட வுடனாவது, அன்றி நோய்வந்த பின்னாவது காலந்தாழாது விரைந்து செயற்பாலது நீரேற்றி கொண்டு மலக்குடரைக் கழுவி விடுதலேயாம். இங்ஙனம் மலக்குடரைக் கழுவி விட்டதும் நோயின் கடுமை அரைவாசிக்கு மேல் தணிந்து போகுமாதலால், வந்த நோய்க்குச் சிறிதும் அஞ்சவேண்டு வதில்லை. நோய்வந்த மறுநாட் காலையிற் கடுக்காய்ச்சாறு அருந்தினால் மேற்குடர் கீழ்க்குடர் இரண்டுந் துப்புரவாத லோடு உடம்பிலுள்ள நச்சுநீர்களும் வெளிப்பட்டு விடும். இதனையடுத்துச் செய்தற்குரியது, கொடிய நோயாயிருந்தால் முழுப் பட்டினி கிடப்பதும், எளிய நோயாயிருந்தால் இரண்டு வேளை ஆவின்பாற்கோதுமைக் கஞ்சி செரிக்குமளவாய்ச் சிறுக அருந்துதலும் ஆகும்.

இவற்றிற்கு மேலும், நீராவி வேது பிடித்தலுங் குளிர்ந்த நீரிலிருந்து மூலத்தைக் குளிரவைத்தலும் வேண்டிய நோய் களாயிருந்தால், முன்னே சொல்லியிருக்கும் அம்முறை களைக் கருத்தாய்க் கொண்டு செய்தல் வேண்டும். இவற்றிற்கு மேலும்

மருந்து வேண்டிய நோய்களாயிருந்தால், யாம் அவ்வந் நோய்களுக்குக் குறித்திருக்கும் மருந்துகளை வாங்கி யுட்கொள்ளல் வேண்டும். இவற்றிற்கு மேலும், மருத்துவர் நேரே வந்து பார்த்து மருந்தூட்ட வேண்டிய நோய்களாய் இருந்தால் மட்டும் வல்ல மருத்துவர்களை வருவித்துப் பார்த்தல் வேண்டும். என்றாலும், யாங்கூறிய இயற்கை முறைகளை வழுவாது கைக்கொண்டு நடக்கும் மனத்திட்பம் உடையார்க்கு, மருத்துவரை வருவிக்கும் கட்டாயமே நேராதென்று திண்ணமாய் உணர்ந்துகொள்க.

இனி, மருத்துவர்களே தம்முடைய மருந்துகளில் நம்பிக்கை யில்லாதவர்களாய் இருக்கின்றார்கள்; தமக்கு நோய் வந்தால் தம்முடைய மருந்துகளை உட்கொள்ளாமல் இயற்கை முறைகளைச் செய்தே அந்நோயைத் தீர்த்துக் கொள்கின்றார்கள். **தமிழ் ஆயுர்வேத, யுநாநி, ஆங்கில** மருத்துவங்களிற் கைதேர்ந்த மருத்துவர்களிற் பலரும், மருந்துண்டலால் உடம்பிலுள்ள இரத்தம் நஞ்சாய்ப் போகின்றதே யொழியப் பயன் ஒன்றுமில்லை யென்று நுவல்கின்றனர். அவர்களுடைய கருத்து இடையறாது மருந்து உண்டு இரத்தத்தை நஞ்சாக்கிக் கொள்வாரைப் பற்றியதே யாகும். கற்கத்தா **'நாகேந்திர நாத் சென்'** என்னும் வல்ல மருத்துவ ஆசிரியரின் மருந்துகள் நோயாளிகட்கு 'நலந் தருதல்லால் தீது பயக்கக் கண்டிலமாகலின், அத்தகைய பெரியாரின் மருந்துகளுஞ் செந்நீரை நஞ்சாக்குமென்று கொள்வது கூடாது என்றாலும்,. "அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சாம்" என்னும் பழமொழிப்படி உயர்ந்த மருந்துகளையும் அடுத்தடுத்து உட்கொள்ளலாகாதென்பதே அறிஞர் எல்லார்க்கும் ஒத்த முடிபாகும். ஒவ்வொருவருந் தம்மாற் கூடியமட்டும் முயன்று இயற்கை முறைகளிற் பழகி, மருந்தைக் கையில் எடாதுவிடுதலே செயற்பாலதாமென்க.

## அடிக்குறிப்புகள்

1. See “Advice to the Married” p. 42; and “The New Hygiene.” p. 31.
2. The Philosophy of Fasting by E.E. Purinton. pp. 7-9.
3. வலிதீர்மருந்துகளில் ‘பம்பாய் அமிர்தாஞ்சன’மும் ‘Little’s Oriental Balm’ உம் மிகச் சிறந்தவைகளாகக் காணப்படுகின்றன.
4. Bathwala’s Ague mixture, obtainable at all Chemists.
5. ‘Diagnosis From the Eye’ by H.E. Lane, M.D., Chicago.
6. Calvert’s Carbolic Tooth Powder (கல்வெர்ட்டு என்பவரின் காபாலிக் பற்பொடி).

## 8. மனநிலையும் நீண்ட வாழ்க்கையும்

*இனி, நோய் இல்லாமலும் வந்த நோயை விரைவிற் றீர்த்தும் வாழும் ஆண் பெண் பாலாருந் தமது மனநிலையை எவ்வளவுக்கு நலமுடையதாக வைத்து ஒழுகுகின்றார்களோ அவ்வளவுக்கு அவர்கள் நீண்டகாலம் மூவாயாக்கையினராய் நன்கு உயிர்வாழ்வர். மனநலன் இல்லாதவர்களோ அவ்வாறு நீண்டகாலம் உயிரோடிருத்தல் இயலாது. மேலே, பத்தொன்பதாம் இயலில்* **"தாயின் மனநிலையுங் கருவின் அமைப்பும்"** *என்னும் அரிய பொருளைப்பற்றிப் பேசியவழி, ஒருவரது உடம்பின் நலந்தீங்குகட்கு அவரது மனநிலை எத்துணை இன்றியமையாத காரணமாயிருக்கின்ற தென்தூ உம், ஒரு தாயின் மனநிலையின் தன்மைக்கு ஏற்பவே அவள் வயிற்றில் உருவாகுங் கரு அழகுடையதாகவோ அழகிலதாக வோ நல்லியல்புடையதாகவோ தீயயியல்புடைய தாகவோ இனிய அறிவுடையதாகவோ இன்னா அறிவுடைய தாகவோ பிறந்து தனக்கும் பிறர்க்கும் நன்மை தீமைகளைப் பயவா நிற்கின்றதென்பதூஉம் பல எடுத்துக் காட்டுகளால் நன்கு விளக்கிப் போந்தாம். அவ்வியலின் பொருளைக் கருத் தூன்றிப் பார்ப்பவர்களுக்கு மனநலன் நீண்ட வாழ்க்கைக்கு எத்துணை நெருங்கிய தொடர்புடையதாய் உளதென்பது விளங்காமற் போகாது என்றாலும், மனநிலைக்கும் உடல் நிலைக்கும் உள்ள பிரிவில்லாப் பெருந் தொடர்பினை மீண்டும் எடுத்துப் பேசுவது இன்றியமையாததாயிருத்தலின், இவ் இயலில் இயன்றமட்டும் அதனை விரித்துப்பேசி அவ்வளவில் இந்நூலை நிறைவு செய்வாம்.*

*முதலில் உடம்பின் இயக்கத்திற்கு உள்ளத்தின் இயக்கமே காரணமாயிருத்தல் அறியற்பாற்று. உயிர் வாழ்க் கைக்கு இன்றியமையாத மூச்சு ஓட்டம் உறக்கத்தில் இருந்தும்,*

அப்போது உடம்பு உணர்வுடையதாய் இயங்காமல் உணர்வில்லாக் கட்டைபோலவுங் கற்போலவும் இருத்தல் என்னை? உடம்பும் உடம்பிலுள்ள எல்லாக் கருவிகளும் ஏதொரு பழுதுமின்றிச் செவ்வனே அமையப் பெற்றிருந்தும், அவை அத்துணையும் ஒரு சிறிதும் இயங்காமல் ஒருவர் உறக்கத்தில் அமிழ்ந்திக் கிடத்தல் என்னை? உயிர் இருந்தும் அவ்வுயிர் உலவுதற்கு இடமான உடம்பு அதனோடு ஒருங் கிருந்தும் அவை யிரண்டுந் தொடர்பில்லாதனபோல் அங்ஙனம் ஆழ்ந்து துயிலிற் கிடத்தல் என்னை? என்று ஆராய்ந்துபார்க்க வல்லார்க்கு, விழிப்பிற்போல உறக்கத் திலும் அவையிரண்டும் ஒன்று சேர்ந்திருந்தாலும், அவை தம்மை ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி இயக்குங் கருவியாகிய மனம் என்பதொன்று உறக்கத்தில் தான் இயங்காமல் அமைந்து கிடத்தலால், உடம்பும் உயிருமாகிய அவை யிரண்டுமே அங்ஙனம் இயக்கமின்றிக் கிடப்பவாயின வென்னும் உண்மை விளங்கா நிற்கும்.

இனி, உறக்கத்தின் மட்டுமேயன்றி ஒருவர் விழித்திருக் கையிலும் அவர்தம் பொறிபுலன்கள் நடைபெறுதற்கும் அவற்றின் வழியே உயிர் உணர்வுடையதாய் இயங்குதற்கும் அவ்விரண்டனையும் ஒன்றோடொன்று இயைக்கும் உள்ளமே முதற் பெருங்கருவியாய்த் திகழ்கின்றது. மழை பெய்துவிட்ட நீலவானத்தில் முழுநிலா விளங்கும் அழகிய காட்சியினைக் காணும் இருவரில் ஒருவர் அதனைக் கண்டு மகிழ்தலும், மற்றொருவர் அதனைக் காணினும் அதன் அழகினை வியத்தல் செய்யாராய்த் துயர் கூர்ந்திருத்தலும் என்னை? ஒருவர் இன்பத்தால் உந்தப்பட்டுக் கட்புலன் வழிச்செல்லும் மனவுணர்வினால் அவ்வழகிய காட்சி யினைக் கண்டு மகிழ்கின்றாரென்பதும், மற்றொருவர் துன்பத்தால் ஈர்க்கப்பட்டுக் கண்வழிச் செல்லா மன வுணர்வின்கண் மடிந்திருத்தலால் அதனைக் கண்டு மகிழாது போயின ரென்பதும் அறிகின்றனம் அல்லமோ? இனிய சுவையுடைய உணவுகளை மிசையுங் காலத்து ஒருவரோ டொருவர் உரையாடுதல் ஆகாது என்று அறிவுடையார் கூறுதல் அறியா தென்பது பற்றியேயன்றோ? நோய் கொண்டார் ஒருவர் அந்நோய் மிகுதிப்படுதலும், அதனை நினையாது இனிய இசைகளைக் கேட்டலிலுஞ் சிறந்த நாடகக் காட்சிகளைக்

காண்பதிலுங் கவர்ச்சிமிக்க கதை களைப் பயில்வதிலுங் கருத்தை அவர் ஈடுபடுத்தப் படுத்த அந்நோய்த் துன்பம் விலகி நலம் உண்டாதலும் ஏன்? மன வுணர்வு அவ்வவற்றைப் பற்றுதலால் அன்றோ? நோய்த் துன்பத்தில் உணர்வு செல்லுங்கால் நோய் மிகுந்து தோன்று கின்றது; அஃது அதனைவிட்டுப் பொறிவழிச் சென்று இனிய நிகழ்ச்சிகளைப் பற்றுங்கால் நோய்த் துன்பம் மறைந்துபோக இன்ப நுகர்ச்சி முனைந்து நிற்கின்றது. எனவே, நாம் விழித்து எல்லா நினைவுகளோடு இயக்குங்காலத்தும், மனவுணர்வு, மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐம்பொறிகளையும் பற்றி நின்று புறத்தேயுள்ள பொருள்களையுணருந் தோறும் நமக்குப் புறப்பொருளறிவே நிகழா நிற்குமென்றும், மற்று அஃது அவ்வைம் பொறிகளைப் பற்றாது அகத்தே திருப்பித் தான் முன் நாட்களில் துய்த்த இன்ப துன்பங்களையும் அவற்றிற் கேதுவான பொருள்களையும் மாறி மாறி நினைந்து அவற்றைப் பற்றிநிற்குந் தோறும் புறப் பொரு ளறிவு மறைந்து போக அகப் பொருளறிவே நம்மாட்டுக் காணப்படுமென்றும் உணர்ந்து கொள்ளல் வேண்டும். இன்னும், உறக்கத்தில் மன ஓட்டம் அடங்கிப் போதலினா லேயே உடம்பகத்து உயிர் இருந்தும் அஃதுணர்புடையதாய் இயங்கவில்லையெனவும், விழிப்பிலும் அஃது அகத்தும் புறத்தும் மாறி மாறி இயங்கும் முறைக்கு ஏற்பவே எல்லா வுயிர்களும் அகவுணர்வு, புறவுணர்வு அடுத்தடுத்து நிகழப் பெறுகின்றன வெனவும் பகுத்தறிந்து கொள்க. இவ்வாற்றால், உள்ளத்தின் இயக்கமே உயிரி னியக்கத்திற்கும் உடம்பினியக்கத் திற்கும் இன்றியமையாத கருவியாதல் தெற்றெனப் பெறப்படும்.

இங்ஙனம் எல்லாவுயிர்களின் உணர்வு நிகழ்ச்சிக்கும் முதற் பெருங் கருவியாயுள்ள மனவுணர்வு, உயிரையும் உடம் பையும் ஒன்று சேர்த்து இயக்குந் திறத்தாய் இருப்பினும், அஃது உயிரின் அறிவு முயற்சியைச் சார்ந்து நின்று அதன்வழி இயங்குவதே யல்லால், அதனைவிட்டுப் பிரிந்து தான் தனிநின்று இயங்கவல்லதன்று. இவ்வுண்மை, உயிர் போன பிணவுடம்பில் மனவியக்கஞ் சிறிதுங் காணப்படாமை யின்கண் வைத்துத் தெளிந்து கொள்ளப்படும். ஆகவே, உயிரின் அறிவுமுயற்சி யுளவாங்காறும் அதன் வழிநின்று உள்ளம்

மிக்கதோர் ஆற்றலுடையதாய்த் தலைமை செலுத்தும் நீரதாமென்க. இதனை ஓர் உவமை முகத்தானும் விளக்குதும்; தன்கீழ் வாழ்வாரெல்லார்க்குந் தலைவனாய் நின்று தனியரசு புரிவான் ஓர் அரசனே யாயினும், அவற்கும் அவன்கீழ் வாழ்வார்க்கும் இடை நின்று அரசியலை நடாத்தும் ஓர் அமைச்சன் இல்லாக்கால், அவ்வரசு செவ்வனே நடவாது; மற்றுத், தன் அரசன் ஆணைவழி நின்று அரசியலைத் திறம்பட நடாத்தும் ஓர் அமைச்சன் உள் வழியே, அவ்வரசனும் அவன்கீழ் வாழுங் குடிகளும் இனிதி யைந்து அரசியல் நன்கு நடைபெறுதற்கு இடஞ்செய்வர்; அதுபோல உயிரின் அறிவு முயற்சியே உடம்பின் இயக்கத்திற்குத் தனிமுதலாய் நிற்பினும், அதன் வயமாய் நின்று உடம்பினை நடாத்துதற்கு மனவியக்கமே இடை நின்றுதவும் முதற்பெருங் கருவியாதல் ஆராய்ந் தறியப்படு மென்பது.

இவ்வாறு உயிரின் அறிவுமுயற்சியால் உந்தப்பட்டு நடைபெறும் உள்ளமானது, உடம்பையும் உடம்பிலுள்ள உறுப்புகளையும் இயக்கி அவற்றை உயிர்க்குப் பயன்படுமாறு செய்தலினாற்றான், உயிர்க்கு அறிவுவிளக்கமும் இன்ப நுகர்ச்சியும் நாளுக்குநாட் பெருகாநிற்கின்றன. உயிர் ஒரு பூங்கொடியின் இயற்கையைத் தெரிய விரும்புமாயின் உடனே மனமாது கண்களை இயக்கி, அவை அதன் தண்டு இலை அரும்பு மலர் முதலிய உறுப்புகளை உற்று நோக்கும்படி செய்து, அவ்வாற்றால் உயிர்க்கு ஆராய்ச்சி யறிவினைப் பயப்பிக் கின்றது; அங்ஙனம் அவற்றை யாராய்ந்து அவற்றின் நுட்ப இயற்கைகளை அறியுந் தோறும் உயிர் பெரிதும் இன்புறுதலின், அதன் அவ்வின்ப நுகர்ச்சிக்கும் உள்ளமே கருவியாய் நிற்றல் காண்க. இன்னும் அவ்வறிவாராய்ச்சியால் விளையும் அவ்வின்பமேயன்றி, அக் கொடி முல்லை மலர்களைப் பூப்ப தொன்றாயின் அம்மலர்களின் நறுமணத் தையும் மூக்கின் வாயிலாய் ஊட்டி மேலும் அதற்கு அவ்வின் பத்தை மிகுத்தலுங் காண்டுல்லமோ? இங்ஙனமெல்லாம் நமதுடம்பையும் உடம்பின் உறுப்புகளையும் உலகத்திலுள்ள பலதிறப்பொருள் களோடும் இயைத்து, அம்முகத்தால் நம்முயிர்க்கு அறிவையும் இன்பத்தையும் மிகுத்துவரும் அரும்பெறற்கருவியான நமதுள்ளத்தின் இயக்கத்தை நமது

நல்லறிவுகொண்டு ஒழுங்கான நன்முறையில் இயக்கி வருகுமாயின், நாம் நீண்டகாலம் உயிர்வாழ்தல் திண்ணம். அங்ஙனம் ஒழுங்கான முறையில் அதனைச் செலுத்தாமல் ஒழுங்கற்ற முறையிற் செலுத்தலாலுந், தீய முறையிற் புகுத்தலாலும் அதனைத் தான் நடாத்துதற்குச் சோம்பி ஐம்புலச்சுவைகளினால் ஈர்ப்புண்டு அது செல்லுமாறே தான் செல்லுதலாலுமே ஒருவன் பேரறிவையும் பேரின்பத்தையும் இழந்து, அவையிரண்டையும் இழந்தமை யால் உடம்பின் நுண்ணிய பேராற்றலையும் இழந்து, அஃதிழந்தமையால் உடம்பை நோய்க்கு இரையாக்கி அதனையும் விரைவில் இழந்து, மற்றுமொரு பிறவியை நாடி மடிந்து போகின்றான் என்றுணர்ந்து கொள்க.

அற்றேல், உள்ளத்தை ஒழுங்கான முறையில் செலுத்து தலும், ஒழுங்கல்லா ஏனைமுறைகளிற் செலுத்துதலும் நன்கு விளங்குமாறு, சிறிது விரித்துக்காட்டுகவெனிற், காட்டுதும்; நாடகக்காட்சி இன்னதென்று அறியா ஒருவன், அதன் வனப்பையும் அதனால் வரும் இன்பத்தையும் பலர் பலகாற் சொல்லக்கேட்டு, அதனை ஒருநாட் காணச் சென்றான்; சென்று, நாடக அரங்கின்கட் கதைத்தொடர்புக்கு ஏற்ப அவ்வப்போது காட்டப்பட்ட அரண்மனைகள் பூந்தோட் டங்கள் காடுகள் முதலியவற்றின் அழகுகளையும், அரச கோலம் அரசிகோலம் பாங்கர் பாங்கியர் கோலம் துறவோர் கோலம் கள்வர் கோலம் முதலாயின பூண்டு நாடக மாந்தர் மிக்க திறமையோடு பாடியும் ஆடியுங் காட்டிய ஒரு கதை நிகழ்ச்சியையுங் கண்டுகேட்டு அது காறும் அடையாத ஒரு புதிய இன்பத்தை அடைந்து உள்ளங் களிப்பானா யினான். இங்ஙனம் நாடகக் காட்சியால் தான் ஒருநாள் அடைந்த இன்பத்தை மீண்டும் பலநாள் அடைய அவனுக்கு அவா மிக்கெழுந்த தாயினும், நாடோறும் பொருட் செலவு செய்துகொண்டு நாடகம் பார்க்கச் செல்லுதற்குத் தக்க வருவாய் இல்லாமையினையுந், தனக்கு வரும் பொருள் தன்னையுந் தன்னைச் சார்ந்தாரையும் பாதுகாப்பதற்கும் பசித்து வருந்திவரும் ஏழையெளிவர்கட்கு அறஞ்சிறிது செய்வதற்குமே போதியதாயிருத்தலையும், அடுத்தடுத்து நாடகங் காணச் சென்றால் உறக்கங்கெட்டுத் தன்னுடல்

நலங்கெடுதலை யும் எல்லாம் எண்ணிப்பார்த்து அடக்கி, மீண்டுந் தன் உள்ளம் அதன்கட் செல்லாது தடுத்து அதனை வேறு நல்லதுறையிற் செலுத்தி யொழுகினான். இவ்வாறு **தன்னுள்ளத்தைத் தன் பகுத்தறிவின் வழிவைத்துச் செலுத்தி, அவாவை அடக்குமிடம் அடக்கி விடுக்கு மிடம் விட்டு ஒழுகுவானது ஒழுகலாறே ஒழுங்கானதாகு மென்று அறிந்து கொள்க.**

இனி, அவ்வாறின்றித் தான் ஒருநாட்கண்ட நாடகக் காட்சியிலேயே உள்ளம் ஈர்ப்புண்டு, தன் வருவாயினையும் அதனைத் தனக்கும் பிர்க்கும் பயன்படுத்தும் வகைகளையும் நாடோறும் இரவிற் கண்விழித்தலால் தன்னுடல் நலஞ் சிதைதலையும் எல்லாம் எண்ணிப்பாராது அடுத்தடுத்து நாடகங் கண்டு, அதனால் வறுமையும் நோயுங் கொண்டு துன்புறுவானது ஒழுகலாறே உள்ளத்தை ஒழுங்கல்லா முறையிற் செலுத்துவான தாகுமென்க.

இன்னும் இங்ஙனமே இன்பத்தைத்தரும் பிற இனிய காட்சிகளைக் காண்டலிலும், இனிய இசைகளைக் கேட்டலி லுஞ் சுவைமிக்க உணவுகளை அருந்தலிலும், நறுமணப் பண்டங்களை மோத்தலிலும், மெல்லிய அணைகளை உறுதலிலுங் காமவின்பத்தை நுகர்தலிலும் எல்லா உள்ள மும் அவாவுந் தன்வழி நிற்க வேண்டுமேயல்லால், தான் அவற்றின் வழி நிற்கலாகாது. வசதிகள் வாய்த்த காலங்களில் அவற்றை மனமகிழ்ந்து துய்த்தலும், வசதிகள் வாயாத காலங்களில் உள்ளத்தை அவற்றின்கண் உய்த்து வருந்தாமற் கிடைத்த மட்டில் நுகர்ந்து மனவமைதியோடிருத்தலுமே ஒருவன் நீண்டகாலம் வாழ்தற்கு வழியாகும்.

ஆனால், மக்களோ எளிதிலே நீக்கிவிடத் தக்க புல்லிய பொருள் நுகர்ச்சிகளையும் விடாராய் அவற்றின் கண் அவா மிகுதியும் உடையராய் நடவாநிற்கையில், எளிதிலே நீக்கலா காத பொருள் நுகர்ச்சியில் அவர் அவாவிலராய் ஒழுகுதல் யாங்ஙனங் கை கூடும்! இப்போது நாடெங்கும் பரவி வருங் **காப்பி தேயிலை கோக்கோநீர்** எளிதிலே நீக்கத்தக்க புல்லிய பருகுநீராகும். இந்நீர்க்குடியால் மக்கட்கு வரும் நோயுந் துன்பமும் அளவிறந்தன! இது தெரிந்திருந்தும், அதனைக் குடிப்பவர்கள் அதனைச் சிறிதும் விடுகின்றார்களில்லை!

உயிரை விட்டாலும் விடுவோம் இதனை விடோம் என்கின்றார்கள்! ஓர் உயிரைத் துடிக்க துடிக்கக் கொன்று அதன் ஊனைத் தின்பவர்கள் அது தீவினையென்றுணர்ந்து அதனை நோன்பு நாட்களில் விலக்கிவைத்து, மற்றை நாட்களில் அதனை விடாராய் விழுங்குதலைப் பார்மின்கள்! அதனை நீக்கித், தம்முயிர்க்கும், பிறவுயிர்க்கும் இனியவான காய் கனி விதைகள் கீரைகள் ஏராளமாய்க் கிடைக்கையில் அவற்றை யுண்டு நீண்டகாலம் நோய் இன்றி இனிது உயிர் வாழலாமன்றோ? தமக்கும் பிறவுயிர்க்கும் நன்மை பயத்தக்க இவ்வெளிய முறைகளைக் கைக்கொண்டு நடவாமல், இருபாலார்க்குந் தீங்கு விளைக்கத்தக்க தீய கொடிய முறைகளை விடாப்பிடியாய்க் கொண்டு நடப்பவர்கள் தாம் நீண்ட காலம் உயிர்வாழ வேண்டுமென்று விரும்பினால் அது கைகூடுமோ? ஆகவே, ஐம்பொறிகளின் வாயிலான நுகரப் படும் பொருள்களிலுந் தமக்கும் பிறர்க்கும் தீங்குதரத்தக்கவை களைப் பகுத்தறிவால் ஆராய்ந்து பார்த்து விலக்கி, நல்ல வற்றை நுகர்தலில்மட்டுமே உள்ளம் பதிந்து நிற்குமாறு செய்து பழகுக.

இனி, நல்லவற்றைத் தாமுந் தம்மைச் சார்ந்தாரும் நுகர்ந்து நீடு இனிது வாழ்வதற்குச் செல்வப்பொருள் இன்றியமையாததாயிருத்தலின், அதனை எப்படியாவது முயன்று தொகுத்துக் கொள்ளக் கடவேமென்று அதன்கண் மட்டுக் கடங்கா அவா வைத்து நடவற்க. **எத்தொழிலைச் செய்தாலும் அதனை நுண்ணறிவுடன் திறமையாய்ச் செய்யத்தக்கவனுக்குச் செல்வந் தானாகவே வந்து திரளும்.** அச்சுப்பொறி, நீராவிப் பொறிகளைச் செய்த மேனாட்டு அறிஞரின் நுண்ணறிவையுந் திறமையையுஞ் சிறிது உணர்ந்து பாருங்கள்! முதலில் அவைகளை மிக ஆழ்ந்தறிந்து செய்தவர்கள் பொருள் சேர்க்க வேண்டுமென்று பேரவாவினாலா அவற்றைச் செய்தமைத்தார்கள்? சிறிதுமில்லை. அவற்றால் உலகிற்கு உண்டாம் பெருநன்மையைக் கருதியே நுண்ணறிவாற் பெரிதுழைத்து அவற்றைச் செய்து முடித்தார்கள். செய்து முடித்தபின்னரோ அவர்க்கும் அவரைச் சார்ந் தார்க்கும் அவர் வழியில் வந்தார்க்கு மெல்லாம் பெரும் பொருள் தானாகவே வந்து குவியா நின்றது; அவற்றால் உலகம் எங்கணும் விளைந்து வரும் நன்மைகளோ அளப்பில் லாதன. இவ்வரும்பெருந் தொழிற்றுறைக்கு ஒப்பவே, மிக எளிய

தொழிற்றுறைகளுக்கும் நுண்ணறிவும் உண்மை யுழைப்புமே முதன்மையாக வேண்டப்படுவன. உலக வாழ்க்கையில்தமக்கு அடுத்தடுத்து நேரும் இடர்ப்பாடுகளை எவர் தமது நுண்ணறிவு முயற்சியால் எளிதில் விரைந்து நீக்கி விடுகின்றனரோ அவர்க்கு மக்கள் மனங்களித்துத் தமது பொருளைக் கொடுக்கின்றனர். இதற்கு ஒரு சிறிய எடுத்துக் காட்டு வருமாறு: செல்வத்திற் சிறந்த ஒரு வணிகர் தாம் சீனத்திற்குச் சென்று அங்குப் பெரியதொரு வாணிகம் நடாத்த எல்லா ஏற்பாடுகளுஞ் செய்து, தாம் அவ்வூர்க்குப் புறப்படுங் கப்பலில் ஏறுதற்கு இரண்டு மணி நேரமே யிருந்தது. இவர் தம்முடன் எடுத்துச்செல்ல விரும்பிய எல்லாப் பண்டங்களையும் வண்டியில் ஏற்றிவிட்டார். கடைசியாகத் தாம் தம்முடன் கொண்டு செல்ல வேண்டிய பெரும் பொருட்டொகையை எடுப்பதற்கு அது வைத்திருந்த இரும்புப் பெட்டியைத் திறக்கச் சென்றார். ஐயோ! அந்நேரத்தில் அதன் சாவி எப்படியோ காணாமற் போயிற்று. எங்கே தேடிப்பார்த்தாலும் அது கிடைக்கவில்லை! நேரமோ ஆகின்றது! செட்டியாரோ பதைத்துத் துடிக்கின்றார்! அவர்தம் ஏவலாட்கள் எத்தனையோ வகையான சாவிகளைக் கொணர்ந்து முயன்று பார்த்தும், அச்சாவிகளுள் ஒன்றும் பொருந்தாமையால் அப்பெட்டி திறக்கவில்லை. இன்னும் முக்கால்மணி நேரந்தான் இருக்கின்றது! ஒவ்வொரு நொடிப் பொழுதும் அருமை மிக்கது! எல்லாரும் மிகப் பதைபதைத்து வருந்தும் அந் நேரத்தில் ஓர் ஏவலன் ஒரு தொழிலாளியைக் கொணர்ந்தான். அப்பேழையண்டை வந்த அத்தொழிலாளி அதன் சாவித் தொளையைச் சிறிதுநேரம் உற்று நோக்கி னான்; நோக்கிய பின் தான் எடுத்துவந்த கருவிகளுள் ஒன்றை அதன் சாவித் தொளையில் நுழைத்துச் சிலமுறை திருப்பினான்; உடனே படீரெனக் கதவு திறந்தது! அதுகண்டதும் அச் செட்டியார் மட்டுக்கடங்காக் களிப்பினால் துள்ளிக் குதித்து, அத் தொழிலாளியின் கையைப் பிடித்துக் குலுக்கி வாழ்த்தி, அவனது திறமையை வியந்து, பெட்டியினுள் தாம் வைத்திருந்த பணப்பையை யெடுத்து அவிழ்த்து, ஒரு நூறு ரூபா முறியை (Bank Note) அவன் கையிற் கொடுத்து நல்லுரை கூறி அவனைப் போக்கி, உடனே தாமும் போய்க் கப்பலில் ஏறிய மர்ந்தார். அவர் ஏறிய ஒரு

*நிமிடத்திற்கெல்லாங் கப்பலும் புறப்பட்டது! இந் நிகழ்ச்சியில் வைத்து நுண்ணறிவு முயற்சியுடையான்றன் அளப்பரிய அருமை பெருமையினை அளந்து பார்மின்கள்! எளிதில் நீக்குதற் கியலாமல் நேர்ந்த இடர்ப்பாடொன்றிற் சிக்குண்டு ஒருவன் துடிக்குங்கால் அவனுக்கு அளவுபடாச் செல்வமிருந் தென்செய்யும்! மனைவி மக்கள் உற்றார் பெற்றார் ஏவலர் நண்பரெல்லாமிருந்தும் அவர் என் செய்வர்! அந்நேரத்தில் அவ்விடர்ப் பாட்டினின்றும் அவனை விடுவிக்கத் தகுந்த நுண்ணறிவு முயற்சியுடை யானன்றோ அவனுக்கு உயிர்த் துணையாவன்! அவ் வறிஞனை யன்றோ அவன் பற்றுக் கோடாய்ப் பற்றி உயிர்பிழைப்பன்! அவ்வறிஞனுக்கன்றோ தன்பொருளையெல்லாங் கொடுத்து மகிழ்வன்! ஆதலால், நுண்ணறிவு முயற்சியுடையானுதவியை நாடாதார் உலகில் எவருமே யில்லையென்றுணர்ந்து கொள்க. நுண்ணறிவு முயற்சி யுடையான் றலைக்கடையில் திருமகள் போந்து காத்திருப்பா ளாதலின், அவன் செல்வத்தின் மேற் பேரவா வைத்து அதனை நாடியொழுகுதல் எற்றுக்கு? இவ்வுண்மையை யுணர்த்துதற் கன்றோ தெய்வத் திருவள்ளுவர்,*

“அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என் னுடைய ரேனும் இலர்.” (குறள் 430)

*என்று அருளிச் செய்தார். ஆகவே, நுண்ணறிவு முயற்சி யுடையார்க்குச் செல்வந் தானாகவே வந்து குவிதல் திண்ண மாகலின், அதனைத் தொகுத்தலிற் பேரவாக் கொண்டு நடவாமல், தம் அறிவையும் முயற்சியையும் மேன்மேற் பெருக்குவதிலேயே எல்லாருங் கருத்து வைத்து நடத்தல் வேண்டும். தமது முயற்சியைக் காலத்திற்கு ஏற்றபடியாகவும் இடத்திற்கு ஏற்றபடியாகவுந், தாமிருக்கும் இடத்தில் உள்ள மக்களுக்குப் பயன்படும்படியாகவும் நன்காராய்ந்து செய்தல் வேண்டும். அவற்றோடு ஒவ்வொருவருந் தத்தம் நிலைமை களை எண்ணிப் பார்த்து, அவற்றிற்கு ஏற்பவே பொருள் ஈட்டும் முயற்சிகளைச் செய்தல் வேண்டும். மழைகாலத்திற் செய்தற்குரிய பயிர்த் தொழிலை அக் காலத்திற் செய்யாமற் கொடிய வேனிற் காலத்திற் செய்யும் அறிவிலி அதனாற் பயன் பெறுதல் கூடுமோ? களர் நிலத்தில் விளைத்தற்குரிய*

உப்பினைக் கொழுவிய வயல் நிலத்திலும், வயல்நிலத்தில் விளைத்தற்குரிய நெல்லினைக் களர் நிலத்திலும் ஒருவன் விளைக்க முந்துவானாயின் அப்பேதையின் முயற்சி ஒருசிறிதும் பயன்படாதென்பதனை யார்தாம் அறியார்? அங்ஙனமே, கல்வியறிவு பெறுதலிற் கருத்தில்லாக் கயவர் மிகுந்திருக்கும் ஓர் ஊரிற், கலை நூல்கள் விற்குங் கடையொன்று வைத்தால் அம்முயற்சியைத் தொடங்கின வனல்லனோ இகழப்படுவான்? ஊன் உண்ணும் புலையர்கள் நடுவில் உயர்ந்த காய்கனி வித்துக்கள் கிழங்குகள் விற்கப்புகுமொருவன் எவ்வளவு ஊதியம் பெறக்கூடும்? அங்ஙனமே ஊன் உண்ணா அருளாளர் உறையும் ஓர் ஊரில் ஊன் விற்பான் பொருள் ஈட்டுதல் இயலுமோ? இன்னுந், தன் கையில் ஐந்து பொற்காசு களுக்குமேல் வைத்திராதவன், அவைகொண்டு ஆயிரம் பொற்காசு திரட்ட அவாவினால் அஃதுடனே அவற்கு நிறைவேறி விடுமோ? உயர்ந்த அறிவு நூற் கல்வியில்லாதவன், பிறர்க்குத் தான் அறிவுரை கூறி அவர் பாற் காணிக்கைபெற விரும்பினால், அவன் எல்லாராலும் வெறியன் என்று எள்ளப்படுதலன்றி வேறு என்பெறுவன்? ஆகையால், எவருங் காலத்தையும் இடத்தையும் இடத்தி லுள்ள மக்களையுந் தமது நிலையையும் எண்ணிப் பார்த்து அவற்றிற்குத் தக்க முயற்சிகளை ஒழுங்காகச் செய்து பொருள் ஈட்டக் கடவராக!

அவ்வாறு அவாவை அடக்கிப் பொருள் ஈட்டும் முயற்சியைச் செவ்வனே செய்யாமற், பொருளையே அவாவி நிற்பவன் எந்தவகையிலாவது அதனைப் பெறுதற்கு முனைகுவ னாதலின், அவன் அதன்பொருட்டு எத்தகைய தீவினையுஞ் செய்தற்குப் பின்வாங்கான், **பொய் புனை சுருட்டுக் கொலை களவு** முதலான கொடுந்தீவினைகளைச் செய்வாரிற் பெரும்பாலார் எதன்பொருட்டு அவைகளைச் செய்கின்றனர் என்று ஆராய்ந்து பார்த்தாற் பொருளின் பொருட்டாகவே அவைகளைச் செய்கின்றனர் என்பது தெள்ளிதிற் புலனாம்.

இனிப், பொருள்மேற் செல்லும் அவாவுக்கு அடுத்த படியாக மாதரார்மேற் செல்லும் அவாவாகிய **காமமும் அடக்க வேண்டுமிடத்து அடக்கி விடுக்க வேண்டுமிடத்து விடுக்கற் பாலதாயிருக்கின்றது;** ஒருவர் காமத்தைத் தம தெண்ணத்தின் வழிவைத்து ஒழுகுங்காறும் அவர்க்கு எல்லா

நலங்களும் உளவாமாகலின், அவர் நீண்டகாலம் உயிர் வாழ்தல் திண்ணம். தமக்கு உரியவரேனும் அவர்பால் வரைகடந்து காமவின்பந் துயக்கலுறுவார்க்கு உடல்நலங் கெடுமாகலின் அவர் நீண்ட காலம் உயிர் வாழ்தல் இயலாது. ஆகவே, தமக்குரியார் மாட்டும் மேலியல்களில் விளக்கிக் காட்டியபடி ஒரு வரையறையுள் வைத்து அதனை நுகர்வாரே நெடிது வாழ்வர். மற்றுத் தமக்குரி யரல்லாதார்பாற் காமவேட்கை மிகக் கொண்டு அலைபவர்களோ, வரையிறந்த பொருட் பற்றுடை யாரைப் போலவே கொடுந் தீவினைகளைச் செய்தற்கு உளங்கூசாராதலால், அவரும் நீண்டகாலம் உயிர் வாழ்தல் அரிதேயாம், ஆகவே, உடலோம்புதற்கு வேண்டும் பொருளிலும், உடலும் உயிரும் ஒருங்கு ஓம்புதற்கு வேண்டும் காம நுகர்ச்சியிலுஞ் செல்லும் அவாவைத் தம்வயமா வைத்து அவையிற்றை ஒரு வரையறையப்படுத்து ஒழுகுவாரே நீடுவாழ்தற்குரியா ராதல் பெறப்படுதல் காண்க.

இவ்வாறு அவாவைத் தம்வயமா வைத்து ஒழுகு வார்க்குக் கவலையும் அதுபற்றிவரும் மனநோயும் உண்டாகா. அவையிலவாகவே, அவர் நரைதிரை மூப்புப் பிணிகள் இலராய் என்றும் இளைஞராகவே இருப்பர். மற்றுக் கவலையுந் துன்பமும் உடையாரே விரைவிலே மூத்து விரைவிலே மாண்டுபோவர். கவலையுடையான் முகஞ் செழுமையாய் இராது; வாடி வதங்கியிருக்கும்; அவனுடம் பின் வலிமையே இராது; அவனறிவு தெளிவில்லாது மழுங்கிப் போய்விடும்; அவன் ஏதொரு முயற்சியையும் நன்கெடுத்து முடிக்க மாட்டான். யாம் சிறுபிள்ளை யாயிருந்த காலத்து ஒருவர் சொல்லக் கேட்ட ஒரு சிறுகதையை இங்கெடுத்துக் கூறுதும்: ஒரு காலத்தில் ஓர் ஊரில் ஓர் ஏழைக் குடியாயிருந்த ஒருவனுக்கும் அவன் மனைவிக்கும் ஓர் ஆண்மகன் பிறந்தான். அவன் பிறந்து வளர்ந்த சில்லாண்டு களிலெல்லாம் அவன் தந்தை இறந்து போயினான். அறுதலியான அவன் தாயோ தனக்குள்ள ஒரு மகனையன்றி வேறெவரும் இல்லாமையால், அவனைத் தன் உயிராக நினைந்து கண்ணுங்கருத்துமா வளர்த்து வந்தாள். கைப் பொருள் ஏதும் இல்லாமையால், நெல்லுக்குத்தியும் இல்லங் கடோறுந் தண்ணீர்குடந் தூக்கியும் ஏவிய பிற வேலைகளைச் செய்தும் பெற்ற சிறுபொருள் கொண்டே அவனை அங்ஙனம்

வளர்த்து வருவாளாயினள். இவ்வாறு வளர்க்கப் பட்டு வளர்ந்த அப்பையனுக்கு இருபதாண்டு நிரம்பிற்று. அவன் தாய் கல்வியறிவும் இயற்கைப் பகுத்தறிவும் இல்லாத வள் ஆதலால், அவனைக் கல்வி பயிலவுஞ்செய்திலள். அவனை வேறு கைத்தொழிலிற் புகுந்து பணந்தேடவுந் தூண்டிற்றிலள். நாடோறுந் தானே பாடுபட்டுத் தேடிக் கொணர்ந்த பொருள்கொண்டே அவனைக் காப்பாற்றி வந்தனள். அவள் மகனோ நன்றாய் உண்பதும் உறங்குவதும் மனக்கிளர்ச்சியோடு ஊர் சுற்றுவதுந் தவிர வேறு பொருள்தேடும் முயற்சியிற் சிறிதும் புகுந்திலன். இவன் தனக்குள்ள உடம்பின் திமிர்வால், அவ்வூரின் அரண்மனை வாயிலிற் கட்டப்பட்டு நின்ற ஒரு யானையினிடம் போய் அதன் தும்பிக்கையைப் பிடித்து இழுத்து முறுக்கி, அதற்குத் தன் வலிமைகாட்டி அதனொடு விளையாடத் துவங்கினான். அவ்வியானையும் அவன்றன் உடல் வலிமையுங்கண்டு அவன் தன்னொடு வலிமைகாட்டி விளையாடுதலுக்கெல்லாம் இசைந்திருக்கும். இவ்வாறு சிலகாலம் நடந்து வருகையில் அவ்வூர் அரசன் தன் அமைச்சனுடன் அவ்வரண்மனையின் மேன் மாடத்தில் ஒரு நாட்காலையில் உலாவிக் கொண்டிருந் தவன். இவ்விளைஞன் அஞ்சாநெஞ்சினனாய்த், தன் அரண்மனை வாயிலில் நிற்கும் யானையுடன் வலிமை காட்டி விளையாட்டயர் தலைக் கண்டான் கண்டு அவன் வலிமையினை வியந்து, தன் அமைச்சற்கும் அதனைக் காட்டி, “ஐய, இவ்விளைஞற்கு நம் யானையினுடன் இங்ஙனம் விளையாடும் ஆண்மையும் வலிமையும் எங்ஙனம் வந்தன?” என்று வினவினான். கூர்த்த அறிவினனான அவ்வமைச்சன், “அண்ணால், இவன் கவலையும் அச்சமுந் துன்பமுஞ் சிறிதும் இன்றி வளர்ந்த வனாகல் வேண்டும். அதனாலே தான் இவ்வளவு நெஞ்சழுத்தமும் உடற்றிமிரும் இவன்பாற் காணப்படுகின்றன. இன்னுஞ் சில நாட்களில் இவனது நிலைமையில் வேறுபாடு காட்டுகின்றேன்” என்று அரசர்க்குக் கூறினன். கூறி இரண்டொருநாட் கடந்தபின், அவ்வமைச்சன் தானே அவ்விளைஞன் இருக்கும் வீடுதேடிச் சென்று, அவன் வீட்டில் இல்லாத நேரத்தில் அவன்றன் அன்னையை அருகழைத்து, “அம்மே, நின்மகன் எப்படி நாட்கழிக்கின்றான்? உங்களது பிழைப்பு எப்படி நடக்கின்றது?” என்று கேட்க, அவள் தம்

வரலாறு முழுதும் எடுத்துரைத்து, "யானே அரும்பாடுபட்டு என் ஒரே மகனைப் பாதுகாத்து வருகின்றேன். அவனுக்கு ஏதொரு பாடும் படத் தெரியாது" என்று விடைபகர்ந்தாள். அதற்கு அவ்வமைச்சன், "கள்ளம் அறியாத அம்மையே, உனக்குப் பிறகு அவன் எப்படி பிழைப்பன்? நன்றாக வேலை செய்து பிழைக்கக்கூடிய அவனை யார் காப்பாற்றுவர்? இதனை நீ எண்ணிப்பார்க்க வேண்டாமா? நீ உயிரோடியிருக்கும் போதே அவன் ஒரு கைவேலை செய்து பணந்தேடிக் கொணர்ந்து கொடுக்கும்படி தூண்டு" என்று வற்புறுத்திச் சொல்ல, அவ்வேழை மாது, "ஐயா, அவனை நான் எப்படி வேலைக்குப் போ! என்று சொல்வேன்? எனக்கு ஒன்றுந் தோன்றவில்லையே!" என்று மனக் கலக்கத்தோடு கூறினாள். அதுகேட்ட நுண்ணறிவினான அவ்வமைச்சன், "அம்மா, நாளைக்கு நீ நின் மகனுக்கு உணவிடுங்கால் எல்லாம் உப்பு இல்லாமல் இடு! அவன் சுவை பார்த்து உப்பு இல்லையென்றால், அப்பா, நான் ஏது செய்வேன்! இத்தனை காலம் பெரும்பாடுபட்டுப் பணந்தேடி உன்னைக் காப்பாற்றி வந்தேன். இப்போது என்னாற் பாடுபட முடியவில்லை. என் உடம்பில் வலிவில்லை, அதனாலே உப்பு வாங்கக் கையிற் காசும் இல்லை. நீ எங்கே யாவது காசுதேடி உப்பு வாங்கி வந்தால், அதனைச் சேர்த்துச் செவ்வையாகச் சமையல் செய்து வைப்பேன்; என்று அவனுக்குச் சொல்லிவிடு, அதன் பிறகு அவன் பணந்தேடும் முயற்சியை செய்வான்," என்று அவட்கு அறிவு சொல்லிக் கொடுத்துத், தன்னில்லம் ஏகினான். அவ்வம்மையும் மறுநாள் உணவெடுக்க வந்த தன் மகனுக்கு, அமைச்சன் கற்பித்தவாறே உப்பில்லா உணவு வைக்க, அவள் மகன் அதைச் சுவை பார்த்து உப்பில்லையே யென்ன, அவன் தன்னாற் பாடுபட இயலாமையால் உப்பு வாங்கக் காசில்லை யெனவுங், காசு தேடிக் கொணர்ந்தால் சமையல் செவ்வையாக முன்போற் செய்யலாமெனவுங் கூறினள். அதுகேட்ட அவ்விளைஞன் மிக்க கவலையுடை யோனாய், உப்பில்லா அவ்வுணவை அரை குறையாய் விழுங்கி விட்டு, வெளியே போய்க் காசுதேடும் முயற்சியை எதுவென்று ஆராய்வா னானான். இங்ஙனங் கவலையும் வருத்தமுங் குடிகொண்ட மனத்தினனாகவே, அவன் தன் உடல் உரங்குறைந்து சோர்வடையப்பெற்றான். என்றாலும் அவன் வழக்கம் போல

அரண்மனைவாயிலுள்ள யானை யினுடன் திமிர்வு காட்டி விளையாட மறுநாட் காலையிற் சென்றான். முன்போலின்றி அவன்றன் உள்ளமும் உடலுஞ் சோர்ந்து போனமையாற், பழைமைபோல் அவன் அவ்வியானைத் தும்பிக்கையைப் பிடித்திழுத்து முறுக்க முடியாமல் அஞ்சி நின்றான்; அவ்வி யானையும் அவனது வலிவின்மை கண்டு அவனைத் தூக்கி அப்புறம் எறிந்தது. இவையெல்லாம் அரண்மனை மேன்மாடத்தில் அமைச்சு டனிருந்து கண்ட மன்னன், "ஐய, ஈதென்னை! நேற்று வரையில் நம் யானையுடன் திமிர்வு காட்டி விளையாடிய இவ்விளைஞன், இன்று இவ்வளவு சோர்வுடையவனாய்த் தான் அதனை இழுக்க மாட்டாமல், அதனால் தான் இழுப்புண்டு எறியப்பட்டனனே!" என்ன, அமைச்சன் தான் அவன் அன்னைக்குச் சொல்லிச் செய்வித்ததனை யெடுத் துரைத்தான். இச் சிறுகதையால் அறியப்படும் உண்மை யாது? கவலையுந் துன்பமும் இல்லாத வரையில் மக்களின் உள்ளமும் உடலும் உரமாயிருக்கு மென்பதூஉம், அவையுண்டான வுடனே அவ்விரண்டும் உரமிழந்து சோருமென்பதூஉம் அல்லவோ? ஆகையாற், கவலைக்குந் துன்பத்திற்கும் வித்தான அவாவைத் தன் வயமாக நிறுத்தி நடக்க வல்லானுக்கு அவையிரண்டும் இல்லாதொழியு மாகலின், அவன் உள்ளமும் உடலுஞ் செழிப்புடன் நெடுநாள் வைகுமென்பது தேற்றமாம்.

இனிப், புறப்பொருள்களுட் கண்ட கண்டவற்றின் மேலெல்லாம் அவாவினைச் செல்லவிடாது தடுத்து ஒழுகும் மனத்திட்பம் உடையானுக்குங் கவலையுந் துன்பமும் வருதல் காண்டுமாலெனின்; அஃதுண்மையே, ஒருவன் தானிருந் துயிர் வாழுந் தன்னில்லத்திற்குப் புறம்பேயுள்ள பொருட் டொடர்பு களைத் தான் வேண்டியவாறு கைக் கொள்ளு தலுங் கைவிடுதலுஞ் செய்தல் கூடும். ஆனால், அவ்வில்லத் தினுள்ளே தன்னோடு ஒருங்கிருந்து உயிர்வாழுந் தன் மனைவிமக்கள் முதலாயினாரது தொடர்பினை அங்ஙனந் தான் விரும்பியவாறு தொடுதலும் விடுதலுஞ் செய்தலோ எளிதில் முடியாது. ஆகவே, மனத்திட்பம் உடையானுக்குந் தன் மனைவிமக்களால் வருங் கவலையுந் துன்பமும் அவனை ஓவாது வருத்துந் தன்மையவாய் அவனை நனவினுங் கனவினும்

நிழல்போற் பற்றிநிற்குமென்பது உணரப்படும். மற்று, மனைவிமக்கள் உடன்பிறந்தார் சுற்றத்தாரெல்லாந் தன் எண்ணப்படி நடக்கும் நல்லராய் வாய்க்கப்பெற்றானுக்கோ அதனின் மிக்கபேறு பிறிதின்மையால் அவன் என்றும் இளைஞனாய் இனிது வாழ்தல் உறுதியேயாம். இதனைப் பழைய நாளில் உண்மையாக நடந்த ஒரு வரலாற்றினால் நன்கு விளக்கிக் காட்டுவாம்.

இற்றைக்குச் சிறிதேறக்குறைய ஓராயிரத்து தொளாயிரம் ஆண்டுகட்குமுற் பாண்டிநாட்டில் **பிசிர்** என்னும் ஊர்க்கண்ணே **ஆந்தையார்** எனப் பெயரிய பெருந்தமிழ்ப் புலவர் ஒருவர் இருந்தார். அதே காலத்திற் சோழநாட்டில் **உறையூரின்** கண்ணே செங்கோல் செலுத்திய **கோப்பெருஞ் சோழன்** என்னும் மன்னன் ஒருவனுஞ் செந்தமிழ்ப் புலமையிற் சிறந்து விளங்கினான். இவ்விருவரும் ஒருவரையொருவர் நேரிற் காணாராயிருந்துங், கேள்வியளவில் ஒருவர்பால் ஒருவர் உயிரினுஞ் சிறந்த நட்புரிமை கொண்டு அன்புருவாய்த் திகழ்ந்தனர். பிசிராந்தையாரை எவரேனுந் தலைப்பட்டு, "நும்பெயர் யாது?" என வினவின், அவர் தம் பெயரைச் சொல்லுதலொழிந்து, தம் ஆருயிர் நண்பனாகிய கோப்பெருஞ் சோழன் பெயரையே தம் பெயராக மொழிகுவர். இவ்வாறே நீண்டகாலங் கழிந்தது. பின்னர் ஒருகாற், கோப்பெருஞ் சோழனுக்கும் **இளஞ்சேரலிரும் பொறை** யென்னுஞ் சேரமன்னனுக்குங் கடும்போர் மூண்டது. அப்போரிற் கோப்பெருஞ்சோழன் தோல்வியடைந்தா னாகலின், தோல்வியடைந்தபின் உயிர்வாழ்தலில் அவன் விருப்பிலனாய், வடக்கு நோக்கியபடியாய் இருந்து பட்டினி கிடந்து உயிர்துறப்பானாயினன். அங்ஙனம் அவன் உயிர்துறக்கப் புகுகின்றுழித், தன் ஆருயிர் நண்பராகிய பிசிராந்தையாரை நினைந்து, தன் மருங்கிருந்த சான்றோரை நோக்கி, '**யான் உயிர் துறந்தபின் அதுகேட்டு என் ஆருயிர் நண்பராகிய பிசிராந்தையார் சிறிதுந் தாழார்; அவர் உடனே இவன்போந்து என் மருங்கே உயிர் துறப்பர்; ஆதலால், என்பக்கலிலே அவர்க்கும் இடன் ஒழித்து வைம்மின்கள்!** என்று கூற, அதற்கவர்கள், இவ் வல்லற் காலையில் அவர் வாரார்' என்றுரைப்ப, மீண்டும் அவன்,

"கேட்டன் மாத்திரை யல்ல தியாவதுங்
காண்டல் இல்லா தியாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமைய ராயினும்,
அரிதே தோன்றல்! அதற்பட ஒழுகல்என்று
ஐயங் கொள்ளன்மின்! ஆரறி வாளீர்!
இகழ்விலன் இனியன் யாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே,
தன்பெயர் கிளக்குங் காலை என்பெயர்
பேதைச் சோழன் என்னுஞ் சிறந்த
காதற் கிழமையும் உடையன், அதன்றலை
இன்னதோர் காலை நில்லலன்,
இன்னே வருகுவன், ஒழிக்க அவற் கிடமே"

*(புறநானூறு, 216)*

*என்று நுவன்றான். அவன் நுவன்றவாறே, தம் ஆருயிர் நண்பனான கோப்பெருஞ்சோழன் உயிர்நீத்தான் என்னுஞ் சொற்கேட்ட துணையானே* ***பிசிராந்தையாரும்****. ஓரிமைப் பொழுதுந் தாழாராய்த் தாமும் அவன்மருங்கே உயிர் நீத்தற்கு அவன் உயிர்போக்கிய இடமே போந்தார். போந்த பிசிராந்தையாரை அங்கிருந்த சான்றோரெல்லாருங் கண்டு வியந்து, அவர் ஆண்டில் மிக முதியராயிருந்தும் நரை திரை மூப்பு இன்றி இளயைவடிவினராய்த் திகழ்தல் நோக்கிப் பின்னும் பெருவியப்புடையவராய்க்* ***"கேட்குங் காலம் பலவாலோ, நரை நுமக் கில்லையாலோ?"*** *என்று அவரை வினவப், பிசிராந்தையார்,*

"யாண்டு பலஆக நரையில ஆகுதல்
யாங்கா கியர்? என வினவுதி ராயின்,
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்.
யான்கண் டனையர் என்இளையரும், வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும், அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே" (புறநானூறு, 191)

*என்னும் அரிய செய்யுளால் அவர்க்கு விடைகூறித், தம் நண்பனாகிய அச் சோழன் பக்கத்தே கிடந்து தாமும் உயிர் நீத்தார்.*

இவ்வரிய பண்டை நட்புவரலாற்றிலிருந்து ஈண்டைக்கு நாம் ஆராயற்பாலன அதன் ஈற்றில் யாம் காட்டிய மேலைச் செய்யுட் பொருள்களே யாகும். ஒருவன் யாண்டில் மிக முதியனாயிருப்பினும் உடம்பிலும் முயற்சியிலும் அவன் இளைஞனாயிருப்பதற்குக் காரணம் முதற்கண்ட அவன் மனையாள் அழகிலும் அறிவிலும் அன்பிலுஞ் சிறந்தவளா யிருத்தலே யாகுமென நல்லிசைப் புலவராகிய பிசிராந்தை யார் கூறுகின்றார். ஏனென்றாற் புறத்தே சென்று பொருள் தேடும் அல்லலிற் பட்டுழன்று அயர்ந்து தன்னில்லந் திரும்பிய ஒருவன், கவர்ச்சிமிக்க தோற்ற முடையளாகிய தன் மனைவி யைக் கண்டதுணையானே தான் பட்ட துன்பங்களை யெல்லாம் மறந்து இன்பம் எய்தப்பெறுகின்றான். அதன் மேலும், அவள் தன் கணவன் நிலையினையும் அவனது வருவாய் நிலையினையும் நன்கறிந்து அவற்றிற்கு ஏற்ப ஒழுகுதலுந், தன் வீட்டிலுள்ளார் வருந்தாமல் அவர்கள் உவக்குமாறெல்லாம் மனைவாழ்க்கையை நடத்துதலுந், தான் ஈன்ற மக்களை நோயின்றி நற்குண நற்செய்கைகளினுங் கல்வியறிவிலும் மேம்படுமாறு வளர்த்தலும், வந்த விருந்தி னரை முகனமர்ந்து ஓம்புதலும், அற்றார்க்கும் அலந்தார்க்கும் அறஞ் செய்தலும் பிறவுமாகிய இல்லற முயற்சிகளை நடைபெறு வித்தலில் வல்ல இயற்கையறிவும் அதனோடு ஒருங்கியைந்த கல்வி யறிவும் மெய்யன்பும் உடையளாயின், இல்லத்தினுட் புகுந்த அவள் கணவன் எவ்வளவு மகிழ்ச்சியும் எவ்வளவு பேரின்பமும் அடைந்தவனாயிருப்பன்! அத்தகைய வனுக்குக் கவலையேது? துயரம் ஏது?

மற்று, அழகில்லாத ஒருத்தியை மனையாளாகப் பெற்றவனுக்கோ, அழகினைக் கண்டு அடையும் ஒரு சிறந்த இன்பம் இல்லையாய் ஒழிகின்றது! அங்ஙனமே அழகில்லாத ஒருவனைக் கணவனாகப் பெற்றவளுக்கும் இல்வாழ்க்கை யானது சாறில்லாத சக்கை போலாய் விடுகின்றது. திருத்தமான அமைப்பும் மினுமினுப்பான நிறனும் வாய்ந்த வடிவத்தைக் கண்டு மகிழாத வரும் வியவாதவரும் உலகில் எவருமே யில்லை. அங்ஙனமே ஒன்றினொன்று ஏற்றக் குறைவான உறுப்பமைவும் மங்கிய நிறமும் உடைய அருவருப்பான வடிவைக் கண்டு வெறுப்படையாதவரும் எவருமே யில்லை. **தொழுநோய்** (குட்டம்) படைநோய்

கொண்ட வடிவங்களையும் **மூக்கு, விழி வாய் காது கன்னங் கை கால்** முதலான உறுப்புகள் பழுதுபட்ட வடிவங்கைளயுங் காண நேர்ந்தால், நாம் எவ்வளவு உள்ளம் உவர்ப்புற்றுந் திகில் கொண்டும் அப்பால் திரும்பிப் போகின்றோம்! மற்றே யார் எழுதிய ஓவியங்களைவிட **இரவிவன்மர்** வரைந்த ஓவியங்களைக் கண்டு நாம் ஏன் பெருமகிழ்வுறுகின்றோம்? அவற்றின்கண் உள்ள ஆண் பெண் வடிவங்களின் திருந்திய அமைப்பையும் ஒளி விளக்கத்தையுங் கண்டன்றோ? எருக்கம்பூவைக் கண்டு அருவருக்கும் நாம் வெள்ளிய அல்லிமலரைக் கண்டு மகிழ்வது ஏன்? அல்லி மலரின் அழகையும் நிறத்தையும் மணத்தையுங் கண்டன்றோ? பிற்காலத்தவர் இயற்றிய தமிழ்ச் செய்யுட்களைக் கண்டு அருவருக்கும் நாம், முற்காலத்து நல்லிசைப் புலவர்கள் இயற்றிய **அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, பத்துப் பாட்டு, சிலப்பதிகாரம், திருக்கோவையார்** முதலான நூற் செய்யுட்களைப் பல்காலும் பயின்று பயின்று இன்புறுதல் என்னை? அவை, மக்களிலும் உலக இயற்கையிலும் ஆங்காங்குக் காணப்படும் எழில்கிளர் தோற்றங்களையும் நிகழ்ச்சிகளையும் உண்மைக்கு மாறாகாமல் எடுத்து நம் அகக்கண்ணெதிரே காட்டுதலாலன்றோ? இருந்தவாற்றால் அழகிய வடிவங்களும் அழகிய காட்சிகளும் உலகத்திற் காணப்படாவாயின், உலக வாழ்க்கையே வெறும் பாழாய் விடுதலுடன், இறைவன்றன் படைப்பின் ஆற்றலும் ஒரு சிறிதும் விளங்காதொழியும், அவை யிரண்டும் இல்லை யாகவே, அழகுணர்வும் அதுபற்றி வரும் இன்ப எழுச்சியும் இலராய் மக்கள் எல்லாரும் விலங்கினங் களினுங் கடைப் பட்ட வாழ்க்கையுடையராய் ஒழிவர். அங்ஙனம் ஆகாமைப் பொருட்டும், அழகுக்கே ஓர் உறையுளாய் உள்ள தன்னை எல்லாரும் நினைந்துருகி இன்புறுதற்பொருட்டுமே எல்லாம் வல்ல இறைவன் அழகிய வடிவங்களையும் அழகிய காட்சி களையும் ஆங்காங்கு விளங்க அமைத்திருக்கின்றான்.

அற்றேல், அழகில்லாதனவும் ஆங்காங்கு மிகுதியாய்க் காணப்படுதல் ஏனென்றாற் கூறுதும்; இறைவனது அழகிய அருள் எல்லாப் பொருள்களினுள்ளும் எல்லா உயிர்களினுள் ளும் நிறைந்து நின்று அவை தம்மை யெல்லாம் அழகிய வாகவே

உருவாக்கி வருகின்றது என்றாலும், அப்பொருள் களிலும் உயிர்களிலும் ஒரு பாலன அழகினை மிகுக்கும் அருட் செயலுக்குப் பெரிதும் இடந்தந்து இசைவாய்ப் போதர, மற்றொருபாலன அவ்வழகினைக் கெடுக்கும் மருட் செயலுக்கு மிகுதியாய் இடந்தந்து அருளொடு மாறு கொண்டு கிடத்தலின் அவை அழகியவாய் உருவாக்கப் படாமல் அருவருக்கப் படுவனவாயும் பயன் இலவாயும் இருக்கலாயின. பசும் பொன்னிலே சிறந்ததொரு பாவையினை இழைத்துத் திருத்தவல்ல ஒரு கம்மியனது கைத் தொழில் வன்மைக்கு அப் பசும்பொன்னே இடந்தரக் காண்டு மல்லது, ஒரு செங்கல் இடந்தரக் காண்டும் இல்லையே. பலவகை மட்பாண்டங் களை வனையும் ஒரு வேளானது கைவினைத் திறத்திற்குக் குழைவான களிமண்ணே இசைந்துவரக் காண்டு மல்லது, ஆற்று மணல் இசைந்து வரக்காண்டுமில்லையே. வாய் மணக்கக் கைம்மணக்க வயிறுகுளிரத் தீஞ்சுவையுணவு அமைக்குஞ் சமையற் காரனுக்குக் காய் கனி கிழங்குகள் முதலான பண்டங்களே உதவக் காண்டுமல்லாற், கல்லும் மண்ணுங் கரியும் உதவக் காண்டுமோ? கலையறிவுங் கற்பிக்குந் திறமும் ஒருங்கு வாய்ந்த ஒரு நல்லாசிரியனை அடுத்த மாணாக்கருள்ளும் ஒரு பகுதி யாரே ஆசிரியன்றன் புலமைத்திறத்தை அடைவதல்லால், எல்லாரும் அவனைப் போல் அறிவிற் சிறந்தாராதல் கண்ட துண்டோ? நெருப்புக் கண்ணாடியே கதிரவன் வெம்மையைக் கவர்ந்து கக்கக் கண்டாமல்லது, பிற கண்ணாடிகள் அதனைக் கவர்ந்து கக்கக் கண்டாமோ? இங்ஙனமே எல்லாப் பொருள் களையும் எல்லா உயிர்களையும் அழகுரு வாக்கி வராநின்ற இறை வன்றன் அருளாற்றலின் வழியவாய் நின்று அதனால் அழகிற் றுலங்குவனவும், அதன்வழி நில்லாது மருள்வழி நின்று அழகிலவாய் அருவருக்கப் படுவனவும் வெவ்வேறாகவே யிருக்கின்றன. கடவுளை நினைத்தலும் கடவுளை வழிபடுதலுங் கடவுளின் அருளறிவு ஆற்றல்களைப் பேசுதலும் உடைய ராய் ஒழுகுவாரையும், அவரை நினைத்தலுங் பேசுதலும் இலராய்க் கடவுளென்றொரு பொருள் இல்லையெனச் செருக்கிப்பேசி உழிதருவாரையும் ஒப்பிட்டுப் பார்மின்கள்! முன்னையோர் அன்பு அருட் குணங்களாற் குழைந்த நெஞ்சமும், அவற்றின் ஒளியாற் கிளர்ந்த முகனும், அவற்றோ டொத்த மென்செயலும்

உடையராய்த் தம்மைக் கண்டார்க்குந் தம்மோடுரையாடினார்க்குமெல்லாம் அன்பையும் உருக்கத்தையும் உண்டாக்கித் தாஞ் செல்லும் இடனெல்லாம் அருட்சுடர் ஒளிரச் செய்தலும்; ஏனைப் பின்னையோர் வன்பும் மருளும் ஏறிய வன்னெஞ்சமும், அவற்றாற் பாழ டைந்த முகமும், அவை தமக்கேற்ற வன்செய்கையும் உடையராய்த் தம்மைக் கண்டார்க்குந் தம்மோடுரையாடினார்க்குந் துன்பத்தையும் அருவருப்பையுந் தந்து தாஞ் செல்லும் இடங்கடோறும் அறியாமையும் இறுமாப்பும்மிக்கு இருண்டு தோன்றப் புரிதலும் எவரும் எளிதிலே அறிந்து கொள்ளத் தக்கவாறாய்ப் பிரிந்து காணப் படுகின்றன. ஆகவே, அழகுக்கும் அறிவுக்கும் அன்புக்கும் அருளுக்கும் ஆற்றலுக்கும் ஒரு கொள்கலனான கடவுள்தான் நிறைந்து நிற்கும் எல்லாவற்றையுந் தன்னுருவாக்கி வருதலிலேயே முனைந் திருப்பினும், அதன் அருட்செயலுக்கு இடந்தராமல் அதனொடு மாறுகொண்டு நிற்பனவெல்லாம் அழகிலவாகவே யிருக்குமென்றுணர்ந்து கொள்க. இவ்வாற்றாற், கடவுளின் அருள்வழி நின்று தம்மை அழகு செய்து கொள்ளுதலை விழையாது. அதற்கு மாறாய் நின்று தம்மை அழகற்ற கொடியராக்கிக் கொள்வார்க்கு, அஃது அவர் குற்றமேயாய் முடியுமல்லது கடவுள் குற்றமாகா தென்பதூஉந் தேற்றமா மென்க. என்றித் துணையுங் கூறியது கொண்டு, அழகிய ஒரு மாதுக்கு அழகிய ஓராடவனையும், அழகிய ஓராடவனுக்கு அங்ஙனமே அழகிய ஒரு மாதினையுங் கூட்டி மணஞ் செய்து வைத்தலே, அவர் இருவரும் இன்ப வாழ்க்கையில் வழுவின்றி நீளவாழ்தற்கு வழியாதல் அறியப் படும். அழகின் பொருட்டு ஆண் பெண் பாலார் படாத பாடெல்லாம் படுவதையும், எல்லாவற்றினுஞ் சிறந்த தம் உயிரையும் அவர் ஒரு துரும்பாகக் கருதி இழத்தலையும், இதன்பொருட்டு உலகமே தலை கீழாய் புரண்டு போதலையும், **“அழகினை விரும்பாதே!”** என்று பிறர்க்கு வற்புறுத்தி அறிவுசொல்வாருந் தாம் அழகியார் ஒருவரைக் கண்டால் தமது நிலைமறந்து தகாதன செய்து ஒழுகுதலையுமெல்லாம் நேரே கண்டு வைத்தும், நம்மனோர் அழகுமிக்காரை அழகில்லார்க்கு மணஞ் செய்வித்து, அவரைச் சொல்லொணாத் துன்பக் கடலுள் ஆழ்த்தி மாய்த்தல் நன்றாகுமோ சொன்மின்கள்! மேலே எடுத்துக் காட்டிய பழந்தமிழ்ச் செய்யுளை நுவன்ற ஆசிரியர்

**பிசிராந்தையார்** தம் மனைவி அழகு அறிவு அன்பு முதலான எல்லா நலன்களினுஞ் சிறந்தவராயிருந் தமை யினாலேயே தாம் என்றும் இளைஞராயிருக்கலான வியப் பினை விளக்கிய நுட்பம் நம்மனோர் எல்லாரும் பசுமரத் தாணிபோற் றம்முள்ளத்திற் பதித்துவைத்து ஒழுகற் பாலார்.

அஃதொக்கும், அழகில்லாத மனைவியையோ அழகில்லாத கணவனையோ தம்மவர் கட்டாயத்தாற் பெற்று இல்வாழ்க்கை நடத்தப் புகுந்தார்க்கு இனிது வாழும் நெறி வேறில்லையோ வெனிற், கூறுதும்: அழகிலாரொடு கூடியிருக்க நேர்ந்தால், அவர் அழகிலாதிருத்தலை அடிக்கடி சொல்லி அந்நினைவினை அவர் மனத்திற் பதித்து விடுதலாகாது. ஏனெனில், தாம் அழகிலாமையை நினைக்க நினைக்க அந்நினைவு முதிர்ந்து, பின்னும் அவரை அழகில் லாமற் செய்துவிடும். எத்துணை அழகில் முதிர்ந்தாருந் தமதுடம்பு அழகு குறைந்து அருவருப்புள்ளதாக மாறு கின்றதென அழுத்தமாகத் தொடர்பாக நினைந்து வருகு வராயின், அவர் அந்நினைவின் உறைப்புக்குத் தக்கபடி சில திங்களிலோ அல்லது சில ஆண்டுகளிலோ அருவருக்கத்தக்க உருவத்தை அடைகுவர். அழகுக் கொடியான **காரைக்கால் அம்மையாரும்**, அழகிய பாவையையொத்த **கண்ணகியாருந்** தம் நினைவுக்கேற்ற பேய்வடிவத்தைப் பெற்றுக், கண்டார்க் கெல்லாம் பெருந்தி கிலை விளைத்து வரவில்லையா? அது போலவே, அழகிலாத வருந் தம்மை அழகுடையராகவே நினைந்துவரும்படி நாம் செய்து வருகுவமாயின், அவருந் தமது நினைவின் உறைப்புக்குத் தக்கவாறு சில திங்களிலோ அன்றிச் சில ஆண்டுகளிலோ அழகுடையராக மாறுதல் கூடும். அழகு மிக்கவர் சிலர் அதனையிழந்து வேறுபட்ட உருவத்தினராகவும், அழகின்றி யிருந்த மற்றைச் சிலர் அது மாறி அழகிய வடிவத்னிராகவுந் தோன்றியதை எம் வாழ் நாளிற் பலகாலம் யாங் கண்டிருக் கின்றேம். அழகாயிருந்த வரிற் பலர் ஊனுண்டுங் கட்குடித்தும் பரத்தையரை மருவி நோய் கொண்டும் ஆயம் ஆடியும் பொய்ம் மொழிந்துங் கலாம் விளைத்தும் திரிந்த சில திங்களிலெல்லாம் பார்த்தற்கு மிக அருவருப்பான உருவமுடையராய் மாறிப் போயினர். அழகிலாதிருந்த சிலரோ, கடவுளிடத்தும் மக்கள் முதலான எல்லா உயிர்களிடத்தும் பேரன்புடையராய்த், தூய ஆவின்பால் காய்கனி கிழங்குகள்

வித்துக்கள் கீரைகள் முதலியவைகளையே உணவாகக் கொண்டு, மெய்பேசும் வாழ்க்கையினராய்க், கல்வியில் மேம்பட்டு, எல்லார்க்கும் நன்றே செய்பவராய் ஒழுகிவரவே, அவர் சில்லாண்டுகளி லெல்லாம் அழகொளி மிக்கவராய் நன்கினிது மாறியதையும் யாம் பார்த்திருக்கின்றேம்.

அழகென்பது யாது? தூய நினைவாலுந் தூய மொழி யாலும் தூய செயலாலுந் தூய உணவாலுந் தூய உறையுளாலும் உண்டாகும் ஒளியுந் திருந்திய அமைப்புமே யன்றோ? பொதுவான அழகுடையராயிருக்கும் அறிஞர் சிலருஞ் சில உயர்ந்த செயல்களைச் செய்து கிளர்ச்சி மிக்கிருக்கும் நேரங்களிற் காண்பவர் கண்ணையுங் கருத்தையுங் கவரும் பேரழகுடையராய்த் துலங்கியதை யாமுங் கண்டிருக்கின்றேம். பலர் சொல்லவுங் கேட்டிருக்கின்றேம். இன்னும், அழகானது உடம்பின் செழுமையினால் உண்டாகின்றது. உடம்பின் செழுமையோ உடம்பினுள் ஒடுஞ் செந்நீரின் செழுமையினால் உண்டாகின்றது; செந் நீரின் செழுமையோ தூய நினைவினால் உண்டாகின்றது. தூய நினைவுடையார்க்குச் செந்நீர் தூய தாயிருத்தலுந், தீய நினைவுடையார்க்கு அது நஞ்சாய்ப் போதலும் உண்மையாக நிகழ்ந்த பல நிகழ்ச்சி களாலும், **அமெரிக்க நாட்டு அறிஞர்கள்** ஆராய்ந்து கண்ட உண்மை களாலும் மேலியல்களில் விரித்து விளக்கிக் காட்டி யிருக்கின்றேம். ஆதலால் தம்முடன் உறையும் மனைவி மக்கள் சுற்றத்தார் முதலான அனைவருந் தூய நல்லெண்ணங் களிலேயே பழகிவருமாறு செய்தல் முதன்மையானது. தம்மைப் பற்றியாவது பிறரைப் பற்றி யாவது குறைவாக தீதாக எண்ணும் எண்ணத்தை அடியோடு ஒழித்துவிடல் வேண்டும். ஏனென்றால், தம்மைப்பற்றிக் குறைவாக எண்ணும் ஒருவருக்கு அறிவும் முயற்சியும் அவிந்து போகின்றன; அவை அவிந்து போகவே அவருடம்பும் உயிரும் நீடு இனிது வாழ்தலும் இயலாது. அங்ஙனமே பிறரைப்பற்றிக் குறைவாக நினைக்கும்போதும், அவரது நினைவு அக்குறைபாடுகளிற் சிக்குண்டு மேல் நிலைக்குச் செல்லமாட்டாது கீழ்க்கிடந்து, அங்ஙனம் நினைப்பாரையே அழித்து விடுகின்றது. இம்மக்கட் பிறவியிற் குற்றமே யுடையாரையும் அல்லது குணமே

யுடையாரையுங் காண்டல் ஒருசிறிதும் ஏலாது. **எத்துணைக் குற்றம் உடையார் பாலுங் குணங்கள் சிலவுங் கட்டாயம் காணப்படும்; அங்ஙனமே எத்துணைக் குணம் உடையார்பாலுங் குற்றங்கள் சிலவுங் காணப்படும்.** ஆகவே, தமது நன்மையின் பொருட்டாக வாவது பிறருடைய குற்றங்களை நினையாது ஒழிக.

இனிப் பிறரோடு உரையாடுங்காலும் பிறர் குற்றத்தைச் சிறிதும் பேசாது, அவருடைய குணங்களையே எடுத்துப் பேசுக; அவ்வாறு அவர்தங் குணங்களைப்பேச விருப்ப மில்லை யாயின் வாளா இருந்துவிடுக. தம்மவர் செய்யும் பிழைகளைக் கண்டு அவரைத் திருத்துங்காற் சினந்து பேசுதல் எவர்க்கும் இயல்பேயாயினும், இயன்றவரையிற் சினத்தை அடக்கி அவரை இனிய சொற்களாற் றிருத்தவே முயல்க. திருந்தாமல் அவர் அடுத்தடுத்து அப்பிழைகளையே செய்வராயின், அவரது தொடர்பை நீக்கி விடுதலே நன்று. நீக்கலாகாத தொடர் புடையராயின், அவர் **தாஞ்செய் பிழை யால் தாமே துன்புற்றுத் திருந்துமாறு விட்டுவிடுக. அவர் செய்பிழையால் நீவிருந் துன்புறுவதாயிருந்தால் அவரு தவியை வேண்டாது, நுமக்கு ஆனவற்றை நீவிரே செய்து கொள்வதன்றி அதற்கு வேறு மருந்தில்லையென்பதுணர்ந்து நுமது நினைவைக் கல்வியிலும் வேறு நல்லெண்ணங்களிலும் உய்த்து அமைதியாய் மகிழ்வாய் இருக்கப் பழகிக் கொள்க.** இன்னும், மெய்யல்லாத நிகழ்ச்சி களை மெய்போற் பேசிப் பிறரை ஏமாற்றுந் தீயமுறையை அறவே கைவிடுக. பிறரை ஏமாற்ற முந்துவோர் தமது எண்ணம் நிறைவேறுமுன் தாமே ஏமாறிப்போதலைப் பலகாலும் பலர்பாற் கண்டிருக் கின்றேம்.

இனித், தாமுந் தம்மைச் சார்ந்தாருந் தூய செயல் களுடையராய் நடப்பதிற் பெரிதும் கருத்து வைத்தல் வேண்டும். தூய செயல்கள் என்பன தம் உடம்பைப்பற்றி நிகழ்வனவுந், தாம் புழங்கும் பண்டங்களைப்பற்றி நிகழ் வனவுந், தம்மொடு தொடர்புடையாரையுந் தம்மொடு தொடர்பில்லாதாரையும் பற்றி நிகழ்வனவும் என முத்திறப் படும். அவற்றுள் முதற் சொல்லிய செயல்கள் முதலாய்க் கருதற்பாலன. **தமதுடைம்பை யுந் தம்முடம்பின் உறுப்பு களையும் அழுக்கும் நாற்றமும்**

**இல்லாமல் துப்புரவாய் வைத்துக் கொள்ளுதலுந், தாம் உடுக்கும் உடைகளையும் அங்ஙனமே தூயவாக வைத்துக் கொள்ளுதலும் முதற் படியான தூய செயல்கள் ஆகும்.**

*பெண்பாலாரைத் தவிர ஆண்பாலார் தலைமேற் கூந்தலை நீள வளரவிடுதல் ஆகாது; அதனை மழுங்கச் சிரைத்துத் தலையை மொட்டையாக வைத்தலும் ஆகாது. நீளவர்த்த கூந்தலுடையார் நீராடியபின் அதனை யுலர்த்து தற்கு நீண்ட நேரங் கழிக்கவேண்டி யிருத்தலாலும் அங்ஙனம் அதனை யுலர்த்தாதுவிட்டுத் தமக்குரிய தொழின்மேற் புகுந்தால் அவர் நீர்க்கோவையும் அதனால் மண்டையிடி காய்ச்சல் இருமல் முதலான நோய்களுங் கொண்டு பெரிதுந் துன்புறக் காண்டலாலும் அவர் கூந்தலை நீளவிடாமல், ஒன்றுஇரண்டு அல்லது மூன்று விரற்கடை நீளம் வைத்து அதனைக் கத்தரித்து விடுதலே நன்று. தலையில் மயிரே இல்லாமல் அதனை மழுங்கச் சிரைத்து விடுதலோ பெரிதுங் கடியற் பாலது. எண்சாண் உடம்புக்குந் தலையே சிறந்தது. அத்தலையினுள்ளும் மண்டை யோட்டின் அடியில் அமைந்திருக் கும் மூளையே அதனினுஞ் சிறந்தது. அம் மூளையோ மிகமெல்லிய தன்மை வாய்ந்தது. அத்துணை மென்மையான மூளையில் ஒரு சிறு பிசகு நேர்ந்தாலும் ஒருவனது உயிர் வாழ்க்கையானது சின்னா பின்னமாகச் சிதைந்துவிடும். ஆதலினாற்றான், அம்மூளையைக் காப்பதற்கு அழுத்தமான மண்டையோடு அதன்மேற் கவிக்கப் பட்டிருத்தலுடன், அம் மண்டையோட்டைக் காப்பதற்கு அடர்ந்த மயிர்த் தொகுதியும் அதன்மேல் ஆண்டவனால் அமைக்கப்பட்டிருக் கின்றது. இறைவன் வகுத்த இவ்வருள் நோக்கத்தை அறி யாமல், மக்கள் வகுப்பினர் தத்தஞ் சிற்றறிவுக்கு எட்டியபடி யெல்லாம் மண்டையை முழுதுஞ் சிரைப்பதும், முக்கால் வாசி சிரைத்து நடுவில் தோங்காய்க் குடுமி வைப்பதும், அரைவாசி சிரைப்பதுங், கால்வாசி சிரைப்பதுமாகத் தலையை அருவருக்கத்தக்க பலவடிவுகளாக்கி, அங்ஙனம் ஆக்கியே அவ் அருவருப்புகளையே தமக்குப் பெருமையாக நினைந்து, அங்ஙனமெல்லாம் அருவருப்புச் செய்யாது ஆண்டவன் அமைத்த அமைப்புக்கு ஒத்துத், தலைமுழுதும் மயிர் வைத்திருப்பாரை ஏளனஞ் செய்து வருதல் நகையாடற் பாலதாயிருக்கின்றது.*

இன்னும், ஆண்பாலார் தமது முகத்திற் கன்னங்களின் ஓரமாகவும், உதட்டின் மேலும், உதட்டின் கீழ் மோவாயிலுமாக மீசை தாடி முதலியன வளர்க்கின்றனர். அழகும், அமைதியும் வேண்டுவார்க்குச், **சிங்கத்தை** (அரிமாவை)ப் போல் முகத்தில் இங்ஙனம் மயிர் வளர்த்து வைத்தல் ஆகாது. முகம் முழுதும் வழுவழுப்பாகக் காண்டற்கினிதாய் இருக்கவேண்டுமே யல்லால், அங்கும் இங்கும் மயிர்வளர்ந்து அருவருப்பாகத் தோன்றலாகாது.

பற்களில் அழுக்குங்கறையுஞ் சேராமல் துலக்கி, அவை இயற்கையொளியுடன் விளங்குமாறு வைத்துக் கொள்ளல் வேண்டும். வெற்றிலைபாக்கு புகையிலை மென்று பலர் பல்லின் ஒளியைக் கெடுத்துவிடுவதுடன், அருகிருப்பார்க்குப் பொறுக்க முடியாத தீய நாற்றத்தையுந் தமது வாயனின்று கிளப்பி விடுகின்றனர். இன்னும் பலர் புகைச் சுருட்டுப் பிடித்து உதடுகளைக் கரியாக்கிப் பற்களையுங் கெடுத்துக் கொள்கின்றனர். மற்றும் பலர் புகையிலைத் தூளை ஓவாது மூக்கினுள்ளே நுழைத்துத் தம் மூக்கினுள்ளிருந்து வடியும் அழுக்குச் சளியும் நீரும் பார்ப்பவர்க்கு மிக்க அருவருப்பையும், அருகு வருவார்க்கு முடைநாற்றத்தையுந் தருமாறு செய்கின்றனர். எத்துணை அன்புடையாரும் இவ்வருவருப்பான செயல் களுடையாரைக் கண்டாலும் நெருங்கினாலும் மனங் கசந்து போவர். ஆகையால், **அழகும் நாகரிகமும் பெறவேண்டு வோர் இத்தீய ஒழுகலாறுகளை அடியோடு உடனே ஒழித்துவிடல் இன்றியமையாததாகும்.**

இன்னும், ஆண்பெண்பாலார் எல்லாருந் தம்முடைய அக்குள் மறைவிடங்களில் அழுக்கும் மயிரும் நாற்றமுஞ் சேராமல் உடனுக்குடன் அவைகளைத் துப்புரவு செய்தலிற் கருத்தாயிருத்தல் வேண்டும். அங்ஙனமே சதைக்குமேல் வளரும் நகத்தில் நஞ்சு உளதென்றும், அந்நஞ்சு உணவுப் பண்டங்களிற் பட்டு உடம்பினும் செல்லுமாயின் உடம்பின் நலங்கெட்டுப் பலவகை நோய்கள் உண்டாகுமென்றும் ஆராய்ச்சிவல்ல அறிஞர்கள் மொழிகின்றனர். சதைக்குமேல் வளர்ந்த நகங்களின் சீவுகள் கலந்த நீரை அருந்திய ஒருவர் சிறிது நேரத்திலெல்லாம் உயிர் துறந்ததனை மருத்துவ ஆசிரியர் ஆராய்ந்து கண்டிருக்கின்றனர். ஆதலால், உணவு அமைக்குந் தொழிலுடைய

மாதர்கள் தம் விரல்களிற் சதைக்குமேல் வளரும் நகங்களை அடுத்தடுத்துக் களைந்து விடுவாராக! அங்ஙனமே மலநீர் கழிக்கும் வாய்களையும் அழுக்கடையாமல் மிகவுந் துப்புரவாக வைத்தல் வேண்டும். ஆண் பெண் பாலாரிற் பலர் சிறுநீர் கழித்த வாயைத் துப்புரவு செய்யாமலே விடுகின்றனர். சிறுநீரிற் கழியும் நஞ்சு பலவகைக் குறிநோய்களை வருவிப்பது. ஆதலால், உடம்பை விட்டுக் கழியுஞ் சிறுநீரில் ஒரு துளிதானுங் குறிகளிலாவது, கட்டியிருக்கும் ஆடையிலாவது படுதலாகாது. அதற்காகவே சிறுநீர் கழிக்கும் போதெல்லாம் தண்ணீர் உட்கொண்டு சென்று அது கழித்தபிற் குறிகளை கழுவி விடுக. சிறுநீர் கழித்தபிற் குறிகளைக் கழுவாதவர் ஆடைகளில் அதன் துளிபட்டு மூத்திர எறிப்பு உண்டாதலை அவரருகு செல்வார் உணர்ந்து தமது மூக்கைப் பிடித்துக்கொள்வர்.

இனித், தாமிருக்கும் இல்லம் பெரியதாயிருந்தாலுஞ் சிறியதாயிருந்தாலும் அதன் கூரைகள் சுவர்களிற் கரியும் ஒட்டடையுங் கறைகளும் அடையாமலுங், கீழ்த்தரையிற் குப்பைக் கூளங்கள் இல்லாமலும், அங்கணங்களிற் சேறுஞ் சகதியுஞ் சேராமலும் கூட்டி மெழுகித் துப்புரவாய்த் திருத்த மாய் அழகாய் வைத்தல் பல்வகை நலங்களைத் தரும். வீட்டிலே புழங்கும் பாண்டங்கள், தட்டு முட்டுகள், மேசைகள், நாற்காலிகள், விசிப்பலகைகள், பேழைகள், நிலைப் பேழைகள், திரைகள், தட்டிகள், புத்தகங்கள் முதலியனவும் பிறவு மெல்லாங்கரியும் அழுக்குந் தூசியுங்கறையும் படாமற் பார்ப்பவர் கண்ணைக் கவரத்தக்க வகையாய் அழகாக, அவையவை யிருக்குமிடங்களில் திருத்தமாக முறைப்படுத்தி வைத்தலும் இன்றியமையாதது.

இவ்வாறு தாமுந் தம்மைச் சேர்ந்தவர்களும் நினைவு சொற்செயல்களில் தூயராய்த் திருத்தமுடையராய் ஒழுகி வருகுவராயின், அவரது உள்ளந் தூய்மையிலும் அழகிலும் பழகி அவ்வண்ணமாய்த் திகழும் அஃது அங்ஙனந் திகழவே, அவ்வுள்ளத்தால் ஊடுருவப்பெற்று, அதனால் வடிவு திரிக்கப் படும் உடம்புந் தூயதாகி அழகுமிக்க விளங்கா நிற்கும். எனவே, அழகிலாத ஆண் பெண் பாலாரும் யாம் மேலே காட்டிய முறைகளின்படி நடந்து அழகுடையராகி இனிது வாழல் கூடுமென்றறிந்துகொள்க.

இனி, மேலெடுத்துக்காட்டிய பிசிராந்தையாரது செய்யுளில், **நரை, திரை, மூப்புப் பிணி**யின்றி என்றும் இளைஞராயிருத்தற்குக் காட்டப்பட்ட மற்றொரு காரணந்: தாம் **ஈன்ற மக்களும் அழகிலும் அறிவிலும் அன்பிலுஞ் சிறந்தாராய் இருக்கப் பெறுதலேயாம்.** மக்கள் சிறந்தாராதற்கு அவர்தம் அன்னையே முதற்பெருங்காரணமென்பது ஆராய்ச்சி வல்ல அறிஞர்க்கெல்லாம் ஒப்ப முடிந்தமை யானும், அவ் வியல்புகளெல்லாம் இந் நூலின்கண் மேலே நன்கெடுத்து விளக்கிக் காட்டப்பட்டமையானும், பலவகை யாற் சிறந்த ஒரு தாயின் வயிற்றிற்பிறக்கும் பிள்ளைகளும் நல்லராகவேயிருப்பர். தாம் நல்லராய்த் தம் தந்தை தாயார் சொல்லுக்கு அடங்கி அன்பு அறிவுகளில் மிக்காராய் நடக்கும் மக்களை யுடையார்க்குக் கவலையேது? துன்பம் ஏது? அத்தன்மை யரான நல்ல பிள்ளைகள் புறச்சேர்க்கை யால் ஒரோவொருகாற் பிழைபட நடப்பராயினும் அவரைத் திருத்தி நல்வழிப்படுத்தல் கூடும்.

மற்றுப், **பிறவியிலேயே தீய இயல்புகளில் ஊறிப் பிறந்து தாம் அடங்காமலுந் தம்பெற்றோர்க்கு அடங்காமலுந் தீயராய் நடக்கும் மக்களைத் திருத்துதற்கு வாயில் ஏதுமே யில்லை;** அவர்கள் உலக வாழ்க்கையில் தாமே உழன்று துன்புற்றுச் சிறிது திருந்தினால் திருந்தலாமேயன்றிப், பெற்றோர்களே அவர்களைத் திருத்துதல் இயலாதென்பது யாம் கண்கூடாய்ப் பலவிடங்களிலுங் கண்டு வருகின்றேம். இவ்வுண்மை,

"வைகலும் நீருட் கிடப்பினுங் கல்லிற்கு
மெல்லென்றல் சால அரிதாகும்---அஃதேபோல்
வைகலும் நல்லறங் கேட்பினுங் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னும் நெஞ்சு"

என்னும் அரிய பழந் தமிழ்ப் பாட்டானும் நன்கறியக் கிடக் கின்றது. அற்றேற், சொல்லுக்கு அடங்காத் தீயமக்களை யுடைய பெற்றோர் நீண்டநாள் இனிது வாழுமாறு யாதெனின், அவர்களை நீக்கி வேறு தனியிருந்து வாழ்த லேயா மென்க.

இனி, நீள இனிதிருந்து வாழ்தற்கு மற்றொரு காரணம்: தாம் ஏவிய பணி செய்யும் ஏவலர் தங்கருத்துக்கு இசைந்து

*நடக்கப் பெறுதலேயாம். ஒருவர் எத்துணைதான் செல்வத்திற் சிறந்தாராயிருப்பினும், அவர்க்கு ஏவலராயுள்ளார் அவர் கருத்தின்படி நடவாமல் அதற்கு மாறாக நடப்பவராயிருந்தால், அவர்க்குள்ள செல்வம் பயன் றராது. அன்றி அச் செல்வத்தை இழக்கநேரினும் நேரும். ஒவ்வொரு நாளுந் தமக்கு ஆகவேண்டு வன செவ்வனே விரைவில் ஆகப்பெறாமற், கவலையுந் துன்பமும் உழக்க வேண்டிவரும். ஒன்றுமில்லா வறியனே பிறருதவியின்றி இம் மண்ணுலகில் உயிர்வாழ்தல் இயலா தாயிற், கல்வியுஞ் செல்வமும் உடையார் பிறருதவியின்றி யுயிர்வாழ்தல் இயலுமோ? தமக்கு வேண்டு வனவெல்லாந் தாமே தேடிக்கொள்ளலா மென்றாற் சிறு முயற்சிகளில் அறிவுந் தொழிலும் ஈடுபடக், கல்வியைப் பயன் படுத்துதற்குரிய பெரு முயற்சியுஞ், செல்வத்தைப் பயன்படுத்திப் பெருக்குதற்குரிய அருமுயற்சியுஞ், தடைப்படும். ஆகவே, கல்வியுஞ் செல்வமும் வாய்ந்தார்க்கு* ***அன்பும் அறிவும் முயற்சியும்*** *உடைய ஏவலரின் உதவி இன்றியமை யாததாகும். நல்ல ஏவலரை யுடையார்க்கு எல்லாம் இனிது முடிந்து இன்பத்தைப் பயக்குமாதலால் அவர் நீடுவாழ்தல் திண்ணமேயாமென்க.*

*இன்னும், நீண்ட வாழ்க்கைக்குப் பிறிதொரு காரணம்: தாம் இருந்து வாழும் நாட்டில் அரசு செலுத்தும் அரசன் தீயவை செய்யானாய்த் தன்குடிமக்களின் நலத்தைத் தனது நலமாகக் கருதி, அவர்களைப் பாதுகாத்து ஒழுகுதலேயாம். வேந்தன் குடிகளின் நலத்தைக் கருதாமையேயன்றி அவர்க்குத் தீது புரிபவனாயுமிருந்தால், அவன்கீழ் ஊழியஞ் செய்வா ரெல்லாரும் அவனை யொப்பவே அவர்க்குப் பலவகை யாலுந் தீங்கிழைப்பர். அறமும் நடுவு நிலையும் பிழைக்கும்,* **கொலையே களவே காமமே கட்குடியே பொய்யே** *என்னுங் குற்றங்களே எங்குந் தலையெடுத்து ஆடும். செல்வத்தால் ஆள்வலியால் மிக்கார்க்கு அவையில்லாத ஏழையெளியவர் களுங் கற்றவர்களும் இரையாகுவர். இங்ஙனந் தாறுமாறான நிலையிலுள்ள ஓர் அரசனது நாட்டில் இருப்பார்க்கு எந்நரேமும் அச்சமும் வறுமையுந் துன்பமும் உளவா மாதலால், அவர் நீண்டநாள் உயிர் வாழ்தல் இயலாது. இது பற்றியே,*

"கொடுங்கோன் மன்னன் வாழும் நாட்டிற்
கடும்புலி வாழுங் காடு நன்றே"

என்று அரசன் ஒருவனே கொடிய அரசைக் கசந்து கூறினன். பழைய தமிழ்ச் சான்றோரும்,

"மாதவர் நோன்பும் மடவார் கற்புங்
காவலன் காவல் இன்றித் தங்கா"

என்றருளிச் செய்தனர். ஆகவே, திருவருள் வலத்தாற் கிடைத்த இவ் வாங்கில அரசையொத்த நல்லரசின்கீழ் வாழ் வார்க்கே நீளவாழ்தற்கு இன்றியமையாது வேண்டப்படும் எல்லா நலங்களும் எளிதில் வாய்க்குமெனவும், ஏனைக் கொடுங் கோலரசின்கீழ் உறைவார்க்கு அவை அங்ஙனம் வாயாவெனவும் நல்லிசைப் புலவராகிய பிசிராந்தையார் அறிவுறுத்திய மேலைச் செய்யுளால் இனிது அறிந்து கொள்க. அற்றேற், கொடுங் கோலரசன் கீழ் உறைவார் நீண்டுவாழ்தற்கு யாது செயற்பால தெனின்; அவனது நாட்டின் எல்லையில் உறைதலை விடுத்து, ஏனைச் செங்கோலரசன் கீழ்ச் சென்று இனிதுயிர் வாழ்தலே யாமென்க.

இனி, நீளவாழ்தற்கு **ஆசிரியர் பிசிராந்தையார்** முடிவாகக் காட்டிய காரணம்: பரந்த நூலறிவும் உலகிய லறிவும் ஒருங்கு நிறைந்து, தான் என்னுஞ் செருக்கு அடங்கி, எல்லாம் வல்ல முதல்வன் அருள் நிலையை யுணர்ந்த கொள்கை யினராகிய **சான்றோரது சார்பில் இருக்கப் பெறு தலேயாம்**. ஏனென்றால், உலகியலமைப்பின் அழகுகள் அருமைகளையும், உயர்ந்த மக்களின் சிறந்த அறிவுச் செயல் ஆண்மைச் செயல்களையும், உலகுயிர்களை அமைத்த இறைவன்றன் அருட்பெருஞ் செயல்களையுமே எந்நேரமும் நினைதலும் பேசுதலுஞ் செய்து, செயற்கரிய செயவல்ல சான்றோரைச் சார்ந்தொழுகுவார்க்கு, அச் சான்றோர்தம் நினைவு சொற்செயல்களோடு ஒப்பனவே தோன்றாநிற்கும். அதனால் அவர் நன்மையே பயக்கும் நினைவு சொற் செயல்கள் உடையராய்க், கவலையுந் துன்பமும் நோயும் இலராய் என்றும் இளைஞராய் இன்புற்று வாழாநிற்பர். இவ்வுண்மையை வற்புறுத்துதற்கே, **ஆசிரியர் திருவள்ளுவர்**,

"மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்கு
இனத்துள தாகும் அறிவு" (குறள் 454)

என்றும்

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு" (குறள் 452)

என்றும் ஓதியருளினார் என்பது.

இனி, நீடுவாழ விழைகுவார், சான்றோர் சார்பில் இருத்தலே யன்றியுஞ், சான்றோரல்லாதார் சேர்க்கையை விலக்கி யொழுகுதலும் இன்றியமையாது செயற்பாலார். அற்றேற் சான்றோரல்லாதார் யாவரெனின்; தீய நினைவு சொற் செயல்கள் உடையாரும், நல்லது செய்வார்போல ஒழுகுவாரும் எனச் சான்றோரல்லார் இருதிறப்படுவர் - இவருள் வெளிப்படையாய்த் தீயராய் உள்ளாரைத் தெளிதலும், அவரை அகன்று வாழ்க்கை செலுத்துதலும் எவர்க்கும் எளிதிலே கைகூடும். மற்று, நல்லது செய்வார் போல் நடந்து தீது புரிவாரைத் தெளிதலும்; அவரை அகன்று ஒழுகுதலுமோ எளிய ஆகா. இங்ஙனம் நல்லது செய்வார் போல் நடப்பாரிலுந் தீய எண்ணம் உடையாரும், அஃது இல்லாதாரும் உளர். தீய எண்ணம் உடையராயினும் அதனைக் கரந்து வைத்து நல்லது செய்வார்போல் நடப் பாரை உடனே தெளிதல் இயலாது. அவரைப் பலநாளும் பலகாலும் பலவாற்றானும் ஆராய்ந்து தெளிந்து, அவரது தீய எண்ணத்தைத் தெரிந்தபின், அவரது சேர்க்கையை விட் டொழித்தல் வேண்டும். மற்றுத், தீதுசெய்யும் எண்ணம் இலராயிருந்துந், தமக்குள்ள அறியாமையாலோ, தாம் அறிந்தனவுந் தாஞ் செய்வனவுமெல்லாம் பிறர்க்கு நன்மையே தரும் என்னும் நம்பிக்கை யுடைமையாலோ பிறர்க்கு நல்லது புரிவார்போற் றீங்கு இழைப்பாரைத் தேர்ந்து தெளிதலும், அவரை அகன்று வாழ்தலும் எளிதிலே இயலா. ஆதலால், அத்தகையவர் சிலரைப்பற்றி ஈண்டுச் சிறிது பேசுவாம்:

முதலில் மருத்துவரைப் பற்றி விழிப்பாயிருத்தல் வேண்டும். உடம்புக்குவரும் நோய்களைப் பற்றியும், அந் நோய்களைத் தீர்க்கும் மருந்துகளைப் பற்றியும், மருத்து வரல்லாத பிறர் எவ்வளவு செவ்வனே தெரிந்திருந்தாலும், அவர் சொல்வன

வற்றில் மக்களுக்கு அழுத்தமான நம்பிக்கை உண்டாகாது. ஆனால், மருத்துவர் என்னும் பெயர் மட்டும் வாய்ந்தவர் ஏது சொன்னாராயினும், அதன்கண் மக்கட்கு அழுத்தமான நம்பிக்கையுண்டாவது இயற்கையாய் இருக் கின்றது. ஒருவர்க்குள்ள நோய் சிறிதாயிருப்பினும், அதன் கொடுமையை மருத்துவர் எடுத்துரைக்கக் கேட்டால் அதனைக் கேட்ட நோயாளிக்கு அந்நோய் மிகுதியாய்ப் பெருகி விடுகின்றது; அன்றி, உள்ளநோய் பெரிதாயிருப் பினும் அதனை மருத்துவர் குறைத்துக் கூறுவராயின், அது கேட்ட நோயாளி அந் நோயின் கடுமை தணியப் பெறுகின்றான். மருத்துவர் சிலர் தம்பால் வந்தவுடனேயே நோயாளிகள் தமக்குள்ள நோயின் கொடுமை தணியப் பெறுதல், அம் மருத்துவர் அந் நோயை ஒரு பொருட் படுத்தாது பேசுதலினாலேயாம். வேறு மருத்துவர் சிலர் வந்தால் நோய் மிகப்பெறுதலும், அவர் அதன் கொடுமையை மிகுத்துப் பேசுதலினாலேயாம். எனவே, நோயாளிகளுக்கு நோய் மிகுதலுங் குறைதலு மெல்லாம் அவர்க்குள்ள நம்பிக்கைக்குத் தக்கபடியே நிகழ்கின்றன. இதன் உண்மையை நன்குணர்ந்த மருத்துவர் ஒருவர் நல்லெண்ணம் உடையராயிருந்தால், நோயாளிக்கு நோய் எளிதிலே நீங்குதற்குரிய நம்பிக்கையினையே வருவிப்பர். அவ்வாறின்றி நோயாளியின் நோயை மிகுதிப்படுத்தி அவ்வாற்றால் அவரிட முள்ள பொருளையெல்லாம் கவர்ந்து கொள்ளுந் தீய எண்ணம் உடைய மருத்துவரோ, நோயாளிகளின் நோயை மிகுதிப் படுத்துதலிலும் அவர்க்கில்லாத நோய்களையும் அவர்க்கு வருவிப்பதிலுங் கருத்தாயிருப்பர். தம்முடைய உழைப்புக்கும் மருந்துச் செலவுக்கும் ஈடுகட்டத்தக்க அளவு மட்டும் நோயாளி களிடம் பொருள்பெறுவது மருத்துவர்க்கு பொருட்பேற்றிற் பேரவா இன்றித் தமது வாய்மை யேயாம். இன்றியமையாச் செலவுக்குமட்டும் பொருள் பெற்று வந்த வல்ல தமிழ் மருத்துவர்கள் நாற்பது ஆண்டு கட்கு முன்னெல்லாம் ஆங்காங்கிருந்தனர். ஆனால், இப்போதோ ஆங்கில மருத்துவங் கற்றுப் பட்டம்பெற்று மருத்துவத் தொழில் புரிவார் தொகை எங்கும் பெருகி வருதலால், வல்ல தமிழ் மருத்துவர் தொகையும் மிகச் சுருங்கிவிட்டது. **ஆங்கில மருத்துவஞ் செய்துகொள்வ தால் எத்தனையோபேர் வறியராய்ப் போகின்றார்கள்;**

**எத்தனை யோ பேர் உயிரிழத்தலையுங் கண் கூடாகக் கண்டு வருகின்றேம்.** ஆங்கில மருத்துவரைப் பார்த்துத், தமிழ் மருத்துவம் நன்கு பயிலாதவர்களும் நோயாளிகள் பாற் பொருள் பறிக்கும் பேரவாக்கொண்டு திரிகின்றார்கள். எங்கே பார்த்தாலும் மருத்துவர் தொகையும் மருந்துகளின் விளம் பரங்களும் பல்கிவருகின்றன. இவற்றொடு கூடவே, தீராக் கொடுநோய் கொண்டார் தொகையும் பல்கிவருகின்றது; அந்நோயால் இளமைக் காலத்தே இறப்பார் தொகையும் பல்கிவருகின்றது. நோய்களும், நோய்களால் இறப்பாரும் மிகுந்து வருதலை உணர்ந்து பார்க்குங்கால், உண்மையான மருத்துவம் நடைபெறவில்லை யென்பதூஉம், உண்மையான வல்லமருத்துவர் இல்லையென்பதூஉம் நன்கு புலனாகின்றன வல்லவோ? ஆகவே, நீடுவாழ விரும்புவார் ஒவ்வொருவரும் பெரும்பாலும் இஞ்ஞான்றை மருத்துவர் உதவியை எதிர் பாராது **"தனக்கு மருத்துவன் தானே"** என்னும் ஆன்றோர் உரையை உளத்திற் பதித்து நடப்பாராக! இன்னும் **மருத்துவர் எவராயிருப்பினும் அவருடன் நெருங்கிய நேயம் வைத்துக் கொள்ளலும் ஆகாது**. ஏனென்றால், அவர் எந்நேரமும் நோய்களைப் பற்றியும், மருந்துகளைப் பற்றியும், நோய்தீர்க்குந் தமது திறமையைப் பற்றியுமே பேசாநிற்பர். அவருடைய பேச்சுக்களைக் கேட்கக்கேட்க, அங்ஙனங் கேட்பவர்களுக்கு முன் இல்லாத நோய்களைப் பற்றிய நினைவு முதிராநிற்கும்; அது முதிரவே அந்நோய்களும் அவர்பால் உண்டாகா நிற்கும்; அல்லது அந்நோய்கள் உண்டாகாவிடினும், அவற்றின் அடையாளங்கள் தம்மிடத்தே காணப்படுவனவாக அவர் பொய்ந் நம்பிக்கை கொள்ளா நிற்பர்! அந் நம்பிக்கையால் அம் மருத்துவர்பால் எந்நேரமும் மருந்து வாங்கியுண்டபடியாயும் இருப்பர். நோய்க்குத்தான் மருந்தேயல்லாமல் நோய் இல்லாக்கால் மருந்து எற்றுக்கு? நோயில்லா உடம்புக்கு மருந்து ஏற்றுவதால், இரத்தம் நஞ்சாகிப் பல கொடிய நோய்களை வருவிக்கும்; அதனால் நீள உயிர்வாழ்தலும் இல்லையாம். ஆதலால், நோய் நினைவையும் மருந்து நினைவையும் எந்நேரமும் உள்ளத்தில் தோற்றுவிக்குந் தொழிலினரான மருத்துவரது கூட்டுறவை நீக்கிவிடுதலே செயற்பாலது. நோய் கொண்டவர்கள் இயற்கைமுறைகளைச் செய்து நோய் நீக்கிக் கொள்ளுதலில் அறிவும் முயற்சியும்

இல்லாதவர்களாய், மருத்துவர் தரும் மருந்தினாலேதான் தமக்கு நோய் நீங்கும் என்னும் அழுத்தமான நம்பிக்கை யுடையவர்களாய் இருப்பார் களா னால், அவர் பொருட்டாக மட்டும் வல்ல மருத்துவர்களை வருவித்து அவர்க்கு மருந்து கொடுப்பித்து அவ்வளவொடு மருத்துவரையும் மருந்தையும் பற்றிய நினைவை ஒழித்து விடுதல் வேண்டும். நோயாளிகளின் பக்கத்திருப்போர் அவர்க்கு நோய் தீரும் முறைகளைச் செய்யுங்காலுஞ் செய்த பின்னும் அவர்க்குள்ள நோய்களைப் பற்றி நீளப்பேசாமல், **வீமன் அருச்சுனன்** போன்ற வலியோர் செய்த பேராண்மை களையும், **பெரியபுராணம்** போன்ற நூல்களில் நுவலப்பட்ட அடியார்கள் செய்த செயற்கருஞ் செயல்களையும், இனிய கதைகளையுமே பேசுதல் வேண்டும்.

இன்னும், இக்காலத்திற் புதினத்தாள்களில் ஆயிரக் கணக்காய் வெளியாகும் மருந்து விளம்பரங்களைப் பார்த்து, அவற்றைக் கருத்தூன்றிப் படித்தலும் ஆகாது. ஏனென்றால், மருந்து விளம்பரங்களெல்லாம் முதலிற் பல்வகை நோய் களையும், அவற்றின் அடையாளங்களையும், மருந்து களையும் மெய்யாக வோ புனைந்து கட்டியோ பேசுகின்றன. நோய்களின் அடை யாளங்களாக இவ்விளம்பரங்களில் விரித்துச் சொல்லப்படு வனவற்றில் பல, நோய் இல்லாதவர்களிடத்துங் காணப்படு வனவாய் இருக்கின்றன. செரியாக் குணம், மலச்சிக்கல், மூலக்கடுப்பு, கைகால் உளைச்சல், மயக்கம், மண்டைவலி, நெஞ்செரிவு, வாய்குமட்டல், சளி, நீர்வடிதல் முதலான சில சிறு நோய்க்ள மக்கள் எல்லார்க்குஞ் சிற்சிலகால் உண்டாகின்றன. இவை வருதலும் போதலும் அத்துணை விரைவாக நிகழ்தலால், இவை தம்மை மக்கள் நோய்களாகவே கருதுவதில்லை. அங்ஙன மிருக்க மருந்து விளம்பரங்களோ, இச் சிறுபிணிகளையும் இவைபோல்வன பிறவற்றையும் பல கொடு நோய்களின் அடையாளங் களாக மிகுத்துப்பேசி, நோய் இல்லாதவர்களும் அவற்றைப் படித்தால் தம்மிடத்தும் அவை காணப்படுதல் கொண்டு தமக்கும் அக்கொடு நோய்கள் உண்டுபோலுமென அஞ்சி, அவ்விளம்பரங்களிற் சொல்லப்பட்ட மருந்துகளை நாடு மாறு செய்துவிடுகின்றன. எல்லார் உடம்புகளிலும் இயல் பாக நிகழும் வெப்பதட்ப மாறுதல்களாலும், உணவின் வேறு பாடு பருகுநீரின் வேறுபாடுகளாலும், இடவேற்றுமை கால வேற்றுமைகளாலும், பழக்க வழக்கத் திரிபுகளாலுந், தொழின்

*மாறுபாடுகளாலும் இடையிடையே தோன்றி எளிதிலே மறைந்துபோகும் இச்சிறுபிணிகளை யெல்லாம் பெரும் பிணிகளின் அடையாளங்களாகப் புனைந்துகட்டிப் பேசும் மருந்து விளம்பரங்கள், தம்மைப் படிப்பார்க்கு நடுக்கத்தை உண்டாக்கி, அவ்வாற்றால் அவரது இரத்தத்தை நஞ்சாக்கி, அதன் வாயிலாக அவர்க்கு முன் இல்லாத கொடு நோய்களைப் பின் உண்மையாகவே வருவித்து விடுதலால், மருந்து விளம்பரங் கள் அவை விளைவிக்குங் கொடுநோய் களினுங் கொடியவாக அஞ்சப்படும். ஆதலாற், புதினத் தாள்கள் வாங்குவோர் அவற்றில் வெளியிடப் படும் மருந்து விளம்பரங்களைப் பாராது விடுதலே நன்றாகும். உண்மை யாகவே பெரும்பிணி கொண்ட வர்கள்அப்பிணி நீங்கும் மருந்து அறிதல்வேண்டி அவ் விளம்பரங்களைப் பார்த்தல் தீதுபயவாதாயினும், அவர்களும் அவ் விளம்பரங்களிற் காணும் மருந்துகளையெல்லாம் வாங்க விழைகுவராக லானும், நல்ல மருந்துகள் சிலவற்றொடு போலி மருந்துகள் பலவே அவ்விளம்பரங்களிற் குறிக்கப்படுதலின் அப்போலி மருந்துகளையெல்லாம் வாங்கியுண்பார். முன் இல்லாத பல நோய்களையும் அடைந்து தம்முடைய பொருளையும் உயிரையும் இழப்பராகலானும் நோயாளிகளுங் கூட மருந்து விளம்பரங்களைப் பாராது விடுதலே நன்றாகும். அற்றேல், நோயாளிகள் தமக்குங்ளள நோய் தீர்க்கும் மருந்துகளைத் தெரிந்துகொள்வது யாங்ஙனமெனின்; முன்னே நோயாளி களாயிருந்து தக்க மருந்துண்டு நோய்தீரப் பெற்றவர்கள் பலரை உசாவி, இன்ன நோய்க்கு இன்ன மருந்துதான் சிறந்ததெனத் தெளிந்துகொள்ளல்வேண்டும். இங்ஙனம் பலராற் பயன் படுத்தப்பட்டுக் கைகண்ட மருந்தாகத் தெளியப்பட்டவைகளை யல்லாமல், வாளா விளம்பரங்களிற் கண்ட கண்டவைகளை யெல்லாம் வாங்கி உட்கொள்ளற்க.*

*மேலும், இம் மருந்தில் என்னென்ன சரக்குகள் சேர்ந்திருக்கின்றன? அச் சரக்குகள் ஒவ்வொன்றன் குணமும் எவ்வெவை? அவை கூட்டவேண்டும் முறைப்படி கூட்டிப் பதப்படுத்த வேண்டும் அளவுப்படி பதப்படுத்தி நுண்ணறி வும் ஆராய்சிசியும் பழக்கமும்மிக்க மருத்துவராற் செய்து முடிக்கப்படடுள்ளனவா? இல்லையா? இம்மருந்துகளை*

உட்கொண்டு எவ்வெவர் நோய் தீர்ந்தார்? என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்தா நோயாளிகள் மருந்துகளை வாங்கி உட்கொள்கின்றனர்? சிறிதும் இல்லையே, இங்ஙனமாகத் தாம் உட்கொள்ளும் மருந்துகளைப் பற்றிய வரலாறு சிறிதுமே அறியாமல் வெறுங் குருட்டுத்தனமாய் அவைகளை விலை கொடுத்து வாங்கி உட்கொள்ளுதலை விட நாம் நாடோறும் அயிலும் உணவுப் பண்டங்களில் இன்ன நோய்க்கு இது நல்லது, இன்ன நோய்க்கு இஃது ஆகாது என்று ஆராய்ந்தறிதலும், ஆகாதவற்றை நீக்கி ஆவனவற்றை அருந்தி, நோய் நீக்கிக் கொள்ளுதலும் எளிய வல்லவோ? கண்ணுக்கும் அறிவுக்கும் நேரே தெரிந்த உணவுப் பண்டங்களை அவ்வந் நோயின் இயல் பறிந்து சுவை பெறச் சமைத்து அருந்தி நோய் நீக்கிக் கொள்ளும் இவ்வெளியமுறையை விடுத்துக், கண்ணுக்கும் அறிவுக்குந் தெரியாத மருந்துகளை விலைகொடுத்து வாங்கி யுண்டு நோயாளிகள் மேன்மேற் றுன்புற்று உயிரிழத்தல் ஐயகோ! கொடிது! கொடிது! நோய் நீக்குவதிற் சிறந்த மருந்தென்று நன்கு தெரிந்தாலல்லாமல், அதனை வாங்கியுட் கொளலாகாது. பட்டினி கிடந்தும், ஏற்ற பழவகைகளை யருந்தியும், மலநீர்க் குடர்களைத் துப்புரவு செய்தும், உணவுப் பண்டங்களில் ஆவன அருந்தி ஆகாதன விலக்கியும் நோய் நீக்கிக் கொள்ளுதலே நீண்டு வாழ்தற்கு நெறியாகு மன்றி, எந் நேரமும் மருத்துவரை வருவித்தலும், அவர்தரும் மருந்துகளை விழுங்குவதும், மருந்து விளம்பரங்களை ஓவாது பார்ப்பதும், அவற்றிற் காட்டப்பட்ட மருந்துகளை வாங்கி அயில்வதும் நீண்ட வாழ்க்கைக்கு நெறியாகா வென்று கடைப்பிடிக்க.

இனிக், **கோள் நூல்** (சோதிட நூல்) சொல்வாரையுங், **கோள்நிலை** (சோதிடம்) பார்த்தலையும் அறவே விலக்கி விடல் வேண்டும். **மக்களெல்லாருந் தமக்கென** ஓரறிவுந் தமக்கென ஒரு செயலும் உடையராகையால், அவர் ஒவ்வோர் இமைப் பொழுதும் **மாறுந்தன்மை யுடையவர்**. தமக்கென ஓரறிவுஞ் செயலுமில்லாப் **பருப்பொருள்களோ** பெரும்பாலும் **மாறா இயல்புடையன** ஆகையால், மக்களின் வருங்கால நிகழ்ச்சி களைப் பிழைபடாமல் அளந்து சொல்லுதல் எவர்க்கும் இயலாது என்றும், மற்று அறிவில்லா **ஞாயிறு திங்கள்** முதலான பருப்பொருள் இயக்கங்களின்

வருங்கால நிக்ழச்சிகள் மட்டுமே அளந்து சொல்வதற்கு இயல்வனவாம் என்றும் பகுத்துணர்ந்து கொள்ளல் வேண்டும். மக்களின் வருங்கால நிலையினைப் பிழைபடாவாறு வைத்துச் செவ்வனே கூறுதல் எவர்க்கும் இயலாமை பெறப்படவே, அவரது வருங்கால நிகழ்ச்சிகளைப் பிழையாது கூறுவேம் என்னுங் கோள்நூலார் உரை பொய்யேயாகுமல்லால் மெய்யாக மாட்டாது. இதனை எம்முடைய வாழ்நாளில் நெடுக ஆராய்ந்து பார்த்துத் தெளிந்திருக்கின்றேம். அற்றேற், கோள் நூலாறிற் சிலருந் தெளிவுக்காட்சி யுடையாரிற் சிலருஞ் சிலர்தம் வருங்கால நிகழ்ச்சிகளைப் பிழைபடாது சொல்லுதலும் ஆங்காங்கு நிகழக் காண்டுமாலெனின், முன் நாட்களிற் செய்ததனையே பின் நாட்களிலுஞ் செய்து அங்ஙனஞ் செய்து பழகிய செய்கை யினைப் பின்னர் விடாது செய்தொழுகுவாரது ஒழுகலாற் றினை நாம் முன்னறிந்து சொல்லுதல் போலவே, பழவினைப் பிணிப்பால் தமதறிவு முயற்சியின்றி அறிவில்லாப் பருப் பொருள் போல் இயங்குவாரது இயக்கத்தையே கோள் நூலாருந் தெளிவுகாட்சி யுடையாரும் முன்னறிந் துரைக் கின்றனர். நாடோறும் பிறர்க்கு ஈதலையும் அறஞ் செய்தலையுங் கடனாக்கொண்டு ஒழுகிப் பழக்கப்பட்ட ஒருவனைக் கண்டால், அவன் பின்நாட்களிலும் இங்ஙனமே நடப்பானென்று நாமும் முன்னறிந் துரைக்கின்றனம் அல்லமோ? நாடோறுங் கட் குடித்துப் பழக்கப்பட்ட ஒருவனைக் காணும் நாம், பின் நாட்களிலும் அவன் அங்ஙனமே கட்குடித்து ஒழுகு வான் என்று முன்னறிந்துரைக்கின்றனம் அல்லமோ? நாடோறுங் கல்வி கற்றலிலுங் கற்றறிந்தவற்றை ஆராய்ந்து நூல் எழுது தலினும் பழக்கம் மிகுந்த ஒருவன் வழிநாட்களிலும் அங்ஙனமே நடப்பனென்று முன்னறிந்துரைக் கின்றனம் அல்லமோ? நாடோறும் பிறரை ஏசுதலிலும் அவரைச் சண்டைக்கு இழுத்தலிலுங் கொடியனாய் நடந்து சிறைக்குச் செல்வனென முன்னறிந் துரைக்கின்றனம் அல்லமோ? ஆகவே, முற்பிற் பிறவிகளில் ஏறிய பழக்கத்தால் மாறாமல் நடப்பாரது வருங்கால இயக்கமே மிகவல்ல கோள் நூலாரால் ஒருவாறு முன்னறிந்து நுவலப்படும் என்றும், மற்றுத் தமது அறிவு முயற்சியால் இடையிடையே மாறி

நடப்பாரது இயக்கமோ அங்ஙனம் அவராலுங் கூற இயலா தென்றும் பகுத்துணர்ந்து கொள்ளல் வேண்டும்.

இவ்வாற்றால், மக்கள் ஒழுகலாறு முற்பிற்பிறவிப் பழக்க வழித்தாய் மாறாமற்செல்வதூஉம், இடையிடையே யுண்டாம் முறுகிய அறிவு முயற்சியால் மாறிச் செல்வதூஉம் என இருவகையினதாதல் நன்கு பெறப்படும். பழக்கத்தின் வழி நிகழும் ஒழுகலாறு, அறிவில்லாப் பருப் பொருளியக்கத் தினையே பெரும்பாலும் ஒப்பதாகலின், அதனையுடைய மக்கள் இழிந்த பிறப்பினராவர். தமது அறிவு முயற்சியால் தம் ஒழுகலாற்றில் மாற்றிச் செல்லுதற்குரிய பகுதிகளை இடையிடையே மாற்றி முன்னேறிச் செல்லும் மக்களோ தாம்பெற்ற பகுத்தறிவினைப் பயன்படுத்திச் செயற்கரிய செய்து பெறற்கரிய நலங்கள் பெறும் நிலையினராகலின் அவர் உயர்ந்தோராவர். அங்ஙனம் உயர்ந்தோராய் ஒழுகுவாரது வருங்கால நிகழ்ச்சிகளை எத்துணைவல்ல கோள் நூலாருந் தெளிவுக்காட்சி யுடையாரும் முற்றும் எடுத்துக் கூறமாட்டு வாரல்லர்; கோள் நூலார் ஒரு சில எடுத்துக்கூறினும் அவைதாமும் எல்லாம் உண்மையாய் இரா. அறிவுமுயற்சி குறைந்த மாந்தரின் ஒழுகலாறுகளை அவை நன்கு விளங்கும் அளவு, வல்ல கோள் நூலார்க்கும் எடுத்து ரைக்கும் வகையிலுந் தெளிவுக்காட்சியுடையார்க்கு அவை விளங்குவதில்லை. தெளிவுக்காட்சி யுடையார்க்குஞ் செல் கால நிகழ்கால நிகழ்ச்சிகள் தெளிவாய் விளங்கும் அளவு, வருங்கால நிகழ்ச்சிகள் விளங்குதல் மிக அரிதாயிருக்கின்றது. இங்ஙனம் மிக வல்ல கோள் நூலார்க்குந் தெளிவுக்காட்சி யுடையார்க்கும் விளங்காத வருங்கால நிகழ்ச்சிகள், அவற்றில் வல்லரல்லாத ஏனையோர்க்கு விளங்குமோ? சிறிதும் விளங்காவன்றே. ஆதலாற், கோள் நூல்கொண்டு வருங்கால நிகழ்ச்சி கூற வருவாரிற் பெரும்பாலார் மெய்யரல்லா பொய்யராய், வெறும் புளுகுகள் சொல்லிப் பிறரை ஏமாற்றுந் தொழிலினராகவே காணப்படுகின்றார். அதனால், அத்தகையவர் சொற்களில் நம்பிக்கைவைத்து, உயர்ந்த மக்கட்பிறிவியில் வந்தார். தமது அறிவு முயற்சியை இழத்தல் நன்றாகாது. தமதறிவைப் பயன்படுத்தி முயற்சியைத் தக்கவாறு செய்து அரியபெரிய நலங்களைப் பெறுதலே அவர்க்கு வாய்வதாகும்.

மேலுங், கோள்நூலார் கூறுவன மெய்யாயிருப்பினும் பொய்யாயிருப்பினும் அவற்றைக் கேட்பவர்க்கு அவற்றின் கண் அழுத்தமான நம்பிக்கை உண்டாவதும், அந் நம்பிக்கை யால் அவர்க்கு அறிவுமுயற்சி குன்றுவதும் இயற்கையாய் விடுகின்றன. **"ஆறு திங்களில் உனக்குச் செல்வம் வரப் போகிறது"** என்று கோள்நூலார் ஒருவர் சொல்லக்கேட்ட ஒரு வறிஞன், அதனால் மிகமகிழ்ந்து தான் தனது பிழைப்புக்கு நாடோறுஞ் செய்துவந்த சிறுமுயற்சியையுங் கை விட்டுப் பின்னும் வறிஞனாய்ப் போகின்றான். அங்ஙனமே **"ஆறு திங்களில் உனக்குப் பெரும்பொருள் அழியப் போகின்றது"** என்று மற்றொரு கோள்நூலார் சொல்லக் கேட்ட வேறொரு செல்வனும் அதுகேட்ட நாள் முதல் மனம் மடிந்து, தான் செய்து போந்த அறிவு முயற்சிகளையுங் கைந் நெகிழவிட்டு ஆறு திங்களுக்கு முன்னமேதான் வைத்திருந்த பெரும் பொருளை இழந்து விடுகின்றான். இன்னும், எத்தனைபேர் தாம் விரைந்து செய்து பயன் பெறுதற்குரிய நன்முயற்சிகளை **'இராகுகாலம்'** பார்த்துச் செய்யாமல் விட்டு மிடிப்படுகின்றார்கள். சாவு வாழ்வு பற்றிய எத்தகைய முயற்சிக்கும் நாட்பார்த்துக் கொண்டிராமல், தாம் எடுத்த முயற்சிகளை எத்தகைய இடுக்கண் வரினும் அஞ்சாமற் செய்து முடிப்பவரான வெள்ளைக்கார நன்மக்கள் உலகத்தில் மிகச்சிறந்த நிலையை யடைந்து இன்ப வாழ்க்கை செலுத்தி வர, எந்நேரமும் எந்த முயற்சிக்கும் நாட் பார்த்துக் கொண்டிருப்பவரான நம் இந்துமக்கள் எவ்வளவு தாழ்ந்த நிலையில் இருந்து துன்ப வாழ்க்கையிற் கிடந்துழல்கின் றார்கள்! இத்துணைத் தாழ்ந்த நிலைமைக்கும் இத்துணைத் துன்ப வாழ்க்கைக்குங் காரணங், காலத்தில் விரைந்து செய்ய வேண்டிய முயற்சிகளைச் செய்யாது நம்மனோர் நல்ல வேளை தீயவேளை பார்த்துக் கொண்டிருத்தலேயாகும். கோள்நூலில் மிக்க நம்பிக்கையுடைய ஒருவர் தமது முகத்திலுந் தலையிலும் உள்ள மயிரைச் சிரைத்துக் கொள்வ தற்குக் கோள்நூலிற் சொல்லிய குற்றங்கள் அணுகாத நாளும் வேளையும் பார்த்துக் கொண்டிருப்பர்; அதற்கேற்ற நாளும் பொழுதும் வாய்ப்பதற்குச் சிலகால் மூன்று திங்களுஞ், சிலகால் நான்கு திங்களுஞ், சிலகால் ஆறு திங்களுஞ் செல்லும்; அதுகாறும் அவர் சிரைத்துக் கொள்ளாமலே கரடிபோல் முகத்திலுந் தலையிலும் மயிர் வளரவிட்டிருப் பர்!

அவரை அந்நிலையிற் காணும் அவர்தம் நண்பர்கள் பலர் பகடிசெய்வர்; சிலர் அறிவுகூறுவர்; எவர் ஏளனஞ் செய்தாலும், எவர் ஏதுசொன்னாலும், அவர் அவற்றைக் கருதார்; தாம் பிடித்தபடியே ஏற்றநாளும் பொழுதுங் கண்டே மயிர் சிரைப்பர்! இதனால் இவரடைந்த நன்மை யாது? ஒன்றுமே யில்லை. மயிர்களைந்து முகத்தையுந் தலையையுந் துப்புரவு செய்யாமை யால், அடுத்தடுத்து நோய் கொண்டு, காலம் முதிரா முன்னரே அவர் இறந்தொழிந்தார்!

இன்னும், இது நல்லநாள் இது நல்லவேளை. இது தீயநாள் இது தீயவேளை என்னுங் கோள் நூற் போலி யறிவும், அதன் வழித்தான பொய்ந்நம்பிக்கையும் ஒருவர்க்கு ஏறி விட்டால், அவர் வேறு வகையில் எத்துணைச் சிறந்த ஆராய்ச்சியுடையவராயினுங், கோள் நூற் பொய்ம்மை நன்குணர்ந்தவராயினும் அவரைவிட்டு அப் பொய்ந் நம்பிக்கை நீங்குவதே யில்லை. மொழியாராய்ச்சியில் மிக வல்லுநரும், புராணகதையில் எள்ளளவும் நம்பிக்கையில்லாத வருங் கோள் நூலின் பொய்ம்மையுணர்ந்து அதனை வெறுப் பவருமான ஒரு பார்ப்பனப்பெரியாரைக், கற்றார் சிலருடன் யாம் பார்க்கச்சென்றேம்; யாம் சென்றநாள் ஞாயிற்றுக் கிழமை பொழுது பிற்பகல் நான்குமணி, யாங்கள் நேரே அவர்பாற் செல்லாமல், அவரது இல்லத்திற்கு அருகேயிருந்த மற்றொரு நண்பர் வீட்டிற் சிறிது தங்கிப் பார்ப்பதற்கு இஃது ஏற்ற நேரந்தானா? என்று கேட்டுவர ஒருவரை அவர்பால் விடுத்தேம். விடுவிக்கப்பட்டவர் திரும்பிவந்து **“இராகு காலத்திற்கு முன்னே பார்க்கிறதானாற் பார்க்கலாம், இராகுகாலந் தொடங்கி விட்டால் அது போனபிறகுதான் நம்மைப் பார்க்க வேண்டும்”** என்று சாத்திரியார் சொல்லுகிறார் என்றார். அதுகேட்டு யாமும் எம்முடன் போந்தாரும் பெரிதும் இறும்பூதுற்று, இராகுகாலந் துவங்குவதற்குக் கால்மணி நேரம் முன்னதாகவே சென்று அவரைக் கண்டேம். கண்டு “தாங்கள் இராகுகாலத்தில் நம்பிக்கை வைத்திருப்பது எங்களுக்கு இறும்பூதாயிருக் கின்றது!” என, அச்சாத்திரியார் “அந் நம்பிக்கை பயனற்றது என யான் நன்றாய்த் தெரிந்திருந்தும், அதனை விலக்கக்கூட வில்லை!” என்று மொழிந்து நகைத்தார். இங்ஙனமாகக்

கற்றுணர்ந்து தெளிந்த மேன்மக்கட்கே இப்போலிப் பொய் நம்பிக்கைகளை விடுதல் இயலாதாயிற், கல்வியும் ஆராய்ச்சியும் இல்லாக் கீழ்மக்கட்கு இப் பொய்ந் நம்பிக்கைகள் ஏறிவிட்டால், அவர்கள் அவற்றை விடுதல் இயலுமோ! ஆகையால், இப்பொய்க்-கோள்நூல் நம்பிக்கை களை மக்கள் உள்ளத்தில் ஏற்றிவிட்டுப், பின்னர் அவை களைக் களைந்துவிட முயன்று, அம்முயற்சியிற் பாழ் படுதலைவிட, அவைகளை மக்கள் உள்ளத்தில் நுழைவியாமல் விடுதலே நன்றாமென்றுணர்ந்து கொள்க.

இன்னும், கோள்நூல் நம்பிக்கையால் மக்கட்கு நேரும் பெருந்தீங்குகளும் பல. இதற்கு உண்மையாக நிகழ்ந்த நிகழ்ச்சி யொன்றனை இங்கெடுத்துக் காட்டுவாம். ஒருகால் ஒரு செல்வர் கோள்நூல் வல்லான் ஒருவனை யழைத்துத் தமது வாழ்நாள் எல்லை அறிந்து சொல்லும்படி கேட்டார். அப்போது அவர்க்குச் சிறிதேறக்குறைய ஐம்பதாண்டுகள் இருக்கலாம். அக்கோள் நூலானும் அவரது கோள்நிலையை நன்காராய்ந்து பார்த்து, அவர்க்கிருந்த ஆண்பிள்ளைகள் பலருள் ஒருவனைச் சுட்டிக் காட்டி **“அப் பையன் உயிரோடி ருந்தால் நீர் ஆறுதிங்களில் மடிந்து போவீர்! அவன் மடிந்து போனால் நீர் எழுபதாண்டு வரையில் உயிரோடிருப்பீர்!”** என்று சொல்லிப் போனான். இதனைக் கேட்ட அச்செல்வர் பெருந்திகில் கொண்டவராய், அக்கோள் நூலானாற் குறிப் பிடப்பட்ட தம் மகனைக் கொலைசெய்வதற்குத் துணிவு கொண்டார். தமக்குச் செல்வம் மிகுதியாய் இருந்தமையால் அவர் அச் செல்வத்தின் துணை கொண்டு வல்ல மருத்துவர் ஒருவர்பால் உடனே கொல்லாது மெல்ல இரண்டொரு திங்களிற் கொல்லும் ஒரு நச்சுமருந்து வாங்கி அதனை அப்பையனுக்கு உணவுப் பொருள்களில் மறைவாய் வைத்து உட்செலுத்திவிட்டார். அந் நஞ்சு உள்ஏறப் பெற்ற அப் பையனுஞ் சிலநாளில் ஏதோ ஒரு நோய்கொண்டான் போற் படுத்து, இரண்டு திங்களிலெல்லாம் இறந்துபட்டான். அவன் இறந்துபட்டபின், அவனுக்கு நஞ்சு ஊட்டிய அவன் தந்தையாகிய செல்வரும் இரண்டு திங்களில் இறந்துபட்டார்! பாருங்கள்! அச்சிறுவன் மடிந்தானாயின் அவன்றந்தை எழுப தாண்டுகாறும் உயிரோடு இருப்பான் என்ற கோள்நூலான்

சொல் எவ்வாறாயிற்று? படுபொய்யாய் முடிந்ததன்றோ? அது பொய்யானது மட்டுமா? அஃதோர் அருமைச் சிறுவனு யிரையும் மடித்ததன்றோ? இங்ஙனமே கோள் நூலார் சொற் களால் மக்கள் அடையுந் துன்பத்திற்கும் உயிர் கேட்டிற்கும் ஓர் அளவேயில்லை. ஆதலாற், கோள் நூலிலுங் கோள் நூலார் உரையிலும் வைக்கும் நம்பிக்கை யினை விட்டொழித்தலே பெரிதும் வேண்டற்பாலதாகும் என்க.

இனி, **நீள உயிர்வாழ்தலில் விருப்பம் உடையவர் முதுமையைப் பற்றியுஞ் சாவைப் பற்றியும் நிகழும் நினைவு களையும் எண்ணங்களையும் அறவே விட்டொழித்தல் வேண்டும்.** இன்றியமையாது தெரிவிக்க வேண்டி யிருந்தா லல்லாமல் ஒருவர் தமது வாழ்நாள் (வயது) இவ்வளவாயிற் றென்று தெரிவித்தலும் ஆகாது. அதனை நினைத்தலும் ஆகாது. அதனை யெண்ணி மனங்கலங்குதலும் ஆகாது. ஆனால், மக்கள் ஒருவரோடு ஒருவர் அளவளாவிப் பேச நேருங் காலங்களி லெல்லாம் ஒருவரது வாழ்நாட்கழிவை மற்றவர் உசாவித் தெரிந்து கொள்கின்றனர். தெரிந்து கொண்டவுடனே "உங்கட்கும் இவ்வளவு நாட்கழிந்தது. நமக்கும் இவ்வளவு நாட் கழிந்தது, இனிச் சிறிது காலந்தான் இருக்கப் போகின்றோம். கூற்றுவன் எந்த நேரத்தில் வந்து நமதுயிரைக் கொண்டு போவானோ அறிகிலம்," என்றெல் லாம் பேசி நெஞ்சம் நெகிழ்கின்றனர். இவ்வாறு உணர்ச்சி யோடு உரையாடு தலினாலேயே உயிரும் உடம்புஞ் சுறுசுறுப்பு இழந்து, அதனால் வளர்ச்சியும் வலிவுங் குன்றி, வாழ்நாள் முதிராமுன்னரே பெரும்பாலார் மாய்ந்து போகின்றனர். நூறாண்டுகளும் அதற்குமேலும் உயிர் வாழ்வார் பற்பலரை ஆங்காங்கு நேரே கண்டு வைத்தும், அவர்களிற் பலர் திண்ணிய யாக்கையும் விழுமிய அறிவும் உடையராய் நன்கு வாழ்தலைக் கண்கூடாய்த் தெரிந்து வைத்தும், **ஐம்பது** அல்லது **அறுபது** அல்லது எழுபது ஆண்டுகள் **ஆனவுடனே** தமக்கு **வாழ்நாள் எல்லை நெருங்கி விட்டதென நினைந்து நெஞ்சம் புண்ணாதல், எத்துணை அறியாமை!** இறைவன் நமக்குத் தந்த உடம்பைப் பாதுகாத்து, அதனால் அறிவையும் அன்பையும் வளர்த்து, இறைவனை நெஞ்சுருக நினைந்து, அடியார்க்கு இனியராய் ஒழுகுதலே நமக்குக் கடனா வதன்றிச், சாநாளும் வாழ்நாளும்

நினைந்து கவலைப்பட்டு விரைந்துமாளல் கடனாமோ? கூற்றுவன் வரும்போது வருக; அவனை எதிர்பார்ப்பதும் அவனுக்கு ஓலைவிட்டு அழைப்ப தும் ஏன்? மார்க்கண்டர் தமக்கு ஊழ்வினையால் நேர்ந்த சிறு வாழ்நாளையும் இறைவனருளாற் பெருவாழ்நாளாகச் செய்துகொள்ள வில்லையா? இவ் வரலாற்றினை எல்லாரும் நன்குணர்ந் திருந்தும், இறைவன்றன் அருட்டுணையில் நம்பிக்கையின்றிக், கூற்றுவன் றுணையை நாடுதல், அறிவு டைமையாமோ? ஆதலால் இறைவனது திருவருள்வலத்தாற் கிடைத்த இவ்வரிய மக்களுடம்பை நன்கு பேணி, அதன் வாழ்நாளை அவன் றுணையாற் பெருகச் செய்தலிலேயே அறிஞர்க்கு நினைவும் முயற்சியும் இருக்கவேண்டுமே யல்லாமல், அதற்கு மாறான முறையில் அவ்விரண்டையும் புகுத்தி வருந்துதல் ஆகாதென்க.

அற்றேல், யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை முதலியவைகளை நம்முடைய் 'திருக்குறள்' முதலான அற நூல்கள் வலியுறுத்திப் பேசுதல் என்னை யென்றால்; மக்கள் பெரும்பாலுந் தமது நலத்தின் பொருட்டுத் தீயவைகளைச் செய்பவர்களாயிருக்கின்றார்கள்; தாம் மட்டுமே என்றும் நிலையாக இருப்பதாக நினைந்து பிறர்க்குத் தீங்கிழைப்பதில் முனைந்து நிற்கின்றார்கள்; இவ்வாறு பிழையான உணர்ச்சி யுடன் தீயவைகளை செய்தலால், அத் தீயவைகள் அவரையே தாக்கி இளமைப் பருவத்திலேயே அவர்களை உயிர்மாளச் செய்கின்றன. யாங்ஙனமெனிற் காட்டுதும்; ஒருவன் தான் எப்போதுமே இவ்வுலகத்தில் உயிர் வாழப் போவதாக நினைந்து, தனது நீண்ட வாழ்க்கைக்கு வேண்டியவளவு தன்பாற் பொருள் இல்லாமையால், மிகுந்த செல்வமுடைய வேறொருவனது பொருளைக் கவர்ந்து கொள்ள எண்ணி முயல்கின்றான்; அங்ஙனம் முயல்பவன் பிறவியிலேயே கொடிய குணங்கள் நிறைந்தவனாயிருப்பின் அச்செல்வனுடைய பொருளைக் களவு செய்யவோ அல்லது அவனைக் கொன்று அதனைக் கைக்கொள்ளவோ முயல்கின்றான் அத்துணைக் கொடிய குணங்கள் இல்லாதவனாய்க், கரவும் அதற்கேற்ற தீய அறிவுந் தீய முயற்சியும் வாய்ந்தவனாயிருப்பின், அழிவழக்கு ஆடியும் பொய்ம்முறிகள் புனைந்துகட்டியும் அச் செல்வனது பொருளைக் கவர்ந்துகொள்ள முனைகின்றான். இவ்விரு வகைத்

தீநெறியில் எதன்பாற் புகுந்து முயலினும், அவனு டைய தீய நினைவும் முயற்சியும் அவனுக்கு இடையறா அச்சத்தினையுங் கவலையையுங் கொடுந்துன்பத்தையுந், தராநிற்கும்; இவற்றால் இவன் நோய்வாய்ப்பட்டு விரைவில் மாளுதல் திண்ணம்; அல்லது இவனால் துன்புறத்தப்படுஞ் செல்வன் இவன்மேற் செற்றங் கொண்டு இவனுயிரை மாய்த்தலுங் கூடும்., ஆகவே, தீயநினையுந் தீயமுயற்சியும் உடையார்தாம் நிலையாக இருப்பதாக நினைந்து செய்த தீமைகளே அவரை நிலையின்றி விரைவில் அழியச் செய்தலால், அவர், தமது யாக்கை நிலை யாமையினை நினைந்து பார்த்துத் தீதின்றி யொழுக வேண்டுமென்றற்கு, நம் அறநூல்கள் அங்ஙனம் நிலையாமை யினை வற்புறுத்துரைக்க லாயின.

"தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்" (குறள் 202)

என்னுந் **திருக்குறள்** இவ்வுண்மையினையே நன்கு புலப் படுத்தல் காண்க. அறநூல்கள் கூறியவைகளைக் கருத்தில் வைத்து நடப்பவர்கள் நல்லராய் நீண்டகாலம் நன்கு உயிர் வாழ்வராகலின், அந் நூல்களிற் சொல்லிய நிலையாமை வாழ்க்கை நிலைபேற்றிற்கே இடனாய் நிற்றல் நுனித்தறிந்து கொள்க. ஆகவே தீயவைகளைச் செய்யாது உயிர் வாழ்க்கையினை நீளச் செய்வதற்கு மட்டுமே, யாக்கை நிலையாமை இளமை நிலையாமை முதலியவைகளை நினைக்க வேண்டுமேயல்லாமல், வேறு வீணாக எந்நேரமும் நிலை யாமையினை நினைந்து நெஞ்சங் கலங்கி அறிவும் முயற்சியுங் குன்றி நிலையழிதல் ஆகாதென் றறிதல் வேண்டும்.

மேற்கூறியது கொண்டு, வாழ்நாள் முதிர்வினையும் முடிவினையும் நினைவுக்குக் கொண்டுவரும் எத்தகைய நிகழ்ச்சியினையுந் தம்மாலானமட்டும் விலக்கியொழுகுதல் அறிஞர்க்குக் கடமையாதல் தெற்றென விளங்காநிற்கும். எனவே, பிறந்தநாட் கொண்டாட்டமும் அறுபதாம் ஆண்டு விழாவும் விரும்பற்பாலன அல்லவென்றறிந்து கொள்க. ஏனென்றால், ஒவ்வோர் ஆண்டிலும் தாம் பிறந்த நாளைக் கொண்டாடும் போது, அதனைக் கொண்டாடுவார்க்கு இவ்வளவு வாழநாட் கழிந்து போயிற்று என்னும் உணர்ச்சி வலிவுபெற்று வேரூன்றுவதுடன், அக் கொண்டாட்டத்திற்கு

வருவாரெல்லார்க்கும் அவரது வாழ்நாட் கழிவைப் பற்றிய உணர்ச்சியும் ஒருமுகமாய் ஒத்துத் தோன்றி, அவ்வுணர்ச்சி யால் முன்னமே பிளவுபட்டு நிற்கும் அவரது உள்ளத்தின் அப் பிளவூடு நுழைந்து வீசி ஆண்டுள்ள வேறு சில நன்னினைவு களையும் வேரொடு பிடுங்கி அழித்துவிடா நிற்கும் அவ்வா றாதல் எதனாலெனில், ஒருவர் ஒரு நல்நினைவையோ தீநினை வையோ நினைந்து நிற்கையில், அவருடன் வந்து சேர்வாரும் அவர் கொண்ட நினைவையே தாமுங்கொண்டு அதற் கொத்து மொழிகுவராயின், அந் நினைவு கொண்டார்க்கு அது முன்னையினும் நூறுமடங்கு ஆயிரமடங்கு மிகுதி யாய்ப் பெருகி, அவரது உள்ளத்தில் வேறு நினைவு ஏதுமே நிலைபெறுதற்கு இடமில்லாமல் அதனை முழுதுங் கவர்ந்து கொள்ளுதலை நாம் வழக்கத்திற் கண்டுவருகின்றோமாகலின் என்பது. ஒருவன் மற்றொருவன்மேற் சினங்கொண்டிருக்கும் போது, அவனுடன் வந்து சேர்ந்த வேறொருவன் அவனது சினந் தணிதற்கு வேண்டுவன செய்யாமல், அவன் சினந்தவன் மேற்றானுஞ் சினந்து பேசுவனாயின், அம் முன்னையோன் கொண்ட சினம் பின்னும் பின்னும் பெருகிப் பெருந் தீங்கு பயத்தலைக் காணாதார் யார்? அறஞ்செய்யும் நினைவு டையானுக்கு அவ் அறநினைவேயுடையாரது சேர்க்கை அவ் அறநினைவினை மிகுதிப்படுத்தி அவரை அறஞ்செய்யுமாறு தூண்டுதலும், மற்று அறத்திற்கு மாறான மறநினைவு டையாரது சேர்க்கை அவன் கொண்ட அறநினைவினைப் பையப்பைய மாற்றி மாய்த்தலுங் கண்கூடாய் நிகழ்தல் போலப் பிறந்தநாட் கொண்டாட்டத்திற்கும் அறுபதாம் ஆண்டு விழாவிற்கும் வருவாரது நினைவும் அவற்றைக் கொண்டாடு வார் நினைவுடன் ஒருங்குசேர்ந்து அவர்க்கு வாழ்நாட் குறுக்கத்தினை உண்டுபண்ணுமெனவும், மற்று அவை தம்மைக் கொண்டாடாமல் இளைய நினைவொடு உயிர்வாழ்வாருந் தம்மோடொத்த நினைவுடையாரொடு அல்லாமல் முதுமையினையுஞ் சாக்காட்டினையும் பேசுவா ரோடு உறவாடின் அவரும் அந்நினைவு கலைந்து அதற்கு மாறான அவ் விரு நினைவாற் பற்றப்படுவரெனவும் உணர்ந்து கொள்க.

இங்ஙனமே, மிகவுந் துயரமான கதைகள் நாடகங்கள் காப்பியங்கள் முதலியவைகளை அடுத்தடுத்துப் பயிலுதலும்

அவற்றிறிற் கூறப்பட்ட நிகழ்ச்சிகளைப் பலகால் நினைவுக்குக் கொண்டு வருதலும் ஆகா. சுணையான உணர்வு இல்லாத வர்கள் இவைகளை எத்தனைகால் திருப்பித் திருப்பிப் பயின்றாலும், அதனால் அவர்க்குத் தீங்கு வராது; மற்றுச் சுணை யுள்ளவர்கள் அவை தம்மை அடுத்தடுத்துப் பயின்றாலோ, அவரது உள்ளம் அவற்றில் நுவலப்பட்ட துயர நிகழ்ச்சிகளாற் பற்றப்பட்டு நிலை கலங்கி நோய்க்கும் வாழ்நாட் சுருக்கத்திற்கும் இடஞ் செய்யும். ஏனெனிற், சுணையுள்ளவர்கள் சிறிது நன்று வந்தாலுஞ் சிறிது தீது வந்தாலும் அவைதம்மை மிகப் பெரிய அளவினவாகக் கருதி இன்ப துன்பங்களை எய்துவர்; மற்றுச் சுணையில்லா மழுங்கிய உணர்வினாரோ மலையளவாக வந்த நலங்தீங்கு களையுங் கடுகளவாகவே கருதா நிற்பராகலின், அவர் அவற்றின் அளவுக்குத் தக்கபடி இன்பதுன்பங்களை அடைய மாட்டுவாரல்லர். ஆதலால், உணர்வின் சுணை மிகுதியா யுள்ளவர்கள் துயர நிகழ்ச்சிகளை நன்கெடுத்து நுவலும் நூல்களைப் பயிலுங்கால், அந் நிகழ்ச்சிகள் தமக்கு வந்தன போற் கருதும் அளவு செல்லாமல், தம்மை அவற்றிற்குப் புறம்பாக நிறுத்திப் பயின்று, பினனர் வேறு இனிய நிகழ்ச்சிகளை நுவலும் நூற்பொருள்களில் தமது நினைவைப் பதித்தற்குப் பழகிக் கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

இன்னுந், தம் உறவினரில் இறந்துபட்டார்க்குச் சவச் சடங்கு செய்தற்பொருட்டும், அவர்தம் பெற்றார் உற்றார்க்கு ஆறுதல் மொழிதற்பொருட்டுஞ் செல்லுவோர், அங்குள்ள ஆற்றாநிகழ்ச்சியைக் கண்டு நெஞ்சங்கரைந்து கண்ணீர் உகுத்து அழுதல் இயற்கையேயாயினும், அது தமதுள்ளத்திற் பதிந்திருந்து தமக்குத் தீதுசெய்யும் அளவு இடங்கொடுத்து விடுதல் ஆகாது. சாவு நிகழ்ந்த இல்லங்களில் உள்ள தமிழ்மாதர்கள் ஆண்டுக் கணக்காக ஒப்பாரி சொல்லி அழும் அறக்கொடிய பழக்கத்தை இன்னும் விடாமற் கைப்பற்றி நடந்தபடியாய் இருக்கின்றார்கள்! இம் மாதர்கள் தாம் கெடுவதல்லாமலுந், தம்மைச் சூழவுள்ள தம் பிள்ளைகள், கணவர், உடன்பிறந்தார், பெற்றார், உற்றார், உறவினர், நண்பர், அயலார் முதலான அனைவருடைய உள்ளங் களையும் நிலைகலக்கி, அவற்றுள் தாங்கொண்ட துயர நினைவை ஆழ இருத்தி, அவற்றை அடிப்படையிலேயே நஞ்சாக்கி விடுகின்றனர். இவ்வளவு பெருந்தீங்குக்கு இடமான ஒப்பாரி சொல்லி

*யழுதலைத் தம்மாதர்விடாப்பிடியாய்ச் செய்துவரவும் அதனை நிறுத்தமாட்டாமல் அதற்கு நீளஇடங் கொடுத்துவரும் நம் ஆண்மக்களின் ஆண்மையும் அறிவும் என்னே! என்னே! இத்தீய பழக்கஞ் சிறிதும் இல்லாத* ***கிறித்துவர் துலுக்கர்*** *முதலான மக்களின் மாதர்கள் இறந்து பட்ட தம்மவர்பால் அன்பில் லாதவர்களா? அம் மாதரில் எத்தனையோபேர் இறந்துபட்ட தம்மவரை நினைந்து நீராயுருகி நெஞ்சங் கலங்கவில்லையா? அவர்களெல்லாம் இங்ஙனம் ஒப்பாரி வைத்தழுது ஊராரையெல்லாம் உடன் கலங்கவா செய்கின்றனர்? ஒருவர் தாம் கொண்ட துயரத்தைத் தம்மளவிலே வைத்துக் கொள்ளாமல் ஏனையோரையும் அதனிற் படுப்பிப்பது கொடிது! கொடிது! அறிவும் நாகரிகமும் வளர்ந்து சுடராநின்ற இக்காலத்தில் ஏனை நாகரிக மக்களைப் பார்த்தாவது தமிழ்மாதர் ஒப்பாரி சொல்லியழும் மிக இழிந்த கொடிய பழக்கத்தை உடனே விடக்கடவராக! அவர்க்குரிய ஆண்பாலாரும் அவர் அது செய்யாவாறு தடுத்துத் தமக்கு ஆண்மையும் அறிவும் சிறியவாயினும் உண்டென்பதைக் காட்டுவாராக!*

*இனி, ஆண்பாலார் தாம் நீண்டகாலம் உயிரோடிருந்து வாழல்வேண்டுமென்று நினைந்து நடத்தல் போலத், தம்மைச் சேர்ந்த பெண்பாலாரும் அங்ஙனமே நீள இருந்து உயிர் வாழல் வேண்டுமென்று நினைக்கின்றாரில்லை. பெண் மக்களெல் லாரும் ஆண்பாலாரின் வசதிக்காக ஏற்பட்டவர் களே யென்றுங், கணவரையிழந்த மகளிர் உயிரோடிருத்தலிற் பயனில்லை யென்றும் எண்ணி நம்நாட்டவர் கணவரை யிழந்த மகளிரை உடன்கட்டை ஏற்றுவித்து ஐயோ! உயிரோடு எரித்துச் சாம்பராக்கி வந்தார்கள்! இக்கொடிய வழக்கம் இத் தென்னாட்டைவிட வடநாட்டில் மிகுதியாய்ப் பரவி யிருந்தது! ஆண்டு ஒன்றுக்கு இவ்வாறு உயிரோடுவைத்து எரிக்கப்பட்ட பெண்பாலார் தொகை வங்காளத்தில் மட்டும் எண்ணூற்றுக்கு மேலாகும் என்று கணக்கெடுத்திருக் கின்றார்கள்! இக்கொடிய வழக்கத்தைக்* ***கி.பி. 1829 ஆம் ஆண்டு*** *செய்த சட்டத்தின் வாயிலாக நிறுத்திய அருட் பெருந்தொகையார்* ***உவில்லியம் பெண்டிங்கு*** *என்னும் நம் இந்திய அரசின் தலைவரேயாவர். இறந்தொழிந்த கணவருடன் அவர்தம் மனைவியாரை*

உயிரொடு வைத்தெரிக்கும் கொடிய வழக்கம் வடநாட்டில் மிகுதியாய்ப் பரவியிருந்த தனாலேதான், அந்நாட்டில் எங்கே பார்த்தாலும் வேசிமார் தொகைதொகையாய்க் காணப்படு கின்றனர். யாம் வடநாடு சென்றிருந்தஞான்று; வேசிமார் தொகை அங்கு மிகுந்திருப்ப தன் காரணம் என்னென்று எம் நண்பரை வினவியபோது, தம் கணவர் சிறிது நோயாய்ப் படுத்தாலும் "அவர் எங்கே இறந்துபடுவரோ! இறந்துபட்டால் எம்மையும் அவரொடு தீயில் உடன்வைத்துக் கொள்ளுத்தி விடுவரே!" என அஞ்சி, அஞ்ஞான்றிருந்த மாதரில் எண்ணிறந் தார் தமது இல்லத்தை விட்டு வெளியேறி வேசித்தொழிலை மேற்கொண்டனர்! உடன்கட்டை ஏற்றுவிக்கும் வழக்கம் நின்றபிறகுங் கணவரை இழந்த மகளிரை அவர்தம் இனத்தவர் அளவுபடாத் துன்பத் திற்கு ஆளாகக்கி வருதலால் அத் துன்பத்தைப் பொறுக்க முடியாமலே கைம் பெண்களிற் பலருந் தத்தம் இல்லங்களை விட்டு வெளியேறி இன்னும் வேசித்தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்; இக் காரணம்பற்றித்தான் வேசிமார் தொகை வடநாட்டில் மிகுதிப்பட்டிருக்கின்றது என அவர் எமக்கு விடை கூறினர். ஏதொரு குற்றமும் இல்லா இத்தனை அருமைப் பெண் மக்களும் வேசித்தொழிலை மேற் கொள்ளு மாறு துன்புறுத்தும் இரக்கமற்ற வன்னெஞ்சர்களான ஆடவர் இருக்கும் வரையில் இந்நாடு மேல்நிலைக்கு வருமோ! நன்கு நினைந்து பார்மின்கள்; அறிஞர்களே!

வடநாட்டவர்நிலை அங்ஙனம் ஒழியத் தென்னாட்ட வர் நிலை எத்தகைய தென்பதும் அறியற்பாற்று. வடநாட்டவ ராயினுங் கணவரையிழந்த மகளிரை உடன்கட்டை ஏற்று வித்துக் கொளுத்தினர். அது நினைத்தற்குஞ் சொல்லுதற்கும் அரிய கொடுந் துன்பமேயாயினும், பலநாட்டுன்பம் ஒரு நாளொடு முடிந்துபோயதாகும். மற்றுத், தென்னாட்டவரோ கைம்பெண்களை உயிரொடு வைத்து அவரது வாழ்நாள் முடியும் மட்டும் அவரைத் துன்புறுத்திவருங் கொடுஞ்செயல் நினைக்குந்தோறும் நெஞ்சத்தைத் திகில் கொள்ளச் செய்கின்றது! கணவரை யிழந்த மகளிரை உடனே தலை மொட்டையடித்து வெள்ளைப்புடைவை உடுப்பிக்கின்றர்! இப்போது சிலர் மிகுந்த இரக்கத்துடன் தலை மயிரைச்

*சிரையாமலே வெள்ளைப் புடவை உடுப்பிக்கின்றர்! சிலநாள் வரையில் அவர்க்கு உணவு கொடாமல், வெறுந் தண்ணீரும் இரண்டொரு வாழைப்பழமுமே அருந்தக் கொடுக்கின்றனர்! வீட்டினுள்ளும் எங்குஞ் செல்ல வொட்டாமல் ஓர் இருட்டறையில் வெறுந்தரையிலேயே அவரைக் குப்புறப் படுக்க வைக்கின்றனர்! அக் கைம் பெண்கள் அவிழ்ந்த மயிரையும் எடுத்து முடிக்கலாகாது! கட்டின துணியையும் அவிழ்த்துக் கட்டலாகாது! எவர் இழவு கொண்டாட வந்தாலும் அவரோடெல்லாம் அவர் ஒப்பாரி வைத்து நெடுநேரம் அழுது தீரவேண்டும்! இங்ஙனம் பலநாட் கழிந்தபின் உப்பிலாச் சோறும் வேளைக் கீரையும் ஒரு நாளைக்கு ஒரே முறையாக உச்சிப் போதில் மட்டும் அவ்வேழைப்பெண்கள் உண்ணுமாறு செய்கின்றனர்! இங்ஙனம் பல்லாண்டுகள் கழியும்வரையில் இருட்டறையிற் கூந்தலை விரித்தவண்ணமாய் இருந்து ஒப்பாரி சொல்லி யழுது, பட்டினியும் பசியுமாய்க் கிடந்து, நம் அருமைப் பெண்மணிகள் துயர்க்கடலுள் அழுந்தி மடிந்து மாய வேண்டுமேயன்றி அவர்க்கு வேறு வழி கிடையவே கிடையாது! இவ்வளவுக்குந் தப்பிப்பிழைத்தாலும், அவர்கள் பத்தாண்டு பன்னிரண்டு ஆண்டுகள் வரையில் வெளியே வரலாகாது! எந்த மங்கலவினை நடந்தாலும் அவ்விரங்கத் தக்க பெண்கள் அதற்கு வரலாகாது! எவர் எதிரே அவர் வந்தாலும் அது தீயகுறியாம்! எவர் வெளியே செல்லும் போது அவர் குறுக்கிட்டாலும் வெளியே சென்றவர் நினைத்த வினை நன்றாய் முடியாதாம்! நாட்டில் ஒருவர் ஒருவனைச் சினந்து திட்டும் போதும், **“அடே மொட்டை, அறுதலி, கைம்மை”** என்று கைம்பெண் நிலையைச் சொல்லியே திட்டுகிறார். இதனை எண்ணிப் பார்க்குங்கால், இத் தமிழ்நாட்டவர் தம் பெண்மக்களை எவ்வளவு இரக்க மில்லாக் கொடிய வன்னெஞ்சத்தொடு நடத்துகிறாரென்பது புலப்படவில்லையா? எல்லாம் வல்ல இறைவன் ஆணைப் போலவே பெண்ணையும் படைத்திருக்க, இவ்வுலகத்தில் அவனருளால் வழங்கப்பட்ட எல்லா உரிமை களையும் பெற்று அறிவை வளர்த்து இன்பத்தை எய்துதற்கு ஆணைப் போலவே பெண்ணும் ஒத்தநிலையிலிருக்க, ஆண்பாலார் மட்டுந் தமக்குள்ள கொடுங்குணத்தாலும் உடல் உரத்தாலும் அவ்வுரிமைகள் எல்லாவற்றையுந் தாம் மட்டுமே*

கைப்பற்றிக் கொண்டு, ஏனைப் பெண்பாலார்க்கு அவற்றுள் ஒரு தினைத்தனையுங் கொடாமல், ஆடுமாடு முதலான விலங்கினங்களினுங் கடைப்பட்ட நிலைமையில் வைத்து அவர் களை நீளத் துன்புறுத்திவரின் அஃது இறைவன் திருவுளத் திற்கு அடுக்குமோ! இவர்களின் இத் தீச்செயலைத் துடைத்து, நம் அருமைப் பெண்மணிகளுக்கு எல்லா உரிமைகளையும் வழங்குதற் பொருட்டன்றோ எல்லா இரக்கமும் உடைய ஆண்டவன், இந் நாட்டுக்கு அருள்மிகுந்த ஆங்கில அரசைத் தந்திருக்கின்றான்!

பெண்பாலாரை இங்ஙனந் துன்புறுத்திவரும் ஆடவர் தமது வசதியையுந் தமது அவாவையும் எந்த வகையிலாவது மட்டுப் படுத்தி வருகின்றார்களாவென்றாற், சிறிதுமே யில்லை. இறந்து போன தம் மனைவியைச் சுடுகாட்டிற் கொண்டுபோய் வைத்துக் கொளுத்துகின்ற துயர்மிகுந்த நேரத்திலேயே தமக்கு வேறொரு பெண்ணைப் பார்த்து மணம் முடிக்க வேண்டிய செய்தியை ஆண்டுக் குழுமிய தம் உறவினர் நண்பருடன் பேசி முடிவுகட்டுகின்றார்! அதற்கு அவர் தம் உறவினர் நண்பர்களும் இசைந்து பேசுகின்றனர். ஆ! இவ்வாண்மக்கள் எல்லார்க்கும் எவ்வளவு இரக்கமான நெஞ்சம்! எவ்வளவு சிறந்த எண்ணம்! இத்தகைய கருங்கற்கள் இருக்கும் இடத்தை நாடென்று சொல்வதா! கரிந்த பாலைவெளி யென்பதா! நன்றாக உணர்ந்து நினைந்து பார்மின்கள்!

ஆண்பாலார் இவ்விரக்கமற்ற கொடிய நிலையை விட்டுத் தாம் துன்பத்திற்கு அஞ்சுதலும் இன்பத்திற்கு மிஞ்சுதலும் போலவே, தம்மைப்போல் ஆறறிவுடைய மக்கட் பிறப்பினரான பெண்பாலாரும் இருப்பரென நன்குணர்ந்து பார்த்து, இரக்கமும் உண்மையன்பும் உடைய ராய்த் தம் பெண் மக்கள் எல்லாரையும் அறிவிலும் அன்பிலும் இன்பத்திலும் இனிது வாழச் செய்தாலல்லாமல், அவருந் தாமும் நீண்டகாலம் நன்கு உயிர்வாழ்தல் இயலாதென்பது திண்ணம். ஏனென்றால், இல்லத்தைத் திரு மகட்குங் கலைமகட்கும் விளையாடும் இடமாகச் செய்ய வல்ல வருந், தம் மக்களை அறிவிலும் நன்னடையிலும் மேலோங்கச் செய்தற்கு முதற்பெருங் காரணருந் தங்கொழு நரையும் பெற்றாரையும் உடன் பிறந்தாரையும் உற்றாரையும் அடுத்தாரையும் எல்லாம்

மிடியுங்கவலையு மில்லாப் பேரின்ப வாழ்க்கையில் வாழ வைக்குந் திறத்தினரும் ஆன நம் அருமைப் பெண்மணிகள் தாம் அறிவொளியும் இன்ப மணமும் உடையராய் இருந்தாலன்றோ, அவர்களிருக்கும் இல்லமும் அவ்வறிவொளி திகழ்ந்து இன்பமணங் கமழ்ந்து துலங்கா நிற்கும்? அவர்கள் மனம் மடிந்து உள்ளம் இருள டைந்து அழுத கண்ணுஞ் சிந்திய மூக்குமாய் எந்நேரமுந் துன்பத்திற்கிடந்து உழன்ற வண்ணமாய் இருப்பர்களாயின் அவர்களிருக்குமிடத்தில் திருமகளாவது கலைமகளாவது தலைக்காட்டுவளா? அவ்விடம் பெருந்துன்பம் நிறைந்த பாழிடமாகி அங்குள்ளார் அனைவரையும் பாழாக்கி விடுமன் றோ? எவரெவர் எந்தெந்த எண்ணமும் எந்தெந்த நினைவும் உடையராயிருக்கின்றனரோ, அவரவர் இருக்கும் இடமும் புழங்கும் பொருள்களும் அவரவர்தம் எண்ணமும் நினைவும் பதியப் பெற்றனவாயிக்குமென்று இஞ்ஞான்றை **எண்ணப் பதிவு நூலார்** (Psycho metrists) நன்காராய்ந்து கூறுகின்றனர். நல்லெண்ணமுந் தூய இன்ப வாழ்க்கையும் உடையார் இருக்குமிடத்தையும் அவர் புழங்கிய பண்டங்களையும் போய்ப் பார்த்தவர்களுக்கு நல்லெண்ணமுந் தூய இன்ப வுணர்ச்சியும் அவரறியாமலே அவரது உள்ளத்தில் எழா நிற்கும். அவ்வாறின்றித் தீயவெண்ணமுந் துன்பவாழ்க்கை யும் உடையாரிருந்த இடத்தையும் அவர் கையாண்ட பண்டங் களையும் பார்த்தவர்க்குந் தொட்டவர்க்கும் அவரை யறியா மலே தீய நினைவுந் துன்பமும் உண்டாகாநிற்கும். இதற்கு உண்மையாக நிகழ்ந்ததொன்று காட்டுவாம்: ஓர் ஊரில் ஒரு நல்லவர் தமது குடும்பத்துடன் வெளிப்பார்வைக்கு நன்றா யிருந்த ஓர் இல்லத்தை வாடகைக்குப் பிடித்து அதிற்போய்க் குடியிருந்தார். அவ்வில்லிற் குடிப்புகுந்த நாண்முதல் இதற்கு முன் அவருள்ளத்தில் தோன்றாத ஒரு கொடிய எண்ணம் அடுத்தடுத்துத் தோன்றுவதாயிற்று. அவ்வெண்ணம் யாதென் றால், எவரையேனுங் கொலைசெய்ய வேண்டுமென்பதே யாம். அவர் இயற்கையிலேயே நல்லவராகையால், இத்தகைய தொரு கொடுநினைவு தமதுள்ளத்திற் புதிதாக அடுத்தடுத்துத் தோன்றுவதென்னையென்று ஆராயத்தலைப்பட்டார். தாம் எவ்வளவோ ஆராய்ந்துந் தமக்கு அதன் காரணம் புலப்பட்டி லது. அதன்மேல் தம்பால் வரும் நண்பர்கட்கெல்லாம் அதனைச்

சொல்லி இவரது கருத்தை உசாவிவந்தார். அவருள்ளும் எவரும் அதனை அறிந்து சொல்லக் கூட வில்லை. கடைசியாகத் தம்பால் வந்த ஒரு முதியவருக்கு அதனை தெரிவிக்க, அவர் “ஐயா! தாங்கள் குடிவந்திருக்கும் இவ்வீட்டின் வரலாற்றைத் தாங்கள் அறியீர்கள். அண்டை அயலிலுள்ளவர்களும் இளைஞர்கள் ஆதலால் அவரும் அறியார். இவ்வீட்டில் நெடுநாட்குமுன் இருந்த ஒரு கொடிய வன் மற்றொருவனைக் கொலை செய்துவிட்டான். கொலை செய்தவன் பின்னர் அறமன்றத்தாரால் தூக்கிலிடப்பட்டான். அத்தீய நிகழ்ச்சிக்குப் பின் நெடுங்காலம் வரையில் இதில் எவருங் குடிப்புகாமலே யிருந்தனர். பின்னர் அது மறக்கப் பட்டபின் குடிப்புகுந்த வர்களும் இதில் நிலைப்பதில்லை. தாங்கள் இவ்வரலாறு அறியாமையால் இதிற் குடிபுகுந்தீர்கள். இப்போது தாங்கள் தங்கள் உள்ளத்திற் புதிது உண்டாகுந் தீய வெண்ணத்தின் காரணம் இன்னதென்று தெரிந்து கொண்டி ருப்பீர்களென்று நம்புகின்றேன்” என மொழிந்து போயி னார். அச் செய்தி கேட்ட அந் நல்லவரும் அவ்வீட்டைவிட்டு வேறோரிடத்திற் குடிபோக, அத் தீய வெண்ணமும் அவருள்ளத்திற்றோன்றா தொழிந்தது. இவ்வெண்ணப் பதிவின் உண்மைகளைப்பற்றி மனிதவசியம் என்னும் நூலில் விரித்துப் பேசியிருக்கின்றேம்; ஆண்டவைகளைக் காண்க.

ஆகவே, மக்கட்பிறப்பினரில் ஒரு பாதியினரான பெண் பாலாரை அறிவில்லாத மடையர்களாக்கி வைத்து, அவர் களை ஆற்றொணாத் துன்பத்திற்கு ஆளாக்கி வந்தால், அவர் களது உதவியால் உயிர்வாழவேண்டிய மற்றைப் பாதியின ரான ஆண்பாலார் நன்கு உயிர்வாழ்தல் இயலுமோ? அப் பெண்பாலார்பால் உள்ள அறியாமையுந் துன்பமும் அறிந்தும் அறியாமலும் ஆண்பாலாரையும் பற்றி அவர்களை அழித்து வருமல்லவோ? பெண் பாலாரைத் துன்புறுத்தி மடித்து வருதலின் பயனாகவே ஆண்பாலாரும் ஆண்டு முதிரா முன்னரே மடிந்து மண்ணாய்ப் போகின்றனர்! இந் நாட்டின்கண் ஆண்டுஒன்றில் மடிந்துபோகும் ஆண் பெண் பாலாரின் தொகையையும் அவர் ஒவ்வொருவரும் உயிரோடிருந்த ஆண்டின் தொகையையும் கணக்கெடுத்துப் பின்னையதை முன்னையதால் வகுத்துப்பார்க்க, **இந்நாட்டில்**

**உள்ளார் உயிர்வாழுங் காலந்தலைக்கு இருபத்திரண்டு ஆண்டுகளாகவே தேறுகின்றன?** *இவ்விந்திய நாட்டுக்குப் புறம்பேயுள்ள* ***அயல்நாடுகளில் உள்ளார் உயிர்வாழுங் காலஎல்லை ஐம்பது ஆண்டு முதல் எண்பது ஆண்டுகள் வரையில்*** *தலைக்குத் தேறுகின்றன வென்றுங் கணக்கெடுத்திருக்கின்றார்கள். பாருங்கள்! தலைக்கு இருபத்திரண்டு ஆண்டுகளே உயிரோடிருக்கும் நம் நாட்டவரின் அறிவில்லா மிடிப்பட்ட வாழ்க்கைக்குந், தலைக்கு ஐம்பதுக்குமேல் எண்பது வரையில் நன்கு உயிர்வாழும் அயல் நாட்டவரின் அறிவுமிக்க இன்பவாழ்க்கைக்கும் எவ்வளவு வேற்றுமை! இறைவன் இம் மக்கள் யாக்கையின் வாழ்க்கைக்கு வகுத்தகால எல்லை நூற்றிருபது ஆண்டு நன்கு உயிர் வாழலாம். ஆனால், தமது அறிவை வளரச் செய்யாமையாலும் பொறாமை கொடுமை, அன்பின்மை தன்னயமே கருதல் முதலான தீய குணச் செயல்களாலுங் கவலையும் மிடியும் நோயுங் கொண்டு இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு ளெல்லாம் நம் நாட்டவர் மாண்டுபோகின்றனர்!*

*இன்னும், இப்போது சில ஆண்டுகளுக்குமுன் எடுத்த மாந்தர் தொகைக்கணக்கைப் பார்த்தால், இவ்விந்திய நாட்டில் ஆண்பாலாரை விடப் பெண்பாலார் தொகை குறைந்து காணப்படுகின்றது. இங்ஙனம் பெண்பாலார் தெகை குறைந்து போயதற்குக் காரணம் ஆண்பாலார் செய்துவரும் அட்டூழியங்களேயாகும். ஆண் பெண் தொகை ஏறாமற் குறையாமல் ஒத்திருந்தாற்றான் வாழ்க்கை குற்றங் குறைகள் இன்றிச் செழிப்பாய்ச் செவ்வனே நடைபெறும்,, இல்லையேற் பாவமும் பழியும் மிகுந்து அது சீர் குலைந்து போகும். மற்று, அயல்நாடுகளில் உள்ள ஆண் மக்களெல்லாரும் தமக்குள்ள உரிமைகளையொப்பவே, தம் பெண் மக்கட்கும் உரிமைகள் கொடுத்து அவர்களைப் பல துறைகளிலும் முன்னேறச் செய்துவருதலால். அவ்விரு திறத்தாரும் அறிவிலும் விழுமிய இன்பவாழ்க்கையிலுஞ் சிறந்து நீண்ட நாள் உயிர் வாழ்ந்து தமக்கும் பிறர்க்கும் பயன்படுதலுடையராய்ப் புகழ் புண்ணியங்களை ஈட்டுகின்றனர். இறைவன் வகுத்த மக்கள் வாழ்க்கையின் உண்மைகளை நன்காராய்ந்து நடக்கும் நல்லறிவு நம் நாட்டவர் தமக்கு இல்லையாயினும், ஏனை அயல்*

நாட்டவரின் சீரிய வாழ்க்கையினைக் கண்டா வது திருந்தி நடந்து நீடுவாழ முயல்வாராக.

இனி, நீடுவாழ விரும்புவார் கருத்திற் பதித்து நடக்க வேண்டிய ஒழுகலாறுகள் சிலவற்றை ஈண்டு எடுத்துக் காட்டி, அவ்வளவில் இந்நூலைமுற்றுவிப்பாம். மக்களாய்ப் பிறந்தார் தம்மையொத்த மக்களினிடையே யிருந்து உயிர் வாழ வேண்டியவர்களா யிருத்தலாலும், மக்களினும் தாழ்ந்த சிற்றுயிர்களினிடையிலும் அங்ஙனமேயிருந்து உயிர் பிழைக்க வேண்டியிருத்தலாலும், உயிரில்லாத பொருள்களினிடை யிலும் இடத்திலும் காலமாறுதலிலும் இருந்து வாழ்க்கை செலுத்த வேண்டியிருத்தலாலும், இம் மூவேறுவகையாய்ப் பிரியும் ஒழுகலாறுகளில் அவர்கள் தம்மைக் காத்து நடத்தல் இன்றியமையாததாகும்.

முதலில் ஒவ்வொருவருந், தம்மைச் சூழவுள்ள மக்களிற் சிலர் தமக்கு நண்பராகவும், வேறு சிலர் தமக்குப் பகைவ ராகவும் மற்றைப் பலர் நட்பும் பகையும் இல்லா நொது மலராகவும் நடக்கத், தாம் அவர்களிடையே யிருந்து உயிர் வாழவேண்டியிருத்தலைப் பற்றிப் பேசுவாம்: நண்பர் என்ற வகுப்பிற் பெற்றார் உற்றார் பெண்டிர் பிள்ளைகள் ஏவலர் நேசர் முதலாயினார் அடங்குவர். இவர்களோடு ஒழுகும் முறைகளைப் பற்றி மேலே விரித்துக் காட்டியிருக்கின்றேம்.

இரண்டாவதாகத், தமக்குப் பகையாயினாரொடு நடக்கும் முறை கருதற்பாற்று ஒருவர்க்குப் பகைவராயினர். அவர் தம்மாற் பகைக்கப்பட்டாரும் அவர் தம்மைப் பகைத்தாரும் என இருவகைப்படுவர். சிலருடைய குணமுஞ் செயலும் உண்மையிலே தீயனவாயிருந்தாலும், அல்லது நமது கருத்துக்கும் நம்முடைய பழக்க வழக்கங்களுக்கும் மாறு பட்டிருத்தல் பற்றி அவை நமக்குத் தீயனவாய்க் காணப் பட்டாலும் நாம் அவையுடையாரைப் பகைத்தல் இயல்பா யிருக்கின்றது. ஆனாலும், இங்ஙனம் பிறரைப் பகைக்கும் இயற்கையை முற்றுமே ஒழித்துவிடல் வேண்டும். தம்முடைய கருத்துக்குந் தம்முடைய பழக்க வழக்கங் களுக்கும் மற்றவருடையன ஒவ்வாமைபற்றி அவரைப் பகைப்பவர், அவருந் தம்மை அக் காரணமே பற்றிப் பகைத்தல் கூடுமே யென்று எண்ணிப் பார்த்தல் வேண்டும். வெற்றிலை பாக்கு மெல்பவர், புகைச் சுருட்டுப் பிடிப்பவரைப் பார்த்துத் தமக்குள்

அது பிடியாமையால் அவரை அருவருக்கின்றார்; சுருட்டுப் பிடிப்பவரோ வெற்றிலை தின்பவரைப் பார்த்துத் தமக்கு அது பிடியாமையால் தாமும் அவரைப் பார்த்து வெறுக்கின்றார். இங்ஙனந் தமக்குப் பிடியாமை பற்றி யொருவரையொருவர் வெறுத்துப் பகை கொண்டால், உலகத்தில் அளவளா வுதலேயில்லாமற் போவதுடன் அடியுங் குத்தும் வெட்டுங் கொலையும் மலைந்து நாடு காடாகி விடும். தெய்வத் **திருவள்ளுவர்,**

"அரியகற்று ஆசற்றார் கண்ணுந் தெரியுங்கால்
இன்மை யரிதே வெளிறு" (குறள் 503)

என்றுங்,

"குணநாடிக் குற்றமு நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்" (குறள் 504)

என்றும் மொழிந்த அறவுரையினைக் கருத்திற்கொண்டு எத்துணைச் சிறந்த குணங்களும் அறிவும் உடையார்பாலுங் குற்றங்கள் சிலவும் இருக்குமெனவும், அதனாற் குணப்பகுதி மிகுதியும் உடையாரை அதன்பொருட்டுப் பாராட்டி அவர் பாலுள்ள சிறிய குற்றப் பகுதியினைக் காணாதொழிதலே வேண்டுமெனவும், அவ்வாறின்றிக் குற்றப்பகுதியே மிகுதியும் உடையாரையும் அதுபற்றிப் பகையாமல் அவர்பாலுள்ள சில குணங்களை மட்டும் வேண்டுமளவு பாராட்டியுரைத்து அவரை நெருங்கிப் பழகாமல் அகன்று ஒழுகுதலே செயற்பாற் றெனவும் பகுத்தறிந்து கொள்க. இவ்வாறு ஒழுகாமல் தம்முடைய குணத்தையுந் தம்முடைய அறிவையுந் தம்முடைய ஒழுக்கத்தை யுமே தமக்குட் சிறந்தனவாகக் கருதி இறுமாந்து, ஏனை யோருடைய குணனும் அறிவும் ஒழுக்கமும் எல்லாம் இழிந்தன வாகக் கருதி அவர்மே லெல்லாம் பகைகொண்டு நடப்பார் எவராயிருப்பினும் அவர் வேருடன் அழிந்து போவர். ஆதலால், அத்தன்மையினார் நீடுவாழ்தல் இயலாது. எனவே, நீண்ட காலம் உயிரோடிருந்து நன்றாற்ற விரும்புவார், எவரையும் பகையாமல், தம்மட்டில் அடங்கியிருந்து வாழ்க்கை செலுத்துதலே முதன்மையாகு மென்க.

இனித், தாம் எவரையும் பகையாதிருந்துந், தம்முடைய இயல்பையும் அறிவையும் நடையையுங் கண்டு தமக்கு அவை ஒவ்வாமையால் அதுபற்றித் தம்மை அருவருத்துத் தமக்குத் தீது புரிவாரை, அது புரியாமற்றடுத்தலும் அவரை அகன்று ஒழுகுதலும் யாங்ஙன மெனிற், கூறுதும்: தம்மைப் பகைப் பவர் தமக்குத் தீங்கு செய்யாதிருத்தற்கு முதல் நல்வழி, அவர் தம்மேற் கொண்ட பகைமையை அவர்க்கு இனியராயின ரொடு சொல்லி அவர் கூறும் இனிய சொற்கொண்டு அதனைத் தீர்த்தலேயாகும். இனி, அவ்வாறு மிக முயன்று பார்த்தும், அவர் அடங்காமல் தமக்குத் தீங்கு செய்தலிலேயே செற்றங் கொண்டு நிற்பராயின், அவரினும் வலியராய் உள்ளாரது துணையைப் பெற்று, அவரைக் கொண்டு அப் பகைவரை அச்சுறுத்தி, அவருடைய செற்றத்தையும் இறுமாப்பையும் அடக்குதல் வேண்டும். இனி அதனானும் அவர் அடங்கா ராயின், அவர்க்குக் கொடிய பகைவரை அவர்மேல் ஏவி விட்டு, அவரும் அவரும் போராடி நிற்குமாறு செய்து தாம் தனித்து அமைதியாய் இருத்தலே நல்லது. இனி, இம்மூன்று திறத்தாலும் அவரது பகைமையையொழித்தல் தமக்குக் கூடாவிடின், அரசினர் உதவியைக் கொண்டு அவரை யடக்குதலே செயற்பாலது மற்று, அதுவுந் தமக்கு இயலாதாயின், எல்லாம் வல்ல இறைவனையே தமக்கு உறுபெறுந் துணையாகப் பற்றித் தாம் தனியிருந்து வழிபடும் நேரங்களில் எல்லாந் தமக்குள்ள குறையை அவனுக்கு நெஞ்சம் கரைந்து சொல்லித், தம்பாற் பகை கொண்டார் தமக்குச் செய்யுந் தீங்குகளை யொழிக்கு மாறு வேண்டிவருதல் வேண்டும். இங்ஙனம் இறைவனது துணையையே உண்மையாக நம்பித் தம்மை அவனது காவலில் விட்டு அமைதியாயிருப்பார்கள். எத்துணைக் கொடிய பகைவரும் ஏதொரு தீங்கும் இழைக்க மாட்டுவாரல்லர். அவர்க்குத் தீங்கிழைக்க முயல்வாரெல்லாம் அத் தீய முயற்சி யவிந்து தாமே யழிந்துபடுதலே எமது வாழ் நாளில் யாமே பற்பலகால் நேரே கண்டிருக்கின்றேம். யாம் சென்ற முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக இறைவன் திருவடிக்கு ஆற்றிவருந் தொண்டில் எமது மனநிலை யுணராமலும் எமது வாழ்க்கைநிலை யுணராமலும் யாம் இயற்றுந் தொண்டின் நலம் உணராமலும் எம்மேற் பெரும் பகைகொண்டு எமக்குப்

பலவகையால் தீங்கிழைக்க முயன்றார் பற்பலர். அங்ஙனம் வாளா பகைகொண்டு தீது புரிய முனைந்தார் தந் தீச்செயல் கண்டு எமது நெஞ்சம் மிக வருந்தியதேனும், எம்மேற் பகை கொண்டாரைப் பகைத்து அவர்க்கு எந்த வகையிலுந் தீது செய்ய எமதுள்ளம் எண்ணியதேயில்லை. அவரது தீச்செயல் கண்டு சில பலநாள் வருந்தியபடியாய் இறைவனது திருவடிக்கே எமது மனக் குறையை யுருகிமொழிந்து , அவ்வளவில் வாளா விருந்து விடுதலே எமதியற்கை. இவ்வாறிருந்து வருதல் எமது தொடர்பான ஒழுகலாறாய்ப் போதருதலால், எம்மைப் பகைத்து எமக்குத் தீதுசெய்ய முனைந்தாரிற் பலர் அங்ஙனம் முனைந்தவளவிலே மாண்டுபோயினார்; வேறுபலர் தமக்குள் ஒருவரையொருவர் கலாய்த்து, எமக்குத் தீது செய்ய முனைந்த முனைப்பைக் கைவிடலாயினார்; மற்றும் பலர் தமக்குந் தம் குடும்பத்தவர்க்குந் தற்செயலாக நேர்ந்த பல இடுக்கண்களால் உள்ளம் உடைந்து, எமக்குத் தீது செய்ய மாட்டாதவராயி னார்; பின்னும் பலர் சீர்திருந்தும் உள்ளம் வாய்ந்து, எமது தொண்டின் அருமைபெருமை யுணர்ந்து எம்மேற் கொண்ட செற்றம் நீங்கி எம்மீது அன்புடையராயினார். ஆதலாற், **“கடவுளை, நம்பினார் கை விடப்படார்”** என்னும் நம்பிக்கை எமதுள்ளத்தில் வரவர உரம் பெற்று வேரூன்றா நிற்கின்றது. எனவே, தம்மைப் பகைத்துத் தமக்குத் தீங்கு செய்வார்க்குந் தீங்கு செய்ய முனைவார்க்குந், தாம் ஆற்றிவருந் திருத் தொண்டிலேயே தம்முடைய அறிவுஞ் செயலும் ஈடுபட்டு நிற்பார்க்கு எத்தகைய தீங்குஞ் செய்ய வொட்டாமல் எல்லாம் வல்ல இறைவனே அவரை முன்னின்று பாதுகாத்தருள்வன் என்று கடைப்பிடித்தல் வேண்டும்.

இனித் தமக்கு நட்பும் பகையும் இல்லாத நொதுமலர் எவரைத் தலைப்படல் நேர்ந்தாலும் அவருடன் இனிதாக முக மலர்ந்து பேசி அவர்க்கு ஏதேனும் தாம் உதவி செய்யக் கூடுமாயின் அதனையுஞ் செய்து அவ்வளவில் அவரை மறந்து போதல் வேண்டும். முன் முகப்பழக்கம் இல்லாத எவர் பாலும் எந்தக் காரணத்தை யுள்ளிட்டுங் கடுகடுத்த முகத்தைக் காட்டுதலும் வெறிக்கப் பேசுதலும் ஆகா. ஏனென்றாற், **கடுத்த முகமும் எடுத்த சொல்லும் உடைய ஒருவனுக்கு எல்லாரும் எளிதிலே பகைவராய் விடுகின்றனர்.** இயற்கை யிலேயே

அல்லல் மிகுந்ததாகவுள்ள இம் மக்கள் வாழ்க்கையில் ஒருவன் வீணே பகைவரைப் பெருக்கிக் கொள்ளுதலினும் வேறு பெருந்துன்பம் ஒன்றில்லை. ஆதலால், நொதுமலரைப் பகைவராகச் செய்து கொள்ளுதற்குரிய எதுவுந் தன்கண் நிகழாமல் விழிப்பா இருத்தல் வேண்டும். இதனை அறிவுறுத்துதற்கே,

> "கண்டாரோ டெல்லாம் நகாஅ தெவனொருவன்
> தண்டித் தனிப்பகை கோள்"

என்னும் **பழைய அறவுரையும்** எழுந்தது.

இன்னும், நொதுமலரைப் பகைவராக்கிக் கொள்ளாமையோடு அவரை நண்பராக்கிக் கொள்ளாமையும் இன்றியமையாதது. ஏனென்றால், ஒரவன் தான் இன்புறுங்கால் அவனொடு இன்புற்றும், அவன் துன்புறுங்கால் அவனோடொருங்கிருந்து துன்புற்றும், உயிரும் உடம்பும் போற், கண்ணும் மணியும்போல், நகமுஞ் சதையும்போற் பிரிவில் லாப் பெருநேயமுடையார் ஒருவர் அவனுக்குக் கிடைத்தல் அரிதரிது. மனமொத்த நேயம் இல்லாதாரை நண்பராகப் பெற்றால், அவரே சிறிது காலத்திற் பெரும் பகைவராய் விடுவர். ஆதலாற், பகைவரைப் பெருக்காதிருத்தற்கு நண்பரையும் பெருக்கா திருத்தலே இன்றியமையாத வழியாகும் என்று கருத்திற் பதித்துக் கொள். உண்மையான நண்பர் மிகச் சிலர் இருத்தலே போதும். அவரையும் ஒருவன் தான் தேடிச் செல்லாமல், தற்செயலாக அவரைத் தலைப்படல் நேர்ந்த வழி, அவர்க்குந் தனக்கும் உண்மையன்பு நிகழுமாற்றைப் பலகால் ஆய்ந்து பார்த்து, அவ் அன்பு முதிரும் வகையில் நட்புரிமை கொள்ளுதலே செயற்பாலதாமென்க.

இனி, மக்களினுந் தாழ்ந்த சிற்றுயிர்கள்பால் நடந்து கொள்ளும் வகையிலும் நீண்ட வாழ்நாளை விரும்புவார் மிகவும் விழிப்பாக இருத்தல் வேண்டும். மிகச் சிறிய உயிர்களும் மக்களை எளிதிலே கொல்லுந் திறம் வாய்ந்திருக்கின்றன. **கொசுகு, மூட்டுப்பூச்சி, ஈ, எறும்பு, பூரான், தேள், நட்டுவாய்க்காலி, பாம்பு, எலி** முதலிய சிற்றுயிர்கள் மக்களுயிரைக் கொள்ளை கொள்ள வல்லனவா யிருத்தலால், அவைகள் தாம் இருக்கும் இடங்களில் அணுகாமற்

செய்து கொள்ளல் வேண்டும். கொசுகுகளிற் பலகையுள்ளன. அவைகளிற் சிலவகை நஞ்சுள்ளன, மற்றுஞ் சிலவகை நஞ்சில்லாதன. நஞ்சுள்ளன கடித்தாற் குளிர் காய்ச்சல் கால் கை வீக்கம் முதலியன வரும். நஞ்சுள்ள கொசுக்கள் பெரும்பாலுஞ் சாக்கடைத் தண்ணீர்ப்பட்டுக் கும்பி மிகுந்துள்ள இடங்களி லிருந்து உண்டாகிப் பல்குகின்றன; சதுப்பு நிலங்களிலும் உண்டாகின்றன. ஆதலாற், சாக்கடைத் தண்ணீரைக் கும்பியுண்டாகாமல் அகற்றி நிலத்திற் காய்ந்து போகும்படி செய்துவிடுதல் வேண்டும். சென்னை முதலான பெரிய நகரங்களில் நிலத்தின் கீழ்க் கால்வாய்கள் கட்டிச் சாக்கடைத் தண்ணீரை அவற்றின் வாயிலாகக் கடலிற் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கின்றார்கள். இவ்வாறு செய்தலால் அங்கு நச்சுக் கொசுகுகளின் தொல்லை குறைந்து வருகின்றது. ஆனால் நகர்ப்புறங்களிலுஞ் சிற்றூர்களிலும் உள்ளவர்கள் அங்ஙனஞ் செய்து கொள்ளல் இயலாமையால், அவர்கள் தாம் இருக்கும் இல்லங்களுக்குப் புறம்பே சாக்கடைத் தண்ணீரைப் பரவலவாகச் செல்ல விட்டு, அது வெயிலிற் காய்ந்து போகும்படி செய்வதுடன், அவ்விடத்தில் அதனாலுண்டாகும் அழுக்கு மண்ணையும் அடுத்தடுத்து அகற்றிப் புதுமணல் தூவி வருதலும் வேண்டும். இனி நஞ்சில்லாத நாட்டுக் கொசுகளின் கடியினால் நோய் வாராதேனும் இரவில் தூக்கங் கெடுதலால், அவற்றின் தொல்லையை அகற்றுதற்குங் கொசுவலையிட்டு அதற்குள் தூங்குதல் வேண்டும்.

இனி, மூட்டுப் பூச்சிகள் அழுக்குத்துணிகள் உள்ள இடங்களிலும், ஈ எறும்புகள் உணவுப் பண்டங்கள் சிந்தி எச்சில் ஈளை சளியுள்ள அருவருப்பான இடங்களிலும், **பூரான் தேள் நட்டுவாய்க்காலி** முதலியன அழுக்கும் அடைசலும் மிகுந்து காற்றும் வெளிச்சமும் படா இண்டு இடுக்குகளிலும் உண்டாகிப் பல்குதலால், தாம் இருக்கும் இல்லங்களில் மேற்கூறிய அருவருப்புகளை நீக்கிச் சந்து பொந்துகளை அடைத்துக், காற்றும் வெளிச்சமும் நன்றாக உள்ளே உலவும்படி செய்துவரின், இந் நச்சுயிர்கள் உண்டாகா மற் றடுத்து, இவற்றால் நேருந் துன்பங்களுக்குத் தப்பிப் பிழைக்கலாம். ஒரோ வொருகால் இவற்றாற் கடியுண்டு வருந்துவோர் உடனே நீராவிபிடித்து அவற்றின் நஞ்சைத்

தம்முடம்பினின்றும் வெளிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். நீரேற்றி கொண்டு மலக்குடரைக் கழுவி விடுதலும் இன்றி யமையாதது. இந் நச்சுயிர்களின் நஞ்சு உடம்பில் உள்ள வரையிற் பால் பருகுதல் ஆகாது.

இனிச் சூடுமிகுந்த இவ் விந்தியநாட்டிலுள்ளாரில் எத்தனையோ ஆயிரம்போர் பாம்புகடியால் ஒவ்வோராண்டி லும் மடிந்து போகின்றனர். நச்சுப் பாம்புகள் பெரும்பாலும் நாகதாளிப் புதர்களிலும், மரஞ்செடி கொடிகள் அடர்ந்த இடங்களிலுந், தவளை தேரை நிறைந்த நீர்நிலைப் பாங்கர் களிலும் உண்டாகியுறைதலால், இவற்றை முற்றுமே யில்லாமல் ஒழித்தல் எவர்க்கும் இயலாது.. நாகதாளிச் செடிகளைத் தின்று அழிக்கும் ஒருவகைப் பூச்சியை வெள்ளைக்கார நன்மக்கள் கண்டுபிடித்து அவற்றைக் கொணர்ந்து விட்டு, இந் நாடுகளில் ஏராளமாய்ப் பம்பி யிருந்த நாகதாளிப் புதர்களை அடியோடு அழித்து வருகின் றார்கள். இவ் அறச் செயலாற் பாம்புகளின் துன்பம் பெரும் பாலும் ஒழிதல் திண்ணமேயாகும். என்றாலும், இவை முற்றுமே ஒழிதல் கூடாமையால், இவையிருக்கு மென்று எண்ணக்கூடிய இடங்களில் விழிப்பாக இயங்குதல் வேண்டும். பாம்புகள் பெரும்பாலும் வலிந்து வந்து மாந்தரைக் கடியா; தாம் இருக்குமிடங்களில் மாந்தர் வருவ ராயின், அவர் தம்மைக் கொல்வரோ என்னும் அச்சத்தாலும், அடிக்க வருவார் கைக்குத் தப்ப முடியாமல் அவரை எதிர்க்கும்போதுந், தம்மை அவர் அடிக்கும் போதும் அவரை எதிர்த்துக் கடியாநிற்கும். மேலும் பாம்புகள் தவளை முதலிய இரைகளைப் பிடித்து விழுங்குகையில் அவ்இரை அவற்றின் தொண்டையைத் தாண்டி வயிற்றினுட் செல்லும் வரையில் அவை நகரக்கூடாத நிலைமையில் இருப்பதால், அப்போது அவற்றை எவரும் எளிதிற் கொன்றுவிடலாம். இரை விழுங்குங்கால் தமக்கு நேரும் இவ்விடர்ப்பாட்டினை உணர்வு மிகுதியுமுள்ள பாம்புகள், முதன்மையாய் நல்ல பாம்புகள் நன்குணர்ந் திருக்கின்றன. ஆகையால், அவை இரைபிடிக்கும் நேரத்தில் மக்கள் எவரேனும் அருகிருப்ப ராயின் அவரைத் துரத்திக்கடிக்க வரும். பாம்புகளின் இந்த இயற்கை தெரிந்தவர்கள் வயல் வரைப்புகள் புதர்கள் குளத்துறைகள் ஏரிக்கரைகள் பாழடைந்த

இடங்களிற் செல்ல நேர்ந்தக்கால், அங்கெல்லாம் விரைந்து செல்லாமல் நெடுந்தொலைவு கீழுஞ் சுற்றுப் பக்கங்களிலும் நோக்கிய படியாய் மெல்லச் செல்வார்கள். அங்ஙனஞ் செல்லுங்காற் பாம்பு இரை பிடிக்கக் கண்டால் அப்பக்கமாய்ச் செல்லாமல், அதனை மிக விலகிச் செல்வர்.

இன்னுஞ் சிற்சிலகால் தப்பித்தவறிப் பாம்புகள் மக்கள் உறையும் வீடுகளினுள்ளேயும் வருதல் உண்டு. அங்ஙனம் வருதலும் வீட்டில் உலவும் எலி, பல்லி முதலிய உயிர்களை இரையாகப் பிடித்தற்கேயாம். ஆகையால் வீட்டின் ஒவ்வொரு பகுதியிலுங் கருத்திருக்க வேண்டும். பகற்கால மெல்லாம் வளையில் அடங்கிக் கிடந்த அவை, பகலவன் மறைந்த மாலைக்காலத்தில் வெளிக்கிளம்பித், தமக்கு வேண்டிய அளவு இரைபிடிக்கும் வகையில் இரவில் இயங்குதலால், மசங்கல் மாலையிலிருந்து இரவின்கண் இயங்குவோர் கையில் வெளிச்சம் இன்றிச் சிறிதும் இயங்குதலாகாது. சிறுகாசுச் செலவிற் பெறக்கூடிய விளக்கு வெளிச்சம் இல்லாமல் இரவில் இயங்கிப் பாம்புக்கடியால் மாய்ந்தார் தொகை அளவிலதாகும். ஆதலால் வெளிச்சம் இன்றி இரவில் இயங்கு தலும் ஆகாது. உறங்குதலும் ஆகா தென்று கடைப்பிடிக்க.

இனிப், பல்வகை நோய்களையுங் கொள்ளை நோயை யுங் கொணர்ந்து சேர்ப்பிக்கும் எலிகள் வீட்டினுள் வராமற் கருத்தாயிருக்க வேண்டும். உணவுப் பண்டங்கள் எளிதிலே கிடைக்கும் இல்லங்களினுள்ளேதாம் எலிகள் வருகின்றன. ஆதலால், உணவுப் பண்டங்கள் பச்சையாயிருந்தாலுஞ் சமைத்தவையாயிருந்தாலும் அவற்றில் ஒரு தினையளவு தானும் வெளியே திறப்பாக இருக்கும்படி வைத்தலாகாது; பெரிய பாண்டங்களிலாவது பேழைகளிலாவது வைத்துச் செவ்வையாக மூடிவிடுதல் வேண்டும். எலிகள் இயங்கு மிடங்களில் அவற்றை இரையாகப் பிடித்தற்குப் பாம்புகளும் வருமாதலால், எலிகள் வராமற் செய்வது இன்றியமை யாததாகும். மேலும், **எலிகள் வாய் வைத்த பண்டங்களைத் தெரியாமல் அருந்துவதால் இரைப்பிருமல், சோகை, உடல் வீக்கம்** முதலான நோய்கள் வருகின்றன; ஈ எறும்புகள் மொய்த்தலானும் அப்பண்டங்கள் நஞ்சாகிப் பலவகை நோய்களை வருவிக்கின்றன; **அழுக்குந் தூசியும் படிதலாலுங்**

**கெட்ட காற்றுப் படுதலாலும் அவை அங்ஙனமே நஞ்சா கின்றன.** ஆதலால் உணவுப் பண்டங்களை ஒருகாலுந் திறப்பாக வைத்தலாகாது.

இனி, உயிரில்லாத பொருள்களாகிய **நிலன் நீர் நெருப்புக் காற்று** முதலான பொருள்களினிடையிருந்து வாழும் மாந்தர் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் வகைகளை இந் நூலின் இரண்டாம் இயலிலிருந்து பதினைந்தாம் இயல் ஈறாக மிக விரித்து விளக்கியிருக்கின்றேம். அவற்றுள் அடங்காத சிலவற்றை மட்டும் ஈண்டெடுத்துக் காட்டுதும்: இக்காலத்தில் நீராவி வண்டிகள். மின்னல் வண்டிகள், உந்துவண்டிகள் (Cycle), நெய்யாவி வண்டிகள் (Motor Car), மிகமிகப் பெருகி மாந்தரின் போக்கு வரவுக்குப் பெரிதும் பயன்பட்டு வரினும், அவற்றால் மடியும் மக்களின் தொகையும் அளவின்றிப் பெருகுதலால், அவற்றைப் பயன்படுத்திக் கொள்வார். தமதுயிரைப் பாதுகாத்தலிலும் பிறவுயிரைப் பாதுகாத்தலிலுங் கருத்து மிக்கவர்களாயிருத்தல் வேண்டும். சிலர் பலர் நீராவி வண்டிகள் மின்னல் வண்டிகள் ஓரிடத்திற்கு வருங் காலத் தையும் அங்கிருந்து அவை புறப்படுங் காலத்தையும் நன்கு தெரிந்து கொள்ளாமல், அவை நிலை பெயரும் நேரத்தில் ஓடோடிவந்து அவை யோடுகையிற் பதறியேறிக் கால்தவறி வீழ்ந்து, அவற்றின் உருள்களால் அரையுண்டு மாய்ந்து போகின்றனர்! ஈதெவ்வளவு மடமை! வண்டி புறப்படும் நேரத்திற்குச் சிறிது முன்னரே வந்திருந்து அமைதியாக ஏறலாகாதா? சிறிது கருத்தாக நடந்தால் விலக்கக்கூடிய இவ் இடரை நினையாமல் நடந்து ஒரு நொடிப்பொழுதில் எத்தனையோ பேர் மாய்ந்து போவது பெரிதும் இரங்கற்பால தாயிருக்கின்றது! இன்னும் பலர் அவ் வண்டிகளுக்குள் ஆள்நெருக்கடியா யிருக்கும் போதும் ஒருவரையொருவர் தள்ளியேறித் துன்புறுகின்றனர்! திருவிழாக்கால மக்கள் நெருக்கடியில் ஏறி நசுங்கி உயிர் துறந்தாரும், பெருங் கூட்டத்தால் வண்டியிலிருந்து கீழே தள்ளுண்டு இறந்தாரும், இறப்பாரும் பலர்! இவையெல்லாங் கூட்டமாயிருக்குங்காற் செல்லாமற் சிறிது காலந்தாழ்த்துச் சென்றால் எளிதிலே விலக்கக்கூடிய இடர்களாகும். இரண்டொரு மணிநேரங் கழித்துச் செல்லுதற்கும் இரண்

டொரு நாட்கழித்துச் செல்லுதற்கும் மனம் பொறாமல், இறைவன் றந்த இவ்வரிய மக்கள் யாக்கையைக் கண் மூடித்தனமாய்ச் சென்று ஒரு நொடியிலே தொலைத்து விடுதல் நன்றாகுமா என்பதை நினைந்து பார்த்து, அவ் வண்டிகட்குச் செல்வோர் தமதுயிரைப் பாதுகாக்கக் கடவராக! அங்ஙனமே, கால்களால் உந்திச்செலுத்தும் ஈருருள் வண்டிகளிற் செல் வோரும், ஆவி வண்டிகளிற் செல்வோரும்ஆள் நெருங்கிய இடங்களில் விரைந்து செல்லாமல் மெல்லச் சென்றாற்றான் தம்முயிரைங் காக்கலாம், தம் வண்டிகளாற் பிறர்க்கும் பிறவுயிர்க்கும் அழிவு வராமலுஞ் செய்யலாம். அங்ஙனமே, குதிரைவண்டிகள், மாட்டுவண்டிகளிற் செல்வோரும் அவற்றைச் செலுத்து வோருந் தமக்கும் பிறர்க்கும் இடர் நேராவகையில் அவற்றை ஊர்தலிற் பெரிதுங் கருத்து வைத்தல் வேண்டும்.

இனி, மக்கள் உயிர்வாழும் ஊர்கள் நகரங்கள் மலை மேலும் மலையடிவாரங்களிலும் மலையடுத்த இடங்களிலும் காட்டுள்ளுங் காட்டோரங்களிலும் காடடுத்த இடங் களிலும், வயல்சூழ்ந்த வயலடுத்த இடங்களிலும், ஆற்றோரங்கள் ஏரிப்பக்கங்களிலுங், கடலோரங்கள் கடலடுத்த இடங் களிலும் அமைந்திருக்கின்றன. **நீலமலை, சேர்வராயன் மலை, இமயமலைகளின்மேல்** எத்தனையோ ஊர்களும் பெரிய பெரிய நகரங்களும் அமைந்திருக்கின்றன. மலையடிவாரங் களில் **திருப்பரங்குன்று, பழநி, திருச்சிராப்பள்ளி** முதலான நகர்கள் உள்ளன. மலையடுத்த இடங்களிற் **சேலங், கோயம் புத்தூர், திருவனந்தை** முதலான நகர்கள் இருக்கின்றன. வெள்ளியங்கிரியுள்ள பெருங்காட்டுக்குள் எத்தனையோ ஊர்கள் உள்ளன. **அவிநாசி** ஒரு காட்டோரத்தில் உளது. **புனலூர்** காடடுத்த பக்கத்தே யுளது. சோழநாடு பாண்டி நாட்டிலுள்ள ஊர்கள் நகர்களிற் பெரும்பாலான வயல் சூழ்ந்த வயலடுத்த இடங்களில் இருக்கின்றன. **திருச்சிராப் பள்ளி திருக்குடந்தை** முதலான நகரங்கள் காவிரியாற்றோரத் திலும், மதுரை வைகையாற்றங்கரையிலுந், **திருநெல்வேலி** பொருநை யாற்றின் பக்கத்தும் அமைந்துள்ளன. **செங்கற்பட்டு, குன்றத்தூர்** முதலிய ஊர்கள் ஏரிப்பக்கங்களி லிருக்கின்றன.

**நாகை, காவிரிப் பூம்பட்டினம், சென்னை, திருச்சீரலைவாய்** முதலியவை கடலோரங்கள் கடலடுத்த இடங்களிற் பொருந்தியுள்ளன. இந் நால்வகை நிலப் பகுதிகளில் உறைவார்க்கு அளவிலா நலங்கள் விளைந்து வரினும், ஆங்காங்கு நீண்டவாழ்க்கைக்கு ஆகாத இடர்களும் அவற்றோடு உடன் கலந்து வருகின்றன. மலை மேலுள்ளார்க்குப் பனியாலுங் குளிராலுந் துன்பம். குளிர் மிகுதியாற் மூச்சுப்பையினுள்ளோடும் இரத்தம் உறைந்து உடனே கடுங் காய்ச்சல் உண்டாகி உயிரிழக்க நேருமாதலால், மலைமேலு ரைபவர்கள் மார்பை எப்போதுஞ் சூடாயிருக்கும் படி கம்பளிப் போர்வை சட்டைகளால் மூடிக்கொள்ளுதல் முதன்மையானது; உடம்பு முழுதுமே பெரும்பாலுங் குளிர்படாமல் மறைத்தல் வேண்டும். இதுவேயுமன்றி, **மலை மேலும் மலைக்கீழும் உள்ளார்க்குப் புலி கரடி அரிமா யானை ஓநாய் மலைப்பாம்புகள் நச்சரவுகள்** முதலான மறவிலங்குகள் ஊர்வனவற்றால் திடீரென எதிர்பாராத பேரிடர்கள் நேரும். யாம் **திருவனந்தையுல்** இருந்த ஞான்று ஒருநாள் திடீரென ஒரு பெரு **வேங்கைப் புலி** ஊர்க்குள் நுழைந்து பலரைக் கொன்று ஊரையே கலக்கிவிட்டது! காட்டுள்ளுங் காடடுத்த ஊர்களிலும் உறையும் மக்கட்கும் இத்தகைய பேரிடர்கள் எதிர்பாராமல் வரும். அதுவல்லா மலும்; அடர்ந்த காடுகளின் உள்ளிருந்து வரும் ஒருவகை **நச்சுக்காற்றுங், கொடிய கொசுகுகளும்** மாந்தர் உயிரைக் கொள்ளை கொள்ள வல்லன. மற்று, வயல்சூழ்ந்த வயலடுத்த ஊர்களில் உறைவார்க்கோ இத்தகைய பெருந்தீங்குகள் வாரா; ஆகையால், மருதநில வாழ்க்கையே மக்களின் நீண்ட வாழ்க்கைக்கு மிக இசைந்ததாகு மென்று அறிதல் வேண்டும். என்றாலும் மருத நிலத்தின் கண்ணும் ஆற்றோரங்கள் ஏரி யோரங்களிலிருப்பார்க்கு வெள்ளப் பெருக்காற் பேரிடர் நேரக் காண்டலால், ஆறு ஏரி முதலானவையுள்ள இடங்களுக்கு மிக அகன்றிருத்தலே வேண்டற் பாலதாகும். இங்ஙனமே கடற் பெருக்காலும் பெருந்துன்பம் நிகழக் கூடுமேனும், அஃது ஆற்றுவெள்ளம் ஏரி வெள்ளம்போல் அத்துணை யடுத்தடுத்து நிகழ்வதன்றாகலின், மருதநில வாழ்க்கையோ டொப்ப நெய்தல்நில வாழ்க்கையும் விழுமியதாகுமென்று கடைப்பிடிக்க இந் நால்வகை நிலப்பகுதி களில் உள்ள நகரங்களில் மாந்தர்

தொகை மிகுதியாக வாய்ந்தவை. அழுக்குஞ் சாக்கடை நாற்றமும் நச்சுக்காற்றும் நிறைந்திருத்தலால், அத்தகைய நகரங்களில் உறைதலைவிட மக்கள் நெருக்கம் இல்லாத நாடுகளில் உறைதலே நோயில்லா நீண்ட வாழ்க்கைக்கு ஏற்றதாகுமென்பதனை முன்னரே விரித்துப்பேசி யிருக்கின் றேம்.

இனி, இந்நிலப்பகுதிகளில் உறைகுநர், வேனிற்கால மழை கால பனிக்காலங்களிலும் அவற்றின் பகலிரவுகளிலும் வாழ்க்கை செலுத்தவேண்டிய வகைகளையும் மேலியல் களில் நன்கு விளக்கிக்காட்டியிருக்கின்றேமாதலால் மீண்டும் அவை தம்மை ஈண்டுக் காட்டுதல் வேண்டா வென்க.

இனி, உள்ளத்தைத் தூயதாக வைத்து எந்நேரமும் நன்நினைவுகளிலேயே அஃது ஊறி உரம் பெறுமாறு பழக்கவே அதனால் உந்தப்படும் உடம்புந் தூயதாகி யுரமேறி நீண்டகாலம் உயிர்க்கு உறையுளாய் உலவும். **உள்ளத்தை உயர்ந்த நினைவு களிலும், மேன்மேற் பெருகும் அறிவொளியிலுந் திகழ வைத்தற்கு ஒப்புயர்வற்ற கருவியாவது. ஆன்றோர் அருளிச் செய்த நூல்களை இடையறாது பயின்றுவருதலைத் தவிரப் பிறிது ஏதுமேயில்லை.** அறிவொளி பெருகாது நீண்டநாள் உயிர் வாழ்வார் ஆங்காங்கு உளரேனும், அவரது நீண்ட வாழ்க்கை யினும் பல்லாயிரக்கணக்காய் ஓங்கி நின்று பலவகையாற் பயன்படும் **மா பலா ஆல் அரசு** முதலான மரங்களின் சாலச் சிறந்த நீண்ட வாழ்க்கையே மேலதாகும். ஏனென்றால், நீண்டகால மிருந்தும் அறிவில்லாமையாற் பலர்க்குப் பல தீங்குகளைச் செய்து பழிபாவங்களை ஈட்டும் அவரினும், பழிபாவங்களின்றி மற்றவுயிர்கட்குப் பல்லாற் றாற் பயன்படும் மரங்களின் நீண்டவாழ்க்கை சிறந்ததன்றோ? ஆதலால், **ஓவாது விழுமிய நூல்கள் பயில்க.**

இனித், தாங் கற்று அறிவின் மிக்கவராய் விளங்குதல் மட்டுமே போதாது, அறிவொடு தவவொழுக்கமும் மேற் கொண்டு, இறைவன் திருவருளோடு இரண்டறக் கலந்து நிற்கும் பெரும்பேற்றையும் இப் பிறவியிலேயே எய்துதல் வேண்டும். இங்ஙனமாகக் **கல்வியுந் தவமுஞ் செல்வமும்** பெற்று இன்புற்று நீடுவாழ்வார், **தாம் பெற்ற இப் பேரின்ப நிலையைப் பிறரும் பெற்று இன்புறுமாறு தம்முடைய**

***கல்வியையும் தவத்தையுஞ் செல்வத்தையும் பல்லாற்றால் அவர்க்குப் பயன்படுத்தி இனிது வாழ்வாராக!***

"தாம்இன் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்." (குறள் 399)

"கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்
ஆனாற்றல் தலைப்பட் டவர்க்கு." (குறள் 269)

**அடிக்குறிப்பு**

1. See Vincent Smith's The Oxford Student's History of India, 1913, P. 211.

**மக்கள் நூறாண்டு உயிர்வாழ்க்கை**

இரண்டாம் பாகம்

**– முற்றும் –**